
மீண்டும் துளசி



எண்டமூரி வீரேந்திரநாத்

தமிழில்: கௌரி கிருபானந்தன்

முன்னுரை

திரு. எண்டமூரி வீரேந்திரநாத் அவர்கள் எழுதிய "துளசி" என்ற நாவலை "மீண்டும் துளசி" என்ற தலைப்பில் மொழி பெயர்த்து வாசகர்களுக்கு முன்னால் வைத்துள்ளேன்.

இந்நாவல் "துளசி தளம்" நாவலின் தொடர்ச்சிதான் என்றாலும், தனியாகப் படித்தாலும் அதே அளவுக்கு விறுவிறுப்பும், கையில் எடுத்தால் கீழே வைக்க முடியாத அளவுக்குத் திருப்பங்களும் நிறைந்தது என்று சொன்னால் அது மிகையல்ல.

பூஜைகள், மந்திர தந்திரங்களால் மக்களை ஏமாற்றி வந்த சித்தேஸ்வரி தேவியைக் கதாநாயகி "துளசி" எதிர்க்கிறாள். அங்கே நடக்கும் மோசடிகளைக் கண்டுபிடிப்பதற்காகப் புலிக் குகையில் நுழைவது போல் சித்தேஸ்வரி தேவியின் கோவிலுக்குள் நுழை கிறாள்.

அங்கே தார்க்காவும் அவளும் சந்தித்துக் கொள்கிறார்கள். பழி தீர்த்துக்கொள்ளும் நோக்கத்துடன் பிஸ்தா கிராமத்திலிருந்து துளசியைத் தேடிக்கொண்டு வந்திருக்கும் மந்திரவாதிதான் தார்க்கா. அரத்யுங்க வித்தையால் கண்பார்வையாலேயே எதிராளியை எரித்து சாம்பலாக்கக் கூடிய அளவுக்கு வல்லமை படைத்தவன்.

தார்க்காவின் மனதில் துளசியின்பால் ஏற்படும் உணர்வைக் "காதல்" என்று சொல்ல முடியுமா? அவனுக்கே அது புரியவில்லை. துளசியின் நலனை வேண்டி அவன் மேற்கொண்ட முயற்சிகளை ஜெயதேவ், சாரதாவால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் மற்றவர்களின் கண்களுக்கு அவன் எதிரியாகத் தென்படுகிறான்.

தார்க்காவின் முயற்சி பலித்ததா? தார்க்காவின் மனதைத் துளசி புரிந்துகொண்டாளா? இந்தக் கேள்விகளுக்கு வாசகர்கள்தான் பதில் சொல்ல வேண்டும்.

திரு. எண்டமூரி வீரேந்திரநாத் பல இடங்களிலிருந்து சேகரிக்கப் பட்ட செய்திகளை இந்த நாவல்களில் (துளசி தளம், மீண்டும் துளசி) சொல்லி இருக்கிறார்.

மொழிபெயர்ப்புக்கு அநுமதி வழங்கிய திரு. எண்டமூரி வீரேந்திரநாத் அவர்களுக்கும், புத்தகமாக வெளியிட்ட அல்லயன்ஸ் நிறுவனத்தாருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"துளசி தளம்" நாவலைப் போலவே "மீண்டும் துளசி"யும் வாசகர்களின் மனதில் நிலையான இடத்தைப் பெறும் என்ற எதிர்பார்ப்புடன்...

கௌரி கிருபாநந்தன்

மீண்டும் துளசி

1 நள்ளிரவு வேளை. மயானத்தின் நடுவில் சிவனுடைய மூன்றாவது கண்ணிலிருந்து புறப்பட்ட நெருப்பைப் போல் தகதகவென்று சிதை எரிந்து கொண்டிருந்தது. திடீரென்று அங்கே நிசப்தம் நிலவியது.

கும்பலாக மக்கள் அந்த இடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். அவர்களின் கண்கள் பாதி மூடி இருந்தன. இருந்தாலும் மயானத்திற்குப் போகும் பாதை அவர்களுக்கு நன்றாக அறிமுகம் இருப்பதுபோல் வந்து கொண்டிருந்தார்கள். தாளம் தப்பாமல் அவர்கள் நடந்து வருவதைப் பார்க்கும்போது பெரிய அலையொன்று முன்னேறி வருவதுபோல் இருந்தது. அவர்கள் கைகளில் இருக்கும் தீவட்டிகள் எதிரி நாட்டின்மீது போர் தொடுக்கப் போகும் சிப்பாய்களைப் போலஇருந்தன.

அப்படி வருபவர்கள் ஒவ்வொருவரும் பூததேவதைகளை வழிபடுபவர்கள்தான்.

இறந்துபோன தங்களுடைய துணைவனைக் காண்பதற்காக, பில்தா கிராமத்திலிருந்து மயானத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

சரியாக இருபத்து நான்கு மணி நேரம் முன் காத்ரா இறந்துபோனான். பிஸ்தா கிராமத்தின் தலைசிறந்த மந்திரவாதியென அழைக்கப்பட்ட காத்ரா, காஷ்மோரா என்கிற பூததேவதையை வழிபட்டுக் கொண்டிருந்தபோது பட்டிணவாசிகள் மூவர் வந்து அவனைக் கொன்று விட்டார்கள்.

பிஸ்தாவிற்குள் அன்னியர்கள் நுழைந்துவிட்டார் கள். அவர்களைச் சேர்ந்தவனைக் கொன்றுவிட்டார்கள். இந்த விஷயம் அவர்களுக்குப் பிறகுதான் தெரிந்தது.

இறந்துபோன மந்திரவாதியைச் சுற்றி இருபத்தி நான்கு மணி நேரம் வரை பூததேவதைகள் அவனைச் சூழ்ந்துகொண்டு ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கும். அதன் பிறகுதான் அவனைக் காணவேண்டும்.

அதற்காகத்தான் அவர்கள் புறப்பட்டார்கள். வெறுமே பார்ப்பதற்காக மட்டும் அல்ல.

அவர்களுடைய இதழ்கள் மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருந்தன. அவர்ணம், விவர்ணம், குரோதம், ப்ரம்சம், ஸ்வேதம், உன்மதம் முதலிய நியமங்களை அனுஷ்டித்து தங்களுடைய எதிரி அழிய வேண்டும் என்று மந்திரங்களை ஜெபித்துக் கொண்டிருந்தார்கள்.

சிதையின் தீ கொழுந்துவிட்டு எரிந்துகொண்டி ருந்தது.

அங்கே நின்று கொண்டிருந்தான் விஷாச்சி. பிஸ்தா கிராமத்திலேயே வயதானவன் அவன்தான். தோல் சுருங்கி, விலா எலும்புகள் வெளியில் விகாரமாகத் தென் பட்டுக் கொண்டிருந்தன. மூடியிருந்த கண் இமைகளின் மீது விழுந்த வெளிச்சம் குரூரமாய்த் தோற்றமளித்தது. இடுப்பில் ஒரு சின்ன துண்டைத் தவிர வேறு எந்த ஆடை யும் இல்லை.

சரியாக மணி பன்னிரண்டு.

மந்திரங்கள் ஓதுவதை நிறுத்திவிட்டு அவர்கள் கண்களைத் திறந்தார்கள். சிறியவர்கள், இளைஞர்கள், கிழவர்கள் எல்லோருமே அங்கே இருந்தார்கள். பிஸ்தா கிராமமே திரண்டு அங்கே வந்துவிட்டதுபோல் இருந்தது—

எவ்வளவோ சாவுகளைப் பார்த்தவர்கள். மரணத்திற்கிடையே வாழ்ந்தவர்கள். சாவையே வாழ்க்கையின் ஆதாரமாகக் கொண்டவர்கள், அவர்களுக்குக்கூட மரணம் இவ்வளவு பயங்கரமானதாக இருக்கும் என்று தெரியாது. தங்களையும் அறியாமல் "ஹா" என்றார்கள். ஒரே நேரத்தில் அத்தனை பேரின் வாயிலிருந்து வெளிவந்த அந்தச் சத்தம் காற்றில் அலையலையாகப் பரவியது.

எதிரே காத்ராவின் பிணம் பயங்கரமாக இருந்தது. முதுகுத் தண்டில் சிலிர்ப்பை ஏற்படுத்தும் விதமாக.

காத்ரா இறந்து போய் இருபத்து நான்கு மணி நேரம் கடந்துவிட்டிருந்தது. இரத்தம் உறிஞ்சப்பட்ட நிலையில் அவனுடைய உடல் காற்று இறங்கிய பலூனைப் போல் இருந்தது.

பருந்து ஏதோ கொத்தியிருக்க வேண்டும். கண் அதனுடைய இடத்திலிருந்து பெயர்க்கப்பட்டு வெளியில் தொங்கிக் கொண்டிருந்தது. வாய்க்கருகில் இரத்தம் உறைந்து கிடந்தது. நரி ஒன்று பிடுங்கித் தின்றதுபோல் தொடைக்கருகில் சதைகன்றி கறுப்பாக இருந்தது.

அங்கே இருந்தவர்கள் அந்தப் பிணத்தையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கொஞ்ச நேரத்திற்கு முன்னால்தான் அவர்களுக்குத் தெரியும் காத்ரா காஷ்மோராவை ஏவிய விஷயம்.

அதுவரையில் அந்த ரகசியத்தை அறிந்தவர்கள் இருவர் மட்டும்தான்.

ஒருவன் அந்தக் கிராமத்தின் தலைவன் விஷாச்சி, காத்ராவின் இரத்தத்தைத் துடைத்த கிழவன் விபூதா மற்றொருவன்.

காத்ரா காஷ்மோராவைத் துயிலெழுப்பிய விஷயம் அந்த இருவருக்கு மட்டும்தான் தெரியும்.

இருபது நாட்களுக்குமுன் விஷாச்சி காத்ராவைச் சந்தித்தான். காஷ்மோராவைப் போன்ற சக்தி வாய்ந்த பூத தேவதையின் துயிலைக் கலைக்க வேண்டாமென்று சொல்லிப் பார்த்தான். காத்ரா கேட்கவில்லை. இப்பொழுது அதன் பலனை அநுபவித்துவிட்டான். அதற்குக் காரணம் அந்தக் கிழவன் விபூதாதான். யாரோ மூன்று அந்நியர்கள் காரில் வந்திறங்கி காத்ராவைப் பற்றி விசாரித்திருக் கிறார்கள். விபூதா, காத்ரா இருக்கும் இடத்தை அவர் களுக்குச் சொல்லிவிட்டான். அவ்வளவுதான். விடிவதற் குள் மயானத்தின் நடுவில் காத்ரா செத்துக்கிடந்தான்— இரத்தம் உறிஞ்சப்பட்ட நிலையில்.

காலையில்தான் காத்ரா இறந்துபோன செய்தி தெரிந்தது. ஒரு சிறுவன் பிணத்தைப் பார்த்துவிட்டு நேராக ஊருக்குள் வந்து விஷாச்சியிடம் செய்தியைச் சொன்ன வன் அடுத்த அரை மணியில் இரத்தம் கக்கிய நிலையில் இறந்து போய் விட்டான். விஷயம் தெரிந்ததுமே யாரும் மயானத்துப் பக்கம் போகக்கூடாது என்று விஷாச்சி தடை உத்தரவு போட்டுவிட்டான்.

காஷ்மோராவை துயிலெழுப்புவதுதான் கடினம். இறுதி அம்சம் அத்தனைக் கடினமானது அல்ல. பொம்மையைத் தீயில் போட்டாலே போதும் உபாசனை முடிந்துவிடும்.

பின்னே எது தடையாக இருந்தது?

அங்கிருந்தவர்களை ஆயிரம் கேள்விகள் துளைத் தெடுத்துக் கொண்டிருந்தன.

அவர்களுடைய எண்ணங்களைக் கலைக்கும் வகை யில் விஷாச்சி ஒரிய மொழியில் ஏதோ சொன்னான். அவர்களுக்குள் நான்கு இளைஞர்கள் முன்னால் வந்தார் கள். அவர்களிடம் சில ஆணைகளைப் பிறப்பித்தான், விஷாச்சி.

ஒரு இளைஞன் குனிந்து காத்ராவின் உடலைக் குழியிலிருந்து வெளியில் எடுத்தான். பிணத்தின் இதயம் இருந்த பகுதியில் சின்ன துளையிட்டு ரோஜா மொட்டை கிள்ளியெடுப்பதுபோல் விரல்களால் இதயத்தை எடுத்து அருகில் இருந்தவனிடம் கொடுத்தான். பிறகு பிணத்தைக் குப்புறப்படுத்தி வைத்து காதுக்குப் பின் பகுதியில் லேசாக அறுத்து விரல்களை உள்ளே செலுத்தி மூளைப் பகுதியை வெளியில் எடுத்தான்.

பிஸ்தா கிராமத்தின் தலைசிறந்த மந்திரவாதி காத்ரா, அவனுடைய மூளையும், இதயமும் எத்தனை மதிப்பு வாய்ந்தனவோ, பூதவித்தைகளைப்பற்றி அறிமுகம் இருப்பவர்களுக்குத்தான் தெரியும்.

* * *

மந்திரவாதிகளைத் தகனம் செய்ய மாட்டார்கள். புதைப்பார்கள். அதுவும் உடல் முழுவதும் பூமிக்குள் இருக்கும். ஒரு கை மட்டும் வெளியில் நீட்டிக் கொண்டி ருக்கும்.

பூததேவதைகளின் அழைப்பை ஏற்றுக் கொள்வதற் காக அதுபோல் கையை வெளியே நீட்டியபடி வைக்க

வேண்டும் என்பது அவர்களுடைய நம்பிக்கை. எந்த நரியும் பிடுங்கித் தின்னாத வரையில் அந்தக் கை அப்படியே நீட்டிக்கொண்டு, தரையிலிருந்து முளைத்ததுபோல் காட்சி அளிக்கும்.

பிணத்தைப் புதைத்த பிறகு, இரத்த தீர்த்தத்தைப் பருகி விட்டு, கிராமத்தை நோக்கித் திரும்பினார்கள் எல் லோரும். விபூதா கிழவனையும், விஷாச்சியையும், தவிர.

விஷாச்சி ஒரே ஒரு சிறுவனை மட்டும் கண் ஜாடை காட்டி நிறுத்திவிட்டான். போய்க் கொண்டிருந்தவர் களுக்குத் தெரியும். கிராமத் தலைவன் அந்தச் சிறுவனை மட்டும் இருக்கச் சொன்னானென்றால், இன்னும் சில வருடங்களில் அந்தக் கிராமத்தில் மற்றொரு சிறந்த மந்திர வாதி உருவாகப் போகிறான் என்று.

சாதாரணமாக ஒரு மந்திரவாதி சித்தியடைவதற்குள் குறைந்தது ஐம்பது வயதாவது ஆகிவிடும். ஆனால் அந்தச் சிறுவன் மிகுந்த அதிருஷ்டம் செய்திருக்க வேண்டும். இருபது வயதிற்குள் ஒரு தலைசிறந்த மந்திரவாதியாகி விடப்போகிறான்.

எல்லோரும் கிளம்பிப் போன பிறகு விஷாச்சி அந்தச் சிறுவனை ஒரு நிமிடம் தீட்சண்யமாகப் பார்த் தான். பத்து வயது நிறைந்த சிறுவன் திடமாக இருந்தான். படிப்பு இல்லாவிட்டாலும், முகத்தில் அறிவுக்களை சுடர் விட்டது.

விஷாச்சியின் பார்வைக்கு வேறொருவனாக இருந் தால் நடுநடுங்கிச் செத்திருப்பான். ஆனால் அந்தச் சிறு வனோ, அயரவில்லை. பதுமையைப்போல் உறைந்து நின்று அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான்.

மந்திரவாதிகளின் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் தென்படக் கூடாது. மோகமாச்சரியங்களுக்கு அப்பாற் பட்டவர்களாக இருக்கவேண்டும். காத்ரா அப்படித்தான் இருந்தான்.

விஷாச்சியின் இதழ்களில் புன்முறுவல் மலர்ந்தது. திருப்தியடைந்தவனாகத் தலையை அசைத்தான். தான் ஒப்படைக்கப் போகும் காரியத்தை வெற்றிகரமாக முடித்து விடுவான் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. அருகில் வருமாறு அழைத்தான். சிறுவன் அருகில் வந்தான்.

'இவன் பெயர் தெரியுமா?' – விஷாச்சி விபூதாவை நோக்கிக் கேட்டான்.

தெரியாது என்பதுபோல் விபூதா தலையை அசைத் தான். அவனுக்குக் குழப்பமாக இருந்தது. மந்திரங்களைக் கற்றுக் கொடுக்கும்போது, மூன்றாவது நபர் இருக்கக் கூடாது என்பது சம்பிரதாயம். ஆனால் விஷாச்சி தன்னை எதற்காக இருக்கச் சொன்னான்.

"இந்தச் சிறுவனின் பெயர், தார்க்கா சாஹு. எல்லோரும் தார்க்கா என அழைப்பார்கள்." திடீரென்று விஷாச்சியின் குரல் தீவிரமாக ஒலித்தது. அம் மயானமே அதிர்ந்து போவதுபோல் கத்தினான். "பிஸ்தா கிராமத்து மந்திரவாதிகளுக்கெல்லாம் தார்க்காவைத் தலைவனாக நியமிக்கப் போகிறேன், யாருக்காவது ஆட்சேபனை உண்டா?"

சுவற்றுக்கோழிகள்கூட பயந்துபோய்ச் .சத்தத்தை நிறுத்திவிட்டன. விஷாச்சியின் முகம் நெருப்பு வெளிச் சத்தில் செக்கச் செவேலென இருந்தது.

"தார்க்கா, இன்று முதல் உன்னை என் சீடனாக ஏற்றுக்கொள்ளப் போகிறேன், சூனியத்திலிருந்து காஷ்

மோரா வரையிலும் தெரிந்த எல்லா வித்தைகளையும் உனக்குக் கற்றுத் தரப் போகிறேன். நான் இறந்து போவ தற்குள் இந்த வித்தைகளை நீ கற்றுக்கொள்ள வேண்டும். அப்படி கற்றுக் கொண்டால், மிகச் சிறிய வயதில் தலை சிறந்த மந்திரவாதி என்ற புகழ் உன்னைச் சேரும்."

மரங்கள், புதர்கள், பறவைகள் எல்லாம் மௌனமாக விஷாச்சி சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தன.

"மந்திரவாதிகளுக்கு ஈவு இரக்கம் மன்னிக்கும் மனப் பான்மையும் இருக்கவே கூடாது. நாம்சூனியம் வைக்கும் நபர் வலியால் துடித்தாலும் உள்ளத்தில் எந்தவிதச் சலன மும் இருக்கக்கூடாது. அந்த மனோதிடம் இந்த வயதில் உனக்கு இருக்கிறதென்று நீ நிரூபித்துக் காட்ட வேண்டும்.

தார்க்கா சலனமின்றி நின்றுகொண்டிருந்தான். விபூதா, விஷாச்சி சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந் தான்.

விஷாச்சி நெருப்பிற்குப் பின்னாலிருந்து மரப் பலகை ஒன்றை எடுத்தான். அதைப் பார்த்ததும் விபூதா தன்னை யும் அறியாமல் ஓரடி பின்வாங்கினான்.

"காத்ராவின் உடலுக்கு அருகில் கிடந்தது இது. இதைக் கவனமாகப் பார். பீஜாக்ஷரங்கள் தென்படு கின்றன. அப்படியானால் யாரோ காத்ராவிற்கெதிராக வேலை செய்திருக்கிறார்கள். காத்ரா இறந்த செய்தியைக் கேட்டதுமே எனக்குச் சந்தேகம் வந்தது. காஷ்மோராவின் முதல் அங்கத்தைப் பிரயோகிப்பதுதான் கடினம். அதை வெற்றிகரமாக நிறைவேற்றிய காத்ரா இறுதியில் இறக்க நேரிட்டது ஏன்? என் சந்தேகம் உண்மையாகிவிட்டது. பீஜாக்ஷரங்கள் பதித்த இந்த மரப் பலகை கிடைத்தது.

"யாரோ மூன்று அந்நியர்கள் பிஸ்தாவுக்கு வந்து மந்திரவாதிகளின் எல்லைக்குள் நுழைந்து, அந்தக் கிராமத்தின் தலைசிறந்த மந்திரவாதியான காத்ராவைக் கொன்றுவிட்டதை வெறுமே கைகட்டிப் பார்த்துக் கொண்டிருப்பதா? காத்ரா மயானத்தில் காஷ் மோராவைப் பிரயோகித்துக் கொண்டிருக்கிறான் என்று அவர்களுக்கு எப்படித் தெரிந்தது?"

விபூதாக் கிழவன் மேலும் ஓரடி பின்வாங்கினான்.

"தார்க்கா, இவன் நமது மரபுகளை அவமதித்து விட்டான். குடி மயக்கமோ ஏதோ ஒன்று எதிரிக்கு வழி காட்டிவிட்டான். பிஸ்தா கிராமத்திற்குத் தீராத பழியை ஏற்படுத்தி தலைகுனிந்து கொள்ளும் விதமாகச் செய்து விட்டான். அவனைத் தண்டிப்பது உன் பொறுப்பு..."

விஷாச்சி சொல்லி முடிக்கக்கூடவில்லை. தார்க்கா சிறுத்தையைவிட வேகமாக நகர்ந்தான். அவன் கைகள் மின்னலைவிட வேகமாய்ச் செயல்பட்டன.

கிழவன் ஓலமிட்டது மயானத்தின் மூலைமுடுக் கெல்லாம் எதிரொலித்தது. கண்களிலிருந்து வழிந்த இரத்தம் வாயிலிருந்து வெளிவந்த இரத்தத்துடன் கலந்தது. தொய்ந்த உடலானது பூமியில் தளர்ந்து விழுந்தது.

விஷாச்சியின் பார்வை கிழவனின் உயிரற்ற உடலின் மீது சலனமின்றியும், தார்க்கா மீது பாராட்டுவதுபோல வும் படிந்தது.

"தார்க்கா, இப்போது உனக்கு மந்திரம் கற்றுத் தரப் போகிறேன். தசவித நாடிகளைப்பற்றிச் சொல்லித் தரப் போகிறேன். மூக்கிற்கு இடதுபுறம் இருப்பது இட நாடி, வலதுபுறம் இருப்பது பிங்கள நாடி, மத்தியில் இருப்பது

சுஷும்ண நாடி, வலது கண்ணிற்கு அருகில் காந்தார நாடி, நாக்கில் ஆஸ்தின் நாடி, வலது காதில் புஷா நாடி, இடது காதில் பயஸ்வினி நாடி, நாபியில் சங்கிணி நாடி ஆகியவை இருக்கின்றன.

'பத்து நாடிகளையும் பத்து பூததேவதைகள் பாதுகாத்து வருகின்றன. அவற்றை நீ வசமாக்கிக் கொண்டால் எப்பேர்ப்பட்ட ஆள்மீதும் நீ சூனியத்தை வைக்கலாம். நீ எந்த பூததேவதையை வழிபடுகிறாயோ, உன்னால் சூனியம் வைக்கப்பட்ட நபர் சம்பந்தப்பட்ட அங்கத்தில் வலியால் துடிதுடித்துப் போவான். ஆண்களுக்கு இடுப்பு வலியாகவும் பெண்களுக்கு வயிற்று வலியாகவும் தொடங்கும். இந்தச் சூனியத்தை எப்படிக் கற்க வேண்டும் என்பதை நான் உனக்குச் சொல்லித் தருகிறேன். அதற்கு முன்னால் நீ எனக்கு ஒரு வாக்குத் தர வேண்டும்.

"காஷ்மோராவின் ஒரு நாளைய தூக்கமானது மனிதனுக்குப் பதினோரு வருடங்களுக்குச் சமம். பதினொரு ஆண்டுகளுக்குப் பிறகு அதிருப்தியுடன் காஷ்மோரா துயிலெழும். அப்போது நிகழப்போகும் பிரளய தாண்டவத்திற்கு நீ நெய்யூற்றித் தீவிரப்படுத்த வேண்டும். யார்மீது இந்தக் காஷ்மோரா ஏவப்பட்டிருக்கிறதென்று நீ கண்டுபிடிக்க வேண்டும். அவர்களைக் காஷ்மோரா பிடுங்கித் தின்னும்.

"அதற்கு நீ என்னமுறைகளைக் கையாள வேண்டும் என்பதை உனக்குப் பிறகு சொல்கிறேன். முதலில் அது ஆணா, பெண்ணா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

"அதைவிட முக்கியமான விஷயம், பழிவாங்கும் உணர்ச்சியுடன் பிஸ்தா கிராமத்திற்குள் நுழைந்தது யார்

என்று கண்டுபிடிப்பதற்கு ஆதாரங்கள் இல்லை. அதனால் நீ நாகரீக உலகத்திற்குள் நுழைய வேண்டும். உன் பூத வித்தைகளைப் பற்றி ஒன்றுமே அறிந்து விடாதபடி நீ அவர்களோடு சேர வேண்டும். எப்படிக் கண்டு பிடிப் பாயோ எனக்குத் தெரியாது. அந்த மூவரையும் நீ கொல்ல வேண்டும். அப்படிச் செய்வதாய் எனக்கு வாக்குத் தா."

தார்க்கா வாக்களிப்பதுபோல் தெற்குநோக்கிக் கையை உயர்த்தினான்.

திருப்தி அடைந்த விஷாச்சி தொன்னை ஒன்றை நீட்டினான்.

அதில் காத்ராவின் மூளை இருந்தது.

2 கிழக்கு வெளுத்தது.

பிஸ்தாவின் ஊர் எல்லையில் அவர்கள் அனை வரும் காத்திருந்தார்கள். தொலைவிலிருந்து விஷாச்சியும் அவனைத் தொடர்ந்து தார்க்காவும் வருவது தெரிந்தது. அவன் சிறுவனாகத் தெரியவில்லை. உலகத்தையே ஆட்டிப் படைக்கப் போகும் தலைசிறந்த மந்திரவாதியைப் போலத் தெரிந்தான்.

நாட்கள் நகர்ந்துகொண்டிருந்தன. தார்க்கா குருவிட மிருந்து ஒவ்வொன்றாய் மந்திரங்களைக் கற்றுவந்தான். அவன் தன் குருவான விஷாச்சியிற்கே வியப்பு ஏற்படும் வண்ணம் வேகமாய் அவ்வித்தைகளைக் கற்று வந்தான்.

மேனியை வருத்திக்கொண்டு, வெயிலையும், குளிரை யும் பொருட்படுத்தாமல், எந்த மந்திரவாதியும் இதுவரையில் காட்டியிராத ஒருமித்த நிலையைத் தார்க்கா

கடைப்பிடித்து வந்தான். தன்னுடைய தேர்வு சரியாக இருந்ததற்கு விஷாச்சி மகிழ்ச்சியடைந்தான்.

இரண்டு வருடங்கள் கழிந்தன.

தார்க்காவிற்குப் பதிநான்கு வயதாகிவிட்டது. வயதிற்கு மீறிய உயரத்துடன், பலசாலியாக வளர்ந்து விட்டான். மெலிதாக மீசை வளரத் தொடங்கியது. எல்லாவற்றையும்விட அவன் கண்களில் ஒரு தீட்சண்யம் இருந்தது. ஒருமுறை அவன் கண்களைப் பார்த்தவர்கள் அந்தப் பார்வையை ஜென்மத்தில் மறக்க மாட்டார்கள். விளக்கை நோக்கிச் செல்லும் விட்டில் பூச்சியைப்போல அவன்பால் ஈர்க்கப்பட்டு விடுவார்கள்.

எட்டு ஆண்டுகளில் கற்றுக்கொள்ளக்கூடிய சூனியம் போன்ற வித்தைகளை அவன் நான்கு ஆண்டுகளுக்குள் கற்று முடித்துவிட்டான்.

இப்போதெல்லாம் தார்க்கா ஒரு மாதிரியாக இருப்பதை விஷாச்சி உணர்ந்தான். ஆனால் ஏனென்று கேட்கவில்லை. அவனே சொல்லட்டும் என்றும் காத்திருந்தான்.

“நான் ஒரு விஷயம் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். விஷாச்சி” –தார்க்கா சொன்னான்.

“என்ன?”

தார்க்கா ஒரு நிமிடம் தடுமாறினான். சொல்வதா வேண்டாமா என்று. விஷாச்சியும் அவனைச் சொல்லச் சொல்லி வற்புறுத்தவில்லை. சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு தார்க்கா சொன்னான்.

"நான் தியானத்தில் ஆழ்ந்து கண்களை மூடியிருக்கும் பொழுதெல்லாம் ஒரு காட்சி என் மணக்கள் முன்னால் தோன்றுகிறது."

"என்ன காட்சி?"

"ஐந்து தலைகள் கொண்ட ஒரு சிங்கம்."

நடந்து கொண்டிருந்த விஷாச்சி சட்டென்று நின்று "என்னது? மறுபடியும் சரியாகச் சொல்" என்றான்.

"ஒரு தாமரை மலரில் அது எனக்குத் தென்படுகிறது. அதன்மீது நான்கு தலை கொண்ட ராக்ஷசன் ஒருவன் தென்படுகிறான். தாமரை மலரின் நடுவில் நட்சத்திரம் ஒன்றும் தெரிகிறது.

அப்போது விஷாச்சி சிரித்த வெற்றிச் சிரிப்பு அந்த வட்டாரம் முழுவதும் எதிரொலித்தது.

"சாதித்துவிட்டாய் தார்க்கா, மகா யோகிகளுக்கும் சாத்தியப்படாத யோகத்தை நீ சாதித்துவிட்டாய்."

"என்ன சாதித்துவிட்டேன்?"

"அதைச் சொல்வதற்கு முன்னால் உனக்கும் மூலா தாரச் சக்கிரத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும். மனித னின் முதுகுத்தண்டின் கீழே ஒரு சக்கரம் இருக்கிறது. எல்லா சக்கரங்களுக்கும் ஆதாரம் அதுதான் என்பதால் அதை மூலாதாரச் சக்கரம் என்று சொல்வார்கள். அந்தச் சக்கரத்திற்குச் சிவப்பு வண்ணத்தில் நான்கு இதழ்கள் இருக்கும். அவற்றில் எழுத்துகள் இருக்கும். ஐந்து தும்பிக் கைகளைக் கொண்ட ஐராவதம் என்ற யானை நடுவில் இருக்கும். இதோ இப்படி..." என்று காய்ந்த குச்சியை எடுத்துக்கொண்டு தரையில் வரைந்து காண்பித்தான்.

"இந்த மூலாதாரச் சக்கரத்தின் தரிசனம் கிட்டியவன் மகாயோகியாவான் என்று சித்தபுருஷர்கள் சொல்வார்கள். லிங்கத்தின் மேல்புறத்தில் குண்டலினி சக்தி இருக்கிறது. அதை எழுப்பி சுஷும்ண வழியாக மூலாதாரத்திலிருந்து சகஸ்ராரதிற்குச் சேர்ப்பிக்க வேண்டும். அது தான் ராஜயோகத்தின் லட்சியம்.

"தார்க்கா... இந்த யோகிகள் நம்முடைய எதிரிகள். இவர்களைக் கடவுள் காப்பாற்றிக் கொண்டிருப்பார். இத்தனை வருடங்களுக்குப் பிறகு ஒரு மகாமந்திரவாதி உருவாகிவிட்டான், மூலாதாரச்சக்கரத்தில் ஐந்து தலைகள் கொண்ட சிங்கத்தைப் பார்த்தவன், சிங்கம் யானைக்கு எதிரி தார்க்கா... இனி உன்னை எதிர்க்கக் கூடியவன் ஒருவனுமில்லை... என்னோடு வா..."

எங்கே என்று கேட்கவில்லை தார்க்கா. அப்படிக் கேட்பது அவனது அகராதியிலேயே கிடையாது. இருவரும் நடக்கத் தொடங்கினார்கள்.

அரைமணியில் மயானத்தை அடைந்தார்கள். காத்ராவின் கையைப் பார்த்துவிட்டு சட்டென நின்றான் தார்க்கா.

பூமியிலிருந்து வெளியில் நீட்டிக்கொண்டிருந்த எலும்புகளில் ஆள்காட்டிவிரலும், நடுவிரலும் சிதிலமாகியிருந்தன.

"இங்கே வா."

விஷாச்சியின் குரலைக் கேட்டு தார்க்கா நகர்ந்தான். சற்று தூரம் அழைத்துச் சென்று, "இங்கே தோண்டு" என்றான்.

மறுபேச்சுப் பேசாமல் தார்க்கா தோண்டத் தொடங்கினான். அதற்குள் விஷாச்சி கற்களைச் சேகரித்து வந்தான். இரண்டு மணிநேரத்தில் ஆழமான குழியொன்று தயாராகி விட்டது. குழியின் சுவர்களில் விளிம்பு வரை கற்களைப் பதித்தான் விஷாச்சி.

இதெல்லாம் எதற்கு என்று தார்க்கா கேட்கவில்லை.

"போகலாம்"— வேலையை முடித்துவிட்டு விஷாச்சி சொன்னான்.

இருவரும் திரும்பினார்கள்.

கிராமத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தபோது விஷாச்சி சொன்னான்:

"தார்க்கா, இனி நான் உனக்குச் சொல்லித் தர வேண்டியது ஏதுமில்லை. மூலாதாரச் சக்கரத்தில் சிங்கத்தைப் பார்க்க முடிந்த உன்னை உலகில் எந்த சக்தியுமே எதுவும் செய்துவிட முடியாது. காத்ரா இறந்து போன அன்று உன்னை என் சீடனாக ஏற்றுக்கொண்டது எதற்காக என்று உனக்குத் தெரியுமா?"

"தெரியும்."

"பிஸ்தா கிராமத்திற்குள் மூன்று அந்நியர்கள் நுழைந்து ஒரு மந்திரவாதியைக் கொன்றுவிட்டார்கள்."

"அவர்களைப் பழி தீர்த்துக் கொள்ள வேண்டும்."

"ஆமாம் தார்க்கா, அதற்காகத்தான் உனக்கு இந்த வித்தைகள் எல்லாவற்றையும் கற்றுக் கொடுத்து உலகிலேயே சிறந்த மந்திரவாதி ஆக்கினேன். இத்தனை சிறிய வயதில் இவ்வளவு பெரிய மந்திரவாதி வேறு ஒருவனுமே இருந்தது இல்லை"

"நன்றி விஷாச்சி, நீ எனக்குக் கற்றுத் தந்த இந்த வித்தைகளுக்காக நான் என்றென்றும் நன்றியுடையவனாக இருப்பேன். உன் விருப்பத்தை நிறைவேற்றுவேன். காத்ரா வைக் கொன்ற மூவரையும் கொல்கிறேன். அவர்களைச் சாதாரணமாகக் கொல்ல மாட்டேன் விஷாச்சி. ஒருவனை மனதளவில் கொல்வேன். மற்றொருவனை மந்திர சக்தியால் எரித்துவிடுவேன். மூன்றாமவனை இந்தக் கைகளால் சுயமாகக் கொன்று விடுகிறேன்."

விஷாச்சி அவனை ஏறிட்டு நோக்கினான். தார்க்கா விடம் ஆவேசமோ, உத்வேகமோ எதுவும் இல்லை. அவன் கண்கள் நிச்சலனமாக இருந்தன. பாயத் தயாராக இருக்கும் புலியைப்போல் இருந்தான். எத்தனையோ மரணங்களைப் பார்த்திருந்த அந்தக் கிழவனுக்குக் கூடப் பயத்தால் உடல் நடுங்கியது. தாழ்ந்த குரலில் கேட்டான்.

"எங்கேயென்று தேடுவாய் அவர்களை? நள்ளிரவில் வந்தார்கள். உடனே போய்விட்டார்கள்."

தார்க்காவின் பிடி இறுகியது. "தேடுகிறேன்... பூமியி லும், நீரிலும், நெருப்பிலும், காற்றிலும், எங்கிருந்தாலும் சரி, அவர்களைப் பிடித்துவிடுவேன். என்னை நம்பு விஷாச்சி.

இருவரும் காத்ராவின் குடிசையை அடைந்தார்கள். விஷாச்சி இடுப்பிலிருந்து ஒரு பொம்மையை வெளியில் எடுத்தான். அதற்குக் கைகளும் கால்களும் இல்லை.

"இதன்மீதுதான் காத்ரா காஷ்மோராவை ஏவி இருக்கிறான். கடைசி நிமிடத்தில் இதை அக்னியில் போடு வதற்கு முன்னால் அந்த அந்நியர்கள் மந்திரங்களைச் சொல்லவிடாமல் தடுத்துவிட்டார்கள். ஸ்ரீசக்கரம் பதித்த மரப்பலகையால் காத்ராவின் பற்சுளைத் தட்டித் தட்டி

அவன் மரணத்திற்குக் காரணமாகிவிட்டார்கள். இந்தப் பொம்மையைத் தவிர நமக்கு எந்த ஆதாரமும் இல்லை" என்று அதனை ஒப்படைத்தான் விஷாச்சி.

தார்க்கா பொம்மையைக் கையில் எடுத்துக் கொண்டான். ஐந்து வருடங்களுக்கு முன் நூற்றெட்டு முட்கள் குத்தப்பட்ட பொம்மை பெரும்பாலும் சிதில மாகி இருந்தது. அவன் விரல்கள் மெதுவாகப் பொம் மையைத் தடவிக் கொடுத்தன.

அப்போது இடுப்புப் பாகத்தில் முடிச்சுப் போட்டிருந்த தலைமுடி ஒன்று அவன் விரல்களுக்குத் தட்டுப்பட்டது. அவன் யோசனையுடன் விஷாச்சியை ஏறிட்டு நோக்கினான்.

இந்த ஒரே ஒரு தலைமுடியை வைத்துக்கொண்டு ஆளை எப்படிக் கண்டுபிடிப்பது? இந்தத் தலைமுடி யாரு டையதோ, அந்த நபரின் மீதுதான் சூனியப் பிரயோகம் நடந்திருக்கிறது. யார்மீது பிரயோகம் நடந்தது என்று தெரிந்தால் அந்த நபரைச் சேர்ந்த மனிதர்கள் யார் வந்தார் கள் என்பதைக் கண்டுபிடித்து விடலாம். ஆனால் இந்த முடி யாருடையது என்று எப்படித் தெரிந்து கொள்வது?

அவன் அதைப்பற்றி மேற்கொண்டு யோசிக்காமல் உள்ளே எடுத்துவைத்துக் கொண்டான்.

கிளம்பப் போன விஷாச்சி சற்று நின்று மறுபடியும் சொன்னான். "தார்க்கா, காத்ரா இறந்துபோன அன்று இரவு நான் அவன் வீட்டிற்குப் போய் சோதனை செய்தேன். மூலை முடுக்கெல்லாம் தேடினேன். யார் மீது ஏவினான் என்றும் வந்தவர்களைப் பற்றியும் துப்பு ஏதாவது கிடைக்குமா என்றும் பார்த்தேன். ஒன்றும் கிடைக்கவில்லை."

தார்க்கா மௌனமாக இருந்தான்.

"போய் வருகிறேன்" –விஷாச்சி சொன்னான்.

"சரி."

விஷாச்சி இருளில் மறைந்துவிட்டான். தார்க்கா சிறிது நேரம் நின்றுவிட்டு உள்ளே சென்றான்.

நன்றாக இருட்டிவிட்டது.

அவன் மல்லாந்து படுத்து யோசித்துக் கொண்டு இருந்தான்.

இந்தத் தலைமுடியை மட்டும் வைத்துக் கொண்டு சூனியம் செய்துவிட முடியாது. இருந்தாலும் தான் செய்ய வேண்டியது காத்ரா யார் மீது காஷ்மோராவை ஏவினான் என்பதைக் கண்டுபிடித்து அந்த நபரைக் கொல்வதில்லை. அந்த நபரின் சார்பில் வந்தவர்கள் யார்? அதைக் கண்டு பிடிக்க வேண்டும். எப்படிக் கண்டு பிடிப்பது?–

விஷாச்சி காத்தராவின் குடிசையைச் சோதனை போட்டும் ஏதும் கிடைக்கவில்லையா?

மந்திரவாதி இறந்துவிட்டால் அந்த வீடு அப்படியே பாழடைந்து போக வேண்டியதுதான். யாரும் அதில் குடியேற மாட்டார்கள். காலியாக இருக்க வேண்டியது தான்.

ஒருமுறை போய்த் தேடினால்?

நள்ளிரவு நெருங்கியது.

குடிசையின் கதவைச் சாத்திவிட்டு வெளியில் நடந் தான் தார்க்கா.

பிஸ்தா கிராமம் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது. நாய்கள் கூட குரைக்காமல் இருந்தன. அவற்றிற்கு மனிதர்கள் நள்ளிரவில் நடமாடுவது புதிதல்ல. பகலில் நடந்தால் தான் அதிசயம்.

ஐந்து நிமிடங்களில்அவன் காத்ராவின் குடிசையை அடைந்தான். ஒரு காலத்தில் தலை நிமிர்ந்துநின்ற கோட்டை இன்று சிதிலமடைந்து தன் பழம் பெருமையை நினைவு கூறுவதுபோல் தனித்திருந்தது.

ஒரு நிமிடம் தயங்கி நின்றவன் முன்னால் அடி எடுத்து வைததான்.

இறந்து போய்விட்ட மந்திரவாதியின் வீட்டிற்குள் யாரும் நுழையக் கூடாதென்றும், அந்த மந்திரவாதியின் ஆவி அவர்களைப் பிடித்துக் கொள்ளும் என்றும் சொல்வார்கள். ஆனால் தான் போவது காத்ராவைக் கொன்றவர்களைப் பழி தீர்த்துக் கொள்ளும் நோக்கத் துடன் தானே என்று மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டான்.

கதவை மெதுவாக உள்பக்கமாகத் தள்ளினான். நிலைப்படி மேலிருந்த காரை பெயர்ந்து டப் என்று கீழே விழுந்தது. அதைத் தொடர்ந்து ஆழமான நிசப்தம். இன்னும் ஒரு அடி எடுத்து வைத்தான். கால்களுக்கு இடை யில் எலியொன்று புகுந்து ஓடியது.

தன்னை இரண்டு கண்கள் கூர்மையாகக் கவனித்து வருவதுஅவனுக்குத் தெரியாது.

குடிசைக்கு நடுவில் நின்று நெருப்புக் குச்சியைக் கிழித்தான். பிறகு மெதுவாகத் தேடத் துவங்கினான். தேடுவதற்கு எதுவும் இல்லை. நைந்துபோன துணிமணிகள்,

ஒரு காலத்தில் அற்புதங்களைச் செய்த எலும்புகள், பழைய ட்ரங்குப் பெட்டி... தொட்டதுமே அதன் பிடி கையோடு வந்துவிட்டது.

அதற்குள் நெருப்புக் குச்சி அணைந்துவிட்டது.

குடிசையின் கதவு லேசாக அசைந்ததுபோல் இருந்தது. குளிர்ந்த காற்று உள்ளே வீசிக் கொண்டிருந்தது. கையை மறைப்பாக வைத்து மற்றொரு தீக்குச்சியைப் பற்ற வைத்தான்.

இந்த முறை மேற்கூரையில் தேடினான். எரவாணத் திலும், ஓலைகளுக்கு நடுவிலும் தேடினான். எதுவும் கிடைக்கவில்லை.

திடீரென்று நின்றுவிட்டான் அவன்.

யாரோ தன்னைக் கண்காணிப்பது போன்ற உணர்வு. மூச்சை உள்ளே இழுத்துக்கொண்டு மறுபடியும் தேடத் தொடங்கினான்.

தெற்குப் பக்கமாய் இருந்த எரவாணத்திற்குக் குறுக்கே இருந்த ஓலையை விலக்கினான். அங்கே சின்னதாகக் காகிதக்கட்டு ஒன்று தென்பட்டது. சட்டென்று அதைப் பிடித்து இழுத்தான். அதுதான் அவன் செய்த தவறு.

வேகமாக இழுத்ததில் காகிதங்கள் பொல பொல வென உதிர்ந்து விழுந்தன. ஐந்தாண்டுகளாய் அந்த எர வாணத்தில் கிடந்து மக்கிப்போன காகிதங்கள்.

அவன் மண்டியிட்டு உட்கார்ந்துகொண்டு ஒவ்வொரு கடிதமாக ஆராயத் தொடங்கினான். சின்னச் சின்னத் துண்டுகளாக இருந்த காகிதங்களைக் கவனமாகப் பிரித்து, தனக்கு வேண்டியதைத் தேடிக் கொண்டிருந்தான். எல்லாக் கடிதங்களும் ஒரிய மொழியில் எழுதப்

பட்டிருந்தன. ஐந்து நிமிடங்கள் கழித்து கிடைத்தது ஒரு காகிதம். அது தமிழில் இருந்தது.

அவனுக்குத் தமிழ் தெரியாது. அந்தக் காகிதத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் உள் மனம் அவனுக்கு வேண்டிய காகிதம் அதுதான் என எச்சரித்து கொண்டு இருந்தது. ஆனால் அதை வெளியில் எடுத்துச் செல்ல முடியாது. காற்றுக்குப் பொடிப் பொடியாகிவிடும். அதை மடிக்கவும் முடியாது.

அவன் ஒரு நிமிடம் யோசித்துவிட்டு, அந்தக் காகிதத்தை அங்கேயே வைத்தான். அது பறக்காமல் இருக்க மேலே ஒரு சிறுகல்லை வைத்துவிட்டு, எழுந்து பின்னால் திரும்பியவன், வாசலுக்கருகில் நின்று கொண்டுடிருந்த உருவத்தைப் பார்த்து திடுக்கிட்டு, கற்சிலையாகிவிட்டான்.

அங்கே விஷாச்சி நின்று கொண்டிருந்தான்.

தார்க்காவைப் பார்த்து புன்முறுவலுடன் ஒரு அடி முன்னால் வைத்துக்கொண்டே, "சபாஷ் தார்க்கா. என்னுடைய கணிப்புத் தவறாகவில்லை. அன்றும் சரி இன்றும் சரி."

தார்க்கா பேசவில்லை. அருகில் வந்த விஷாச்சி மீண்டும் சொன்னான், "காத்ரா இறந்துபோன அன்று இரவே நான் இந்தக் குடிசையில் தேடிவிட்டேன். இந்தக் கடிதம் கிடைத்தது எனக்கு, எதுவுமே கிடைக்கவில்லை என்று மாலையில் உன்னிடம் சொன்னது ஏன் தெரியுமா?"

தெரியாது என்பதுபோல் தலையை அசைத்தான் தார்க்கா.

"இனி இங்கே வேலையில்லை, வா போகலாம்."

இருவரும் வெளியே வந்தார்கள். மணி பன்னிரண்டரை ஆகிவிட்டது. எலும்புகளை உலுக்கும் அளவுக்கு குளிர்க்காற்று வீசிக் கொண்டிருந்தது.

இருவரும் நடந்துபோய்க் கொண்டிருந்தபோது விஷாச்சி சொல்லத் தொடங்கினான். "காத்ராவைக் கொன்றவர்களைப் பழி தீர்த்துக் கொள்வதற்காக உன்னைத் தேர்ந்தெடுத்தேன். நான் எடை போட்டது தப்பவில்லை. ஆனால் ஒரே ஒரு சந்தேகம் மட்டும் இருந்தது. நான் எத்தனை ஆத்திரத்துடன், பகையுடன் குமுறிக்கொண்டிருந்தேனோ அதே அளவுக் குப் பிடிவாதம் உன்னிடம் இருக்கிறதா என சோதிக்க நினைத்தேன்.

"அதனால் இன்று மாலை இந்தக் குடிசையைப் பற்றிய பேச்சை எடுத்தேன். உண்மையிலேயே பழிதீர்த்துக் கொள்ளும் எண்ணம் என் மனத்தில் இருக்கும் அளவுக்கு உன் மனத்திலும் இருந்தால் இன்று இரவு உனக்குத் தூக்கம் வராது. குடிசையைக் கட்டாயமாகச் சோதித்தால் தவிர உன்னால் உறங்க முடியாது. நான் நினைத்தது சரியாகிவிட்டது.

"தார்க்கா, ஒரு விஷயம் சொல்கிறேன். கேட்டுக் கொள். மந்திரவாதிக்கு இருக்க வேண்டியது பிடிவாதம். எந்தச் சூழ்நிலையிலும் அவன் ஏமாற்றமடையக் கூடாது. சில சமயம் ஆவிகள் அவனைக் கலாட்டா செய்வதற்காக அழ வைக்கும். பூததேவதைகள் அவனைச் சோதனை செய்து கொண்டிருப்பார்கள். இவற்றையெல்லாம் சமாளித்து உறுதியுடன் நிற்க வேண்டும். அந்தக் கடிதத்தை ஐந்தாண்டுகளுக்கு முன்பே பார்த்துவிட்டேன்.

துரதிருஷ்டவசமாக எனக்கு ஏதும் அதிலிருந்து சமாசாரம் கிடைக்கவில்லை. கையெழுத்துப் போட்டவன் மாரி என்பவனை விட்டுவிட்டால், காத்ரா காஷ்மோராவை ஏவியது துளசி என்ற பெண்ணின் மீது. அந்தப் பெண் தமிழ்நாட்டில் இருக்கிறாள். இவற்றைத் தவிர வேறு எந்த விஷயமும் தெரியாது. இப்போது சொல் தார்க்கா, அந்த மூ வரையும் பிடிப்பது எப்படி?"

நடந்துகொண்டிருந்த தார்க்கா நின்றான். "அந்த மூவரையும் பிடிக்க வேண்டுமென்றால் முதலில் துளசி எங்கே இருக்கிறாள் என்று தேட வேண்டும்."

"எப்படி? தமிழ் நாட்டில் அந்தப் பெயால் எத்தனையோ பெண்கள் இருப்பார்கள்."

"இருக்க மாட்டார்கள்" தார்க்காவின் குரல் உறுதி யாக ஒலித்தது. "துளசி என்கிற பெயரில் ரொம்பப் பேர் இருக்க மாட்டார்கள். தேட வேண்டும். ஒவ்வொரு ஊராகச் சல்லடை போட்டுத் தேட வேண்டும்.

விஷாச்சி அவனை நேராகப் பார்த்தான். "ஆனால் உனக்குக் கிடைத்த துளசியும் நமக்கு வேண்டிய துளசியும் ஒன்றுதான் என்பது என்ன நிச்சயம்? அதை எப்படித் தெரிந்து கொள்வது?"

முதன் முறையாக தார்க்காவின் இதழ்களில் புன்னகை மலர்ந்தது. "உனக்குத் தெரியாமல்தான் கேட்கிறாயா விஷாச்சி?"

"நிஜமாகவே தெரியாது. இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் தெரியாமல்தான் நான்கு வருடங்களாகத் தவிக் கிறேன். எந்த ஆதாரத்தை வைத்து துளசியைக் கண்டு பிடிக்கப் போகிறாய்?"

தார்கீகாவின் இதழ்களில் புன்முறுவல் மறைந்து விட்டது. பாயப்போகும் புலியின் கண்களைப் போலிருந்தது அவன் பார்வை.

"எதை வைத்து துளசியைக் கண்டுபிடிக்கப் போகிறாய் தார்க்கா?" தாமதத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாதவன் போல் விஷாச்சி கேட்டான்.

தார்க்கா இடுப்பிலிருந்த துணியில் மறைவாக வைத்திருந்த பொம்மையை எடுத்தான். அதன் நடுவிலிருந்த தலைமுடியை உருவி, "இதோ இந்த முடியின் உதவியால் தான்" என்றான்.

விஷாச்சி திகைத்துப் போனான். "இந்தத் தலைமுடியின் உதவியுடனா? எப்படி" என்று கேட்டான்.

"என் குருவான விஷாச்சி, உண்மையிலேயே தெரியாமல்தான் கேட்கிறாயா? தேடல்களுக்குப் பிறகு எனக்குக் கிடைத்த துளசியும் நமக்கு வேண்டிய துளசியும் ஒன்றுதானா என்று தெரிந்து கொள்வதற்கு அந்தத் துளசிக்குச் சூனியம் வைக்க வேண்டும். அந்தத் துளசி இப்போது பதினாறு வயதுப் பெண்ணாக இருப்பாள். கன்னிப் பெண்ணிற்குச் சூனியம் செய்வதாக இருந்தால் அவளது இரத்தம் தோய்ந்த துணியைப் பொம்மைக்குச் சுற்றி அவளுக்குச் சம்பந்தப்பட்ட ஒரு பொருளையும் சேர்த்து பூமிக்குள் புதைக்க வேண்டும். அந்தப் பொரு இந்தத் தலைமுடிதான். அந்த இரத்தத் துணியும் இந்தத் தலைமுடியும் ஒரே நபருடையதாக இருந்தால்..." தார்க்கா சிரித்தான். "அப்படிப் புதைத்த பத்து நாள்கள் கழித்து அந்தப் பெண்ணிற்கு மாதவிடாய் நின்றுவிடும். அடிவயிற்றில் வலி ஏற்படுவதுடன் சூனியம் தொடங்கும். அந்தத் துளசிதான் நமக்கு வேண்டிய துளசி. அதற்குப்

பிறகு. அந்த மூவரும் யாரென்று தெரிந்துகொள்வது அவ்வளவு கடினமாக இருக்காது. ஒருகால் அந்தத் துளசி நமக்கு வேண்டியவளாக இல்லாமல் இருந்தால் பொம்மையைத் தோண்டி வெளியில் எடுத்துவிட வேண்டும். அந்தத் தலைமுடியை வைத்து மறுபடியும் தேடத் தொடங்க வேண்டும்."

மகிழ்ச்சியின் எல்லையைத் தொட்டது போலிருந்தது விஷாச்சிக்கு. கைகளை நீட்டி தார்க்காவை அணைத்துக் கொண்டான். "பிரமாதம், தார்க்கா. ரொம்பப் பிரமாதம். தார்க்கா உன் புத்தி அபாரம். இனி என் பகை தீர்ந்து விடும் என்ற நம்பிக்கை எனக்கு வந்துவிட்டது" மகிழ்ச்சியுடன் சொன்னான். அதற்குள் அவன் முகத்தில் சந்தேகத்தின் நிழல் படிந்தது. "ஆனால் நேரம் மிகக் குறைவாக இருக்கிறது" என்றான்.

தார்க்கா வியப்படைந்து "எதற்கு?" என்று கேட்டான்.

"எல்லாவற்றையும் விளக்கமாகச் சொன்ன நான் ஒன்றுமட்டும் சொல்லவில்லை."

"என்ன விஷாச்சி?"

"அது தான், காஷ்மோரா. காத்ரா துளசி மீது காஷ்மோராவை ஏவினான். காத்ராவின் மரணத்தால் அதிருப்தி அடைந்த காஷ்மோரா மறுபடியும் உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டது. மறுபடியும் பதினொரு வருடங்கள் கழித்து காஷ்மோரா விழித்துக் கொள்ளும். அந்தத் துளசி எங்கிருந்தாலும் அவளைப் பிடுங்கித் தின்னும். அதனால் அதற்குள் நாம் அவளைக் கண்டுபிடித்துவிட வேண்டும். துளசி சாவதற்குள் நம்முடைய காரியம் முடிய வேண்டும். நமக்குத் துளசியுடன் எந்தச் சம்பந்தமும் இல்லை."

"ஆமாம். இன்னும் ஐந்தாறு ஆண்டுகளே இருக்கின்றன. அதற்குள் தமிழகம் முழுவதும் தேடியாக வேண்டும். எத்தனைத் துளசிகள் கிடைப்பார்களோ தெரியவில்லை. ஒவ்வொரு துளசிக்கும் பரீட்சை வைக்க வேண்டும். காஷ்மோரா எழுந்து கொள்வதற்குள் இது முடிய வேண்டும்."

"என்னுடைய சந்தேகம் அது இல்லை, தார்க்கா?"

"பின்னே?"

"நீ போகப் போவது நாகரீகம் நிறைந்த உலகத்திற்கு. உன்னைக் காட்டிலும்அதிகம் சாமர்த்தியசாலிகள். மோசடிக்காரர்கள் அங்கே இருப்பார்கள். பதினாறு வயது இளைஞன் நீ. ஒரு கன்னிப் பெண்ணின் இரத்தத் துணியை எப்படிப் பெறமுடியும், உன்னால்?"

தார்க்கா மெதுவான குரலில் சொன்னான். "கஷ்டம் தான். அதிலும் முன்னேற்றம் அடைந்துவிட்ட நகரங்களில் அது ரொம்பக் கஷ்டம். அதனால்தானே விஷாச்சி அந்த வேலைக்காக என்னை நீ தேர்ந்தெடுத்தாய்?"

விஷாச்சி தார்க்காவின் கண்களுக்குள் ஊடுருவுவது போல் பார்த்தான். ஒருவரை ஒருவர் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டார்கள். தார்க்காவின் முகத்தில் எந்த உணர்ச்சியும் தென்படவில்லை.

விஷாச்சி தலையை அசைத்தான். "ஆமாம். அதைச் செய்து விடுவாய் என்று எனக்குத் தெரியும்."

"செய்து முடிப்பேன், விஷாச்சி. என் உயிர் போவதற்குள் அந்த மூவரின் உயிர்களை எடுப்பது நிச்சயம். ஒருவனை மனதளவில், மற்றொருவனை எரித்துச் சாம்பலாக்கி..."

"நீ கொடுத்த உறுதிமொழி எனக்கு நன்றாகவே நினைவு இருக்கிறது தார்க்கா. திரும்பத் திரும்ப அதை நினைவுபடுத்த வேண்டாம். ஆனால் எனக்கு ஒரே ஒரு சந்தேகம். சூனியம், வசியம் போன்ற வித்தைகளை உனக்குக் கற்றுத் தந்த நான், பார்வையை ஒரே இடத்தில் குவித்து எதிரே இருக்கும் பொருளைச் சாம்பலாக்கும் அரத்யுங்க வித்தையை மட்டும் கற்றுத்தரவில்லை. அப்படி இருக்கும்போதே உன் எதிரிகளில் ஒருவனை எரித்து விடுவ தாகக் கூறுகிறாயே, அது எப்படி?"

முதல் தடவையாகத் தோற்றுவிட்டவனைப்போல் தலையைக் குனிந்து கொண்டான் தார்க்கா. விஷாச்சி அவன் தோளில் கையைப் பதித்துவிட்டுச் சொன்னான். "நீ வாக்குத் தவற வேண்டாம் தார்க்கா. நான் உனக்கு அதையும் கற்றுத் தருகிறேன்."

மகிழ்ச்சியும், வியப்பும் முகத்தில் போட்டியிட "விஷாச்சி..." என்றான் தார்க்கா.

"பல நூற்றாண்டுகளுக்கு முன்பே மறைந்துவிட்ட இந்த வித்தை எனக்கு ஒருவனுக்கு மட்டும்தான் தெரியும். என்னுடனே இந்த வித்தை அழிந்து போய்விடவேண்டும் என்று எண்ணி இருந்தேன். ஆனால் என் எதிரிகளைக் கொல்லப் போகும் உனக்கு இறுதி வித்தையாக அதைக் கற்பிக்கப் போகிறேன். இன்று இரவே சொல்லித் தரு கிறேன். நாளைக் காலை விடிவதற்குள் பிஸ்தா கிராமத்தை விட்டு நீ போய்விட வேண்டும். சரியாக ஐந்து வருடங் களுக்கு உன் வேலை முடிந்துவிட வேண்டும். பட்டிண வாசிகளுக்கு நடுவில் அவர்களில் ஒருவனாக வளைய வந்து கொண்டு இந்தக் காரியத்தை நிறைவேற்ற வேண்டும். உன் எதிரியைக் கண்டுபிடித்த அடுத்த நொடி உன் கண் களில் நெருப்பை உண்டாக்கி அவனைக் கொல்ல

வேண்டும். வா போகலாம். இன்னும் சிறிது நேரத்தில் விடிவெள்ளி தோன்றப் போகிறது. அந்த நேரத்தில் உனக்கு அந்த வித்தையைக் கற்றுத் தருகிறேன். கிளம்பு தார்க்கா... மயானத்திற்குப் போகலாம்."

தார்க்கா நகரவில்லை.

"நாளைக்கு நான் இந்த இடத்தை விட்டுப் போய் விடப் போகிறேன். இத்தனை நாளாக என்னை வாட்டி வரும் சந்தேகத்திற்கு இந்த இறுதி நேரத்திலாவது பதில் தருவாயா, விஷாச்சி? இந்தக் கிராமத்தின் தலைவன் நீ, யாரோ மூவர் வந்து ஒரு மந்திரவாதியைக் கொன்றால், அவர்களைப் பழிவாங்க நீ ஏன் இப்படித் துடிக்க வேண்டும்?"

விஷாச்சி மெதுவாய்த் தலையை உயர்த்தினான். அந்த நிசப்தத்திலும் அவன் குரல் தெளிவில்லாமல் ஒலித்தது. "காத்ரா என் மகன் என்பதால்."

தார்க்கா வியப்புடன் திடமான அவன் உடலை நோக்கி "விஷாச்சி, உன் வயதென்ன?" என்று கேட்டான்.

"எத்தனை இருக்கும் என நினைக்கிறாய்?"

"அறுபது வயது?"

"மூடனே... என் வயது நூற்று முப்பத்தைந்து.

3 மயானத்தின் நடுவில் விஷாச்சி, தார்க்காவுக்கு அரத்யுங்க வித்தையைக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தான். சில நூறு வருடங்களுக்கு முன்பே மந்திரவாதிகளின் இருட்டு உலகில் புதைந்துவிட்ட காஷ் மோரா, அரத்யுங்க போன்ற வித்தைகள் தெரிந்த ஒரே

மந்திரவாதி விஷாச்சி தன் சீடனுக்குக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

தச கஷாயங்களுக்கு மூலமானகறுப்பு உப்பு, கோவை இலை, கசப்புப் பொல்லி, வரகோகி, அரிநெல்லி போன்ற இலைகளின் கஷாயத்தைத் தார்க்காவிற்குக் கொடுத்து, குடிக்கச் செய்தான். வெள்ளை குந்துமணி வேர்களை மாரேடு இலைச் சாற்றில் அரைத்து கண்ணிமைகளுக்குப் பூசினான்.

தார்க்கா மயானத்தின் நடுவில்நிர்வாணமாகப் படுத்துக் கிடந்தான். விஷாச்சி சொல்லத் தொடங்கினான்.

"மந்திரவாதிகளின் வரலாற்றிலேயே மிகச் சிறந்த இடத்தைப் பெறப்போகும் தார்க்கா, நான் உனக்கு கற்பிக்கப் போகும் இந்த வித்தை பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தடை செய்யப்பட்டது. பிரேத கணங்களுக்கு அதிபதியான சிவ பகவானுக்கு நெற்றியில் மூன்றாவது கண் இருக்கிறது என்றும், அதைத் திறந்த மறுநொடி எதிரில் இருப்பவர்கள் எரிந்து சாம்பலாகி விடுவார்கள் என்றும் முன்னோர்கள் சொல்லி இருக்கிறார்கள். பிரேத ஆன்மாக்களுக்குக் குருவான அந்தச் சிவனுக்குச் சமமான இடத்தை அடைய எந்த மந்திரவாதியும் விருப்பப்படாத தால் இந்த வித்தை என் போன்ற வயோதிகர்களுடனே சமாதியாக வேண்டிய நிலை ஏற்பட்டது.

"ஆனால், தார்க்கா, இன்று நான் உனக்கு இந்த வித்தையைக் கற்பிக்கப் போகிறேன். அதிலும் நீ உன் எதிரில் ஒருவனை எரித்துக் கொல்வதாகச் சொன்னாயே, அந்த வாக்கை நிலைநாட்டத்தான். சுயநலத்துடன் இவ் வித்தையைக் கற்பிக்கிறேன். கவனமாகக் கேட்டுக்கொள். இதன் பிரயோகம் இது வரையில் யார்மீதும் செய்யப்பட

வில்லை. பத்து விதமான விஷங்களைச் சேர்த்தால் வரும் கலவை மிக மதிப்பு வாய்ந்த ஔஷதமாக மாறும் என்று முன்னோர்கள் சொல்லியுள்ளார்கள். இந்த விஷம் ஒவ்வொன்றும் ரொம்ப ஆபத்தானவை. பாம்பிலிருந்து, தேளிலிருந்து, செடி கொடிகளிலிருந்து எடுக்கப்பட்ட இந்த விஷங்களில் எந்த ஒரு விஷமும் மனிதர்களைக் கூண்டோடு அழித்துவிட வல்லது. ஆனால் பத்தும் சேர்ந்தால் ஔஷதமாக மாறுமென்றால் வியப்பாக இருக்கிறதல்லவா? சில சமயம் இது இன்னும் கொடிய விஷமாக மாறலாம். அப்போது உன் பார்வை போய்விடும் ஆபத்தும் இருக்கிறது. இந்தக் கலவை எந்த மாதிரியான பலனைத் தருமென உண்மையிலேயே எனக்குத் தெரியாது. ஓலைச் சுவடிகளில் படித்த ஞானத்தை மட்டுமே வைத்துக் கெண்டு உன் மீது பிரயோகம் செய்து உன்னைக் குருடனாக்குவதில் எனக்கு விருப்பமில்லை. அதனால் உன்னுடைய ஒரு கண்ணில் மட்டும் இதைப் பயன்படுத்த எண்ணியிருக்கிறேன்."

தார்க்கா கேட்டுக் கொண்டிருந்தான்.

"இந்தக் கலவையை உன் கண்ணில் விட்ட அடுத்த நொடி உன் பார்வை போனால்... அதற்காக என்னை வெறுக்க மாட்டாயில்லையா?"

"வெறுக்க மாட்டேன். விஷாச்சி, என் உயிரே போனாலும் சரி."

"இந்த வித்தையை நீ அறிந்துகொண்ட வினாடியில் இருந்து பளபளக்கும் நீர் நிலையை ஒரு போதும் உற்றுப் பார்க்காதே. உன் கண்ணைக் கைகளால் எப்போதும் கசக்கிக் கொள்ளாதே. அப்படிச் செய்த அடுத்த நொடி அதிலிருந்து நெருப்பு உண்டாகிவிடும். நான் சொன்ன

வற்றை மறந்துவிடாதே, தார்க்கா. இப்போது உன் இடது கண்ணைத் திற. இந்தக் கலவையை உன் கண்ணுக்குள் விடப் போகிறேன்."

விடியப்போகும் நேரம். இரவெல்லாம் வேட்டை யாடிக் கொண்டிருந்த ஆந்தைகளும் உறங்கச் சென்று விட்டன போலும். ஆகாயமும் நட்சத்திரங்கள், மரங்கள் மட்டுமே இந்தச் சடங்கை நோட்டமிட்டுக் கொண்டி ருந்தன.

தார்க்கா, கண்களைத் திறந்து பார்த்துக் கொண்டு இருந்தான். எதிரே வானம் நீலமாய்த் தென்பட்டது. விஷாச்சி கவனமாய்த் தொன்னையிலிருந்த கலவையைத் தார்க்காவின் இடது கண்ணில் ஊற்ற முற்பட்டான். ஒரே ஒரு சொட்டுத் திரவம் தார்க்காவின் கண்ணின் நடுவில் கருப்பு விழியில் "டப்" என்று விழுந்தது.

அப்போது தார்க்கா அலறிய அலறல் அந்த மயானத் தின் எல்லையைத் தாண்டி ஊருக்குள் நுழைந்தது. வேதனை தாங்காமல் அவன் போட்ட கூச்சலைக் கேட்ட பிஸ்தா கிராமத்துத் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை அரவணைத்துச் சமாதானப்படுத்தினார்கள். வெளியே வர எண்ணிய ஆண்கள், அந்த அலறல் தார்க்காவினு டையது என்றும், அது மயானத்திலிருந்து வருகிறது என்றும் புரிந்த பிறகு, அந்த எண்ணத்தைக் கைவிட்டார் கள்.

தார்க்கா மயானத்தின் தரையில் உருண்டு புரண் டான். நிர்வாணமாக இருந்த அவன் உடம்பு முழுவதும் முட்கள் குத்தி மேலும் வலியை உண்டாக்கின. கண்ணின் எரிச்சலைக் காட்டிலும் அந்த வலி அவ்வளவு பெரிது இல்லை. கண்ணையே பிடுங்கி எறிந்துவிட வேண்டும்

என்கிற அளவிற்கு எரிச்சல். ஐந்து நிமிடங்கள் கழித்து எரிச்சல் குறைந்தது. எஞ்சியிருந்த கண்ணைத் திறந்து பார்த்த பொழுது, விஷாச்சி முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அமர்ந்திருந்தான். வாழ்க்கையி லேயே முதன் முறையாக அவன் முகத்தில் வேதனை தென்பட்டது.

"என்னை மன்னித்துவிடு தார்க்கா" நடுங்கும் குரலில் சொன்னான்.

"இதில் மன்னிக்க என்ன இருக்கிறது, விஷாச்சி" சொன்னான் தார்க்கா. "நீதான் முன்னாலேயே சொல்லி விட்டாயே, பார்வை போனாலும் போகலாமென்று."

விஷாச்சி அவன் சொன்னதைக் காதில் வாங்க வில்லை. யோசனையில் மூழ்கி இருந்தவன், ஒரு முடிவிற்கு வந்தது போல் தலையை அசைத்துவிட்டுச் சொன்னான், "தார்க்கா, நான் சொல்வதைக் கவனமாகக் கேள். மந்திர வாதி முழுமையடைய வேண்டும் என்றால் பதினாறு நிலைகள் உள்ளன. மிகப் பயங்கரம் எனச் சொல்லப்படும் சூனியம்கூட எட்டாவது நிலைதான். அதற்கும் சில நிலை களைத் தாண்டிய பிறகுதான் காஷ்மோரா.

"தார்க்கா, ஒவ்வோர் மனிதனுக்கும் கொஞ்சம் சுயநலம் இருக்கத்தான் செய்யும். அந்தச் சுயநலத்தின் காரணமாகத்தான் உனக்கு கடைசி வித்தையான காஷ் மோராவைக் கற்றுத் தரவில்லை. என் மகனான காத்ரா விற்கு மட்டும் அதைக் கற்றுத் தந்தேன். என் மரணத் திற்குப் பிறகு அவ்வித்தை அழிந்துவிட வேண்டும் என்று இருந்தேன். ஆனால் இன்று அரையும் குறையுமாகத் தெரிந்து வைத்திருந்த வித்தையைப் பிரயோகித்து உன் ஒரு கண்ணைப் பலி வாங்கிவிட்டேன். அதற்குப் பரிகாரமாய் உனக்குக் காஷ்மோரா கற்றுத்தருகிறேன். இந்த நிமிடத்தி

லிருந்து உன்னை என் மகனாக ஏற்றுக்கொள்கிறேன்."

"விஷாச்சி..."

"ஆமாம், விடிவற்குள் உனக்கு இதைக் கற்றுத் தரு கிறேன். அத்துடன் உன் வித்தை முழுமையடைந்து விடும். உன்னை மிஞ்சிய மந்திரவாதி இனி உலகில் யாரும் இருக்க மாட்டார்கள். எழுந்துகொள் தார்க்கா. இப்படித் தெற்கு முகமாக அமர்ந்து கொள். நான் சொல்லப் போகும் மந்திரத்தை நூற்றெட்டு முறை ஜபம் செய். கிழக்கு வெளுப்பதற்கு முன் அது முடிந்துவிட வேண்டும். இருள் விலகிவிட்டால் ஆவிகள் போய்விடும். சீக்கிரமாய் ஜபம் செய்" என்று மந்திரத்தைக் கற்றுக் கொடுத்தான்.

தார்க்கா மந்திரத்தை மனதில் பதிய வைத்துக் கொண்டான். மந்திரங்களை உச்சரிக்கும்போது வாயில் எந்தப் பொருளும் இருக்கக் கூடாது. வாயை நன்றாகக் கொப்பளிக்க வேண்டும். அதற்காகத் தண்ணீர் தேவைப் பட்டது. விஷாச்சியிடம் கேட்டான்.

விஷாச்சி சிரித்தான்.

"தார்க்கா, மந்திரவாதிக்கு எப்போதுமே எல்லாமே கிடைத்துவிடாது. சில சமயங்களில் கிடைத்ததை வைத் துக் கொண்டு காரியத்தை முடிக்க வேண்டியதுதான். நிஜமாகவே உன்னிடம் நீர் இல்லையா?"

தார்க்காவிற்குப் புரிந்தது. மந்திரவித்தையில் எதுவுமே நீச்சமில்லை. வாயைச் சுத்தப்படுத்திக் கொண்டு அமர்ந்து கொண்டான். நூற்றெட்டு முறை மந்திரத்தை ஜபித்து முடித்தான்.

பிறகு விஷாச்சி காஷ்மோராவைத் துயிலெழுப்பும் வித்தையைக் கற்றுக் கொடுத்தான். பூஜைக்கு வேண்டிய

பொருட்களை, அவற்றைக் கையாளும் முறைகளைச் சொல்லித் தந்தான்.

பதினாறு வயது முடியும்போதே ஆறடி உயரமிருந்த தார்க்கா, கிரேக்க வீரனைப்போல் தென்பட்டான். அவனைப் பார்க்கும்போது விஷாச்சிக்குப் பல எண்ணங்கள் ஓடின.

மந்திரவாதி என்பதால் பிஸ்தா கிராமத்துப் பெண்கள் பயந்து ஒதுங்கிவிட்டார்கள். நாகரிக உலகத்தில் வேறு நுழையப்போகிறான். அங்கே இருக்கும் பெண்களுக்கு இவனுடைய மந்திர சக்திகளைப் பற்றித் தெரியாதல்லவா? விஷாச்சி சிரித்துக் கொண்டே வேலையைச் செய்து கொண்டிருந்தான். சூடுபோடுவதற்கு இரும்புக் கம்பி தேவைப்பட்டது. திடீரென்று எடுக்கப்பட்ட முடிவு என்பதால் இரும்புக் கம்பியைக் கொண்டுவரவில்லை. காலில் போட்டிருந்த வளையத்தை எடுத்தான் விஷாச்சி. வளையத்தை நேராக்கி சரி செய்து சிவப்பாக மாறும் வரையில் நெருப்பில் சுட்டான்.

தார்க்கா மெதுவாகக் கண்களைத் திறந்தான்.

விஷாச்சி திருப்தியுடன் தலையசைத்துவிட்டு, "இனி உனக்குக் கற்பிக்க வேண்டியது எதுவுமில்லை, தார்க்கா" என்றான்.

"நன்றி, விஷாச்சி. இந்த நிமிடமே சபதத்தை நிறைவேற்றுவதற்காகப் புறப்படுகிறேன். இனி பிஸ்தாவிற்குள் நுழையவேண்டியத் தேவையில்லை. ஐந்து வருடங்களுக்குள் அந்த மூவரையும் கொன்றுவிட்டு அந்த நல்ல செய்தியுடன் வருவேன். அதுவரையில் எனக்காகக் காத்திரு.

"உன்மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. காத்திருக்கத் தேவை இல்லை."

"அப்படியென்றால்?" புரியாதவன்போல் தார்க்கா கேட்டான்.

விஷாச்சி முறுவலித்துவிட்டுப் பேசாமலிருந்தான்.

கிழக்கில் கொஞ்சம் கொஞ்சமாக வெளிச்சம் வந்து கொண்டிருந்தது. உலகம் விழித்துக் கொண்டதற்கு அடையாளமாய்ப் பறவைகளின் சலசலப்புச் சத்தம் தொடங்கியது.

"போய் வருகிறேன்."

"நல்லது, உனக்கு வெற்றி கிடைக்கட்டும்."

தார்க்கா மந்திரவாதிகளின் மரபுப்படி குருவின் இடுப்புப் பகுதியில் தலைவைத்து வணங்கினான். விஷாச்சி அவனது தலையை இடதுகையால் தொட்டு ஏதோ மந்திரத்தை ஜபித்தான். தார்க்கா வணங்கி எழுந்த தும் அவனைத் தூக்கி மார்போடு அணைத்துக் கொண் டான்.

நன்றாக விடிந்துவிட்டது.

தார்க்கா மேற்குப்புறமாய் நடந்து சென்றான். கண் பார்வையிலிருந்து தார்க்கா மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்துவிட்டு மெதுவாய் நகர்ந்தான் விஷாச்சி.

அங்கிருந்து பத்தடித் தொலைவில் அவனும் தார்க் காவும் சேர்ந்து தோண்டிய குழியிருந்தது. மேலே இருந்த கல்லை பெயர்த்தெடுத்து குழிக்குள் இறங்கினான்.

விஷாச்சி இறந்துவிட்டது தெரிந்தால் கிராமமே திரண்டு வந்துவிடும். அவனது மூளையை யார் தின்பார் களோ? இந்த உலகிலேயே தலைசிறந்த மந்திரவாதி ஒருவன்தான் இருக்க வேண்டும். ஒரு காலத்தில் இருவர்

இருந்தார்கள். விஷாச்சியும் காத்ராவும்— தந்தையும் மகனுமாய்.

காத்ராவின் மூளையைத் தின்று தார்க்கா மந்திர வாதி ஆகிவிட்டான். இப்போது விஷாச்சியின் மூளையைத் தின்று மற்றொரு தார்க்கா தோன்றுவான். அதில் விஷாச்சிக்கு விருப்பமில்லை. தன் மரணம் பிஸ்தா கிராமத்தில் ஒருவருக்குமே தெரியக் கூடாது. இரண்டாம் பேர் அறியாமல் தன் மரணம் நிகழ வேண்டும். தன் மூளை தன்னுடனேயே சமாதியாகிவிடவேண்டும்.

குழிக்குள்ளிருந்தபடியே மேலேயிருந்த கல்லை அசைத்தான். மெலிதான சத்தத்துடன் மண் சரியத் தொடங்கியது. சிறிது நேரத்தில் குழி முழுவதுமாக மூடிக் கொண்டது.

4 விஷாச்சி உயிர்த் தியாகம் செய்த விஷயம் தார்க்காவிற்குத் தெரியாது. அந்த நேரத்தில் அவன் இரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தான்.

வெறும் கௌபீணம் மட்டுமே தரித்திருந்த அவனைக் கம்பார்ட்மெண்டில் இருந்தவர்கள் கேலியாகச் சிரித்துக் கொண்டும் விசித்திரமாகப் பார்த்துக் கொண்டும் இருந்தார்கள்.

பார்வை போய்விட்டது என்று எண்ணிக் கொண் டிருந்த கண்ணில் காலாக்னியைத் தோற்றுவிக்கக்கூடிய சக்தி உருவாகிவிட்டது என்றும், மிக விரைவிலேயே அது பிரளய காலச் சூறாவளியைத் தோற்றுவிக்கப் போகிற தென்றும் அவனுக்குத் தெரியாது.

இருக்கையில் பின்னால் சாய்ந்துகொண்டு கண் களை மூடிக்கொண்டான்.

இரயில் தமிழ்நாட்டு எல்லைக்குள் நுழைந்து கொண்டிருந்தது. டிக்கட் பரிசோதகர் ஒவ்வொரு பயணியிடமாக டிக்கெட் செக் செய்து கொண்டிருந்தார். இரயிலில் பயணம் செய்ய டிக்கெட் வாங்க வேண்டு மென தார்க்காவுக்குத் தெரியாது. தெரிந்தாலும் வாங்கு வதற்கு அவனிடம் பணமும் இல்லை.

பரிசோதகர் நெருங்கிக் கொண்டிருந்தார். ஒவ்வொரு வரும் தங்களிடமிருந்த பச்சை நிற அட்டைத் துண்டைக் காண்பித்ததைப் பார்த்ததும் புரிந்துவிட்டது. தானும் அது போல் காண்பிக்க வேண்டுமென்று.

டிக்கெட் பரிசோதகர் வந்து அவனிடம் கையை நீட்டினார். தார்க்கா அசையவில்லை. நிமிர்ந்து பார்த் தான். அவன் முகத்தில் எந்த உணர்ச்சியும் தென்பட வில்லை.

"டிக்கெட் ப்ளீஸ்..."

இல்லை என்பதுபோல் தலையை அசைத்தான்.

அந்தக் கம்பார்ட்மெண்டில் ஒரு பெண் தங்களையே பார்த்துக் கொண்டிருந்ததைக் கவனித்துவிட்டார் பரிசோதகர். ஒரு காலத்தில் அவர் கால்பந்து ஆட்டக் காரராய் இருந்தார். தன்னுடைய பர்ஸனாலிடி மீதும், அழகின்மீதும் அவருக்கு அபாரமான நம்பிக்கை இருந்தது. தார்க்காவின் தோள்களைப் பிடித்து, கம்பார்ட் மெண்டின் கடைசி வரை இழுத்து வந்தார்.

அங்கே யாரோ மூட்டையைக் குறுக்கே வைத்திருந் தார்கள். அதைத் தாண்டி, அந்தப் பக்கமாய்ப் போனதும்

யாருமில்லை என்று உறுதிப் படுத்திக் கொண்டு "ஊம்..." என்றார். "ரூபாயை எடு."

மலைப் பகுதியில் வாழும் மக்கள் ஒரு ரூபாயை லஞ்சமாகக் கொடுத்து இரயிலில் பயணம் செய்வார்கள் என்பதும் தார்க்காவிற்குத் தெரியாது.

"ஒரு ரூபாய்கூட இல்லையா?"

இல்லையென்று தலையை அசைக்காமல் தார்க்கா மௌனமாக இருந்தான்.

பதில் சொல்லாமல் மௌனமாக இருந்ததைக் கண்ட அவர், தன்னை அவன் அவமதித்துவிட்டதாக நினைத்தார். பளீரென கன்னத்தில் அறைந்துவிட்டார். நாகரிகம் தெரியாத மக்களிடம் அதிகாரிகள் மோசமாக நடந்து கொள்வது வழக்கம்தான். அதிலும் ஒரு இளம் பெண் பார்வையாளராக இருக்கிறாள் என்ற எண்ணம் அந்த அதிகாரியின் கோபத்தை மேலும் தூண்டிவிட்டது.

இந்த அடியை எதிர்பார்க்காத தார்க்கா, நிலை தடுமாறி விழுந்தான். மரக்கதவில் தலை மோதிக் கொண்டது. டிக்கெட் பரிசோதகர், "அடுத்த ஸ்டேஷனில் இறங்கி விடு. இல்லையென்றால் தோலை உரித்து விடு வேன்" என்று உள்ளே போகப்போனவர் தார்க்காவின் முகத்தைப் பார்த்து நின்றுவிட்டார்.

தார்க்கா கைகளை ஊன்றி எழுந்து கொண்டிருந் தான்.

தார்க்காவின் கண்களில் தெரிந்த சலனமற்றத் தன்மை அவரை அடியெடுத்து வைக்க முடியாமல் தடுத்து விட்டது. பாயப்போகும் புலியின் கண்களில் இருக்கும் குரூரம் அவன் கண்களில் தென்பட்டது.

ஏனோ தெரியவில்லை. டிக்கெட் பரிசோதகரின் முதுகுத் தண்டில் சிலீரென்ற உணர்ச்சி ஏற்பட்டு அலைய லையாய் உடல் முழுவதும் பரவியது. அந்தப் பயத்தில் அவரையும் அறியாமல் காலை நீட்டி உதைத்தார். தார்க்கா வின் முகவாய்க் கட்டையில் அந்த உதை விழுந்தது. அவன் பின்னால் சாய்ந்தான். தார்க்காவிற்கு இடது கண்ணால் பார்க்க முடியாது அதனால் அவனுக்குத் தன்னை நோக்கி வந்த காலைக் கவனிக்க முடியவில்லை. வாஷ்பேசின் குழாயில் அவன் முகம் இடித்தது. உதட்டில் காயம் ஏற்பட்டது. முகத்தில் மண் ஒட்டிக் கொண்டது. பரிசோதகரின் பூட்ஸிலிருந்து தெறித்து வந்த மண் அது. தார்க்காவின் முகம் சிவந்தது. மெதுவாக எழுந்து கொண்டான்.

வாஷ் பேசினைப் பிடித்துக் கொண்டு எழுந்து நின்றான் தார்க்கா. அவன் உள்ளங் கைகள் முறுக்கேறிக் கொண்டன. அதைப் பார்த்துவிட்டுப் பரிசோதகர் மறுபடி யும் கையை உயர்த்தினார்.

"ஏனப்பா அவனை அப்படி அடிக்கிறாய்? பாவம்... அவனை விட்டுவிடு."

கூண்டுக்குள் திரும்பிவிட்ட புலிகளைப்போல இருவரும் சகஜ நிலைக்குத் திரும்பினார்கள். தார்க்கா தலையை உயர்த்திப் பார்த்தாள். கதர் ஆடையில் பெரியவர் ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவர் நெற்றி யில் குங்குமப் பொட்டொன்று பிரகாசித்துக் கொண்டிருந்தது.

பரிசோதகர் அங்கிருந்து நகர்ந்துவிட்டார். தார்க்கா தன்னிருக்கையின் அருகில் வந்து அந்தப் பெரியவருக்குப் பக்கத்தில் அமர்ந்துகொண்டான்.

"உனக்குத் தமிழ் தெரியாதா, தம்பி?"

வராது என்பதுபோல் தலையை அசைத்தான். பிறகு இருவரும் ஒரிய மொழியில் பேசிக் கொண்டார்கள்.

"நீ எங்கே போகிறாய்?"

"தமிழ்நாட்டிலிருக்கும் பெரிய பெரிய ஊர்கள் என்னென்ன?"

"நிறைய இருக்கின்றன. கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சென்னை இப்படி."

"நீங்கள் எங்கே போகிறீர்கள்?"

"மதுரைக்கு. நடுவில் ஒரு ஜங்ஷனில் இரயில் மாற்ற வேண்டும்."

தார்க்கா யோசனையுடன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். ஆமாம்... தமிழ் கொஞ்சமும் தெரியாமல் அந்த ஊரில் எப்படிச் சமாளிப்பது? தான் செய்ய வேண்டிய காரியமும் சிறியது இல்லை. பல பேருடன் பேசிப் பழகினால் ஒழிய துளசியைக் கண்டு பிடிக்க முடியாது.

"நானும் உங்களுடன் வந்து உங்கள் வீட்டில் வேலை செய்கிறேன். எனக்குத் தமிழ்மொழி கற்றுக் கொடுங்கள்."

"உன்னால் என்ன வேலை செய்ய முடியும்?"

"எந்த வேலையாயிருந்தாலும் சரி."

அவர் யோசிப்பதுபோல் தலையசைத்தார்.

தார்க்கா கேட்டான். "தமிழ் கற்றுக் கொள்வதற்கு, சாதாரணமாய்ப் பேசிப் பழகுவதற்கு எவ்வளவு காலம் தேவைப்படும்?"

"ஒரு வருடம்."

தார்க்கா திடுக்கிட்டு, "ஒரு வருடமா?" என்றான். நேரமோ மிகக் குறைவு, ஐந்து அல்லது ஆறு வருடங்கள். காஷ்மோரா துயில் கலைந்து துளசியைக் கொன்று விடுவ தற்கு முன்னால் அவளைக் கண்டுபிடிக்க வேண்டும். அதில் ஒரு வருடம் தமிழ்க் கற்றுக் கொள்வதில் போய் விட்டால் எப்படி?

"அதைவிடக் குறைவான காலத்தில் கற்றுக் கொள்ள முடியாதா?"

"சாதாரணமாகப் பேச எழுதக் கற்றுக் கொள்வதற் காக இருந்தால் ஆறு மாதங்கள் போதும், அதைவிடச் சீக்கிரமாகக் கற்றுக் கொள்வது சாத்தியமில்லை. சரஸ்வதி நமஸ்துப்யம் என்கிற சுலோகத்தைக் கற்றுக் கொள்ளவே நான்கு நாள்கள் தேவைப்படும்."

"ஒரு முறை அந்தச் சுலோகத்தைச் சொல்லுங்கள்."

அந்தப் பெரியவர் பொறுமையாக அந்தச் சுலோகத் தைச் சொன்னார். அவர் சொல்லும்போதே தார்க்கா கண்களை மூடி மனதை ஒருமுகப் படுத்திக் கொண்டு சிரத்தையுடன் கேட்டுக் கொண்டான். விஷாச்சி மந்திரத் தைச் சொல்லித் தரும்போது எவ்வளவு கவனமாகக் கேட்டு வந்தானோ அதே அளவுக்குக் கவனமாகக் கேட்டுக் கொண்டான்.

சுலோகம் முடிந்ததும் தார்க்காவின் உதடுகள் அசைந்தன. ஒரு சொல்கூடப் பிசகாமல் அவன் அந்தச் சுலோகத்தை ஒப்பிக்கும்போது அவர் வியப்புடன் பார்த் துக் கொண்டிருந்தார். சுலோகத்தைச் சொல்லி முடித்த தும் தார்க்கா கேட்டான், "இப்போது சொல்லுங்கள். தமிழ்க் கற்றுக் கொள்வதற்கு எத்தனைக் காலம் தேவைப் படும்?"

வியப்பிலிருந்து மீளாத நிலையிலேயே தன்னையும் அறியாமல் "ஒரு மாதம்" என்றார்.

ரயில் போகும் வேகம் குறைந்தது. அவர் பையை எடுத்துக் கொண்டு, "இறங்கு" என்றார்.

தார்க்கா எழுந்துகொண்டான். டிக்கெட் பரிசோதகர் எதிரில் வந்து கொண்டிருந்தார். தார்க்கா அவரைப் பார்த்துச் சிரித்தான்.

அவர் நெற்றியைச் சுருக்கிவிட்டு, "இறங்கு... இறங்கு" என்றார். தார்க்கா மறுபடியும் முறுவலித்துவிட்டு இறங்கி விட்டான்.

"எவனோ பைத்தியக்காரனாக இருப்பான் போலிருக் கிறது"— டிக்கெட் பரிசோதகர் மனதில் எண்ணிக் கொண் டார். அவர் அவனைக் காலால் உதைத்தபோது உதிர்ந்த மண்ணை அவன் சேகரித்து இருக்கிறானென்றும் அதைப் பத்திரமாகத் தன்னுடன் எடுத்துச் செல்கிறான் என்றும் அவருக்குத் தெரியாது.

பிஸ்தா கிராமத்து மக்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயத்தை சிதையில்கூட மறக்க மாட்டார்கள்.

"இதுதான் எங்கள் வீடு"— ராமசாஸ்திரி 'ஒரியா' மொழி யில் சொன்னார்.

தார்க்கா தலையை உயர்த்திப் பார்த்தான். மிகப் பெரிய வீடு. ஒரு காலத்தில் சீரும் சிறப்புமாக இருந்திருக்க வேண்டும். இப்போது பாழடைந்த பங்களாவாகக் காட்சி அளித்தது.

"எங்கள் முன்னோர்கள் விஜயநகர சமஸ்தானத்தில் வேலை பார்த்து வந்தார்கள். நான் இப்போது தமிழ் ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன்" என்று

சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தார். தார்க்காவும் அவரைப் பின் தொடர்ந்தான்.

"ரொம்பப் பெரிய வீடு. நீ எவ்வளவு நாட்கள் வேண்டுமானாலும் தங்கிக் கொள்ளலாம்."

"சும்மா தங்க மாட்டேன். ஏதாவது ஒரு வேலை செய்வேன்."

"அப்படியே ஆகட்டும். நாளைய தினத்திலிருந்து சொல்லித் தருகிறேன்."

"இல்லை... இப்பொழுதிலிருந்தே" என்றான் தார்க்கா.

அவர் வியப்புடன் நோக்கினார்.

நேரத்தின் மதிப்பு தார்க்காவிற்கு நன்றாகப் புரிந்தது. பிரச்சனை இவ்வளவு தீவிரமானது என்று அவன் நினைத்திருக்கவில்லை. அவனுடைய குருவான விஷாச்சிக்கும் தெரியாது. நகரத்தில் ஊருக்கு ஒரு கல்லூரி இருக்கும் என்றும், அதில் தேடினால் துளசியைக் கண்டு பிடித்து விடலாமென்றும் நினைத்திருந்தான். ராம சாஸ்திரியிடம் பேசிய பிறகுதான் தெரிந்தது. ஒரே ஊரில் பல கல்லூரிகள் இருக்கும் என்று.

இரவு பத்து மணி ஆகிவிட்டது. ஒரே நாளில் தார்க்கா கற்றுக் கொண்ட தமிழை கண்டு ராம சாஸ்திரி ஆச்சரியத்திலாழ்ந்தார். தார்க்கா ரொம்பவும் சகஜமாக, தமிழில் பேசிப் பழகியவன்போல், "எனக்கு இன்று சாப்பாடு வேண்டாம். நீங்கள் சாப்பிடுங்கள்" என்றான் முதல் நாளே.

* * *

அன்று இரவு அவன் தரையில் படுத்தவாறு யோசனையில் ஆழ்ந்தான். மந்திரவாதிகள் வெறும் தரையில்தான் படுத்துக் கொள்வார்கள். படுக்கையை உபயோகிக்க மாட்டார்கள். இருக்கிற ஐந்து ஆண்டு காலத்தில் ஒரு மாதத்தை இங்கே கழித்துத்தான் ஆக வேண்டும். தமிழும் ஆங்கிலமும் தெரியாமல் தன்னால் எந்தக் காரியமும் செய்ய முடியாது.

மணி ஒன்று அடித்தது.

அவனுக்கு உறக்கம் வரவில்லை. புரண்டு படுத்தான். எங்கோ, ஏதோ அமைதியின்மை அவனை அலைக் கழித்தது. என்னவென்று புரியவில்லை.

எழுந்து கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்தான் விசாலமான வராண்டா நிசப்தமாக இருந்தது. அடிமேல் அடி வைத்து, ஓசைப்படுத்தாமல் நடந்தான். வலது பக்கத்து அறையில் ராம சாஸ்திரியின் குடும்பம் உறங்கிக் கொண்டிருந்தது.

நின்றான்.

இடது பக்கத்து அறை வெறுமே சாத்தியிருந்தது. கதவின் இடுக்கு வழியாக ஒளிக்கீற்று தெரிந்தது.

கதவை இலேசாகத் தள்ளியவன் ஒரடி சட்டென்று பின்வாங்கினான். வாழ்நாளிலேயே முதல் முறையாக அவன் மேனி நடுங்கியது.

எதிரே பூஜை அறை இருந்தது. அவன் நடுங்கியது அதற்காக இல்லை. பூஜை அறையில் எரிந்த கொண்டிருந்த விளக்கு வெளிச்சத்தில் அநுமான் விக்கிரகமானது ஜ்வாலை ஜ்வாலையாய்ப் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

அவன் ஒரு நிமிடம் கண்களை மூடிக் கொண்டான். மெதுவாகப் பூஜை மண்டபத்தின் அருகில்போய் மண்டியிட்டு அமர்ந்து கொண்டான். நன்றாக மூச்சை இழுத்து காற்றை சுவாசித்து மூச்சுக் காற்றை வெளியேற்றினான்.

"ப்யூ..."

விளக்கு அணைந்துவிட்டது.

அவன் தன் அறைக்கு வந்து நிம்மதியாக உறங்கத் தொடங்கினான்.

அவன் செய்த காரியத்தை இரு கண்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்ததை அவன் கவனிக்கவில்லை.

நாட்டின் தென் கோடிக்கு வந்திருக்கிறோம் என்பதைத் தார்க்கா வந்த அடுத்த நாளே புரிந்துகொண்டான். தமிழ்நாட்டின் பெரிய நகரங்கள் சென்னை, மதுரை, திருச்சி, கோவை மட்டுமே என நினைத்திருந்தான். ஆனால் சேலம், தஞ்சை, கும்பகோணம், மாயவரம் போன்ற ஊர்களிலும் கல்லூரிகள் இருப்பது தெரிய வந்தது. அங்கெல்லாம் போய்ப் பார்த்துவிட்டு வந்தான். துளசி என்ற பெயருடைய பெண் கிடைக்கவில்லை. அதிகாலையிலேயே புறப்பட்டுப் போய் இருட்டிய பிறகு திரும்பிவரத் தொடங்கினான்.

கண்மூடித் திறப்பதற்குள் பத்து நாட்கள் பறந்தோடிவிட்டன. நினைத்ததைவிட விரைவிலேயே தார்க்கா தமிழை கற்றுக் கொண்டான். தமிழ் மட்டுமல்ல, ஆங்கிலமும் கற்றான். எழுத்துக் கூட்டிப் படிக்கவும், ஆங்கில வார்த்தைகளைப் புரிந்து கொள்ளவும் பழகினான். ஒரு நிமிடம் கூட வீணாக்கவில்லை. வீட்டு வேலைகளைச் செய்யும்போதும் படிப்பைப்பற்றியே யோசித்துக் கொண்டிருந்தான்.

அன்று அமாவாசை.

நள்ளிரவு மணி பன்னிரண்டு அடிக்கப் போகும்முன் எழுந்தான். ஒரு வேலை பாக்கியிருந்தது. டிக்கெட் பரிசோதகரைப் பழிதீர்த்துக் கொள்ள வேண்டும். மந்திர வாதிகள் தங்களுடைய வேலையைச் செய்வதற்கு அமாவாசை, பௌர்ணமியென்று எதுவும் கிடையாது. இருட்டாக இருக்கும் என்றுதான் அமாவாசையைத் தேர்ந்தெடுப்பார்கள்.

அவன் மயானத்தை அடையும்போது இரவு பன்னிரண்டு ஆகிவிட்டது. அதுவரையில் பிஸ்தா கிராமத்து மயானத்தையே கண்டிருந்தவனுக்கு இந்த மயானம் வித்தியாசமானதாகத் தெரிந்தது. அதைப் பொருட்படுத்தாமல் வந்த வேலையில் இறங்கினான்.

கையோடு கொண்டு வந்து மண்ணைத் தொன்னையில் வைத்துவிட்டு, தெற்கு நோக்கி அமர்ந்தான். இடுப்பில் மறைவாக வைத்திருந்த பொம்மையை எடுத்தான். காலடி மண்ணை அதன் கால்களில் அப்பினான். சிறிய குழியொன்று தோண்டி பொம்மையை இடுப்பு வரையிலும் புதைத்தான். கைதேர்ந்த மருத்துவர் டான்ஸில் ஆபரேஷன் எவ்வளவு சுலபமாகச் செய்வாரோ அதுபோல் செய்து கொண்டு இருந்தான்.

காஷ்மோராவைக் கற்று இருப்பவனுக்கு இது மிகச் சின்ன விஷயம். தெற்கு முகமாய் மந்திரங்களை உச்சரிக்க முற்படும்போது அவன் தோள்களில் ஒரு கை படிந்தது. மின்னல் வேகத்தில் திரும்பினான்.

பின்னால் ராம சாஸ்திரி நின்றிருந்தார்.

வியப்பிலிருந்து மீள்வதற்கு அவனுக்கு ஒரு நிமிடம் தேவைப்பட்டது. சூனியம் வைக்கும்போது மந்திர

வாதியை யாராவது பார்த்துவிட்டாலோ, அல்லது தடுத்து நிறுத்தினாலோ அவ்வாறு பார்த்த அல்லது தடுத்த நபரை, அந்த மந்திரவாதி கொன்று விடுவான் மாய்த்துக் கொள்வான்.

ஆனால், இங்கே இருப்பது, அவனது குரு ஸ்தானத்திலிருக்கும் ராம சாஸ்திரி. ஆழமான நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டு அவர் குரல் ஓலித்தது. 'இப்போது சொல்... நீ யார்?"

தார்க்கா பேசவில்லை.

"அன்று எங்கள் வீட்டுப் பூஜை அறையிலிருந்த விளக்கை அணைத்த போதே சந்தேகப்பட்டேன். ஓரிஸாவிலிருந்து இங்கே எதற்காக வந்தாய்? இப்போது நள்ளிரவில் மயானத்தில் உனக்கென்ன வேலை? எங்கள் குடும்பத்தை சர்வ நாசம் செய்யத்தான் இந்த நள்ளிரவில் இங்கு மயானத்திற்கு வந்தாயா?" – அவர் குரல் அவனை உலுக்கியெடுத்தது.

இரும்பு உள்ளம் படைத்த இரக்கமில்லாத மந்திரவாதியான தார்க்காவே அந்த வார்த்தைகளால் அதிர்ச்சி அடைந்தான்.

"நான்... உங்கள் குடும்பத்தையா? எதற்கு? என்றான்.

"பின்னே... இதென்ன வேலை?"

"அன்றைக்கு அநியாயமாய் என்னை அடித்த டிக்கெட் பரிசோதகனைப் பழிவாங்கத்தான்."

"சூனியம் வைக்கிறாய் இல்லையா?" நேராகக் கேட்டார். "தார்க்கா, உண்மையைச் சொல்லு நீ யார்?"

தார்க்கா, தங்கள் ஊரைச் சேர்ந்த மந்திரவாதி ஒருவனை மூவர் வந்து கொன்றுவிட்டதை, தன் பகைமை யைப் பற்றி எல்லாவற்றையும் விபரமாகச் சொன்னான்.

"அந்த டிக்கெட் பரிசோதகன் என்னை யாரென்று நினைத்தான்? .அவனைச் சும்மா விடப்போவதில்லை."

"அவ்வளவு பெரிய ஆளா நீ?"

"காஷ்மோராவைப் பிரயோகிக்கத் தெரிந்த ஒரே ஒரு மந்திரவாதி நான்தான்."

"எத்தனையோ நிஷ்டையுடன் மந்திரங்களைக் கற்ற உனக்கே இவ்வளவு அகங்காரம் இருந்தால், சாதாரண மனிதன் அந்த டிக்கெட் பரிசோதகனுக்கு எவ்வளவு இருக்க வேண்டும்? அதுதான் உன்னை அடித்து விட்டான். மந்திரங்களைக் கற்று சித்தியடைந்த உன்னால் அவனை மன்னிக்க முடியாதா?"

தார்க்கா பேசாமலிருந்தான்.

" உலகத்தில் யாராலும் சாதிக்க முடியதென்று சொல்லப்படும் காஸ்மோராவையே வசப்படுத்திக் கொண்ட மந்திரவாதியே, எனக்காக ஏதாவது ஒரு வித்தை யைக் காண்பிக்க முடியுமா?"

அந்த வார்த்தைகள் தார்காவிடம் சலனத்தை ஏற் படுத்தின. அவன் முகம் சாதாரணமாக இருந்தது. திடீ ரென பெரியதாக அலறினான். அந்தக் கத்தல் மயானம் முழுவதும் எதிரொலித்து ஓய்ந்தது. எதிரே இருந்த மரத்தை ஆட்காட்டி விரலால் சுட்டிக் காட்டினான்.

"என் உபாசனைகளை ஏற்றுக்கொண்டு திருப்தி அடைந்த ரூரணை நான்அழைக்கிறேன். பளபளவென்று பசுமையாக இருக்கும் இந்த மரத்தை இந்த நிமிடமே

பொசுக்கிச் சாம்பலாக்க ஆணையிடுகிறேன்" என்றவன் வேக வேகமாக மந்திரங்களை உச்சரித்தான். அவன் முடித்ததும் காற்றில் சின்னச் சலனம் ஏற்பட்டு, அடுத்த நிமிடம் தீவிரமாக மாறியது. பிரேத ஆன்மாக்கள் குசுகுசு வெனப் பேசிக்கொள்வதைப்போல தெளிவில்லாத ஒலிகள்.

ஆனால் மறுபடியும் சூழ்நிலை சாதாரணமாக ஆகி விட்டது. மரம் அப்படியே இருந்தது. ராமசாஸ்திரி நிச்சல மாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

தார்க்காவின் முகம் சிவந்துவிட்டது. மற்றொரு முறை மந்திரத்தை உச்சரித்தும் மரத்தில் எந்த மாற்றமும் தெரியவில்லை. ஒவ்வொரு பூததேவதையாக அழைப்பு விடுத்தான்... ரூரன், காலன், ருத்ரன், பைரவன்...

அவனுடைய ஆவேசம் அதிகரித்தது. தேவதைகளின் அதிபதியான க்ஷித்தை அழைத்தான்.

தார்க்கா முழங்காலில் சாய்ந்துவிட்டான். சர்வ சக்திகள் நிறைந்த மந்திரவாதி என்று தன்னை நினைத்து இருந்த தார்க்கா, சாதாரணமாகத் தென்படும் பண்டிதர் முன்னால் தோற்றுப்போய்விட்டான்.

தலையைக் குனிந்துகொண்டு சொன்னான், "பதினாறு வயதிற்குள் நியம நிஷ்டங்களுடன் நான் கற்று முடித்துவிட்டேன் என நினைத்திருந்தேன். ஆனால் கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறதென்று இப்போது புரிகிறது. காஷ்மோரா, க்ஷித் போன்ற பூத தேவதைகளைக் கூட பணியவைக்கும் சக்தி படைத்த அந்தத் தேவதை யார்? நீங்கள் உபாசனை செய்த அந்தத் தேவதையின் பெயரைஎனக்குச் சொல்லுங்கள்."

அவர் புன்முறுவல் செய்தார். "எந்த தேவதையையும் நான் உபாசனை செய்யவில்லை. பசுமையாக இருக்கும் இந்த மரம் அநியாயமாக நாசமாகக் கூடாதென என் இஷ்ட தெய்வத்தை மனதார வேண்டிக் கொண்டேன், அவ்வளவுதான்"-- அந்த நிசப்தத்தில் அவர் குரல் மிருதுவாகக் கேட்டது.

"மரத்தை நாசமாக்குவது மிகச் சுலபம், தார்க்கா தாய்வேரை அறுத்தெறிந்துவிட்டால் போதும், மரம் செத்துவிடும். ஆனால் உயிர்ப்பிக்க வேண்டுமென்றால் ரொம்பக் கஷ்டம் உன் சக்திகளை தீய காரியங்களுக்குப் பயன்படுத்தி அவற்றை வியர்த்தம் செய்யாதே."

அதுவரையில் ஏதோ மயக்கத்தில் ஆழ்ந்திருப்பது போலிருந்த தார்க்கா தலையைச் சிலுப்பிக்கொண்டு பழைய நிலைக்குத் திரும்பினான். கண்களில் பழைய பகையுணர்ச்சி மீண்டும் தென்பட்டது.

"எனக்குத் தீங்கு செய்யாத மரத்தை நான் நாசம் செய்ய முற்பட்டபோது உங்கள் இஷ்ட தெய்வம் தடுத்து விட்டது. ஆனால் எங்கள் காத்ராவைக் கொன்ற அந்த மூவரை நான் கொல்லும்போது எந்தத் தேவதையும் குறுக்கே வர முடியாது. அப்படி வந்தால் நானே சுயமாய் அந்தத் தேவதையுடன் போராடுவேன், உயிர் இருக்கும் வரையில்."

"உன் முடிவில் மாற்றம் ஏற்படாதா, தார்க்கா?"

"மாறாது. என் குருவான விஷாச்சிக்குக் குரு தட்சிணையாக அந்த மூவரையும் ஆவிகளாக மாற்றி அர்ப்பணிக்காமல் என் சபதம் நிறைவேறாது."

"அந்த குருவிற்கு மட்டும்தான் தட்சணையா? இந்தக் குருவிற்குக் கிடையாதா?"

எதிர்பாராத அந்தக் கேள்வியால் திடுக்கிட்ட தார்க்கா, உடனே சமாளித்துக் கொண்டு, "எது கேட்டாலும் தருகிறேன், அந்த மூவரையும் கொல்லக் கூடாது என்கிற வாக்கைத் தவிர."

ராம சாஸ்திரி கையை நீட்டினார். "சத்தியம் செய்து கொள். உன்னிடமுள்ள மகத்தான இந்தச் சக்திகளை அப்பாவி மக்கள் மீது பிரயோகம் செய்யமாட்டேன் என்று."

தார்க்கா மெதுவாகத் தலையை உயர்த்தினான். "என் குருவான உங்களுக்கு, நான் நம்பும் பூததேவதைகள் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன், அந்த மூவரையும் தவிர வேறு யாரையும் நான் கொல்ல மாட்டேன், என் உயிர் போகும் நிலை ஏற்பட்டாலும் சரி. ஆனால் அந்த மூவரையும் பற்றிச் சொல்லிய விஷயத்தை நீங்கள் யாரிடமும் கூற மாட்டேன் என்று சத்தியம் செய்து கொடுங்கள்."

"சரி போய் வா, தார்க்கா. உனக்குத் தெரியும் இனிமேல் என் வீட்டில் உனக்கு இடமில்லையென்று."

"தேவையில்லை சுவாமி. உங்களுக்கு என் நன்றி. என்னை ஆசீர்வாதம் செய்யுங்கள்."

"மன்னித்துக்கொள், தார்க்கா" தலையைத் திருப்பிக் கொண்டார்.

தார்க்கா குனிந்து மந்திரவாதிகளின் வழக்கப்படி வணங்கிவிட்டுத் தெற்கு நோக்கிப் புறப்பட்டுச் சென்றான்.

அவர் அந்தப் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தார்.

இந்த இளைஞன் மிகப் பெரிய மந்திரவாதி என்பதில் சந்தேகமே இல்லை. நாகரிக உலகத்திற்குள் சத்தமின்றி பாம்பைப்போல் நுழையப் போகும் இவனை யாரால் தடுத்து நிறுத்த முடியும்?

அவர் குனிந்து காலடியில் கிடந்த பொம்மையை எடுத்து முற்களைப் பிடுங்கினார். மண்ணைத் தட்டி துணியை அவிழ்த்தவர், பொம்மையைத் தொலைவில் வீசிவிட்டு, வீட்டை நோக்கி நடந்தார்.

5

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

வாரங்கள் மாதங்களாயின. மாதங்கள் வருடங் களாகி, நான்கு ஆண்டுகள் கழிந்துவிட்டன.

அவன் தேடிக் கொண்டே இருந்தான். முதலில் பெரிய பெரிய நகரங்களில் தேடினான். பிறகு சிறிய ஊர் களில்.

ஆரம்பத்தில் கடினமாக இருந்தது. போகப் போக நெளிவு சுளிவுகளைக் கற்றுக் கொண்டான். சில உண்மை களும் புரிய வந்தன. மனிதன் மனதளவில் மிகப் பலவீன மானவன். பணத்தால் எந்தக் காரியத்தையும் சாதித்து விடலாம். இதை வைத்துக்கொண்டு தன் காரியங்களைச் சாதித்து வந்தான்.

பணம் சம்பாதிப்பது பெரிய கஷ்டமாக இல்லை அவனுக்கு. சின்னச் சின்ன மாஜிக்குகள் செய்து பணத்தை வசூல் செய்து கொண்டான். ஆனால் பணம் சம்பாதிப் பதற்காக நேரத்தை விரயமாக்க மாட்டான். அன்றாடச் செலவுகளுக்கும் அடுத்த ஊருக்குச் செல்ல டிக்கெட் வாங்குவதற்கும் தேவையான பணத்தை மட்டுமே அவன் சம்பாதித்தான்.

தேடிக் கொண்டே இருந்தான்.

அவனுக்குத் தாடி வளர்ந்தது. கண்கள் குழி விழுந்தன. முகத்தில் யௌவனத்தன்மை மாறி அவ்விடத்தில் குரூரம் குடி கொண்டது.

நான்கு ஆண்டுகள் முடிவடைந்து ஐந்தாவது ஆண்டு தொடங்கியது.

* * *

"மகளிர் கல்லூரி" என்ற பலகையின் கீழே ஒரு நிமிடம் நின்றான் தார்க்கா. மணி பத்தடிக்கப் போகிறது.

விதவிதமான உடை அணிந்து கொண்டு பெண்கள் கும்பல் கும்பலாய் உள்ளே நுழைந்து கொண்டிருந் தார்கள். அவர்களுக்குத் தெரியாது. மனித இரத்தத்தை ஆவிகளுக்குத் தர்ப்பணம் செய்யும் மந்திரவாதி ஒருவன் தங்களில் ஒருத்தியைத் தேடி வருகிறான் என்று.

அவன் உள்ளே நுழையப் போனபோது காவலாளி தடுத்தான்.

"பிரின்ஸ்பால் வரச் சொல்லி இருக்கிறார். வேண்டு மானால் நீ உள்ளே போய்க் கேட்டுக்கொண்டு வா" என்றான் தார்க்கா.

ரொம்ப நாட்களாகப் பயன்படுத்திவரும் யுக்தி இது. பெரும்பாலும் தோல்வியடைவது இல்லை.

இரண்டு நிமிடங்கள் கழித்து அவன் அலுவலகம் இயங்கும் அறையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். பெரிய காம்பவுண்டிற்குள்ளே தள்ளித் தள்ளி அங்கங்கே கட்டிடங்கள் இருந்தன. சாலையின் இருபுறமும் மரங்கள் இருந்தன. பிரதான சாலையின் போக்குவரத்து இரைச்சல் உள்ளே கேட்கவில்லை. கல்லூரிப் பெண்கள் அவனை விநோதமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அவன் அலுவலகத்திற்குள் நுழைந்தான். இருந்த நான்கு ப்யூன்களில் வயதானவனாகத் தெரிந்த ஒருவனைத் தேர்ந்தெடுத்தான். இளைஞர்களைவிட வயதானவர்கள் பணத்தால் சட்டென்று ஈர்க்கப்பட்டு விடுவார்கள் என்று அநுபவத்தால் அவன் அறிந்திருந்தான்.

"பெண் பார்க்கும் நிகழ்ச்சி இருக்குமே தம்பி... அதற்குள் இப்படி அவசரப்பட்டால் எப்படி?"– பத்து ரூபாயைப் பெற்றுக் கொண்டே அந்தப் ப்யூன் சொன்னான். தார்க்கா சிரித்துவிட்டுப் பேசாமல் இருந்தான்.

"எந்த வகுப்போ... தேடிப் பார்த்துச் சொல்லு தம்பி. நிமிடத்தில் காண்பிக்கிறேன்" என்றான்.

'அது அவ்வளவு சுலபமில்லை' –தார்க்கா மனதில் நினைத்துக் கொண்டான். பல ஆண்டுகளாகத் தேடிய போது கிடைக்காதவள், இன்று நிமிடத்தில் கிடைத்து விடுவாளா?

அவள் வயது இருபது இருக்குமென்று தெரிந்ததால், இறுதியாண்டிற்கு சம்பந்தப்பட்ட ரிஜிஸ்டரில் தேடினான். பழக்கப்பட்ட வேலை என்பதால் அவனுடைய விரல்கள், கண்கள் வேகமாய் இயங்கின.

* * *

இரவு பத்தரையாகிவிட்டது. சத்திரத்தில் ஒரு மூலையில் படுத்துக் கிடந்த தார்க்கா எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

இடுப்பில் முடிந்து வைத்திருந்த குச்சிகளின் கட்டுகளை எடுத்தான். மொத்தம் பன்னிரண்டு கட்டுகள். ஒவ்வொன்றிலும் முப்பது குச்சிகள் இருந்தன. ஒவ்வொரு குச்சியும் ஐந்தைந்து பாகங்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. பிஸ்தாவிலிருக்கும் போது அமாவாசை,

பௌர்ணமி தவிர வேறு எதுவும் தெரியாது. ஐந்து வருடங்களைக் கணக்கிட்டுக் கொள்வதற்கு விஷாச்சி இந்தக் குச்சிகளைக் கொடுத்திருந்தான்.

முப்பது குச்சிகளில் ஒரு மாதத்திற்கு ஓர் அடையாளம். பன்னிரண்டு கட்டுகள். ஐந்தாண்டுகளைக் கணக்கிட ஒவ்வொரு குச்சியும் ஐந்தைந்து பாகங்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தது.

எல்லாக் குச்சிகளும் முடிவடைந்து விட்டால் ஐந்தாண்டுகள் முடிவடைந்துவிட்டதாக அர்த்தம். காஷ்மோராவின் துயில் கலையும்முன் துளசியைக் கண்டுபிடிக்க வேண்டும். தன்னிடமிருக்கும் தலைமுடியை ஆதாரமாகக் கொண்டு தனக்கு வேண்டிய துளசியும் அவளும் ஒன்றுதானா என்று பார்க்க வேண்டும். அப்படிச் செய்ய முடியவில்லை என்றால் வயிற்றில் கத்தியால் குத்திக் கொண்டு உயிரை மாய்த்துக் கொள்வதாக தார்க்கா சபதம் செய்து கொண்டான்.

* * *

விரிவுரையாளர் லெக்சர் தந்து கொண்டிருந்தார்.

“மனிதன் கற்பனையை நம்பும் அளவிற்கு உண்மையை நம்ப மாட்டான். அது மட்டுமல்ல. இந்த அநுபவங்களே தனக்கு நிகழ்ந்தது போல் மேலும் கற்பித்துக் கூறுவான். யாரோ சூனியம் வைத்தபோது ஒருவன் கண்ணாடியில் அந்தச் சூனியம் சம்பந்தப்பட்ட பொருட்களை எங்கே இருக்கின்றன என்று தனக்குக் காட்டியதாகக் கூறி ஒரு சிறுவன் என்னிடம் வந்தான். ரிஃப்ளெக்ஷன் மூலமாய் கண்ணாடியில் வேறு பொம்மையைக் காட்டுவதைப்பற்றி பௌதிகத் துறை மாணவிகளான உங்களுக்கு நான் சொல்லத் தேவையில்லை. இது

போலவே மை போட்டுப் பார்ப்பது, ஹிப்னாடிஸம் செய்வது எல்லாமே பொய்தான்." கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு பெண் திடுக்கிட்டாள்.

"தெய்வத்தின் பெயரைச் சொல்லிப் பணம் வசூலிப் பதும் ஏமாற்று வேலைதான். இதுபோன்ற விஷயங்களை நீங்கள் எதிர்க்கவேண்டும். படிப்பு என்றால் பிஸிக்ஸ், கெமிஸ்டிரி மட்டும் இல்லை. அநியாயத்தை எதிர்ப்பதும் தான்."

ஒரு பெண் எழுந்து நின்றாள். "நீங்கள் கடவுளை நம்பவில்லையா?"

விரிவுரையாளர் சிரித்தார். "மனிதனுக்கு அப்பாற் பட்ட சக்தி ஏதோ ஒன்று இந்த உலகத்தை இயக்குகிறது என்று நம்புகிறேன். நான் சொல்வது கடவுள்களின் பெயரால் பணம் வசூலிக்கும் சங்கங்களைப் பற்றித்தான். உதாரணத்திற்குச் சித்தேஸ்வரி சங்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள்."

கேட்டுக் கொண்டிருந்த பெண்களில் பலர் திடுக் கிட்டார்கள். ஆயிரக் கணக்கான பக்தர்களைக் கொண்ட சித்தேஸ்வரி சங்கத்தை விமர்சிப்பதாவது?

"சித்தேஸ்வரி இருபத்து நான்கு மணி நேரமும் தெய்வத்தின் வேலையிலேயே கழிக்கிறவளாம். தினந் தோறும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் தரிசனத்திற்காக வருகிறார்களாம். பக்தர்களின் கேள்விகளுக்கு வாழைப் பழத்திற்குள் பதிலை வைத்துத் தருகிறார்களாம். மக்கள் கூட்டம் கூட்டமாய் அங்கு போய் வருகிறார்களாம். காணிக்கைகளை வழங்குகிறார்களாம். அமைச்சர்கள்கூட தேர்தலுக்கு முன் அங்குபோய் ஆசி பெற்று வருகிறார்கள் என்றால் மக்களின் மடமை எந்த அளவிற்கு இருக்கிற தென்று புரிந்துகொள்ள முடியும்—"

மணியடித்துவிட்டதால் அவர் தன்னுடைய உரையை முடித்துக்கொண்டார். எல்லோரும் வெளியில் வந்தார்கள். கார்கள் நிறுத்தியிருந்த இடத்தருகில் அவர் நடந்து கொண்டிருந்தபோது, வகுப்பில் அவர் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த அந்தப் பெண் அருகில் வந்தாள்.

"குட் ஈவினிங்க் சார்... வாருங்கள், என் காரில் ட்ராப் செய்கிறேன்" என்றாள்.

"நீயா துளசி? அப்பா சௌக்கியமா?"

"அவர் வெளிநாட்டிற்குப்போய் ஒரு வருடம் ஆகிறது."

"அப்படியா?"

"அந்த சித்தேஸ்வரி சங்கதி என்னவென்று கண்டு பிடிக்கலாமென்று இருக்கிறேன்.

ஏதோ யோசித்துக் கொண்டிருந்தவர் திடுக்கிட்டு "வேண்டாம்... வேண்டாம்" என்றார்.

"ஏன்?"

"கேள்வி பதில் என்று ஏதோ மோசடி செய்து அவர்கள் பணத்தைச் சம்பாதித்து வருகிறார்கள். நீ குறுக் கிடுவது தெரிந்து விட்டால், என்ன வேண்டுமானாலும் செய்வார்கள்."

"படித்தவர்கள் எதிர்க்க வேண்டுமென்று நீங்கள் சொன்னது வெறும் பேச்சுத்தானா?"

இந்தக் கேள்வியை எதிர்பார்க்காத அவர் திடுக் கிட்டார். பிறகு சமாளித்துக்கொண்டு புன்முறுவலித்தார். "சரி, உன் இஷ்டம்" என்றார்.

"சற்றுமுன் நீங்கள் கொடுத்த லெக்சரில்..." என்று ஏதோ சொல்ல வந்தவள் நிறுத்திக் கொண்டாள்.

"என்ன துளசி? சொல்லு" என்றார்.

"ஹிப்னாட்டிஸத்தைக்கூட அலட்சியம் செய்து பேசினீர்கள். ஆனால் அதுவும் விஞ்ஞானம்தான். அதன் மூலம் விநோதங்களை நிகழ்த்த முடியும்."

"என்ன செய்துவிட முடியும்?"

"ஹிப்னாட்டிஸம் செய்து தூங்கவைக்க முடியும். அந்தத் தூக்கத்திலேயே நாடித் துடிப்பைக் குறைக்க முடியும். ஒரு முறை எங்கள் அங்கிளைச் சந்தித்துப் பேசுங்கள். அங்கிள் என்றால் எங்கள் குடும்ப நண்பர். வேண்டுமென்றால் அவர் உங்களையே ஹிப்னாட்டைஸ் செய்து காட்டுவார்.

"அவர் பெயர்?"

"ப்ரொபஸர் ஜெயதேவ்."

* * *

"நீங்கள் ஹிப்னாட்டிஸம் செய்வீர்களாமே? துளசி அழைத்துக் கொண்டு வந்தாள்."

ஜெயதேவ் சிரித்துவிட்டு, "துளசி என்னைப்பற்றி எல்லோரிடமும் அதிகப்படியாகச் சொல்லி என்னைத் தர்மசங்கடத்தில் ஆழ்த்தி விடுகிறாள்" என்றார்.

கல்லூரி ஆசிரியர் பண்டிட் சிரிக்கவில்லை. இந்த ஹிப்னாட்டிஸம் சுத்த ஹம்பக் என நிரூபிக்க வேண்டும் என துடித்துக் கொண்டிருந்தார்.

"என்னை ஹிப்னாடைஸ் செய்யுங்கள். அதற்கு எவ்வளவு பீஸ் ஆகும்?"... பொறுமை இல்லாதவர்போல் கேட்டார் பண்டிட்.

"ஹிப்னாட்டிஸம் என்றால் பெரும்பாலான மக்களுக்கு ஏளனமான எண்ணமிருக்கிறது. உங்களுக்கும் அப்படி இருப்பதில் வியப்பேதும் இல்லை. என்னை யாரும் ஹிப்னாட்டிஸம் செய்துவிட முடியாது என்று பிடிவாதமாய் இருந்தால் உங்களை யாரும் ஹிப்னாட்டிஸம் செய்துவிட முடியாது. மனதில் பலவீனமாக இருப்பவர்களைத்தான் ஹிப்னாட்டிஸம் செய்ய முடியும் என நினைக்கிறீர்கள். அதுதான் தவறு. வேண்டிய தெல்லாம் மானசீகமாக அங்கீகரிப்பதுதான். உதாரணமாக என்னை யாராவது ஒரு அறைக்குள் பூட்டி வைத்துவிட்டு வெளியில் நின்றால் என்னால் அவரை ஹிப்னாட்டிஸம் செய்து பூட்டைத் திறக்க வைக்க முடியாது.

பண்டிட் வியப்புடன் பார்த்தார். இப்படி வாதத்தில் அவரை வீழ்த்திய முதல் நபர் ஜெயதேவ்தான்.

தன் லெக்சரரின் நிலையை உணர்ந்த துளசி இடை மறித்து, "அங்கிள், எங்கள் சார் பிஸிக்ஸ்" என்று ஏதோ சொல்ல வந்தாள்...

புகழ்ந்தது போதும் என்பதுபோல் பண்டிட் ஜாடை காட்டினார். "ப்ரொபசர், ஹிப்னாடிஸத்தை ஏற்றுக் கொள்வதுபோல் என் மனதை வைத்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, க்ளினிக்கல் ஹிப்னாட்டிஸம் மூலமாக என் நோயைக்கூட நீங்கள் குணப்படுத்த வேண்டும்" என்றார்.

"உங்களுக்கு என்ன நோய்?"

அவர் சங்கடத்தில் ஆழ்ந்தவரைப்போல துளசியைப் பார்த்தார். அதைப் புரிந்துகொண்ட துளசி சட்டென அந்த இடத்தைவிட்டு வெளியே போனாள்.

பண்டிட் சொன்னார்.

ஜெயதேவ் திடுக்கிட்டது போல் பார்த்தார்.

பண்டிட் தொடர்ந்து சொன்னார், "எங்கேயோ படித்த நினைவு இருக்கிறது. அதைக் க்ளினிக்கல் ஹிப்னாடிஸம் மூலமாகக் குணப்படுத்த முடியும் என்று."

"குணமாக்கலாம். முதலில் என் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள். ஆறு மாதங்களாவது தொடர்ந்து என்னிடம் சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும். வாரத்திற்கு ஒரு நாள் வரவேண்டி இருக்கும்."

"ஓ.கே. ப்ரொபசர். ஆறு மாதங்கள் உங்களிடம் சிகிச்சை எடுத்துக் கொள்கிறேன்" –பண்டிட் சொன்னார்.

அவர்களுக்குப் பிரியமான துளசி ஆறு மாதங்கள் கூட உயிர் வாழ மாட்டாளென்பதும், காஷ்மோரா துயிலெழுந்து அவளைக் கொல்லப் போகிறதென்றும் அவர்களுக்குத் தெரியாது.

* * *

கந்தக உப்புத் திரவத்தைத் துங்கமுஸ்கத்துடன் ஊறவைத்து ஒரு சிறுவனிடம் கொடுத்து குடிக்கச் செய்தான் தார்க்கா. அச்சிறுவனுக்கு எட்டு ஒன்பது வயதிருக்கலாம். அரை நிஜார் அணிந்துகொண்டு குடிசையின் வாசலில் கோலி விளையாடிக் கொண்டிருந்தவனை நயமான வார்த்தைகளைச் சொல்லி அழைத்து வந்திருந்தான் தார்க்கா.

மாலைக்குள் அந்தச் சிறுவனின் உடல்நிலை மிகவும் மோசமாகிவிட்டது. தார்க்கா தொலைவிலிருந்தே கவனித்துக் கொண்டிருந்தான். நாட்டுவைத்தியர் வந்து ஏதோ மருந்தைக் கொடுத்துவிட்டுப் போயிருந்தார். குணம் ஏதும் தெரியவில்லை. மறுநாள் அவனை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றார்கள். தான் செய்த மூலிகைப் பிரயோகத்தை ஆஸ்பத்திரி மருந்துகள் ஒன்றும் செய்துவிட முடியாதென்று அவனுக்குத் தெரியும். அவன் ஊகம் உண்மையாயிற்று.

ஒரு மணி நேரத்தில் சிறுவனை வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டார்கள். கீரையாய்த் துவண்டுவிட்ட அவனைப் பார்க்கும்போதே அவன் பிழைப்பது அசாத்தியம் என்று எல்லோருக்கும் புரிந்துவிட்டது.

தார்க்கா இன்னமும் கவனித்துக் கொண்டிருந்தான். இருப்பைப் பழுக்கக்காய்ச்சிய பிறகுதான் சம்மட்டியால் அடிக்கவேண்டுமென அவனுக்கு நன்றாகத் தெரியும்.

மறுநாள் இரவு சுமார் பதினொரு மணிக்கு குடிசை யின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான் தார்க்கா.

குடிசையின் ஒரு மூலையில் அந்தச் சிறுவனின் தாயார் அமர்ந்திருந்தாள். அதற்குள் சிறுவனுக்கு மூச் சிறைக்கத் தொடங்கிவிட்டது. மரணத்தின் விளிம்பில் இருந்தான்.

உள்ளே நுழைந்த தார்க்காவைப் பார்த்து, "யார் நீ?" என்று கேட்டாள்.

"இவனுக்கு உடம்பு சரியில்லை அல்லவா?"— மண்டி யிட்டு அமர்ந்தவாறே கேட்டான் தார்க்கா.

"யார் தம்பி நீ?"

தார்க்கா பேசவில்லை. சிறுவனின் தலையை இலேசாக உயர்த்தி தன்னுடன் கொண்டு வந்திருந்த திரவத்தை வாயில் ஊற்றினான். அரைமணி கழித்து அந்தச் சிறுவன் வாந்தி எடுத்தான். இரண்டே மணி நேரத்தில் பழைய நிலைக்குத் திரும்பிவிட்டான் அவன்.

இதெல்லாம் ஒரு கனவாய், நம்பமுடியாத விஷயமாகத் தோன்றிற்று அந்தத் தாய்க்கு. பிழைக்க மாட்டானென எண்ணி இருந்த மகன் பிழைத்தது ஆச்சரியம்.

வந்தவன் தெய்வமாகத்தான் இருக்க வேண்டும். அவன் கால்களில் விழாத குறையாக, கைகளைப் பற்றிக் கொண்டு, "என் ஒரே மகனைக் காப்பாற்றிவிட்டாய், தம்பி."

நானென்ன செய்துவிட்டேன்?" தார்க்கா மெதுவான குரலில் சொன்னான்.

"அப்படிச் சொல்லாதே தம்பி. அவர் போன பிறகு வீட்டிற்கு இருக்கும் ஒரே ஆண் வாரிசு இவன்தான். அவலும் என்னைவிட்டுப் போய்விடுவானோ என்று பயந்து விட்டேன். ஆஸ்பத்திரியிலும் அப்படித்தான் சொன்னார்கள்."

தார்க்கா குடிசை முழுவதும் பார்வையிட்டான். சுற்றிலும் துணி மூட்டைகள். சில துவைத்தவை, சில துவைக்க வேண்டியவை. ஒரு மூலையில் இஸ்திரிப் பெட்டி தென்பட்டது.

"உன் நன்றிக்கடனை எப்படித் தம்பி தீர்ப்பது"

அவன் மெதுவாக தலையை உயர்த்தினான்.

"உண்மையிலேயே தீர்த்க்கொள்ள வேண்டுமென நினைக்கிறாயா?"

"பாம்புத் தோலை உறித்துக் கொண்டுவரச் சொன்னாலும் செய்கிறேன் தம்பி!"

"திரும்பி எந்தக் கேள்வியும் கேட்கக் கூடாது. நான் கேட்ட பிறகு மாட்டேனெனச் சொல்லக் கூடாது. உன்னால் செய்யமுடியாத காரியமல்ல அது. ஆனால் ஒன்று மட்டும் ஞாபகம் வைத்துக்கொள். எல்லாம் சொல்லி முடித்த பிறகு என்னால் முடியாதென்றாலோ, அல்லது இவ்விஷயத்தை வேறு யாரிடமும் சொன்னாலோ, உன் எதிரில் நிற்கும் இந்தத் தெய்வம் இராட்சசனாக மாறிவிடுவான். விருப்பமில்லை என்றால் இப்போதே சொல்லிவிடு. நான் வேறு வழியைத் தேடிக் கொள்கிறேன்."

அவன் சொன்ன இறுதி வாக்கியத்தை அவள் காதி லேயே வாங்கிக் கொள்ளவே இல்லை. விருப்பம் இல்லை யென ஒரே வார்த்தையில் மறுத்திருக்கலாம். ஆனால் நன்றி என்ற கடமைக்குட்பட்ட அந்தத் தாய், எதுவும் செய்யத் தயாராக இருந்தாள்.

"என்ன பண்ண வேண்டுமோ சொல்லு தம்பி. எங்கள் குடும்பத்தில் எல்லோரும் சேர்ந்தாவது உனக்கு அந்த வேலையைச் செய்து தருகிறோம்."

முதன்முதலாக அந்தச் சலவைக்காரியைப் பார்த்துச் சிரித்தான். "குடும்பம் எல்லாம் தேவையில்லை. உன்னால் மட்டுமே செய்துவிட முடியும். உன் ஒருத்திக்குத்தான் அந்த வீட்டில் சுவாதீனம் இருக்கிறது" என்று அவன் தனக்கு வேண்டியதை தாழ்வான குரலில் சொல்லத் தொடங்கினான். அந்த நள்ளிரவு நேரத்தில் அவன் சொல்லியதைக் கேட்டு அவள் உடல் நடுங்கியது. அவன்

அதைப் பொருட்படுத்தாமல் மேலும் சொல்லிக் கொண்டே போனான்.

எல்லாம் சொல்லி முடித்த பிறகு அந்தச் சலவைக் காரி கேட்டாள்: "யாருடையது தம்பி, துளசியம் மாவினுடையதா?"

* * *

தார்க்கா சுற்றிலும் நோட்டமிட்டான். தன் கிராமத்து மயானத்திற்கும் இதற்கும் நிறைய வேறுபாடு இருந்தது. மயானத்தில்கூட நாகரிகம் புகுந்துவிட்டது.

அவன் அதைப் பொருட்படுத்தவில்லை. பிண ஊர்வலம் வரும் வழியே தெற்கு முகமாக உட்கார்ந்து கொண்டான். தொலைவில் சிதையொன்று எரிந்து கொண்டுடிருந்தது. அவன் வேலையை இன்னும் ஆரம்பிக்க வில்லை. சிதை முழுவதும் அணைய வேண்டும். வெளிச்சம் இருக்கும்போது சூனியம் செய்யக் கூடாது. சந்திரன் தாமதமாய் உதிக்கும் நாள்கூட நல்ல நாள் தான்.

இன்னும் ஒரு மணி நேரமாயிற்று. சிதை முற்றிலும் அணைந்துவிட்டது.

பிறகு கையிலிருந்த மைதாமாவு பொம்மைக்குத் துளசி யின் தலைமுடியைக் கட்டினான். அதை இரத்தத் துணி யால் சுற்றினான். பிண ஊர்வலம் வரும் பாதையில் அதைப் புதைப்பதற்காகத் தோண்ட ஆரம்பித்தான்.

சலவைக்காரி சொன்னதெல்லாம் உண்மையானால் இன்னும் ஆறே நாள்கள். அவ்வளவுதான். துளசியின் வலியை யாராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது.

* * *

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. தார்க்கா துளசியைக் கவனித்துக் கொண்டே இருந்தான். அதற்குள் ஐந்து நாள்களாகிவிட்டன. இருந்தும் அந்த ஐந்து நாள்களும் தார்க்கா தேடுவதை நிறுத்தவில்லை. வேறு யாராவது துளசி என்ற பெயரில் இருப்பார்களோ என்று மீதமுள்ள கல்லூரிகளிலும் போய்த் தேடிக் கொண்டே இருந்தான்.

மேலும் ஆறு நாள்கள் கழிந்தன. இன்னும் ஓரிரு நாள்களில் அவள் கல்லூரிக்குப் போவது நின்றுவிடும். அன்று கூட கல்லூரி வரையிலும் அவளைத் தொடர்ந்து சென்றான். நடுவில் வயிற்று வலியோடு வீட்டிற்குத் திரும்பி விடுவாளோ என்று எதிர்பார்த்துக் கொண்டு இருந்தான்.

பரவாயில்லை. இன்னும் நான்கைந்து நாள்களில் தெரிந்துவிடும். அதற்கும் பிறகு என்ன செய்வதென்று அவனுக்குப் புரியவில்லை. சுற்றுப்புறத்தில் வேறு கல்லூரிகளும் இல்லை. யோசித்துக் கொண்டே நடந்து கொண்டிருந்தவனுக்கு ஒரு அறிவிப்புப் பலகை கண்ணில் பட்டது. அதில் எழுதியிருந்த எழுத்துகள் அவனைக் கவர்ந்தன.

"இங்கே சூனியம் முதலானவை குணமாக்கப்படும்"

அவன் அந்தப் பலகையை பார்த்துக் கொண்டிருந்தான். சூனியத்தை முறியடிப்பதென்றால் பல ஆண்டுகள் சாதனை புரிந்த சக்தியை அர்ப்பணிக்க வேண்டுமே?

அவன் குடிசைக்குள் நுழைந்தான். பாயின்மீது நடுத்தர வயதில் இருந்த ஒருவன் உட்கார்ந்திருந்தான்.

"வாங்க தம்பி. பூதம், பிசாசு, பேய், சைத்தான், எதுவாக இருந்தாலும் சரி. அடித்து விரட்டிவிடுவேன்."

தார்க்காவிற்கு ஆச்சரியமாக இருந்தது. "நீ சூனியத்தை முறியடிக்கிறாயா அல்லது பேய் பிசாசை விரட்டுகிறாயா?"

"இரண்டுமே செய்கிறேன்."

தார்க்காவின் வியப்பு மேலும் அதிகரித்தது. ஒன்றைக் கற்பதற்கே வாழ்நாள் முழுவதும் போதாது எனும் போது இரண்டையும் எப்படிக் கற்றுத் தேர்ந்தானோ?

"இப்போது யாருக்குச் சூனியம் கண்டிருக்கிறது?" மந்திரவாதி கேட்டான்.

"ஒரு சிறுவனுக்கு."

"அப்படியானால் அவனை அழைத்து வாருங்கள். சூனியத்தைக் குணமாக்க என்னை விட்டால் இந்த நாட்டிலேயே வேறு ஆள் கிடைக்க மாட்டான். நோயாளியை அழைத்துக் கொண்டு வாருங்கள்."

மந்திரவாதியின் மகன் தற்செயலாக உள்ளே வந்தான். தார்க்கா அவன் இடுப்பில் கையை வைத்து, "இதோ இந்தப் பையன்தான்" என்றவாறே இடுப்பிற்குக் கீழே யிருந்த கஹநாடியை மெதுவாய் அழுத்தினான்.

"அவன் என் மகன்."

"உங்கள் மகனா? இரண்டு மூன்று முறை அவன் கீழே விழுந்தபோது பார்த்திருக்கிறேன் இரக்கம் ஏற்பட்டதால் அவனுக்குப் பிடித்திருக்கும் சூனியத்தைக் குணமாக்கலாம் பாவம் என்று அழைத்து வந்தேன்."

சிறுவன் கீழே விழுந்து இப்படியும் அப்படியுமாக புரண்டு தவித்துக் கொண்டிருந்தான். தார்க்கா அவனைப் பார்த்து "இது சூனியம்தான் நிச்சயமாய்" என்றான். மந்திர

வாதியிடம் திரும்பி, "உங்களிடம் வந்த நோயாளிக்குச் சூனியமா இல்லையா என்று எப்படிக் கண்டு பிடிப்பீர்கள்?" என்று கேட்டான்.

மைதாமாவில் எச்சில் துப்பி அது பொசு பொசு என்று பொங்கினால் அது சூனியம் என்று சொல்வோம்.

"பின்னே தாமதம் எதற்கு? உடனே பார்த்து விடுவது தானே?" தார்க்கா சொன்னான். சிறுவனுக்கு மூச்சு இரைத்துக் கொண்டு இருந்தது.

"மந்திரம் தந்திரம் எல்லாம் இல்லை. அது வெறும் சுண்ணாம்பு கலந்த மைதா மாவு" என்றான் மந்திரவாதி அழும் குரலில்.

தார்க்கா முகத்திலிருந்த சிரிப்பு மறைந்தது. "மூடனே... எத்தனையோ வருடங்கள் வெயிலிலும் மழையிலும் அலைந்து திரிந்து பூதவித்தைகள் கற்றுக் கொள்கிறார்கள். அப்படிக் கற்றவர்கள் ஓரிருவருக்கு மேல் இருக்க மாட்டார்கள் என்று என் குருவான விஷாச்சி சொல்லியிருக்கிறார். ஆனால் ஊருக்கு ஊர் உங்களைப் போல் போலி மந்திரவாதிகள் எப்படி முளைத்தார்களோ தெரியவில்லை. முதலில் உங்களுக்குச் சூனியம் என்றாலே என்ன வென்று தெரியாது. எந்த அங்கத்தில் தொடங்கி எந்த அங்கத்தில் பரவும் என்றும் தெரியாது. மனிதனின் பல வீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு பணத்தைச் சம்பாதிக் கிறீர்கள். உண்மையில் நீங்கள் சூனியம் பண்ணுபவர் களைவிட ஆபத்தானவர்கள்."

"என் மகன்..." என்றான் அவன்.

அந்தச் சிறுவனின் தலையிலிருந்தே இரண்டு முடி களைப் பிடுங்கி அவனது மூக்கிற்குள் நுழைத்தான்.

சிறுவன் வரிசையாக நான்கைந்து தும்மல்களைப் போட்ட பிறகு பழைய நிலைக்குத் திரும்பி விட்டான்.

மந்திரவாதி தார்க்காவின் கைகளைப் பிடித்துக் கொண்டு, "என் மகனைக் காப்பாற்றி விட்டீர்கள் தம்பி" என்றான்.

தார்க்கா மௌனமாக இருந்தான். அவன் உள்ளூர சலிப்படைந்து இருந்தான். வெளியேறப் போனபோது பின்னாலிருந்து மந்திரவாதியின் குரல் கேட்டது.

"உனக்கு ஒரு சூனியமும் இல்லையென்றால் மக்கள் நம்பமாட்டார்கள். இருக்கிறதென்று சொன்னால் நம்பி விடுவார்கள்."

தார்க்கா திரும்பிப் பார்க்காமல் நடக்கத் தொடங் கினான். அவன் மனம் அமைதியின்றி தவித்தது.

* * *

அதற்குள் முப்பத்தைந்து நாள்கள் ஓடிவிட்டன. துளசி நன்றாகவே இருந்தாள். அவன் சந்தேகம் வலுத்தது. இவள் நான் தேடிய துளசி இல்லையென்றால் தற்கொலை செய்து கொள்ள வேண்டியதுதான்.

அன்றிரவு சத்திரத்தில் அமர்ந்து கையிலிருந்த குச்சி களை எண்ணிப் பார்த்தான். காஷ்மோரா இன்னும் இரு பத்தாறு நாள்களில் துயிலெழப் போகிறதா? அதைத் தொடர்ந்து ஏழு நாள்களில் துளசியின் மரணம் உறுதி ஆயிற்றே?

அவன் மறுநாள் கொஞ்சம் நன்றாக உடையணிந்து துளசியின் வீட்டுக் கதவைத் தட்டினான். ஒவ்வொரு நாளும் அந்த வீட்டிலிருந்தவர்களை நன்கு தெரிந்து வைத்திருந் தான் அவன்.

பார்த்ததுமே புரிந்துவிட்டது. கதவைத் திறந்தது துளசியின் தாயார்.

"வணக்கம். சென்சஸ் கணக்கு எடுக்க வந்திருக்கிறேன்."

"உள்ளே வாருங்கள்."

"பரவாயில்லை. உங்கள் கணவர் இல்லையா?" என்று கையிலிருந்த புத்தகத்தைப் பிரித்தான்.

"அவர் இந்த நாட்டில் இல்லை தம்பி."

"யார் யார் இருக்கிறார்கள் இந்த வீட்டில்?"

"நானும் என் மகள் துளசியும்தான்."

"உங்கள் பெயர்?"

ஐந்து நிமிடங்களில் தார்க்காவின் கணக்கெடுப்பு முடிந்தது. அந்தக் குடும்பம் ஐந்தாண்டுகளுக்கு முன்னால் தான் வடநாட்டிலிருந்து குடிவந்திருந்தார்கள். அதற்கு முன்னால் தமிழ்நாட்டிற்கு வந்ததே இல்லை. துளசி என்ற இந்தப் பெண்ணிற்கு எப்போதும் உடல்நலம் பாதிக்கப் பட்டது இல்லை.

அவனுக்குத் திடீரென தாங்க முடியாத தோல்வி மனப்பான்மை வந்து குடிகொண்டது. அப்படியானால் தான் தேடி வந்த துளசி இவள் இல்லை.

மறுபடியும் தேடுதலைத் தொடர வேண்டும். அநாவசியமாக ஒரு மாத காலம் வீணாகிவிட்டது. அவன் மயானத்திற்குச் சென்றான். புதைத்திருந்த பொம்மையைத் தோண்டி எடுத்தான். அதில் கட்டியிருந்த தலைமுடியை எடுத்து துணியில் பத்திரமாக வைத்துக் கொண்டான்.

* * *

"ஹிப்னாட்டிஸம் கற்றுக் கொள்வது ரொம்பக் கஷ்டமா?" பண்டிட் கேட்டார்.

"அப்படி இல்லை. கஷ்டளமென்று பல பேர் சொல்லு வார்கள். ஆனால் நம்மீது நமக்கே நம்பிக்கை இருந்தால் ரொம்பச் சுலபம்" என்றார் ஜெயதேவ்.

பண்டிட் தன் வீட்டில் இதைப்பற்றிச் சோதனை செய்து வருவது ஜெயதேவிற்குத் தெரியாது. உண்மையில் பண்டிட் தன் வீட்டில் வேறு ஒரு நோயாளிக்குச் சிகிச்சை யளித்து வருகிறார். அன்று ஏதோ ஒரு வியாதியின் பெயர் வாய்க்கு வந்துவிட்டது. அதையே சொல்லிவிட்டார். ப்ரொபசர் நிஜமாகவே சிகிச்சைத் தரத்தொடங்கியபோது முதலுக்கே மோசமாகி விடுமோவெனப் பயந்தார். ஆனால் அப்படியில்லை. சிகிச்சை உற்சாகம் தரும் வித் மாகவே இருந்தது.

பண்டிட்டிற்கு ஆச்சரியமாக இருந்தது. ஜெயதேவிட மிருந்து புத்தகங்களை வாங்கிப் படித்தும், அவர் செய்த பயிற்சிகளை கூடவேயிருந்து பார்த்தும் வந்தார். அவருக்கு க்ளினிக்கல் ஹிப்னாட்டிஸம் மிகவும் பிடித்துப் போய் விட்டது.

ஜெயதேவின் க்ளினிக்கிற்கு வரும் நோயாளிகள் வசதி படைத்தவர்கள். மிகவும்அதிகமாக வருவது மன நோயாளி கேஸ்கள்தான். ஜெயதேவின் சிகிச்சை முறைகளையே தன் நோயாளிகளிடம் மேற்கொள்வார் பண்டிட்.

அன்று பண்டிட் ஜெயதேவை தன் வீட்டிற்கு சாப்பிட அழைத்திருந்தார்.

"உங்கள் மனைவி எங்கே?"— உணவு மேஜையில் அமர்ந்திருந்த ஜெயதேவ் கேட்டார்.

"மன்னித்துக் கொள்ளுங்கள், ப்ரொபசர். எனக்குத் திருமணமே ஆகவில்லை."

ஜெயதேவிற்குப் புரையேறியது. "அப்படியானால் இதுவரை எடுத்துக் கொண்ட சிகிச்சை?" குழம்பிப் போனார் ஜெயதேவ்.

"நீங்கள் மறுபடியும் என்னை மன்னிக்க வேண்டும்" என்று தான் செய்த காரியங்களைப்பற்றிச் சொன்னார் பண்டிட்.

"இந்த வயதில் உங்களுக்கு ஏன் இந்த எண்ணம்?"

"ஹிப்னாட்டிஸம் உண்மையா இல்லையா என்று கண்டுபிடிக்கத்தான்" தன் வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டே சொன்னார் பண்டிட்.

"உங்களுக்கு இருக்கும் விஞ்ஞான அறிவை ஒப் பிட்டுப் பார்த்தால் எனக்குத் தெரிந்தது கொஞ்சம்தான்."

பண்டிட் சிரித்தார், "உங்களுக்குச் சிங்கமும் சுண் டெலியும் கதை தெரியும் இல்லையா?" என்று கேட்டார்.

"தெரியும், ஏன்?"

"அந்த மாதிரி ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டு உங்களுக்கு உபயோகப்படும் என்றால் எனக்குத் தெரிவியுங்கள்."

ஜெயதேவ் சிரித்துவிட்டு, "அந்த மாதிரி சந்தர்ப்பம் எதுவும் வந்துவிடக் கூடாது என்று விரும்புகிறேன்" என்றார்.

அதே நேரத்தில் பயங்கரமான விபத்து ஒன்று எதிர் நோக்கி இருக்கிறதென்றும், அது ஜெயதேவை விழுங்கி விட வேகமாய் வந்துகொண்டு இருக்கிற தென்பதையும் அந்த இருவரும் அறியவில்லை.

6 சித்தேஸ்வரியின் கோவில் நான்கு மாடிகள் கொண்ட கட்டிடம்.

விடியற்காலை நாலரை மணிக்கெல்லாம் அங்கு தங்கி இருக்கும் பக்தர்கள் விழித்துக் கொள்வார்கள். சித்தேஸ்வரி குளித்து முடித்து அர்ச்சனை செய்வாள். எட்டு மணியாகும்போது மக்களைச் சந்திக்க விருந்தினர் அறைக்கு வருவாள். பக்த ஜனங்களின் கூட்டம் அவள் வருகைக்காகக் காத்திருக்கும். அமைச்சர்கள், அரசியல் வாதிகள், ஐ.ஏ.எஸ். ஆபீஸர்கள், பக்தர்கள் இப்படிப் பல தரப்பட்டவர்கள் அவளுடைய தரிசனத்திற்காக வந்திருப் பார்கள். அவளுடைய பிரதான சிஷ்யன் சதானந்த சக்ர வர்த்தி ஒவ்வொரு பக்தராய் உள்ளே அனுப்பி வைப்பான்.

சித்தேஸ்வரியிடம் ஒரு அபூர்வமான சக்தி இருக் கிறது. பக்தர்கள் கேட்ட கேள்விகளுக்கு அவள் பதிலளிப் பாள். வாயால் கேள்வி கேட்டால் யாராலும் பதிலளிக்க முடியும். சித்தேஸ்வரி அப்படியில்லை. பக்தர்கள், காகிதத் தில் எழுதிய கேள்விகளுக்கு அவற்றைப் படிக்காமலேயே பதில் தருவாள். ஆரம்பத்தில் அவ்வளவாகப் புகழ் கிடைக்க வில்லை. ஆனால் ஒரு அமைச்சன் பேரன் மரணப் படுக்கையில் இருந்தபோது, வந்து பார்த்துவிட்டு, "கவலைப் பட வேண்டாம். பிழைத்துக் கொள்வான்" என்று ஆசீர் வதித்து விட்டுப் போனாள். அதன் பிறகு அந்தச் சிறுவன் பிழைத்துக் கொண்டுவிட்டதில் அந்த அமைச்சருக்குச் சித்தேஸ்வரியின் மீது அபாரமான நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. சித்தேஸ்வரியின் ஆலயத்தைக் கட்டுவதற்குத் தாராளமான நன்கொடை கொடுத்ததோடு, மற்றவர் களிடமும் எடுத்துச் சொல்லி நிதி வசூல் செய்து தந்தார். இடையில் அரசியல்வாதி ஒருவர் சித்தேஸ்வரியின் தரிசனத்திற்கு வந்துபோன பிறகு கதையே மாறிவிட்டது.

கடந்த மூன்று மாதங்களில் அரசாங்கமே கோவில் வரை சாலைகளைச் சீர்படுத்தி மின் விளக்குகளை அமைத்துத் தரும் வகையில் பிரபலம் அடைந்தது. தேர்த் திருநாளிற்கு வருவதுபோல தினமும் வந்து போகும் மக்களைக் கட்டுப் படுத்துவதற்காகச் சின்ன காவல் நிலையம் அங்கு ஏற்படுத்தப்பட்டதென்றால், கடைகள், ஹோட்டல்கள் பற்றிக் கேட்கவே வேண்டாம்.

சித்தேஸ்வரியின் பழக்க வழக்கங்கள் வினோத மானவை. அவள் உணவு, தண்ணீர் எதுவும் சாப்பிட மாட்டாள். காற்றை மட்டும் சுவாசிப்பாள். அதுமட்டுமல்ல. நாள் ஒன்றுக்கு எட்டு மணி நேரம் தியானத்திற்குள் போவதை பக்தர்கள் பார்த்துக் கொண்டிருப்பார்கள். மடியில் தேவி விக்கிரகத்தை வைத்துக் கொண்டு ஒரு சின்ன இரும்புப் பெட்டியில் அவள் உட்கார்ந்துகொண்ட பிறகு, பிரதான சிஷ்யன் அந்தப் பெட்டியை மூடி விடுவான். சரியாக எட்டு மணி நேரம் கழித்து பக்தர்கள் முன்னிலையில் அந்தப் பெட்டி திறக்கப்படும். தலையைச் சுற்றி ஒளிவட்டம் பிரகாசிக்க, ஒளி வீசும் கண்களுடன் சித்தேஸ்வரி வெளியில் வருவாள். அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் மக்கள் பக்திமேலிட கோஷ மிடுவார்கள்.

அதன் பிறகுதான் விருந்தினர் அறையில் பக்தர்கள் கேள்விகளுக்கு சித்தேஸ்வரி பதிலளிப்பாள்.

அந்த அறையில் நீளமான மேஜையொன்று போடப் பட்டு இருந்தது. அதன் ஒரு கோடியில் சிம்மாசனம் போன்ற இருக்கையில் சித்தேஸ்வரி அமர்ந்திருப்பாள். உள்ளே வந்த பக்தன் தொலைவில் ஒரு நாற்காலியில் அமர்ந்து தன்னுடைய கேள்வியை எழுதுவான். பிறகு அந்தக் காகிதத்தை சட்டைப்பையில் வைத்துக்கொண்டு

அடுத்த அறைக்குப் போவான். அங்கேயிருக்கும் தேவி விக்கிரகத்தை வணங்கிவிட்டு மறுபடியும் வாசலுக்கு வந்து தன்னுடைய இடத்தில் அமர்ந்து கொள்வான். தேவியின் பிரசாதத்தைச் சித்தேஸ்வரி தானே கொண்டு வந்து தருவாள். அந்தப் பிரசாதத்தின் நடுவில் அவனுடைய கேள்விக்குப் பதில் இருக்கும்.

கேள்வி கேட்டு வந்த பக்தன் வியப்பின் மிகுதியால் நிலை தடுமாறுவான். இல்லை... இல்லை, சாஷ்டாங்க மாய்க் காலில் விழுந்து வணங்கி காணிக்கைகளைப் பக்தியுடன் சமர்ப்பிப்பான்.

நன்றாகப் படித்தவர்கள், தர்க்க ரீதியாக யோசிக்க முடிந்தவர்களால் இதை நம்ப முடியவில்லை. விஞ்ஞானத் தில் டாக்டர் பட்டம் பெற்ற ஒருவர் இந்த ரகசியத்தைச் சோதிப்பதற்காக தானே களத்தில் இறங்கினார்.

சித்தேஸ்வரியும் அதற்குச் சம்மதித்து, தனக்குப் பதிலாக அவரை அந்த நேரத்தில் இரும்புப் பெட்டியில் உட்கார்ந்து கொள்வதற்கு அநுமதி தந்தாள். தன் அறையி லேயே தியானத்தில் ஆழ்ந்துவிட்டாள். அந்த டாக்டர் உள்ளே அமர்ந்ததும் பெட்டி மூடப்பட்டது.

இரண்டு மணி நேரம் கழித்து சித்தேஸ்வரி தியானத்தி லேயே ஆணையிட்டாள்.

"அஞ்ஞானத்தில் மதியிழந்துவிட்ட அந்த ஆளை வெளியில் எடுங்கள்."

உடனே பெட்டி திறக்கப்பட்டது. மூச்சுவிட முடியா மல் திணறிக் கொண்டிருந்த அந்த ஆளை வெளியிலெடுத் தார்கள். அதன் பிறகு சித்தேஸ்வரியின் பக்தகோடிகளில் ஒருவராய் அவர் மாறிவிட்டது வேறு விஷயம்.

சித்தேஸ்வரியின் மகிமை நாடு முழுவதும் பரவி விட்டது.

* * *

வரவேற்பு அறையில் ஒரு பெண் உட்கார்ந்து இருந்தாள். சித்தேஸ்வரியின் ஆலயம் பக்தகோடிகளால் நிரம்பி வழிந்துகொண்டிருந்தது. சதானந்த சக்ரவர்த்தி பரபரப்புடன் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தான். பக்தர்கள் ஒருவர் பின் ஒருவராய் உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்கள். அவளுடைய முறை வந்தது.

சக்ரவர்த்தி அவளருகில் வந்தான். அவளை ஆழமாகப் பார்த்தான். அந்தப் பெண்ணிற்கு இருபது வயதிருக்கலாம். வட்டமான முகம், பெரிய கண்கள், சராசரிப் பெண்களைவிட சற்று உயரம் அதிகம், முகவாயில் சிறிய குழி.

அவளுக்கு ஏனோ சக்ரவர்த்தியின் பார்வை பிடிக்கவில்லை. அதைப் பொருட்படுத்தாமல் உள்ளே நுழைந்தாள். நீளமாய் இருந்த வராண்டாவில் நடந்து கொண்டிருக்கும் போது அவள் தலையைத் திருப்பிப் பக்கத்தில் பார்த்தாள். அருகில் சிறிய குட்டிச் சுவற்றிற்கு அப்பால் பக்தர்களின் நடமாட்டம் தெரிந்தது. அவள் அதைப் பார்க்கவில்லை. சற்றுத் தொலைவில் தெரிந்த ஓலைக் குடிசையை... அதன் ஓலைகளுக்கு நடுவில் தெளிவின்றித் தென்பட்டுக் கொண்டிருந்த ஏர்கண்டிஷனரை... உன்னிப்பாகக் கவனித்தால் ஒழிய கண்ணுக்குத் தெரியாது.

அவளுக்கு ஏனோ முதுகுத் தண்டில் சிலிர்த்து மேனி முழுவதும் பரவியது. அந்த நிமிடமே அங்கிருந்து ஓடிவிட வேண்டும் என்று தோன்றியது. தன் உணர்ச்சிகளைத் தனக்குள்ளேயே அடக்கிக்கொண்டு முன்னேறி நடந்தாள்.

இருவரும் சிறிய அறைக்குள் நுழைந்தார்கள். அறையில் மேஜையும் அதன்மீது புத்தகமும் இருந்தது. அந்த அறைக் குள் குளிர்ந்த காற்று எங்கிருந்தோ வீசிக்கொண்டிருந்தது.

"இந்தப் புத்தகத்தில் கையெழுத்துப் போடுங்கள்"— சக்ரவர்த்தி சொன்னான்.

அவள் குனிந்து புத்தகத்தைத் திறந்தாள், தேவையின்றி அவன் நெருக்கமாய் வந்து நின்றதைப் பொருட்படுத் தாமல் பேனாவைக் கையில் எடுத்தாள். பெயரையும் முகவரியையும் எழுதிவிட்டு அடுத்ததாக இருந்த வரிசை யைக் கவனித்தாள். அதில் மேலே எழுதியிருந்தவர்களின் பெயர்களுடன் தொகைகள் குறிப்பிடப்பட்டு இருந்தன.

அவள் சந்தேகத்தைப் புரிந்துகொண்டவன்போல் சக்ரவர்த்தி சொன்னான். "இங்கே மிகப் பெரிய அளவில் சந்தர்ப்பணங்கள் நடக்கும். அதற்கு பக்தர்கள்தரும் நன் கொடைகள்தான் ஆதாரம்."

மற்றவர்கள் கொடுத்த நன்கொடைகள் பட்டியலைக் கவனித்தாள். ஐந்தாயிரம், ஆறாயிரம் இப்படிப் பெரிய அளவில் இருந்தன. ஒரு லெவலுக்குக் கீழே இருப்பவர் களுக்கு இங்கே நுழையத் தகுதி இல்லை.

அவள் தன் பெயருக்கெதிரே ரூ. 216/— என்று எழுதிக் கொண்டே ஓரக் கண்ணால் சக்ரவர்த்தியைக் கவனித் தாள். அவன் கைப்பிடி ஒரு நொடி இறுகி, மறுபடியும் சாதாரண நிலைக்குத் திரும்பியது.

"வாருங்கள், தேவியின் பிரசாதத்தை எடுத்துக் கொண்டு போகலாம்" என்றான்.

அவள் நின்றாள். "நான் ஒரு கேள்விக்குப் பதில் தெரிந்து கொள்வதற்காக வந்தேன்" என்றாள்.

"தேவி இன்று தியானத்தில் ஆழ்ந்துபோயிருக்கிறாள். பதில் கிடைப்பது கஷ்டம் என நினைக்கிறேன். தொலை வில்யிருந்து தரிசனம் செய்துகொண்டு போகலாம்."

அவள் புரிந்துகொண்டாள். தான் தாராளமாய் நன்கொடை தந்தால் ஒழிய தன் கேள்விக்குப் பதில் கிடைக்காதென்று மறைமுகமாகச் சொல்கிறான்.

அவள் ஒரு நிமிடம் தயங்கிவிட்டு, "பக்தர்களுக்காக இத்தனை சேவை செய்யும் நிறுவனத்திற்கு என்னால் முடிந்த காணிக்கை" என்று சொல்லிவிட்டு, விரலில் இருந்த வைரமோதிரத்தை உண்டியலில் போடுவதற்காகக் குனிந்தாள்.

இந்த விஷயம் தெரிந்தால் தாய் நன்றாகத் திட்டுவாள் என்றும், இன்னும் இரண்டு நாட்களில் வெளிநாட்டில் இருந்து ஃபோன் செய்யப்போகும் தந்தையும் தன்னைக் கடிந்து கொள்வார் என்றும் அவளுக்குத் தெரியும். இருந்தாலும் தன் கேள்விக்குப் பதில் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற திடமான முடிவுடன் இரண்டாயிரம் ரூபாய் பெறும் தன் மோதிரத்தை இழக்கவும் தயாராக இருந்தாள். உண்டியலில் மோதிரத்தைப் போட்டுவிட்டு அவள் நிமிரும்போது "ரொம்ப புத்திசாலி நீங்கள்" காதருகில் அவன் குரல் தாழ்ந்த குரலில் ஒலித்தது.

அவள் பொருட்படுத்தாமல் முன்னோக்கி அடியெடுத்து வைத்தாள்.

நீளமாய் இருந்த வராண்டாவில் நடந்து போய்க் கொண்டிருந்தபோது அவன் சொன்னான், "மனதைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள். தேவியை மனதார வேண்டிக் கொள்ளுங்கள். உங்கள் கேள்வியை அந்தக் காகிதத்தில் எழுதுங்கள். கேள்வியைப் பார்க்காமலே தேவி

உங்களுக்குப் பதில் தருவாள். உங்கள் கோரிக்கைகள் நிறை வேறும். கஷ்டங்கள் விலகிப்போகும்."

சக்ரவர்த்தி நின்றாள். "உள்ளே செல்லுங்கள்" என்று கையைக் காட்டினான். ஒரு கதவு ஒருக்களித்து இருந்தது.

உடனே அந்த இடத்தைவிட்டுப் போய்விடு என ஆறாவது அறிவு அவளை எச்சரித்தது. இங்கு வரப் போவதாக யாரிடமும் சொல்லவில்லை. இளரத்தம், அந்த வேகத்தில் இங்கு வந்துவிட்டாள்.

கதவைத் திறந்து உள்ளே போகப் போனவள் திரும்பிப் பார்த்தாள். சக்ரவர்த்தி அவளையே பார்த்துக் கொண்டு இருந்தான். சட்டென கதவைத் திறந்து உள்ளே நுழைந்தாள். கதவு மெதுவாய் மூடிக்கொண்டது.

விசாலமான அறை. வெளிச்சம் மங்கலாய் இருந்தது. ஒரு மூலையில் ஆளுயுர தேவி விக்கிரகத்தருகில் விளக்கு மினுக் மினுக்கென எரிந்து கொண்டிருந்தது.

அவள் பார்வை அறையின் நடுவிலிருந்த நீண்ட மேஜையின் மீது படிந்தது.

"வாம்மா... ஏன் அங்கேயே நின்றுவிட்டாய்?"

அவள் திடுக்கிட்டு நோக்கினாள். மேஜைக்கு அந்தப் பக்கம் கிழவி ஒருத்தி அமர்ந்திருந்தாள்.

சித்தேஸ்வரி...

அவள் கண்கள் அந்த மங்கலான வெளிச்சத்திற்குப் பழக்கப்படத் தொடங்கின.

சித்தேஸ்வரி தேவி அந்த நாற்காலியில் பட்டத்து ராணியைப் போல் வீற்றிருந்தாள். துளசி அதைக் கவனிக்க வில்லை. எங்கிருந்தோ ஏதோ நறுமணம் வந்து கொண்டி ருந்தது. சாம்பிராணியாக இருக்குமோ?

"வாம்மா... தேவியிடம் உன் சந்தேகத்தை கேட்டுத் தெரிந்துகொள்."

அவள் முன்னால் வந்து மேஜையின் மறுபக்கத்தில் அமர்ந்து கொண்டாள். சற்று நேரம் மௌனம் நிலவியது.

"போய்விடு... இங்கிருந்து போய்விடு" உள்ளம் எச்சரித்தது.

சித்தேஸ்வரி அவளைக் கருணையுடன் நோக்கினாள். தொலைவில் தேவியின் விக்கிரகம் கம்பீரமாய் இருந்தது. அவள் குனிந்தாள். மேஜைமீது காகிதமும், பேனாவும் இருந்தன.

அவள் காகிதத்தைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

சித்தேஸ்வரி அவளையே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். தன் மனதின் மீது எந்தவிதமான ஹிப்னாட்டிஸ பாதிப்பும் விழாமல் இருக்க அந்தப் பெண் முயற்சி செய்து கொண்டிருந்தாள். டெலிபதி மூலமாய் எதிராளி தன் மனதில் இருக்கும் கேள்வியைக் கண்டு பிடித்துவிடாமல் இருக்க ஒன்று, இரண்டு, மூன்று எண்ணிக் கொண்டிருந்தாள்.

பேனாவைக் கையில் எடுக்கப் போனவள் நின்றாள் இந்தப் பேனாவில் ஏதேனும் எலெக்ட்ரானிக் உபகரணம் இருக்குமோ? தான் எழுதும் கேள்வியை வேறெங்காவது ரீப்ரிண்ட் செய்கிறதோ? காகிதத்தில் ஏதாவது மர்மம் இருக்குமோ?

அவள் உத்தரத்தையும் சுவர்களையும் எங்காவது கண்ணாடியோ, பிரதிபலிக்கும் சாதனமோ இருக்கிறதா என்று நோட்டமிட்டாள்.

சித்தேஸ்வரி அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நான், நான், எந்தக் கேள்வியை வேண்டுமானாலும் எழுதலாமா?"

"சந்தேகமின்றி... பயப்படாமல் எழுது குழந்தாய். தேவி பதில் தருவதோடு பரிகாரமும் காட்டுவாள்."

சித்தேஸ்வரி சொல்லிக் கொண்டிருந்தபோதே அந்தப் பெண் கையிலிருந்த தாளைக் கீழே நழுவவிட்டாள். ஹாண்ட்பாகிலிருந்து பேனாவையும் நோட்டுப் புத்தகத்திலிருந்து கிழிக்கப்பட்ட தாளையும் மேஜை மீது அதே இடத்தில் வைத்துவிட்டாள். இதெல்லாம் சில நொடிகளில் நடந்து முடிந்துவிட்டது.

"எழுது குழந்தாய்"

அந்தப் பெண் பேனாவைக் கையிலெடுத்துக் கொண்டு குனிந்தாள். மனம் இறுதியாக எச்சரித்துக் கொண்டுடிருந்தது. "வேண்டாம்... அந்தக் கேள்வியை எழுதாதே... ஆபத்து... ஆபத்து"

அவள் கேள்வியை எழுதி முடித்துவிட்டாள். வெள்ளைக் காகிதத்தில் அழகான கையெழுத்தில் எழுதியிருந்தது ஒரேயொரு கேள்வி.

"இது போல் கேள்விகள் கேட்பது, தேவி பதில் தருவது எல்லாம் ஏமாற்று வேலை என்று நினைக்கிறேன். என் அபிப்பிராயம் சரிதானா?"

"தேவி விக்கிரகத்தின் அருகில் போய் நில்லம்மா"– சித்தேஸ்வரியின் குரலில் எந்த மாற்றமும் இல்லை. அவள் அறையில் ஒரு மூலையில் இருந்த விக்கிரகத்தின் அருகில் சென்றாள். விக்கிரகத்திற்கு முன்னால் சிறிய விளக்கொன்று எரிந்துகொண்டிருந்தது.

"உன்னுடைய கேள்வியைத் தேவியின் ஒளிக்கு அர்ப்பணித்து விடு, குழந்தாய்."

அந்தப் பெண் காகிதத்தின் ஒரு மூலையைப் பற்ற வைத்தாள். மெதுவாய்க் காகிதம் நெருப்புப் பற்றிக் கொண்டது. அந்த வெளிச்சத்தில் சித்தேஸ்வரியைப் பார்த்தவள் திடுக்கிட்டாள்.

நெருப்பின் வெளிச்சத்தில் சித்தேஸ்வரியின் முகம் மேலும் சிவப்பாய்ப் பிரதிபலித்தது. வற்றி உலர்ந்திருந்த முகத்தில் ஆவேசம் தெளிவாய்த் தென்பட்டது. கண்கள் நெருப்புத் துண்டங்களாய் மின்னின.

"தன் மனத்திலிருந்த உணர்ச்சிகளும், தன் கேள்வியும் அவளுக்கு எப்படித் தெரிந்தது. அதுவும் இவ்வளவு சீக்கிரமாக? மனிதச் செயலுக்கும் மேற்பட்ட சக்தி ஏதாவது இருக்கலாமோ?"— அவளுக்கு வியர்க்கத் தொடங்கியது. நடுங்கும் உடலுடன் கதவை நோக்கிச் செல்லத் தொடங்கினாள்.

"அந்தப் பக்கம் இல்லை, குழந்தாய்."

மகுடி இசையைக் கேட்ட நாகம்போல் அவள் சட்டென நின்றாள். கதவுப் பிடியைப் பற்றியிருந்த கைகள் தானாக அதை விட்டன.

"உன் கேள்விக்குக் கன்னிகா பரமேஸ்வரி பதில் த்ருவாளாம். அந்தப் பக்கமாய்ப் போ."

தலையைத் திருப்பிப் பார்த்தாள். இடது பக்கம் இன்னொரு கதவு இருந்தது.

"போ குழந்தாய்"— இந்த முறை சித்தேஸ்வரியின் குரலும் முகமும் சாதாரணமாக இருந்தன.

வேறு வழியில்லாதவள்போல் அவள் அந்தப் பக்கம் நடந்தாள். கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தாள். தனக்குப் பின்னால் கதவு தானாகவே மூடிக்கொண்டு லாக் ஆனதை அவள் கவனிக்கவில்லை.

மங்கலான வெளிச்சத்தில் மேஜைமீது தென்பட்ட மண்டையோட்டைப் பார்த்து அவள் வீலென்று கத்தப் போனாள். குரல் எழும்பவில்லை. பயத்தைவிட வியப்பு அதிகமாய் இருந்தது. வாயைக் கையால் மூடிக்கொண்டு அப்படியே கற்சிலையாக நின்றுவிட்டாள்.

மண்டையோடு தானாகவே காற்றில் எழும்பியது. கரகரப்பான குரல் அதிலிருந்து வெளிப்பட்டது. "பிசாசு கணங்களின் அதிபதியான சிவனின் மீது ஆணை, தேவி உபாசகியையே சந்தேகப்படுகிறாயா?"

காற்றில் எழும்பிய மண்டையோடு கரகரப்பான குரலில் இப்படிச் சொன்னதும் அந்தப் பெண் மிரண்டு விட்டாள். ஹிஸ்டீரியா வந்தவள்போல் வீல்வீலென அலறத் தொடங்கினாள். அந்த அலறல்கள் வெளியில் கேட்கவில்லை.

"எதற்காக அலறுகிறாய்?" –மண்டையோடு கேட்டது.

கத்துவதைக்கூடத் திடீரென்று நிறுத்தி விட்டாள். அந்த அறையில் நிலவிய நிசப்தம் கூட பயங்கரமானதாக இருந்தது. சுபாவத்திலேயே தைரியசாலி என்றாலும் திடீரென்று அறையில் சூழ்ந்த இருட்டும், காற்றில் எழும்பிய மண்டையோடும் அவளைப் பயமுறுத்தி விட்டன. துணிச்சலை வரவழைத்துக் கொண்டு ஓரடி முன்னால் வைத்தாள்.

மண்டையோட்டில் கண்களிருக்க வேண்டிய இடத்தி லிருந்த குழிகள் அவளையே தீட்சண்யமாகப் பார்த்துக்

கொண்டிருப்பதுபோல் தோன்றியது. அவள் கூர்ந்து கவனித்தாள். குரல் மண்டையோட்டிலிருந்துதான் வந்தது. அதில் சந்தேகமேயில்லை. இருந்தாலும் சந்தேகம் தீராமல் சுற்றிலும் பார்த்தாள். அறை சாதாரணமாகத்தான் இருந்தது. எங்கேயும் மைக் ஒன்றும் இல்லை.

மேஜைக்கும் மண்டையோட்டிற்கும் இடையில் ஏதேனும் இணைப்பு இருக்கலாமோ என்று சந்தேகப் பட்டாள். மேலும் இரண்டடி நடந்து மேஜைக்கு அருகில் சென்றாள். மேஜைமீது மண்டையோடு சலனமற்று இருந்தது. கையை நீட்டி அதை எடுக்கப் போனவள் ஒரு நிமிடம் நின்றாள். மின்சார இணைப்பு ஏதாவது இருந்தால் ஷாக் அடித்து தான் செத்துப் போவது நிச்சயம். மண்டை யோடு காற்றில் எழும்பியது எப்படி? மங்கலான வெளிச் சத்தில் வயர்கள் கண்ணில் படவில்லையோ? வயர்கள் இருக்கின்றனவா இல்லையா என்பது கையில் எடுத்துப் பார்த்தால் தெரிந்துவிடும்.

கொஞ்சம் தயங்கிக் கொண்டே மண்டையோட்டின் மேல் கையை வைத்தாள். ஷாக் அடிக்கவில்லை. சாதாரணமாகத்தான் இருந்தது. அதன் மேற்பகுதியைப் பிடித்துத் தூக்கினாள். எளிதாக தூக்க முடிந்தது.

மண்டையோட்டிற்கும் மேஜைக்கும் இடையில் இணைப்பு ஏதும் இல்லை. அவளுக்கு வியப்பு ஏற்பட்டது. கணிப்பு தவறிப்போனதில் ஏமாற்றம் கூட இருந்தது.

மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தி ஏதாவது இருக்க லாமோ என்ற நினைப்பு வந்ததும் பயத்தைக் கட்டுப் படுத்திக் கொண்ட பிறகு மண்டையோட்டைக் கூர்ந்து பார்த்தாள். அதில் எந்த மர்மமும் இல்லை என்று உறுதிப் படுத்திக் கொண்ட பிறகு மேஜைமீது வைக்கப் போன

சமயத்தில் சின்ன சத்தம் கேட்டது– யாரோ மெலிதாகச் சிரிக்கும் சத்தம்... மண்டையோட்டிலிருந்து வந்தது.

வீலென்று கத்தப் போனவள், சிரமப்பட்டுக் குரலை எழுப்பாமல் அடக்கிக் கொண்டாள். காற்றில் சல சலக்கும் சருகைப்போல் அவள் மேனி நடுங்கிக் கொண்டிருந்த. கையிலிருந்த மண்டையோடு கீழே விழுந்து சத்தத்தை ஏற்படுத்தியது. சிரிப்புச் சத்தம் மண்டை யோட்டிலிருந்து தான் வந்தது. கண்களை அகல விரித்து அதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

மண்டையோட்டிலிருந்து ஒலித்த குரல் அறை முழுவதும் அலையலையாகப் பரவிக் கொண்டிருந்தது.

"மனிதர்களுக்கு அப்பாற்பட்ட சக்திகள் இருக் கின்றன என நம்பு. சகல சராசர சிருஷ்டிக்கும் மூலகர்த்தா நான் தான்."

எப்பேர்ப்பட்ட தைரியசாலிகளையும் கோழை களாக்கும் வகையில் இருந்தது அந்தக் குரல்.

அவளுக்கு அழ வேண்டும் போலிருந்தது. இன்னும் இருபது வயது நிரம்பவில்லை. இத்தனை தைரியமாகச் செயல்பட்டதே பெரிய விஷயம்.

முகத்தை மூடிக்கொண்டு அழத் தொடங்கினாள். அறையில் கொஞ்சம் கொஞ்சமாய்க் குளிர் பரவத் தொடங்கியதை அவள் கவனிக்கவில்லை.

சற்று நேரத்தில் அவளுக்கு நினைவு தப்பியது.

* * *

"வாருங்கள்" என்ற குரல் கேட்டு அவள் கண் விழித்தாள். வியப்புடன் சுற்றிலும் பார்த்தாள். வரிசை

யாக நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. சித்தேஸ்வரி யிடம் கேள்விகள் கேட்க வந்திருந்த பக்தர்கள் அவற்றில் அமர்ந்திருந்தார்கள். அவளுக்கு முன்னால் உட்கார்ந்து இருந்தவர்கள் உள்ளேயிருந்து வந்து விட்டிருந்தார்கள். அவர்கள் முகத்தில் தேவியிடம் பக்தியும் கேள்விகளுக்குப் பதில் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியும் தென்பட்டன.

"உங்கள் முறை வந்துவிட்டது, வாருங்கள்."

அவள் தலையை நிமிர்த்தி எதிரில் நின்ற ஆளைப் பார்த்தாள். சக்ரவர்த்தி நின்றிருந்தான். அவனேதான் சற்றுமுன் தன்னை உள்ளே அழைத்துப் போனவன்.

அவளுக்குக் குழப்பமாக இருந்தது. தான் மறுபடியும் இங்கே வந்தது எப்படி? உள்ளே போனது. மண்டை யோட்டோடு பேசியது எல்லாமே பிரமையா?

அவள் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். மணி எட்டு இருபது. தான் வந்து அரைமணிக்கு மேல் ஆகி விட்டது. நாற்காலியிலே உட்கார்ந்தபடி உறங்கி விட்டோமோ? அந்தத் தூக்கத்தில் கனவு கண்டு இருப் போமோ?

"சித்தேஸ்வரி உங்களுக்காகக் காத்திருக்கிறார். அநாவசியமான தாமதத்தை விரும்ப மாட்டார்"— சக்ர வர்த்தி சொல்லிக் கொண்டிருந்தான்.

அதே குரல்... அதே உருவம்... தன் கனவில் இதே உருவம் எப்படி வர முடியும்? தன்னிடமும் ஏதாவது சக்திகள் இருக்கின்றனவா?

சக்ரவர்த்தி பொறுமையின்றி அசைந்ததைக் கவனித்து விட்டு இவ்வுலகிற்கு மீண்டும் வந்தாள். சுற்றிலும் இருப்பவர்கள் இந்தப் பக்கமே பார்த்துக் கொண்டு

இருப்பதை உணர்ந்து வெட்கியவளாய், சட்டென எழுந்து அவன்பின் தொடர்ந்து நடக்கலானாள்.

அதே வராண்டா... அதே மங்கலான வெளிச்சம்.

இருவருமே அறைக்குள் நுழைந்தார்கள். கனவில் பார்த்தது போலவே ரிஜிஸ்டர் இருந்தது. "இதில் உங்களுடைய பெயரை எழுதுங்கள்."

அவள் கையில் பேனாவை எடுத்துக்கொண்டு தலையை உயர்த்தி, "எனக்குக் கொஞ்சம் தண்ணீர் கிடைக்குமா... ப்ளீஸ்" என்றாள்.

அவன் நகரவில்லை. ஒரு நிமிடம் கண்களுக்குள் ஆழ்ந்து நோக்கினான். அவளுக்கு முதுகுத் தண்டின் அடியில் சிலிர்த்தது.

"வேண்டாம்" என்று சொல்லப் போனாள்.

"ஒரு நிமிடம். கொண்டுவரச் சொல்கிறேன்" என்று அவன் வெளியில் போனான். அவள் சட்டென்று ரிஜிஸ்தரைப் பார்த்தாள். பக்தர்களின் பெயர்கள், அவர்கள் தந்த காணிக்கையின் விபரம் எழுதப்பட்டிருந்தன. அவள் அவசர அவசரமாகத் தேடினாள். அவள் தன் கையால் தன்னுடைய பெயரையும் ரூ.216/– என்று எழுதியிருந்ததும் இன்றுதான்.

அவள் நெற்றியில் வேர்வை அரும்பியது. கை நடுங்கிக் கொண்டு இருந்தது. சக்ரவர்த்தி வந்து விடுவானோ என்று ஒரு பக்கம்... சட்டென தாள்களைத் திருப்பினாள்.

எங்கேயும் அவள் பெயர் இருக்கவில்லை.

அதற்குள் கதவருகில் அரவம் கேட்டது. சக்ரவர்த்தி தண்ணீருடன் வந்து கொண்டிருந்தான். அவள் பேனாவை

எடுத்துக் கொண்டு பெயரையும் நேரத்தையும் குறிப் பிட்டாள்.

"இங்கே எத்தனையோ புண்ணிய காரியங்கள் நடந்து கொண்டு இருக்கின்றன. பக்தர்கள் தாராளமாகக் காணிக் கைகள் தருவது வழக்கம்"— பின்னாலிருந்து சக்ரவர்த்தி யின் குரல் மந்திரஸ்தாயியில் ஒலித்தது.

அவள் பின்னால் திரும்பிப் பார்க்காமலேயே தன் பெயருக்கு எதிரே ரூ. 216/— என்று எழுதினாள். ஓரக் கண்ணால் அவன் கண்ணில் தோன்றப் போகும் மாறு தலைக் கவனித்தாள்.

அவன் முகம் எப்போதும் போல் இருந்தது. "வாருங்கள் தேவியின் பிரசாதத்தை எடுத்துக் கொள்ளுங் கள்." என்றான்.

அவள் நின்றாள். "நான் தேவியிடம் கேள்வி கேட்க வேண்டும் என்று வந்தேன்" என்றாள்.

"அப்படியானால் இன்னும் கொஞ்சம் தாராளமாக நன்கொடையைத் தரவேண்டி இருக்கும். தேவியின் நேரம் மதிப்பு வாய்ந்தது."

அப்போது நினைவு வந்தது தான் கையில் மோதிரம் போட்டிருந்த விஷயம். சக்ரவர்த்தி கவனித்து வருகிறான் என்றுகூடப் பொருட்படுத்தாமல் இடது கையை உயர்த் திப் பார்த்தாள். மோதிர விரலில் பளபளத்துக் கொண்டு இருந்தது. தந்தை பத்து வருடங்களுக்கு முன்னால் அவளுக்குப் பரிசாகத் தந்த அந்த மோதிரம்.

* * *

"இதுதான் உண்மையில் நடந்தது. நீங்கள் இருவரும் இதை நம்ப வேண்டும்" என்றாள் துளசி. அவர்களை நம்ப

வைக்க வேண்டும் என்ற தவிப்பு அவள் குரலில் தெளிவாகத் தெரிந்தது.

"ரிலாக்ஸ் துளசி. அவசரப்படாதே" என்றார் பண்டிட்.

அவள் தலையைக் குறுக்காக அசைத்தாள். "நீங்கள் ஏன் நம்ப மாட்டேன் என்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"விஞ்ஞானம் ஒப்புக்கொள்ளாது. அதனால்தான்" என்றார் ஜெயதேவ், நாற்காலியில் சாய்ந்துகொண்டே.

"தன் எதிரில் இருக்கும் இருவரும் இரு வெவ்வேறு துறைகளில் திறமை வாய்ந்த ப்ரொபசர்கள். தானோ இன்னும் பட்டப் படிப்புகூட முடிக்கவில்லை. இயலாமையுடன் அவர்கள் இருவரையும் பார்த்தான். அவளைச் சமாதானப்படுத்துவதுபோல் பண்டிட் சொன்னார்.

"பேச்சுக் குரல் மண்டையோட்டிலிருந்து வந்தது என்று சொன்னது நீதான். ஸ்பீக்கரோ, இணைப்புகளோ இல்லையென்றும்சொல்கிறாய். வேண்டுமானால் அதனுள் இரும்புத் துண்டைப் பதித்து, காந்தத்தின் மூலமாகக் காற்றில் நாட்டியமாட வைத்திருக்கலாம். பேச்சுக் குரல் வருவது எப்படிச் சாத்தியமாகும்?"

"ஆனால்..." ஏதோ சொல்லப் போனாள் துளசி.

ஜெயதேவ் இடைமறிப்பதுபோல் சொன்னார். "அதைவிட முக்கியமான விஷயம் கேள்வியைப் பார்க்காமலேயே பதில் சொல்வது."

"அதுவும் பாயிண்ட்தான்" –பண்டிட் சொன்னார். "அறையில் கண்ணாடியோ, பிரதிபலிக்கும் சாதனமோ இல்லை என்று சொல்கிறாய். ஒரு மூலையில் உட்கார்ந்து நீ எழுதியது, அவளுக்கு எப்படித் தெரிந்தது?"

"இதெல்லாம் உன் பிரமை" –சொல்ல வேண்டிய தைச் சொல்லி முடித்துவிட்டதுபோல் சிகாரைப் பற்ற வைத்துக் கொண்டார் பண்டிட்.

"ஆனால் எல்லோருடைய கேள்விகளுக்கும் அந்தத் தேவி அப்படித்தான் பதிலளிக்கிறாளாம்."

"ஹலுசினேஷன்" என்றார் ஜெயதேவ்.

"அப்படி என்றால்...?"

"உன் மனதில் அவளைப்பற்றி ஏதோ பயம் இருந்திருக்க வேண்டும். அதுதான் நீ உள்ளே போனதும், மண்டையோட்டைப் பார்த்ததும் உன் சப்கான்ஷியஸ் மூளையில் கற்பனையாகப் படைக்கப்பட்ட நிகழ்ச்சிகள். உண்மையில் நீ முதல் தடவை உள்ளே போகவே இல்லை. ரிஜிஸ்தரில் உன் பெயர் இல்லாமல் போனதற்கும் விரலில் மோதிரம் அப்படியே இருந்ததற்கும் காரணம் அதுதான்" என்றார் ஜெயதேவ்.

வெகுநேரம் அவர்கள் யோசனையில் ஆழ்ந்து விட்டனர். சிறிது நேரம் கழித்து அவள் எழுந்து கொண்டாள்.

"நான் போய்வருகிறேன்."

"நான் வேண்டுமானால் ட்ராப் செய்யட்டுமா?"

"வேண்டாம் அங்கிள். தாங்க்ஸ்."

"அவள் ஏதோ யோசித்துக் கொண்டே காரை ஓட்டிக் கொண்டிருந்தாள். தான்தான் ஏதோ பிரமையில் இருந் தோம் என்றாலும், மற்றவர்கள் கேள்விகளுக்குப் பதிலை எப்படிப் பெற்றுக்கொள்கிறார்கள். உண்மையிலேயே மனிதனுக்கு மீறிய சக்தி ஏதாவது உள்ளதா?

வீட்டிற்குப் போன பிறகும் அதே நினைவில் இருந்தாள். தாய் கேட்ட கேள்விகளுக்கும் சரியாகப் பதில் சொல்லவில்லை. மகளின் மனம் வேறெங்கோ இருப்பதைச் சாரதாவும் கவனிக்கவில்லை.

இரவு வெகுநேரமாகிவிட்டது. துளசி தன் அறையில் படுத்துக் கொண்டே யோசனையில் ஆழ்ந்திருந்தாள். காலையில் நடந்த நிகழ்ச்சி கண்களுக்கு முன்னே மீண்டும் தோன்றியது. மண்டையோடு காற்றில் எழும்பியது. தன் கேள்விக்குப் பதில் தந்தது.

இதெல்லாம் பிரமையாக எப்படி இருக்க முடியும். நடந்ததையெல்லாம் மறுபடியும் நினைவு கூர்ந்தாள்.

ரூ. 216/– என்று எழுதியது, உண்டியலில் மோதிரத்தைப் போட்டது, நோட்டிலிருந்து காகிதத்தை கிழித்தது...

திடீரென்று அவளுடைய யோசனை அந்த இடத்தில் நின்றுவிட்டது. நோட்டிலிருந்து கிழிக்கப்பட்ட காகிதம்... ஆமாம். அதை வைத்து நிரூபிக்க முடியும்.

அவள் ஒரே எட்டில் புத்தகங்கள் வைத்திருந்த மேஜையருகில் சென்றாள். புதிதான நாற்பது பக்க நோட்டுப் புத்தகத்தை எடுத்து பக்கங்களை எண்ணினாள். சரியாக நாற்பது பக்கங்கள் இருந்தன. சித்தேஸ்வரி கோயிலுக்குக் கொண்டுபோன கைப்பையிலிருந்து நோட்டை இழுத்து வெளியில் எடுத்தாள். பதட்டத்துடன் விரல் நடுங்க பக்கங்களை எண்ணினாள்... முப்பத்தாறு.

* * *

அன்று இரவு டைரியில் எழுதிக் கொண்டாள்.

இந்த விஷயத்தை அங்கிளிடமோ, பண்டிட்டிடமோ சொன்னால் அவர்கள் நம்பப் போவதில்லை. நான்தான்

இதைக் கண்டுபிடிக்க வேண்டும்.. இரண்டு மாதங்கள் கழித்து தேவி பூஜை நடக்கப்போகிறது. அந்தச் சந்தடியில் உள்ளே புகுந்து ரகசியத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். எனக்கு ஏதாவது நேர்ந்தால் இந்த டைரிதான் அவர்களை அரெஸ்ட் செய்ய ஆதாரமாக இருக்க வேண்டும், ஒரு மோசக்கார கும்பலிலிருந்து மக்களைக் காப்பாற்றிய திருப்தியாவது என் ஆன்மாவிற்குக் கிடைக்கும்.

டைரி எழுதி முடித்துவிட்டு நிம்மதியாக உறங்கிப் போனாள்.

7 இரவு மணி ஒன்று.

கம்பார்ட்மெண்டில் எல்லோரும் உறங்கிக் கொண்டு இருந்தார்கள். இரயில் மிதமான வேகத்தில் போய்க் கொண்டிருந்தது. திறந்திருந்த ஜன்னலிற்கு வெளியே இருள் அடர்த்தியாகப் பரவி இருந்தது.

அவன் குச்சிகள் வைத்திருந்த கட்டை எடுத்தான். எண்ணினான்.

பதிமூன்று இருந்தன. அதாவது இன்னும் பதிமூன்று நாட்களில் காஷ்மோரா விழித்துக்கொள்ளப் போகிறது. அதற்கு ஏழு நாள்கள் கழித்து துளசி என்ற பெண்சாகப் போகிறாள்.

இரயில் இருட்டில் நின்றது. ஸ்டேஷன் ஏதும் வரவில்லை. கரும்பு வெட்டப்பட்ட வயல்கள். சுவர்க் கோழிகளின் சத்தம்.

ஜன்னல் கம்பியில் முகத்தைப் புதைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான் தார்க்கா.

அந்த வயலைப் பார்க்கும்போது தன் பாலியம் நினைவுக்கு வந்தது. பிஸ்தா கிராமம். விஷாச்சி தன்மீது வைத்திருந்த நம்பிக்கை, ஐந்தாண்டுகள் சிரமப்பட்டுக் கற்றுக்கொண்ட வித்தைகள். வாழ்க்கையே ஒரு தவமாக, உழைத்துக்கொண்டு, தவித்துக்கொண்டு.

தான் சாதிக்கப்போவது என்ன?

ரொம்பச் சின்ன சபதம். –மூவரைக் கொல்வது.

அதைத் தன்னால் செய்ய முடியவில்லை. குருவான விஷாச்சியின் விருப்பத்தைத் தீர்த்து வைக்க முடிய வில்லை.

அதுவரையில் மேகத்தில் மறைந்திருந்த சந்திரன் வெளியில் வந்து பார்த்தான். தண்டவாளத்தின் பக்கத்தில் குட்டையில் நீர் பளபளத்துக் கொண்டிருந்தது.

ஜன்னல் கம்பியில் தலையைச் சாய்த்துக்கொண்டு "மன்னித்து விடு, விஷாச்சி, நான் தோற்றுக் கொண்டிருக் கிறேன்" என்று நினைத்துக் கொண்டான். கண்களில் இருந்து நீர் விழுந்து கன்னத்தை நனைத்தது.

அவனை யாரும் கவனிக்கவில்லை. எல்லோரும் உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

இரயில் கிளம்புவதற்கு அறிகுறியாக ஊதல் சத்தம் கேட்டது. அவன் கண்களைக் கசக்கிக்கொண்டு நீர் மீதி லிருந்து கரும்பு வயல் பக்கம் திரும்பினான்.

நிலவு வெளிச்சத்தில் காய்ந்துபோன கரும்புப் பயிர் வெள்ளை நிறத்தில் தெரிந்தது. இரயில் கிளம்பியது. சற்று தூரம் சென்ற பிறகு ஏதோ பற்றி எரியும் காட்சி தொலை வில் தெரியவும் மேலும் குனிந்து பார்த்தான்.

கரும்பு வயல் பற்றி எரிந்துகொண்டு இருந்தது. இரயி லின் வேகம் அதிகரிக்கத் தொடங்கியது. அந்தக் காட்சியும் தேய்ந்து மறைந்துவிட்டது. காய்ந்த கரும்புத் தோட்டத்தை எரிப்பார்கள் என்று அவனுக்குத் தெரியும். அவனுக்குத் தெரியாததெல்லாம் ஒன்றுதான், அந்த நெருப்பு தான் கண்களைத் தேய்த்துக் கொண்டதால் ஏற்பட்டதென்று.

இரு நிமிடங்கள் வரை அந்த நெருப்பையே பார்த்துக் கொண்டிருந்தது நல்லதாகிவிட்டது. அவன் மட்டும் தலையைத் திருப்பி கம்பார்ட்மெண்டிற்குள் பார்த்து இருந்தானென்றால் அதில் இருப்பவர்கள் எல்லோரும் எரிந்து சாம்பலாகியிருப்பார்கள், அரத்யுங்க வித்தையின் பிரபாவத்தால்.

* * *

அந்த மகாநகரத்தைப் பார்த்தபோது ஒரு நிமிடம் அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அவன் இரயிலை விட்டு இறங்கும்போது மணி ஒன்பதரை ஆகியிருந்தது. அலுவலகத்திற்கு விரையும் மக்கள். போக்குவரத்து நெரிசல், எல்லா இடங்களிலும் சந்தடியாக இருந்தது.

புது ஊரில் இறங்கியதும் அவன் செய்யும் முதல் வலை, பெண்கள் கல்லூரிகளைப்பற்றி விசாரிப்பதுதான். இந்த நகரத்தில் அது அவ்வளவு சுலபமாகத் தோன்ற வில்லை. சிரமமாக இருந்தது.

அது ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கும் பல்கலைக்கழகக் கல்லூரி என்பதால் காவலுக்கு எந்த ஆளும் இருக்கவில்லை. தார்க்கா நேராக உள்ளே போய் விட்டான். அலுவலக அறைக்குள் நுழைந்தான். குமாஸ் தாக்கள் மூவர் வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள். நான் கைந்து பெண்கள் மதிப்பெண்கள் பட்டியலை வாங்கு வதற்காகக் கும்பலாக நின்றிருந்தார்கள்.

தார்க்கா வாசலருகில் சுற்றுமுற்றும் பார்த்தான். தொடக்கத்தில் பயமாகவும் தயக்கமாகவும் இருந்தது. போகப் போக எப்படிச் சமாளிக்க வேண்டும் என்று புரிந்துவிட்டது.

"ஒரு நிமிடம் சற்று இப்படி வர முடியுமா?"– ப்யூன் போல சாதாரண உடையில் இருந்த அந்த நபரை அருகில் வருமாறு அழைத்தான். அந்த நபர் வந்ததும், "எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா?" –பத்து ரூபாய் நோட்டை வெளியில் தெரியும் விதமாக கையில் பிடித்துக் கொண்டே கேட்டான்.

அவன் அதைப் பொருட்படுத்தாமல், "என்ன உதவி?" என்று கேட்டான்.

"எனக்கு அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்டர் வேண்டும். ஒரு பெண்ணை அவளுக்குத் தெரியாமல் பார்க்க வேண்டும்"– ரகசியமாகச் சொன்னான்.

"எதற்காகப் பார்க்க வேண்டும்?" –அவனும் அதே அளவு ரகசியமாகக் கேட்டான்.

இந்த அளவுகூட உலக ஞானம் இல்லாதவனாக இருக்கிறானே என்று எரிச்சல் ஏற்பட்டாலும் அதை மறைத்துக்கொண்டு, "பெண் பார்க்கப் போவதற்கு முன் ஒரு தடவை இங்கேயே பார்த்துவிடலாம் என்றுதான்" என்றான்.

பெண் பார்ப்பது என்ற வார்த்தை காதில் விழுந்ததும் அங்கே இருந்த பெண்கள் அவனை ஓரக் கண்ணால் பார்த்தார்கள்.

"பெண் பார்ப்பதற்கு முன்னால் பார்க்க வேண்டுமா?" என்றவர் தலையைச் சொரிந்து கொண்டே, "ஐடியா

நன்றாகத்தான் இருக்கிறது, தம்பி... ஆனால் நான் இங்கே ப்யூன் இல்லை. லெக்சரர். என்பெயர் ப்ரொபசர் பண்டிட்" என்றார்.

தார்க்கா அடிவாங்கியவன்போல் அவரைப் பார்த்து விட்டு "சாரி" என்றான்.

அதற்குள் அந்தப் பெண்கள்வந்து அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். இரண்டு பெண்கள் ஜீன்ஸ் அணிந்திருந் தார்கள், இருவர் பஞ்சாபி உடை, ஒரே ஒரு பெண் மட்டும் ரோஜா நிறத்தில் புடவை அணிந்திருந்தாள். தார்க்கா அவர்களைக் கவனிக்கவில்லை.

"யார் இந்த ஹீரோ?" ஒரு பெண் கேட்டாள்.

"ஷ்... சும்மா இரு" புடவை அணிந்திருந்தவள் அவளை அடக்கிவிட்டு, "உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டாள்.

தார்க்காவுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரிய வில்லை. இதற்கு முன் பெண்களுடன் பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டதுமில்லை. மேலும் இந்தப் பெண்கள் அவனை அழ வைப்பதற்காகக் கங்கணம் கட்டிக் கொண்டு வந்தவர்களைப் போலத் தென்பட்டார்கள்.

அவன் தடுமாறியவனாய் "ஒன்றும் இல்லை" என்று அங்கிருந்து நகரப் போனான்.

பஞ்சாபி உடையணிந்த ஒரு பெண், "அந்தப் பெண்ணின் பெயரைச் சொல்லுங்கள். எங்கே இருந் தாலும் தேடிக் கண்டுபிடித்துத் தருகிறோம்" என்றாள். ப்ரொபசரைப் ப்யூன் என நினைத்து அவன் சொன்னதை அவர்கள் கேட்டிருக்க வேண்டும்.

தார்க்காவிற்கு முகம் சிவந்துவிட்டது. "லக்ஷ்மி..." பற்களால் உதட்டை அழுத்திக் கொண்டே சொன்னான்.

"அட... அது நான்தான்" என்றாள் அந்தப் பெண் சட்டென்று.

"என் பெயரும் லக்ஷ்மிதான்" ஜீன்ஸ் அணிந்திருந்த பெண் சொன்னாள். எல்லோரும் சிரமப்பட்டு சிரிப்பை அடக்கிக் கொண்டிருந்தார்கள்.

அவனுடைய சங்கடத்தை அறிந்தவள் போல் புடவை அணிந்திருந்தவள், "போதும் நிறுத்திக் கொள்ளுங்கள்" என்று சினேகிதிகளைக் கடிந்து கொண்டு தார்க்கா பக்கம் திரும்பினாள். "அடுத்த மாதம் பத்தாம் தேதி வரை விடுமுறை" என்றாள்.

அவள் மேலும் ஏதோ சொன்னது தார்க்காவின் காது களில் விழவில்லை. கால்களுக்கு அடியில் நிலம் நழுவிய தைப் போல் உணர்ந்தான். "உங்கள் கல்லூரிக்கு மட்டும் தானா?" என்ற பலவீனமான குரலில் கேட்டான்.

"இல்லை. யூனிவர்சிடி முழுவதும்."

இளம் துளிரைப் போல் அவன் மேனி நடுங்கியது. முடிந்துவிட்டது. எங்கோ ஒரு மூலையில் ஒட்டிக் கொண்டிருந்த நம்பிக்கையும் இன்று போய்விட்டது. இனி எங்கேயென்று தேடுவான்? அதுவும் ஒரு வாரத்திற்குள். மௌனமாக அந்த இடத்தைவிட்டு நகர்ந்துவிட்டான்.

அதுவரையில் இல்லாத மாற்றம் ஏதோ ஒன்று அவனிடம் தென்பட்டதை உணர்ந்த அந்தப் பெண்களும் மௌனமாக வெளியேறினார்கள்.

சைக்கிள் ஸ்டாண்ட் அருகில் நின்று கொண்டிருந்த ப்ரொபசரைப் பார்த்துவிட்டு, "இன்றைக்கும் நீங்கள் கார்

கொண்டு வரவில்லையா சார்?" ரோஜா நிறப் புடவைக் காரி கேட்டாள்.

"வழக்கம்போல் மறந்துவிட்டேன்"– தலையைச் சொறிந்தார் பண்டிட்.

"வாருங்கள். என்னுடைய காரில் ட்ராப் செய்கிறேன். எங்கள் வீடும் அந்தப் பக்கம் தானே."

"சரி"

கார் துளசியின் வீட்டை நோக்கிப் புறப்பட்டது.

* * *

சட்டென்று தார்க்காவிற்கு ஒரு எண்ணம் வந்தது. உடனே எழுந்து கொண்டான். கையில் போதுமான பணம் இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டு ஓட்டமும் நடையு மாகப் பத்திரிகை அலுவலகத்திற்கு விரைந்தான்.

அன்று மாலைப் பதிப்பில் எல்லா நாளேடுகளிலும் ஒரு விளம்பரம் வெளியாகியது.

"துளசி"

உன்னைச் சந்திக்க வேண்டுமென நினைக்கிறேன்.
கோட்டைக்குப் பக்கத்திலிருக்கும் மைல் கல் அருகில்
சனிக் கிழமை மாலை ஐந்து மணிக்கு வரவும்.

காஷ்மோரா.

* * *

தன் வாழ்க்கையில் அதுநாள் வரை அநுபவித்திராத உத்வேகத்தைத் தார்க்கா அன்று அநுபவித்துக் கொண்டு இருந்தான். நேரம் ஆக ஆக அவனுடைய பதட்டம் அதி

கரித்துக் கொண்டிருந்தது. அதற்குக் காரணம் இல்லாம லில்லை. ள

அன்று மதியம் அவன் பத்திரிகை அலுவலகத்திற்குச் சென்றபோது, விளம்பரத்துறையைச் சேர்ந்த மேனேஜர் அவனை வரவேற்று, "உங்களுக்காக ஒரு செய்தி இருக்கிறது" என்றார்.

"என்ன?"

"உங்களுக்கு ஒரு ஃபோன் வந்தது."

தார்க்காவின் கைப்பிடிகள் இறுகின. தன்னைச் சமாளித்துக் கொண்டு "யாரு?" என்றான்.

"ஒரு பெண்."

இரத்த நாளங்கள் தெறித்துவிடுமோ என்கிற அள விற்கு அவனுக்கு உத்வேகம். எதிராளியின் மனநிலையை உணர்ந்து கொள்ளாமல் அந்த மேனேஜர் சொல்லிக் கொண்டிருந்தார். "சாதாரணமாக விளம்பரம் கொடுத்தவர்களுக்கு வரும் ஃபோன்கால்களை நாங்கள் பொருட்படுத்த மாட்டோம். ஆனால் உங்கள் விளம்பரம் விநோதமாக இருந்ததால் எனக்கு இதில் இன்டெரெஸ்ட் ஏற்பட்டது. காஷ்மோரா என்பது யார்?"

தார்க்கா இதழ்களை அழுத்திக் கொண்டு, "அந்தப் பெண் என்ன சொன்னாள்? என்றான்.

"உங்களைப்பற்றிக் கேட்டாள். எங்களுக்குத் தெரியாது என்று சொல்லிவிட்டோம். அவ்வளவுதான்."

தார்க்கா எழுந்து கொண்டான். "மாலையில் வருவ தாகச் சொன்னாளா?"

"வருவாளாம். காஷ்மோரா என்றால் என்ன?"

தார்க்கா பதில் சொல்லவில்லை. "வருகிறேன்" என்று விடைபெற்றுக் கொண்டு அந்த இடத்தை விட்டுக் கிளம்பினான். பரவாயில்லை. அம்பு சரியான இடத்தில் தான் பாய்ந்திருக்கிறது.

* * *

மாலை ஐந்து மணி நெருங்கிக் கொண்டிருந்தது. மேகங்கள் சூழ்ந்திருந்ததால் அதற்குள் வெளிச்சம் மங்கி விட்டது. சிதிலமாக இருந்த கோட்டையைத் தழுவிய வாறே குளிர்க்காற்று வீசிக் கொண்டிருந்தது.

மைல் கல்லுக்குச் சற்றுத் தொலைவில் மயானம் இருந்தது. தார்க்கா அங்கு உட்கார்ந்து கொண்டிருந்தான். அதிகமாகப் போக்குவரத்து இல்லை. வழக்கத்திற்கு முன் பாகவே இருட்டிவிட்டதால் மயானத்தின் சூழ்நிலை மாறிக் கொண்டிருந்தது. ஆந்தை ஒருமுறை அலறிவிட்டு ஓய்ந்தது. சுவர்க்கோழிகள் சத்தம் நடுநடுவே கேட்டுக் கொண்டிருந்தது.

தார்க்கா சாலைப் பக்கமே பார்த்து கொண்டு இருந்தான்.

மணி ஐந்து.

தொலைவில் கார் ஒன்று வந்து நின்றது. தார்க்கா மூச்சை இறுக்கிப் பிடித்துக் கொண்டான். கார் கதவு திறந்து கொண்டது. தார்க்கா எழுந்து நின்று கொண் டான்.

காரிலிருந்து ஒரு ஆள் இறங்கினான். சுமார் ஐந்தரை அடி உயரம் இருக்கலாம். காரிலிருந்து இறங்கியதும் அவன் தார்க்காவிடம் வரவில்லை. அங்கேயே நின்று நேராகப் பார்த்தான்.

இருவருக்கும் இடையில் நூறு அடிகளைவிட அதிகத் தூரம் இருக்காது.

அவன் மெதுவாய்த் தார்க்காவை நோக்கி நடக்கத் தொடங்கினான். தார்க்கா இருந்த இடத்தைவிட்டு அசைய வில்லை.

இரண்டு நிமிடங்களில் அந்த ஆள் தார்க்காவின் அருகில் வந்தான். முழங்கைவரை சட்டைக்கை மடிக்கப் பட்டு இருந்தது. நாற்பது வயதிருக்கலாம். கண்கள் தீர்க்க மாய் இருந்தன. முகம் கடினமாய் இருந்தது.

தார்க்கா ஏதோ கேட்கப் போனான். அதற்குள் அவன் இடைமறிப்பதுபோல் கணீரென்ற குரலில் "யார் நீ?" என்று கேட்டான்.

மயானத்தில் அந்தக் குரல் எதிரொலித்தது. தார்க்கா அவன் பக்கம் பார்த்தான். தாடையை இறக்கி உரத்தக் குரலில் மறுபடியும் கேட்டான். "யார் நீ?"

"நீங்கள் யார்" என்று கேட்க நினைத்த தார்க்கா, எதிரில் தன்னை நோக்கி வந்துகொண்டிருந்த ஆபத்தை ஊகித்து சட்டென்று ஓரடி பின்வாங்கினான். அதற்குள் நேரம் கடந்துவிட்டது. எதிராளியின் கை பலமாய் அவன் முகவாயில் பட்டுவிட்டது. ஆறடி உயரம் கொண்ட தார்க்காகூட சற்றுத் தள்ளி விழுமளவிற்கு அந்த அடி பலமாக இருந்தது.

அவன் எழுந்துகொள்ள முயற்சித்தபோது ஷூ அணிந்த கால் வந்து விலாவில் உதைத்தது. இரண்டு நிமிடங் கள் வரை எதிராளி அவனை உதைத்துக் கொண்டிருந் தான். மூச்சு விடுவதற்குக்கூட அவகாசம் தரவில்லை. தார்க்கா தன்னைவிடப் பலசாலி என்று எதிராளிக்கு நன்றாகவே தெரிந்ததால், கொஞ்சம் தவறிவிட்டால்

அவன் தன்னை மிஞ்சிவிடுவானெப்பதால், கொஞ்சம் கூட வாய்ப்புத் தராமல் அடித்துக் கொண்டிருந்தான்.

தார்க்கா சமாதியொன்றின் மீது விழுந்தான். நெற்றியில் கல் ஒன்று குத்தி இரத்தம் வந்தது. மறுபடியும் அடிபட்டதில் முள்புதரில் விழுந்தான். உடல் முழுவதும் முட்கள் குத்தி உயிரே போய்விடும் போல் இருந்தது.

"துளசிக்கும் காஷ்மோராவிற்கும் என்ன சம்பந்தம்?" தார்க்காவின் தோளைப் பிடித்து எழுப்பியவாறே அந்த ஆள் கேட்டான்.

தார்க்கா பேசவில்லை.

"காஷ்மோராவிற்கும் உனக்கும் சம்பந்தம் என்ன?"

மௌனம்.

"உண்மையில் நீ யார்?"

தார்க்கா பதிலேதும் சொல்லாமல் மௌனம் சாதித்தான். தான் செய்தது எவ்வளவு பெரிய தவறு என்று இப்போதுதான் அவனுக்குப் புரிந்தது. பத்திரிகை அலுவலகத்திற்குப் பதில் போடச் சொல்லி விளம்பரம் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் துளசி ஏழு நாள்களுக்குள் இறந்து விடுவாள் என்றும், உடனே சந்தித்தால் தான் வேலை முடியும் என்றும் அவசரப்பட்டு விட்டான். ஏதாவது பொது இடத்திற்கு வரச் சொல்லாமல் இப்படி மயானத்திற்கு வரச் சொல்லி விளம்பரம் கொடுத்தால் யாருக்கும் சந்தேகம் வரத்தான் செய்யும்.

அத்தனை வேதனையிலும் அவனுக்குச் சிரிப்பு வந்தது. கொஞ்சம் கொஞ்சமாய்ச் சோர்வு அவனை ஆட்கொண்டது. மூக்கிலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. நிற்க முடியாமல் கால்கள் தள்ளாடின.

"நீங்கள் யார்?" –எப்படியோ குரலை வரவழைத்துக் கொண்டு கேட்டான் தார்க்கா.

அதுவரையில் கடினமாக இருந்த அவன் முகத்தில் கொஞ்சமாய்ப் புன்முறுவல் தென்பட்டது.

"நான் யாரென்று உனக்குத் தெரிய வேண்டுமா? என் பெயர் அப்ரகதப்ர. பேய் பிசாசுகளை ஓட்டுபவனை ஜெர்மன் மொழியில் அப்படி அழைப்பார்கள். உண்மை யான பெயர் கேதாஸ்வர நம்பூதிரி."

தார்க்காவை ஏமாற்றம் சூழ்ந்து கொண்டது. தான் துளசிக்காக விளம்பரம் கொடுத்தால் பேய் ஓட்டுபவன் வந்து விட்டான்.

"சொல். காஷ்மோரா யார்? உனக்கு எப்படித் தெரியும்?

தார்க்கா புன்முறுவலித்தான். "காஷ்மோராவைப் பற்றி அப்படி விளம்பரம் கொடுத்தால் மனிதனுக்குச் சில சக்திகள் உண்டாகும் என்று எங்கேயோ படித்தேன். அதனால் தான்" என்றான்.

நம்பூதிரிக்குச் சந்தேகம் வலுத்தது. தார்க்காவின் கண்களையே உற்று நோக்கினான். "உண்மையைச் சொல்லாவிட்டால் தோலை உரித்து விடுவேன்" என்றான்.

முட்கள் குத்தி தார்க்காவின் உடல் முழுவதும் இரத்தம் பெருக்கெடுத்துக் கொண்டிருந்தது.

"எனக்கு வேறு ஒன்றும் தெரியாது."

தார்க்காவின் வார்த்தைகள் இன்னும் முடிவடைய வில்லை. மேலும் ஒரு குத்து விழுந்தது.

"பைத்தியக்காரத்தனமான மந்திர தந்திரங்களால் மனிதர்களைத் துன்புறுத்த நினைத்த உனக்கு இதுதான் தண்டனை" என்றவன் கைகளை உதறிக்கொண்டு கார் அருகில் சென்றான்.

தார்க்கா நினைவின்றி விழுந்து கிடந்தான்.

அந்த நிசப்தத்தைத் துளைத்துக்கொண்டு கார் புறப் பட்டுச் சென்ற ஓசை கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து மறைந்தது.

மெதுவாய் எழுந்தான் தார்க்கா.

அவனுக்கு ஓரடித் தொலைவில் சுவடுகள் தெரிந்தன. எதிரியின் காலடிகள்.

தார்க்கா பலத்தை வரவழைத்துக்கொண்டு மெதுவாய்க் கைகளை ஊன்றி காலடிக்குக் கீழே இருந்த மண்ணை கையிலெடுத்துக்கொண்டான்.

மந்திரவாதியின் பகைக்கு உள்ளாகிவிட்ட நபர் உயிரோடு வாழ்ந்துவிட முடியாது. அவன் உள்ளங்கையில் மண் இறுகியது. ராம சாஸ்திரிக்குத்தான் கொடுத்த வாக்கு அப்போதுதான் நினைவிற்கு வந்தது." அந்த மூவரையும் தவிர வேறு யாரையும் கொல்ல மாட்டேன். என் வித்தை யால் நாலாவது ஆளுக்குத் துரோகம் செய்ய மாட்டேன்.

அவன் பிடி தளர்ந்தது. கையிலிருந்த மண் பூமியோடு கலந்துவிட்டது. தனக்கு வேண்டிய மூவரில் ஒருவன் தான் தன்னை அடித்தவன் என்று அவன் அறியவில்லை.

அவன் தலை மெதுவாகச் சரிந்தது. நினைவு தப்பிப் போகும் சமயம் தொலைவில் கார் ஒன்று வந்து கொண்டி ருக்கும் ஓசை கேட்டது. மைல் கல்லின் அருகில் அந்தக் கார் நின்றது. அதிலிருந்து ஒரு பெண்மணி இறங்கினாள்.

அவனுக்காகப் பத்திரிக்கை அலுவலகத்திற்குப் ஃபோன் செய்தது அவள்தான்.

சித்தேஸ்வரிதேவி.

8 நம்பூதிரி திரும்பி வந்துவிட்டானே தவிர, அவன் மனம் நிம்மதி அடையவில்லை.

அந்த விளம்பரம் எதற்காகத்தரப்பட்டது என்று விளங்கவில்லை.

துளசிக்காகக் காஷ்மோரா காத்திருப்பானேன். பத்திரிகையில் அந்த விளம்பரம் கொடுத்தது யார்? மயானத்தில் தன்னைச் சந்தித்தவனுக்கும் காஷ்மோரா விற்கும் என்ன சம்பந்தம்? உண்மையிலேயே மனிதனின் அதீத சக்திகளைச் சோதிக்கத்தானா இதெல்லாம்? அப்படி யானால் துளசி என்கிற பெயர் எதற்கு? அந்தத் துளசி நம் துளசியாக இல்லாமல் துளசிச் செடியைக் குறிப்பதாக இருக்கலாமோ?

எத்தனையோ சந்தேகங்கள். ஒரு வேளை இந்தச் சிறுவனை வேறு யாராவது அனுப்பி இருக்கலாமோ?...

அவனுக்குச் சட்டென நினைவிற்கு வந்தது... ஸ்ரீநிவாசப் பிள்ளை...

உடனே காரை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டான். கார் முன்பு ஸ்ரீநிவாசப் பிள்ளை குடியிருந்த வீட்டின் முன்பு நின்றது.

தற்போது அதில் ஓய்வு பெற்ற டிபுடி கலெக்டர் ஒருவர் குடியிருந்தார். நம்பூதிரி, ஸ்ரீநிவாசப் பிள்ளையைப் பற்றி விசாரித்தான்.

"அவரா? பத்து வருடங்களுக்கு முன்பு இருந்தவர் தானே?"

"அவர்தான்– அப்புறம் அவரை எங்காவது பார்த்தீர்களா?"

"பார்த்தேன்."

நம்பூதிரி உற்சாகத்துடன் "எங்கே?" என்று கேட்டான்.

"தெருவில்..."

அவருடைய நகைச்சுவை உணர்வைப் புரிந்து கொள்ளும் நிலையில் அவன் இல்லை.

"எப்போது பார்த்தீர்கள் அவனை?"

"மூன்று நான்கு வருடங்களுக்கு முன்னால் தெருவில் நடந்துகொண்டு இருக்கும்போது பார்த்தேன். தலையில் ஏதோ விழுந்துவிட்டது போல் கைகளைத் தலைமீது வைத்துக் கொள்வான். டப்... டப்... டப் என்று கத்துவான். சிறுவர்கள் அவனைப் பின்தொடர்ந்து ஓடினார்கள். அப்போது பார்த்ததுதான். அப்புறம் தென்படவே இல்லை. எங்கே போனானோ தெரியாது."

அவருடைய பெரிய மகள் காபி கொண்டு வந்தாள். பொய் சொல்லுகிறார் என்று தோன்றியது.

"இந்த வீட்டை நீங்கள் வாங்கினீர்களா?"

"ஆமாம்... ஏன்?"

"யாரிடமிருந்து வாங்கினீர்கள்?"

அதுவரையிலும் சாதாரணமாக இருந்த அவர் முகம் மாறிவிட்டது. நாற்காலியை விட்டு எழுந்து சட்டென்று "நீங்கள் யார்?" என்று கேட்டார்.

நம்பூதிரி நாற்காலியில் பின்னுக்குச் சாய்ந்து கொண்டே "ஸ்டார் டிடெக்டிவ் ஏஜென்ஸி... ஸ்காட்லாண்ட் யார்டுடன் இணைக்கப்பட்ட நிறுவனம்" என்றான்.

அந்த ரிடையர்ட் டிபுடி கலெக்டரின் கைகள் லேசாக நடுங்கியது தெளிவாகத் தெரிந்தது.

"நாங்கள்... நாங்கள்... இந்த வீட்டை வாங்கி இருக்கிறோம்" அவர் குரல் நடுங்கியது.

தமிழில் பேசினால் இங்கு எடுபடாது, நம்பூதிரியின் வாயிலிருந்துசரமாரியாக ஆங்கிலச் சொற்கள் வெளி வந்தன.

பேச்சை இடைமறித்து, அவர் ஈனஸ்வரத்தில், "நான் பணம் கொடுத்துத்தான் இந்த வீட்டை வாங்கினேன்" என்றார்.

"யாருக்குத் தந்தீர்கள்?"

"ஸ்ரீநிவாசப்பிள்ளையின் தம்பிக்கு"

"அவன் யார்?"

"ஸ்ரீநிவாசப்பிள்ளையின் ஒரு மடத்திற்கு ட்ரஸ்டியாக இருந்தார்."

"தெரியும். பத்து வருடங்களுக்கு... பைத்தியம் பிடிப்பதற்கு... முன்னால்."

"நாங்கள் மாதந்தோறும் அந்த ட்ரஸ்டிற்கு வாடகையை அனுப்பிக் கொண்டிருந்தோம். வீட்டு யஜமானர் நம் கண் முன்னே பைத்தியமாகத் திரிந்து கொண்டிருக்கும் போது ட்ரஸ்டிற்கு பணத்தை அனுப்புவானேன் என்று என் மனைவி சொன்னபோதும் நான் கேட்கவில்லை.

சுமார் ஏழு வருடங்கள் பணத்தை அனுப்பிக் கொண்டு இருந்தேன்."

"அப்புறம்?"

ஒரு நாள் பிள்ளையை அவர் தம்பி அழைத்துக் கொண்டு வந்தார். இந்த வீட்டை எங்களுக்கு விற்கப் போவதாகச் சொன்னார்."

"அந்தப் பைத்தியக்காரனின் தம்பி என்று சொல்லிக் கொண்டு யாரோ வந்தால் உடனே நம்பி விட்டீர்களா?"

"ஒவ்வொரு மனிதனுக்கும் சுயநலம் கொஞ்சமாவது இருக்கும். அந்தச் சுயநலம் என்னை நம்பச் செய்தது. ஏழு வருடமாய் யாருக்குக் கட்டுகிறேன் என்று தெரியாமலேயே மாதந்தோறும் வாடகையைக் கட்டி வந்தோம். அது எங்கே போகிறது என்று கூடத் தெரியாது."

"என்ன விலைக்கு வாங்கினீர்கள், இந்த வீட்டை?"

"பதினைந்தாயிரத்திற்கு."

தடுமாறியதில் நம்பூதிரியின் கையிலிருந்த காபி சிந்தியது. ஒரு லட்சம் பெறுமானமுள்ள வீடு வெறும் பதினைந்தாயிரத்திற்குத்தானா?

"யாரிடம் தந்தீர்கள் அந்தப் பணத்தை?"

"ஸ்ரீநிவாசப் பிள்ளையின் தம்பியிடம்."

"அப்புறம் என்ன நடந்தது?"

"வீடு ரிஜிஸ்ட்ரேஷன் முடிந்துவிட்டது."

"நான் கேட்டது பிள்ளையைப் பற்றி" –பொறுமை யின்றிக் கேட்டான் நம்பூதிரி.

"அப்புறமாக அவர் எங்கே போனாரோ தெரியாது."

"அப்படியானால் கொன்று விட்டீர்களா?"

அவர் திடீரென நாற்காலியில் நிலை குலைந்தார். பாம்பை மிதித்து விட்டாற்போல் அதிர்ந்தார்.

"எனக்கும் சந்தேகம் வந்தது தம்பி. ஆனால் என்ன செய்வது? வீட்டு ரிஜிஸ்டிரேஷன் முடிந்துவிட்டது. அப்புறம் யாரும் என்னை எதுவும் கேட்கவில்லை. நானும் வாடகையைக் கட்டுவதை நிறுத்திவிட்டேன். மெதுவாய் இந்த விஷயத்தை மறந்துவிட்டேன்."

நம்பூதிரி கண் இமைக்காமல் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். அவர் சொன்னது நிஜமாகவே இருக்க லாம். ஆனால் பின்னால்தான் எவ்வளவு கசப்பான உண்மை?

மந்திரவாதிகள் மனிதனைக் கொல்வார்கள். சூனியம் வைப்பார்கள். ஆனால் நாகரீகம் என்ற முக்காட்டில் மனிதன் சக மனிதனை எத்தனைச் சுலபமாகக் கொன்று விடுகிறான்? இந்த ஓய்வு பெற்ற டிபுடி கலெக்டர் தன் வீட்டிற்காக, வீதியில் திரிந்து கொண்டிருந்த ஒரு பைத்தியக்காரனின் மரணத்தைத் தன் மனசாட்சியை வஞ் சித்துக்கொண்டு, எத்தனை சகஜமாக ஏற்றுக் கொண்டு விட்டார்? இதைவிட மோசமான சூனியம் வைப்பவனை எங்கே போய்த் தேட முடியும்?

அவன் எழுந்து "வருகிறேன்." என்றான். படியிறங்கிக் கொண்டு இருக்கும்போது பின்னாலிருந்து அவர் குரல் கேட்டது.

"என் வீட்டிற்கு ஆபத் ஒன்றும் வராதே?"

அவன் தாடை எலும்புகள் இறுகின. "வராது" என்றான் பின்னால் திரும்பிப் பார்க்காமலேயே.

காரில் ஏறிக்கொண்டு ஸ்டார்ட் செய்தான்.

இத்தனைக்கும் ஸ்ரீநிவாசப் பிள்ளை என்ன வானான்?

9

துளசி பேனாவால் நோட்டுப் புத்தகத்தில் கிறுக்கிக் கொண்டு இருந்தாள். அவள் கவனம் அங்கு இல்லை. மறுநாள் சித்தேஸ்வரி கோவிலில் உற்சவம். அந்தப் பரபரப்பில் எல்லோரும் இருக்கும்போது உள்ளே போய்விட வேண்டும். ரகசியத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த விஷயத்தை ஒருவருக்கும் சொல்லக் கூடாது. சொன்னாலும் நம்ப மாட்டார்கள். "சிறியவள் உனக்கு ஏன் இந்த விஷயமெல்லாம்?" என்று எடுத்தெறிந்து பேசி விடுவார்கள்.

தான் ஒருத்தியே போய்க் கண்டுபிடிக்க வேண்டும். அவளுக்கு ஏதாவது நேர்ந்து விட்டால் அவளுடைய டைரி அதை வெளிப்படுத்தும்.

பக்கத்திலிருந்த சிநேகிதி முழங்கையால் இடிக்கவே இவ்வுலகிற்குத் திரும்பினாள்.

பண்டிட் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தார். "பெரும்பாலானவர்கள் வெளியே வேறு மாதிரிப் பேசிக் கொண்டு உள்ளுர வேறு விதமாகச் செயல்படுவார்கள். உதாரணமாகத் தாயத்துகள், சகுனங்கள், கண் துடித்தல் முதலியவற்றை நம்பவில்லை என்று கூறிக் கொண்டே அவற்றைப் பின்பற்றிக் கொண்டு இருப்பார்கள்."

துளசி எழுந்து நின்றாள். "ஒருவர் வாழ்க்கையில் தாயத்து கட்டிக் கொண்டார் என்றால் அது அவருடைய திருப்திக்காக என்று சொல்லிவிட முடியாது சார். வீட்டாரைத் திருப்திப்படுத்தவும் கட்டிக் கொள்ளலாம் இல்லையா?"

"அப்படிச் சொல்பவர்கள் மனசாட்சியை வஞ்சித்துக் கொள்கிறார்கள் என்று அர்த்தம்" என்று பண்டிட் சொன்னார்.

வகுப்பு முழுவதும் கொல்லென்று சிரித்தது. துளசிக்கு முகம் சிவந்துவிட்டது. அதைக் கண்ட அவர் சமாதானப் படுத்துவது போல் சொன்னார். "நீங்கள் எல்லோரும் படித்தவர்கள். உங்கள் வீட்டார் எதையோ நம்பி உங்கள் கையில் தாயத்தைக் கட்டிவிட்டால், உங்கள் மீது தங்கள் அபிப்பிராயத்தைத் திணித்தால், நீங்கள் அதை எதிர்க்க வேண்டும். அதற்காக அவர்களுடன் சண்டைபோட வேண்டும் என்று சொல்லுவதல்ல என் எண்ணம். உங்களுடைய பேச்சால் அவர்களை வெல்ல வேண்டும். ஒரு துணியில் முடித்துக் கட்டிய சிறிய தாமிரத் துண்டு உங்களை எப்படிக் காப்பாற்றுகிறது என்று திருப்பிக் கேட்க வேண்டும்."

* * *

அன்று மாலையில் துளசி தன் தாயாருடன் வாக்கு வாதம் செய்தாள்.

"சிறிய தாயத்து என் உடல் நலத்தை எப்படிக் காப்பாற்றும்?"

"எனக்குத் தெரியாதம்மா. சந்தான் பக்கீர் என்பவர் பத்து வருடங்களுக்கு முன் உன் கையில் கட்டினார் இருபத்திரண்டு வயது வரையில் அவிழ்க்க வேண்டாம்

என்று உன் அப்பாவிடம் சொன்னார்" என்று சாரதா சொன்னாள்.

"பக்கீர்கள்; நாடோடிகள் சொல்வதையெல்லாம் அப்பா எப்படி நம்பினார்?"

"உன் அப்பாவையே கேட்டுக் கொள்."

அன்று மாலை வெளிநாட்டிலிருந்து ஃபோன் கால் வந்தது.

"ஹௌ ஆர் யூ பேபி?"

"ஃபைன் டாடீ தாங்க்யூ."

"எப்போது வரப் போகிறாய்?"

"அடுத்த வாரம் கிளம்பி, பம்பாய்க்குப் போய் அங்கிருந்து கிளம்பி வரப் போகிறேன்."

"எத்தனை நாள் இருப்பாய்?"

"எனக்கென்னவோ வெளிநாடு முழுவதுமாகச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்றுதான் ஆசை. ஆனால் அம்மா கவலைப்படுகிறாள். சீக்கிரமாக வந்துவிடுங்கள் என்கிறாள். அதனால் பத்து நாள்கள்தான்."

"ஓ.கே."

"டாடீ"

"என்னம்மா;"

"சந்தான் பக்கீர் யாரப்பா?"

அத்தனை ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்து துளசி அந்தக் கேள்வியைக் கேட்டதும் ஸ்ரீதர் திடுகிட்டான்.

"இப்போது அந்தக் கேள்வி எதற்கம்மா?"

"யாரென்று சொல்லுங்கள், அப்பா?"

இடையில் தொடர்பு துண்டித்து விட்டது.

துளசி தன் அறைக்கு வந்துவிட்டாள். மாலை ஆறு மணி ஆகிவிட்டது. இருட்டத் தொடங்கிவிட்டது.

அவள் தன் கையைப் பார்த்துக் கொண்டாள்.

தாயத்து இரவிக்கைக்கு அடியில் கட்டப்பட்டு இருந்தது.

பண்டிட் சொல்லும் வரை அவளுக்கு அதுபற்றிய நினைவே இல்லை. இத்தனைப் பரிசோதனை மேற் கொண்டுள்ள அவள் இதுவரையில் இந்தச் சிறிய விஷயத்தை மறந்து போய்விட்டாள். அவள் கத்தரிக் கோலை எடுத்துத் தாயத்தை அறுத்தெறிந்தாள். அதை டாய்லெட்டில் எரிந்து ஃப்ளஷ் அவுட்டை இழுத்தாள், பெருத்த ஓசையுடன் தண்ணீர் இறைந்தது. தாயத்தும் தண்ணீருடன் அடித்துச் செல்லப்பட்டது.

துளசி தன் அறைக்கு வந்தாள். மறுநாள் சித்தேஸ்வரி ஆலயத்தில் தான் செய்யப்போகும் காரியங்களைப் பற்றி யோசிக்கத் தொடங்கினாள்.

* * *

தார்க்கா கண்களைத் திறந்தான். அறை குளிர்ச்சி யாக இருந்தது. சுற்றிலும் இருள்.

உடம்பெல்லாம் வலி. இரத்தம் வெளியேறியதால் களைப்பாகவும் இருந்தது. அவன் தன்னைப் பற்றிக் கவலைப்படவில்லை. எத்தனை நாளாக அவன் நினை வற்றுக் கிடந்தான் என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

அவன் படுக்கையைவிட்டு எழுந்தான். மிக அழகாக அந்த அறை அலங்கரிக்கப்பட்டு இருந்தது. குளிர்ந்த காற்று ஒரு மூலையிலிருந்து வீசிக் கொண்டிருந்தது.

உலகமே உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது. அந்த நிசப்தத் தைத் துளைத்துக் கொண்டு கடிகாரத்தின் மணி ஓசை கேட்டது. தார்க்கா எண்ணினான். சரியாகப் பன்னி ரண்டு முறை அடித்துவிட்டு ஓய்ந்தது.

அவன் சுற்றிலும் பார்வையிட்டான். அறைக்கதவு வெளியில் தாழிடப்பட்டு இருந்தது.

தன்னை இங்கே இப்படிச் சிறைப்படுத்தி வைத்தது யார்? மயானத்திலிருந்து தன்னை யார் தூக்கி வந்து இருப்பார்கள்?

அந்த அறையின் கண்ணாடி ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான். அடுத்த அறையில் நீண்ட மேஜை இருந்தது. இரு பக்கங்களிலும் இரண்டு நாற்காலிகள் போடப்பட்டு இருந்தன. அந்த அறையில் யாரும் இல்லை.

தார்க்க ஜன்னல் வழியாகக் கையை நுழைத்து கொக்கியை விலக்கி அடுத்த அறைக்குள் நுழைந்தான்.

மிகப் பெரிய அறை அது.

வெளியே போகும் வழியை ஆராய்ந்தான். அறை முழுவதும் கம்பளம் பரப்பி இருந்தது. வெளியில் யாரோ வரும் சத்தம் கேட்டு சட்டென்று ஒரு மூலையில் பதுங்கி னான். சத்தம் தொலைவில் தேய்ந்து மறைந்ததும் அந்த அறையைவிட்டு அடுத்த அறைக்குப் போனான். அங்கு அடியெடுத்து வைத்தவன் கால்களில் ஒயர் ஒன்று சுற்றிக் கொண்டது. அதை உதறிவிட்டு அடுத்த அறைக்குப் போனான். அது சிறிய அறை. நடுவில் மேஜை ஒன்று இருந்தது.

அறைக்குள் அடியெடுத்து வைத்தவனுக்கு தூக்கி வாரிப் போட்டது. மேஜை மீது சலனமின்றி அவனையே பார்த்துக் கொண்டிருந்தது ஒரு மண்டையோடு.

தன் பழைய நண்பனைக் கண்டுவிட்டதுபோல் அவன் சட்டென்று அருகில் சென்று அதைக் கையில் எடுத்துக் கொண்டான்.

சாதாரண மண்டையோட்டிற்கும் இதற்கும் வித்தியாசம் இருப்பதை நொடிப் பொழுதில் அவன் கண்டு பிடித்து விட்டான். சிறுவயதிலிருந்தே கபாலங்களுக்கு இடையில் வளர்ந்தவனுக்கு இதைத் தெரிந்து கொள்வதில் சிரமம் என்ன இருக்க முடியும்?

கையில் இருந்த மண்டையோட்டைக் கவனமாகப் பார்த்தான். நெற்றிப் பக்கத்திலிருந்து இடது கண் வரை விரிசல் இருந்தது. எடையில் வித்தியாசம் இருந்தது. மண்டையோட்டைக் கண்ணால் பார்த்தாலே அது எத்தனைப் பழமையானது என்று அவனால் சொல்ல முடியும். இது ரொம்ப பழமையானது என்றாலும் வழக்கத்தை விட எடை அதிகமாக இருந்தது. உள்ளே கையால் துழாவினான். மூளை இருக்க வேண்டிய இடத்தில் வேறு ஏதோ இருப்பதுபோல் தோன்றிற்று.

நெற்றியில் இருந்த விரிசலை ஆராயும் போது பின்னால் இருந்து ஒரு குரல் கேட்டது.

“ஹலோ...”

அவன் சட்டென்று திரும்பிப் பார்த்தான்.

வாசலருகில் சக்ரவர்த்தி நின்று கொண்டிருந்தான்.

“உடம்பு எப்படி இருக்கிறது?”

தார்க்கா மௌனமாக இருந்தான். பூட்டியிருந்த அறையைவிட்டு வெளியே வந்ததைப்பற்றி ஏதாவது விசாரிப்பான் என்று எண்ணினான். ஆனால் சக்ரவர்த்தி அதைப்பற்றி எதுவுமே கேட்காமல் "என்னோடு வா" என்றான்.

தார்க்கா அவனைத் தொடர்ந்தான். இருவரும் வேறு அறைக்குள் நுழைந்தார்கள்.

தார்க்காவிற்கு வியப்பாக இருந்தது. இத்தனை அறைகள் இருந்தும் வெளியே போவதற்கான வாசல் எதுவும் தென்படவில்லை. ரொம்பப் பணக்காரர்களாக இருக்க வேண்டும். ஒவ்வொரு அறையும் நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டு இருந்தது.

சக்ரவர்த்தி விளக்கைப் போட்டான். அறையின் நடுவில் நாற்காலியில் அமர்ந்திருந்தாள் சித்தேஸ்வரி.

விளக்கு எரிந்ததும், நிமிர்ந்து தார்க்காவைப் பார்த்தாள். தார்க்கா கண்ணிமைக்காமல் அவளையே பார்த்தான். அவனுக்குப் பயம் ஏதும் இருக்கவில்லை. சித்தேஸ்வரி போல் நான்கு பேர் வந்தாலும் அவனால் கட்டுப்படுத்த முடியும். அவன் எதிர்பார்த்ததற்கு நேர் மாறாக சித்தேஸ்வரி மிருதுவான குரலில், "உட்கார்ந்து கொள்" என்றாள்.

உட்கார்ந்து கொண்டே அவள் பக்கம் பார்த்த தார்க்கா திடுக்கிட்டான். மந்திரங்களைப் பயிற்சி செய்து தீட்சண்யத்தைப் பெற்றுவிட்ட அவன் கண்களுக்குச் சத்தேஸ்வரியிடம் ஏதோ முரண்பாடு தென்பட்டது.

ஏதோ இருக்கிறது. என்னவாக இருக்கும்?

அவன் தன்னையே நேராகப் பார்ப்பதைக் கவனித்தவள் புன்முறுவல் செய்தாள். சக்ரவர்த்தி மௌனமாக

நின்று கொண்டிருந்தான். அறையின் நிசப்தத்தைச் சிதறடிப்பது போல் அவள் கேட்டாள்.

"காஷ்மோரா யார்?"

தார்க்கா பெருமூச்சு விட்டான். காஷ்மோராவிடம் இந்த நாகரீக மக்களுக்கு இவ்வளவு ஆர்வம் ஏன்?

"சொல்... காஷ்மோரா யார்?"

தார்க்கா யோசித்தான். முதல் நாள் மயானத்தில் ஒருவனை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. தான் மட்டும் கவனமாகப் பேசியிருந்தால் வந்தவன் யாரென்று தெரிந்து இருக்கும். தன்னுடைய அவசர புத்தியால் அநாவசியமாக உதைவாங்க நேரிட்டது. இந்த முறை அவ்வாறு நிகழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

"காஷ்மோரா ஒரு பிரயோகம். சூனியத்தைவிட எட்டு மடங்கு பெரியது. கூத் என்பது பதினைந்தாவது அங்கம். அதற்கடுத்தது காஷ்மோரா" என்றான்.

"சூனியம் நிஜமாக இருக்கிறதா?"

தார்க்கா இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கவில்லை. அறையில் ஆழ்ந்த அமைதி நிலவியது.

"உன் பெயர்?"

"தார்க்கா"

"ஊர்?"

"பிஸ்தா"

சித்தேஸ்வரி மெதுவாகத் தலையை உயர்த்தினாள், அவள் இதழ்களில் குறுநகை படர்ந்தது.

"யார் மீது காஷ்மோராவை ஏவப் போகிறாய்?"

தார்க்கா மௌனமாக இருந்தான். அவனிடமிருந்து பதிலேதும் வராதது கண்டு சித்தேஸ்வரி சொன்னாள்.

"இந்த சித்தேஸ்வரிக்கு எதிர்காலம், நிகழ்காலம், கடந்தகாலம் எல்லாம் தெரியும். எனக்குத் தெரியாததால் கேட்கிறேனென்று நினைத்து விடாதே. எல்லாம் தெரிந்திருந்தும் உன் வாயாலேயே தெரிந்து கொள்ளத் தான் கேட்கிறேன்."

தார்க்கா புன்முறுவலுடன், "உங்களுக்கு என்ன தெரியும்? சொல்லுங்கள் பார்க்கலாம்" என்றான்.

அவள் சிரிக்கவில்லை. தாழ்ந்த குரலில், "காஷ்மோராவை ஏவினால் அந்த நபர் இருபத்தோரு நாள் துன்பப்படுவான். சரிதானா?"

தார்க்கா திடுக்கிட்டான்.

அவள் சிரித்தாள். "காஷ்மோராவின் இறுதி அங்கம் மீனம். அதைக் கோமா என்பார்கள். இருபத்தியோராம் நாள் நோயாளி கோமாவில் ஆழ்ந்துவிடுவான்."

தார்க்கா யோசனையுடன் அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தான். உண்மையிலேயே இவளுக்கு எதிராளி மனதிலிருப்பதைக் கண்டுகொள்ளும் சக்தி இருக்கிறதா?

அவன் யோசனையை சிதறடித்தவளாய் சொன்னாள், "நீ துளசிமீது காஷ்மோராவை ஏவ இருந்தாய் என்று எனக்குத் தெரியும்."

அதுதான் அவள் செய்த தவறு. அவனுக்கு விஷயம் புரிந்துவிட்டது. நாற்காலியில் பின்னால் சாய்ந்து கொண்டு "உங்களுக்குக் கடந்தகாலம் வேண்டுமானால் தெரிந்திருக்கலாம். ஆனால் எதிர்காலம் தெரியாது. துளசி

யைக் கொல்வது என் நோக்கமில்லை. நாளேட்டில் என் விளம்பரத்தைப் பார்த்துவிட்டு நீங்களாகவே கற்பனை பண்ணிக்கொண்டு இருக்கும் கதை இது."

"காஷ்மோராவில் இருபத்தியோராம் நாள்..." என்று அவள் ஏதோ சொல்ல வந்ததை இடைமறித்து, "இதென்ன பிரமாதம்? ஏதேனும் பழைய சுவடிகளைப் புரட்டிப் பார்த்தால் தெரிந்துவிடப் போகிறது" என்றான்.

அவள் சற்றே வெறுப்படைந்து, "சரி... என்னைப் பற்றி எதற்கு? உனக்கு என்னென்ன சக்திகள் உண்டோ அதைச் சொல்" என்றாள்.

அவன் எழுந்து கதவு அருகில் சென்றான். அடுத்தாற் போல் மற்றொரு அறை. அதற்கு ஜன்னல் இருந்தது. ஜன்னல் வழியாக மைதானத்தில் திரிந்து கொண்டிருந்த கோழிகள் தென்பட்டன.

"எதைப்பற்றிச் சொல்லட்டும்?"

"உன்னிடம் இருக்கும் சக்திகளில் ஏதாவது."

அவனிடமிருந்து பதில் வரவில்லை. சிலையாய் நின்று கொண்டு இருந்தான். வெகு நேரமான பின்பும் அவன் அசையாததால் சக்ரவர்த்தி அவனருகில் சென்றான். தார்க்காவின் பார்வை ஜன்னலுக்கு அப்பாலிருந்ததைக் கண்டு அவனும் அந்தப் பக்கம் பார்த்தான்.

அந்தக் காட்சியைப் பார்த்து சக்ரவர்த்தி அதிர்ந்து விட்டான். மைதானத்தில் கோழிகள் ஆடாமல் அசையாமல் நின்றிருந்தன. ஓவியன் ஒருவன் தீட்டியது போலிருந்தது அந்தக் காட்சி.

"சபாஷ்" என்றாள் சித்தேஸ்வரி. "தார்க்கா, உண்மையிலேயே நீ சிறந்த மந்திரவாதிதான்."

தார்க்கா மௌனமாக இருந்தான். தான் செய்து காட்டியது தனக்குத் தெரிந்த வித்தைகளிலேயே மிகச் சிறிய வித்தை.

"தார்க்கா... உனக்கு எவ்வளவு சக்திகள் உண்டோ அத்தனை சக்திகள் எனக்கும் உண்டு. ஆனால் நிச்சயமாக என்னைவிட நீதான் உயர்ந்தவன்."

"உங்களுக்கு என்னென்ன சக்திகள் இருக்கின்றன?"

சித்தேஸ்வரி சிரித்தாள். சக்ரவர்த்தி அந்தக் கேள்விக்குப் பதில் அளித்தான். "தேவி தினந்தோறும் ஒருபெட்டியில் அமர்ந்தபடி நாலைந்து மணி நேரம் பிரார்த்தனை செய்வாள். அந்தப் பெட்டியில் யாராலும் ஒரு மணி நேரத்திற்குமேல் உட்கார முடியாது."

தார்க்காவிற்குச் சிரிப்பு வந்தது. பிஸ்தா கிராமத்துச் சிறுவர்கள் விளையாடும் விளையாட்டுக்களில் இது ஒன்று. பூமியில் குழிதோண்டி அதனுள் தலையைப் புதைத்துக் கொண்டு மணிக்கணக்காய் உட்கார்ந்திருப் பார்கள்.

"தேவி தன் பக்தர்களுக்குத் தியானத்தில் சக்தியின் மூலம் பதிலளிப்பாள். உதாரணமாய் நீ ஒரு நம்பரைச் சொல்லு."

தார்க்கா சித்தேஸ்வரிக்குக் கேட்காத வண்ணம் தாழ்ந்த குரலில் அவனிடம் "ஒன்பது" என்றான்.

"இப்போது நீ வரிசையாய் எண்களைச் சொல்லு"

சித்தேஸ்வரி ஜன்னலருகே நின்றுகொண்டு வெளியே பார்வையிட்டாள். தார்க்கா ஒன்று, இரண்டு, மூன்று எனச் சொல்லத் தொடங்கினான். சக்ரவர்த்தி அவனுக்கு எதிரே நின்று கொண்டிருந்தான்.

"ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது."

தொலைவில் அந்தப் பக்கமாய்த் திரும்பி நின்று கொண்டிருந்த சித்தேஸ்வரி சக்ரவர்த்தி சைகை ஏதும் காட்டவில்லை என்பது நிச்சயம். தார்க்கா யோசித்துக் கொண்டு இருக்கும் போதே சித்தேஸ்வரி அவனை அணுகினாள்.

"உன் கரங்களை நீட்டு" –தார்க்கா கைகளை நீட்டினான்.

"அப்படியில்லை குழந்தாய், இப்படி" என்று சரியாக நீட்டி வைத்துவிட்டு, "உள்ளங் கைகளை மூடிக் கொள்" என்றாள்.

"அவன் மூடிக் கொண்டான்.

சிவனுடைய விக்கிரகத்திற்கு முன்னால் ஊதுபத்தி புகைந்து கொண்டிருந்தது.

"அப்பனே... சிவனுடைய விக்கிரகத்தின் நெற்றியில் பூசியிருக்கும் சாம்பல் மிகவும் புனிதமானது. என் மகிமை யினால் அந்தப் புனிதமான பஸ்பத்தை உன் கைகளில் தோன்றச் செய்கிறேன். இதுவரையிலும் மகான்களும் ரிஷி களும் தான் அவற்றைத் தம் கைகளில் தோன்றச் செய்து பக்தர்களுக்கு விநியோகித்து இருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு என்னிடமுள்ள சகல சக்திகளையும் உபயோ கித்து அந்தப் பஸ்பத்தை உன் கைகளில் சிருஷ்டிக்கப் போகிறேன். இந்த நிமிடமே உன்னை என் சீடனாக ஏற்றுக் கொண்டுவிட்டேன்."

தார்க்காவிற்கு வேடிக்கையாக இருந்தது. சீடனாக இருக்க இங்கே யாரும் தயாராக இல்லை. இந்தத் தேவி செய்து காட்டும் வித்தைகளை அவனால் அநாயாசமாகச் செய்ய முடியும்.

சித்தேஸ்வரி ஊதுபத்தியின் சாம்பலை அவன் மூடிய கைகளில் தெளித்தாள்.

"கடவுளின் அபூர்வ சக்தி என்னிடமிருந்து உனக்கு வரப் போகிறது. இவ்வுலகில் பெருகியிருக்கும் பாவி களைக் காப்பாற்றுவதற்காகக் கடவுளின் பிரதிநிதியாய் நான் தோன்றி இருக்கிறேன். என் கட்டளையால் உனக்கு மிகப் பெரிய நன்மை ஏற்படப் போகிறது. அப்பனே உன் இடது கையைத் திறந்து பார்."

தார்க்கா கண்களைத் திறந்து தன் கைகளைப் பார்த்துக் கொண்டான். உள்ளங்கைகள் மூடியபடிதான் இருந்தன. வலது கையின் மேல் ஊதுபத்தியின் சாம்பல் அப்படியேதான் இருந்தது. அவன் தன் இடது உள்ளங் கையை விரித்தான்.

அதில் சிவனுடைய புனிதமான விபூதி இருந்தது.

10

வாழ்க்கையில் எதேச்சையாக நடக்கும் சில நிகழ்ச்சிகள் மனிதர்கள் மீது தம் பாதிப்பை ஏற்படுத்திவிடும். துளசியின் பத்தொன்பதாவது பிறந்த நாளன்று நம்பூதிரியும் பண்டிட்டும் முதன்முதலாகச் சந்தித்தார்கள்.

துளசிதான் ஒருவருக்கு ஒருவரை அறிமுகம் செய்து வைத்தாள். அன்று அதிகமாகப் பேசிக் கொள்ளவில்லை.

சில மாதங்கள் கழித்து ஒரு காக்டெயில் பார்ட்டி யில் மறுபடியும் சந்தித்துக் கொண்டார்கள். பண்டிட் மனிதனின் மூளை, அதன் செயல்திறன் பற்றிப் பேசிக் கொண்டு இருந்தார்.

"சிருஷ்டி மிக விசித்திரமானது. மனிதனுக்கு அப்பாற் பட்ட சக்தி ஒன்று இந்த உலகத்தை இயக்கிக்கொண்டு இருக்கிறது என்று நம்பும் ஜனங்கள் தங்கள் வாதத்தை மேலும் பலப்படுத்திக் கொள்ளும் சில விஷயங்களைச் சொல்லலாம். உதாரணமாய்– மூளை. ஒரு எறும்பின் மூளைக்கு இணையாக ஒரு கம்ப்யூட்டரை உருவாக்க வேண்டுமென்றால் கூட, எத்தனையோ மில்லியன் சர்க்யூட்கள் பொருத்த வேண்டிய இருக்கும்.

"கடவுள் இருக்கிறார் என்று நம்பிவிட்டால் அவனுடைய சிருஷ்டியைப் பார்க்கும்போது வியப்பு ஏற்படாமல் இருக்காது. மனிதனின் முக்கியமான உறுப்புகளை எல்லாம் பாதுகாப்பான இடத்தில் வைத்திருக்கிறார். இதயம் மார்பு எலும்புகளுக்கு இடையில் அமைந்திருப்பதே இதற்குச் சான்று. அதேபோல் மனிதனின் மூளை இரும்புப் பெட்டியைப் போன்ற மண்டை ஓட்டிற்குள் பத்திரமாக பெரிப்ரேஸினல் என்ற திரவத்தில் அமைந்திருப்பது மூளைக்கு மேலும் பாதுகாப்பைத் தருகிறது."

யாரோ கேட்டார்கள், "மனிதனின் மூளையை நீக்கி விட்டு அந்த இடத்தில் கம்ப்யூட்டரை வைக்க முடியும் என்கிறீர்களா?"

"முடியும்."

"அம்புலிமாமா கதைபோல் இருக்கிறது நீங்கள் சொல்வது"– எங்கிருந்தோ ஒரு குரல் வந்தது.

எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள். நம்பூதிரிக்கும் சிரிப்பு வந்தது.

அதற்குப் பண்டிட் பதிலளித்தார். "மனிதனின் கழுத்தருகில் 37 கிராம்ஸ் ரேடியோ ஆக்டிவ் ஐஸோடோப்

ப்ளுடோனியம் 239 ஆக்ஸைட் பொருத்துவதன் மூலமாய் மூளையைக் கம்ப்யூட்டர் மூலமாய்க் கண்ட்ரோல் செய்ய முடியும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

"யார் கண்டுபிடித்தார்கள்?"

"இந்த நாட்டிலிருந்த ஒரு டாக்டர். டாக்டர் சன்யால்."

"ஆபரேஷன் வெற்றி அடைந்ததா?"

"அடைந்தது."

"அவ்வளவு நிச்சயமாக எப்படிச் சொல்கிறீர்கள்?"

"ஆபரேஷன் சமயத்தில் டாக்டர் சன்யாலுக்கு உதவியாக இருந்தவன் நான்தான் என்பதால் ரகசியமாக நடந்த ஆபரேஷனுக்குப் பிரத்யட்ச சாட்சி நான் ஒருவன்தான் என்பதால்."

"நீங்கள் இந்த விஷயத்தை ஏன் யாரிடமும் சொல்லவில்லை?"

"சொன்னால் நம்ப மாட்டார்கள் என்பதால். அதோடு டாக்டர் சன்யாலும் இறந்து போய் விட்டார்."

"என்ன ஆபரேஷன் அது? யாருக்கு ஆபரேஷன் செய்தீர்கள்?"

"டப்... டப்... டப் என்று கத்திக்கொண்டே திரியும் ஒரு பைத்தியக்காரனின் மூளையைக் கம்ப்யூட்டரைஸ் செய்து சரி செய்தோம்."

நம்பூதிரியின் கையிலிருந்த கண்ணாடி தம்ளர் நழுவி கீழே விழுந்து உடைந்தது. எல்லோரும் அவன் பக்கம் திரும்பிப் பார்த்தார்கள்.

நம்பூதிரி கற்சிலையாக நின்றிருந்தான். அவன் இதழ்கள் தெளிவில்லாமல் உச்சரித்தது. "டப்... டப்... டப் என்று கத்திக்கொண்டே திரியும் பைத்தியக்காரனா...?"

11

"உங்களிடம் நிஜமாகவே அபூர்வமான சக்திகள் இருக்கின்றன" என்றான் தார்க்கா.

சித்தேஸ்வரி புன்முறுவல் செய்தாள். "உன்சக்தி களுடன் ஒப்பிட்டால், அவை ரொம்பச் சின்னவை தார்க்கா. நாமிருவரும் சேர்ந்துவிட்டால், பிறகு இவ்வுலகத்தில் எந்தச் சக்தியுமே நம்மை எதிர்த்து நிற்க முடியாது.

"என் லட்சியம்வேறு" – தார்க்கா சொன்னான்.

"உன் லட்சியம் என்ன?"– சக்ரவர்த்தி கேட்டான்.

தார்க்கா சொல்ல முற்படும்போது சித்தேஸ்வரி ஜாடை காட்டி தார்க்காவிடம் திரும்பினாள்.

"அப்பனே... தேவியின் மகிமையால் உன் லட்சியம் என்னவென்று சொல்வதுடன் அதைச் சாதிப்பது எப்படி என்றும் என்னால் சொல்ல முடியும். இப்படி உட்கார்ந்து கொண்டு உன் கேள்வியை எழுது."

தார்க்கா நீண்ட மேஜையின் ஒரு பக்கத்தில் அமர்ந்து காகிதத்தில் கேள்வியை எழுதினான்.

"காத்ராவைக் கொன்ற மூவர் யார்?"

மேஜைக்கு அந்தப் பக்கமாய் அமர்ந்திருந்த சித்தேஸ் வரியின் இதழ்களில் புன்னகை தவழ்ந்தது.

"துளசியைக் காப்பாற்றுவதற்காகக் காத்ராவைக் கொன்ற மூவரைப் பற்றிய விபரம் வேண்டுமா உனக்கு?" என்று கேட்டாள்.

தார்க்காவிற்குத் தூக்கிவாரிப் போட்டது. தன் கேள்வியை எழுதி முடிப்பதற்குள் அவளுக்கு எப்படித் தெரிந்தது.

"உனக்குத் துளசியின் முகவரி வேண்டுமா?"

தார்க்காவின் உடலிற்குள் இரத்தம் வேகமாய் பாய்ந்து கொண்டிருந்தது. இத்தனை வருடங்களாக எந்த லட்சியத்திற்காகக் காத்திருந்தானோ அது நிறைவேறப் போகிறதா? உணர்ச்சியின் மிகுதியால் எழுந்து நின்றான்.

சித்தேஸ்வரி சக்ரவர்த்தியைப் பார்த்து கண் ஜாடை காட்டினாள். சக்ரவர்த்தி ஒரு ரிஜிஸ்டர் புத்தகத்தை மேஜை மீது திறந்தாற்போல் வைத்தான்.

தார்க்கா பரபரப்புடன் பக்கங்களைப் பார்வை யிட்டான். நன்கொடைகள் தந்தவர்களின் பெயர்கள், முகவரிகள் இருந்தன.

துளசி என்ற பெயரைப் படித்ததுமே அவனுக்கு மூச்சு நின்றுவிடும்போல் இருந்தது. முகவரியைப் படிக்கத் தொடங்கியபோது சக்ரவர்த்தி புத்தகத்தை மூடி விட்டான்.

தார்க்கா நிமிர்ந்து பார்த்தபோது சக்ரவர்த்தி புத்தகத்தை எடுத்துக்கொண்டு போய்விட்டான். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத நிலையிலிருந்த தார்க்காவைப் பார்த்து சித்தேஸ்வரி புன்முறுவலுடன் "துளசி பற்றிய விபரத்தைத் தனியாக பேப்பரில் எழுதித் தரச் சொல் கிறேன். அதற்கென்ன அவசரம். முதலில் இதைச் சொல். துளசி யார்? அவளை எதற்காகத் தேடுகிறாய்?"

"துளசியைக் கண்டு பிடிப்பதுதான் என் வாழ்நாளைய குறிக்கோள்."

"காரணம்?"

தார்க்கா மௌனமாக இருந்தான்.

சித்தேஸ்வரி எழுந்து ஜன்னலருகே போய் நின்று கொண்டு தாழ்ந்த குரலில் சொல்லத் தொடங்கினாள். "தார்க்கா, மக்களைத் துன்பங்களிலிருந்து மீட்கவும், அவர்களுடைய துக்கத்தைப் போக்கவும் கடவுளால் அனுப்பப்பட்ட தேவி நான். மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுவதற்காகக் கடவுள் எனக்குச் சில சக்திகளை அளித்திருக்கிறார். அவற்றைச் செய்து காட்டி மக்களின் மனதில் இடத்தைப் பிடித்துவிட்டேன். மக்கள் கூட்டம் கூட்டமாய் என்னை வழிபட்டுக் கொண்டிருக்கிறார்கள்."

அவள் எதற்காக இதையெல்லாம் சொல்கிறாள் என்று அவனுக்குப் புரியவில்லை.

"உன்னிடம் எனக்குப் பிடித்தது உன் நேர்மைதான், தார்க்கா. அதனால் உனக்குச் சில உண்மைகளைச் சொல்லப் போகிறேன். மக்கள் முட்டாள்கள். அவர்களின் முட்டாள்தனத்தை காசாக்கிக் கொள்வதில் எந்தத் தவறும் இல்லை. அவர்களின் பிரமைகளை, பலவீனங்களைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு பணத்தைச் சம்பாதிப்பதே. என் நோக்கம். என்னோடு வா, காட்டுகிறேன்."

அவன் ஒரு நிமிடம் தயங்கிவிட்டு அவளைத் தொடர்ந்தான். அவர்களிருவரும் இருட்டாக இருந்த இடத்தில் படிகளில் இறங்கி அண்டர் கிரௌண்டில் கட்டப்பட்டிருந்த அறைக்குள் சென்றார்கள். அந்த அறை மிகக் குளிர்ச்சியாக இருந்தது. சித்தேஸ்வரி இரும்புப் பெட்டியைத் திறந்தாள். அங்கே தென்பட்ட காட்சியைப்

பார்த்ததும் தன்னையும் அறியாமல் ஓரடி பின்வாங்கினான் தார்க்கா.

அந்தப் பெட்டியில் தங்க நகைகளும், கரன்ஸி கட்டுக்களும் இருந்தன. லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள நகைகள். அவன் அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு முன்பே அவள் சொன்னாள். "இத்தனை நாளாய் மனித சக்திக்கு மீறிய சக்திகள் எதுவும் இல்லை என்று நம்பி வந்தேன். ஆனால் உன்னைப் பார்த்த பிறகு என் எண்ணத்தை மாற்றிக் கொண்டேன். இந்த உலகில் உன் உதவி எனக்கு மிகவும் தேவைப்படுகிறது. தார்க்கா" என்றாள்.

அவன் வியப்புடன் "என் உதவியா?" என்றான்.

"எனக்கு மிகவும் நெருங்கிய சீடர்களுக்கும், பக்தர்களுக்கும் உதவி செய்ய வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது."

"அதற்கு என்னால் என்ன செய்ய முடியும்?"

"எத்தனையோ செய்ய முடியும். தன் கட்சியில் தன்னைவிட உயர்ந்த இடத்தில் இருக்கும் அமைச்சரை என் பக்தன் ஏதாவது செய்து தன் இடைஞ்சலைப் போக்கிக் கொள்ள விரும்புகிறான். இந்த அரசியல் சூதாட்டத்தில் அவன் ஜெயிக்க நீ ஏதாவது செய்ய வேண்டும். தன் எதிராளி பத்து நாள்கள் நோயில் விழுந்தால், என்னுடைய மற்றொரு பக்தனுக்குப் பத்து லட்சத்திற்கு மேல் லாபம் கிடைக்கும். இந்த இடத்தில் நீ தான் எனக்கு உதவி செய்ய வேண்டும். யாரிடமும் சொல்லிக் கொள்ள முடியாத விஷயங்களை என் பக்தர்கள் என்னிடம் முறையிடுவார்கள். அவர்களுடைய எதிரிகளை நீ என் சக்தியால் துன்புறுத்த வேண்டும். எழுந்திருக்க முடியாமல் செய்ய வேண்டும். அதற்குப் பிரதிபலனாக

உனக்கு...” தார்க்காவின் முகத்தைக் கவனித்தவள் சட்டென்று பேச்சை நிறுத்திவிட்டாள்.

அத்தனை இருளிலும் அவன் முகம் சிவந்தது தெரிந்தது. சிரமப்பட்டு அவன் தன் கோபத்தை கட்டுப் படுத்திக்கொள்ள முயற்சிப்பது புரிந்தது. கோபத்தை அடக்கிக் கொண்டு, “உங்கள் பணத்தால் என்னை விலைக்கு வாங்கிவிட நினைக்கிறீர்களா?” என்றான்.

“அத்தனைப் பெரிய வார்த்தை எதற்கு? நாம் ஒரு வியாபார ஒப்பந்தம் செய்து கொள்வோம். ஒப்பந்தத்தை...”

“மன்னித்துக் கொள்ளுங்கள்.”

“இரும்புப் பெட்டியை மூடி விட்டு அவள் அவனிடம் வந்தாள். ஒவ்வொரு சூனியத்திற்கும் ஒரு லட்சம் ரூபாய் தருகிறேன்.”

அவன் முகத்தைத் திரும்பிக் கொண்டான்.

“சரி, உனக்கு விருப்பமில்லை என்றால் விட்டு விடுவோம். இனி நீ போகலாம்.”

“அப்போது துளசியின் முகவரி?”

“உனக்கும் எனக்கும் இடையில் ஒப்பந்தம் முடிய வில்லையே?”

தார்க்காவின் உள்ளங்கைகள் முறுக்கேறின. தான் பிடித்த மானை ஒரே அடியில் சாகடிக்காமல் விளை யாட்டுக் காட்டும் புலியைப் போல் தோன்றினாள் அவள்.

“இந்தப் பங்களாவை நாசம் செய்தாவது துளசியின் விபரங்களைப் பெற்றுக் கொள்வேன்.”

“ஒரு லட்சம் ரூபாய் தந்தாலும் ஒரு மனிதனைக் கொல்ல விரும்பாத நீ, அப்படி ஒரு தீய செயலில் இறங்கி

என் சீடர்களைக் கொல்வாய் என்று நான் நம்பவில்லை" என்று அவள் சிரித்தாள்.

தார்க்கா செய்வதறியாது நின்றான். சித்தேஸ்வரி தன் காலடிச் சுவடுகளைக் கலைத்துக் கொண்டே சொன்னாள். "யோசித்துப் பார்த்துக் கொள். ஒரு நாள் அவகாசம் தருகிறேன்."

ஒரு நாள்...

அப்படி என்றால்...

துளசியின் மரணத்திற்கு இன்னும் அதிக நாட்கள் இல்லை. அதில் ஒரு நாள் தான் இங்கே சிறையில் அகப் பட்டால் எப்படி?

"உன் வாழ்நாளின் லட்சியம் நிறைவேற வேண்டும் என்றால் உனக்குத் துளசியின் விபரங்கள் தேவை. அதை உனக்குத் தரக் கூடியவள் நான் ஒருத்திதான். அதற்குப் பிரதிபலனாய் நீ எனக்குச் சில உதவிகள் செய்ய வேண்டும். அதுதான் பிஸினஸ்" என்று நிறுத்தினாள். "நான் காலடிச் சுவடுகளைக் கலைத்தது ஏன் தெரியுமா? என் காலடி மண்ணால் என் மீது அதாவது என் நாபிஸ் தானத்திலுள்ள சங்கினி நாடியின் மீது சூனியத்தைப் பிரயோகிக்கக் கூடாது என்றுதான்" என்று ஏளனமாய்ச் சிரித்தாள்.

"நான் உனக்குச் சூனியம் செயவதாக இருந்தால் சங்கினி நாடியின் மீது செய்யக்கூடாது சித்தேஸ்வரி. இடுப்பிற்குக் கீழே உள்ள லகுவ நாடியின் மீது செய்ய வேண்டும்" தார்க்காவின் குரல் உணர்ச்சியின்றி ஒலித்தது.

அவள் அதிர்ச்சி அடைந்தவளாய் "என்ன?" என்றாள்.

"ஆண்களுக்குச் சூனியம் வைப்பது லகுவ நாடியின் மீது தானே, சித்தேஸ்வரி? மந்திரவாதியின் கண்கள் கறுகறுப்பானவை" என்று முதல் முறையாகச் சிரித்தான் தார்க்கா. "உன்னைப் பார்த்த முதல் நிமிடமே எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது. நீ பெண்ணே இல்லை."

அவள் சிலையாகிவிட்டாள். வெளுத்துவிட்ட முகத்தில் மறுபடியும் இரத்தம் பாய சிறிது நேரம் தேவைப் பட்டது.

"ரொம்பவும் தெரிந்து வைத்திருக்கிறாய். உன்னை உயிரோடு விட்டு வைத்திருக்கக் கூடாது" என்று கதவருகில் சென்று திரும்பினாள். "இந்த நாகரிக உலகின் மீது உனக்கு ரொம்ப மதிப்பும் நம்பிக்கையும் இருக்கிறது, தார்க்கா. உன் வாழ்நாளின் இறுதி நேரத்தில் அவற்றைப் போக்கடித்துவிட்டு உன்னையும் கொல்கிறேன். நாகரீக மானவர்கள், நன்றாகப் படித்தவர்கள் என்று நீ நினைத்துக் கொண்டு இருப்பவர்களாலேயே உன் உயிரை எடுக்கச் செய்கிறேன். செத்த பிறகாவது நீ உன் எண்ணத்தை மாற்றிக் கொள்."

அவள் போய் விட்டாள்.

அவன் அந்த அறையில் தனித்து விடப்பட்டான். சுற்றிலும் நிசப்தம் சூழ்ந்திருந்தது. தொலைவில் இரும்புப் பெட்டி. அதன் மேல் கையை வைத்தான், உள்ளே கோடிக் கணக்காய் பணம்.

சாகப் போகிறோம் என்ற பயம் தார்க்காவிற்குக் கொஞ்சம்கூட இல்லை. துளசி கிடைக்காவிட்டால் அவன் சாகப்போவது உறுதி. துளசியின் நினைவு வந்ததும் அவன் இடுப்பைப் தடவிக் கொண்டான்.

கையில் தட்டுப்பட்ட குச்சியைக் கையில் எடுத்தான். ஒரே ஒரு குச்சி எஞ்சி இருந்தது. அதில் இரண்டு கணுக்கள் மட்டுமே பாக்கி இருந்தன. இறுதிக் குச்சி அதுதான்.

தொலைவில் மணி பன்னிரண்டு அடித்தது. அதைக் கேட்டதும் பழக்கப்பட்ட ரீதியில் அவன் கை கணுவை முறித்தது. கையில் ஒரே ஒரு கணு மட்டுமே பாக்கி இருந்தது.

அப்படியென்றால்...

காஷ்மோரா எழுந்திருக்க இன்னும் இருபத்தி நான்கே மணிநேரம். அவனோ அந்த அறையில் சிறைப் பட்டு இருக்கிறான்.

அந்த இரும்புப் பெட்டியின் மேலேயே சாய்ந்தாற் போல் தலையை வைத்துப் படுத்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டான்.

ஏதாவது அற்புதம் நிகழ்ந்தால் அன்றி அவனால் இனி துளசியைப் பிடிக்க முடியாது.

12

பாஸ்போர்ட், விஸா முதலியவற்றைச் சரி பார்த்துக் கொண்டாள் துளசி.

வெளி நாட்டுப் பயணத்திற்கு இன்னும் இரண்டே நாள்கள்தான் இருந்தன. அவள் உள்ளம் உற்சாகத்தில் குதித்துக் கொண்டிருந்தது.

ஆனால் அந்த மகிழ்ச்சி வெளிநாட்டிற்குப் போகப் போகிறோம் என்ற எண்ணத்தால் தோன்றியது அல்ல.

மறுநாள்தான் சித்தேஸ்வரி கோவிலில் பெரிய பூஜை நடக்கிறது. அந்தப் பரபரப்பில் உள்ளே நுழைந்துவிட வேண்டும்.

அவள் உட்கார்ந்து இரு கடிதங்கள் எழுதினாள். ஒன்று நம்பூதிரி அங்கிளுக்கு, மற்றொன்று போலீஸ் கமிஷனருக்கு.

உணர்ச்சிக் கொந்தளிப்பால் அன்று இரவு முழுவதும் அவளுக்கு உறக்கம் வரவில்லை.

காலையில் சீக்கிரமாய் எழுந்துகொண்டு தயாராகி, சிநேகிதி வீட்டிற்குச் செல்வதாகக் கூறிவிட்டு, சித்தேஸ்வரி ஆலயத்திற்குப் புறப்பட்டாள்.

அவள் அங்கு போய்ச் சேரும்போது ஒரே சந்தடியாக, இருந்தது. பல ஊர்களிலிருந்து வந்த பக்தர்களும், நகரத்துப் பிரமுகர்களுமாய் அந்த வீதி முழுவதும் கூட்டம் நிரம்பி வழிந்தது.

பிரதான வாசல் வழியாகத் துளசி உள்ளே நுழைந் தாள். அன்று சித்தேஸ்வரி கேள்விகளுக்குப் பதில் அளிக்க மாட்டாள். அவளுக்குக் கனகாபிஷேகம் செய்யப் போகிறார் கள். பதினாறு வயதுடைய இரு கன்னிப் பெண்களின் தோள்களில் கைகளைப் போட்டுக் கொண்டு அவள் சிம்மாசனத்தை நோக்கி நடந்து போய்க் கொண்டு இருந்தாள். பக்தர்கள் பக்திப் பரபசத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அவள் உடுத்தியிருந்த பட்டுப் புடவை பல ஆயிரம் மதிப்புப் பெறும். நகைகளின் மதிப்பு பல லட்சங்கள் இருக்கும். அவற்றுக்கு வரி விதிக்க வேண்டிய இன்கம் டாக்ஸ் அதிகாரி கைகளைக் கட்டிக் கொண்டு நின்றிருந்

தார். அந்த நகரத்துப் பிரமுகர்கள் அனைவரும் அங்கே சூழ்ந்திருப்பதை அவள் கவனித்தாள்.

எள் விழ இடமில்லாமல் கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டு இருந்தது. போதுமான காற்று இல்லாததால் மூச்சு முட்டுவதுபோல் இருந்தது.

பக்கத்தில் திரும்பப்போன துளசி சட்டென்று நின்று விட்டாள். மக்கள்கூட்டத்தை விலக்கிக் கொண்டு சக்ரவர்த்தி இந்தப் பக்கமாய் வந்து கொண்டு இருந்தான். அவள் முகத்தை மறைத்துக் கொண்டு வேறு பக்கமாய்த் திரும்பி நடந்தாள். அங்கே ஒரு கதவு இருந்தது. கொஞ்சம் கூடத் தயங்காமல் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்து விட்டாள்.

ஏதோ தாங்க முடியாத வாசனையை உணர்ந்து திடுக்கிட்டு திணறத் தொடங்கினாள்.

சித்தேஸ்வரி வளாகத்தில் வளரும் செடி கொடி களுக்குத் தேவையான எருக் குவியல் அங்கிருந்தது. அடுத்த அறையில் மக்கள் குழுமி இருந்தனர். அவள் எருக் குவியலைத் தாண்டி மறுபக்கம் போனாள். பல ஆண்டு களாக மூடியிருந்த கதவு என்பதால் நன்றாக உளுத்துப் போயிருந்தது. மிகப் பிரயாசைப்பட்டு கதவைத் திறந்தவள் சட்டென மூடிவிட்டாள். வெளியே சமையல் நடந்து கொண்டு இருந்தது. ஆனால் எங்கிருந்தோ லேசாய்ச் சத்தம் கேட்டுக் கெண்டு இருந்தது.

அவள் மண்டியிட்டு அமாந்து பூமியில் காதை வைத்துக் கேட்டாள். அப்போதுதான் தான் அமர்ந் திருப்பது தரை மீதல்ல, மரப் பலகைமீது என்று தெரிந்தது.

கீழே போகும் வழி எங்கே என்று ஆராய்ந்தாள். ஐந்தாவது நிமிடம் அவள் முயற்சி பலனளித்தது. பலகை

யைத் திறந்துகொண்டு உள்ளே இறங்கினாள். சத்தம் அங்கே இருந்துதான் வந்து கொண்டிருந்தது. கட்டிடத்தின் ஏர்கண்டிஷனர் அந்த இடத்தில் இணைக்கப்பட்டு இருந்தது. அதன் வயர் வளையத்தில் இருந்துதான் சத்தம் வந்துகொண்டு இருந்தது.

அவள் ஏர்கண்டிஷனரின் பைப்பில் காலை வைத்து மேற்கூரையைப் பிடித்துக் கொண்டு சுவருக்கு அருகில் இருந்த கதவை மெதுவாகத் தூக்கினாள். க்ரீச் என்ற சத்தத்துடன் கதவு மேலெழும்பியது. நீண்ட அறை அது, சத்தத்தைக் கேட்டு யாராவது வந்து விடுவார்களோ என்று உறுதிப்படுத்திக் கொண்டு தலையை நீட்டிப் பார்த்தாள்.

இயற்கையிலேயே தைரியசாலியான துளசிகூட அந்தக் காட்சியைப் பார்த்து பயந்து நடுங்கிவிட்டாள்.

எட்டு அடி உயரமான காளி விக்கிரகம் துளசியின் முன்னால் இருந்தது. தரைமட்டத்திலிருந்து பார்த்தால் அது மேலும் பயங்கரமாகத் தோன்றுகிறது. விக்கிரகத்தின் ஒரு கையில் இருந்த திரிசூலத்தில் ஆட்டுக் குட்டி ஒன்று குத்தி இருந்தது. அதிலிருந்து இரத்தம் சொட்டிக் கொண்டு இருந்தது.

அதைப் பார்த்து அவள் பயப்படவில்லை. இன்னொரு கை மனிதனின் தலைப் பகுதியை மட்டும் முடியைப் பிடித்துத் தூக்கிக்கொண்டு இருந்தது.

அது உண்மையான மனிதத் தலைதான். வெகு காலத்திற்கு முன்பே வெட்டி எடுக்கப்பட்டு இருந்ததால் அதிலிருந்து இரத்தம் சொட்டவில்லை. அதைப் பார்த்த துளசிக்கு வயிற்றைப் புரட்டியது. எப்படியோ சமாளித்துக் கொண்டு கீழே விழாமல் ஏர்கண்டிஷனரின் பைப்பின் மீது சாய்ந்தாற்போல் ஒரு நிமிடம் நின்று கண்களை மூடிக் கொண்டாள்.

ஏர்கண்டிஷனரின் பைப்புகள் வேறு ஒரு அறைக்கும் போவதைக் கவனித்தாள். முன்போலவே பைப்பைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறினாள். அவளுடைய எண்ண மெல்லாம் தான் கேள்வி கேட்டு பதிலைப் பெற்ற அந்த அறையின் இரகசியத்தைக் கண்டுபிடிப்பதுதான். முதலில் அந்த அறைக்குள் நுழைந்துவிட வேண்டும். அந்த அறை எங்கே இருக்கிறது?

நடுவில் வெண்டிலேடர் ஒன்று தென்பட்டது. அதன் வழியாகப் பக்கத்து அறையைப் பார்த்தாள்.

அந்த அறையில் பெரிய இரும்புப் பெட்டி இருந்தது. அதற்கருகில் இளைஞன் ஒருவன் மண்டியிட்டு அமர்ந்த வாறு ஏதோ யோசித்த வண்ணம் இருந்தான். அவனை எங்கேயோ பார்த்திருக்கிறேன்... எங்கே?

நினைவு வரவில்லை.

மேற்கொண்டு அதைப்பற்றி யோசிக்காமல் இரண்டா வது வெண்டிலேடர் வழியாக எட்டிப் பார்க்கும் போதே அவளுக்கு அந்த அறையை அடையாளம் தெரிந்தது. அறை யில் நீளமான மேஜையும், இருபக்கமும் போட்டிருந்த நாற்காலிகளும், மேஜைமீது வைக்கப்பட்ட பேனாவும், காகிதமும்...

வெண்டிலேடர் வழியாகத் தரை எவ்வளவு தூரம் இருக்கிறதென்று ஆராய்ந்தாள். கிட்டத்தட்ட பத்தடி இருக்கலாம். ஆனால் தரையில் கம்பளம் விரிக்கப்பட்டு இருந்ததால் குதித்தால் அதிகம் அடிபடாது என்று நினைத் தாள்.

கண்களை மூடிக்கொண்டு உள்ளே குதித்துவிட்டாள். அந்த அறைக்குக் கதவுகள் இருந்ததை அவள் கவனிக்கத்

தவறிவிட்டாள், யாரோ நடந்துவரும் ஓசையைக் கேட்டதும் துள்ளி எழுந்தாள்.

எங்கே ஒளிந்து கொள்வதென்று புரியவில்லை. நீண்ட மேஜையைத் தவிர அங்கே எதுவும் இருக்கவில்லை. அது தன்னை முழுவதும் மறைத்துவிட முடியாதென்று தெரிந்தும், வேறு விழியின்றி ஓடிப்போய் மேஜையின் அடியில் ஒளிந்து கொண்டாள்.

அறைக்குள் வந்தவனின் கால்கள் மட்டும் தெரிந்தன. சற்றே தலையைச் சாய்த்து வந்தவன் யார் என்று கவனித்தாள்...

சக்ரவர்த்தி.

அவன் அறையின் நடுவில் வந்து நின்று சுற்றுமுற்றும் நோக்கினான்.

துளசியின் மார்பு படபடத்தது அவளுக்கே கேட்டது. மேலும் மூலையில் போய் ஒண்டிக் கொண்டாள்.

"இந்த அறையில் யாரோ இருக்கிறார்கள். யார் அது? மரியாதையாய் வெளியே வந்துவிடு. இங்கிருந்து தப்பவே முடியாது."

தன்னுடைய கால்கள் தன்னைக் காட்டிக் கொடுத்து விடுமோ என்ற சந்தேகம் துளசிக்கு வந்தது. இழுத்துப் போர்த்திக்கொள்ள எண்ணி மேஜைமீது விரிக்கப்பட்டு இருந்த துணியை மெதுவாகக் கீழே இழுத்தாள்.

அதுதான் அவள் செய்த தவறு.

* * *

13

வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு அந்த வீட்டில் அத்தனை வசதிகள் நிறைந்த ஆபரேஷன் தியேட்டர் இருப்பது தெரியாது. வெளியில் மிகப் பழைய கட்டிடம் போல் தெரிந்தது. காம்பௌண்டிற்குள் செடி கொடிகள் கன்னாபின்னாவென்று மண்டிக் கிடந்தன. எல்லா அறைகளும் ஒட்டடையும் குப்பையுமாக இருந்தன. ஆனால் அந்த அறை- அந்த ஒரே அறை... கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த பண்டிட் ஆச்சரியமடைந்து விட்டார்.

சுவர்கள் பளபளவென்று கண்ணாடியைப் போல் மின்னிக்கொண்டு இருந்தன. முப்பதடி நீளமும் இருபதடி அகலமும் கொண்ட அந்த அறை முழுவதும் எலெக்ட்ரானிக் சாதனங்கள் நிரம்பி இருந்தன.

"இந்த அறையும், இந்த உபகரணங்களும்தான் என் சொத்து" என்றார் டாக்டர் சன்யால். "இதைச் சம்பாதிக்கவே என் வாழ்நாளெல்லாம் கழிந்துவிட்டது."

"ஃபாண்டஸி சினிமா பார்ப்பதுபோல் இருக்கிறது"– பண்டிட் சொன்னார்.

"மனித வாழ்க்கையே ஒரு ஃபாண்டஸிதானே. இன்னும் தாமதம் ஏன்?"

"எனக்குப் பயமாக இருக்கிறது."

"இந்தக் கணத்தில் பயத்திற்கு இடமில்லை. பண்டிட்... இத்தனை நாள்களாக நான் செய்த முயற்சிகளுக்கு ஒரு வடிவம் கிடைக்கப் போகிறது. உலக வரலாற்றிலேயே யாராலும் சாதிக்க முடியாத வெற்றியை நாம் சாதிக்கப் போகிறோம்."

"ஆனால் தோல்வி அடைந்தால், ஒரு மனிதனின் உயிரைப் பலிவாங்கி விட்டவர்கள் ஆவோம்."

"அதனால்தான் இறக்கும் தருவாயில் இருப்பவனைக் கொண்டு வந்திருக்கிறேன்."

அப்போதுதான் பண்டிட் அந்த நோயாளியைப் பார்த்தார். நாற்காலியில் தலையைப் பின்னால் சாய்த்து நினைவற்ற நிலையில் அமர்ந்திருந்தான்.

"இவன் ஒரு பைத்தியக்காரன். டப்... டப்... என்று கத்திக்கொண்டு தெருவில் அலைந்து கொண்டிருந்தான். நேற்றுதான் இவனை ஊருக்கு வெளியில் இருக்கும் புதரில் விழுந்து கிடந்ததைப் பார்த்தேன். யாரோ இவனை நன்றாக அடித்துப் போட்டுவிட்டுப் போயிருக்கிறார்கள். பைத்தியக்காரனை அடிக்க வேண்டிய அவசியம் யாருக்கு இருந்ததோ தெரியாது. எப்படியோ எனக்கு வேண்டியது கிடைத்துவிட்டது. இந்தப் பைத்தியக்காரன் ஆபரேஷனின் போது இறந்துவிட்டாலும் உலகம் பொருட்படுத்தாது. மகிழ்ந்து கொண்டாடும். பண்டிட் நீங்கள் எனக்கு உதவி செய்ய வேண்டும். இரண்டாம் பேருக்கு இந்த விஷயம் தெரியக்கூடாது. செய்வீர்களா?"

பண்டிட் சிறிது யோசித்துவிட்டு "சரி" என்றார்.

ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு ஆபரேஷன் தொடங்கியது. சன்யால் நோயாளியைப் பார்த்துக் கொண்டே சொன்னார், "இவன் ஒரு காலத்தில் பெரிய மேதாவியாக இருந்திருக்க வேண்டும். நியூரோலாஜிகல் பரிசோதனையில் எதுவும் வெளிப்படவில்லை. வலது பக்க மூளையில் ஏதோ பாதிப்பு ஏற்பட்டதால்தான் இவன் பைத்தியக்காரனாக ஆகிவிட்டான். அது என்னவென்று கண்டு பிடித்து அதைச் சீர்ப்படுத்த வேண்டும். இந்த வேலையை

நாம் செய்யப் போவதில்லை. கம்ப்யூட்டர்தான் செய்யப் போகிறது."

"அப்படியென்றால்?"

"இவன் மூளையில் நாற்பது எலக்ட்ரோட்ஸ்களைச் செலுத்தி அவற்றுக்குத் தேவையான கம்ப்யூட்டர் இணைப்பைக் காதுக்குப் பின்பக்கத்தில் பொருத்த வேண்டும். அதற்கு இரண்டு வயர்களை இணைத்து சிகரெட் பரிமாணத்தில் இருக்கும் ப்ளூடோனியம்–239 ஆக்ஸைட் ஐஸோடோப்பை அவன் தோளில் பொருத்த வேண்டும்."

"பண்டிட் திறந்த வாயை மூடவில்லை. மனிதனின் மூளைக்குப் பதில் கம்ப்யூட்டரைப் பொருத்துவதாவது? இது சாத்தியப்படுமா?

"வாருங்கள், நீங்கள்தான் எனக்கு உதவி செய்ய வேண்டும்."– சன்யாலின் குரல் கேட்டு பண்டிட் இந்த உலகத்திற்கு வந்தார்.

ஆபரேஷன் முடிந்து சன்யால் திருப்தியுடன் எழுந்து நிம்மதியாக மூச்சு விட்டுக்கொண்டதிலிருந்து ஆபரேஷன் வெற்றி அடைந்து விட்டதாக பண்டிட் ஊகித்துக் கொண்டார்.

சன்யால் பெருமூச்சு விட்டுக்கொண்டே மார்பைத் தடவிக்கொண்டு இருப்பதைக் கவனித்த பண்டிட், "ஏன்? என்னாயிற்று?" என்று கேட்டார்.

"கொஞ்சம் வலியாக இருக்கிறது... அவ்வப்போது வருவதுதான்"– புன்முறுவலுடன் சொன்னார் சன்யால்.

"சின்ன வேலை பாக்கி இருக்கிறது" சன்யால் சொல்லிக்கொண்டே குனிந்து நோயாளியின் தோளருகே

லேசாகக் கீறி அந்த இடத்தில் சின்ன பாக்கெட் ஒன்றைப் பொருத்தினார். அதில் 37 கிராம் ரேடியோ ஆக்டிவ் ஐஸோடோப் ப்ளூடோனியம் –239 இருந்தது. தலையி லிருந்து நீட்டிய வயர்களைப் பாக்கெட்டுடன் இணைத் தார்.

ஒருகால் அந்த நோயாளி இறந்துவிட்டால் உடலி லிருந்து ரேடியோ ஆக்டிவ் பாக்கெட்டை எடுத்துவிட வேண்டும் என்று பண்டிட்டிற்குத் தெரியும். இல்லா விட்டால் அந்தப் பாக்கெட்டும் பிணத்துடன் புதைக்கப் பட்டால், அதிலிருந்து வெளியேறும் கதிர்வீச்சுக்களின் பாதிப்பினால் அந்த மயானத்தில் காலடி எடுத்து வைப்பவர்கள் கூடப் பிணமாக மாறிவிடுவார்கள்.

அடுத்த இரண்டாவது நிமிடம் சன்யால் நோயாளி யின் தோளுக்கு அருகில் தையல் போட்டு முடித்துவிட்டு, கம்ப்யூட்டரின் மூலம் மூளைக்கு ஆணைகளை அனுப்பத் தொடங்கினார். ஒன்று... இரண்டு... மூன்று வரிசையாக ஆணைகளை அனுப்பியும் நோயாளியிடம் எந்தச் சலனமும் தெரியவில்லை. தோல்வியடைந்து விட்டதோ என பண்டிட் சந்தேகப் பட்டார். முப்பத்து இரண்டாவது எலெக்ட்ரோட்டிலிருந்து அனுப்பிய ஆணைக்கு நோயாளி கொஞ்சம் அசைந்தான். சன்யாலின் உதடுகளில் குறுநகை படர்ந்தது. நோயாளி யின் காதருகே குனிந்து "உன் பெயரென்ன?" என்று கேட்டார்.

நோயாளியின் வாயிலிருந்து வார்த்தைகள் தெளிவாக வெளிவந்தன. "ஸ்ரீநிவாசப் பிள்ளை."

ப்ரொபசர்கள் இருவரும் கைகுலுக்கிக் கொண்டார் கள் மருத்துவ விஞ்ஞானத்திலேயே இது ஒரு அற்புதமான வெற்றி.

அன்றிரவு அசதியாக இருந்ததால் இருவரும் படுக்கச் சென்று விட்டார்கள். மறுநாள் காலையில் விழிப்பு வந்ததும் பண்டிட் ஆபரேஷன் தியேட்டரில் படுத்திருந்த நோயாளியைச் சென்று பார்த்தார். அவருக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஸ்ரீநிவாசப் பிள்ளை அங்கே இருக்க வில்லை.

பண்டிட் ஓட்டமும் நடையுமாக சன்யாலின் அறைக்கு விரைந்தார். வெறுமே சாத்தியிருந்த கதவு களைத் திறந்துகொண்டு "டாக்டர்" என்று கத்தினார்.

சன்யாலிடம் எந்தச் சலனமும் இல்லை. தொட்டு எழுப்புவதற்காக அவர்மீது கையை வைத்த பண்டிட் ஷாக் அடித்ததுபோல் கையைப் பின்னால் இழுத்துக் கொண்டார்.

சன்யாலின் உடல் சில்லென்று இருந்தது. மாரடைப் புக் காரணமாக சன்யால் இறந்துவிட்டிருந்தார்.

* * *

"அதற்குப்பின் ஸ்ரீநிவாசப் பிள்ளை என்னவானான் என்று எனக்குத் தெரியாது. சன்யாலின் மரணத்திற்குப் பிறகு சொந்த வீட்டை அரசாங்கம் எடுத்துக்கொண்டு விட்டது. அந்த ஆபரேஷன் பற்றி இரண்டு மூன்று டாக்டர் களிடம் பிரஸ்தாபித்தபோது யாருமே நம்பவில்லை. ஒரு மனிதனுக்கு வலுக்கட்டாயமாக ஆபரேஷன் செய்ததற் காகத் தண்டனை கிடைக்குமோ என்ற பயமும் எனக்கு இருந்தது. ஆனால் அந்த நோயாளி தன் பெயர் ஸ்ரீநிவாசப் பிள்ளை என்று சொன்னது மட்டும் நன்றாக நினைவில் இருக்கிறது" பண்டிட் சொல்லிக்கொண்டு இருந்தார்.

நம்பூதிரி, பண்டிட் மேற்கொண்டு சொன்னது எதை யும் காதில் வாங்கவில்லை.

"ஸ்ரீநிவாசப் பிள்ளை" என்ற பெயர்தான் அவன் மனதை அலைக்கழித்துக்கொண்டு இருந்தது.

* * *

"மேஜைக்கடியில் யார்? வெளியே வந்துவிடு மரியாதையாய்..." சக்ரவர்த்தியின் குரல் அறை முழுவதும் எதிரொலித்தது. அவன் மேஜையை நோக்கி வந்து கொண்டிருப்பது தெரிந்தது. துளசி மேலும் ஓரத்திற்கு நகர்ந்து கொண்டாள். மேஜை விரிப்பை கீழே இழுக்க முயன்றவளின் கைக்கு அதனடியில் இருந்த சைனா சில்க் துணியும் கார்பன் காகிதமும் கிடைத்தன, தரையில் பாதுகைகள் போன்ற தோற்றத்துடன் வெள்ளியினால் செய்த செருப்பு ஜோடி ஒன்று இருப்பதைக் கவனித்த துளசி, சக்ரவர்த்தி அருகில் வந்தால் அதை எடுத்து விடலாம் என்று எண்ணினாள்.

சக்ரவர்த்தி மேஜைக்கு அடியில் குனிந்தான். வேக மாய் அந்தச் செருப்புகளைக் கையில் எடுக்கப் போனாள். அத்தனை அவேசத்திலும் அவள் திகைத்துவிட்டாள். அந்தச் செருப்புகள் தரையில் பதிக்கப்பட்டு இருந்தன. அவற்றைப் பிடித்திருந்த கைகள் நழுவி, அதே வேகத்தில் சக்ரவர்த்தியின் காலடியில் போய்விழுந்தன.

பெண் என்றும் பாராமல் அவன் அவளை அடித்த அடியில் ஐந்தடி தொலைவில்போய் விழுந்தாள். தலையில் பட்ட அடியில் ஒரு நிமிடம் எதுவும் கண்ணுக்குத் தெரிய வில்லை. அவள் கண்களைத் திறந்தபோது அவன் அருகில் நின்றிருந்தான்.

"நீதானா? அன்று வந்தபோதே சரியானபடி மரியாதை களைச் செய்து அனுப்பியிருக்க வேண்டும். மறுபடியும் வந்திருக்கிறாயா?" என்று அவளை நோக்கி ஓரடி எடுத்து வைத்தான்.

இனி தப்பிக்க வழியில்லை. துளசி கண்களை இறுக்க மாக மூடிக்கொண்டாள். சக்ரவர்த்தி அருகில் வந்து தோள்களைப் பிடித்து அவளைத் தூக்கி நிறுத்தினான்.

"இந்த அறைக்குள் எப்படி நுழைந்தாய்?"

"மூடனே... என்னிடம் சக்திகள் இல்லையென்று எண்ணிவிட்டாயா?"– எப்படியும் சாகத்தான் போகி றோம். முடிந்தவரையில் எதிராளியைக் குழப்பத்தில் ஆழ்த்தும் முயற்சி செய்வோம்.

சக்ரவர்த்தி எதற்கும் அஞ்சாதவன்போல் தென் பட்டான். "உன் சக்திகளைக் காளிதேவி பரிசோதித்துக் கொள்வாள்" என்று அவளைக் கதவை நோக்கித் தள்ளினான், அவளுக்குத் தான் பார்த்த விக்கிரகம் நினை விற்கு வந்தது.

கதவைத் தாண்டப்போனவள் ஒரு விநாடி நேரத்திற் குக் குறைவாக நின்றுவிட்டாள். கதவிற்கு அப்பால் தரை யில் ஏதோ நிழல் நகர்ந்தது போல் தெரிந்தது.

யாரோ வெளியே நடந்து கொண்டிருக்கிறார்கள். நக்ரவர்த்தியின் ஆளாக இருக்க வாய்ப்பில்லை. அவள் அடுத்த அடி எடுத்து வைக்க சற்றுத் தாமதம் செய்தாள். அதைக் கவனித்த சக்ரவர்த்தி வேகமாகக் கதவை நோக்கி வந்தான்.

திடீரெனச் சக்ரவர்த்தியின் தலையில் இரண்டு கரங்கள் இரும்புத் தடியைப் போல் இறங்கின. சக்ரவர்த்தி துவண்டு கீழே சரிந்தான்.

"வெல்கம் ஜேம்ஸ்பாண்ட்" அடித்தவனைப் பார்த்துக் கொண்டே துளசி சொன்னாள். அவன் பதில் சொல்லா மல் மண்டியிட்டு அமர்ந்து கொண்ட சக்ரவர்த்தியைப் பரிசீலித்தான்.

"இறந்து விட்டானா?" துளசி கேட்டாள். இல்லை என்பது போல் தலையசைத்தான் அவன்.

"இவன் உங்கள் எதிரியா? இல்லை நண்பனை தவறிப் போய் அடித்து விட்டீர்களா?

"எதிரிதான்."

"அப்படியானால் நாமிருவரும் ஒரே கட்சி. நீங்கள் யார்?"

அவன் சிரித்துவிட்டு "என் பெயர் தார்க்கா" என்றான்.

* * *

மாலை ஐந்து மணி.

மெயின்ரோட்டில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருந்தது.

சாரதா காரை ஒரு ஓரமாக நிறுத்தினாள். அவளுடன் இன்னும் இரண்டு பேர் இறங்கினார்கள். லேடீஸ் க்ளப்பின் அங்கத்தினர்கள் அவர்கள். வெள்ள நிவாரண நிதிக்காக நன்கொடைகளை வசூலித்துக் கொண்டிருந்தார்கள். ஸ்ரீதர் வெளிநாடு கிளம்பிப் போன பிறகு பொழுது போகாமல் சாரதா அந்தச் சங்கத்தில் சேர்ந்திருந்தாள்.

அவர்களுடைய வேலை முடியும்போது மணி ஏழரை ஆகிவிட்டது. தெருவிளக்குகள் எரியத் தொடங்கிவிட்டன.

காரில் ஏறப்போனவளுக்குப் பின்னாலிருந்து யாரோ முழங்கையைத் தொட்டதுபோல் இருந்தது. பின்னால் திரும்பினாள்.

வீலென்று அலறப்போனவள் எப்படியோ சமாளித்துக் கொண்டாள்.

எதிரில் நின்றிருந்தவனின் கேசம் சடைசடையாய்த் தொங்கிக் கொண்டு இருந்தது. உடை கந்தலாக இருந்தது. நீண்ட தாடி. கோலிக்குண்டு போன்ற கண்கள்.

"ஹி... ஹி... ஹி" என்று சாரதாவைப் பார்த்து இளித்தான்.

அவள் அதிர்ந்ததுபோல் தன்னையும் அறியாமல் ஓரடி பின்வாங்கினாள்.

அவன் அவளைச் சுற்றி குதித்துக்கொண்டே "எழுந்திருக்கப் போகுது... பிசாசு எழுந்திருக்கப் போகுது. பதினோரு வருஷம்.. இரத்தத்தைப் பார்க்காதேன்னு சொல்லு... மண்ணைத் தின்னச் சொல்லு... எல்லோரையும் காப்பாற்றுவது ஆஞ்சநேயர்தான்... துளசிச் செடியை நடச் சொல்லு... ஹி... ஹி" என்று கத்தினான்.

சாரதாவிற்கு ஒன்றும் விளங்கவில்லை. பக்கத்திலிருந்த பெண்களும் என்ன செய்வதென்று புரியாமல் நின்று கொண்டு இருந்தார்கள்.

அதற்குள் அந்தப் பக்கமாய் வந்த கான்ஸ்டபிள் ஒருவர் தடியால் அவனைத் தடுத்து உதவி புரிந்தார். மூன்று பெண்களும் அவசர அவசரமாய்க் காரில் ஏறினார்கள்.

சாரதா இக்னிஷனைத் திருப்பினாள். கார் ஸ்டார்ட் ஆகவில்லை. அதற்குள் அந்தப் பைத்தியம் கான்ஸ்டபிளின் பிடியிலிருந்து தப்பித்துக் கொண்டு காரை நோக்கி ஓடி வந்தான்.

அவன் காரின் கண்ணாடி ஜன்னல் வழியாக உள்ளே இருப்பவர்களுக்குக் கேட்கும் விதமாகச் சத்தமாகக் கத்தினான். "குத்து கேசரி முத்திரையை. கேசரி முத்திரை யைக் குத்து உன் மகளுக்கு. இதோ இப்படி..." என்றவன் காரின் கண்ணாடியின்மீது முகத்தை அழுத்த மாகப் பதித்தான்.

மகளின் பிரஸ்தாபத்தைக் கேட்டதும் சாரதாவின் கை இக்னிஷன் மேலிருந்து நழுவியது... அவனுடைய தாக்குதலுக்குக் கண்ணாடி எந்த நிமிடமும் உடைந்து விடும்போல் இருந்தது.

அவள் வெளியில் பார்த்தாள். போலீஸ்காரர் ஒருவர் காரை நோக்கி வந்துகொண்டிருந்தார். கண்ணாடிக்கு மறு பக்கம் பைத்தியக்காரனின் முகம் விகாரமாய்த் தெரிந்து கொண்டிருந்தது.

"கேசரி..." என்று கத்தினான். அதன் பிறகு ஒரு அற்புதம் நிகழ்ந்தது. அந்தப் பைத்தியக்காரனின் வாயி லிருந்து நாக்கு வெளிவந்தது. சாதாரணமாக இல்லை... நீளமாய்... நீண்டுகொண்டே வந்த நாக்கு புருவங்கள் கூடும் இடத்தில் பொட்டு வைத்தாற்போல் தொட்டது. காரில் இருந்த பெண்கள் அனைவரும் கத்தத் தொடங் கினார்கள். அவன் நாக்கை மறுபடியும் சாதாரணமாய் உள்ளுக்கு இழுத்துக்கொண்டு "கேசரி" என்றான்.

அதற்குள் அங்கே வந்த போலீஸ் அவன் நெற்றியில் பலமாக அடிக்கவும் "அம்மா..." என்று அலறிக் கொண்டு அவன் தரையில் சரிந்தான். அதே நேரத்தில் கார் ஸ்டார்ட் ஆகி வேகமாய் போகத் தொடங்கியது.

தான் அடித்தது கேசரி முத்திரையை அநாயசமாகச் செய்து காட்டிய ஒரு மகானை என்று போலீஸிற்குத்

தெரியாது. தன்னை எச்சரித்தது தன் மகளைப் பதினொரு ஆண்டுகளுக்கு முன்னால் காப்பாற்றிய சந்தான் பக்கீர் தான் என்று காரில் வேகமாய்ப் போய்க்கொண்டிருந்த சாரதாவிற்கும் தெரியாது.

தெரிந்திருந்தால் இந்தக் கதை வேறு விதமாகத் திரும்பி இருக்கும்.

14

வீடு திரும்பிய சாரதாவின் மனம் குழம்பியது. மணி ஏழரை ஆகிவிட்டது. காலையிலேயே வெளியில் போன துளசி இன்னும் வீடு திரும்பவில்லை. துளசி என்றுமே தாமதமாக வரமாட்டாள்.

"கேசரி முத்திரை" என்றால் என்ன? அவள் மனம் திரும்பத் திரும்ப அதே கேள்விக்கு விடை தேடியது. யாரோ ஒரு பைத்தியக்காரன் அவளை இப்படிக் குழப்பி விட்டானோ?

கடிகாரத்தைப் பார்த்தாள். மணி எட்டேகால். மத்திய நூலகத்திற்குப் ஃபோன் செய்தாள். ஒன்பது வரையில் திறந்திருக்கும் என்று சொன்னார்கள். காரை எடுத்துக் கொண்டு நேராக நூலகத்திற்குச் சென்றாள்.

நீண்ட படிகள். உயர்ந்த கட்டிடம். சுற்றிலும் இருள். ஆடாமல் அசையாமல் இருந்த மரங்கள்.

அவள் அவசர அவசரமாய்ப் படிகளைத் தாண்டினாள். உள்ளே அமர்ந்திருந்த வயதான குமாஸ்தா அவளை ஆச்சரியத்துடன் பார்த்தார்.

நீண்ட வராண்டாவின் கோடிவரையில் சென்று இடது பக்கம் திரும்பினாள். விசாலமான அறைக்குள்

நுழைந்தாள். உயரமான ரேக்குகளில் புத்தகங்கள் இருந்தன. அவள் தேடத் தொடங்கினாள்.

காலியாக இருந்த ஒரு அடுக்கில் ஒரு மூலையில் ஒரே ஒரு புத்தகம் இருந்தது. அதை யாருமே எடுத்த தில்லை என்பதற்கு அறிகுறியாக அதன்மீது தூசி படிந் திருந்தது.

அந்தப் புத்தகத்தின் பெயர் தந்திரம். அவள் தூசியைக் கூடத் தட்டாமல் அதை எடுத்து வந்து மேஜைக்கு முன்னால் அமர்ந்து கொண்டாள்.

அறையில் யாருமே இருக்கவில்லை.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நம்பூதிரி படித்த புஸ்தகம் அது. அதற்குப் பிறகு யாருமே அதைப் படிக்கவில்லை.

அகரவரிசையில் பார்த்துக்கொண்டே வந்தாள்.

"கேசரி."

அவளுடைய ஆட்காட்டி விரல் அந்த இடத்தில் நின்றுவிட்டது. "கேசரி— பக்கம் 714" என்று இருந்தது. அவள் அவசரமாய்த் திருப்பினாள்.

"கேசரி— கேசரி நாக்கிற்குச் சம்பந்தப்பட்ட ஒரு முத்திரை. பீஜாக்ஷரங்களில் ஓம் எத்தனை உயர்ந்ததோ முத்திரைகளில் அத்தனை உயர்ந்தது கேசரி முத்திரை."

படித்துக்கொண்டே இருந்தபோது சுற்றுச்சுவர்கள் நடுநடுங்குமாறு பெருத்த ஓசை கேட்டது. காதைப் பிளக்கும் அந்த ஓசையைக் கேட்டு சாரதா பயத்தால் நடுங்கினாள். அதைத் தொடர்ந்து நிசப்தம். அவள் மேலும் படிக்கத் தொடங்கினாள்.

படித்து முடித்தபோது நெற்றியில் வியர்த்துக் கொட்டியது. அந்தப் பயங்கரமான அனுபவத்தை நினைத்துப் பார்த்தால் குலை நடுங்கியது. நாக்கை நீட்டி புருவத்தின் மத்தியில் தொட்டுக் காட்டிய பைத்தியக் காரனின் நினைவு வேறு வந்து மேனி நடுங்கியது.

அப்போது கதவின் அருகில் சந்தடி கேட்டது.

"நேரம் முடிந்து விட்டது மேடம்."

அவள் புத்தகத்தை மூடிவிட்டு எழுந்தாள்.

அவள் காரில் வீடு திரும்பிக் கொண்டு இருக்கும் போது மாலையில் நடந்த நிகழ்ச்சியை மனதில் அசை போட்டுக் கொண்டிருந்தாள்.

இதென்ன? யாரோ பைத்தியக்காரன் சொன்ன தற்குக் காரை எடுத்துக்கொண்டு இந்த ராத்திரி வேளை யில் இத்தனைத் தொலைவு வந்திருக்கிறாளே... துளசிக்கு இது தெரிந்தால் தன்னைக் கேலி செய்ய மாட்டாளா? அப்போது தான் அவளுக்கு ஞாபகம் வந்தது. காஷ் மோராவைப் பற்றி ஏதும் படிக்கவில்லையே என்று. அடுத்தமுறை வரும்போது கட்டாயம் அதைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என எண்ணிக் கொண்டாள். ஆனால் அவளுக்கு அதற்கு நேரமே கிடைக்கவில்லை. அவள் அதை மட்டும் பார்த்திருந்தால் காஷ்மோரா விற்கும் கேசரிக்கும் உள்ள தொடர்பை தெரிந்து கொண்டிருப் பாள்.

"காஷ்மோரா மனிதனின் வாய், மூக்கு போன்ற ஏதாவது ஒரு அங்கத்தின் வழியே நுழைகிறது. உள் நாக்கிற்கு மேலே மூன்று பொறிகளும் ஒன்றுகூடும் இடமான திரியத்தை நாக்கால் மூடுவதுதான் கேசரி,

கேசரி முத்திரையிட்ட நபரிடம் காஷ்மோரா நுழைய முடியாது.”

காஷ்மோராவிற்கும், கேசரிக்கும் உள்ள சம்பந்தத் தைத் தெரிந்துகொண்டு இருந்தால், அவள் தன்னை எச்சரித்த பைத்தியக்காரனைத் தேடத்தொடங்கி இருப்பாள். அவன் சந்தான் பக்கீர் என்று தெரிந்திருந்தால், காஷ் மோராவைப் பற்றி ஆராயத் தொடங்கி இருப்பாள்.

வெகு சமீபத்தில் நடக்கவிருக்கும் அசம்பாவிதத்தைத் தடுத்து நிறுத்தி இருப்பாள்.

* * *

“நாம் முதலில் இந்த இடத்தைவிட்டு வெளியேற வேண்டும்— தார்க்கா சொன்னான்.

“இந்தக் கட்டிடம் ஒரு தேன்கூட்டைப் போன்றது. எத்தனை அறைகள் இருக்கின்றன என்று யாராலும் கண்டு பிடிக்க முடியாது. இந்த அறையைவிட்டு வெளி யேறுவது அத்தனைச் சுலபம்என்று தோன்றவில்லை” என்றாள் துளசி.

“நானிருந்த அறையின் மேற்கூரை வழியாய் எட்டிப் பார்த்தது யார்?”

“நான்தான்.”

“நான் அதன் வழியாகத்தான் வெளியே வந்தேன்.”

“அப்போது நீங்கள் எனக்கு நன்றி சொல்ல வேண்டும்.”

“முதலில் இவனை எங்காவது மறைத்து வைக்க வேண்டும்” என்றான் அவன்.

சக்ரவர்த்தியின் உடலை மேஜைக்கு அடியில் தள்ளிக் கொண்டு இருந்தபோது, அந்தப் பாதுகைகள் கண்ணில்பட்டன. அதைத் தொடர்ந்து, தான் வந்த காரியமும், இசகுபிசகாய் மாட்டிக் கொண்ட விஷயமும் நினைவிற்கு வந்தன.

அடுத்த நிமிடம் அவள் தார்க்காவையும் மறந்து விட்டு சோதனையில் இறங்கினாள். பாதுகைகளைத் தரை யில் பதித்த காரணம் என்ன? அவள் மேஜைக்கு அடியில் குனிந்து பாதுகையைப் பலமாக இழுத்தாள். அது கையோடு வந்தது. அதற்குப் ப்ளக்கும், ப்ளக்கிலிருந்த பின்னும் அவளுக்கு வியப்பைத் தந்தன. அதற்குள் அவளுக்கு மேஜையின் மேற்பரப்பு சொர சொரவென்று இருந்தது நினைவிற்கு வந்தது. எழுந்து மேஜையின் விரிப்பை வேகமாக இழுத்தாள். அதற்குக் கீழே கறுப்பாய்த் தென்பட்டது.

கார்பன் பேப்பர்.

அவள் அதை எடுத்து அடியில் என்ன இருக்கிற தென்று பார்த்தாள். வெள்ளை நிற சைனா பட்டுத் துணியின் ஒரு மூலையில் கயிறு கட்டப்பட்டிருந்தது. அந்தக் கயிறு மேஜையின் அடிப்பக்கத்துடன் இணைக்கப் பட்டிருந்தது.

"பக்தர்கள் கேள்விகளை எழுதும்போது அதன் நகல் சைனா துணியின்மீது விழும். பிறகு எங்கிருந்தோ அந்தக் கயிற்றை இழுப்பார்களாயிருக்கும். ஆனால் சித்தேஸ்வரி நாற்காலியைவிட்டு எழுந்திருக்காமலேயே கேள்வி களுக்குப் பதிலளிக்கிறாளே எப்படி?..." அவள் சற்று யோசித்தாள்.

தார்க்கா பார்வையாளனாய்க் கவனித்துக் கொண்டு இருந்தான். அவள் முகத்தில் தெரிந்த கூர்மையும், நடையில் தெரிந்த சுறுசுறுப்பும் விஷாச்சிளையிடம் அவன் சீடனாக இருந்த நாட்களை நினைவூட்டின.

துளசி மேலும் மேஜையின் கால்களை ஆராய்ந்தாள். ஒரே ஒரு கால் மட்டும் வித்தியாசமாக இருந்தது.

அதனடியில் இருந்த கம்பளத்தை ஆராய்ந்தாள். முண்டாசுக் கயிறு தென்பட்டது. அதைத் தொடர்ந்து போனாள். அது அடுத்த அறைக்குள் சென்றது. அந்த அறையில் அடியெடுத்து வைத்தவள் அதிர்ந்து போனாள்.

அந்த அறையில் சிறிய ட்ரான்ஸ்மிட்டர் இருந்தது.

உற்சாகத்துடன் விசில் அடிக்கப் போனவள், நிறுத்தி விட்டு, "இதுதானா விஷயம்?" என்றாள்.

தார்க்கா "என்ன?" என்று கேட்டான்.

"சித்தேஸ்வரி இந்த நாற்காலியில் அமர்ந்து பாதுகைகளுக்குள் தன் கால்களை நுழைப்பாள். பாதுகைகளில் உள்ள வயர்களுடன் அவன் காதிற்கு அருகிலுள்ள ஹெட் ஃபோன் இணைக்கப்பட்டு இருக்கும். பக்தர்கள் கேள்விகளை எழுதியதும் கார்பன் பேப்பர் மூலமாய் அதன் நகல் கீழே இருக்கும் பட்டுத் துணியில் படிகின்றது. அந்தத் துணியை பக்கத்து அறையில் இருக்கும் உதவியாளன் கயிற்றால் இழுப்பான். துணி கையில் வந்ததும் கேள்வியை ட்ரான்ஸ் மீட்டர் வழியாகச் சொல்வான். பாதுகையின் வழியாக சித்தேஸ்வரியின் காதுகளில் அந்தக் கேள்வி விழும். பாக்கி விஷயங்கள் நமக்குத் தெரிந்ததுதான்" — துளசி விளக்கமாகச் சொன்னாள்.

தார்க்காவால் இந்த மோசடியை அத்தனை எளிதில் ஜீரணிக்க முடியவில்லை.

துளசி மேலும் சொன்னாள்:

"மக்களுடைய அறியாமையைப் பயன்படுத்திக் கொண்டு சித்தேஸ்வரி லட்சக் கணக்கில் பணம் சம்பாதிக் கிறாள். மிகக் கெட்டிக்காரத்தனமாகப் போடப்பட்ட திட்டம் இது."

"மக்களை ஏமாற்றுவது அத்தனைச் சுலபமா?"

"விஷயம் தெரிந்தால் சுலபம்தான். தெரியாதவர்கள் மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்தி என்று நினைத்துக் கொள்வார்கள்."

சக்தி என்றதும் அவளுக்குக் காற்றில் எழும்பிய மண்டையோட்டின் நினைவு வந்தது.

அடுத்த அறைக்கு ஓடினாள். அந்த அறை இருட்டாக இருந்தது. மேஜையின்மீது மண்டையோடு... நெருப்புக் காளங்களைப்போல் மினு மினுக்கென்று பளிச்சிட்ட கண்கள்... இந்த முறை அவள் பயப்படாமல் அதைக் கையிலெடுத்தாள்.

"அது காலி மண்டையோடு இல்லை" பின்னாலிருந்து வந்த தார்க்கா சொன்னான். அருகில் வந்தவன் அவளி டம் இருந்த அதை வாங்கிக் கொண்டான். நெற்றிக்கு அருகிலிருந்த பிளவை அகலமாக்கி அதை இரண்டாக உடைத்தான். உள்ளே சிறிய ஸ்பீக்கர் தென்பட்டதைக் கண்டதும் துளசியின் இதழ்களில் மெல்லிய புன்னகை தோன்றியது. குனிந்து மேஜைக்கு அடியில் பார்த்தாள். எதிர்பார்த்தது போலவே அங்கே ஒரு காயில் இருந்தது.

"மண்டையோடு பேசியது என்றால் எல்லோரும் அதைத்தான் சோதனை செய்வார்கள். உங்களுக்கு எப்படித் தெரிந்ததோ தெரியாது. என் கண்களுக்கு அது சாதாரண மண்டையோடாகத்தான் தெரிந்தது."

தார்க்கா பேசவில்லை. கபாலங்களுடன் தனக்கு இருக்கும் பரிச்சயம் பற்றி அவளுக்குச் சொல்ல விரும்ப வில்லை.

"அதிலும் மண்டையோட்டிற்கு எந்த விதக் கனெக்ஷன்களும் இல்லாததால் யாருக்கும் மேஜைக்கு அடியில் பார்க்க வேண்டும் என்ற நினைப்பு வராது. நீங்கள் பிஸிக்ஸ் படித்திருக்கிறீர்களா?"

"இல்லை."

"இன்டக்ஷன் மூலமாய் வார்த்தைகள் மண்டை ஓட்டிலிருந்து வருவது போல் தோன்றும். உங்களுக்கு பிஸிக்ஸ் தெரியாவிட்டால் அதைப்பற்றி என்ன சொன்னாலும் புரியாது."

"ஆனால் சித்தேஸ்வரிக்கு உண்மையிலேயே அபூர்வ சக்திகள் இருக்கின்றன. சுயமாய்ப் பார்த்தேன். இல்லா விட்டால் நம்பியிருக்க மாட்டேன்" என்றான் தார்க்கா.

"கதவைச் சாத்திவிட்டு இரும்புப் பெட்டியில் உட்கார்ந்து கொள்வதைத்தானே சொல்கிறாய்?" சிரித் தாள் துளசி. "அவள் மடியில் இருக்கும் தேவி விக்கிரகத் தில் இருக்கிறது விஷயம். அதிலிருந்து பிராண வாயு உற்பத்தியாகிறது."

"அதில்லை. அவள் என் கையில் விபூதி வரவழைத் தாள்."

"என்ன?"

தார்க்கா விளக்கினான்.

அதைக் கேட்டு துளசி சிரித்தாள். "கொஞ்சம் சாம்பல் இருந்தால் நானும் அந்த வித்தையைக் காட்டுகிறேன்."

அவன் சுற்றிலும் பார்த்தான். எதுவும் கிடைக்க வில்லை. அவன் பார்வை துளசியின் முகத்தின் மேல் நிலைத்தது. அவள் புரிந்து கொண்டவள்போல் தன் குங்குமப் பொட்டைத் தடவிப் பார்த்துக் கொண்டாள். அவன் கைகளை நீட்டியவாறு நின்று கொண்டிருந்தான். "அப்படியில்லை" என்று அவன் உள்ளங் கைகளைக் கீழ் நோக்கி மடக்கி வைத்துவிட்டு தன் நெற்றியிலிருந்த குங்கு மத்தை எடுத்து அவனது வலது மணிக்கட்டில் தெளித் தாள். "இரண்டு கைகளையும் திறந்து பாருங்கள்" என்றாள்.

அவன் கைகளைத் திறந்தான். இடது கையில் குங்குமம் இருந்தது.

அவன் திகைப்புடன் "எப்படி வந்தது?" என்றான்.

துளசி புன்முறுவலுடன், "வியப்பில் இருந்ததால் உங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் நான் செய்த காரியத்தைக் கூர்ந்து கவனித்தால் வலது கையிலிருந்து இடது கைக்குக் குங்குமம் எப்படி வந்ததென்று புரியும்" என்றாள்.

அவன் கண்களை மூடிக்கொண்டு ஒரு நிமிடம் யோசித்துவிட்டு எல்லாம் புரிந்தது போல் சிரித்தான்.

"பரவாயில்லையே... உனக்கு மூளை இருக்கிறதே..." என்று வியப்பைக் காட்ட நினைத்து அவன் முகத்தைப் பார்த்துச் சிரித்துவிட்டு "சாரி" என்றாள். ஏற்கெனவே அவன் முகம் ரோஷத்தினால் சிவந்துவிட்டிருந்தது.

தொலைவில் கடிகாரம் பன்னிரண்டு அடித்தது.

"நள்ளிரவாகிவிட்டது" என்றாள் துளசி.

தார்க்கா திடுக்கிட்டான். முடிந்துவிட்டது.

கடைசி நாள். காஷ்மோரா துயிலெழுந்திருக்கும்.

இனி தன்னுடைய சூனியம் பலிக்காது. அதாவது இனிமேல் துளசியைத் தன்னால் கண்டு பிடிக்க முடியாது. இந்த நேரத்தில் பிஸ்தா கிராமத்து மயானத்தில் பதினோரு ஆண்டுகளாய் உறங்கிக்கொண்டு இருந்த காஷ்மோரா எழுந்து விட்டிருக்கும். துளசியின்மீது பகை தீர்த்துக் கொள்வதற்காகப் புறப்பட்டிருக்கும். தானோ விஷாச்சி வேண்டுகோளை நிறைவேற்ற இயலாதவனாகி விட்டேன்.

பூததேவதைகள் உறங்கத் தொடங்கினால் திரும்ப எழுந்திருக்காது. ஆனால் காஷ்மோரா அப்படியில்லை. அதன் பகைமை தீரவே தீராது.

துளசி தார்க்காவை அச்சத்துடன் பார்த்தாள். திடீரென அவனிடம் மாற்றம்.

அவன் மனதில் ஆயிரம் எண்ணங்கள் அலை மோதிக் கொண்டு இருந்தன. காஷ்மோரா துளசியைப் பிடித்துவிடும். அதன் பிறகு ஏழு நாள்களில் அவள் இறந்து விடுவாள். அத்துடன் அவனும் இறப்பது உறுதி. அவன் சாவுக்கு அஞ்சவில்லை. தோல்விதான் அவனை வருந்தச் செய்து கொண்டிருந்தது.

“காஷ்மோரா... காஷ்மோரா...” என்று முணுமுணுத்தான்.

அவனுடன் பேச்சைத் தொடரவும், அவனைப் பேச வைக்கவும் துளசிக்கு வழி கிடைத்தது.

“காஷ்மோரா” என்றாள்.

தார்க்கா நிமிர்ந்தான்.

"எங்கள் வீட்டிலும் எல்லோரும் சேர்ந்து சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் நேரத்தில் அவ்வப்போது காஷ்மோரா என்ற பெயர் அடிபடும். காஷ்மோரா என்றால் என்ன?"

தார்க்கா உடனே பதில் சொல்லவில்லை. சற்றுப் பொறுத்து நிதானமாகச் சொன்னான். "சரியாக ஐந்து நிமிடங்களுக்கு முன்னால் காஷ்மோரா துயில் எழுந் திருக்கும்– சரியாகப் பதினொரு வருடங்களுக்குப் பிறகு" தார்க்காவின் குரல் கம்மியது.

"காஷ்மோரா என்ன கும்பகர்ணனா. பதினொரு வருடங்களுக்குப் பிறகு எழுந்து கொள்வதற்கு?" என்று சொல்லிச் சிரித்தாள் துளசி.

தார்க்கா மெதுவாகத் தலையை உயர்த்தினான். உணர்ச்சி மிகுதியால் அவன் குரலில் நடுக்கம் இருந்தது. "அறுபத்திரண்டு பூததேவதைகளின் சேர்க்கை... பதினைந்தாவது வித்தை... அதுதான் காஷ்மோரா" என்றான்.

துளசி இரக்கத்துடன் அவன் பக்கம் பார்த்தாள். விஞ்ஞானம் எவ்வளவு முன்னேறி இருக்கிறது. தன் போன்ற பெண்கள்கூட போலிச் சாமியார்களின் மோசடி களை வெளிப்படுத்த உயிரையே பொருட்படுத்தாமல் காரியங்களில் ஈடுபடுகிறார்கள். இளைஞர் சமுதாயம் என்னென்னவோ செய்து கொண்டிருக்கும்போது இந்த இளைஞன் பாவம்... எதுவரையில் படித்திருக்கிறானோ தெரியவில்லை. ஏதோ பழங்காலத்து ஆங்கில சினிமாவில் வருவதுபோல் காஷ்மோரா துயிலெழப் போகிறது என்கிற பிரமையில் ஆழ்ந்து முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு இருக்கிறான். துளசிக்கு அவனை அழ வைக்க வேண்டும் போலிருந்தது.

"காஷ்மோரா தூங்கப்போனது எப்போது என்று உனக்கு எப்படித் தெரியும்? அதாவது ஏதோ மரத்தின் கிளை மீதோ, ஓட்டைக்குள்ளோ காஷ்மோரா படுத்துக் கொண்டதை நீ பார்த்திருக்கிறாயா?"

அந்தப் பேச்சிலிருந்த கேலியை அவன் புரிந்து கொள்ளவில்லை. அவள் தன்னை ஏளனம் செய்யக்கூடும் என்ற எண்ணமே அவனுக்கு வரவில்லை. "காஷ்மோரா அதிருப்தியோடு உறங்கப் போயிருப்பதாக என்னுடைய குரு சொல்லி இருக்கிறார். பதினொரு ஆண்டுகள் நீண்ட உறக்கம்"... நேர்மையாகப் பதிலளித்தான்.

பொங்கி வந்த சிரிப்பை, இதழ்களை இறுக்கிக் கட்டுப் படுத்தியவளாய், "சரியாக இன்றுதான் எழுந்திருக்கும் என்று எப்படித் தெரியும்? டெலிபதி மூலமாய் செய்தி ஏதாவது அனுப்பியதா?"

அவள் உபயோகித்த ஆங்கிலச் சொற்கள் அவனுக்குப் புரியவில்லை. "நாளொன்றுக்கு ஒரு குச்சியாக முப்பது குச்சிகள். அதுபோல பன்னிரண்டு முடிந்தால் ஒரு வருடம். ஐந்து கணுக்கள் சேர்ந்தால் ஐந்து வருடங்கள்"– என்றான் தார்க்கா.

அப்போது வேறொரு கடிகாரம் பன்னிரண்டு அடித்தது. இந்த முறை அவனால் ஆவேசத்தைக் கட்டுப் படுத்த முடியவில்லை. பிஸ்தா கிராமத்து மந்திர வாதியாய் மாறி திசைகள் அதிருமாறு "தோற்று விட்டேன் விஷாச்சி" என்று அந்தக் கட்டிடமே எதிரொலிப்பது போல் கத்தினான்.

பூஜையில் இருந்த சித்தேஸ்வரி திடுக்கிட்டாள். வேக வேகமாய் அந்த அறையை நோக்கி வரத் தொடங்கினாள்.

"இப்படிக் கூச்சல் போடலாமா? எல்லோரும் வந்து விடுவார்கள்" என்றாள் துளசி. தார்க்கா மெதுவாகச் சமாளித்துக் கொண்டான்.

அது நள்ளிரவு என்பதால் யாரும் இருக்க மாட்டார்கள் என்று துளசி எண்ணினாள். ஆனால் சித்தேஸ்வரி கோயிலில் பெரும்பாலான பூஜைகள் நள்ளிரவில்தான் நடக்கும் என்று அவளுக்குத் தெரியாது. அதிலும் அன்று மகாபூஜை. நாட்டின் பல இடங்களிலிருந்தும் பெரும் தலைவர்கள் பலரும் வந்திருந்தார்கள்.

சித்தேஸ்வரி ஒவ்வொரு அறையாகத் தேடிக் கொண்டு வந்தாள். அவள் முகம் சிவந்திருந்தது.

அறையில் துளசி தார்க்காவை இரக்கத்துடன் நோக்கினாள். தான் இத்தனை பாடுபட்டு விஞ்ஞானத்தைப் பற்றி எடுத்துச் சொல்லி மனிதர்களின் அறியாமையை விரட்டியடிக்க முயற்சி செய்யும்போது இந்த இளைஞன் இன்னும் பூததேவதைகளை நம்பும் பழம் காலத்தில் இருக்கிறானே?

எப்படி இவனை மாற்றுவது? அதற்குள் அவள் மூளையில் ஏதோ பளிச்சிட்டது.

"ஐந்து வருடங்களுக்கு ஐந்து கணுக்கள், முப்பது நாட்களுக்கு முப்பது குச்சிகள் அப்படித்தானே?"

"அந்தக் கணக்கெல்லாம் தவறு என்று இப்போது புரிகிறதா?"

"எப்படி?"

"ஒவ்வொரு மாதத்திற்கும் முப்பது நாள்கள் மட்டுமே இருக்காது. சிலவற்றிற்கு முப்பத்து ஒன்று, பிப்ரவரி மாதத்திற்கு இருபத்தி எட்டுதான்."

தார்க்கா கற்சிலையாகி விட்டான். அமாவாசை, பௌர்ணமியின் துணைகொண்டு விஷாச்சி நாள்களை எண்ணி இருக்கிறான்.

ஆனால் என்ன? நல்லதுதான் நடந்திருக்கிறது.

தன் வார்த்தைகளின் பாதிப்பு அவன் மீது எப்படி இருக்குமோ என்ற நினைப்புடன் துளசி அவன் பக்கமே பார்த்துக்கொண்டு இருந்தாள். அவன் முகத்தில் தோல்விக்குப் பதில் மகிழ்ச்சி குடிகொண்டு வரும்போது வெளியில் சித்தேஸ்வரி வந்து கொண்டிருந்த சத்தம் கேட்டது.

* * *

அதே நேரத்தில் இஸ்மாயில் தன் குடிசைக்குள் அமர்ந்து கைகளைக் காற்றில் நீட்டியவாறு தொழுது கொண்டு இருந்தான்.

முப்பத்து ஐந்து வயதுகூட நிரம்பாத இஸ்மாயில் ஐம்பது வயதுக்கரனைப்போல தோற்றமளித்தான். தலைமுடி முழுவதும் நரைத்து விட்டிருந்தது. கன்னங்களில் சுருக்கம் விழுந்திருந்தது. ஆனால் முகத்தில் புன்னகை மட்டும மாறவே இல்லை.

சூனியத்தைத் திருப்பியடிக்கும் போது நடந்த குளறுபடியால் அவன் இப்படி ஆகிவிட்டான் என்று சிலர் கூறுவார்கள். யாராவது அவனிடம் இதைப்பற்றிக் கேட்டால் சிரிப்பான்.

"ஆஞ்சநேயரை வழிபடும் என்னை யாரும் எதுவும் செய்ய முடியாது" என்று சொல்வான்.

அவனுக்குக் குழந்தைகள் என்றால் அலாதிப் பிரியம். அதனால்தான் இருபது ஆண்டுகளாய்ப் பள்ளிக்கூட பஸ்

க்ளீனராக வேலை பார்த்து வருகிறான். அவன் வாழ்க் கையே பஸ்ஸிற்கு வரும் குழந்தைகளுக்கு குட்மார்னிங் சொல்வதிலும், இறங்கும்போது குட் ஈவினிங் சொல்வ திலும் திருப்தியோடு கழிந்து வந்தது.

ஒரு பேட்சிற்குப் பின்னால் இன்னொரு பேட்ச் என்று ஒவ்வொரு ஆண்டாய் மாறும் குழந்தைகளும், மனதில் நிழலாடும் நினைவுகளும்...

பஸ் அந்த வீதிவழியாய்ப் போகும்போதும், அந்த வீட்டைத் தாண்டும்போதும்... நேரம் நெருங்கிவிட்டது போல்... கிட்டத்தட்ட வந்துவிட்டதுபோல் தோன்றும்.

அவன் ஒவ்வொரு நாளும் துளசியைப் பார்த்துக் கொண்டேதான் இருந்தான்.

சீருடை அணிந்து ஹைஸ்கூலிற்குப் புறப்படும் துளசி... அடக்கமாய்ப் புடவை அணிந்து கல்லூரி மாணவியாய்த் துளசி...

ஒவ்வொரு நாளும் செல்லச் செல்ல அவன் தவிப்பு அதிகமாகிக்கொண்டு இருந்தது, வரப்போகும் மரண ஹோமத்தை நினைத்து.

வாய்விட்டுச் சொல்லவும் யாரும் இல்லை. காஷ் மோரா பதினோரு ஆண்டுகளுக்குப் பிறகு திரும்பி வரப் போகிறது என்று அவனுடைய உள்ளுணர்வு எச்சரித்துக் கொண்டு இருந்தது. இந்த முறை இரு மடங்கு பகைமை யுடன் வடக்குத் திசையிலிருந்து தேடிக் கொண்டே வந்து துளசியைப் பிடித்துத் தின்றுவிடப் போகிறது.

எப்படித் தடுத்து நிறுத்த முடியும் என்று புரியாமல் தவித்துக் கொண்டு இருந்தான்.

ஸ்ரீதரிடம் சொல்லி விடலாம். ஆனால் என்ன பிரயோசனம், தந்தையின் உள்ளத்தை வருத்துவதைத் தவிர? நடக்கப்போவது நடந்தேதான் தீரும். அதை முன்பாகவே சொல்லி வருத்தப்பட வைப்பானேன் என்று இத்தனை நாளாய்ப் பேசாமலிருந்தான்.

ஆனால் நாட்கள் செல்லச் செல்ல அவனால் சும்மா யிருக்க முடியவில்லை. ஸ்ரீதரின் வீட்டிற்குப் போனான். ஸ்ரீதர் இந்த ஊரிலேயே இல்லையென்றும், வெளி நாட்டிற்குச் சென்றிருப்பதாகவும் தெரிந்தபோது மனம் ஒடிந்துவிட்டது அவனுக்கு.

காஷ்மோராவைப் பற்றி தெரிந்தவர்கள் இருவர். அவனுக்கும், தெருத் தெருவாய் அலையும் அந்தச் சந்தான் பக்கீருக்கும்தான் காஷ்மோராவைப் பற்றித் தெரியும்.

சவ ரூபம், ஸ்மசானவாஸினி, க்ரீம், ஹ்ரீம், தட்சிண தாசி.

அந்த நினைப்பே அவனை நடுங்கச் செய்தது. மூக்கில் இருந்து வழிந்தோடும் இரத்தம் நாவல் பழ நிறத்தில் இருக்கும். இடதுகால் தரையில் படியாது.

துயில் கலைந்து வரும் காஷ்மோராவிற்குப் பஞ்ச பூதங்களும் துணைபுரியும். பஞ்ச பூதங்கள் என்றால் பூமி, நீர், காற்று, அக்னி, ஆகாயம் ஆகியவை.

இதெல்லாம் தெய்வத்தால் தோற்றுவிக்கப்பட்டவை. ஆனாலும் சாத்தானுக்குத் துணை புரியும். பூமியிலிருந்து மாமிசமும், நீரிலிருந்து இரத்தமும், அக்னியிலிருந்து பசியும், காற்றிலிருந்து உள்ளமும், ஆகாயத்திலிருந்து காமமும் தோன்றின. இவை யாவும் பூததேவதையின் அம்சங்கள் என்பதால் பூத தேவதைகளுக்குப் பஞ்ச பூதங்களும் துணையாக இருக்கின்றன.

இன்னும் குறுகிய காலத்தில் காஷ்மோராவின் துயில் கலையப் போகிறது.

அப்போது நிலம் நடுங்கும், வாயு சூறாவளியாய் மழையோடு சேர்ந்து வீசும். அத்தனை மழையிலும் மயானத்தில் அக்னி கொழுந்து விட்டெரியும். அக்னிக்கு நீர் துணை புரியும். இந்த ஐந்திலிருந்துதான் காஷ்மோரா எழுந்து வரும்.

இஸ்மாயில் நடுங்கினான். ஏதாவது செய்ய வேண்டும்.

அன்று மதியம் அவன் வித்யாபதி வீட்டிற்குப் போனான்.

முதன் முறையாய்த் துளசி விஷயமாய்த் தன் வீட்டிற்குக் கலவரத்தோடு வந்த ஸ்ரீதர், வித்யாபதி இரு வரையும் அவனுக்கு நன்றாக நினைவிருந்தது. பிஸ்தா விற்குப் போனவர்களில் வித்யாபதியும் இருந்தார் என்று அவனுக்குத் தெரியும்.

பதினொரு ஆண்டுகளுக்குப் பிறகு தன்னைச் சந்திக்க வந்த பஸ் க்ளீனரை வித்யாபதி ஆர்வத்துடன் வர வேற்றான். காலம் வித்யாபதியின் முகத்தில் பல மாற்றங் களை ஏற்படுத்தியிருந்தது. வழுக்கைத் தலை, டயாபடிஸ், மூச்சுவிட முடியாத அளவுக்கு வேலைகள்.

நாற்காலியில் ஒடுங்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

"சொல்லு. இஸ்மாயில்..." வித்யாபதி கேட்டான்.

சில சட்ட விஷயங்களைப்பற்றிப் பேச ஐந்து நிமிடங் களில் பெரிய க்ளையண்ட் ஒருவர் வரப் போகிறார். அந்தப் பரபரப்பில் இருந்தான் அவன்.

இஸ்மாயில் நடுங்கும் விரல்களைக் கோர்த்துக் கொண்டு பதட்டத்துடன் "காஷ்மோரா எழுந்து கொள்ளப் போகிறது, சார்" என்றான்.

வித்யாபதி நெற்றியைச் சுளித்து "எந்தக் காஷ் மோரா?" என்று புரியாமல் கேட்டான்.

இஸ்மாயில் சிலையாகி விட்டான். அதற்குள் வித்யா பதி "ஓ... அந்தக் காஷ்மோராவா?" என்றான் புரிந்து விட்டதுபோல். பிறகு நாற்காலியில் பின்னால் சாய்ந்து கொண்டே, "அதனால் என்ன?" என்று கேட்டான்.

இந்தக் கேள்வியை இஸ்மாயில் எதிர்பார்க்கவில்லை. "அதைத் தடுத்து நிறுத்த வேண்டும்" என்றான் மெதுவாய்.

"எப்படி?"

அதற்கு என்ன பதில் சொல்வதென்று இஸ்மாயி லுக்குத் தெரியவில்லை. எதிராளியின் மௌனத்தை எப்படிச் சாதகமாக்கிக் கொள்ள வேண்டும் என்று வித்யா பதிக்கு நன்றாகவே தெரியும்.

"எதோ அப்போது இளமைத் துடிப்பில் சாகசம் செய்வதாக நினைத்துக்கொண்டு ஏதோ செய்தோம். இப்போது அதை நினைத்துப் பார்த்தால் சிரிப்புத்தான் வருகிறது. கதையாகச் சொல்ல, கேட்பதற்கு நன்றாகத் தான் இருந்தது. ஆனால் இப்போது மறுபடியும் சொன்னால் முட்டாள்தனம் என்பார்கள். அந்தக் காலத்தில்கூட எனக்கு இவற்றில் அதிகமாக நம்பிக்கை இருந்ததில்லை. விஞ்ஞானம் இந்த அளவிற்கு முன்னேறி இருக்கும்போது, லீடிங்க் லாயராக இருக்கும் நான் மந்திரம், தந்திரம், பூஜைகள் என் சொன்னால் கேட்பவர் கள் சிரிப்பார்கள். லாஜிக்காக யோசித்துப் பார்ப்போம்.

காஷ்மோரா எழுந்து கொள்ளாமல் தடுக்க வேண்டும் என்கிறாய். அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று உனக்குத் தெரியாது. பிறகு எதற்காக வந்து சொல் கிறாய்? இரக்கம் பெறுவதற்காகவா அல்லது ஏதாவது உதவிக்காகவா?"

இஸ்மாயில் பேசவில்லை. என்ன பேசுவது என்று தெரியவில்லை.

வித்யாபதி மணி அடித்து குமாஸ்தாவை அழைத் தான். "இதோ... இவனுக்கு நூறு ரூபாய் கொடுத்து அனுப்பு" என்று கூறிவிட்டு மறுபடியும் தன் வேலைகளில் ஆழ்ந்து போனான். அவன் மட்டும் தலையை உயர்த்தி இஸ்மாயிலைப் பார்த்திருந்தால் அவன் கண்களில் தேங்கி நின்ற கண்ணீரைக் கவனித்திருப்பான்.

இஸ்மாயில் மௌனமாக வெளியேறினான்.

குமாஸ்தா ரூபாயை எடுத்துக்கொண்டு வந்தபோது இஸ்மாயில் அங்கே இல்லை. அவனுக்குக் கொடுத்து விட்டதாய்க் கணக்கு எழுதிவிட்டு தன் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான்.

அன்று நடந்த நிகழ்ச்சி அவன் மனத்தை வருத்தியது. அவன் ஏழையாக இருக்கலாம். மந்திர தந்திரங்களால் பூததேவதைகளை வழிபடுபவனாக இருக்கலாம். ஆனால் தன் கண் முன்னால் வளர்ந்த துளசியின் உயிருக்கு ஆபத்து என்றபோது பார்த்துக்கொண்டு சும்மாயிருக்க முடிய வில்லை. அவனால் என்ன செய்ய முடியும்? வெள்ளத்தில் அடித்துப்போகிறவன் துரும்பைப் பற்றிக் கொள்ள முனைந்ததுபோல் சந்தான் பக்கீரைத் தேடி அலைந்தான். பக்கீர் இருப்பதோ ஊருக்கு வெளியில் நதியைத் தாண்டி இருக்கும் பாழடைந்த கோட்டைக்குள்.

அப்போது நள்ளிரவு தாண்டியிருந்தது. பகல் முழுவதும் பைத்தியக்காரனைப்போல் பேசித் திரியும் பக்கீர் சாதாரணமாகப் பேசுவது நள்ளிரவு நேரத்தில்தான்.

* * *

நள்ளிரவு நிசப்தத்தைச் சிதறடித்துக்கொண்டு வாசலுக்கு வெளியில் சத்தம் கேட்டது. துளசி துள்ளிக் குதித்து மேஜையின் கீழே புகுந்தாள். அங்கேதான் சக்ரவர்த்தியின் உடல் கிடந்தது. அவள் அதன் பின்னால் ஒளிந்து கொண்டாள்.

கதவைத் திறந்த சித்தேஸ்வரியைக் கண்டதும் அவள் இதயம் வேகமாய்த் துடிக்கத் தொடங்கியது.

அறையின் நடுவில் தார்க்கா நின்றிருந்தான். அவனைப் பார்த்து, "நீ இந்த அறைக்குள் எப்படி வந்தாய்?" என்று கேட்டாள். தார்க்கா பேசவில்லை. அவள் பார்வை வெண்டிலேட்டரிடமிருந்து அறையில் இருந்த பொருட்களின் மேல் விழுந்தது. மேஜை விரிப்பும், கார்பன் பேப்பரும் இழுக்கப்பட்டு இருந்ததைக் கண்டாள். பாதுகை இடம் மாறி இருப்பதைக் கவனித்தாள். அவள் முகத்தில் உணர்ச்சிகள் மாறத் தொடங்கின.

நெருப்பைக் கக்கும் விழிகளுடன் "இதெல்லம் நீ செய்த காரியம்தானா?" என்று கேட்டாள். தார்க்கா அதற்கும் பதிலளிக்கவில்லை.

மேஜைக்கடியில் அமர்ந்திருந்த துளசிக்கு வியர்த்துக் கொட்டியது.

"இதெல்லாம் என்ன?" மிரட்டுவதுபோல் கேட்டாள் சித்தேஸ்வரி.

தார்க்கா சிரித்தான். "கேள்வி ஏதாவது இருந்தால் காகிதத்தில் எழுது சித்தேஸ்வரி. பதில் சொல்கிறேன்."

"ஓஹோ... எல்லாம் கண்டு பிடித்து விட்டாயா? மூடனே... உன் காலடியில் இருக்கும் பஸ்பம் உன்னை எரித்துவிடும். ஜாக்கிரதை."

"கைகளை நீட்டு சித்தேஸ்வரி நானும் விபூதியை வரவழைக்கிறேன்."

இவர்களுடைய உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த துளசிக்குத் தார்க்கா இப்படிச் சித்தேஸ்வரியிடம் பேசிக்கொண்டு இருந்தது பிடிக்கவில்லை. சித்தேஸ்வரி வெகுநேரம் இந்த அறையில் இருந்தால் ஆபத்து.

சித்தேஸ்வரியின் உடல் ஆவேசத்தால் நடுங்கிக் கொண்டிருந்தது. "இத்தனை நாளாய் நான் ரகசியமாகக் காப்பாற்றி வந்தவற்றை நீ தெரிந்துகொண்டு விட்டாய் தார்க்கா. உண்மையிலேயே நீ மிகவும் புத்திசாலி. இத்தனைப் புத்திசாலியாக இருப்பவன் எனக்குச் சமமாய் இந்தப் பூமியில் இருக்கக் கூடாது. உன்னைத் தேவிக்கு நைவேத்தியமாய் அர்ப்பணிக்கப் போகிறேன்."

"அப்படியானால் நீ என்னைக் கொல்லப் போகிறாயா?"

"சந்தேகமில்லாமல்."

"எல்லாம் தெரிந்துவிட்டது, ஒரே ஒரு விஷயத்தைத் தவிர, என்னைக் கொல்வதற்கு முன்னால் அதையும் சொல்லி விடு. எதற்காக இந்தப் பெண் வேடத்தைப் போட்டுக்கொண்டு இருக்கிறாய்?"

இதைக் கேட்ட துளசி திடுகிட்டாள். சித்தேஸ்வரி பெண் இல்லையா? அவளால் ஆர்வத்தை அடக்கிக்

கொள்ள முடியவில்லை. முன்னால் கிடந்த சக்ரவர்த்தி யின் உடலைப் பக்கத்தில் நகர்த்தி தலையை நீட்டிப் பார்த்தாள். சக்ரவர்த்தி இறந்து பிணமாகிவிட்டதை அவள் அறிந்திருக்கவில்லை. உணர்ச்சி வசப்பட்டு தான் எவ்வளவு பெரியதவறைச் செய்துவிட்டோம் என்று அவள் அறியவில்லை.

தார்க்கா பார்த்துக்கொண்டு இருக்கும்போதே சித்தேஸ்வரி கேசங்களை இரு பிரிவுகளாகப் பிரித்து விக்குடன் கறுப்பாக இருந்த ஹெட்ஃபோனை எடுத்து மேஜையின் மேல் வைத்தாள். அதன் பிறகு இரண்டு கைகளாலும் கழுத்திற்குப் பின்னாலிருந்த விக்கை இழுத் தாள்.

நேரடியாகப் பார்த்துக் கொண்டிருந்த தார்க்காவும், மறைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த துளசியும் கற்சிலைகளாகி விட்டார்கள்.

சித்தேஸ்வரியின் மொட்டைத் தலையைப் பார்த்து வியப்படையவில்லை அவர்கள், உச்சந்தலையிலிருந்து வெளியே நீட்டிக் கொண்டிருந்த வயர்களை, காதுக்குக் கீழே சிறிய பரிமாணத்தில் இருந்த ரேடியோ ஆக்டிவ் ஐஸோடோப் ப்ளூடோனியம்–239 பாக்கெட்டையும் பார்த்ததில் அதிர்ச்சி ஏற்பட்டது அவர்களுக்கு.

"இவற்றையெல்லாம் மறைக்கத்தான் தார்க்கா நான் பெண்ணாக உருவெடுத்தேன். அதோடு ஆண் துறவிகளை விட இந்த நாட்டில் பெண் துறவிகளுக்குத்தான் மதிப்பும் மரியாதையும் அதிகமாய்க் கிடைக்கும்."

துளசியால் தன் கண்களுக்கு முன்னால் தெரியும் காட்சியை நம்ப முடியவில்லை. சித்தேஸ்வரி ஆண் என்பதோடு அவன் மூளையில் ஏதோ மிஷின் இருக்கிறது.

சித்தேஸ்வரியின் மொட்டைத் தலையிலிருந்து காது வரையிலும் சென்ற வயர்கள் விகாரமாய் வெளியில் நீட்டிக் கொண்டு இருந்தன. காதோடு ஒட்டிக்கொண்டு இருந்தது ப்ளூட்டோனியம் பாக்கெட்.

அந்தக் காட்சியை மேலும் பார்க்க முடியாதவளாக துளசி சட்டென்று பின்னுக்கு நகர்ந்து கொண்டாள். சக்ரவர்த்தியின் உடல் அங்கே கிடந்ததை அவள் மறந்து விட்டாள். பின்னால் நகர்ந்ததும் அவன் கால் மெத் தென்று பட்டன. ஏற்கெனவே பயந்திருந்த அவள் சட்டென்று அந்தக் கால்களை முன்னுக்குத் தள்ளி விட்டாள். டப்பென்ற சத்தத்துடன் அந்தக் கால்கள் மேஜைக்கு வெளியே வந்து விழுந்தன.

சித்தேஸ்வரி சட்டெனத் திரும்பினாள்.

திடீரென்று அந்த அறையில் நிலவிய நிசப்தம் குலை நடுங்க வைப்பதாக இருந்தது. துளசியின் இதயத்துடிப்பு மேலும் அதிகரிக்கத் தொடங்கியது. இதை எதிர்பார்க்காத தார்க்காவும் சிலையாகிவிட்டான்.

முன்னால் தேறிக்கொண்ட சித்தேஸ்வரி மேஜைக்கு அடியில் குனியப் போனாள். "அவனை அடித்தது நான் தான்" என்ற தார்க்காவின் குரலைக் கேட்டுத் திருப்பி னாள்.

அவளைப் பிணத்தின் அருகில் போகவிடாமல் தடுக்க எண்ணி, தார்க்கா அவளுக்கு முன்னால் அந்த உடலை வெளியில் இழுத்தான்.

புத்திசாலித்தனமாகச் செயல்பட்டு தன்னைக் காப் பாற்றிய தார்க்காவிற்குத் துளசி மனதிலேயே நன்றி தெரி வித்துக் கொண்டாள்.

சக்ரவர்த்தியின் பிணத்தைப் பார்த்ததும் சித்தேஸ்வரி யின் முகம் விகாரமாக மாறியது. இத்தனை நாளாய்த் தனது வலதுகரமாக இருந்தவன் பிணமாக மாறி விட்டதைச் சித்தேஸ்வரியால் தாங்கிக் கொள்ள முடிய வில்லை.

"தார்க்கா..." என்று ஆவேசமாகக் கத்தினாள். நடுங்கும் குரலில், "இதற்குப் பழியாய் நான் என் பக்தர்களைக் கொண்டு உன்னை எப்படிக் கொல்ல வைக்கிறேன், காத்திருந்து பார்" என்றாள்.

* * *

மகா பூஜையின் இறுதி அங்கம் இதுதான். தேவிக்கு நெருக்கமான பக்தர்கள் மட்டுமே இங்கே அனுமதிக்கப் பட்டு இருக்கிறார்கள். பக்தர்கள் பத்து பேர் கைகளைக் கட்டிக் கொண்டு பணிவோடு நின்றுகொண்டு இருந் தார்கள். எல்லோரும் பெரிய பதவியில் இருப்பவர்கள், படித்தவர்கள்.

"தேவிக்கு மிகவும் பிரியமானது நரபலி. மனிதனின் ஒவ்வொரு அங்கத்தையும் தேவி விருப்பமாக ஏற்றுக் கொள்வாள். உங்களுடைய பிரச்னை என்ன?"

பக்தர்களில் ஒருவர் முன்னால் வந்து, "தங்களுக்குத் தெரியாதது என்ன இருக்கிறது தேவி? மருமகன் இறந்து போன பிறகு மக்களுக்குப் பேய் பிடித்துவிட்டது" என்றார்.

"பேயை தேவி ஓட்டிவிடுவாள். மனிதனின் கண்களை நிவேதனமாகப் படைக்க வேண்டும்."

இந்த உரையாடல் நடக்கும்போது துளசி மேலறையி லிருந்து படியிறங்கி எருக்குவியல் அறைக்குப் பக்கத்தில்

இருந்த அண்டர் கிரௌண்டிற்கு வந்தாள். ஏர்கண்டிஷனரின் பைப்பைப் பிடித்து மேலே ஏறினாள். "என் பக்தர்களைக் கொண்டு உன்னைக் கொல்கிறேன்" என்ற சித்தேஸ்வரியின் வார்த்தைகள் அவளைக் கலவரப் படுத்தின.

"உன் பிரச்னை என்ன?" பத்திரிகை ஆசிரியரைக் கேட்டாள்.

"என் பத்திரிகையின் சர்க்குலேஷன் குறைந்து விட்டது. பத்திரிகையை நிறுத்தவேண்டிய அளவிற்கு நிலைமை மோசமாகிவிட்டது."

"மனிதனின் இரத்தத்தை தேவிக்குத் தர்ப்பணமாக அளித்தால் உங்கள் கோரிக்கை நிறைவேறும்."

துளசி மெதுவாக மேலேறி மரப்பலகையைத் தூக்கினாள். முதலில் பார்த்த அறைதான் அது. காளியின் விக்கிரகம் அப்படியே இருந்தது.

அவளுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அந்தப் பைப்பின்மீது சாய்ந்தபடியே நின்று கண்களை மூடிக் கொண்டாள். பசி, தாகத்தால் மயக்கம் வரும் போல் இருந்தது.

"இப்போது இருக்கும் அரசாங்கம் மாற வேண்டும். அதுவரையில் எனக்கு ஏற்றுமதி லைசன்ஸ்கள் கிடைக்காது. தேவிக்கு எத்தனை நரபலி வேண்டுமானாலும் கொடுங்கள்" –சேட் ஒருவர் ஆவேசமாகக் கூறிக்கொண்டு இருந்தார்.

சித்தேஸ்வரி சிரித்தாள்.

"தேவியின் இதயத்தில் குடிகொள்ள வேண்டும் என ஆசைப்பட்டால், அவளுக்கு மனித இதயத்தைக் காணிக்கையாக அளிக்க வேண்டும் சீடனே."

"இல்லை இல்லை. இந்த ஆட்சிதான் இருக்க வேண்டும்"– பக்தர்களிலேயே ஒருவர் கத்தவும், சித்தேஸ்வரி, "ஒ... பதவியிலிருக்கும் அமைச்சரும் இங்கே இருக்கிறார். இப்போது என்ன செய்வது?"

"தேவியின் அநுக்கிரகம் பெறுவதற்காக என் சார்பில் மனித இதயத்தைக் காணிக்கையாகக் கொடுங்கள். எத்தனை செலவானாலும் பரவாயில்லை. இந்த அரசாங்கம் தான் ஆட்சியில் இருக்க வேண்டும்."

செலவு– என்ற வார்த்தையைக் கேட்டதும் சேட் இதழ்களில் புன்முறுவல் தோன்றியது. "என் பங்கு ஒரு லட்சம்" என்றார்.

உடனே "இரண்டு லட்சம்" என்றார் அமைச்சர்.

"பலசாலியாக இருக்கும் இளைஞன். தேவி கண்டிப்பாக திருப்தி அடைவாள்" என்றாள் சித்தேஸ்வரி.

"மூன்று லட்சம்..."

"நான்கு..."

தன் இதயத்தின் மதிப்பு ஏறிக்கொண்டேபோவதைப் பற்றி தார்க்கா யோசிக்கவில்லை. அவன் கவலைப்படுவது இந்த சமுதாயத்தைப் பற்றித்தான். இளமையிலேயே விதவையாகிவிட்ட தன் மகளுக்கு மறுமணம் செய்து வைப்பதைப் பற்றி யோசிக்காத பெரிய மனிதன் தேவிக்கு மனிதக் கண்களை அர்ப்பணம் செய்ய முன் வருகிறான். மக்களை முன்னோக்கி அழைத்துச் செல்ல வேண்டிய அமைச்சர், சுயநலத்திற்காக மனிதனின் இதயத்தை

விலை பேசிக்கொண்டு இருக்கிறார். மக்கள் இத்தனை முட்டாள்களாக இருப்பது ஏன்? இந்த நாகரிக மனிதர்கள் எந்தத் திசையில் போய்க்கொண்டு இருக்கிறார்கள். முன்னோக்கியா, பின்னோக்கியா? தன்னைப்போல மயானத்தில் அமர்ந்து பூஜைகள் செய்யாவிட்டாலும் நாகரிகம் என்ற முக்காட்டிற்குள்ளே நான்கு சுவர்களி டையே அமர்ந்து இவர்கள் செய்யும் காரியம்தான் என்ன?

தார்க்கா நிச்சலனமாய் நடப்பதைப் பார்த்துக் கொண்டு இருந்தான். நேரம் ஆக ஆக துளசிதான் பதட்டப் பட்டுக் கொண்டிருந்தாள்.

தார்க்காவின் கண்கள் ஐம்பதாயிரத்திற்கும், இரத்தம் அறுபதாயிரத்திற்கும் விலை பேசி முடிக்கப்பட்டது. ஆனால் இதயம் விஷயத்தில் மட்டும் இன்னும் ஏலம் முடியவில்லை. பக்தர்கள் பரவசத்துடன் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். அவர்களில் ரிடையர்டு போலீஸ் அதிகாரியும் இருந்ததுதான் விசேஷம்.

கடைசியில் ஆறு லட்சத்திற்கு பேரம் படிந்தது. ஆட்சி மாற வேண்டும் என்றும், அமைச்சர் கட்சிமாற வேண்டாம் என்றும், சேட் தன் செல்வாக்கைப் பயன் படுத்தி அவருக்கு மறுபடியும் அமைச்சர் பதவிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் தீர்மானம் செய்தார்கள்.

சர்வே ஜனா சுகினோபவந்து.

ஒரு தாம்பாளத்தில் பளபளவென்ற தங்கக் கத்தி யொன்று கொண்டுவரப் பட்டது. தார்க்காவின் கண் களைப் பெயர்த்து எடுப்பதற்காக. இரத்தத்தைப் பிடித்து வைப்பதற்காக வெள்ளிக்கிண்ணம் தயாராக வைக்கப் பட்டது. ஹோமத்தில் தாராளமாய் நெய்யூற்றப்பட்டதால்

தீ கொழுந்துவிட்டு எரிந்தது. சாம்பிராணிப் புகை மூச்சைத் திணற வைத்துக்கொண்டு இருந்தது.

சித்தேஸ்வரி கத்தியைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

அதே அறையின் கீழ்த் தளத்தில் துளசி குட்டி போட்ட பூனையாகச் சுற்றி சுற்றி வந்துகொண்டிருந்தாள். நரபலி கொடுக்கப் போகிறார்கள். அதை எப்படித் தடுப்பது. நேரம் அதிகமில்லை. துளசி கண்களை மூடிக் கொண்டாள். தன் மனதை ஒருமுகப்படுத்தி நினைவுப் படுத்திக்கொள்ள முயன்றாள். மேகத்திற்கு இடையே மின்னலைப்போல் ஏதோ பளிச்சிட்டது மூளையில்.

எலெக்ட்ரிக் ஷார்ட் சர்க்யூட்.

ஆமாம், அதுதான் இப்போது தார்க்காவைச் சித்தேஸ்வரியிடமிருந்து காப்பாற்ற வல்லது.

சித்தேஸ்வரி கேள்விகளுக்குப் பதிலளிக்கப் பயன் படுத்தும் வயர்கள், மண்டையோட்டின் ஸ்பீக்கர், மடியில் வைத்துக் கொள்ளும் விக்கிரகத்திலிருந்து வெளிப்படும் ஆக்ஸிஜன்... இவற்றின் உதவியோடு ஏதாவது செய்து இந்தக் கட்டிடத்தைத் தகர்க்க முடிந்தால்?

இந்த யோசனை வந்ததும் துளசி தாமதம் செய்ய வில்லை. தானும் தார்க்காவும் இடிபாடுகளில் சிக்கி மரணமடைந்தாலும் பரவாயில்லை, மக்களை முட்டாள் தனத்திலிருந்து காப்பாற்ற முடிந்தால் அதுவே போதும்.

அவள் ஒரே பாய்ச்சலில் கீழே குதித்து ஓட்டம் எடுத்தாள்.

கட்டிடம் முழுவதும் அமைதியாக இருந்தது. ஏர்கண்டிஷனர் ஓசை எழுப்பவில்லை,

அவளுக்கு நெற்றியில் வியர்த்தது. சித்தேஸ்வரி உச்சஸ்தாயியில் மந்திரங்களை உச்சரித்துக் கொண்டு இருந்தாள்.

துளசி முன் அறைக்கு வந்து அவசர அவசரமாய்த் தேடத் தொடங்கினாள். மூடி இருக்கும் பெட்டியில் சித்தேஸ்வரி எப்படி ஆக்ஸிஜனைத் தயாரித்துக் கொள் கிறாள்? அதற்காக அவள் உபயோகிக்கும் பொருட்கள் என்னென்ன?

மேஜை, அதற்கு அடியில் சக்ரவர்த்தியின் பிணம், வயர்கள், பாட்டரி செல்கள், தேவி விக்கிரகம், கபாலம்... சுற்றிலும் நோட்டமிட்டாள். சுவற்றில் அலமாரியைப் போல் இருந்த இணைப்பின்மீது பார்வை படிந்தது. சட்டென ஓடிப்போய் அதைத் திறந்தாள்.

அது ஒரு குளிர்சாதனப் பெட்டி, சுவருடன் பதிக்கப் பட்டிருந்தது.

ஒரு குடுவையில் பத்திரமாக வைக்கப்பட்ட திரவம் இருந்தது. பார்த்ததுமே அது என்னவென்று அவளுக்குப் புரிந்துவிட்டது. லிக்விட் ஆக்ஸிஜன்.

மேற்கொண்டு நேரத்தைக் கடத்தாமல் கம்பளத்தின் கீழே இருந்த நீண்ட வயரை இழுத்தாள். காயில்களை அதில் இணைத்துக் குடுவையை எடுத்துக்கொண்டு கீழே வந்தாள். வேகமாய் வந்ததில் அவளுக்கு மூச்சு இரைத்தது. உணர்ச்சி மிகுதியால் அவள் விரல்கள் நடுங்கிக்கொண்டு இருந்தன. தன் முயற்சி எந்த அளவிற்கு வெற்றிபெறும் என்பதில் அவளுக்குச் சந்தேகம் இருந்தது.

மேல் அறையில் தார்க்கா கண்களை மூடி இருந்தான். இந்த விஷ வளையத்திலிருந்து எப்படித் தப்புவது என்று அவனுக்குப் புரியவில்லை. சித்தேஸ்வரி மேலும்

சாம்பிராணிப் புகையைப் போட்டாள். அங்கிருந்த அனை வரும் ஹிப்னாட்டிஸ் பாதிப்பில் இருந்தார்கள். தங்களுடைய விருப்பங்களை எப்படியாவது நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்ற துடிப்பில் இருந்தார்கள். தார்க்காவின் இரத்தத்தைப் பிடிப்பதற்கான கிண்ணம் சித்தேஸ்வரியின் கையில் இருந்தது. கண்களைப் பெயர்த் தெடுப்பதற்கான கத்தி விக்கிரகத்தின் முன்னால் பளபளத்தது.

மனிதர்களின் அஞ்ஞானம் தார்க்காவைத் தற்காலிக மாக ஒரு வேதாந்தியாக மாற்றியது. அவனுடைய இதயத் தின் மதிப்பு ஆறு லட்சம்.

அவன் கால்களுக்குக் கீழே, கீழ் தளத்தில் துளசி எந்திரத்தைவிட வேகமாக இயங்கிக் கொண்டு இருந்தாள். வயர்களைக் காயிலில் சுற்றினாள். திரவ ஆக்ஸிஜன் இருந்த குடுவையின் நடுவில் காயிலைப் பொருத்தி மேற்கூரையைச் சரியாய் தேவி விக்கிரகத்திற்கு நேராக வைத்தாள். வயரை எடுத்துக் கொண்டு அறையினுள் வந்தாள். ஸ்விட்சை அணைத்துவிட்டு பிளக்கை அதனுள் பொருத்தினாள். ஸ்விட்சைப் போட்டதும் மின்சாரம் ஷார்ட் சர்க்யூட் ஆகி உஷ்ணம் ஏற்பட்டு திரவ ஆக்ஸிஜன் வெடித்து கட்டடம் முழுவதும் தகர்ந்து...

எந்தச் சாதனங்களைப் பயன்படுத்தி சித்தேஸ்வரி மக்களை ஏமாற்றி வந்தாளோ அதே சாதனங்களால் அவள் அழியப் போகிறாள். துளசி வயர்களைச் சரிபார்த்து விட்டு ஸ்விட்சைப் போட கைகளை நீட்டினாள்.

சித்தேஸ்வரி தார்க்காவின் காதருகில் குனிந்தாள். "தார்க்கா இறுதியாக ஒரு வாய்ப்புத் தருகிறேன். என்னோடு சேர்ந்துவிடு. சூனியங்களைப் பூதவித்தைகளைப் பயன்

படுத்தி நாம் கோடீஸ்வரர்களாக ஆகிவிடுவோம். சக்ர வர்த்தியைக் கொன்றதைக் கூட மன்னித்து விடுகிறேன்."

தார்க்கா மௌனம் சாதித்தான், சித்தேஸ்வரி மார்பின் மீது கத்தியை வைத்தாள். கீழ் அறையில் துளசி கண்களை அழுத்தமாக மூடிக்கொண்டாள். எங்கோ கடிகாரம் இரண்டு ஆகிவிட்டதாக மணியடித்தது. பதட்டத் துடன் விரல்கள் நடுங்க மெதுவாகப் பிளக்கின் ஸ்விட்சைப் போட்டாள்.

ஆனால் ஒன்றுமே நடக்கவில்லை. குறைந்தபட்சம் "துஸ்" என்ற சிறிய ஒலிகூட கேட்கவில்லை.

* * *

அதே இரவு இரண்டரை மணிக்கு... ஊரின் எல்லை யைத் தாண்டிக்கொண்டு இருந்தான் இஸ்மாயில். கோட்டையை நோக்கிச் சென்று கொண்டிருந்தான்.

மயானத்தை ஒட்டிய பாதையில் போய்க்கொண்டு இருந்தான். அதற்கு அருகில்தான் நதி இருந்தது. மயானத் தில் சிதையின் நெருப்பு மினுக் மினுக்கென்று எரிந்து கொண்டிருந்தது. ஈசான்ய திசையிலிருந்து காற்று லேசாக வீசியது.

பூததேவதையை எதிர்க்கப் போகிறான் அவன்.

இருளில் ஒளிந்துகொண்டு எதிரியைக் கண் காணிக்கும் சிப்பாய்களைப் போல பஞ்சபூதங்கள் அவனையே பார்த்துக்கொண்டு இருந்தன.

அவன் மயானத்தைக் கடந்தான். நதி பெரும்பாலும் வற்றிக் கிடந்தது. கணுக்கால் வரையில்தான் தண்ணீர் இருந்தது. காற்றுக்கு அசைந்தாடும் நீர்ப்பரப்பு அவனை வரவற்பதுபோல் இருந்தது.

இஸ்மாயிலுக்கு அமாவாசை இருட்டில் நடப்பது புதிதல்ல. நதியைத் தாண்டி கரையோரத்தில் சென்று கொண்டு இருந்தான். புல்லும் காட்டுச் செடிகளும் காற்றில் அசைந்துகொண்டு இருந்தன. வழி சரியாக இல்லை. கல்லும் மண்ணும் வழியை மறைத்தன. இஸ்மாயில் தடுக்கி விழுந்து எழுந்துகொண்டிருந்தான். ஏதோ பறவை அந்தச் சத்தத்திற்கு எழுந்து சிறகுகளைப் பட படத்துவிட்டு மறுபடியும் படுத்துக் கொண்டது.

மலை செங்குத்தாக இருந்தது. மலைக்குமேல் போக வழி இருந்தது. மலையைச் சுற்றி கவசம்போலிருந்த கோட்டையின் சுவர் ஆங்காங்கே சிதிலமடைந்து இருந்தது.

இஸ்மாயில் கோட்டைக்குள் நுழைந்தான். பெரிய தூணின் பக்கமாய்த் திரும்பி படிகளில் ஏறினான். மேற் கூரையில் மண் சரிந்து அங்கேயும் செடிகள் வளர்ந்து இருந்தன. எப்போதோ பெய்த மழைநீர் சிவப்புக் குட்டை யாய்த் தேங்கிக் கிடந்தது. சுவர்க் கோழிகள் கத்திக் கொண்டிருந்தன.

இஸ்மாயில் குனிந்து பார்த்தான். ஒரு காலத்தில் குதிரை லாயமாக இருந்த இடம். வரிசையாய்க் கற்கள் நடப்பட்டு இருந்தன. ஒரு மூலை சரிந்திருந்தது. மற்றொரு மூலையில் இரண்டு பானைகளும், செங்கற்களும். அடுப்பு பற் வைப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன. அதற்கு நான்கடி தொலைவில் ஒடுங்கியது போல் உட்கார்ந்து இருந்தான் பக்கீர்.

சத்தம் கேட்டு, கண்களைத் திறந்து பார்த்தான் "யாரது?"

"நான்தான் இஸ்மாயில்" அருகில் போய் உட்கார்ந்து கொண்டான்.

இருவரும் சிறிது நேரம் மௌனமாக இருந்தார்கள். நதியைத் தாண்டியிருந்த மயானத்தின் அமைதியை, இருட்டைப் பார்த்துக்கொண்டு இருந்தார்கள்.

அந்த நிசப்தத்தைக் கலைத்துக்கொண்டு இஸ்மாயில் சொன்னான், "காஷ்மோரா எழுந்திருக்கப் போகிறது."

"தெரியும்."

பக்கீரின் குரல் வெறுமையாக ஒலித்ததைக் கேட்டு இஸ்மாயில் வியப்புடன் தலையை உயர்த்திப் பார்த்தான். அதை உணர்ந்து கொண்டவன்போல், "ஆமாம்... என்ன பண்ண முடியும்? அதை எழுந்திருக்க விடாமல் நம்மால் தடுத்துவிட முடியுமா? எழுந்த பிறகு ஏற்படப் போகும் கொடுமைகளைத் தடுத்து நிறுத்த முடியுமா?" என்றான்.

"உன்னால் முடியும்."

பக்கீர் விருட்டென்று எழுந்து "இல்லை... இல்லை... காஷ்மோரா என்றால் என்னவென்று நினைத்து விட்டாய்? அதைத் தடுத்து நிறுத்துவதாவது?" என்று கத்தினான்.

இஸ்மாயில் அசையவில்லை. "உன்னால் நிஜமாகவே முடியாதா, பக்கீர்?" என்று கேட்டான்.

பக்கீரின் ஆவேசம் குறைந்துவிட்டது. "முடியாது. நான் என்று இல்லை, யாராலும் முடியாது. மகாவித்தைகள் தெரிந்தவனால்கூட காஷ்மோராவை எதிர்க்க முடியாது."

மகாவித்தைகள் தெரிந்தவனால்கூட காஷ்மோராவை எதிர்க்க முடியாதென பக்கீர் சொன்னதைக் கேட்ட இஸ்மாயிலுக்கு என்ன பேசுவதென்று புரியவில்லை. அந்த நள்ளிரவு வேளையில் காஷ்மோராவைப் பற்றி கேட்க நேர்ந்ததற்காகவும் அதன் கொடுமைகளைக்

குறைப்பதற்காகவும் தேவி ஸ்தோத்திரத்தைச் சொல்லத் தொடங்கினான் சந்தான் பக்கீர்.

மந்திரவாதிகள் இரவு நேரத்தில் பூததேவதைகள் பற்றிய பேச்சை எடுக்க மாட்டார்கள். பலவீனமான நேரத்தில் அது ஆபத்தாக முடியலாம்.

ஸ்தோத்திரம் முடிந்ததும் கோட்டையில் மறுபடியும் நிசப்தம் நிலவியது.

இஸ்மாயில் பெருமூச் செறிந்தான். "பாவம் துளசி, மிகவும் நல்ல பெண். என் கண் முன்னாலேயே வளர்ந்த வள். என் கண் முன்னாலேயே போகப் போகிறாள்" – அவன் குரல் கம்மியது. பக்கீர் அருகிலிருந்த சிறு தோல் பையை எடுத்துத் தந்தான். "இதைத் துளசியைச் சுற்றி கடைசி ஏழு நாட்கள் தெளிக்கச் சொல். ரொம்ப உபாதை யில்லாமல் உயிர் சுலபமாகப் போய்விடும்."

"என்ன இது?"

"துளசி தீர்த்தம். ராமநாமத்த தினசரி உச்சரிக்கச் சொல். அதன் மகிமை காஷ்மோராவின் பாதிப்பை குறைத்துவிடும். துளசி குறைந்த உபாதையுடன் இறந்து விடுவாள்."

ராமநாமத்தை உச்சரித்தை போதிலும், துளசி தீர்த்தத்தைத் தெளித்த போதிலும் துளசியின் மரணம் உறுதி என்று இஸ்மாயிலுக்குப் புரிந்தது. ஆனாலும் இதை யெல்லாம் நாகரீக மனிதர்களான அவர்கள் செய்வார் களா?"

இஸ்மாயில் எழுந்தான். "போய்வருகிறேன், பக்கீர்."

"நல்லது..."

அவன் கோட்டைக்கு வெளியே வந்தான். கையில் துளசி தீர்த்தம் இருந்த பை இருந்தது. திடீரென்று குளிர்ந்ததுபோல் இருந்தது. அண்ணாந்து பார்த்தான். கரிய மேகங்கள் திரண்டு வந்து கொண்டிருந்தன.

திடீரெனக் காலில் ஈரம் பட்டதை உணர்ந்தான். யோசனையில் மூழ்கிக்கொண்டே நதிவரையில் வந்து விட்டதை உணர்ந்து சிரித்துக் கொண்டான். மேலும் முன்னோக்கி நடந்தான். நதி அமைதியாக இருந்தது.

நதி மனித சஞ்சாரமற்று இருந்தது. பாய்ந்து கொண்டிருந்த நீரில் நடக்கும்போது காலடிபட்டு தப் தப் என்ற சத்தத்துடன் நீர் விலகிக் கொண்டது.

திடீரென நின்று விட்டான் இஸ்மாயில். முழங்கால் வரை நீர் பாய்ந்து கொண்டு இருந்தது. வரும்போது இவ்வளவு இல்லையே? நதி பொங்கி வருகிறதா? தான் எந்தப் பக்கம் போக வேண்டும்? மயானம் எந்தப் பக்கம் இருக்கிறது?

நெருப்பு வெளிச்சம் தென்பட்டது எதிரில். அந்தப் பக்கமாய் நடக்கத் தொடங்கினான். நடக்க நடக்க நீரின் மட்டம் உயர்ந்து கொண்டே வருவது கண்டு பதட்ட மடைந்தான். பின்னால் திரும்பிப் பார்த்தான்.

கோட்டை தெரியவில்லை. பகீரென்றது. அந்தப் பக்கம் இரண்டு மூன்று நெருப்பு வெளிச்சங்கள் தெரிந்தன.

மயானம் அந்தப் பக்கம் இருக்கிறதோ? அப்படி யானால் கோட்டை எங்கே?

அவன் வலது பக்கமாய்த் திரும்பிப் பார்த்தான். ஒரே இருட்டு. கோட்டையை இருள் மறைத்து விட்டதோ? அந்தப் பக்கம் கோட்டை. இந்தப் பக்கம் வெளிச்சம்

என்றால் நதி எந்தப் பக்கத்திலிருந்து பாய்ந்து கொண்டிருக் கிறது? நீரின் மட்டம் இடுப்புவரை உயர்ந்தது. அவன் கையிலிருந்த தோல்பை நனைந்து போகாமல் உயர்த்திப் பிடித்துக் கொண்டான். தண்ணீர் மட்டம் இடுப்பு வரை தான் இருந்தது. உயரவில்லை. அதாவது நதி பொங்க வில்லை.

அவன் நிம்மதியாக மூச்சை விட்டுக்கொண்டு எந்தப் பக்கமிருந்து வந்தானோ அந்தப் பக்கமே திரும்பி நடந் தான். அடியெடுத்து வைத்ததும் நீர் மட்டம் மார்பு வரை வந்தது.

அப்போது தோன்றியது அவனுக்குப் பயம். கண்களை மூடிக்கொண்டு பத்ரகாளி மந்திரத்தை உச்சரிக்கத் தொடங்கினான்.

மந்திரம் இன்னும் முடியவில்லை. மட்டம் கழுத்தை யும் தாண்டி வாய்வரை வந்துவிட்டது. மரணம் நிச்சயம் என்று தெரிந்துவிட்டது. மனத்திற்குள் கடைசியாக ஆஞ்ச நேயர் ஸ்தோத்திரத்தைச் சொல்லத் தொடங்கினான்.

தண்ணீர் பெருகிக்கொண்டே வாயிலிருந்து மூக்கு வரை வந்து, பிறகு கண்களைத் தொட்டது. அவன் இறுதிப் பார்வையானது தொலைவிலிருந்து வந்துகொண்டிருந்த பெரிய அலையின்மீது படிந்தது. அது வேகமாக வந்து அவனை மூழ்கடித்தபோது மனதில் நினைத்துக் கொண் டான், "ஸ்ரீதர்... நீ எங்கே இருக்கிறாய்? சீக்கிரமாய் வந்து மரணத்திற்கு ஏழு நாட்கள் முன் வரும் உபாதையிலிருந்து உன் மகளைக் காப்பாற்று."

இஸ்மாயில் ஆற்றில் மூழ்கிக் கொண்டிருந்த அதே சமயம் இரண்டாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்த ஸ்ரீதர், இரண்டு நாட்களில் வரப்போகும் மகளுக்காக அறையைப் பதிவு செய்து கொண்டு இருந்தான்.

இஸ்மாயில் தலை முழுவதுமாகத் தண்ணீரில் மூழ்கி விட்டது. புதைக்கப்பட்ட மந்திரவாதியின் கைகள் வெளியே நீட்டிக் கொண்டு இருப்பதுபோல இஸ்மாயி லின் கை மட்டும் தெரிந்து கொண்டிருந்தது. நீர் இன்னமும் உயர்ந்து துளசி தீர்த்தம் இருந்த பையைத் தாக்கியது. பை நழுவி நீரில் கலந்து மறைந்தது. அதுதான் அதன் நோக்கம் என்பது போல் நீரின் மட்டம் மெதுவாக இறங்கத் தொடங்கியது.

மேலும் மேலும் குறைந்து ஐந்து நிமிடங்களில் நிதி சாதாரண நிலைக்குத் திரும்பிவிட்டது. கணுக்காலைத் தொடும் அளவிற்குக்கூட தண்ணீர் இல்லை.

வேடிக்கை என்னவென்றால், அங்கே இஸ்மாயிலின் பிணம் இருக்கவில்லை. நீர், நிலம், காற்று எல்லாமே பழையபடியே இருந்தன.

பூமி மட்டும் கடற்கரை மணல்போல் ஓரிடத்தில் மேடிட்டு இருந்தது.

15

அவளுக்குத் துக்கம் பொங்கி வந்தது.

கோபமும், இயலாமையும் போட்டியிட தான் தயாரித்த சாதனங்களைப் பார்வை இட்டாள். எல்லாம் அவளைக் கேலி செய்வதுபோல் இருந்தன. திரவ ஆக்ஸிஜன் காற்றுடன் கலந்துகொண்டு இருந்தது.

ஏன் இப்படி நடந்தது?

தூக்கமின்மை, பசி, தாகம், இயலாமை எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து அவளைச் சூழ்ந்து கொண்டன. கொஞ்சம் முன்னோக்கி நடந்தாள். அந்த அறையில்

ஏர்கண்டிஷனரின் பைப்பிற்கும் வயர்களுக்கும் இடையே தனியாக நின்றிருந்தாள்.

அறை முழுவதும் நிசப்தமாய் இருந்தது. அவள் திடுக்கிட்டாள். இது என்ன? இந்த அறை ஏன் இத்தனை நிசப்தமாக இருக்கிறது? ஏர்கண்டிஷனர் இயங்கவில்லையா? அப்படியென்றால் மின்சாரம் இல்லையா?

அவளுக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. ஒரு முடிவிற்கு வந்தாள்.

கீழ்த் தளத்தின்மரப் பலகையைத் திறந்து கொண்டு திடீரென்று அவர்கள் முன்னால் தோன்ற வேண்டும். பிறகு தனக்குத் தூக்குத் தண்டனை கிடைத்தாலும் பரவாயில்லை. முதலில் சித்தேஸ்வரியின் செயலைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

அதற்குமேல் அவள் தாமதம் செய்யவில்லை.

படியேறி மரப் பலகையைத் தூக்கினாள்.

தங்கள் கண் முன்னால் பூமியிலிருந்து மேலே வந்து கொண்டிருந்த பெண்ணைக் கண்டு அங்கிருந்தவர்கள் திடுக்கிட்டு செய்வதறியாது சிலையானார்கள்.

ஸ்டைலாகச் சிரித்துக் கொண்டே, "குட் மார்னிங்க் எவரிபடி" என்று மேலே வரப் போனாள்.

ஆனால் அவள் எதிர்பார்த்ததுபோல் சித்தேஸ்வரி திடுக்கிடவில்லை. கத்தியைக் கையில் எடுத்துக்கொண்டு "நில் அங்கேயே..." என்றாள்.

அதை எதிர்பார்க்காத துளசி சற்று முகம் வெளுத்தாலும், அதற்குள் சமாளித்துக் கொண்டே ஒரே துள்ளலில் மேலே வந்துவிட்டாள். முன்னால் திடீரென வந்து

நின்ற துளசியைப் பார்த்து வியப்படைந்தவனாய், தார்க்கா அவள் அருகில் சென்றான். அதுதான் அவன் செய்த நல்ல காரியம்.

அப்போது கேட்டது ஏர்கண்டிஷனர் இயங்கும் சத்தம். அதைத் தொடர்ந்து சில நொடிகளில்...

செவிகளைப் பிளக்குமாறு பிரம்மாண்டமான சத்தம்... அந்த அறையின் சுவர்கள் கிடுகிடுத்தன. மிகச் சிரத்தை யோடு பக்தர்களால் பூஜிக்கப்பட்டு வந்த காளி விக்கிரகம் அப்படியே தரையில் புதைந்துவிட்டது... மரப் பலகைகள் காற்றில் பறந்தன.

வேறு கட்சிக்கு மாறுவதற்கு இருந்த அமைச்சரின் உடல் வாசற்படியைத் தாண்டி விழுந்தது. பத்திரிகை ஆசிரியரின் உடல் காற்றில் எழும்பி விழுந்தது. எரியும் விளக்கு சேட்டின் முகத்தில் பட்டு முகம் வெந்துவிட்டது.

எல்லோரும் இருமிக்கொண்டு இருந்தார்கள். சித்தேஸ்வரி என்னவானாள் என்று தெரியவில்லை. தொலைவில் யாரோ ஓடிக்கொண்டு இருக்கும் சத்தம் கேட்டது. ஒரே குழப்பம்.

துளசி தார்க்காவின் கையைப் பிடித்துக்கொண்டு "வா... போகலாம்..." என்றாள் பரபரப்பாய்.

இருவரும் ஒரே பாய்ச்சலில் வெளியே ஓடி வந்தார்கள். கதவைத் திறந்துகொண்டு காருக்குள் ஏறி அமர்ந்துகொண்டு "ஏறு" என்றாள்.

தார்க்கா ஏறிக்கொண்டான். அறுபது கிலோமீட்டர் வேகத்தில் ரிவர்ஸ் எடுத்து கியரை மாற்றினாள்.

மெயின் கேட்டின் அருகில் இருந்த கூர்க்கா ஓடிவந்து "உள்ளே என்ன நடக்கிறது?" என்று கேட்டான்.

"தேவி பூஜையின் இறுதி அம்சம்" என்று கூறிவிட்டு, காரை ஓட்டத் தொடங்கினாள். இரண்டு நிமிடங்கள் யாருமே பேசவில்லை.

"எங்கே போக வேண்டும்?" என்று கேட்டாள். தார்க்கா சொன்னான்.

அவள் மனதில் உணர்ச்சிகள் கொந்தளித்துக் கொண்டு இருந்தன. தான் பார்த்தவற்றைப் பண்டிட்டிடமும், நம்பூதிரியிடமும் சொல்லிவிட வேண்டும். இந்த ரகசியம் நாளை பேப்பரில் வெளியானால்? இத்தனை நாளும் சித்தேஸ்வரி செய்து வந்த மோசடிகள் வெளிப்பட்டு விட்டால் இந்த உலகம் என்ன செய்யும்? இத்தனை நாள்களாய்த் தங்கள் பணத்தை இழந்து வந்தவர்கள் என்ன நினைப்பார்கள்?

தார்க்கா வேறு விதமாக யோசித்துக்கொண்டு இருந்தான். சித்தேஸ்வரி வஷயத்திற்கு அவன் அவ்வளவு முக்கியத்துவம் தரவில்லை. துளசியை எப்படிக் கண்டு பிடிப்பது? இந்த ஊரில்தான் இருக்கிறாள். ரிஜிஸ்டரில் கூட அவள் பெயர் இருந்தது.

அவன் யோசனையில் இருந்தபோதே கார் சத்திரத்தின் முன்னால் நின்றது. தார்க்கா இறங்கிக் கொண்டான்.

"டென்ஷன் குறைந்ததா?" துளசி சிரித்துக்கொண்டே கேட்டாள்.

அவனுக்கு அந்த வார்த்தை புரியவில்லை.

"ஸீ யூ" என்று சொல்லிவிட்டு காரைக் கிளப்பினாள் துளசி.

கார் போன திசையைப் பார்த்துக்கொண்டு ஒரு நிமிடம் நின்றான் தார்க்கா. பிறகு இடுப்பின் அருகில்

தடவிக்கொண்டே சத்திரத்தின் படிகளில் ஏறத் தொடங்கினான். கடந்த ஐந்து வருடங்களாக அப்படிச் செய்வது அவனுக்குப் பழக்கமாகி இருந்தது. தடவிக் கொண்டே முன்னால் அடிவைக்கப் போனவன் அப்படியே நின்று விட்டான்.

பொட்டலத்தில் பத்திரமாகக் கட்டி வைத்திருந்தது... ஐந்தாண்டு காலமாய் உயிரின்மேலாய்ப் பாதுகாத்து வைத்திருந்ததைக் காணவில்லை. அவன் கலவரத்துடன் பாக்கெட்டையும் உடம்பையும் தடவிப் பார்த்துக் கொண்டான்.

அந்தக் கட்டிடம் பிளவுபட்டபோது எங்கே விழுந்ததோ?

தார்க்காவின் நாக்கு உலர்ந்துவிட்டது.

* * *

மூன்று ஆண்டுகளாய் மக்களைக் கடவுளின் பெயரால்
ஏமாற்றி வந்த தேவியின் குட்டு வெளிப்பட்டது.
மாணவி ஒருத்தி செய்த சாகசம்.

16

மூன்றாண்டுகளாய் பக்தர்களின் கேள்விகளைப் பார்க்காமலேயே பதில் தந்து தெய்வத்தின் பெயரால் மக்களிடமிருந்து வசூல் செய்து வந்த சித்தேஸ்வரி தேவியின் ரகசியம் வெட்ட வெளிச்சமாகிவிட்டது. துளசி என்ற மாணவி துணிச்சலுடன் செயல்பட்டு அவர்களின் மோசடிகளைக் கண்டுபிடித்து விட்டாள்.

மின்சார சாதனங்களைப் பயன்படுத்தி சித்தேஸ்வரி இத்தனை நாள்களாகச் செய்துவந்த மோசடிகளை மக்களும் அதிகாரிகளும் தெரிந்து கொள்ளவில்லை.

சித்தேஸ்வரி தேவி பெண்ணல்ல, ஆண் என்றும் தெரிய வந்துள்ளது. தேவி உருவத்தில் இருந்த நபரை போலீசார் தேடி வருகிறார்கள்.

"என்ன? ஏதோ துணிச்சலான காரியம் செய்து இருக்கிறாயாமே?" —ஃபோனில் சாரதாவிடம் பேசி முடித்த பிறகு மகளிடம் விசாரித்தான் ஸ்ரீதர்.

இண்டர்நேஷனல் கால் அது

"ஆமாம் டாட்" என்றாள். பரபரப்புடன் தான்செய்த காரியத்தை விபரமாகச் சொன்னாள். எதிர் பார்த்தது போல் ஸ்ரீதர் அவளைப் புகழவில்லை. "குட்" என்று சொல்லிவிட்டுப் பேசாமல் இருந்தான்.

"நான் நான்கு நாட்கள் தாமதமாக வரேன், டாட்."

"எதற்கு?" வியப்புடன் கேட்டான் ஸ்ரீதர். "உனக்காக நான் எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டேன்."

"நாலு நாள்தானே டாடி..." என்று கெஞ்சுவது போல் கேட்டாள்.

"சரி, ஆனால் சொன்னபடி நான்கு நாள்கள் கழித்து வராவிட்டால் அப்புறம் வர முடியாது. நான் வரவேண்டி இருக்கும்."

"தாங்க்யூ."

"சரி, அந்த நான்கு நாள்கள் எதற்கு?"

சாரதா மகளிடமிருந்து ரிஸீவரை வாங்கிக்கொண்டு, "இந்த நான்கு நாள்களும் பாராட்டு, பரிசளிப்பு விழா இருக்கிறதாம்" என்றாள்.

மறுமுனையில் ஸ்ரீதர் சிரிப்பது கேட்டது.

* * *

தார்க்கா தவித்துக்கொண்டு இருந்தான்.

துளசியின் தலை முடி தொலைந்து விட்டது. இனி எங்கிருந்து அவளைக் கண்டுபிடிக்க முடியும்? கல்லூரி களுக்கு விடுமுறை வேறு. அவன் சரியாகப் பார்க்க வில்லை. பார்த்திருந்தால் சித்தேஸ்வரி ஆலயத்தில் இருபத்து நான்கு மணி நேரம் தன்னோடு இருந்த பெண், அவன் தேடிக் கொண்டிருக்கும் துளசிதான் என்று தெரிந்திருக்கும்.

முன்பு அவன் தன் சபதத்தை நிறைவேற்றிக் கொண்டு பிஸ்தா கிராமத்திற்குத் திரும்பிவிட எண்ணி இருந்தான். இப்போதோ எந்த விதத்தில் தற்கொலை செய்து கொள்வது என்று யோசித்துக்கொண்டு இருந்தான்.

வயிற்றைக் கிழித்துக் கொண்டு இறப்பது என்று முடிவு எடுத்தான்.

மறுநாள் பிற்பகல் பன்னிரண்டு மணி. நல்ல நேரம். தான் ஆவியாய் மாறி அலையாதிருப்பதற்கும், தன் உயிர் எளிதில் போவதற்கும் தேவைப்பட்ட பொருட்களைச் சேகரித்துக் கொள்ள ஒருநாள் போதுமானது.

வயிற்றைக் கிழித்துக் கொண்ட உடனே இறந்துவிட வேண்டும். ஒரு நிமிடம் தாமதம் ஆனாலும் இத்தனை நாள் தன் விரல் அசைவில் வைத்துக்கொண்டிருந்த பூத தேவதைகள் அவனைக் கசக்கிப் பிழிந்து தின்றுவிடும்.

அதனால்தான் மந்திரவாதிகள் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் விழுந்து துடிதுடித்துச் சாவதை விரும்ப மாட்டார்கள். மந்திரவாதி எப்போது பலவீனமாவான் என்று பூதசக்திகள் ஒவ்வொரு நிமிடமும் அவனைக் கண்காணித்துக்கொண்டு இருக்கும்.

* * *

"நீங்கள் எங்கள் பத்திரிகைக்கு ஒரு கட்டுரை எழுதித் தர வேண்டும்" என்று துளசியிடம் கேட்டுக் கொண்டார் ஒரு பத்திரிகை நிருபர்.

"எதைப்பற்றி?"

"எதைப்பற்றியாக இருந்தாலும் சரி. தெய்வ சக்திகளை நம்புபவர்களைப் பற்றிப், பேய் பிடித்தவர்களைப் பற்றி... இப்படி எதைப்பற்றியாவது எழுதுங்கள். நீங்கள் எதை எழுதினாலும் வாசகர்கள் படிப்பார்கள்."

"அப்படி எதைப்பற்றியாவது எழுதுவது நன்றாக இருக்காது. நான் நாளைக்கு என் அப்பாவிடம் போகப் போகிறேன். வந்த பிறகு, பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் போய் பார்த்துவிட்டு, அதைப்பற்றிக் கட்டுரை எழுதித் தருகிறேன்."

"தாங்க்ஸ்" என்று அவர் கிளம்பிப் போனார்.

பக்கத்தில் நின்றுகொண்டு இருந்த சாரதாவின் முகத்தில் வெளிப்படையாக எந்த உணர்ச்சியும் தெரிய வில்லை ஆனால் கூர்ந்து பார்த்தால் மகளின் செயல் களால், அச்சமும், திகிலும் குடிகொண்டு இருப்பது புரி யும்.

அன்று மாலையில் மகளிடம் கோவிலுக்குப் போகலாம் என்றாள்.

பக்கத்தில் குண்டு வெடித்ததுபோல் அதிர்ச்சி அடைந்த துளசி, "நானா, கோவிலுக்கா?" என்றாள்.

சாரதா பேசவில்லை. ஆனால் அந்த மௌனத்தில் இருந்த கட்டளைக்குக் கீழ்ப்படிந்த துளசி எழுந்து, "வா" என்றாள். தன் விருப்பு வெறுப்பு எப்படி இருந்தாலும் தாய்க்காக விட்டுக் கொடுப்பதில் தவறு இல்லை என்ற பண்பு அவளிடம் இருந்தது.

தாய் வழக்கமாகச் செல்லும் கோவில் பக்கமாகக் காரை துளசி செலுத்தியபோது "அப்படி இல்லை" என்று சாரதா வழியைச் சொன்னாள்.

ஊரின் எல்லையைத் தாண்டி கிராமத்தின் துவக்கத் தில் இருந்த கோவிலுக்கு அருகில் கார் நின்றது. கோவில் சிதிலமாகிவிட்டிருந்தது. குருக்கள் ஒருவர் அந்தக் கோவிலை அண்டிப் பிழைத்து வந்தார். சிதிலமாகிவிட்ட நிலை யிலும் அந்தக் கோவில் சுத்தமாக இருந்தது.

கோபுரம் நூறடி உயரம் இருந்தது. கர்ப்பக்கிரகம் இருட்டாக இருந்தது. வெளவால்கள் நாற்றம், சுவாமிக்கு முன்னால் அமைதியாக எரிந்துகொண்டு இருந்த விளக்கு, கைகூப்பி பிரார்த்தனை செய்துகொண்டிருந்த தாய், கற்பூரம் காட்டிக்கொண்டு இருந்த குருக்கள்... எல்லா வற்றையும் கவனித்தாள் துளசி, இந்த முறை எதுவும் போலி யாக இருப்பதாகத் தோன்றவில்லை.

"சௌக்கியமா அம்மா?" – குருக்கள் சாரதாவிடம் விசாரித்தார். சாரதா தலையை அசைத்துவிட்டு தூணில் சாய்ந்தவாறு அமர்ந்து கொண்டாள்.

துளசி கோவிலுக்கு வெளிப்புறமாய் இருந்த பிரகாரத் தில் நடந்தாள். ஆங்காங்கே கல்லில் விக்கிரகங்கள், காடாய் வளர்ந்த செடிகள், பாசி படிந்த குளம்...

அவளுக்கு ஏனோ வினோதமான உணர்ச்சி ஏற்பட்டு உடல் சிலிர்த்தது. ஹோவென்று ஓசை எழுப்பும் யந்திரங் கள் நடுவில் இருந்துவிட்டு அமைதியான இடத்திற்கு வந்து சோர்வைப் போக்கிக் கொண்டது போல் இருந்தது. தாயின் காலடி ஓசை கேட்டு யோசனையிலிருந்து மீண்டு கார் இருந்த இடத்தை நோக்கிச் சென்றாள்.

"இப்போது சொல், கடவுள் இருக்கிறாரா?"

திடீரென தாய் கேட்டதும் திடுக்கிட்டாள் துளசி. அந்த மாதிரிக் கேள்வியை அவள் எதிர்பார்க்கவில்லை.

"துளசி, கடவுள் இருக்கிறாரா இல்லையா என்கிற கேள்விக்குக்கூட, நாம் சொல்கிற பதிலைப் பொறுத்துத் தான் மாறுபடும் என்பது என் உத்தேசம். மனிதன் அமைதியாகவும், மகிழ்ச்சியுடனும் வாழ விரும்புகிறான். அந்த அமைதியும் மகிழ்ச்சியும் அவனுக்குப் பக்தியில் கிடைக்கும்போது அந்தப் பக்தியைக் கடவுளுக்கு அர்ப் பணித்துக் கொண்டால் அதைத் தடை செய்ய, தவறு என்று சொல்ல நாம் யார்?

"பக்தியே ஒரு ஹெலுஸினேஷன், பிரமை என்று நீ சொன்னால் அதற்கு என்னிடம் பதில் கிடையாது. ஆனால் அந்தப் பிரமையே எனக்கு மகிழ்ச்சியைத் தரும்போது அதை நான் ஏன் விட வேண்டும்? துளசி, எல்லா மனிதர்களுமே உன்னைப்போல் மனத் துணிச்ச லும், பணப் பிரச்சனை இல்லாதவர்களாகவும் நல்ல தேக நிலமை கொண்டவர்களாகவும் இருப்பார்கள் என்று எண்ணிவிடாதே. உண்மையில் மனிதர்கள் மிகவும் பல வீனமானவர்கள். ஏதேனும் கொஞ்சம் கஷ்டம் வந்து விட்டால் போதும், ஒரு பற்றுக்கோலைத் தேடிக்கொண்டு போவார்கள். அந்தப் பற்றுக்கோல்தான் கடவுள். மலை மீது கோவிந்தா, கோவிந்தா என்று பக்திப் பரவசத்துடன் கத்தும் மனிதர்களைக் கண்டு நீ இரக்கப்படத் தேவை யில்லை. உன் விஞ்ஞானமும், காண்ட்ரடிக்ஷனும் உனக்கு இந்தமாதிரி நிலமையைத் தோற்றுவிக்காமல் போய் விட்டதே என உன் மீதே நீ இரக்கப்பட வேண்டும். அந்தப் பக்தர்களைக் கண்டு பொறாமைப்பட வேண்டும். அந்த மெண்டல் பாலன்ஸ் வந்துவிட்டால் நீயும் இந்தக் கோவிலை, அமைதியை நாடத் தொடங்கி விடுவாய்.

அப்போது நீ விரும்பும் புத்தகம் பகவத் கீதையாகக்கூட இருக்கலாம்.

"துளசி இன்று நீ செய்த சாகசம் பாராட்டுக்குரியது. ஆனால் இதையே ஒரு உதாரணமாக வைத்துக்கொண்டு, சன்னியாசிகள், சாமியார்கள் எல்லாருமே ஏமாற்றுக் காரர்கள் என்றும், கடவுளே இல்லையென்றும் முடிவு செய்துவிடாதே. மனிதர்களை மேம்படுத்துவதற்காக வாழ்க்கையையே தியாகம் செய்த முனிவர்கள் இருக் கிறார்கள். பணத்தையே வேண்டாத சந்நியாசிகள் இருக்கிறார்கள். அவர்கள் காற்றிலிருந்து லிங்கங்களை, விபூதியை வரவழைத்து மாஜிக் செய்கிறார்களே என நீ வாதாடலாம்.

"அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. ஒன்றுமே புரியாது குழப்பத்தில் தத்தளித்துக்கொண்டு இருக்கும் மனிதர்கள் ஏதேனும்அற்புதத்தைக் காட்டினாலொழிய தெய்வத்தை நம்ப மாட்டார்கள். உனக்கு இன்னொரு கேள்வியும் தோன்றலாம். உற்பத்தி வேலைக்கு எந்தத் துணையும் புரியாத இந்தப் பஜனையும், பக்திப் பாடல் களும் எதற்கு என்று கேட்கலாம். உண்மைதான். இந்தப் பக்தியால் மனிதனின் உற்பத்தித் திறன் குறைந்து விடு கிறது. எக்னாமிக்ஸ் படித்தால் உனக்கு இது புரியும். முன்னேற்றத்திற்கும் பக்தி தடை போடுகிறது என்றால், போதை மருந்துகள், சினிமாக்கள் போன்றவைகூட முன்னேற்றத்தால் சாதிக்கப்பட்டவை தானே? அவற்றுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் பக்தியினால் ஏற்படும் ஆபத்து மிகக் குறைவுதானே!"

துளசி சிலையாகி விட்டாள். தன் தாய்க்கு இத்தனை அனலடிகள் நாலெட்ஜ் இருக்கும் என்று அவள் என்றுமே யோசித்ததில்லை. வியப்பிலிருந்து மீள்வதற்கு அவளுக்கு

ஐந்து நிமிடங்கள் தேவைப்பட்டன. "நான் செய்தது தவறா?" என்று தெளிவில்லாமல் கேட்டாள்.

"இல்லை, சித்தேஸ்வரியின் ரகசியத்தை வெளியில் கொண்டு வர வேண்டியதுதான். ஆனால் எனக்கு சித்தேஸ்வரியைவிட நீதான் முக்கியம். இருபது வயது பருவம் மிகப் பொல்லாதது. சூழ்நிலையின் பாதிப்பு அதிகமாக இருக்கும். அடுத்தவர்கள் பேச்சைக் கேட்டு இளைஞர்கள் புரட்சிக்காரர்களாய் மாறுவது இந்தப் பருவத்தில்தான். ஆனால் அதைப்பற்றி முழுவதுமாகத் தெரிந்திருக்க வேண்டுமில்லையா? இந்தப் பாராட்டுகள், சன்மானங்கள் உன்னைக் கடவுள் இல்லை என்ற வழியை நோக்கி கண்மூடித்தனமாக இழுத்துச் சென்று விடுமோ என்றுதான் பயப்படுகிறேன்."

"கடவுள் இல்லை"— துளசி திடமான குரலில் சொன்னாள்.

"அதைத்தான் நான் சொல்ல வந்தேன். அதற்குள் ஒரு முடிவிற்கு வருவதற்கு உனக்கு வயதும் அனுபவமும் போதாது. இன்று உன்னைப் புகழ்பவர்களில் பலர் ஆபத்து வந்தபோது கடவுளை நம்பியவர்கள்தான். அந்த நம்பிக்கை தான் கடவுள். சிலருக்குக் கடவுள் கோவிலில் இருப்பார். சிலருக்கு மனதில் இருப்பார். கடவுளை வழிபடுவது மனதிற்கு அமைதியைத் தரும். அதை மறுக்கும் உரிமை உனக்குக் கிடையாது. மோசடிகளை எதிர்த்து நில். ஆனால் மனிதர்களை நல்வழியில் அழைத்துச் செல்வது பக்தி உணர்ச்சிதான் என்பதை மட்டும் எதிர்க்காதே. இதையெல்லாம் சொல்வதற்காகத்தான் இத்தனை தூரம் அழைத்து வந்தேன்."

* * *

தார்க்கா மண்டையோடு ஒன்றை எப்படியோ தேடிக் கண்டுபிடித்து வைத்துக் கொண்டான். மீதமுள்ள பணத்தில் ஒரு கோழி வாங்கினான். பஞ்சமூல திரவங்களை முதல் நாளே தயாரித்து வைத்துக் கொண்டான்.

முதல் நாளிலிருந்தே அவன் உபவாசம் கடைப்பிடித்தான். அன்றிரவு அவன் உறங்கவில்லை. தேவதைகளைப் பூஜித்தான். பிறகு தன் குருவான விஷாச்சியையும், ராம சாஸ்திரியையும் தியானித்தான்.

மதியம் பன்னிரண்டு ஆகப்போகுமுன் மற்ற வேலைகளைச் செய்ய ஆரம்பித்தான். எங்கேயோ காகம் ஒன்று தாகத்தினால் கத்திக்கொண்டு இருந்தது. சத்திரம் ஆளரவமற்று இருந்தது.

கோழியின் இரத்தத்தால் கோலம் வரைந்தான். பூததேவதைகளுக்கு எல்லாம் அதிபதியான சிவனை பிரார்த்தனை செய்தான். பிறகு காஷ்மோராவையும், கூஷ்மாண்டையும் வணங்கினான். எந்த உபாதையுமின்றி மரணத்தைத் தனக்கு வழங்கும்படி பூததேவதைகளை வேண்டிக் கொண்டான்.

சூரியன் உச்சிக்குவர இன்னும் ஐந்து நிமிடங்கள் இருந்தன.

* * *

"பன்னிரண்டாகி விட்டது. இன்னுமா கிளம்பவில்லை?" என்று சாரதா கேட்டாள்.

ஃபோனில் கடைசியாய்ச் சிநேகிதியிடம் "குட் பை" சொல்லிவிட்டு இருக்கையைவிட்டு எழுந்தாள் துளசி.

"எத்தனை மணிக்கு ப்ளைட்?"

"இரண்டரை மணிக்கு."

நம்பூதிரி காரை ஓட்டிக்கொண்டு இருந்தான். அருகில் துளசி அமர்ந்திருந்தாள். பின்னால் சாரதா.

"எப்போது திரும்பிவரப்ள போகிறாய்?"– நம்பூதிரி கேட்டான்.

"எனக்கோ இரண்டு மாதமும் அங்கே இருந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றுகிறது அங்கிள். ஆனால் டாடியோ பதினைந்து நாட்களில் திரும்பிவிடவேண்டும் என்கிறார். எப்படியாவது ஒரு மாதமாவது இருப்பேன் என்று வைத்துக் கொள்ளுங்கள்" –சிரித்துக்கொண்டே சொன்னாள்.

காஷ்மோராவின் துயில் கலைய சரியாக இருபது நாள் பாக்கியிருந்தது.

* * *

பஞ்சமூலத் திரவத்தால் சுற்றிலும் வட்டமிட்டான் தார்க்கா. கோலத்திற்கு ஒரு அடி தள்ளி சிங்கத்தின் படம் ஒன்றைக் கரியால் வரைந்தான்.

இருந்த இரண்டு எலுமிச்சம்பழங்களை அறுத்து வடக்குத் திசையில் வைத்தான்.

ஐந்து நிமிடங்களுக்கு முன்புதான் அவன் குளித்திருந்த போதும், வியர்வை ஆறாகப் பெருகிக்கொண்டு இருந்தது. காற்றுகூட ஸ்தம்பித்து விட்டிருந்தது.

இடுப்பில் சிறிய துணியைத் தவிர வேறெந்த ஆடையும் இருக்கவில்லை.

சத்திரத்தில் அந்த அறைக்குக் கதவுகள் கிடையாது. சீக்கிரமாகச் சடங்குகளை முடித்துவிட வேண்டும். கோழி

யின் இரத்தத்தில் ஆள்காட்டி விரலை நனைத்து மார்பின் மையத்திலிருந்து வயிறு வரையிலும் கோடிட்டுக் கொண்டான். அந்தக் கோட்டின் வழியாக வயிற்றைக் கிழிப்பதற்காக இரு கரங்களையும் இருபுறமும் கொண்டு வந்த விரல்களைக் கோட்டின்மீது வைத்தான். நகங்களைப் பலமாக அழுத்தப் போனான். பன்னிரண்டடிக்க ஒரு நிமிடம் இருந்தது.

இறுதியில் தன் பலத்தை எல்லாம் விரல்களுக்குக் கொண்டு வந்தான். கண்களை மூடிக்கொண்டு வயிற்றைக் கிழிக்கப் போனபோது...

வாசல்அருகில் குரல் கேட்டது "ஹலோ..."

சட்டெனக் கண்களைத் திறந்தான். காற்றில் இருந்த சலசலப்பு நின்றுவிட்டதுபோல் இருந்தது.

எதிரே நிலைப்படியில் சாய்ந்து கைகளைக் கட்டிக் கொண்டு அவள் நின்றிருந்தாள்.

"நான்தான் துளசி. ஏர்போர்ட்டிற்குப் போகும் வழியில் சத்திரத்தைப் பார்த்தது நினைவிற்கு வந்தது. உன்னை இங்கேதான் இறக்கிவிட்டேன் என்று. ஹௌ ஆர் யூ?" என்றாள் துளசி.

* * *

"இங்கே அவளுக்கு என்ன வேலை?" –நம்பூதிரி கேட்டான்.

"என்னவோ... எனக்கும் தெரியாது"– காரில் ஜன்னல் வழியாகச் சத்திரத்தைப் பார்த்துக்கொண்டே சொன்னாள் சாரதா. நம்பூதிரி காரின் ஹாரனை அடித்தான்.

அந்தச் சத்திரத்தின் குமாஸ்தா ஓட்டமாய் ஓடி வந்து காரைப் பார்த்துவிட்டு, உள்ளே போனான்.

அதே நேரத்தில் உள்ளே தார்க்கா, "உன் பெயர்... துளசியா?" என்று கேட்டுக் கொண்டிருந்தான். உணர்ச்சி மிகுதியால் குரல் நடுங்கிக் கொண்டிருந்தது.

"ஆமாம்... ஏன்?"

"உனக்கு... உனக்குக் காஷ்மோராவைத் தெரியுமா?"

"இருபது நாள் பிடிக்கிற பேய்தானே? அம்மா அடிக் கடி சொல்லிக் கொண்டு இருப்பாள்."

தார்க்கா சட்டென எழுந்து நின்றான். அவன் இதழ்கள் துடித்துக் கொண்டு இருந்தன.

"பத்து வருடங்களுக்கு முன்னால் காஷ்மோரா உன்னைப் பிடித்ததா?"

"அப்படித்தான் சொன்னார்கள். ஆனால் நான் நம்பவில்லை. ஆனால்..." என்று மேலும் சொல்லிக் கொண்டிருந்த அவளை இடைமறித்து, "பிஸ்தாவிற்குப் போன மூவருமே உன்னைச் சேர்ந்தவர்கள்தானா?" என்று கேட்டான்.

அந்த வார்த்தைகளில் இருந்த கடினத் தன்மையைக் கண்டு அவள் முகத்திலிருந்த சிரிப்பு சட்டென மறைந்தது. "ஆமாம், ஏன்?" சற்றே மிரண்டு போனவளாய்க் கேட்டாள்.

"அவர்கள் யார்?"

"ஒருத்தர் என்..." அவள் சொல்லத் தொடங்கு வதற்குள் சத்திரத்தின் குமாஸ்தாவின் குரல் பின்னா லிருந்து கேட்டது.

"என்ன நடக்கிறது இங்கே?"

இருவரும் சட்டென்று திரும்பிப் பார்த்தார்கள். உள்ளே வந்த குமாஸ்தா அறைக்குள் மண்டையோட்டைப் பார்த்துவிட்டு ஓரடி பின்னால் நகர்ந்து வீல் என்று அலறப் போனார். அதற்குள் வெளியிலிருந்து கார் ஹாரன் சத்தம் கேட்டது.

குமாஸ்தா துளசியைச் சந்தேகமாய்ப் பார்த்துவிட்டு, "உங்களிருவருக்கும் என்ன சம்பந்தம்? இதென்ன இரத்தம்?" என்றார். அதற்குள் மறுபடியும் ஹாரன் சத்தம் கேட்டது. அதற்குமேல் அங்கிருப்பது நல்லது இல்லை என துளசிக்குத் தோன்றியது.

"போய் வருகிறேன்" என்று வேகமாக வெளியேறினாள்.

அப்போது மீண்டவனாய் தார்க்கா "நில்" என்று கத்திக்கொண்டே முன்னால் வந்தான். சத்திரத்து குமாஸ்தா குறுக்கிட்டார். "இதெல்லாம் என்ன? உடனே சத்திரத்தைக் காலி பண்ணு" என்று கத்தினார்.

தார்க்கா இரு கைகளாலும் அவனை ஓரமாயத் தள்ளி விட்டு வெளியே ஓடினான். அதற்குள் கார் கிளம்பி விட்டது. அவன் வெளியே வருவதற்குள் அது தெருமுனை திரும்பி மறைந்துவிட்டது.

ஒரே ஒரு விநாடி அவன் கல்லாய் நின்று விட்டான். பிறகு வில்லில் இருந்து புறப்பட்ட அம்பாய் ஓட்டமெடுக்கத் தொடங்கினான். இளம் வயது தந்த பலம், தினந்தோறும் செய்துவந்த யோகசாதனை, குருவான விஷாச்சியின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்ற பிடிவாதம்... எல்லாம் சேர்ந்து அவனை வேகமாய் ஓட்டமெடுக்கச் செய்தன. இடுப்பில் ஒரு சிறிய

துணியுடன் தெருவில் ஓடிக் கொண்டிருந்த அவனை எல்லோரும் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந் தார்கள். அவன் எதையும் பொருட்படுத்தவில்லை. வேகமாய் ஓடிக்கொண்டே இருந்தான். உலகமே தலைகீழாக மாறினாலும் சரி, துளசி யிடம் இருந்து தன் கேள்விக்குப் பதிலைப் பெறாமல் விடப் போவதில்லை. இத்தனை நாட்களாய் வேட்டை யாடி வந்தது பலனளிக்கப் போகிறது. காத்ராவைக் கொன்றது யார் என்று தெரிந்துவிடப் போகிறது.

ஆனால் எத்தனை வேகமாய் ஓடியும் ஊர்க் கோடியில் இருந்த ஏர்ப்போட்டை அடைய ஒரு மணி நேரத்திற்கு மேலாகிவிட்டது.

வெளியே கார்களுக்கு டோக்கன் கொடுத்துக் கொண்டு இருந்த சிறுவர்கள் வேகமாய் ஓடிவரும் தார்க்காவை வியப்புடன் பார்த்தார்கள். தார்க்கா அதே வேகத்துடன் விமான நிலையத்தின் கேட்டருகே போய் நின்றான். அங்கே செக்யூரிடி இன்ஸ்பெக்டர் அவனைத் தடுத்து நிறுத்தினார்.

* * *

"போய் வருகிறேன்" என்று இறுதியாகச் சொல்லி விட்டு 'செக் இன்' பகுதிக்குள் நுழைந்தாள் துளசி. பாது காப்புச் சோதனை முடிந்ததும் லவுஞ்சில் நுழைந்தாள். சற்று நேரத்தில் பிரயாணிகளை போயிங்க் விமானத்திற்கு வரச்சொல்லி ஒலிபெருக்கியில் அறிவிப்பு கேட்டது. அவள் கண்ணாடிக் கதவு வழியாக மற்ற பயணிகளோடு விமானத்தை அடைந்தாள்.

வெளியே தார்க்கா செக்யூரிடி இன்ஸ்பெக்டருடன் வாதம் புரிந்துகொண்டு இருந்தான். அதற்குள் அங்கு

மக்கள் கூடி விட்டார்கள். மார்பில் இரத்தக் கறையுடன் உடலில் சரியான ஆடையில்லாமல் அநாகரிகமாகத் தோன்றிய தார்க்காவை டிக்கெட் இருந்திருந்தாலும் உள்ளே விட்டிருக்கமாட்டார்களோ என்னவோ!

அவன் சுற்றிலும் நோட்டமிட்டான். சிலர் முகத்தில் கேலியும், சிலர் முகத்தில் சிரிப்பும்...

அவன் முகம் வெறுப்பாலும் கோபத்தாலும் சிவந்து விட்டிருந்தது. பத்தாண்டுகளாய்த் தான் செய்து வந்த தவத்தின் பலன் கிடைப்பதாக இருந்து கடைசி நிமிடத் தில் கைநழுவிப் போய்க் கொண்டிருக்கிறது. இப்போது துளசியுடன் வந்தவர்களின் விபரம் தெரிந்தால்கூடப் போதும். ஆனால் அத்தனை பேருக்கு நடுவில் அவர்களை எப்படிக் கண்டுபிடிப்பது?

தார்க்கா அங்கிருந்து வெளியே வந்துவிட்டான் இடது பக்கமாய் ஜனங்கள் இருந்ததைக் கண்டு அந்தப் பக்கமாய் ஓட்டமெடுத்தான்.

விமானத்தில் படியேறிக்கொண்டு இருந்த துளசி பின்னால் திரும்பி காற்றில் கையை அசைத்தாள். பிறகு உள்ளே போய்விட்டாள். அவளுக்குப் பின்னால் கதவு சாத்தப்பட்டுவிட்டது.

விசிட்டர்கள் வராதவாறு அமைக்கப்பட்டிருந்த இரும்புக் கம்பிகளை தார்க்காவின் முறுக்கேறிய கைகள் வளைத்துவிடும் போல் இருந்தன.

உள்ளே சிவப்பு விளக்கு எரியத் தொடங்கியதும் துளசி சீட்டின் பெல்ட்டை மாட்டிக் கொண்டாள். முன் இருக்கையின் சுவரில் இருந்த பேப்பரை எடுத்துப்படிக்கத் தொடங்கினாள்.

தார்க்கா அங்கிருந்து நகர்ந்தான். மக்களை விட்டு விலகி வலது புறமாய்ச் சென்றான். அருகிலேயே வரிசை யாய் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விமானங்கள் தென் பட்டன. அவற்றுக்கு நடுவில் ரன்வே வெய்யிலில் பளபள வென மின்னிக் கொண்டிருந்தது. அங்கே யாரும் இருக்க வில்லை. தார்க்கா சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு அதற் கிடையே ஓடலானான். விமானங்களுக்கு இடையே அவன் ஓடிக்கொண்டு இருந்தது பெரிய பெரிய கழுகு களுக்கிடையே ஓடும் கோழிக் குஞ்சைப் போலிருந்தது.

இன்னும் நூரடி தூரம் ஓடினால் அவன் விமானத்தை அடைந்து விடுவான். ஆனால் எப்படி? அந்த இடத்தில் விமான சிப்பந்திகள் இருந்தார்கள். செய்வதறியாது அவன் ஒரு நிமிடம் தயங்கினான். அவன் கண்கள் நெருப்பை உமிழ்வதுபோல் சிவப்பாய் இருந்தன.

உள்ளே ஏர்ஹோஸ்டஸ் அறிவித்துக்கொண்டு இருந் தாள்– "விமானம் பம்பாயை அடையும் நேரம் ஐந்தரை. விமானத்தை ஓட்டுபவர் கேப்டன் மாதூர்."

துளசி இருக்கையின் பின்னால் சாய்ந்து கொண்டுகண்களை மூடிக் கொண்டாள்.

தார்க்கா நிழலை விட்டு வெளியில் வந்தான். சூரியக் கிரணங்கள் செங்குத்தாய் விழுந்துகொண்டு இருந்தன.

பெருத்த ஓசை எழுப்பிக்கொண்டே விமானம் கிளம்ப முற்பட்டது. தார்க்கா செய்வதறியாது நின்று கொண்டு இருந்தான். விரல் நுனி வரையில் வந்த வெற்றி கைநழுவிக் கொண்டிருக்கிறதே என வருத்தமும் வேதனை யும் அவனைச் சூழ்ந்து கொண்டன.

ஏர்ஹோஸ்டஸ் சின்ன ட்ரேயில் சாக்லேட்டுகளைக் கொண்டு வந்து நீட்டினாள். துளசி புன்முறுவலுடன் இரண்டை எடுத்துக்கொண்டு "தாங்க் யூ" என்றாள்.

விமானம் ஒரு சின்ன குலுக்கலுடன் நின்றுவிட்டது. பிரயாணிகள் எல்லோரும் முன்பக்கம் சாய்ந்தார்கள். எல்லா கதவுகளும் மூடியிருந்ததால் சத்தம் கேட்கவில்லை. இல்லையென்றால் பட்... என்ற சத்தம் பயணிகளுக்கு நிச்சயமாகக் கேட்டிருக்கும். கிரெளண்ட் கண்ட்ரோலர் கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்த்தார். விமானத்தின் வலது பக்கத்து ரப்பர் டயரில் காற்றிறங்கி விட்டிருந்தது. வயர்லெஸ்ஸில் கேப்டன் மாதூருக்கு அந்த விஷயம் தெரிவிக்கப்பட்டது. திடீரென்று விமானம் ஒரு பக்கமாய் சாயத் தொடங்கியது. பயணிகளிடையே பரபரப்பு ஏற் பட்டது. ரன்வேயில் செல்லத் தொடங்குவதற் குள்ளா கவே, விமானம் குடைசாய்ந்தது. அனுபவசாலியான மாதூருக்கே பீதியை ஏற்படுத்தியது. எதிரே இருந்த கண்ணாடி வழியாகப் பார்த்தார்.

நான்கு பேர் விமானத்தை நோக்கி ஓடிவந்து கொண்டிருந்தார்கள். வெளியில் என்ன நடந்துகொண்டு இருக்கிறது?

அவர் நெற்றியில் வியர்த்தது. இருக்கையை விட்டு எழுந்திருக்கக் போனவர் எதிரில் இருந்த மீட்டரைப் பார்த்துத் திடுக்கிட்டார். உஷ்ணத்தை எடுத்துக் காட்டும் முள் வேகமாய் முன்னால் நகர்ந்து கொண்டு இருந்தது.

தன்னையும் அறியாமல் அவருடைய ஆள்காட்டி விரல் சிவப்பு பட்டனை நோக்கிச் சென்றது. பட்டனை அழுத்திவிட்டு காபின் கதவைத் திறந்துகொண்டு வெளி யில் வரப்போனவர், அந்தக் காட்சியைப் பார்த்து அப்படியே நின்றுவிட்டார்.

பயணிகளில் சிலர் ஹிஸ்டீரியா வந்தவர்களைப் போல் கத்திக்கொண்டு இருந்தார்கள். சிலர் இடுப்பின் குறுக்கே கட்டி இருந்த பெல்ட்டைக் கூடக் கழற்றாமல் எழுந்திருக்க முயன்றார்கள்.

அப்போதுதான் அவர் அந்த விபரீதத்தை ஓவல் வடிவ கண்ணாடி ஜன்னல் வழியாகப் பார்த்தார். விமானத்தின் அடியிலிருந்து சிவப்பாய் நெருப்பு மேலே எழும்பிக் கொண்டு இருந்தது.

பின்னால் சீட்டிலிருந்து பாய்ந்து ஓடிவந்து யாரோ கத்தினார்கள். "எமர்ஜென்ஸி கதவைத் திறவுங்கள்..."

அடுத்த நொடியில் அவருக்குத் தன் கடமை நினைவிற்கு வந்தது. அவர் கைகள் இயந்திரத்தைவிட வேகமாய் செயல்படத் தொடங்கின. எமர்ஜென்ஸி கதவு திறந்து கொண்டதும் உஷ்ணமான காற்று வேகமாக வந்து தாக்கியது.

விமானத்தை நோக்கி தீயணைப்புப்படை வேகமாக வந்து கொண்டு இருந்தது. ஒருவர் பின்னால் ஒருவராக வெளியே குதித்துக் கொண்டு இருந்தார்கள். பயத்தினால் பெல்ட்டைக்கூட கழற்ற முடியாமல் தவித்தவர்களுக்கு ஏர்ஹோஸ்டஸ்கள் உதவி செய்தார்கள். அவர்களுடன் இன்னொரு பெண்ணும் உதவியில் ஈடுபட்டு இருந்ததை மாதூர் பாராட்டுவதுபோல் பார்த்தார். பெரும்பாலான பயணிகள் விமானத்தைவிட்டுப் போய் விட்டார்கள். நினைவு தப்பியவர்களை, ஹிஸ்டீரிக் ஆக மாறியவர்களை ஏற்றிக் கொண்ட வேன், ரன்வேயைத் தாண்டிப் போய்க் கொண்டு இருந்தது.

அப்போதுதான் புரிந்தது தார்க்காவிற்கு, அவனுடைய இடது கண் அரத்யுங்க வித்தையை வெளிப்படுத்தி யிருந்தது.

ஏர்ஹோஸ்டஸ் எல்லோரும் தீயணைக்கும் படையினரின் உதவியால் ஜீப்பில் ஏற்றப்பட, காலியான இருக்கைகளுக்கு இடையில் எரிந்துபோன கம்பளத்தின் மீது மாதூர் மௌனமாக நின்றிருந்தார். அதுவரை கலகலவென்று இருந்த அந்த இடம் அப்போது பாழடைந்த மயானமாகக் காட்சி அளித்தது. அவரும் கீழே குதிக்கப் போனபோது பின்னாலிருந்து சத்தம் கேட்டது. கடைசியாக எஞ்சியிருந்த அந்தப் பெண் ஓடிவந்து கொண்டிருந்தாள்.

"யூ... இடியட்... சீக்கிரமாய்க் குதி" என்று கத்தினார். அவருக்கு அந்தச் சமயம் கோபம் அதிகமாக இருந்தது. இதுபோன்ற சூழ்நிலையில் பயணிகள் எல்லோரும் இறங்கிவிட்டார்களா என்று செக் செய்த பிறகுதான், ஏர்ஹோஸ்டஸ்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சி செய்யவேண்டும். உயிர்மீது இருக்கும் ஆசை சட்டத்தை புறக்கணிக்க வைத்துவிட்டது போலும். ஆனால் கடமை தவறாத பைலட்களில் அவர் ஒருவர்.

அதுவரையில் பயணிகளுக்கு உதவி செய்து கொண்டிருந்த பெண்தான் அவள் என்று புரிந்து கொண்டதும் "சரி" என்று சொல்லிவிட்டு, "கெட் அவுட்... க்விக்" என்று கத்தினார்.

துளசியின் முகம் ஏற்கெனவே வெப்பத்தில் கன்றி விட்டிருந்தது. இரும்புக் கம்பியைப் பற்றிக்கொண்டு காற்றில் டைவ் செய்தாள். அவளுக்குப் பின்னாலேயே மாதூரும் குதிக்கப்போனபோது விமானத்தின் சீட் தலையில் இடித்து நினைவு தப்பிவிடும் போலிருந்தது. சமாளித்துக் கொண்டு இரு கைகளையும் ஊன்றி எழுந்து கொள்ளும் போது காதுகள் செவிடாகிவிடும் அளவிற்குப் பெரிய சத்தம் கேட்டது.

அவருடைய உடல் காற்றில் பறந்தது. பிறகு இரண்டாக, நான்காக பிரிந்தது. ஒரு கையும் காலும் தனி யாகப் பறந்தன. உயிர் காற்றுடன் கலந்துவிட்டது.

* * *

கிட்டதட்ட ஐந்து மணிநேரம் கழித்து உடனே அடுத்த ப்ளைட் கிடையாது என்று அறிந்தாலும் அவரவர் கள் வீட்டிற்குத் திரும்பினார்கள். ரன்வேயில் தீயணைக் கும் இயந்திரங்கள் வேலையில் ஈடுபட்டுக்கொண்டு இருந்தன. பைலட் இறந்துபோன செய்தியை நம்பூதிரி துளசியிடம் சொல்லவில்லை.

உண்மையில் நெருப்பில் மாட்டிக்கொண்ட துளசியைவிட சாரதாதான் அதிகம் பயந்துபோனாள். நெருப்பைப் பார்த்ததும் வீலென கத்தி நினைவை இழந்துவிட்டாள். நம்பூதிரிக்குக் கவலையாக இருந்தாலும் எமர்ஜென்ஸி கதவு வழியாகப் பயணிகள் இறங்கி வருவ தைக் கண்டு சற்றே ஆறுதல் கொண்டான். துளசியைப் பார்த்த பிறகு சாதாரண நிலைக்கு வந்துவிட்டான்.

பைலட் இறந்துபோன விஷயம் தெரியாததால் துளசி விரைவிலேயே அதிர்ச்சியிலிருந்து மீண்டுவிட்டாள்.

இனி உடனே ப்ளைட் இல்லையென்று தெரிந்த பிறகு அந்த மூவரும் காரை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். தொலைவிலிருந்து அவர்களையே கவனித்துக்கொண்டு இருந்த தார்க்கா, நிதானமாக கார் அருகில் வந்தான். அவனைப் பார்த்ததும் துளசி, "ஹாய்... இங்கே எப்படி வந்தாய்?" என்று கேட்டாள்.

துளசி திரும்பி, "சித்தேஸ்வரி கோவிலிலிருந்து வெளியேறிவது நாங்கள் இருவரும்தான் அங்க்கிள்" என்றாள்.

அப்போது அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்ட பார்வைக்கு மட்டும் சக்தி இருந்தால் எதிராளி சாம்பலாகியிருக்க வேண்டியதுதான்.

எப்போதும் சிரித்துக்கொண்டு இருக்கும் நம்பூதிரி கூட தீவிரமாய் ஏதோ யோசித்துக் கொண்டு இருந்தான். அவன் காரை ஸ்டார்ட் செய்யும் போது, "நானும் ஊர் வரையில் வருகிறேன்" என்றான் தார்க்கா. சதுரங்க ஆட்டத்தில் இறுதிக் காயை எடுத்துவைக்கும் சூதாட்டக் காரனைப் போல விளங்கினான் அவன். மனக்கணக்குப் போட்டவாறு, ஆவேசத்தை உள்ளுர அடக்கிக்கொண்டு.

ஏர்போட்டிலிருந்து ஊர் ஆறு கிலோ மீட்டர் தொலைவு இருந்தது. இருந்தாலும், அரைகுறை ஆடை யுடன் இருந்த அந்த இளைஞனை காருக்குள் ஏற்றிக் கொள்ள சாரதா தயங்கிக்கொண்டே ஏதோ சொல்ல வந்தாள். அதற்குள் துளசி குனிந்து கார் கதவைத் திறந்தாள்.

"ஏறிக்கொள்."

ஏனோ நம்பூதிரி இதற்கு மறுப்பு ஏதும் சொல்ல வில்லை. ஏதோ சொல்ல நினைத்தும் சொல்லத் தெரியாமல் தவிப்பது போல் தென்பட்டான். சரியாய் ஐந்து மணி நேரத்திற்கு முன்னால் ஒரு அபூர்வ காட்சி யைக் கண்டான். அதை நடைமுறையுடன் ஒப்பிட்டுப் பார்க்கத் தயக்கமாக இருந்தது அவனுக்கு. தனக்குப் பக்கத்தில் அமர்ந்திருக்கும் இளைஞன் சாதாரண ஆள் இல்லையென்று மட்டும் அவனது ஆறாவது அறிவு உணர்த்திக்கொண்டு இருந்தது.

"உன் பெயர்?" நம்பூதிரி கேட்டான்.

"தார்க்கா."

"சத்திரத்தில் என்ன செய்கிறாய்?"

"வழிப்போக்கர்களுக்கு ஜோதிடம் பார்த்துச் சொல்வேன்."

துளசி சட்டென்று முன் சீட்டிற்குக் குனிந்து, "என் கையைப் பார்த்துச் சொல்லேன்" என்றாள்.

கார் தெரு முனையில் திரும்பிக் கொண்டிருந்தது.

"நீங்கள் என்ன செய்கிறீர்கள்?" –தார்க்கா கேட்டான்.

"கேதாரி கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனியின் உரிமை யாளர்" என்றான் நம்பூதிரி.

"என் கையைப் பார்த்துச் சொல்லேன்"– துளசி கெஞ்சுவது போல் கேட்டாள்.

தார்க்கா ஒரு நிமிடம் அவள் கையை உற்று நோக்கி னான்.

"சுமார் பத்து வருடங்களுக்கு முன்னால் உன் உயிருக்கு ஆபத்து நேரிட்டது. மூன்று பேர் உன்னைக் காப் பாற்றி இருக்கிறார்கள்."

"கரெக்ட்" என்றாள் துளசி.

நம்பூதிரியும் சாரதாவும் கூட வியப்புடன் அவன் பக்கம் பார்த்தார்கள்.

"அந்த மூவர் யார்?" –தார்க்கா மிகச் சாதாரணமான குரலில் கேட்டான்.

"என் அப்பா, இந்த நம்பூதிரி அங்க்கிள், லாயர் வித்யாபதி" என்றாள் துளசி.

தார்க்காவின் இதழ்களில் வெற்றிப் புன்னகை மலர்ந்தது.

"காரை நிறுத்துங்கள். சத்திரம் வந்துவிட்டது" என்றான் பணிவோடு.

கார் நின்றது.

அவனுக்குச் சரியாய் கார் கதவைத் திறக்கத் தெரிய வில்லை.

இறங்கி மறுபடியும் கதவைச் சாத்தும்போது ஆள் காட்டி விரல் கதவிடுக்கில் சிக்கியது.

"சாரி" என்றான் நம்பூதிரி.

"பரவாயில்லை."

கார் நகர்ந்தது. துளசி காரிலிருந்து கையை ஆட்டினாள். ஆள்காட்டி விரலில் வழிந்த இரத்தத்தை நடுவிரலால் அழுத்திக்கொண்டு தார்க்காவும் கையை ஆட்டினான். கார் மெதுவாக மறைந்துவிட்டது. பிறகு சத்திரத்தில் தன் அறையை நோக்கி நடந்தான்.

"கிடைத்துவிட்டார்கள், விஷாச்சி. மூன்று பேரும் கிடைத்து விட்டார்கள். இத்தனை நாட்களுக்குப் பிறகு நம் பகை தீரப்போகிறது. முதல்வனைப் பஸ்பம் செய் கிறேன். இரண்டாமவனை மன ரீதியாய் சித்திரவதை புரிந்து கொல்கிறேன். மூன்றாமவனை என் கைகளா லேயே சுயமாய்க் கொல்கிறேன்" என்றெண்ணிக் கொண் டான்.

சத்திரத்தின் சுவர்கள் திட்டுத் திட்டாய் இருந்தன. அந்தச் சுவற்றின் மீது தன் ஆள்காட்டி விரலில் வழியும் இரத்தத்தால் மூவரின் பெயரையும் எழுதினான். அழுக்குப் படிந்த சுவரில் இரத்த எழுத்துக்கள் பயங்கர மாய்க் காட்சியளித்தன.

* * *

17 “நான் பார்த்தேன். என் கண்களால் சுயமாகப் பார்த்தேன்” –நம்பூதிரியின் குரல் பதட்டமாக ஒலித்தது. “உண்மையிலேயே நான் அப்போதே கத்தி இருப்பேன். ஆனால் எல்லோரும் என்னைப் பைத்தியக்காரன் என்று நினைத்துக் கொள்வார்களே என்று சும்மாயிருந்தேன்.”

பண்டிட்டும் ஜெயதேவும் கேட்டுக் கொண்டு இருந்தார்கள்.

“அவனைப் பார்த்ததுமே எனக்குச் சந்தேகம் வந்தது. காஷ்மோராவைப்பற்றி பேப்பரில் விளம்பரம் கொடுத்தவன் எதற்கு வந்தான் என்று. அப்புறமாய் எனக்கு அருகிலேயே காரில் அமர்ந்து ஊருக்குள் வந்தான். துளசிக்குச் சித்தேஸ்வரி கோவிலில் அறிமுகமானவன் அவன் தானாம்.”

“நான்சென்ஸ், மனிதனின் கண்ணிலிருந்து கதிர்கள் புறப்பட்டு விமானம் எரிந்து போவதாவது. நன்றாகத் தான் இருக்கிறது. சிவன் மூன்றாவது கண்ணைத் திறந்ததாகச் சொல்லாமல் விட்டாயே. அதுவரையில் விசேஷம் தான்” என்றார் ஜெயதேவ் சிரித்துக் கொண்டே.

“என் கண்களால் பார்த்திராவிட்டால் நானும் நம்பியிருக்க மாட்டேன்.”

பண்டிட் சற்று யோசித்துவிட்டு, “இன்ஃப்ரா ரெட். லேசர் பீம்...” என்றார். ஜெயதேவின் முகத்தில் சிரிப்பு மாயமாய் மறைந்துவிட்டது. பண்டிட் ஏதோ சொல்லப் போகிறார் என்பதைப் புரிந்து கொண்டு இருவரும் அவரை நோக்கினார்கள்.

“சிறுவர்கள் பூதக் கண்ணாடியால் பேப்பரை எரிப்பதைப் பார்த்திருப்பீர்கள். சூரியனின் கிரணங்கள்

லென்ஸ் வழியாகப் பாயும்போது வெப்பம் உற்பத்தி யாகும். அதை ஒப்புக் கொள்கிறீர்கள் இல்லையா?"

"ஆமாம்"

பண்டிட் ரேக்கிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்து பக்கத்தைப் புரட்டினார். ஒரு பக்கத்தைக் காட்டி, "சூரிய கிரணங்களிலிருந்து லேசர் பீமை எப்படித் தயாரிக்கலாம் என்று ஒரு ஓவியன் வரைந்த கற்பனைப் படம் இது. எத்தனை மெல்லிய கிரணமாக இருந்தாலும் அந்தக் கிரணத்தின் வெப்ப அலைகளைப் பிரித்தெடுக்க முடியு மானால் அது லேசராக மாறிவிடும்."

நம்பூதிரி குறுக்கிட்டு, "ஆனால் விமானம் புறப்படும் போது வானம் மேகமூட்டமாக இருந்ததே" என்றான்.

"இருட்டில்கூட இந்தக் கிரணங்களை உண்டாக்க லாம்."

"எப்படி?"

"ஜியாலஜி படித்தவர்களுக்கு க்வார்ட்ஸ் பற்றி நன்றாகவே தெரியும். பூமியில் உள்ள கற்களில் இவை வித்தியாசமானவை. இவற்றிற்கு சூரிய கிரணங்களைத் தன்னுள் அடக்கிக் கொள்ளும் குணம் இருக்கிறது. ஜப்பானிய கடிகாரங்களைச் சூரிய சக்தியால் ஆட்டோ மாடிக்காக இயங்க வைக்க இந்தக் கற்கள் தான் பயன்படு கின்றன. இவற்றை உரசுவதால் சக்தியை உண்டாக்கலாம்."

"அதனால் என்ன நடக்கும்?"

"ஏதாவது சாற்றை ஊற்றி கண்களில் இந்தக் கல்லை உருவாக்க முடிந்தால், பகல் நேரத்தில் அது சூரியனின் சக்தியைக் கிரகித்துக் கொள்ளும். பிறகு லேசாகக் கண்ணைக் கசக்கினால் போதும். லேசர் பீம் வெளிப்படும்.

க்வார்ட்ஸிலிருந்து உற்பத்தியாகும் கதிர்கள் ரேடீனா கான் வெக்ஸ் லென்ஸ் மேல் பட்டு லேசராய் மாறி கண்ணி லிருந்து புறப்படும். அந்த லேசர் கதிர்கள், விமானத்தை என்ன, வைரத்தைக்கூடப் பிளந்துவிடும்."

"ஃபெண்டாஸ்டிக், என்னால் நம்பவே முடிய வில்லை."

"நானும் நம்பவில்லை. ஆனால் விஞ்ஞானத்தின் மூலம் எப்படிச் சாதிக்க முடியும் என்பதற்கு ஒரு சின்ன விளக்கம் கொடுத்தேன். அவ்வளவுதான்" என்று பண்டிட் முடித்தார்.

* * *

"நான்தான் டாடி துளசி" –ஃபோனில் சொன்னாள்.

"நீ ஏன் இன்னும் கிளம்பவில்லையா?"

"ப்ளைட் மிஸ் ஆகிவிட்டது. நாளைக்கு பம்பாய்க்குப் போய் அங்கிருந்து வரவேண்டும்."

"பயணத்தைக் கான்ஸல் செய்து விடு."

"ஏன் டாடி... நான் வந்து..."

மகளின் வார்த்தைகளைக்கூட இடைமறித்துவிட்டு, "நீ மூன்று, நான்கு நாட்களுக்குப் பிறகு இங்கு வந்தால் எதையும் பார்க்க முடியாது. நான்கு நாட்களில் நான் அபுதாபிக்குப் போகப் போகிறேன். அது ரொம்ப வறட்சி யான பிரதேசம். நான் இந்தியாவிற்கு வந்து திரும்பிப் போகும்போது சேர்ந்து வரலாம். அப்போது எல்லாவற்றை யும் பார்ப்பதற்கு நேரம் இருக்கும்."

"என் மீது கோபம் வந்துவிட்டதா, டாடீ? இங்கே என்ன நடந்துவிட்டது என்றால், நான் கிளம்பிய விமானம்..."

"எனக்குக் கோபம் ஒன்றுமில்லை. நான்கு நாட்கள் கழித்து வந்தால் எதையும் பொறுமையாகப் பார்க்க முடியாதே என்றுதான் சொன்னேன். அவ்வளவுதான்."

* * *

"நாம் உடனே போக வேண்டும்"– சட்டென எழுந்து கொண்டே நம்பூதிரி சொன்னான்.

"எங்கே?"

"சத்திரத்திற்கு."

"எதற்கு?"

"அவனைப் பிடிக்க வேண்டும். அவன் பெயர் தார்க்கா. காஷ்மோராவைப்பற்றி ஏன் விளம்பரம் கொடுத்தான் என்று தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு முன்னால் அவன் கண்களிலிருந்து வெளிப்படும் கதிர்கள் உலகத்தைப் பீதியில் ஆழ்த்துவதற்கு முன்னே அவனைப் போலீஸில் பிடித்துக் கொடுக்க வேண்டும்."

ஐந்து நிமிடங்களில் அவர்கள் சத்திரத்தை அடைந் தார்கள்.

அதற்குள் நன்றாக இருட்டிவிட்டது.

"தார்க்கா இல்லை சார். போய் விட்டான்" – சத்திரத்துக் குமாஸ்தா சொன்னான்.

மூவரும் ஏமாற்றமடைந்தார்கள்.

"காலி செய்துவிட்டானா?"

"ஆமாம். அருகில் ஏதோ வேலை கிடைத்துவிட்ட தாம். போய்விட்டான்."

நம்பூதிரி ஏமாற்றத்துடன் படி இறங்கினான்.

"எங்கே வேலை கிடைத்ததாம்?"

"தெரியாது. ஆனால் போகும்போது மட்டும் காந்தி ரோடுக்குப் போவதாகச் சொன்னான்."

காந்தி ரோடு மிகப் பெரியது. தேடுவது கடினம்.

மூவரும் ஏமாற்றத்துடன் வந்து காரில் ஏறிக் கொண்டார்கள். கார் மெதுவாய்க் கிளம்பியது. ஜெயதேவ் காரை ஓட்டிக் கொண்டிருந்தார்.

அதில் அமர்ந்திருந்த மூவருக்குமே காந்தி ரோடில் தான் ஊரிலேயே புகழ் பெற்ற லாயர் வித்யாபதி குடி இருப்பது மறந்து போயிருந்தது.

"நாம்தான் அநாவசியமாய்ச் சின்ன விஷயத்தைப் பெரிது படுத்துகிறோமோ என்னவோ? தார்க்காவைப் பற்றியும், கண்ணில் கதிர்வீச்சு பற்றியும் இல்லாததை ஊகித்துக் கொண்டு பயப்படுகிறோமோ?" –பண்டிட்டை வீட்டில் இறக்கிவிட்டுக் கொண்டே ஜெயதேவ் சொன்னார்.

"இன்னொரு சம்பவம் ஏதாவது நடந்தால் அப்போது யோசிக்கலாம்" –பண்டிட் சொன்னார்.

"குட் நைட்" என்று சொல்லிவிட்டு ஜெயதேவ் வீட்டை நோக்கிக் காரைச் செலுத்தினார்.

அவர் வீட்டிற்கு வந்து குளித்து விட்டு முன் அறைக்கு வரும்போது ஃபோன் ஒலித்தது. உடனே அதைக் கையில் எடுக்காமல் பொறுமையாத் தலையை வாரிக்கொண்டு,

ஈஸிசேரில் அமர்ந்து சாவகாசமாய் ரிஸீவரை எடுத்து "ஹலோ..." என்றார்.

மறுமுனையிலிருந்து மெலிதாகச் சிரிக்கும் சத்தம் கேட்டது.

ஜெயதேவ் முகத்தைச் சுளித்துவிட்டு "யாரது?" என்றார்.

"நான்தான், ஸ்ரீநிவாசப் பிள்ளை... எப்படி இருக்கிறீர்கள் ப்ரொபசர்"— மென்மையான குரலில் கேட்டான்.

கடிகாரத்தின் டிக்... டிக் ஓசையைத் தவிர வேறெந்தச் சத்தமும் இல்லை.

ஓர் நிமிட மௌனத்திற்குப் பிறகு ஜெயதேவ் கேட்டார், "சொல்லு."

மறுமுனையில் சிரிக்கும் சத்தம் மறுபடியும் கேட்டது. "ரொம்ப நாட்களுக்குப் பிறகு சந்தித்துக் கொள்கிறோம் இல்லையா? பத்து வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. ஆனாலும் எனக்கு அந்த நாள் நன்றாக நினைவு இருக்கிறது ப்ரொபசர்... டப்... டப்..."

ஜெயதேவின் முதுகுத்தண்டு சிலிர்த்தது. எதிரியின் குரூரமும் புத்திசாலித்தனமும் அவனுடைய சிரிப்பில் வெளிப்பட்டுக்கொண்டு இருந்தது.

"இருபத்து நான்கு மணி நேரம் நரகத்தை அனுபவித்தேன்... டப்... டப்... என்று... உண்மையிலேயே பைத்தியம் பிடித்துவிட்டது, ஜெயதேவ். உன் புத்திசாலித்தனத்திற்கு என் பாராட்டுக்கள்." அவன் குரலில் திடீரென்று மாறுதல் தெரிந்தது. "இந்த முறை நான் தீர்மானித்து விட்டேன். ப்ரொபசர்... இருபத்து நான்கு நாட்கள் நீ நிமிடத்திற்கு நிமிடம் உயிரைப்பற்றிய

பயத்துடனே சாகவேண்டும். இருபத்து நான்கு நாட்களில் உன்னைக் கொல்கிறேன். நான் இருபத்து நான்கு மணி நேரம் அனுபவித்த வேதனையை நீ இருபத்தி நான்கு நாட்கள் அனுபவிக்க வேண்டும். இருபத்து நான்காம் நாள் நீ சாவது உறுதி!"

ஃபோனை வைத்து விட்டான் ஸ்ரீநிவாசப் பிள்ளை. அடுத்த அறை விசாலமாக இருந்தது. மங்கலான வெளிச்சம் அறையில் பரவி இருந்தது.

பிள்ளை எழுந்து கண்ணாடி அருகில் வந்தான். டிரஸ் ஸிங்க் டேபிளுக்கு அருகில் ப்ரீஃப்கேஸ் இருந்தது. அதில் ஐம்பது லட்சத்திற்கு மேல் பணம் இருந்தது.

சித்தேஸ்வரி உருவத்தில் மக்களை ஏமாற்றிச் சம்பாதித்த பணம்.

அவன் கண்ணாடியில் பார்த்துக் கொண்டான். தலை முடிக்கு இடையிலேயிருந்து இரு வயர்கள். தோளுக்கு அடியில் சிறிய பாக்கெட். உடம்பின் ஒரு பாகமாக மாறிவிட்ட உலோகத்தினாலான பாக்கெட். வாழ்நாள் முழுவதும் அதைச் சுமந்து கொண்டு அலை வது எவ்வளவு கஷ்டம் என்று அனுபவிப்பவர்களுக்குத் தான் தெரியும்.

இதற்கெல்லாம் காரணம் ஜெயதேவ். அவனைக் கொல்ல வேண்டும்.

சித்தேஸ்வரியின் உருவத்தில் இருந்தபோது மனிதர் களைக் கொல்வது சுலபமாக இருந்தது. இப்படி நடக்க விடாமல் அந்த இருவரும் தடுத்து விட்டார்கள்.

ஒரு கோடி ரூபாயைச் சம்பாதிக்க வேண்டும்– என்பது அவனது லட்சியமாக இருந்தது. அந்த

லட்சியத்தை எட்டவிடாமல் அவர்களை தடுத்து விட்டார்கள். அவர்களையும் கொல்ல வேண்டும்.

தார்க்கா சுவற்றில் இரத்தத்தால் பெயர்களை எழுதியதுபோல பிள்ளை, பேனாவால் கண்ணாடிமீது பெயர்களை எழுதினான்.

ப்ரொபசர் ஜெயதேவ்...

துளசி...

தார்க்கா...

புத்திசாலிகள் தான் கொல்ல நினைத்தவர்களைக் கத்தியாலோ, துப்பாக்கியாலோ கொல்ல மாட்டார்கள். மனதளவில் தளரச் செய்து, துன்புறுத்தி இறுதியில் உயிர் போகும் விதமாகக் கொல்வார்கள்.

ஸ்ரீநிவாசப் பிள்ளை தன் எதிரிகளைக் கொல்வதற்கு இருபத்து நான்கு நாட்கள்கெடு வைத்துக் கொண்டான். அதற்குக் காரணம் அவன் அநுபவித்த இருபத்து நான்கு மணிநேர வேதனை.

* * *

தார்க்காவும் தன் எதிரிகளைக் கொல்ல இருபத்து நான்கு நாட்கள் கெடுவை வைத்துக் கொண்டான். அன்றி லிருந்து காஷ்மோரா துயிலெழுந்துகொள்ளப் பதினேழு நாட்கள். அதற்குப் பிறகு துளசியைப் பிடிக்கப் போவது ஏழு நாட்கள். இரண்டையும் கூட்டினால் இருபத்து நான்கு நாட்கள்

துளசி ஸ்ரீநிவாசப் பிள்ளையின் சதித்திட்டத்தில் பலி ஆகாவிட்டால் காஷ்மோரா அவளை நிச்சயமாகப் பலி வாங்கப் போகிறது. ஒருகால் அவள் முன்னாலேயே

இறந்துவிட்டால், காஷ்மோரா மறுபடியும் அதிருப்தி அடைந்து திரும்பப் போக வேண்டியதுதான்.

இந்த மரண ஹோமத்தில் ஆறு பேரில் எத்தனைப் பேர் இறக்கப் போகிறார்களோ, அவர்களுடன் சேர்ந்து எத்தனை அப்பாவிகள் உயிர் இழக்கப்போகிறார்களோ இருபத்து நான்கு நாட்களில் தெரிந்துவிடும்.

* * *

காந்தி ரோடில் ஒரு பெரிய கட்டிடத்திற்கு நூறடித் தொலைவில் நின்றுகொண்டு இருந்தான் தார்க்கா. சுமார் ஐந்து மணி நேரம், நள்ளிரவிலிருந்து விடியும் வரை நின்று பழக்கப்பட்ட அவனுக்கு இது சிரமமான காரியம் இல்லை.

மாலை ஐந்தரை மணிக்கு அவன் சிரமத்திற்குப் பலன் கிடைத்தது. வித்யாபதியின் கார் காம்பௌண்டிற்குள் நுழைந்தது. காம்பௌண்ட் சுவருக்கு மேலிருந்து தார்க்கா எட்டிப் பார்த்தான். உள்ளே இருந்த ஒரு பெண் குழந்தை ஓடி வந்தது. அந்தக் குழந்தையின் பெயர் காஷ்மோரா, வித்யாபதியின் பேத்தி.

தார்க்காவுக்கு அந்த வீட்டில் இருப்பவர்களின் பெயர்களும், தினசரி நிகழ்ச்சிகளும் அத்துப்படியாகி விட்டன. மூவரில் ஒருவனைக் கண்டதுமே எரித்துச் சாம்பலாக்கி விடுவதாகச் சபதமிட்டு இருந்தான். அதனால்தான் அவன் வித்யாபதியைக் கண்களால் பார்க்காமலேயே இத்தனை விஷயங்களையும் சேகரித்து வைத்திருந்தான். இன்றுதான் தொலைவிலிருந்து பார்க் கிறான். மறுநாள் அருகிலிருந்து பார்ப்பது, அதாவது பஸ்ப மாக்கிவிடுவது என்று முடிவு செய்தான்.

வித்யாபதி பேத்தியைத் தூக்கிக்கொண்டு உள்ளே போனான்.

அதற்குப் பிறகு செய்ய வேண்டிய காரியம் ஏதும் இல்லாததால், தார்க்கா காந்தி சிலையருகில் போய்ப் படுத்துக் கொண்டான். வானத்தைப் பார்த்தவாறு யோசனையில் ஆழ்ந்து போனான்.

நாளை வித்யாபதியின் கதை முடிந்துவிடும். நாளை மறுநாள் நம்பூதிரிக்கு மன ரீதியாய்த் துன்பத்தைத் தந்து கொல்ல வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தாகி விட்டது.

நம்பூதிரியின் மனைவிமீது நாளையிலிருந்து ஏவப் போகும் பாதாளக் குட்டி என்ற மந்திரப் பிரயோகம் அவளைக் கொல்ல இருபத்திரண்டு நாட்கள் எடுத்துக் கொள்ளும். அவள் இறந்த அன்றே அவன் தொழிற்சாலையும் கேதாரி கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனியும் பஸ்பமாகி விடும்.

மனைவியின் மரணமும் தொழிற்சாலையின் நாசமும் ஒரே நாளில் நிகழ்ந்துவிட்டால் நம்பூதிரி மனதால் தளர்ந்து விடுவது நிச்சயம். அன்றே மயிலைக் காளையின் தீர்த்தத்தைத் தெளித்து, குருவி இரத்தத்தைக் குடிக்கக் கொடுத்துவிட்டால் போதும், சபதம் நிறைவேறி விட்டாற்போல்தான்.

இனி மீதமிருப்பது ஸ்ரீதர் மட்டுமே. அவன் இந்த நாட்டிலேயே இல்லை. எப்போது வருவான் என்று தெரியாது.

ஏன் தெரியாது? மகளின் சாவுக்குக் கூடவா வர மாட்டான், அதாவது இருபத்து நான்கு நாட்களில் முதலிருவரைக் கொல்வதே கடினம். மூன்றாவது ஆளைத்

தன் கைகளால் சுயமாகக் கொல்வதாய்ச் சொல்லி இருந்தான். துளசியின் சாவு சமாசாரம் தெரிந்து ஸ்ரீதர் இங்கு வருவதற்கு இரண்டு நாட்கள் ஆகலாம். அதாவது எல்லா வற்றையும் சேர்த்து ஒரு மாத காலத்திற்குள் தன் சபதம் நிறைவேறப் போகிறது.

அவனுக்குத் துளசியின் நினைவு வந்தது. அவள் தன் கையைப் பிடித்துக்கொண்டு ஓடியது... கார் ஓட்டியது... முகத்தில் எப்போதுமே தவழ்ந்துகொண்டு இருக்கும் புன் முறுவல்...

பூததேவதைகளுக்கெல்லாம் உயர்ந்த காஷ்மோராவை அவள்மீது ஏவ காத்ராவிற்கு எப்படித்தான் மனம் வந்ததோ?

* * *

சாரதா கணவனுக்குக் கடிதம் எழுதி முடித்தாள்.

மகளைப் பிறர் கௌரவித்த நிகழ்ச்சியில் எடுத்த படங்களையும் கவரில் வைத்து ஒட்டினாள். அன்று துளசியின் பிறந்த நாளானதால் ஸ்ரீதர் வாழ்த்துச் செய்தி அனுப்பி இருந்தான். வீட்டிற்குச் சற்றுத் தொலைவில் தபால் பெட்டி இருந்தது. கடிதத்தைத் தபாலில் சேர்த்து விடக் கிளம்பினாள். பெட்டியில் போட்டுவிட்டுத் திரும்பும் போது எதிரில் இருந்த வீட்டிற்கு முன்னால் லாரி ஒன்று நின்றுகொண்டு இருப்பதைப் பார்த்தாள். ஆட்கள் சாமான்களை இறக்கிக்கொண்டு இருந்தார்கள். லாரிக்கு அருகிலேயே வாக்கிங் ஸ்டிக்குடன் ஒருவர் நின்று கொண்டு இருந்தார்.

அவள் வீட்டிற்குள் வந்துவிட்டாள். சுமார் அரை மணி நேரம் கழித்து, காலிங்பெல் ஒலித்தது. போய்த் திறந்தாள்.

எதிர்த்த வீட்டுக்காரர்.

"வணக்கம்."

சாரதா அடையாளம் புரிந்துகொண்டு, "உள்ளே வாங்க" என்றாள்.

"எதிர் வீட்டிற்குப் புதிதாய் வந்திருக்கிறேன். கொஞ்சம் நெருப்புப் பெட்டி இருந்தால் தருகிறீர்களா?"

அவளுக்குக் கொஞ்சம் வியப்பாய் இருந்தது. அத்தனை பெரிய பங்களாவை வாடகைக்கு எடுத்துக் கொண்டவரிடம் ஒரு வேலையாள் கூடவா இல்லை? வியப்பை வெளியில் காட்டிக் கொள்ளாமல் உள்ளிலிருந்து நெருப்புப் பெட்டியைக் கொண்டுவந்து கொடுத்தாள்.

"கடை கண்ணி ஏதும் அருகில் இல்லை. அதுதான்..." என்றார் அவர்.

சாரதா புன்முறுவலுடன் தலையை அசைத்துவிட்டு, "ஏதாவது தேவைப்பட்டால் கேளுங்கள். தயங்க வேண்டாம்" என்றாள்.

"தேவை இருக்காது என நினைக்கிறேன். நான் ஒருவன்தானே. பிடி அரிசியைக் களைந்து போட்டால் போதும், வேலை முடிந்தது."

அவருடைய சொற்களில் இருந்த பண்பாடு அவளைக் கவர்ந்தது.

"உள்ளே வாருங்கள்." என்றாள் கதவைத் திறந்து கொண்டே, "நீங்கள் ஒருத்தர் தானா?"

"ஆமாம்" – உள்ளே வந்து உட்கார்ந்துகொண்டே சொன்னார் அவர். "என் மனைவி இறந்துபோய் பதினைந்து வருடங்கள் ஆகிறது."

"ஐயாம் சாரி."

"பரவாயில்லை. என் பெயரைச் சொல்லவே இல்லையே... ஐயாம் டாக்டர் வெங்கட். வைசாக் மெண்டல் ஆஸ்பத்திரியில் டாக்டராக இருந்துவிட்டு ரிடையர் ஆகிவிட்டேன். இங்கே ஹிப்போதெரபிக் கம் சைகாலஜிஸ்ட் ஆக ப்ராக்டீஸ் செய்யலாம் என்று இருக்கிறேன்."

ஹிப்போதெரபிஸ்ட் என்றதும் சாரதாவிற்கு ஜெய தேவின் நினைவு வந்தது.

"என் பெண்ணிற்குத் தெரிந்தால் அப்புறமாய் உங்களைக் கேள்விகளாய்க் கேட்டுத் தொந்திரவு செய்வாள்."

அவர் சிரித்தார். "என் பிராக்டீஸ் சூடு பிடிக்கும் வரையில் எனக்கும் பொழுது போக வேண்டும் இல்லையா? தாராளமாய்க் கேட்கட்டும்."

சாரதா ஏதோ சொல்ல வந்தவள் சட்டென நிறுத்திக் கொண்டாள். துளசியைப்பற்றி இன்னும் சரியாக அறிமுகம் ஆவதற்குள் சொன்னால் சரியாக இருக்குமா?"

"இந்த ஏரியாவில் கொசுத் தொல்லை அதிகமோ?"— கொசுக்களைத் தட்டிக்கொண்டே அவர் கேட்டார்.

"ரொம்ப அதிகம். எத்தனை கொசுவத்திச் சுருள் இருந்தாலும் போதவில்லை."

"அல்ட்ராசானிக் ரீஃபெல்லரை உபயோகியுங்கள். புதிதாய் மார்க்கெட்டிற்கு வந்திருக்கிறது. விலையும் நூற்றைம்பது ரூபாய்தான்."

சாரதா முறுவலித்துவிட்டுப் பேசாமல் இருந்தாள். அவர் எழுந்து நின்றார். "வருகிறேன்."

"இன்று மாலை ஐந்து மணிக்கு சின்னதாய் டீ பார்ட்டி இருக்கிறது. இன்று என் பெண்ணிற்குப் பிறந்த நாள்."

"எத்தனையாவது பிறந்த நாள்?"

"இருபத்து ஒன்று முடியும், ஆங்கில தேதிப்பிரகாரம்."

"எனக்குக் கூட்டம், பார்ட்டி என்றால் கொஞ்சம் அலர்ஜி."

"ரொம்பப் பேர் இல்லை. ப்ரொபசர் ஜெயதேவ் என்று, உங்களுக்கும் தெரிந்திருக்கும். ஹிப்னாட்டிஸ்ட். அவரும், குடும்ப நண்பர் நம்பூதிரி, துளசியின் ப்ரொபசர் பண்டிட், அவ்வளவுதான்."

"மூவரானாலும் கூட்டத்தில் சேர்த்தி இல்லையா..." என்று, சிரித்தார் அவர். "என் பங்கு கேக்கைப் பெண்ணி டம் கொடுத்தனுப்புங்கள்."

அதற்குமேல் பொறுக்க முடியாமல் சாரதா கேட்டு விட்டாள். "டாக்டர்..."

படி இறங்கிக்கொண்டு இருந்தவர் நின்றார்.

அவள் சற்றுத் தயங்கிவிட்டு, "நீங்கள் துளசியைக் கொஞ்சம் பரிசோதிக்க வேண்டும்" என்றாள்.

அவர் வியந்து "என்னவாயிற்று?" என்று கேட்டார்.

"சாதாரணமாய் ரொம்ப உற்சாகத்துடன் கலகல வென்று இருப்பாள். ஒரு மாத காலமாய் ஒரு மாதிரியாக இருக்கிறாள். வெளியில் தெரியவில்லை. ஆனால் உள்ளூர ஏதோ அவளை வாட்டுகிறதோ என்று சந்தேகமா இருக் கிறது. நீங்கள் ஸைக்காலஜிஸ்ட் இல்லையா... கொஞ்சம் பரிசோதியுங்கள்."

"துளசி மனதிற்குள் வருந்துவதாய் எப்படித் தெரியும் உங்களுக்கு? தனியாய் உட்கார்ந்து யோசித்துக்கொண்டு இருப்பாளா? இரவு நேரத்தில் அழுதுகொண்டு இருக்கிறாளா? நிலைகொள்ளாமல் எப்போதும் வேறு ஏதோ நினைவில் இருப்பதுபோல் தென்படுகிறாளா?"

"அப்படி எதுவும் ளஇல்லை. மற்ற பெண்களைவிட, துளசி மிகவும் கலகலப்பானவள்."

"பின்னே மனதிற்குள் மறுகுகிறாள் என்று எதை வைத்துக் கொண்டு சொல்கிறீர்கள்? நீங்கள் ஸைக்காலஜி படித்திருக்கிறீர்களா?"

மகளைப் பற்றித் தெரிந்துகொள்ள ஒவ்வொரு தாய்க்கும் ஸைக்காலஜி படித்திருக்க வேண்டியதில்லை என்பது என் அபிப்பிராயம்."

அவர் ஒரு நிமிடம் திகைத்துவிட்டு, பிறகு சமாளித்துக் கொண்டு பெரிதாகச் சிரித்தார். "ஓ.கே. அப்புறமாகப் பார்க்கிறேன்" என்றார்.

* * *

18

"மாதா... அன்னபூர்னேஸ்வரி... பவதி பிக்ஷாம் தேஹி" இரைந்து கத்தினான் தார்க்கா. அவனுடைய உடல் காலை வெய்யிலில் பொன்னைப்போல் மின்னியது.

அதற்கு முன்னால்தான் நம்பூதிரி வீட்டை விட்டு வெளியே போவதைப் பார்த்தான். அவன் அதன் பிறகே அந்த வீட்டின் எல்லைக்குள் நுழைந்தான்.

சிறிய சுற்றுச் சுவர், பழங்காலத்து வீடு. வீட்டைச் சுற்றிலும் செடி கொடிகள் கன்னாபின்னாவென்று வளர்ந் திருந்தன.

"மாதா... கவளம் தாயே..."

"ஒரு நிமிடம் இரப்பா..." உள்ளிருந்து மென்குரல் கேட்டது. நம்பூதிரியின் மனைவியுடையது. அவன் காத்துக் கிடந்தது அவளுக்காகத்தான்.

இரண்டு நிமிடங்கள் கழிந்தன. பிறகு அவள் வரும் காலடி ஓசை கேட்டது.

தார்க்கா மூச்சை அடக்கிக் கொண்டு நின்றான்.

இரண்டு கைகளாலும் சோறு இருந்த கிண்ணத்தை எடுத்து வந்தாள் அவள்.

அனசூயாதேவியைப் போல் வந்து நின்ற அவளைப் பார்த்து தன்னையும் அறியாமல் ஓரடி பின்னால் வைத் தான் அவன்.

வாழையடி வாழையாய் முன்னோர்கள் பயிற்று வித்த வேதங்களே புண்ணிய உருவெடுத்து வந்தாற்போல் அவள் முகம் ஒளி வீசியது.

கடமை நினைவிற்கு வந்தாற்போல் அவன் தேறிக் கொண்டு பாத்திரத்தை நீட்டினான்.

அன்னத்தைப் பாத்திரத்தில் போட்டுவிட்டு அவள் சொன்னாள். "இளைஞனாக இருக்கிறாய். இப்படி உஞ்சவிருத்தி எடுப்பதைக் காட்டிலும் ஏதாவது வேலை செய்யக் கூடாதா?"

அவன் முறுவலித்துவிட்டு போய் விட்டான்.

ஒரு மணி நேரம் கழித்துத் திருப்பி வந்து கதவைத் தட்டினான். அவள் அவனைப் பார்த்துவிட்டுத் திகைத் தாள்.

"ஏதாவது வேலை இருந்தால் கொடு தாயே. இன்றி லிருந்து உஞ்சவிருத்தியை விட்டுவிட்டேன். முதல் நாள் வேலையை உங்கள் வீட்டிலிருந்தே தொடங்குகிறேன்" என்று பணிவோடு சொன்னான்.

அவள் தயங்கினாள். "எங்கள் வீட்டில் என்ன வேலை இருக்க முடியும்?"

"இதோ இந்தச் செடி கொடிகளை அகற்றுவதும் வேலைதானே?"

அவளுக்கு அந்த யோசனை பிடித்தது. "சரி எல்லா வற்றையும் துப்புரவாக்கு. மூன்று ரூபாய் தருகிறேன்" என்று உள்ளே போகப் போனவள், "மதியம் வெய்யில் அதிகமாக இருக்கும். எங்கள் வீட்டிலேயே சாப்பிடலாம்" என்றாள்.

அவன் வேலையைத் தொடங்கினான். செடி கொடி களைப் பிடுங்கி சுத்தம் செய்யலானான். அரை மணியில் அது கிடைத்தது. செடிகளுக்கு இடையே சிக்குண்டவாறு ஜன்னல் வழியாக உருண்டையாக சுற்றி வீசி எறியப் பட்ட தலைமுடி.

எடுத்துக்கொண்டு அவன் வெளியேறினான்.

கருங்குருவியின் இரத்தம், கழுதையின் சாணம், வெள்ளை மண்ணெண்ணெய் முதலியவற்றைக் கலந்து காய்ச்சி பக்குவப்படுத்த வேண்டும். ஒரு வாரம் மௌன மாய் உருவேற்ற வேண்டும். இருபத்து இரண்டு நாட்களில் நோயாளி மெலிந்து உருமாறி கண்ணை மூடுவது உறுதி.

நோயாளி இறந்துவிட்டதாக டாக்டர் உறுதிப்படுத்து வார். உண்மையில் அது சாவு இல்லை— முத்திரை— உறவினர்கள் பிணத்தை மயானத்தில் குழி தோண்டிப் புதைப்பார்கள். அன்று இரவு மந்திரவாதி அதை வெளி யில் எடுப்பான். பிணத்தைக் குளிப்பாட்டி பூஜைகள் செய்வான். பிறகு அவனுக்கும் அந்தப் பிணத்திற்கும் சுமார் இருபது நிமிடம் விவாதம் நடக்கும்.

பிணம் அவனை அருகில் நெருங்க விடாது. பூத தேவதை சக்திகளின்மீது ஆதித்தியத்தைப் பெற்றுவிட்ட மந்திரவாதி பேச்சில் ஆழ்த்தி பிணத்தின் கால்களைப் பிடித்துவிடுவான். பாதத்தின் அருகில் —பசனிக—என்ற நரம்பை இரம்பத்தால் கத்தரித்து விடுவான். அப்போதுதான் அது இறக்கும்.

இந்த முழுப் பிரயோகத்தைத்தான் —பாதாளக் குட்டி— என்பார்கள்.

* * *

"உள்ளே வரலாமா?"

"டாக்டர் வெங்கட் நிமிர்ந்து பார்த்துவிட்டு யெஸ்... நீங்கள் யார்?" என்று கேட்டார்.

"நீங்கள் ஸைக்காலஜிஸ்ட் இல்லையா? நான் யாரென்று கண்டு பிடிக்க முடியாதா?"

அவர் புரியாமல் விழித்தார். அவள் சிரித்து விட்டு கேக் துண்டு இருந்த தட்டை நீட்டினாள்.

"ஓ... துளசி... பிறந்தநாள் வாழ்த்துக்கள்" என்றார்.

"தாங்க்ஸ், நீங்கள் புதிதாக வந்திருப்பதாய் அம்மா சொன்னாள். விஷ் யூ எ ஹேப்பி பிராக்டிஸ் டாக்டர்."

"தாங்க் யூ" என்று சொல்லிக் கொண்டே சுற்று முற்றும் பார்த்தார்.

"என்ன பார்க்கிறீர்கள்"?

"பிறந்த நாள் பரிசாக எதைத் தரலாம் என்று."

"பரிசாக எதுவும் வேண்டாம், டாக்டர். நான் அதற் காகவா கேக் கொண்டு வந்தேன்?" என்றாள்.

டாக்டர் அந்தப் பேச்சைக் காதில் வாங்கிக் கொண்ட தாகத் தெரியவில்லை. மறுபடியும் பார்வையைச் சுழற்றினார். மேஜைமீது பாக்கெட்டில் சுற்றப்பட்டு இருந்த பொருளை எடுத்து அவளிடம் கொடுத்தார்.

"இதென்ன?"

"மஸ்கிடோ ரீபெல்லர், கொசுக்களை விரட்டி யடிக்கும் சாதனம்."

அவள் பிரித்துப் பார்த்துவிட்டு "எப்படி?" என்று கேட்டாள்.

"அல்ட்ராசானிக் ஒலி அலைகள் மூலம். உன் படுக்கை அறையில் வைத்துக்கொள்."

"அந்தச் சத்தத்திற்கு உறக்கம் வருமா எனக்கு?"

"அல்ட்ராசானிக் ஒலி உனக்குக் கேட்காது. கொசுக் களுக்குத்தான் கேட்கும்" என்று சிரித்தார். "நொடிக்கு இருபதிலிருந்து இருபதாயிரம் வரையிலும் உற்பத்தியாகும் ஒலியலைகளை மட்டுமே நாம் கேட்க முடியும். இருபதா யிரம் அலைகளைவிட அதிகமாக வரும் அலைகளை அல்ட்ராசானிக் அலைகள் என்பார்கள். அவற்றை நாம் கேட்க முடியாது. கொசுக்களுக்கு மட்டுமே கேட்கும். தாங்க முடியாமல் ஓடிவிடும்."

"இருபதாயிரத்தைத் தாண்டினால் அல்ட்ராஸானிக் இருபதிற்குள் இருந்தால்?"

"இன்ப்ராஸானிக். அது மிக பயங்கரமானது. அந்த ஒலியலைகளுக்கு இரயில் பாலங்கள், கட்டிடங்கள் சிதைந்து விடும். பூகம்பத்திற்கு முன்னால் வரும் அந்த அலைகள், பூகம்பத்தைவிட அதிக நஷ்டத்தைத் தோற்று விக்கக் கூடியவை."

துளசி யோசித்தாள். "இருபதைவிட குறைந்த அலை களை மனிதனின் குரல் தோற்றுவிக்கவில்லையா?"

"இல்லை."

"சில சிறப்பான சொற்களால் உதாரணமாக ஹ்ரீம்... க்ரீம்... போன்றவைகளால் இருபதிற்கும் குறைவான ஒலியலைகளை சிருஷ்டிக்க முடிந்தால் எதிராளியைக் கொல்லும் வலிமை அந்த அலைகளுக்கு இருக்குமா?

டாக்டர் சிரித்துவிட்டு, "பூததேவதைகளை நம்பு கிறவளா நீ?" என்று கேட்டார்.

"ஒரு நாளும் இல்லை. எனக்கும் அம்மாவிற்கும் இடையே விவாதம். அம்மா இப்படித்தான் வாதாடுவாள்" என்று புன்முறுவல் செய்தாள். பிறகு நினைவிற்கு வந்தவள் போல் சட்டென்று எழுந்து, "பார்ட்டிக்கு நேரமாகி விட்டது டாக்டர். முதலில் உங்களுக்குத் தர வேண்டும் என்று கேக்கைக் கட் செய்யாமலேயே எடுத்து வந்தேன்" என்று கிளம்பப் போனாள்.

"உன் பரிசு..." வெங்கட் நினைவூட்டினார்.

"தாங்க்ஸ். ரொம்ப விலை மதிப்பு வாய்ந்ததாகக் கொடுத்திருக்கிறீர்கள்."

"விலை மதிப்பு அதிகமில்லை. நூற்றைம்பது ரூபாய் தான்."

அவள் போய்விட்டாள். ஸ்ப்ரிங்க் கதவு அவள் பின்னாலேயே மூடிக் கொண்டது.

* * *

19 பார்ட்டி நன்றாக நடந்தது. எல்லோரும் வந்திருந் தார்கள். ஸ்ரீதர் இல்லாததுதான் குறை. சாரதா அதை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. இன்னும் பத்து நாட்களில் வந்துவிடப் போகிறார் என்று திருப்தி இருந்தது.

பார்ட்டியில் திருமணப் பேச்சு அடிபட்டது. துளசி குனிந்து கேக் வெட்டும்போது கதவருகில் ரகசியமாய் "இருபத்தோராவது வயதில் திருமணம் நடந்தால் அதிர்ஷ்டம் என்று எண் ஜோதிடம் சொல்கிறது. ஏன் தெரியுமா?" என்றான் நம்பூதிரி.

துளசி சட்டென நிமிர்ந்து "ஏன்?" என்று கேட்டாள்.

"இரண்டைவிட ஒன்று குறைவான எண். இரண்டுக்கு இடது பக்கமாக இருக்கிறது. அந்த ஆண்டில் திருமணம் செய்து கொண்டால் கணவன் ஒன்றாம் நம்பரைப்போல சுறுசுறுப்பாக இருப்பான். மனைவிக்கு அடங்கியவனாக வும் இருப்பான். வேறெந்த எண்ணுக்கும் இந்தச் சிறப்பு இல்லை."

"இருபதில் செய்து கொண்டால் இன்னும் நல்ல தில்லையா?"

"கணவன் தனித்தன்மையே இல்லாதவனாக இருப்பான்."

அனைவரும் சொல்லென்று சிரித்தார்கள். துளசியின் முகம் சிவந்துவிட்டது.

"நான் திருமணமே செய்து கொள்ள மாட்டேன்"– ரோஷத்துடன் சொன்னாள்.

"இந்த வயதில் எல்லோருமே அப்படித்தான் சொல்வார்கள்" என்றார் குடும்ப டாக்டர் பார்த்தசாரதி.

"என் சொந்த அநுபவத்தில் சொல்கிறேன். கல்யாணம் செய்து கொண்ட ஆண்களைவிட, செய்து கொள்ளாத வர்கள் மூன்று மடங்கு மேல்"– ஜெயதேவ் சொன்னார்.

"நான் சொன்னது பெண்களைப்பற்றி" என்றார் டாக்டர். "பெண்களுக்கு மற்ற எல்லாவற்றையும்விட குழந்தைகளைப் பெற்று அவர்களை வளர்ப்பது இவற்றில் தான் அதிக திருப்தி கிடைக்கிறது."

மற்றவர்களுக்குக் கேட்காதவாறு நம்பூதிரி பார்த்த சாரதியிடம் கேட்டான், "குழந்தைகளைப் பெறுவது சயின் ஸில் எந்தப் பிரிவின் கீழேவரும் டாக்டர்? பிஸிக்ஸா, கெமிஸ்ட்ரியா, ஜுவாலஜியா?"

பார்த்தசாரதியைக் கிண்டலடிப்பது என்றால் நம்பூதிரிக்கு ரொம்பப் பிடிக்கும்.

பார்ட்டியில் நம்பூதிரி இப்படி சந்தோஷத்துடன் ஜோக்குகளை அள்ளி வீசிக்கொண்டு இருக்கும்போது. அவனுடைய மனைவி படுக்கையில் இப்படியும் அப்படியு மாகப் புரண்டு தவித்தாள்.

முதலில் அவளுக்குத் தாகம் எடுத்தது. போய் தண்ணீர் குடித்தாள். ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு மறுபடியும் தாகம் எடுத்தது. அரை மளணிக்குள் பதினைந்து டம்ளர் தண்ணீர் குடித்தது அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. வந்து படுத்துக்கொண்டே சிறிது நேரத்திற்கெல்லாம் வலது பக்கத்து விலா எலும்பிற்குக் கீழே குபுகுபுவென்று ஏதோ பற்றி எரிவதுபோல் இருந்தது. அவள் பற்களை அழுத்திக்கொண்டு வேதனையைப் பொறுத்துக் கொண்டாள். ஐந்து நிமிடங்கள் கழித்து வாயில் உமிழ்நீர் அதிகமாகச் சுரக்கத் தொடங்கியது. படுக்கையைவிட்டு எழுந்திருக்கப்போனாள். ஆனால் ஏதோ அதிசய சக்தி அவளை அழுத்துவதுபோல் எழுந்திருக்க முடியாமல் தவித்தாள். ரொம்ப கஷ்டப்பட்டு வாஷ்பேசின் அருகில் செல்ல முயற்சி செய்தாள். தலையைச் சுற்றியது. முழங்கை யில் ஊசியால் குத்துவது போல் வலி எடுத்தது. வலுக் கட்டாயமாக மேலும் ஒரு அடி எடுத்து வைத்தவள் கீரைத் தண்டைப்போல் துவண்டு தரையில் விழுந்தாள். அதே நேரத்தில் தார்க்கா மயானத்தில் முதல் அம்சத்தை முடித்துவிட்டு இரண்டாவது வாயுவை ஏவுவதற்குத் தயாராக இருந்தான்.

* * *

"போதும் இனி ஜோக்குகளை நிறுத்திக் கொள்."

"எது ஜோக்? சயின்ஸா, இல்லை பிள்ளை பெறுவதா?" நம்பூதிரி கேட்டான்.

சாரதா ஐஸ்கிரீம் கொண்டு வருவதற்காக உள்ளே போனாள். இந்த உரையாடலைக் கேட்டுக்கொண்டு இருந்த துளசியின் முகம் கொஞ்சம் கொஞ்சமாகக் களை

இழந்து கொண்டு இருந்ததை யாரும் கவனிக்கவில்லை. அவள் இதழ்கள் ஏனோ லேசாய்த் துடித்துக்கொண்டு இருந்தன. பயத்தினால் விரல்கள் நடுங்கிக்கொண்டு இருந்தன. அவள் தாய் நினைத்தது சரிதான். அவள் எதற்காகவோ கவலைப்பட்டுக் கொண்டு இருந்தாள்.

"துளசிக்குக் கணவனாக வரப் போகிறவன், புத்திசாலி யாகவும், திடமான கொள்கைகள் கொண்டவனாகவும் இருக்க வேண்டும்" என்றார் ஜெயதேவ்.

அப்போது கேட்டது துளசியின் சிரிப்புச் சத்தம்.

அவர் துளசியைப் பார்த்து, "ஏன்? நான் சொல்வதில் ஏதாவது தவறு இருக்கிறதா?" என்று கேட்டார்.

துளசி மேலும் சிரிக்கத் தொடங்கினாள்.

அவள் சாதாரணமாகச் சிரிக்கவில்லை என்றும், ஹிஸ்டீரியாவின் அறிகுறிகள் இருப்பதையும் முதலில் உணர்ந்தவர் ஜெயதேவ்தான். ஓரடி முன்னால் வந்து "துளசி..." என்றார்.

துளசி தலையை ஆட்டிக்கொண்டு மேலும் சத்த மாகச் சிரித்துக் கொண்டு இருந்தாள்.

அதற்குள் ட்ரேயில் ஐஸ்கிரீம்களைக் கொண்டு வந்த சாரதா, துளசி சிரித்துக் கொண்டு இருப்பதையும், எல்லோரும் அவளையே பார்த்துக் கொண்டு இருப்பதை யும் கவனித்துவிட்டு, "என்னவாயிற்று?" என்று பதட்டத் துடன் கேட்டாள்.

ஒருவருமே பதில் சொல்லவில்லை.

"திருமணம்" சிரிப்பிற்கிடையே சொன்னாள் துளசி. மறுபடியும் அலையலையாய்ச் சிரிப்பு. ஜெயதேவ்

முன்னால் வந்து கன்னத்தில் பளார் என்று அறைந்தார். துளசியின் சிரிப்பு நின்றுவிட்டது. பிறகு அழுகையாய் மாறியது. முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு அழத் தொடங்கினாள். இந்தக் காட்சியைப் பார்த்த சாரதா ட்ரேயை நழுவவிட்டாள்.

சிலீர் என்ற ஓசையுடன் கண்ணாடிக் கிண்ணங்கள் கீழே விழுந்து உடைந்தன. தொடர்ந்து நிசப்தம். நம்பூதிரி துளசியிடம் ஏதோ கூறவந்தபோது ஜெயதேவ் தடுத்து விட்டார்.

ஜெயதேவின் விரல்கள் துளசியின் கேசங்களைக் கோதிவிட்டன. அந்த ஸ்பரிசம் அவளைத் தற்காலிகமாக ட்ரான்ஸில் ஆழ்த்தியது. ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு அவள் கண்களைத் திறந்தாள்.

"எப்படி இருக்கிறது?" ஜெயதேவ் கேட்டார்.

துளசி ஆச்சரியத்துடன், "ஏன்? என்னவாயிற்று எனக்கு?" என்று கேட்டாள்.

பார்த்தசாரதி நடந்ததைச் சொல்லவந்தபோது ஜெயதேவ் தடுத்து, "ஒன்றுமில்லை. தூக்கம் வருகிறது என்றாய்" என ஆரம்பித்தார்.

"சாரி அங்க்கிள்" என்றாள் துளசி புன்முறுவலுடன், "ஏனோ அப்படித் தோன்றியது."

அங்கேயிருந்த ஒவ்வொருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

சூழ்நிலையைப் பழையபடி மாற்றும் முயற்சியில் ஜெயதேவ், சாரதா பக்கம் திரும்பி, "ஜஸ்கிரீம் இன்னும் இருக்கிறதா?" என்று கேட்டார்.

அதற்குள் சமாளித்துக்கொண்ட சாரதா, "இருக்கிறது. இதோ கொண்டுவருகிறேன்" என்று உள்ளே போனாள்.

சூழ்நிலை பழைய நிலைமைக்குத் திரும்பியது.

* * *

ஸ்ரீநிவாசப் பிள்ளையின் கார் சத்திரத்தின் முன்னால் நின்றது. தார்க்காவைப் பற்றி துப்பு துலக்குவதற்காக.

சத்திரத்துக் குமாஸ்தா, "காந்தி ரோடில் ஏதோ வேலை கிடைத்து விட்டதாம். அங்கே போய்விட்டான்" என்று அதே பதிலைச் சொன்னான்.

ஸ்ரீநிவாசப் பிள்ளை மற்றவர்களைப்போல திரும்பிப் போகவில்லை. யோசித்தான்.

சித்தேஸ்வரியின் உருவத்திலிருந்தபோது தார்க்கா சொன்னது நினைவிற்கு வந்தது. துளசிமீது காஷ்மோரா பிரயோகத்தைத் தடுத்து நிறுத்தியவர்களை அவன் தேடிக் கொண்டிருந்தான். இந்நேரம் அவர்களைக் கண்டு பிடித்திருப்பானாக இருக்கும். வேலை கிடைத்துவிட்டது என்றால் அவர்களைக் கொல்வது... காந்தி ரோடு...

அதாவது வித்யாபதி.

அவன் கார் வித்யாபதியின் வீட்டை நோக்கிப் புறப் பட்டது. கிட்டத்தட்ட நான்கு மணி நேரம் காத்திருந்த பிறகு அந்தச் சுற்றுவட்டாரத்தில் தார்க்கா தென் பட்டான். பிள்ளை உடனே அவனருகில் போகவில்லை. பின்தொடர்ந்தான். மறுநாள் நம்பூதிரி வீட்டிற்குப் போனது, அவன் மனைவியின் தலைமுடியைச் சேகரித்தது எல்லாவற்றையும் தொலைவிலிருந்தே கண்காணித்தான்.

மயானத்தில் முதலாவது அங்கத்தை முடித்துவிட்டு வெளியில் வரும்போது காரில் பின் பக்கமாய்த் தொடர்ந்து வந்து நிறுத்திளவிட்டு, "ஹலோ, தார்க்கா..." என்றான் ஸ்ரீநிவாசப் பிள்ளை.

தார்க்கா தன் பெயரைக் கேட்டதும் கற்சிலையாகி விட்டான். அவனுக்குச் சித்தேஸ்வரியை அடையாளம் தெரியவில்லை. உண்மையில் அந்த இருவருக்கும் கொஞ்சம் கூட ஒற்றுமை இருக்கவில்லை.

"யார் நீ?"

"உன்னுடைய நண்பன். மந்திரப் பிரயோகம் நன்றாக நடந்ததா?"

"மந்திரப் பிரயோகமா?"

"நம்பூதிரியின் மனைவி மீது சூனியம் வைப்பது."

தார்க்காவின் பிடி இறுகியது.

பிள்ளை சிரித்துவிட்டு, "உன்னுடைய நண்பன் என்று சொன்னேன் இல்லையா? அதனால் அவர்கள் என் எதிரி களும் தான். சீக்கிரமாய் அவர்களைக் கொன்றுவிடு."

இதைக் கேட்டதும் தார்க்கா சற்று தேறிக்கொண் டான். "என் பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும்?" சந்தேகமாகப் பார்த்துக்கொண்டே கேட்டான்.

"சொல்கிறேன். முதலில் இதைச் சொல். துளசிமீது காஷ்மோரா பிரயோகம் எத்தனை நாளில் முடிவடை யும்?"

"இன்னும் பதினேழு நாட்களில் காஷ்மோரா துயிலெழும். அதைத் தொடர்ந்து ஏழு நாட்கள்."

ஸ்ரீநிவாசப் பிள்ளை காரை ஸ்டார்ட் செய்தான்.' தார்க்கா ஏதோ சொல்ல முயற்சிப்பதற்குள் கார் கிளம்பிப் போய்விட்டது.

தார்க்கா நெற்றியைப் சுளித்தவாறே அந்தப்பக்கம் பார்த்துக்கொண்டு இருந்தான். தன்னைப்பற்றி இவ்வளவு தெரிந்து வைத்திருக்கும் இவன் யார்? நண்பன் என்றால் துளசியைக் கொல்லப் போகிற காஷ்மோராவைப் பற்றி ஏன் விசாரிக்க வேண்டும்? தார்க்கா ஒரு நிமிடம் கண் களை மூடிக் கொண்டான். அந்த ஆளின் முகத்தைத் தன் நினைவுகளில் பதிய வைத்துக் கொள்வதற்காக. ஒரு முறை பதிந்துவிட்டால் என்றாவது ஒரு நாள் பயன்படலாம்.

* * *

ஸ்ரீநிவாசப்பிள்ளை வீடு திரும்பியதும் கடிதம் எபதினான்.

"டியர் ஸ்ரீதர்.

உங்கள் நலம் விரும்பும் நபர்களில் நானும் ஒருவன். பிஸ்தா கிராமத்திலிருந்து தார்க்கா என்கிற மந்திரவாதி வந்திருக்கிறான். துளசிமீது காஷ்மோராவை ஏவுவதற்காக முயன்று வரு கிறான். துளசியின் உடல்நிலை பாதிக்கப்பட்டதும் மயானத்திற்குச் சென்று பார்த்தால் அங்கு பூத தேவதைகளை வழிபட்டுக் கொண்டு இருக்கும் மந்திரவாதி தென்படுவான். அதற்குப் பிறகு என்ன செய்ய வேண்டும் என்று உங்களுக்கே தெரியும். என் பேச்சு உண்மை என்பதற்கு ஆதாரம், துள சிக்கு நேரப்போகிற உடல்நலக் கோளாறுதான். சீக்கிரமாகச் செயல்படுங்கள்.

இப்படிக்கு,
உங்கள் நலம் விரும்பி.

சாரதாவிற்கு இரண்டு நாட்கள் கழித்து இந்தக் கடிதம் கிடைத்தது. சாதாரணமாக ஸ்ரீதருக்கு கடிதங்களை அவள் ரீடைரக்ட் செய்வாள். ஆனால் இப்போது ஸ்ரீதர் வரும் நாள் அருகில் வந்துவிட்டதால் வந்த பிறகு தரலாம் என்று மேஜைமீது வைத்தாள். அதைப் பார்த்த துளசி, காற்றுக்குப் பறந்து விடாமலிருக்க அதைப் புத்தகங் களுக்கு நடுவில் வைத்தாள்.

* * *

கடிதத்தை எழுதி முடித்த பிறகு ஸ்ரீநிவாசப் பிள்ளை தன் முன்னாலிருந்த மற்றொரு காகிதத்தைப் பரிசீலித்துக் கொண்டு இருந்தான்.

ஒன்று– ஜெயதேவைத் தானே கொல்வது.

இரண்டு– தான் எழுதிய கடிதத்திலுள்ள விஷயம் உண்மையென்று தெரிந்து ஸ்ரீதர் முன்னே பின்னே யோசிக்காமல் தார்க்காவைக் கொன்றுவிடுவான்" –இனி இவர்களைத் தவிர துளசி...

பதினோரு ஆண்டுகளுக்கு முன் காஷ்மோரா இருபத் தோரு நாட்கள் துன்புறுத்தியது. இந்த முறை ஏழு நாட்கள் எநத விதமாய்த் துன்புறுத்தப் போகிறது? அது வரையில் காத்திருக்க வேண்டுமா... இல்லை அதற்கு முன்பே பழி தீர்த்துக் கொள்ள வேண்டுமா?

அவன் பேப்பர் மீது 22 என்ற எண்ணை எழுதினான்.

அடுத்த நிமிடம் ஒரு அற்புதமான திட்டம் ஒன்று உருவாகிவிட்டது.

* * *

நம்பூதிரி வீடு திரும்பும்போது மணி பத்தரை ஆகி விட்டது.

கதவைத் திறந்த மனைவியிடம், "நீயும் வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்" என்றான் புன்முறுவலுடன்.

எப்போதும் சுமுகமாய், கம்பீரமாய் விளங்கும் அவள் முகத்தில் அன்று களைப்பும் வேதனையும் குடிகொண்டு இருப்பதை அரை இருட்டில் அவன் கவனிக்கவில்லை. தனக்கு உடல்நிலை சரியாக இல்லையென அவனிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்தவள் தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டாள். இப்போது சரியாகத்தானே இருக் கிறது என்று மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டாள்.

அவள் சமையல் அறையைக் கழுவி முடித்துவிட்டு வரும்போது நம்பூதிரி படுத்துக்கொண்டிருந்தான் அவளும் படுத்துக் கொண்டாளே தவிர உறக்கம் வர வில்லை. வெகு நேரம் கழித்து, "என்னங்க?" என்றாள்.

"நான் ஒரு முறை என் அம்மா அப்பாவைப் பார்த்து விட்டு வரலாம் என்று இருக்கிறேன்" என்றாள்.

அவன் ஆச்சரியமாகப் பார்த்தான். "திடீரென்று இந்த ஆசை தோன்றுவானேன்?" என்று கேட்டான். அவள் பதில் பேசவில்லை. மறுபடியும் அவனே சொன்னான், "நீ கிளம்பிப் போனால் எப்படி? அவர்களை வரச் சொல்லி கடிதம் போடுவோம்."

அதற்கும் அவள் மௌனமாக இருந்தாள். ஏதோ யோசனைகள் அவளை அலைக்கழித்துக் கொண்டு இருந்தன. பிறகு மெல்லிய குரலில், "என்னங்க... திடீரென்று நான் செத்துப்போனால் நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டாள்.

மெதுவாய், ஆனால் தெளிவாகக் கேட்கப்பட்ட அந்தக் கேள்விக்கு அரைத் தூக்கத்தில் இருந்த நம்பூதிரி திடுக்கிட்டு, கண்களைத் திறந்தான்.

"உனக்கு மூளை கலங்கிவிட்டதா என்ன? பேசாமல் படுத்துக்கொள்" என்றான்.

அவள் கண்களை மூடிக் கொண்டாள். சாவு தன்னை விழுங்க வந்துகொண்டு இருக்கிறதென்று அவளால் உணர முடிந்தது. விஞ்ஞானிகள் இதை ஈ.எஸ்.பி. என்பார்கள். படித்தவர்கள் ஆறாவது அறிவு என்பார்கள். அதெல்லாம் அவளுக்குத் தெரியாது. ஆனால் மரணம் வரப் போகிறது. அது மட்டும் தெரிந்தது.

அவள் கண்களைத் திறந்து கணவனைப் பார்த்தாள். அவன் அமைதியாகத் தூங்கிக்கொண்டு இருந்தான். தான் போனபிறகு இவர் மட்டும் தனியாக மீதி வாழ்க்கையை எப்படிக் கழிக்கப் போகிறார்? எப்போதும் கலகலவென்று சிரித்துக்கொண்டு வாழ்க்கையைச் சந்தோஷமாகக் கழித்து வரும் தன் கணவருக்கு, தான் இறந்து போனால் அது அவனை எந்த அளவிற்குப் பாதிக்கும் என்று அவள் ஒருத்திக்கு மட்டும்தான் தெரியும்.

கணவனின் உறக்கம் கலையாமல், நெற்றிமீது விழுந்த கேசங்களைப் பின்னால் நகர்த்தி முத்தம் பதித்தாள். அந்தச் செய்கை அவளது அன்பை, வேதனையை வெளிப் படுத்துவதுபோல் இருந்தது.

* * *

அதே சமயத்தில் வித்யாபதி தன் அறையில் சட்டப் புத்தகங்களைப் புரட்டிக்கொண்டு இருந்தான். மறுநாள் டில்லிக்குப் போக வேண்டி இருந்தது. சுப்ரீம் கோர்ட்டில் வேலை இருந்தது. மிகப் பெரிய வழக்கு.

அவனது கவனத்தைக் கலைப்பதுபோல் அவனுடைய பத்து வயது பேத்தி பால் டம்ளரை எடுத்து வந்தாள்.

"நீ இன்னும் தூங்கவில்லையா, பேபி?" –தம்பளரை வாங்கிக்கொண்டே கேட்டான்.

அவள் தலையை அசைத்துவிட்டு, குடித்து முடித்த டம்ளரை வாங்கிக்கொண்டு போய் விட்டாள்.

அவளையே பார்த்தவாறு இருந்து விட்டான் வித்தியாபதி. அவனது இடது கண் துடித்தது. கண் துடித்தால் ஏதோ நேரப் போகிறது என்று தெரியும். எந்தக் கண் துடித்தால் நல்லது என்பதை மறந்துவிட்டான்.

வழக்கு ஜெயிக்கப்போகிறதா?

மறுபடியும் சட்டப் புத்தகத்தில் மூழ்கிவிட்டான்.

* * *

மணி பதினொன்று அடித்தது.

சாரதாவிற்குத் தூக்கம் வரவில்லை. தென்னை மரத்தின் கீற்றுகள் சலசலக்கும் சத்தம் தவிர வேறெந்த ஒசையும் இல்லை. பெரிய புயல் வருவதற்கு முன்னால் காற்றுகூட அமைதியாக வீசிக்கொண்டிருக்கும். அந்த நிசப்தத்தில் தான் அவளுக்கு ஸ்ரீதர் இல்லாத குறை தெரிந்தது. சீக்கிரமாய் வந்துவிட்டால் நன்றாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டாள்.

"வந்து விடுகிறேன்."

அவள் திடுக்கிட்டாள்.

சிரிப்பொலி சன்னமாகக் கேட்டது. "அதுதான் வரேனென்று சொன்னேனே..."

சாரதாவின் விரல்கள் பயத்தினால் போர்வையின் விளிம்பைப் பற்றிக்கொண்டன. தலையைத் திருப்பிப் பார்த்தாள்.

பக்கத்து கட்டிலில் துளசி படுத்துக் கொண்டு இருந்தாள். ஜன்னல் வழியாகத் தெரிந்த நிலவு வெளிச்சத்தில் அவள் முகத்திலிருந்த இரத்தமெல்லாம் வற்றி வெளுத்து விட்டாற்போல் இருந்தது. கல்லறையில் கிடக்கும் பிணத்தைப்போல் அவள் உடல் அசைவற்றுக் கிடந்தது. ஆனால் மெல்லிய பேச்சுக்குரல் வெளிப்பட்டுக் கொண்டு இருந்தது. நடுவில் மெல்லிய சிரிப்பொலியும் கேட்டது.

மகளை எழுப்புவதற்காக நீட்டியசாரதாவின் கைகள் அப்படியே நின்றுவிட்டன.

துளசியிடம் சலனமில்லை. ஆனால் எப்போது அவிழ்த்துக் கொண்டாளோ தெரியவில்லை. அவள் கூந்தல் விரிந்து பரவிக்கிடந்தது. சாரதா திடுக்கிட்டது அதற்காக இல்லை.

துளசியின் கூந்தல் நுனி மட்டும் உயிர்ப்பெற்று விட்டது போல் அசைந்துகொண்டு இருந்தது. காற்றுக் கூட வீசவில்லை.

வீலென கத்தப்போன சாரதாவின் வாயிலிருந்து சத்தம்கூட வராத அளவிற்கு அந்தக் காட்சி பயங்கரமாக இருந்தது.

20

"அதாவது கடவுள், பேய் பிசாசுகள் இதெல்லாம் கிடையாது என்கிறாய் இல்லையா?"

துளசி தலையை அசைத்துவிட்டு "நிச்சயமாக் இல்லை. இதெல்லாம் மனிதனில் கெட்டிக்காரனாக இருப்பவன் மக்களை முட்டாள்களாக்கி, ஏமாற்றி கொள்ளை அடிப்பதற்காகத்தான் இந்தப் பெயர்களைப் பயன்படுத்திக் கொள்கிறான்."

"சூனியம் என்பதே இல்லையா?"

"இல்லை, எங்கோ மயானத்தில் பொம்மையைத் குழி தோண்டிப் புதைத்தால் இங்கே மனிதன் செத்துப் போவதாவது?"

சாரதா இருவரையும் நோக்கிக் கொண்டிருந்தாள். நேற்றிரவு நடந்த நிகழ்ச்சிகள்... துளசி ஹிஸ்டீரியா வந்தவளைப்போல் சிரித்ததை, அழுததை டாக்டர் வெங்கட்டிடம் சொன்னாள். அடுத்த நாளே அவர் ட்ரீட்மெண்டை ஆரம்பித்தார்.

எடுத்ததுமே பிரச்சனையைப் பற்றிப் பேசாமல் நோயாளியைப் பேச்சில் ஆழ்த்தியதைக் கவனித்தாள்.

"விஞ்ஞானத்திற்கு மேம்பட்ட ஒன்று இருக்கிற தென்றும், விஞ்ஞானமே அதை ஆராய்ந்து வருகிற தென்றும் உனக்குத் தெரியுமா?"

துளசி மௌனமாக இருந்தாள்.

"யோகிகளைப் பற்றித் தெரியுமா உனக்கு?"

"... ... ..."

"உலகத்தில் பெரிய பெரிய ந்யூரோ சர்ஜன்கள்கூட ஏன் தங்கள் இறுதிக் காலத்தில் வேதாந்திகளாக மாறு கிறார்கள்? மூளையின் பிஸியாலஜியை அவர்கள் ஏன் ஏற்றுக் கொள்வதில்லை?"

இதற்கும் துளசி பதில் சொல்லவில்லை. சாரதாவிற்கு மட்டும் வெங்கட் இப்படிப் பேசுவது ஆச்சரியமாக இருந்தது. துளசிக்கோ தெய்வ நம்பிக்கை இல்லை. அதைப் பற்றி வாதாடினால் அவளுடைய மனக் குமுறல் அதிக மாகாதோ?

அவள் யோசித்துக்கொண்டு இருக்கும்போதே வெங்கட் துளசிக்கு ஒரு புத்தகத்தை எடுத்துக் கொடுத்தார். சாரதா அதன் அட்டையின் மேலிருந்த படத்தைப் பார்த் தாள். அந்தப் பத்திரிகையின் பெயர் குண்டலினி. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை டில்லியிலிருந்து வெளிவரும் பத்திரிகை அது.

துளசி பக்கங்களைப் புரட்டிக் கொண்டு இருந்த போதே, "அதில் டாக்டர் ஹிரோஷிமோ டொயாமா எழுதியுள்ள கட்டுரையை எடு" என்றார். அவள் படித் தாள்.

"சாதாரணமாய் விஞ்ஞானம் எடுத்துக் கூறும்– உடல்–மனம்–தவிர சரீரத்தில் மூன்றாவது சக்தியொன்று இருப்பதாக நம் முனிவர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கண்டுபிடித்து இருக்கிறார்கள். கம்பிகளில் மின்சாரம் பாய்வதுபோல் உடலில் ஒரு விதமான சக்தி பாய்ந்து கொண்டு இருக்கிறது. இதை "கி" என்பார்கள். வெளிநாட்டினர் இந்தத் தியரியை நம்பமாட்டார்கள். நரம்புமண்டலம்தான் உடம்பைக் கட்டுப்படுத்துகிற தென்று அவர்கள் நம்புவார்கள். எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்ட ஒரு திரவமானது உடம்பு முழுவதும் சக்தி பாயும் விதமாகச் செய்கிறதென்று ரிஷிகள் நம்பி வந்தார்கள். சீனர்கள் இதை "மெரிடியன்" என்றார்கள்.

"இந்த மெரிடியனைக் கட்டுப்படுத்துவதன் மூலம் நோய்களைக் குணப்படுத்த முடியும் என்று சீன மருத்துவ

சாஸ்திரம் நிரூபித்தது. இதைத்தான் அக்யூபஞ்சர் என்கிறார்கள்."

துளசி வியப்புடன் அவரைப் பார்த்தாள். அவர் படத்தைக் காட்டி விளக்குவதுபோல் சொன்னார்.

"ஆள்காட்டி விரலிலிருந்து பாயும் மின்சாரம் பெருங்குடலுக்குள் நுழைகிறது. ஆள்காட்டி விரலுக்கும் கட்டை விரலுக்கும் இடையில் ஊசியைக் குத்துவதன் மூலம் குடலில் உள்ள நோயைக் குறைக்க முடியும் என்று சீன மருத்துவர்கள் நிரூபித்துள்ளார்கள். விஞ்ஞானத்தால் நிரூபிக்க முடியாத விஷயங்கள் பல இருக்கின்றன. விஞ்ஞானத்திற்கும் தெய்வசக்திக்கும் இடையே நடக்கும் போராட்டத்தில் ஒருவித சமரசநிலை உருவாகிறது. நாக்கை உள்ளடக்கி பிரம்ம மத்தியத்தை மூடக்கூடிய ஒரே ஒரு நபர் நம் நாட்டில் இருக்கிறார். அந்த வித்தையைத் தான் "கேசரி" என்பார்கள்.

கேசரி என்ற வார்த்தையைக் கேட்டதும் சாரதா திடுக்கிட்டாள்.

அதற்குள் துளசியின் முகம் சிவந்துவிட்டது. ஏதோ சொல்ல வேண்டும்போல் உதடுகள் துடித்தன. மறுபடியும் ஸ்ட்ரோக் வந்துவிடப் போகிறதோ என்று சாரதா மகளைப் பிடித்துக் கொண்டாள்.

துளசி விருட்டென்று நாற்காலியை விட்டு எழுந்தாள். "மனிதர்களுக்கு இடையே பொருளாதார வேற்றுமை ஒழிந்துவிட்டால் இந்த தெய்வம், பூதம் என்ற பேச்சே எழாது. மதங்களும் பேய்களும் மனிதனை அடிமைப் படுத்துவதற்காக உண்டானவை. கேபிடலிஸ்ட் கண்ணோட்டத்தில்..."

வெங்கட் குறுக்கிட்டு, "நான் விஞ்ஞானத்தைப் பற்றிப் பேசினால் நீ பொருளாதாரத்தைப் பற்றிப் பேசுகிறாய்" என்றார்.

துளசி மேலும் ரோஷத்துடன், "பொருளாதார ரீதியாய் வசதியாய் இருப்பதற்குத்தான் மனிதன் விஞ்ஞானத்தைப் பயன்படுத்துகிறான்" கத்துவதுபோல் சொன்னாள். "துணிகளின்மீது பாஸ்பரஸைத் தெளிப்பான் மந்திரவாதி. ஐந்து நிமிடங்கள் கழித்து அவை பற்றி எரியும். அப்பாவி கிராம மக்கள் பயந்து நடுங்குவார்கள். மந்திரவாதிகளுக்குக் காணிக்கைகள் செலுத்துவார்கள்."

"ஆனால் நான் சொல்வது..."

"நான் சொல்ல வந்ததை இன்னும் முடிக்கவில்லை" என்றாள் துளசி. அந்தக் குரலில் இருந்த கம்பீரத்தைக் கண்ட சாரதா சிலையாகி விட்டாள்.

"மை போட்டுப் பார்ப்பதாய்ச் சொல்லிவிட்டு மந்திரவாதி கண்ணாடியில் மை தடவுகிறான். தொலைந்து போன பொருளை யார் எடுத்தது என்று அந்தக் கண்ணாடியில் காட்டுவதாகச் சொல்கிறான் ஒரு குழந்தையை உட்கார வைத்து, "உனக்கு ஒரு உருவம் தெரிகிறது பார்" என்று திரும்பத் திரும்பச் சொல்வதால் அந்தக் குழந்தை ஹிப்னாட்டைஸ் ஆகித் தெரிவதாகச் சொல்லும். மீதி நாடகத்தை மந்திரவாதி நடத்துவான். சுற்றிலும் இருப்பவர்கள் மந்திரவாதியின் சொல்லை வேதவாக்காக எடுத்துக் கொள்வார்கள். எங்கே, நான் ஒரு பொருளைத் தொலைத்து விடுகிறேன். மை போட்டுப் பார்த்து சொல்லச் சொல்லுங்கள் பார்ப்போமே" என்று சவால் விடுவதுபோல் கேட்டாள் துளசி.

சாரதா மகளை வியப்புடன் பார்த்துக்கொண்டு இருந்தாள். துளசி எத்தனை பெரியவளாகி விட்டாள்.

மகளின் வாதங்களைத் தன்னால் ஏற்க முடியாமல் போகலாம். தெய்வத்தைப் பற்றித் தன் கருத்து வேறாக இருக்கலாம். ஆனால் அந்தப் பேச்சிலுள்ள நேர்மை, நம்பியதை அடித்துச் சொல்லும் ஆவேசம், வாதம் புரியும் தன்மை எல்லாம் அவளுடைய தனித்தன்மையைத் காட்டு வதாய் இருந்தன.

"விஞ்ஞானம் தன் கைக்கு எட்டாதவற்றைப் பற்றி ஆராய்ந்து கொண்டுதான் இருக்கிறது. சுவாமி ராமானந்தம் என்பவர் பிராணாயாமத்தால் தன் இதயத் துடிப்பைக்கூட நிறுத்திக்காண்பித்து இருக்கிறார்."

"இருக்கலாம். என் எல்லைக்குள் ஆராய்ந்து நான் போலி மந்திரவாதிகளைப் பற்றிப்பேசும்போது, எனக்குத் தெரியாத குண்டலினியைப் பற்றி ஏன் பேசுகிறீர்கள்? என்னை ஏன் யாருமே புரிந்துகொள்ளவில்லை?"– துளசி யின் குரல் துக்கத்தால் உடைந்தது. முகத்தை மூடிக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

சாரதாவின் உள்ளம் மகளை நினைத்து வருந்தியது. சட்டென மகளிடம் போகப்போனவளை வெங்கட் சைகை காட்டி தடுத்துவிட்டார்.

"நீ கடவுளை நம்புகியாய் துளசி. மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்திகள் இருப்பதையும் நம்புகிறாய். உன் தாய் தந்தை இருவருமே அவற்றை நம்பியவர்கள்தான். உன் இரத்தத்திலேயே அந்தக் குணம் இருக்கிறது. பிறகு சித்தேஸ்வரியை நீ வெற்றிகொண்டது உன்னைப் புகழின் உச்சாணிக்குக் கொண்டுபோய் விட்டது. ஒருபுறம் ஆஸ்திகமும், மற்றொரு புறம் நாஸ்திகமும். இரண்டும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட கருத்துகள், இவை இரண்டிற்கும் இடையில் நடக்கும் மனப்போராட்டம்

தான் உன்னை ஸ்கிஜோஃபெர்னியாவில் கொண்டுபோய் விட்டது."

கேட்டுக் கொண்டிருந்த சாரதாள திடுக்கிட்டாள்.

துளசி அவரைக் குழப்பத்துடன் நோக்கினாள்.

"நீ அடுத்த அறையில் போய்ப் படுத்துக்கொள்" என்று துளசியிடம் சொன்னார். ரேக்கிலிருந்து ஒரு இன்ஜெக் ஷன் சிரிஞ்சை வெளியில் எடுத்தார்.

"துளசி தன் மனத்திற்குள் எதையோ வைத்துக் கொண்டு மறுகுகிறாள். அதை வெளியில் கொண்டுவர வேண்டும்"– அவர் ரேக்கிலிருந்து ஒரு சிறிய பாட்டிலை எடுத்தார்.

"இது என்ன?" –சாரதா கேட்டாள்.

"பெண்டதால்" என்றார் வெங்கட். மனதில் இருப்பதை வெளியில் கொண்டுவரப் பயன்படும். நீங்களே பாருங்கள்" என்று உள்ளே போனார்.

அவரைப் பின்தொடர்ந்து உள்ளே போனாள் சாரதா. உள்ளே துளசி படுத்துக்கொண்டு இருந்தாள். சிரிஞ்சில் பெண்டதாலை டிஸ்டில்ட் வாட்டருடன் கலந்து எடுத்துக் கொண்டார். துளசியின் கையைத் திருப்பி இன்ட்ராவீனஸ் கொடுத்தார்.

ஒரு நிமிடம் ஆயிற்று.

அவர் ஊசியை வெளியில் எடுக்காததை சாரதா வியப்புடன் பார்த்தாள். அதைக் கவனித்த அவர், "நமக்கு வேண்டிய விஷயம் வருகிறவரைக்கும் இந்த மருந்தைச் செலுத்திக்கொண்டே இருக்க வேண்டும். பெண்டதால் இரத்தத்தில் இருக்கும் வரை நோயாளி மயக்கத்தில்

ஆழ்ந்து, தன் மனதில் உள்ள உணர்ச்சிகளை வெளிப் படுத்துவாள். தான் என்ன சொல்கிறோம் என்று நோயாளிக்குத் தெரியாது" என்றார்.

விஞ்ஞானம் எத்தனை முன்னேறி இருக்கிறது என்று நினைத்துப் பார்க்கும்போது சாரதாவிற்கு வியப்பாகவும் குழப்பமாகவும் இருந்தது.

துளசியின் கண்கள் மூடிக் கொண்டதைக் கவனித்து விட்டு "உன் பெயர்?" என்று கேட்டார்.

துளசி பதில் சொல்லவில்லை. அவள் முழுவதும் தூங்கிவிடாமல் இருக்க தட்டி எழுப்பி, "உன் பெயர்?" என்று திரும்பக் கேட்டார்.

"துளசி."

"என்ன படித்து வருகிறாய்?"

"சொன்னாள்.

"அப்பாவின் பெயர்?"

"ஸ்ரீதர்."

"அம்மா பெயர்?"

"சாரதா."

"உனக்கு யாரைப் பிடிக்கும் அப்பாவையா? அம்மாவையா?"

"அப்பாவை."

"சினிமா நிறைய பார்ப்பாயா?"

"பார்ப்பேன்."

"உன் அனிமான நடிகர் யார்?"

“அமிதாப்பச்சன்.”

“நாவல்கள் படிப்பாயா?”

“படிப்பேன்.”

“தமிழில் உன் அபிமான எழுத்தாளர் யார்?”

“கல்கி”

பக்கத்திலேயே நின்றுகொண்டு இருந்த சாரதாவிற்கு அவர் நேரடியாக விஷயத்திற்கு வராமல் உரையாடலை நீட்டிப்பதுபோல் தோன்றியது.

“உனக்கு எந்த விளையாட்டு பிடிக்கும்?”

“கிரிக்கெட்.”

“நீ ஆடுவாயா?”

“கல்லூரியில்.”

“நீ பாட்ஸ்மேனா, பௌலரா?”

“பாட்ஸ்மேன்.”

“நேற்று எத்தனை ரன்கள் அடித்தாய்?”

“ஆடவில்லை.”

“எத்தனை நாட்களாக ஆடவில்லை?”

“பதினைந்து நாட்களாய்.”

“ஏன்.”

மௌனம்.

வெங்கட் அவளைத் தட்டி எழுப்பிவிட்டு மறுபடியும் கேட்டார். அவளிடமிருந்து பதில் வரவில்லை. அவர் கேள்வியை மாற்றினார்.

“உனக்குக் கடவுளிடம் நம்பிக்கை இருக்கிறதா?”

“இல்லை.”

“நேற்று இரவு உனக்குக் கனவு வந்ததா?”

“ஆமாம்.”

“என்ன கனவு?”

மௌனம்.

சாரதா ஒரு விஷயத்தைக் கவனித்தாள். சைக்கால ஜிஸ்ட் நோயாளியிடம் இருந்து ஒற்றைச் சொல்லில் பதில் வருவது போல் கேள்விகளைக் கேட்கிறார். அதைவிடப் பெரியதாகப் பதில் சொல்ல வேண்டி வந்தால் மௌனம் சாதிப்பார்கள் போலும்.

“நேற்றிரவு கனவில் யார் வந்தார்கள்.”

முழுத் தூக்கத்தில் ஆழ்ந்து விடாமல் த்ட்டி எழுப்பினார்.

“சதானந்த சக்ரவர்த்தி”

“யாரது?”

“சித்தேஸ்வரியின் சீடன்.”

கேட்டுக் கொண்டு இருந்த இருவரும் அதிர்ச்சியடைந் தார்கள். துளசியின் இரத்த நாளங்களில் சொட்டு சொட்டாக பெண்டதால் நுழைந்துகொண்டு இருந்தது. சிரஞ்சைக் கொஞ்சம் அழுத்திவிட்டு, “சக்ரவர்த்தி எங்கே இருக்கிறான்?” என்று கேட்டார்.

“ஆகாயத்தில்.”

“என்ன சொன்னான்?”

"வரச் சொன்னான்."

சாரதாவிற்குத் துளசி உறக்கத்தில் வந்துவிடுகிறேன் என்று சொன்னது நினைவிற்கு வந்தது. ஆனால் சக்ர வர்த்தி கனவில் வருவதாவது? அவள் யோசித்துக் கொண்டு இருக்கும்போதே அவர் மற்றொரு கேள்வியைக் கேட்டார்.

"சக்ரவர்த்தி இப்போது எங்கே இருக்கிறான்?"

"செத்துப் போய் விட்டான்."

"நீ பார்த்தாயா?"

"பார்த்தேன்."

"அதனால்தான் பயப்படுகிறாயா?"

"... ..."

"உன் மனதில் இருக்கும் வருத்தம் என்ன?" மற்றொரு பெண்டதாலை உள்ளே செலுத்தியபடிக் கேட்டார். துளசியின் உதடுகள் அசைந்தன. பதில் வரவில்லை. வெங்கட் சாரதாவிடம், "நீங்கள் கொஞ்சம் வெளியில் உட்கார்ந்து கொள்கிறீர்களா?" என்றார். அவள் முன் அறைக்குச் சென்று அமர்ந்து கொண்டாள்.

சாரதாவின் மனம் என்னவோபோல் ஆகிவிட்டது. தன் மகளுக்கு என்ன ஆகி விட்டது? அன்பாகப் பார்த்துக் கொள்ளும் பெற்றோரும், நல்ல உடல் நலமும், பண வசதி யும் உள்ள ஒரு பெண்ணிற்கு மனவேதனை இருப்பா னேன்?

அவள் யோசித்துக்கொண்டு இருக்கும்போதே உள்ளே இருந்து பேச்சுக் குரல் கேட்டது. ஆனால் சுவர் குறுக்கே இருந்ததால் தெளிவாகக் கேட்கவில்லை.

"உன்... ம்பு... ல்லையா?"

துளசியின் பதில் காதில் விழவில்லை.

"எத்தனை நாட்களாய்?"

"ஒரு மாதமாய்."

"என்ன ஆயிற்று?"

துளசி ஏதோ பதில் சொல்லி இருக்க வேண்டும்.

அதைக் கேட்டுவிட்டு வெங்கட் "வ்வாட்...?" என்று எவ்வளவு இரைந்து கத்தினார் என்றால் வெளியே உட்கார்ந்திருந்த சாரதா தன்னையும் அறியாமல் உள்ளே ஓட முனைந்தாள்.

அதற்குள் ஏதோ பொருள் கீழே விழுந்த சத்தம் கேட்டது.

சாரதா உள்ளே நுழையும்போது வெங்கட் சுவரில் சாய்ந்து கொண்டு இருந்தார். சிரிஞ்ச் தரையில் விழுந்து உடைந்திருந்தது. துளசியின் கையிலிருந்து இரத்தம் வெளியேறிக்கொண்டு இருந்தது.

சாரதா பார்த்தது அதை இல்லை.

கட்டில் மீது துளசி உட்கார்ந்து இருந்தாள். அவள் கண்கள் பாதி மூடிய நிலையில் இருந்தன. பிரார்த்தனை புரிவதுபோல் பத்மாஸனத்தில் அமர்ந்திருந்தாள். அவள் நாக்கு நன்றாக வெளியில் நீட்டப்பட்டு மறுபடியும் உள்ளே மடிந்திருந்தது. கேசரி முத்திரையைப்போல்.

தரையில் பெண்டதால் திரவம் ஓடிக்கொண்டு இருந்தது.

* * *

ஸ்ரீநிவாசப்பிள்ளை சுமார் இரண்டு மணி நேரமாய்த் தன் சாதனங்கள் அடங்கிய மூட்டையுடன் காரில் அமர்ந்து கொண்டு இருந்தான்.

இரவு மணி ஒன்றாகிவிட்டது. காரேஜின் கதவுகள் மூடி இருந்ததால் புழுக்கமாக இருந்தது. அவன் அதையும் பொருட்படுத்தவில்லை.

காரின் கதவுகளை ஸ்க்ரூ டிரைவரால் திறந்து உள்ளே இருந்த லீவர்களைப் பூட்டால் பூட்டி விட்டான். மேலும் கீழும் நகரக் கூடிய கண்ணாடிக்குக் கீழே சிறிய மரத் துணுக்குகளை வைத்தான். ஒரு முறை மேலேறிய கண்ணாடிகள் கீழே இறங்காமல் இருப்பதாகப் பின் கதவு களுக்குக்கூட பூட்டுகள் இற்றுவிழுவதுபோல் ஏற்பாடு செய்தான்.

அதற்குப் பிறகு செய்ய வேண்டிய வேலையைத் தொடர்ந்தான்.

பானெட்டை உயர்த்தி இக்னிஷன் வயர்களுடன் மேலும் இரண்டு வயர்களைச் சேர்த்து பாட்டரிக்கு அருகிலேயே சின்ன சிலிண்டருடன் பொருத்தினான். காரிலிருந்த டேப் ரிக்கார்டருக்குக் கீழே இருந்த சிறிய ரப்பர் வளையத்தை அந்தச் சிலிண்டரில் பொருத் தினான்.

அதற்குப் பிறகு காரின் கதவுகளை மேலே உயர்த்தி விட்டுச் சாதாரணமாக மூடிவிட்டான்.

பார்ப்பதற்குச் சாதாரணமாக இருந்தது கார். ஆனால்...

காரில் அமர்ந்து ஸ்டார்ட் செய்வதற்காக இக்னிஷனை ஆன் செய்ததுமே பாட்டரி செயல்படுவதால்

சிலிண்டரின் மூடி விழுந்துவிடும். ரப்பர் குழாய் வழியாக சிலிண்டருக்குள் கியாஸ் நுழைந்துவிடும்.

அந்தக் கியாஸ், கார்பன் டை ஆக்ஸைட்.

அப்போது உள்ளிருக்கும் ஆள் மூச்சுவிட முடியாமல் வளியே வர முயற்சிப்பான். ஆனால் ஆட்டோ லாக் ஸிஸ்டம் இருப்பதால் நான்கு கதவுகளும் மூடிக் கொண்டிருக்கும். உள்ளே மரத் துண்டுகள் இருப்பதால் ஜன்னல் கண்ணாடிகள் இறங்காது. காரின் கதவுகளும் திறக்காது.

உள்ளே இருக்கும் ஆள் துடி துடிப்பான். பிறகு மெது வாய் ஸ்டியரிங்க் மீது அவனது தலை சாய்ந்துவிடும்.

அந்தக் காட்சியைப் பார்க்க வேண்டும். ஏனென்றால் அந்தக் கார் ஜெயதேவினுடையது.

ஸ்ரீநிவாசப் பிள்ளை வீடு திரும்பிவிட்டான். மறுநாள் சுமார் எட்டு மணியளவில் ஜெயதேவின் வீட்டிற்குச் சற்றுத் தொலைவில் காரை நிறுத்திவிட்டுக் காத்திருந்தான்.

ஜெயதேவ் எட்டரை மணிக்கு ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும்.

ஸ்ரீநிவாசப் பிள்ளை பைனாகுலர் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

எட்டு இருபதிற்கு ஜெயதேவ் வெளியில் வந்தார். பின்னாலேயே பண்டிட் வருவதைப் பார்த்து பிள்ளையின் புருவம் உயர்ந்தது.

அதிகாலையில் அவருக்கு இங்கே என்ன வேலை? யாருக்கு எந்த நேரத்தில் சாவு எழுதி வைத்திருக்கிறதோ? ஜெயதேவ ஸ்டியரிங்கிற்கு அருகில் இருந்த கதவைத்

திறந்து கொண்டு காருக்குள் நுழைந்தார். பண்டிட்டும் ஏறிக் கொண்ட பிறகு கதவுகள் சாத்தப்பட்டன.

தொலைவிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த பிள்ளை யின் இதழ்களில் வெற்றிப் புன்னகை மலர்ந்தது.

இருவரும் காரில் சிறைப்பட்டு விட்டார்கள். அவர் களை வெளியில் எடுக்க மெக்கானிக்கிற்கு அரைமணி நேரம் செலவிட வேண்டும்.

பண்டிட் ஜெயதேவிடம் ஏதோ சொன்னார். தன் பக்கத்துக் கண்ணாடியைக் கீழே இறக்க முடியவில்லை என சொல்லி இருப்பார். காரை ரிப்பேருக்கு அனுப்ப வேண்டும் என ஜெயதேவ் பதிலளித்திருப்பார்.

ஜெயதேவ் கியரை நியூட்ரலுக்கு மாற்றி இக்னிஷனை ஆக் செய்தார்.

* * *

கார் மெதுவாகப் போய்கொண்டு இருந்தது. அதற்கு முன்பே ஜெயதேவ் தன் பக்கக் கண்ணாடியை இறக்க முயன்று முடியாமல் போகவே காரை அப்படியே ஸ்டார்ட் செய்திருந்தார்.

கார் காரேஜை விட்டு வெளியே வந்து நின்று விட்டது.

"என்னவாயிற்று?" பண்டிட் கேட்டார்.

"ஏதோ நாற்றம். உங்கள் பக்கத்துக் கண்ணாடியை இறக்குங்கள்."

பண்டிட் குனிந்து கண்ணாடியை இறக்க முயன்று "ஊஹூம்... இறக்க முடியவில்லை" என்றார். அதற்குள் ஜெயதேவ் ஆக்ஸிலேட்டரில் இருந்து காலை எடுத்து

விட்டு இரு கைகளாலும் கண்ணாடியை இறக்க முயற்சி செய்தார்.

பயனில்லை.

கரியை எரித்த வாசனை அதிகரித்தது.

"ஏதோ எரிவதுபோல் இருக்கிறது" –பண்டிட் சொன்னார். ஜெயதேவ் இஞ்ஜினை அணைத்தார்.

அப்போதுதான் "ஸ்ஸ்ஸ்" என்ற சத்தம் கேட்டது.

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பண்டிட் கதவைத் திறக்கப் போனார். வரவில்லை. ராடைப் பிடித்துக்கொண்டு தள்ளினார். பலன் இல்லை. தோளால் கதவை ஓங்கி இடித்தார்.

அதற்குள் ஜெயதேவ் ஸ்டியரிங்கின் பக்கத்திலிருந்து சத்தம் வருகிறதென்று கவனித்துவிட்டார். டேப் ரிக்கார்டர் அருகில் சிவப்புக் குழாய் தென்பட்டது.

தன் காரைப்பற்றி அவருக்கு நன்றாகவே தெரியும். புதிதாத இதென்ன குழாய்? சந்தேகத்தோடு அதைப் பிடுங்கினார். எங்கோ ஏதோ விடுபட்ட ஓசை. மேலும் வேகத்துடன் புஸ்ஸ் என்ற ஒலி.

"ஓ... மை காட்..." என்ற வார்த்தைகள் அவரையும் அறியாமல் வெளிப்பட்டன.

"என்னவாயிற்று?" என்று திரும்பிய பண்டிட் அதிர்ச்சி அடைந்தார். ஜெயதேவின் தலை ஸ்டியரிங்க் மேல் கவிழ்ந்துவிட்டது.

சட்டென சமாளித்துக் கொண்ட பண்டிட் ஜெய தேவை இருக்கையிலிருந்து நகர்த்தி தலையை உயர்த் தினார்.

காருக்குள் ஏதோ விஷவாயு பரவிக்கொண்டு இருப்பதை அப்போதுதான் பண்டிட் உணர்ந்தார். அதற்குள் அவருக்கும் தலை சுற்றத் தொடங்கி விட்டது. பின்னால் திரும்பிக் குனிந்து பின்பக்கத்துக் கதவின் பிடியைத் திருகித் தள்ளினார்.

அதுவும் திறக்க வராததால் கலவரம் அதிகரித்து விட்டது. முதல் தடவையாகப் பயம் என்றால் என்ன வென்று உணர்ந்தார். புஸ் என்ற சத்தத்துடன் வாயு வந்து கொண்டே இருந்தது.

இன்னும் அதிக நேரமில்லை என்று அவருக்குப் புரிந்துவிட்டது.

அவர் கண்கள் மூடத் தொடங்கின. கண்களிலிருந்து நீர் வழியத் தொடங்கியது. நினைவு தப்பிவிடும் போலிருந்தது. கைக்குட்டையை எடுத்து மூக்கை மூடிக் கொண்டார். மூடிய காருக்குள் விஷவாயு பரவும்போது கைக்குட்டையால் எப்படித் தடுத்துவிட முடியும்?

பண்டிட் பின் சீட்டிற்குத் தாவினார். அங்கும் விஷவாயு பரவி இருந்தது. இன்னும் சில நிமிடங்களில் தன் நண்பர் இறந்துவிடுவார் என்று புரிந்தது. அதைத் தொடர்ந்து தன் மரணமும் உறுதி.

இரண்டு கைகளாலும் கதவைத் தடதடவென்று தட்டினார்.

கூண்டுக்குள் அடைபட்ட எலியைப்போல் காருக்குள் இங்கும் அங்கும் அலைந்து திரிந்த பண்டிட்டைப் பைனாகுலர் வழியாகப் பார்த்து, பிள்ளை தனக்குள் சிரித்துக் கொண்டான்.

எங்கேயோ கேட்ட நினைவு.

காரின் ஜன்னல் கண்ணாடிகளைவிட பின்பக்கத்துக் கண்ணாடி லேசானதென்று.

அவர் மேலும் யோசிக்கவில்லை.

இரு கைகளையும் சேர்த்து ஒன்றாக மடக்கி, கண்ணாடியின் மீது ஓங்கிக் குத்தினார். சிலீர் என்ற ஓசையுடன் கண்ணாடி நொறுங்கி உடைந்தது.

உடைந்த கண்ணாடித் துணுக்குகள் கையில் குத்தின.

கையிலிருந்து ஒழுகிய இரத்தத்தையும் பொருட்படுத்தாமல், ஜெயதேவின் தோள்களுக்குள் கீழே கையைக் கொடுத்து இழுத்துக் கொண்டுவந்து உடைந்த கண்ணாடி வழியே வெளியே தள்ளினார். கண்ணாடித் துண்டுகள் ஜெயதேவின் உடல் முழுவதும் குத்தி இரத்தம் வந்ததைப் பொருட்படுத்தவில்லை. உடல் காயங்களைவிட உயிர் முக்கியம்.

'டப்' என்ற சத்தத்துடன் ஜெயதேவின் உடல் காருக்கு வெளியே டிக்கிக்கு மேல் போய் விழுந்து உருண்டு சரிந்தது. வெளியே வந்துகொண்டு இருக்கும் போது பண்டிட்டிற்கும் நினைவு தப்பிவிடவே அவரும் கீழே விழுந்தார்.

* * *

"உயிரைக் காப்பாற்றியதற்கு நன்றி, பண்டிட்"

"நான் என்ன செய்து விட்டேன்?" பண்டேஜ் போட்டிருந்த கைகளைப் பார்த்துக்கொண்டே பண்டிட் சொன்னார்.

கைகளில் குத்திய கண்ணாடித் துண்டுகளை எடுக்கவே டாக்டர்களுக்கு ஒரு மணி நேரம் பிடித்தது.

"ரொம்ப இரத்தம் சேதமாகிவிட்டது போல் இருக்கிறது" என்று ஜெயதேவ் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே டெலிஃபோன் மணி ஒலித்தது. ஜெய தேவ் ஃபோனை எடுத்தார்.

"எப்படி இருக்கிறீர்கள், ப்ரொபசர்?"

ஜெயதேவின் கைகள் ரிஸீவரை அழுத்தமாகப் பற்றின. மறுமுனையில் இருந்து குரல் நிதானமாய் ஒலித்தது.

"ரொம்ப கஷ்டப்பட்டு உன் நண்பன் உன்னைக் காப்பாற்றி விட்டான். என் வாழ்த்துக்கள்."

ஜெயதேவ் சின்னக் காகிதத்தில் ஏதோ ஏழுதி பண்டிட்டிடம் காண்பித்தார். பண்டிட் வெளியில் ஓடினார். அதுவரையிலும் மறுமுனையில் சொல்வதைக் கேட்டுக் கொண்டு இருப்பவரைப்போல் "ஊம்.. சொல்லு" என்றார்.

"நீ துப்பறியும் நாவல்கள் அதிகம் படிப்பாயா?"

"ஏன்?"

"இடையில் சிறிது நேரம் பேசவில்லை. அதாவது டெலிஃபோனை 'டிராப்' செய்யச் சொல்லி உன் பக்கத்தில் இருந்தவனிடம் எழுதித் தந்திருப்பாய். இந்த டிரிக் ஆட்டோமேடிக் டெலிஃபோன் எக்ஸ்சேஞ்ச் சிஸ்டத்தில் பயன்படாது" மெலிதாகச் சிரிப்புச் சத்தம் கேட்டது.

எதிராளி மிகக் கெட்டிக்காரன் என்பதை ஜெயதேவ் ஒப்புக் கொண்டார். மறுபடியும் பிள்ளையின் குரல் ஒலித்தது.

"உன்னைக் கொல்வதற்கு முன் உன் மனதில் குமைச் சலை ஏற்படுத்தத் தீர்மானித்திருக்கிறேன். உனக்குக் காஷ்மோராவைப் பற்றித் தெரியுமா?"

ஜெயதேவ் திடுக்கிட்டார். "காஷ்மோராவா?"

"தந்திர சாஸ்திரத்தில் காஷ்மோராவைப் பற்றி எழுதி இருக்கிறது. பதினொரு வருடங்களுக்குப் பிறகு எழுந்து வந்து மறுபடியும் துன்புறுத்துமாம். அதாவது சரியாகப் பத்து பதினொரு நாட்களில் துளசியைக் காஷ்மோரா பிடித்துக் கொள்ளப் போகிறது. அதன் பிறகு ஏழு நாட் களில் துளசி இறந்து விடுவாள்."

"நான்சென்ஸ்... நான் நம்ப மாட்டேன்."

"நீ நம்ப மாட்டாய். அதுதான் எனக்கு வேண்டியது. நாளுக்கு நாள் துளசி இளைத்துத் துரும்பாகிக் கொண்டு இருக்கும்போது, நீ அதற்கு விஞ்ஞான ரீதியான காரணத் தைத் தேடிக் கொண்டிருப்பாய். நான் இப்போது சொன்ன தால் காஷ்மோரா என்று தெரியும். ஆனால் நீ அதை வெளியில் சொன்னால் எல்லோரும் சிரிப்பார்கள். உன் கண்களுக்கு முன்னாலேயே துளசி இறந்து விடுவாள். அதுவரையில் நீ உயிரோடு இருந்தால், –பிள்ளையின் சிரிப்புச் சத்தம் கேட்டது. "காஷ்மோராவைப் பற்றி வெளி யில் சொல்லவும் முடியாது. மனதிற்குள் வைத்துக் கொள்ளவும் முடியாது."

ஜெயதேவ் பற்களை இறுக்கி, "காஷ்மோராவின் பெயரில் நீ மறுபடியும் ஏதாவது..." என்று மேலும் சொல் வதற்குள் பிள்ளை இடைமறித்தான்.

"அப்போது பணத்திற்காகச் செய்தேன். இப்போது எனக்குத் தேவையில்லை. நீங்கள் எல்லோரும் வேதனை யுடன் மறுகுவதைப் பார்த்துச் சிரிப்பதே என் நோக்கம்."

ஆமாம். துளசியைக் கொல்லும் அவசியம் பிள்ளைக்கு இல்லை என்று நினைத்தார் ஜெயதேவ்.

"நீ ஒன்றுமே செய்யாத பட்சத்தில் காஷ்மோரா துளசியை எதுவும் செய்யாது."

"செய்யத் தொடங்கி விட்டது, ஜெயதேவ். இப்போதே அதன் லட்சணங்கள் தெரிய ஆரம்பித்து விட்டன. வேண்டுமானால் அவள் தாயிடம் விபரங்களைக் கேட்டுக் கொள். உனக்குக் காஷ்மோராவைப் பற்றி மேலும் விபரங்கள் வேண்டுமானால் அதைப்பற்றிச் சொல்லக் கூடிய ஆள் ஒருவன்தான்."

"யார்?"

"பகையைத் தீர்த்துக் கொள்வதற்காக பிஸ்தா கிராமத்திலிருந்து வந்துள்ள ஒரே ஒரு மந்திரவாதி தார்க்கா. அவன்தான் துளசியைக் கொல்லப்போகிறான்."

ஃபோன் கட் ஆகிவிட்டது.

* * *

"இத்தனை நாள் என்னிடம் ஏன் சொல்லவில்லை" என்று சற்றுக்கோபத்துடன் கேட்டார் ஜெயதேவ். சாரதா உடனே பேசவில்லை. பிறகு மெதுவாகச் சொன்னாள்.

"ரொம்ப நாள் ஆகவில்லை. நான்கு நாட்களாகத் தான் விநோதமாக நடந்து கொள்கிறாள். எதிர்த்த வீட்டு டாக்டரும் கவலைப்பட ஒன்றுமில்லை என்கிறார். இப்போது துளசி சாதாரணமாகத்தான் இருக்கிறாள்."

"விநோதமாக நடந்து கொள்கிறாளா, ஏன்?"– சாரதா விடம் காஷ்மோராவைப்பற்றிச் சொல்ல நினைத்தார். ஆனால் தானே நம்பாதபோது அதைப் பற்றிச் சொல்வா

னேன் என்று எண்ணிக் கொண்டார். போகும் போது நின்று, "தார்க்கா என்ற பெயரை எப்போதாவது கேள்விப் பட்டு இருக்கிறீர்களா?"

"தார்க்காவா?" என்று கேட்ட சாரதா ஏதோ நினைவு படுத்திக் கொண்டு, "ஆமாம், அன்று எங்களுடனேயே சேர்ந்து காரில் ஏர்போர்ட்டிலிருந்து வந்தான்."

ஜெயதேவிற்கு ஷாக் அடித்ததுபோல் இருந்தது.

அவன்தான் தார்க்காவா?

நம்பூதிரி சொன்னது அவனைப் பற்றித்தானா? கண்களிலிருந்து நெருப்பை உண்டாக்கினான் என்று சொன்னபோது அவர் அதைச் சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை.

பிஸ்தாவிலிருந்து வந்திருக்கும் மந்திரவாதி அவன் தானா?

அப்படியானால் அவனுக்கு யார் மீது பகை?

காஷ்மோராவின் பிடியிலிருந்து ஒரு முறை தப்பி விட்ட துளசி மீதா?

"அவன் உங்கள் காரில் எதற்கு ஏறினான்?"

"துளசிக்குச் சித்தேஸ்வரி கோவிலில் அறிமுகம் ஆனவனாம்."

சித்தேஸ்வரி...

நரம்புகள் தெறித்து விடுமோ என்கிற அளவிற்கு ஜெயதேவிற்குப் பதட்டம் ஏற்பட்டது.

சித்தேஸ்வரி என்றால் ஸ்ரீநிவாசப்பிள்ளை.

பிள்ளையும் தார்க்காவும் ஒன்று சேர்ந்து விட்டார்களா? அதுதான் அவன் ஃபோனில் சவால் விட்டானா?

இல்லை... இல்லை... காஷ்மோராவென்று எதுவும் கிடையாது. நான்சென்ஸ். எது எப்படி இருந்தாலும் துளசி ஆபத்தில் இருக்கிறாள் என்பது உண்மை. சென்ற முறை எலெக்ட்ரானிக் சாதனங்களை அழித்து அவளைக் காப்பாற்றி விட்டார். இந்த முறை அது சாத்தியப்படாமல் போகலாம்.

"ஸ்ரீதர் எப்போது வருகிறான்?"

"இன்னும் பத்து நாள்கள் ஆகலாம்."

அவர் ஒரு முடிவிற்கு வந்து, "துளசியை என்னுடன் அழைத்துப் போகிறேன்" என்றார்.

சாரதா வியப்புடன், "எங்கே?" என்றாள்.

"வைசாக். அவள் கொஞ்சம் நாள் இங்கே இருக்க வேண்டாம். சைக்ரியாடிஸ்ட் கான்பரன்சுக்காக நான்கு நாள்கள் வைசாக் போகிறேன். அவளையும் அழைத்துக் கொண்டு போகிறேன்."

சாரதா கொஞ்சம் தயங்கினாலும், இந்தச் சூழ்நிலையில் மகளுக்கு இடமாற்றம் அவசியம் என்பதை உணர்ந்து சம்மதித்தாள்.

"துளசி எங்கே?"

"எதிர் வீட்டில்."

"ஒரு முறை போய் பார்த்துவிட்டு வருகிறேன்."

அவர் படியிறங்கிக்கொண்டு இருக்கும்போது சாரதா "ப்ரொபசர்..." என்றழைத்தாள். அவர் நின்றார்.

"துளசிக்கு என்னவாகும்?"

அவர் சிரித்துவிட்டு, "எதுவும் ஆகாது" என்று கூறப் போனார். ஆனால் சிரிப்பு வரவில்லை. அவர் இ.எஸ். பி.யை நம்ப மாட்டார். ஆனால் ஏதோ நிகழப் போகிறது என்று ஆறாவது அறிவு அவருக்கு உணர்த்தியது. அவர் பேச்சை மாற்ற நினைத்து, "நாங்கள் வைசாக் போவதுபற்றி யாரிடமும் சொல்ல வேண்டாம், துளசியிடம் கூட" என்றார்.

பிறகு கேட்டைத் திறந்துகொண்டு எதிர் வீட்டிற்குள் நுழைந்தார்.

சாரதா அந்தப் பக்கமே வியப்புடன் பார்த்துக் கொண்டு இருந்தாள். யாரிடமும் சொல்ல வேண்டாம் என்றுஅவர் சொன்னது ஏன் என்றுதான் அவளுக்குப் புரியவில்லை.

* * *

"இது என்ன?" என்று கேட்டாள் துளசி.

"மெஸ்கலின்" என்றார் வெங்கட். "நீ கேட்டாயே என்று தருகிறேன். அதைச் சாப்பிட்டதும் மனதை அமைதியாக வைத்துக் கொள்ள முயற்சி செய். சிரிப்பதோ, மனதிற்கு வேதனை தரும் யோசனையோ வேண்டாம். ஒருமுறை சிரித்தால் சிரிப்பு வந்துகொண்டே இருக்கும். ஆனால் மனதை அமைதியாக வைத்துக் கொண்டால் உன் கவலை எல்லாம் மறந்துபோய் நிம்மதி ஏற்படும்."

கொஞ்ச நேரத்திற்குத் துளசி சாதார்ணமாகத்தான் இருந்தாள். பிறகு உடல் லேசாகி காற்றில் பறப்பதுபோல் உணர்ந்தாள்.

"எப்படி இருக்கிறது?" –வெங்கட் கேட்டார்.

"ம... கி..." என்று அவள் தடுமாறினாள்.

"மகிழ்ச்சியாக" என்று அவர் முடித்தார்.

ஆமாம் என்பதுபோல் தலையசைக்கப் போனாள். தலை அவளுடைய சுவாதீனத்தில் இல்லாததுபோல் தோன்றியது.

வெங்கட் எழுந்து பக்கத்து அறைக்குப் போனார்.

மேஜைமீது இருந்த புத்தகத்தை எடுத்துக் கொள்ள கையை நீட்டினாள் துளசி. கை காற்றில் துழாவியதே தவிர புத்தகத்தை எடுக்க முடியவில்லை. இரண்டு நிமிடங் களுக்குப் பிறகும் தன் கை இன்னும் மடியிலேயே இருப்பதைக் கவனித்தாள். சிரிப்பு வந்தது. ஆனால் சிரிக்கக் கூடாது என்று டாக்டர் சொன்னதை நினைவு படுத்திக் கொண்டு வலுக்கட்டாயமாக சிரிப்பை அடக்கிக் கொண் டாள். மிகப் பிரயாசைப்பட்டு புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

சின்னக் குழந்தைகளுக்கான கதைப் புத்தகம் அது. படங்கள் மங்கலாகத் தென்பட்டன.

ஒரு குதிரை பொம்மை ரொம்ப பயங்கரமாக இருந்தது. ஒரு இளவரசி அழகாக இருந்தாள். ஆனால் அவள் முகத்தில் பயம் பிரதிபலித்துக் கொண்டு இருந்தது. குதிரை ஒன்று இளவரசியைத் துரத்திக்கொண்டு வரும் படம். அடுத்த பக்கத்தைத் திருப்பினாள்.

மந்திரவாதி ஒருவன் மந்திரக்கோலை வீசிக் கொண்டு இருந்தான். குதிரை மனிதனாக மாறிவிட்டது. குதிரையின் உடல் அப்படியே இருந்தது. முகம் மட்டும் மனிதனாக மாறிவிட்டது.

இளவரசி தலையைத் திருப்பினாள்.

அது... அது... அவள்தான். குதிரை மனிதன் அருகில் வந்தான். முன்னங்கால்களை உயர்த்தி, தலையைத் திருப்பினான். அது... அது... சதானந்த சக்ரவர்த்தி.

அவள் வீலென்று கத்தினாள், சரியாக அதே நேரத்தில் ஜெயதேவ் கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார். சிறிய ஓசையுடன் மின்சாரம் நின்றுவிட்டது.

உள்ளேயிருந்த வெங்கட் துளசி கத்தியதைக் கேட்டு ஓடி வந்தார். அவர் கையில் மெழுகுவர்த்தி இருந்தது.

"என்ன ஆயிற்று?" என்று கேட்டார்.

துளசி பேசவில்லை. ஏற்கெனவே அவளுக்கு நினைவு தப்பிவிட்டது.

வெங்கட் குனிந்து துளசியை எழுப்பப் போனார்.

வாசல் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

வெங்கட் மெழுகுவர்த்தியை மேஜைமீது வைத்து விட்டுப் போய் கதவைத் திறந்தார்.

வாசலில் ஆஜானுபாகுவாய் ஜெயதேவ் நின்றிருந்தார். மெழுகுவர்த்தியின் வெளிச்சம் ஜெயதேவின் முகத்தில் விழுந்தது.

"குட் ஈவினிங் டாக்டர். என் பெயர் ஜெயதேவ்."

"குட் ஈவினிங் ப்ரொபசர். உள்ளே வாங்க."

ஜெயதேவ் உள்ளே வந்தார். நாற்காலியில் துவண்டு போன நிலையில் இருந்த துளசியைப் பார்த்துவிட்டு, பதட்டமாய் "என்னாயிற்று?" என்று கேட்டார்.

"ப்ரைமல் தெரபி" என்றார் வெங்கட், துளசியைப் பார்த்துக் கொண்டே.

நோயாளியின் மனதைப் பலவீனப்படுத்தி விஷயத்தை வரவழைப்பதை 'ப்ரைமல் தெரபி' என்பார்கள். ஜெயதேவிற்கு இதைப்பற்றித் தெரியும்.

"துளசி மனரீதியாய் ஏதோ வேதனைப்படுவதாக சாரதா சொன்னார்கள். அது என்ன?" –ஜெயதேவ் கேட்டார்.

"அதைத் தெரிந்து கொள்ளத்தான் இதெல்லாம்" என்றார் வெங்கட்.

துளசி இரவில் பேசியதை, நாக்கை நீட்டியதை, இரவு நேரத்தில் அழுவதை எல்லாம் சாரதா ஜெயதேவிடம் சொல்லி இருந்தாள்.

இருவரும் சற்று நேரம் மௌனமாக இருந்தார்கள். ஜெயதேவ் துளசியை இரக்கத்துடன் பார்த்தார். எவ்வளவு நன்றாக இருந்தவள் எப்படி ஆகிவிட்டாள்? காஷ்மோரா தான் காரணமோ... இல்லை... இல்லை.

சைக்கோஸிஸ், ந்யூரோஸிஸ், ஹிஸ்டீரியா, ஸ்கிஜோஃப்ரெனியா, டிப்ரெஷன் எது வேண்டுமானாலும் இருக்கலாம்.

சிறிது நேரத்தில் துளசிக்கு நினைவு வந்துவிட்டது. கண்களைத் திறந்து ஜெயதேவைப் பார்த்துவிட்டு, "ஹலோ அங்கிள்..." என்று எப்போதும்போல் அழைத்தாள்.

"எப்படி இருக்கிறது?"

"நன்றாகத்தான் இருக்கிறேன்."

ஜெயதேவ் வெங்கட்டைப் பார்த்து, "ஏதாவது மருந்து கொடுக்கப் போகிறீர்களா?" என்று கேட்டார்.

"ஒரு இன்ஜெக்ஷன் தருகிறேன். நாளை மறுபடியும் பார்க்கிறேன்."

துளசி டாக்டருடன் சேர்ந்து உள்ளே போனாள். வெங்கட் சிரஞ்சில் மருந்தை ஏற்றிக் கொண்டே, "கையை நீட்டு" என்றார்.

துளசி கையை நீட்டாமல் சிரித்தாள்.

"உங்கள் வயதென்ன டாக்டர்?" என்று கேட்டாள்.

வெங்கட் வியப்புடன "அறுபது. ஏன் கேட்கிறாய்?" என்றார்.

"உங்களுக்கு ஞாபக மறதி வந்துவிட்டது. கொடுக்க விருக்கும் இன்ஜெக்ஷன் என்னவென்று பார்த்தீர்களா?"

வெங்கட் மருந்தைப் பார்த்துவிட்டு நாக்கைக் கடித்துக் கொண்டவர், "சாரி..." என்றார். சிரிஞ்சை கழுவி விட்டு, "உனக்கு ப்ரொகைனான் பற்றி எப்படித் தெரியும்?" என்று கேட்டார்.

"கிரிக்கெட் மாட்சிற்காக ஊர்களுக்குச் செல்லும் போது எங்களுக்குள் சிலர் எடுத்துக் கொள்வார்கள்."

"இரண்டுமே ஒரே எழுத்தில் தொடங்குவதால் தவறு செய்ய இருந்தேன்" –ப்ரொல்யூடன் மருந்தை சிரிஞ்சில் ஏற்றிக்கொண்டு துளசிக்கு ஊசியைப் போட்டார்.

துளசி வெளியே வந்ததும் அதுவரையில் அவளுக் காகக் காத்திருந்த ஜெயதேவ் எழுந்து நின்றார். டாக்டரி டம் கைகுலுக்கி விடை பெற்றுக் கொண்டார்.

இருவரும் வெளியே வந்தார்கள்.

"நாளை மாலை என்னுடன் வரப்போகிறாய்" என்றார் ஜெயதேவ்.

"எங்கே?"

"போகும்போது சொல்கிறேன்."

தான் வைசாக் என்று நினைத்தால்கூட, விஞ்ஞான சாதனங்கள் மூலம் பிள்ளை கண்டுபிடித்து விடுவானோ என்று தோன்றியது.

* * *

"மூன்றே நாட்களில் ஏன் இப்படி ஆகிவிட்டார்கள்?" நம்பூதிரி கலவரத்துடன் கேட்டான். அவன் மனைவியைப் பரிசோதித்துக்கொண்டு இருந்த டாக்டர் பேசாமல் இருந்தார். உண்மையில் அவருக்கும் ஒன்றும் புரிய வில்லை. இரத்த சோதனை, எக்ஸ்ரே எல்லாமே சாதாரண மாகத் தான் இருந்தன. ஆனால் மூன்றே நாட்களில் பதினைந்து பவுண்ட் எடை குறைந்துவிட்டாள். நோயின் லட்சணங்கள் எல்லாமே விநோதமாகவும் குழப்பமாக வும் இருந்தன.

டாக்டரும், நம்பூதிரியும் வெளியே வந்தார்கள்.

"இது சாதாரணக் கேஸாக எனக்குத் தெரியவில்லை. இன்டென்ஸிவ் கேரில் வைக்க வேண்டும் எனத் தோன்று கிறது. எனக்குத் தெரியாததை ஒப்புக்கொள்வதில் வெட்கப் பட மாட்டேன். வேறொரு பெரிய டாக்டரிடம் காட்டு வோம்" என்றார் டாக்டர்.

"யாரிடம் காட்டலாம்?" நம்பூதிரி கேட்டான்.

"உங்கள் நண்பர்... டாக்டர் பார்த்தசாரதி."

* * *

21

விடியற்காலை நாலரை மணிக்கு வித்யாபதியின் வீட்டுக்காம்பவுண்ட் சுவர் ஏறி உள்ளே குதித்தான் தார்க்கா. மரத்தின் மேலே ஏறி, இலை மறைவில் ஒளிந்து உட்கார்ந்து கொண்டான்.

காலை ஆறு மணிக்கு வித்யாபதி தன் ஸ்டடீ ரூமில் சுமார் இரண்டு மணி நேரமாவது புத்தகங்களைப் படித்துக் கொண்டு, ஜன்னல் அருகில் உட்கார்ந்திருப்பான்... தனியாக...

அவனை எரித்துச் சாம்பலாக்க அதைக் காட்டிலும் நல்ல நேரம் வேறு இல்லை. வெளியே என்றால் யாராவது தன்னைப் பார்த்தாலோ, இல்லை தான் மற்றவர்களைப் பார்த்து விட்டாலோ ஆபத்தாகிவிடும். இந்த வேலையை நான்கு நாட்களுக்கு முன்னாடியே செய்திருக்க வேண்டும். ஆனால் வித்யாபதி ஊருக்குப் போய் விட்டதால் தாமத மாகிவிட்டது. அவன் வீட்டிற்கு முன்னால் தவம் கிடந்து வந்தவன், முதல் நாள் இரவுதான் வித்யாபதி ஊரிலிருந்து திரும்பி வந்ததைப் பார்த்தான்.

ஆறரை மணி அடித்துவிட்டது. பறவைகளின் சலசலப்பு தொடங்கிவிட்டது.

ஏழடித்தது... எட்டும் ஆகிவிட்டது.

வித்யாபதி ஸ்டடீ ரூமுக்கு வரவில்லை. தார்க்கா வுக்குக் குழப்பமாக இருந்தது. என்ன செய்வதென்று புரிய வில்லை. மெயின் கேட் அருகில் கூர்க்கா வந்து அமர்ந்து கொண்டான். முதல்நாள் இரவு தாமதமாக வந்ததால் வித்யாபதி இன்னும் உறங்கிக் கொண்டிருந்தான்.

எட்டரை மணி அடித்தது. இலை மறைவில் தார்க்கா பொறுமையின்றி நெளிந்தான். மெயின் கேட் திறக்கும் சத்தம் கேட்டது. ஃபியட்கார் உள்ளே நுழைந்தது. அதி

லிருந்து துளசி இறங்கினாள். தார்க்கா சிலையாகி விட்டான்.

அந்தச் சமயத்தில் துளசி அங்கே வந்தது தார்க்கா வுக்கு ஏனோ சரியாகப் படவில்லை. பொறுமையின்றி தலையைத் திருப்பிக் கொண்டவனுக்குத் திடீரென்று வாசல் அருகில் வித்யாபதி தென்பட்டான். கோட் சூட் அணிந்து எங்கோ புறப்படுவதற்குத் தயாராக இருந்தான்.

தார்க்காவின் கைகள் மரக்கிளையை அழுத்தமாய்ப் பற்றிக் கொண்டன. மேற்கொண்டு தாமதம் செய்ய விரும்பாமல் இடது கையால் கண்ணைக் கசக்கிக் கொண்டான். அவனுக்குத் தெரியும் கண்ணைக் கசக்கிக் கொண்ட அடுத்த விநாடியே கதிர்கள் கிளம்பும் என்று. இரும்புக் கதவுகளைக்கூட நிமிஷத்தில் எரித்துவிடும் சக்தி வாய்ந்த அந்தக் கதிர்கள் மனிதனை நொடிப் பொழுதில் எரித்துக் கொன்றுவிடும்.

வித்யாபதி முதல் படியை விட்டு இறங்கினான்.

தார்க்கா கண்மீது வைத்திருந்த கையை எடுத்தான்.

ஆனால் யாருமே நினைத்துப் பார்க்க முடியாத விதத்தில், எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று திடீரென்று நிகழ்ந்தது.

தன்னுடைய காருக்குத் துளசியின் கார் குறுக்கே இருந்ததால் வித்யாபதி, "துளசி! உன் காரைக் கொஞ்சம் ஓரமாய் நகர்த்," என்று சொல்லிக் கொண்டே உள்ளே போனான். தொலைவில் இருந்த தார்க்காவுக்கு இந்த வார்த்தைகள் கேட்கவில்லை. அவன் கண்ணைக் கசக்கிக் கொண்டு திறப்பதற்குள், வித்யாபதி உள்ளே போனதும், அவன் நின்றிருந்த படியின்மீது உள்ளே இருந்து வித்யா பதியின் பேத்தி ஓடி வந்ததும் ஒரே சமயத்தில் நடந்து

முடிந்துவிட்டன. தார்க்கா சட்டென்று கண்ணை மூடப் போனான். ஆனால் அதற்குள் நேரம் கடந்துவிட்டது.

உள்ளே இருந்து காற்று போல் ஓடிவந்த அந்தப் பெண் படியில் இறங்கும் போது ஏதோ தாக்கியது போல் நின்று விட்டாள். அந்தக் குழந்தையின் வாயிலிருந்து புறப் பட்ட மரண ஓலம் எப்போர்ப்பட்டவரின் இதயத்தையும் இளக வைத்து விடும்போல் இருந்தது. தார்க்கா கையால் கண்ணை மூடிக்கொண்டான்.

துளசி உள்ளிருந்து வருவதற்குள் அந்தச் சிறுமி தரை யில் சரிந்துவிட்டாள். மார்பைப் பலமாக அழுத்தி இருந்த அவள் கரங்கள் ஒரு விநாடி துடித்துவிட்டுத் தொய்ந்து விட்டன.

துளசி அதிர்ச்சி அடைந்தவள் போல் நின்று விட்டாள். பேத்தியின் தீனக் குரலைக் கேட்டு வித்யாபதி வெளியில் வந்தான். குடும்பத்தினர் எல்லோரும் ஓடி வந்தார்கள். வித்யாபதி பேத்தியின் தலையை மடியில் வைத்துக் கொண்டான். எல்லோரும் கும்பலாகச் சூழ்ந்து கொண்டார்கள். ஒரு நிமிடம் கழித்து வித்யாபதி குழந்தை யைக் கைகளில் சுமந்து கொண்டு உள்ளே போனான். தார்க்காவின் கண்களுக்கு இதுவரையில் தான் தெரிந்தது.

அதைத் தொடர்ந்து ஒரு நிமிடம் கழித்து உள்ளே இருந்து அழுகைக் குரல் கேட்டது. கேட் அருகில் நின்றிருந்த கூர்க்கா உள்ளே ஓடினான். அந்த இடத்தை விட்டு வெளியேற இதுதான் நல்ல வாய்ப்பு. ஆனால் தார்க்கா போகவில்லை. சலனமற்று அதே இடத்தில் இருந்துவிட்டான். இரத்தம் முழுவதும் வற்றி விட்டாற் போல் அவன் முகம் வெளிறிப்போய் விட்டது. நிற்கக்கூட தெம்பு இல்லாததுபோல் உடம்பு தள்ளாடியது.

அவன் மட்டும் பத்து நொடிகள் அப்படியே பார்த்து இருந்தால் குழந்தையின் உடல் எரிந்து சாம்பலாகி இருக்கும். உடனே கண்ணை மூடிக் கொண்டு விட்டாலும் குழந்தையின் இதயத்தை அந்தளக் கதிர் தொட்டுவிட்டது.

அவன் ஒரு நிலைக்கு வர அரை மணி நேரம் பிடித்தது. உள்ளிருந்து பெரிதாக அழுகைக் குரல்கள் கேட்டுக் கொண்டிருந்தன. கார்கள் வரிசையாய் வரத் தொடங்கின.

தார்க்கா மெதுவாக மரத்தின் பின்பக்கமாய் இறங்கினான். அவனை யாரும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. இருந்தாலும் கார்களுக்கு இடையில் புகுந்து கேட் வரையிலும் சென்றுவிட்டான். அங்கே நின்று திரும்பிப் பார்த்தான். துளசி இன்னும் அதே இடத்தில் சூனியத்தைப் பார்த்தபடி நின்று கொண்டிருந் தாள்.

தார்க்கா மெதுவாக அந்த இடத்தை விட்டு நகர்ந் தான்.

அப்பொழுது ஒரு கார் வேகமாய் உள்ளே வந்து 'கிரீச்' என்ற சத்தத்துடன் இரண்டடி முன்னால் போய் நின்றது. காரைக் கண்டவுடன் பக்கத்தில் ஒதுங்கப் போன தார்க்கா புதரில் போய் விழுந்தான்.

டிரைவர் இருக்கையில் இருந்த ஆள் தலையை வெளி யில் நீட்டி, "சாரி... பார்த்து வரக் கூடாதா!" என்றார் மன்னிப்புக் கேட்கும் குரலில்.

"பரவாயில்லை. தவறு என்னுடையதுதான்"— உடம்பில் படிந்த புழுதியைத் தட்டிக் கொண்டே சொன் னான் தார்க்கா.

கார் உள்ளே போய்விட்டது. உள்ளே நுழைந்த காரையும், இன்னும் அப்படியே நின்று கொண்டிருந்த துளசியையும் ஒரு முறை ஏறிட்டுப் பார்த்துவிட்டு தார்க்கா கேட்டைத் தாண்டினான்.

அந்தக் காரில் டிரைவிங் சீட்டில் அமர்ந்து கொண்டு இருந்தது ஜெயதேவ்.

* * *

"நாம் எங்கே போகிறோம்" –காரில் போகும்போது, ரொம்ப நேரத்திற்குப் பிறகு துளசி கேட்டாள்.

"ஊருக்கு" என்றார் ஜெயதேவ்.

திடீரென்று இப்படிச் சொன்னால் துளசி ஆச்சரியப் படுவாள் என்று எதிர்பார்த்தார். ஆனால் அவள் எதை யுமே பொருட்படுத்தவில்லை. பின்னால் டிக்கியில் சாரதா மகளின் துணி மணிகளை எடுத்து வைத்திருந்தாள். முதலில் நான்கு நாட்களுக்குத் துளசியை இந்த இடத்திலிருந்து தொலைவாக வைத்திருக்க வேண்டும் என்று சாரதாவும், ஜெயதேவும் நினைத்தார்கள். ஆனால் வித்யா பதியின் பேத்தி இறந்துபோன அதிர்ச்சியில் துளசி இருந்த தால் இன்னும் சில நாட்களுக்கு இடமாற்றம் இருந்தால் நல்லது என்று ஜெயதேவ் யோசனை வெளியிட்ட போது சாரதாவும் சம்மதித்தாள். அதற்குள் ஸ்ரீதரும் வந்து விடுவான் என்பது அவளுடைய எண்ணமாக இருந்தது.

ஆனால் ஜெயதேவின் எண்ணம் வேறு விதமாக இருந்தது. பிள்ளை ஃபோனில் சொன்னதை வைத்துக் கொண்டு பார்த்தால் காஷ்மோராவோ, இல்லை... பிள்ளை சம்பந்தப்பட்ட விஞ்ஞானமோ துளசியைத் துன்புறுத்தும். துளசியைக் காப்பாற்ற வேண்டும் என்றால்

தொலைவுக்கு அழைத்துச் சென்றுவிட வேண்டும். அதனால்தான் அவர் தாங்கள் போகும் இடத்தைக்கூட ரகசியமாக வைத்திருந்தார். சாரதாவைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. வித்யாபதி பேத்தியின் தகன காரியங்களுக்குக் கூட நிற்காமல் அழைத்து வந்து விட்டார்.

கிட்டத்தட்ட பன்னிரண்டு மணி நேரம் பயணித்த பிறகு கார் வைசாக் எல்லைக்குள் நுழைந்தது. ஒரு மணி நேரம் ஓய்வு எடுத்துக் கொண்ட பிறகு ஜெயதேவ் துளசி யின் அறைக்கு வந்தார்.

"எப்படி இருக்கிறாய் துளசி?" என்று கேட்டார்.

அவள் பதில் பேசவில்லை. அவள் கண்கள் உணர்ச்சி யற்று இருந்தன.

"சுறுசுறுப்பாய் இருக்க உனக்கு ஒரு இன்ஜென்ஷன் போடுகிறேன்" என்றவர், அவள் பதிலுக்காகக் காத்தி ராமல் இன்ஜெக்ஷன் போட்டார். ஐந்து நிமிடங்கள் கழித்து துளசி கட்டில்மீது சரிந்தாள்.

அவர் தன் அறைக்கு வந்தார். அங்கே லேடி டாக்டர் ஒருத்தி அமர்ந்திருந்தாள். அவளுக்கு நாற்பத்தைந்து வயதிருக்கலாம். தலைமுடி நரைத்திருந்தது. கண்களில் அறிவு ஒளி சுடர்விட்டது.

"உள்ளே போங்க டாக்டர், துளசிக்குச் செடெடிவ் கொடுத்திருக்கிறேன்."

அவள் எழுந்தாள். ஜெயதேவ் சொன்னார். "எதையும் விட்டு வைக்க வேண்டாம். கவனமாய்ப் பரிசோதனை செய்யுங்கள்."

டாக்டர் தலையை அசைத்து விட்டு துளசியின் அறைக்குள் நுழைந்தாள். அவள் கையில் எலக்ட்ரோ மாக்னெட் சாதனம் இருந்தது. மற்றொரு கையில் மெட்டல் டிடெக்டர் இருந்தது.

கட்டில் அருகில் துளசியைப் பார்த்தாள். தன்னை மறந்த நிலையில் உறங்கும் இந்தப் பெண்ணின் மன நோய்க்கான காரணத்தைக் கண்டுபிடிக்க ஜெயதேவ் எவ்வளவு தீவிரமாய் யோசிக்கிறார்?

துளசியின் உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை யிலும் நன்றாக ஆராய்ந்தாள். அதற்குள் ஜெயதேவ் தன் நண்பனுக்குப் ஃபோன் செய்தார். அவன் வெளி ஊருக் குப் போகப் போவதாய்ச் சொன்னதும் தன்னுடைய காரை அவனிடம் கொடுத்து, அவனுடைய காரை வாங்கிக் கொண்டார். தனக்கு சம்பந்தப்பட்ட பொருள் எதுவும் துளசியின் அருகில் இருக்கக் கூடாது என்பதில் கவனம் செலுத்தினார்.

லேடி டாக்டர் ஜெயதேவின் அறைக்குள் வந்தாள்.

"ஏதாவது கிடைத்ததா?" ஃபோனை வைத்துக் கொண்டே ஜெயதேவ் கேட்டார்.

"இல்லை. அவள் உடல் முழுவதும் பரிசோதித்து விட்டேன். வளையல், காது தோடுகளைகூடச் செக் செய்து விட்டேன். எந்த அன்னியப் பொருளும் அவள் உடலிலோ, உடைகளிலோ இருக்கவில்லை.

ஜெயதேவ் நிம்மதியாக மூச்சை விட்டுக் கொண்டார். பதினேழு வருடங்களுக்கு முன் தாயத்தின் மூலம் ஸ்ரீநிவாசப்பிள்ளை துளசிக்கு ஆணைகளை அனுப்பிக் கொண்டிருந்தார். இந்த முறை எல்லா வழி களையும் இப்பொழுதே அடைத்து விட்டார் ஜெயதேவ்.

ஜெயதேவ் இங்கே இப்படி யோசித்துக் கொண்டி ருக்கும் போது அங்கே சாரதாவுக்குப் ஃபோன் வந்தது.

"யார் நீங்க?" –சாரதா கேட்டாள்.

"துளசியின் கிரிக்கெட் டீமின் கோச். துளசியிடம் கொஞ்சம்பேச வேண்டும்"– ஸ்ரீநிவாசப் பிள்ளை சொன்னான்.

"துளசி ஊரில் இல்லை."

பிள்ளை திடுக்கிட்டான். "இல்லையா? எந்த ஊருக்குப் போயிருக்கிறாள்?"

"தெரியாது."

"சிலோன் செல்லப்போகும் கிரிக்கெட் குழுவிற்கான தேர்வு நடக்கிறது. டீமில் அவள் அவசியம் இருந்தாக வேண்டும்."

"சாரி... துளசி இனிமேல் கிரிக்கெட் ஆடமாட்டாள்" –ஃபோனை வைத்து விட்டாள் சாரதா. துளசியைப் பற்றி யாரிடமும் எதுவும் பேச வேண்டாம் என்று ஜெயதேவ் சாரதாவிடம் சொல்லி இருந்தார்.

ஃபோன் துண்டிக்கப்பட்டதால் பிள்ளை நாற்காலி யின் பின்னால் சாய்ந்து கொண்டான். யோசித்துக் கொண்டே சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டான்.

22

இரவு பன்னிரண்டு மணி அடித்தது.

மயானத்தின் மூலையில், பட்டுப்போன மரத்தின் அடியில் கால்களை நீட்டிக் கொண்டு, மரத்தின் மீது சாய்ந்து கொண்டு அமர்ந்திருந்தான் தார்க்கா. எதிரே

எரிந்து கொண்டிருந்த நெருப்பின் வெளிச்சத்தில் அவன் முகத்தில் பிரதிபலித்த வேதனை தெரிந்தது.

அவனுக்கு எதிரில் நெருப்புக் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது. எட்டு திசைகளுக்குப் பிரதிநிதிகளாய் எட்டு எலும்புகள் அந்த நெருப்பில் எரிந்து கொண்டிருந்தன. அன்றைய பூஜை முடிந்துவிட்டது. ஆனாலும் அவன் அங்கிருந்து எழுந்து கொள்ளவில்லை. அப்படியே உட்கார்ந்திருந்தான்.

மனதில் எண்ணங்கள் கடல் அலைகளைப் போல் தத்தளித்துக் கொண்டிருந்தன. இனம் புரியாத வேதனை. இரக்கமே இல்லாமல் கொன்று விட்டான் அந்தக் குழந்தையை. தனக்கு இனி விமோனசம் கிடையாது. தன்னிடம் சக்தி இருக்கிறதென்ற அகம்பாவத்தில் அவசரப்பட்டு விட்டான். தவறு தன்மீதுதான். குருவான இராம சாஸ்திரி களுக்குக் கொடுத்த வாக்கைத் தவறி விட்டான்.

தன் சபதம் நிறைவேறுவதற்காக நம்பூதிரியின் குடும்பத்தை நிர்மூலமாக்கலாம். ஆனால் வித்யாபதியின் பேத்தியைக் கொல்லும் உரிமை தனக்கு ஏது?

துக்கத்திலிருந்து விடுபட சிறிது அவகாசம் தேவைப்பட்டது. விடிவெள்ளி முளைக்கும் நேரமாகிவிட்டது. ஒரு முடிவுக்கு வந்ததுபோல் அவன் முகம் மலர்ந்தது. தன் குருவான விஷாச்சியை, இராமசாஸ்திரியை தியானித்தான். நெருப்பில் சிவப்பாக, கண கணவென்று இருந்த எலும்பைக் கையில் எடுத்துக் கொண்டான்.

எரியும் எலும்பு அவன் கையைச் சுட்டெரித்துக் கொண்டிருந்தது. மனதில் எரியும் நெருப்புடன் ஒப்பிட்டால் இது எந்த மூலைக்கு?

அவன் தன் குருவான இராமசாஸ்திரியை நினைத்துக் கொண்டான். "குருவே! உங்களுக்குக் கொடுத்த வாக்கைக் கடைப்பிடிக்க முடியாமல் போனதற்காக இந்தத் தண்டனையை எனக்கு நானே ஏற்றுக் கொள்கிறேன். சக்தி வாய்ந்த இந்த வித்தை இவ்வளவு நாசகரமானது என்று தெரிந்தும் இதை இந்த விநாடியே விட்டு விடு கிறேன். என்னால் நிகழ்ந்து விட்ட பாபத்திற்கு இந்தத் தண்டனை பரிகாரமாக இருக்கும் விதமாய் அனுக்கிரகம் புரியுங்கள்."

அதன் பிறகு இரண்டு கைகளாலும் எலும்பை உயர்த்தி கண்ணருகில் கொண்டு வந்தான். இரும்புக் கம்பியைப் போல் இருந்த செந்நிற எலும்பானது அவன் இடது கண்ணுக்குள் நுழைந்தது. உயிர் துடிப்பது போன்ற வலியானது அவன் தொண்டைக்குழிக்குள்ளேயே சுழன்று நின்றுவிட்டது. வலியைத் தாங்குவதற்காக இதழ்களைப் பற்களால் அழுத்திக் கொண்டதில் ஒரே ஒரு சொட்டு இரத்தம் கீழே விழுந்தது. அவ்வளவு தான்.

மயானமே அந்தச் செயலைக் கண்டு நடுங்கியது. மெலிதாய் வீசிய தென்றல் காற்று அவனைப் பரிவோடு தடவிக் கொடுத்து விட்டுச் சென்றது.

* * *

அதே இரவு. மணி இரண்டு அடிக்கப் போகிறது. துளசி இல்லாததால் சாரதா தனியாய் அந்த அறையில் படுத்திருந்தாள். ஏனோ திடீரென்று விழிப்பு ஏற்பட்டது. ஏதோ நிகழ்ந்திருக்கிறது.

படுக்கையில் உட்கார்ந்துகொண்டே அறை முழு வதும் கவனமாகப் பார்த்தாள். விடி விளக்கின் வெளிச் சத்தில் அறை சாதாரணமாகத்தான் இருந்தது.

அப்பொழுது எங்கோ "கிறீச்" என்று மெல்லிய சத்தம் கேட்டது.

சாரதா எழுந்து தலையணைக்கடியில் இருந்த டார்ச் லைட்டை வெளியில் எடுத்தாள். மிகச் சக்தி வாய்ந்த பாட்டரி விளக்கு அது. ஜன்னல் வழியாய் வெளியே அடித்துப் பார்த்தாள். மரங்கள் ஆடாமல் அசையாமல் அப்படியே இருந்தன. எங்கும் நிசப்தம். இந்த இருட்டில் வெளியில் போவது அத்தனை நல்லது இல்லை... விளக்கை அணைத்துவிட்டுப் படுத்தாள். ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு மறுபடியும் லேசான சத்தம் கேட்டது.

"யாரது?"

சந்தடி எதுவும் கேட்கவில்லை. என்னவோ நடந்து கொண்டிருக்கிறது.

சாரதா சுபாவத்திலேயே தைரியசாலி. இல்லாவிட்டால் இத்தனைப் பெரிய வீட்டில் தனியாய் இருப்பது அத்தனைச் சுலபம் இல்லை. அவுட் ஹவுஸும் வீட்டிலிருந்து சற்றுத் தொலைவில் இருந்தது.

இன்னொரு முறை சத்தம் கேட்டதும் இனி பொறுக்க முடியாமல் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். வராண்டாவில் அவளுடைய நிழல் நீளமாய் விழுந்தது. எல்லாப் பொருட்களும் அந்தந்த இடத்தில் அப்படியே இருந்தன. சுவற்று கடியாரத்தின் சத்தம் தவிர வேறுஎந்த சத்தமும் இருக்கவில்லை.

அவள் படியிறங்கி வந்து கொண்டிருந்தபோது திடீரென்று காற்று வீசியது. அவள் திடுக்கிட்டாள். துளசியும், அவளும் படுத்துக் கொள்ளும் அறையின் கதவுகள் படீரென்று சாத்திக் கொண்டன. அவள் திரும்பிப் போய்ப் பலவந்தமாய்க் கதவுகளைத் திறந்து

கொண்டு அறைக்குள் நுழைந்தாள். ஜன்னல் வழியாக வேகமாய் வீசிய காற்று ஆளையே தள்ளிவிடும் போல் இருந்தது. கஷ்டப்பட்டு ஜன்னல் கதவுகளைச் சாத்தினாள். கண்ணாடிக்கு அப்பால் அதுவரையிலும் அசையாமல் இருந்த மரங்கள் பேய் பிடித்தாற்போல் ஆடத் தொடங்கின.

பெரிய விளக்கைப் போட்டுக் கொண்டு படுத்தால் நன்றாக இருக்கும் போலிருந்தது. விளக்கைப் போடுவதற் காகக் குனிந்தபோது அது நிகழ்ந்தது.

அவள் சட்டென்று வாஷ்பேசின் அருகில் ஓடினாள்.

* * *

"எத்தனை இரவுகளாய் இப்படி நடக்கிறது?"— பார்த்தசாரதி கேட்டார்.

"மூன்று நாள்களாய். பகல் முழுவதும் சாதாரணமாக இருக்கும். இருட்டியதும் ஏதோ மாற்றம் வந்துவிடுகிறது. இரத்த அழுத்தம் அதிகமாகிவிட்டதுபோல் மனதில் ஏதோ அழுத்தம். வயிற்றில் யாரோ பிசைவதுபோல் சங்கடமான உணர்வு. நள்ளிரவில் எப்போதோ விழிப்பு ஏற்படுகிறது. உடனே வாந்தியாகி விடுகிறது" —சாரதா சொன்னாள்.

பார்த்தசாரதி கொஞ்ச நேரம் பேசவில்லை. பிறகு பேச்சை மாற்றுவதுபோல், "ஸ்ரீதர் எப்போ வருகிறான்?" என்று கேட்டார்.

"இன்னும் ஐந்து நாள்களில்."

"துளசி?"

"தெரியாது."

"அத்தனைப் பெரிய வீட்டில் தனியாய் எதுக்கு இருக்கணும்? எங்கள் வீட்டில் இருக்கலாமே. ஊரிலிருந்து அக்காவும் வந்திருக்கிறாள்."

"அவுட் ஹவுஸில் வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். பரவாயில்லை" –புன்முறுவலுடன் சொன்னாள்.

"போகட்டும். இன்னிக்கு டின்னருக்காவது இருந்து விடுங்கள்.

சாரதா மறுக்கவில்லை. துளசி இல்லாதது அவளுக்குத் தனிமையை ஏற்படுத்தியது.

சாரதாவை உள்ளே அழைத்துச் சென்று அக்காவுக்கு அவளை அறிமுகப்படுத்தி வைத்தார்.

அவர் திரும்பி வருவதற்குள் பண்டிட் நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்.

"ஹலோ" என்றார் பார்த்தசாரதி. "எப்போ வந்தீங்க?"

"சாரதாவிடம் நீங்க பேசும் போதே வந்துவிட்டேன். உங்கள் கன்சல்டிங் அறையை, சவுண்ட் ப்ரூஃப் செய்யணும் டாக்டர். பேச்செல்லாம் வெளியில் கேட்கிறது.

டாக்டர் முறுவலித்து விட்டு பேசாமல் இருந்தார்.

"எங்கள் வீட்டுச் சாவியை மறதியாய் எங்கேயோ வைத்து விட்டேன். வீட்டிற்குப் போக வழியில்லை" என்றார் பண்டிட்.

"என்னிடம் ட்ரீட்மெண்ட் எடுத்துக் கொண்டால் ஆறே மாதங்களில் உங்கள் ஞாபகமறதியை சரிசெய்து விடுகிறேன்" – பார்த்தசாரதி சொன்னார்.

"என்னுடைய நினைவாற்றல் சரியாகத்தான் இருக்கிறது என்பதற்கு அத்தாட்சியாகப் பத்தொன்பதாவது வாய்ப்பாடுவேண்டுமானால் ஒப்பிக்கட்டுமா?"

இருவரும் சிரித்துக் கொண்டார்கள்.

"எங்கள் வீட்டில் படுத்துக் கொள்ளுங்கள்."

"சாரதாவை உங்கள் வீட்டில் படுத்துக் கொள்ளச் சொல்லுங்கள். நான் அவங்க வீட்டுக்குப் போகிறேன்" என்று உள்ளே போனார்.

சாரதா அதற்கு சம்மதித்தாள். "கெஸ்ட்ரூம் தெரியும் இல்லையா. சாப்பிட வேண்டுமென்றால் பிரிஜ்ஜில்..." என்று ஏதோ சொல்லப் போனாள்.

அவள் பேச்சை இடைமறித்து விட்டு, "எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று கூறிவிட்டு வீட்டுச் சாவியை அவளிடமிருந்து பெற்றுக் கொண்டு, "நாளைக்கு என் வீட்டுச் சாவியைப் பொறுமையாய்த் தேடிப் பார்க்கணும்" என்றார்.

சாரதா கொடுத்த சாவியை பாக்கெட்டில் போட்டுக் கொண்டு அன்றிரவை ஸ்ரீதர் வீட்டில் கழிப்பதற்காகப் புறப்பட்டார். அவருடைய இரண்டாவது பாக்கெட்டில் அவர் வீட்டுச் சாவி பத்திரமாய் இருந்தது.

23 பைத்தியக்கார ஆஸ்பத்திரி.

"இன் பேஷண்ட் வார்டில் தீவிரமான நோயாளிகளை ட்ரீட் செய்கிறோம். அவுட் பேஷண்ட் வார்டும் கூட்டமாகத்தான் இருக்கும். மனோவியாதி, பலவீனமான மனநிலை... இப்படிப் பல காரணங்கள் மனிதனை

பைத்தியமாக்குகின்றன"— டாக்டர் விளக்கமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

துளசி கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தாள். எல்லோரும் காரிடாரில் நடந்து போய்க் கொண்டு இருந்தார்கள்.

"அம்மா!"

துளசி நின்றாள்.

"எனக்குப் பைத்தியம்னு இங்கே கொண்டுவந்து சேர்த்துட்டாங்க. டாக்டரிடம் சொல்லி என்னை விட்டு விடச் சொல்லுங்கம்மா— கிழவன் சொன்னான்.

டாக்டர் சிரித்தார், "வாங்க போவோம். இங்கே எல்லோரும் அப்படித்தான் சொல்வார்கள்."

விசிட்டர்கள் நகர்ந்தார்கள்.

"மனிதனின் பைத்தியக்காரத்தனத்தைப் பார்வையே உணர்த்திவிடும். அந்தக் கிழவனின் கண்களிலுள்ள அசாதாரணத் தன்மையைப் பாருங்கள்" என்றார் டாக்டர்.

அவர்களுடன் நடந்து கொண்டிருந்த துளசி நின்றாள். சுவற்றில் கரியால் புரட்சிக் கவிதை ஏதோ எழுதப் பட்டிருந்தது.

துளசி நின்றதைப் பார்த்துவிட்டு டாக்டர் சொன்னார்: "புரட்சிகரமான எண்ணங்களை வளர்த்துக் கொண்ட பெண் இவள், பிறகு காதல் வயப்பட்டாள். காதலன் ஏமாற்றிவிட்டான். அந்த மனக்குமுறலைத் தாங்க முடியாமல் தன்னை ஹிட்லர் ஆக உருவகப்படுத்திக் கொண்டு, அந்தப் பிரமையில் காலம் கழித்து வந்தாள். அந்தப் பெண்ணின் உறவினர்கள் பேய்பிடித்து விட்ட

தாய் எண்ணி அவளை மந்திரவாதியிடம் அழைத்துச் சென்றார்கள். அங்கே குணமாகாததால் இங்கே கொண்டு வந்து சேர்த்தார்கள். காதல்... புரட்சி இரண்டும் வெவ்வேறு கோணங்களில்...”

அவர் வார்த்தையை இடையிலேயே தடுத்துவிட்டு “அப்போ கடவுள், பிசாசு இதெல்லாம் கிடையாதுன்னு சொல்றீங்களா?”– துளசி கேட்டாள்.

“இல்லை” என்றார் டாக்டர் சற்றே வியப்படைந்து. துளசியைப்பற்றி அவருக்குத் தெரியும். அவள் அந்தக் கேள்வியைக் கேட்டதும் அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

“நீங்க ஒரு முட்டாள்” என்றாள் துளசி.

அங்கிருந்த எல்லோரும் அவள் சொன்னதைக் கேட்டுத் திடுக்கிட்டார்கள். டாக்டரின் முகம் வெளிறிப் போய் விட்டது. உடனே சமாளித்துக் கொண்டார்.

“போகட்டும் துளசி... வாங்க போகலாம்.”

அவள் முகத்தைச் சுளித்துவிட்டு, “துளசி யாரு?” என்றாள்.

டாக்டர் அவளை உற்று நோக்கினார். அவள் கண்ணி மைகள் படபடத்துக் கொண்டிருந்தன.

“உன் பெயர் என்ன?” ஒருமையில் கேட்டார்.

சுற்றிலும் இருப்பவர்கள் பயந்து நடுங்கும் அளவுக்கு ஆண்மை நிறைந்த குரலில் பெரிதாகச் சிரித்தாள் துளசி. அவள் குரலில் வந்த மாறுதலைக் கண்டு எல்லோரும் திகைப்புடன் பார்த்துக் கொண்டிருக்கும்போது அவள் சொன்னாள்:

"என் பெயர் காஷ்மோரா."

* * *

"அவள் கண்களில் வெறுமை நிறைந்த பார்வையைக் கண்டபோதே எனக்குச் சந்தேகம் வந்தது. அவள் திடீரென்று எதிர்த்ததால் அந்தச் சந்தேகம் மேலும் வலுவடைந்தது" –டாக்டர் சொன்னார்.

"அடிக்க வந்தாளா?" –ஜெயதேவ் கேட்டார்.

"அடிக்க முன் வந்த போது சுற்றிலும் இருந்தவர்கள் தடுத்துப் பிடித்துக் கொண்டார்கள்."

"ஐயாம் சாரி டாக்டர்."

டாக்டர் எழுந்தார். "இட்ஸால் ரைட். உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை என்று எனக்குத் தெரியும். இருந்தாலும் சொல்கிறேன். இங்கே ஆஸ்பத்திரியில் காட்டினாலும் சரி, உங்களோடு அழைத்துக் கொண்டு போனாலும் சரி."

ஜெயதேவ் பேசவில்லை. கைகுலுக்கி விடை கொடுத்தார். டாக்டர் வாசல் வரை போனவர் திரும்பிப் பார்த்து, "புரொபசர்" என்றார்.

என்ன என்பது போல் பார்த்தார் ஜெயதேவ். டாக்டர் சற்றுத் தயங்கிவிட்டு, "காஷ்மோரா என்றால் என்ன?" என்று கேட்டார்.

பக்கத்தில் குண்டு வெடித்தது போல்திடுக்கிட்டார் ஜெயதேவ். "காஷ்மோரா... காஷ்மோரா..." அவர் இதழ்கள் முணுமுணுத்தன. டாக்டர் தன் பதிலுக்காகக் காத்திருப்பதைக் கவனித்து, தன்னைச் சமாளித்துக் கொண்டு "எனக்குத் தெரியாது" என்றார்.

டாக்டர் போய்விட்டார். அவரைத் தொடர்ந்து ஸ்ப்ரிங் கதவுகள் மூடிக் கொண்டன.

* * *

இரவு ஒன்பது மணி ஆகும் போது பண்டிட் ஸ்ரீதரின் வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார். அவர் வரும்போதே சாப்பிட்டுவிட்டு வந்திருந்தார். ஆனாலும் ஸ்ரீதரின் வீட்டில் உணவுப் பொருள்களை யெல்லாம் சோதனை செய்தார். 'கெஸ்ட் ரூம்' தனியாக இருந்தது. ஆனாலும் அவர் துளசியின் படுக்கை அறையிலேயே படுத்துக் கொள்ள எண்ணினார்.

அந்த அறையில் இரண்டு கட்டில்கள் இருந்தன. ஒன்று துளசியின் கட்டில், மற்றொன்று சாரதாவுடையது. ஆனால் எது யாருடையது என்று தெரியவில்லை. அவர் வலது பக்கத்தில் இருந்த கட்டிலில் படுத்துக்கொண்டார்.

அது துளசியுடையது. அவர் உறக்கத்தில் ஆழ்ந்த போது மணி பத்தாகிவிட்டது.

* * *

பத்தடிக்கும் போது ஜெயதேவ், துளசியின் அறைக்குள் நுழைந்தார். துளசி ஜன்னல் கம்பிகளைப் பற்றியவாறு நின்றுகொண்டு தொலைவில் தெரிகின்ற கடலைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"எப்படி இருக்கிறாய் துளசி?"

அவள் பேசவில்லை. திரும்பியும் பார்க்கவில்லை.

"ரொம்ப நாட்களுக்குப் பிறகு எனக்கொரு சின்ன விருப்பம் ஏற்பட்டிருக்கு. என்னவென்று கேட்க மாட்டாயா?"

"என்ன?" அவள் குரல் கிணற்றின் அடியிலிருந்து கேட்பது போல் பலவீனமாய் ஒலித்தது. அவர் பேசாத தைக் கண்டு திரும்பிப் பார்த்துவிட்டு, "என்ன?" என்று மறுபடியும் கேட்டாள்.

அவர் சொன்னார்– "உன்னை ஒரு தடவை ஹிப்னாஸிஸில் ஆழ்த்த வேண்டுமென்று விரும்புகிறேன்."

அவள் அவரைக் குழப்பத்துடன் நோக்கினாள். அவர் அதைப் பொருட்படுத்தாமல், "இப்படி வந்து உட்கார்ந்து கொள்" என்றார்.

அவள் நாற்காலியில் அமர்ந்து கொண்டதும் அவள் தலை மீது கையை வைத்து, "நீ நிம்மதியாக உறங்கப் போகிறாய்... உனக்கு என் குரலைத் தவிர வேறு எந்த சத்தமும் கேட்கவில்லை. நிம்மதியான தூக்கம் உன்னைத் தழுவப் போகிறது" என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

துளசியின் இமைகள் மூடத் தொடங்கின.

* * *

இரவு பதினோரு மணி.

நம்பூதிரியின் மனைவி படுக்கையில் புழுவாய்த் துடித்துக் கொண்டிருந்தாள். அவள் கையைப் பிடித்துக் கொண்டு, "கொஞ்சம் பொறுத்துக் கொள் மகளே எல்லாம் சரியாகிவிடும்" என்று மகளுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தாள் அந்தத் தாய். கட்டிலுக்கு அந்தப் பக்கமாய் நின்றிருந்தார் அவள் தந்தை.

எல்லோருடைய முகத்திலும் இயலாமை தெரிந்தது. அதே நேரத்தில் தார்க்கா மயானத்தில் ஆறாவது அங்கத்தை முடித்து விட்டு ஏழாவது அங்கத்தை ஆரம்பித் தான்.

பன்னிரெண்டு மணிக்கு பண்டிட்டுக்கு விழிப்பு வந்தது.

ஏதோ சத்தம்...

அவருக்கு விழிப்பு வந்த போது உடம்பு முழுவதும் வியர்த்துக் கொட்டியிருந்தது. இன்னதென்று தெரியாத உணர்வு அவர் மனதில் பரவியது. உடலில் இரத்தம் வேக மாகப் பாய்வது போன்ற உணர்வு...

அவர் படுக்கையை விட்டு எழுந்து கொள்ள முயன்ற போது மறுபடியும் சத்தம் கேட்டது. எழுந்து வெளியே வர முயன்றார். வயிற்றில் சங்கடமான உணர்வு. அடுத்த நிமிடம் வாயிலெடுத்தார்.

ஐந்து நிமிடங்கள் கழித்து கொஞ்சம் சமாளித்துக் கொண்டார். ரொம்பவும் பலவீனமாக இருந்தது. ஆனாலும் பிரச்சனை அது இல்லை. ஏதோ நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஏதோ ஒரு சக்தி தன்னை அந்த அறையை விட்டு வெளியில் தள்ளமுயன்று கொண்டிருக் கிறது. இதயம் வேகமாகத் துடிக்கத் தொடங்கியது. உடம்பு முழுவதும் இரத்தம் வேகமாகப் பாய்ந்து கொண்டிருப் பதை உணர முடிந்தது.

"உடனே அறையை விட்டு வெளியேறி விடு"– அவருடைய உள் மனம் எச்சரித்துக் கொண்டிருந்தது. ஆனால் அவர் அந்த இடத்தை விட்டு வெளியேற வில்லை. அந்த அறையில் மறைந்திருக்கும் ரகசியத்தைத் தெரிந்து கொள்ளாமல் அந்த இடத்தை விட்டு வெளி யேறக் கூடாது என்ற முடிவுடன் செயல்பட்டார்.

முதலில் துளசியின் படுக்கையின் அடியில், கட்டிலை சுற்றிலும் தேடிப் பார்த்தார். பிறகு அடுத்த கட்டிலையும் சோதனை செய்தார். மறுபடியும் வயிற்றைப் பிரட்டியது.

பண்டிட் களைத்துப் போய் விட்டார். அவருக்கு நினைவு தப்பத் தொடங்கியது. வாஷ்பேசினைப் பிடித்துக் கொண்டு மண்டியிட்டவாறு கீழே சரிந்து விட்டார். கட்டில் வரையில் போகக் கூட அவருக்குத் தெம்பு இருக்க வில்லை.

முற்றிலும் நினைவு இழக்கும் சமயம் டெலிஃபோன் மணி ஒலித்தது.

வைசாகிலிருந்து ஜெயதேவ் பண்ணிய டிரங்கால் அது.

* * *

"உன் பெயர் என்ன?" உறக்க நிலையில் இருந்த துளசியைக் கேட்டார் ஜெயதேவ். துளசி ஹிப்னாடிக் உறக்கத்தில் இருந்தாள். அவள் பதில் சொல்லாததால் மறுபடியும் அதே கேள்வியைக் கேட்டார்.

"காஷ்மோரா!"

அவர் நெற்றி முடிச்சேறியது. சமாளித்துக் கொண்டு கேட்டார்.

"உன் வயதென்ன?"

"பதினொன்று"

"மாதமா... வருஷமா?"

"வருஷம்"

"உனக்கு எது பிடிக்கும்?"

"ஸ்கிப்பிங்"

"இன்னும்?"

“படம் வரைவது”

“என்ன படிக்கிறாய்?”

மௌனம்.

“பேய்கள் உண்டா?”

அதுவரையிலும் சலனமில்லாமல் கட்டையாய் கிடந்த உடல், பாம்பைப் போல் மெதுவாய் வளையத் தொடங்கியது. ஜெயதேவ் தன்னையும் அறியாமல் ஓரடி பின் வாங்கினார். தொலைவில் கடிகாரத்தில் பன்னி ரண்டு அடித்தது. வெளியில் கடல்மீது இருள் அடர்த்தி யாய் பரவிக்கிடந்தது. துளசியின் வாய் இடது பக்க மாய்க் கோணிக் கொண்டது. நாக்கு வெளியில் நீண்டது. மலைப் பாம்பு தன் வாலைத் தானே பிடிக்க முயன்றாற் போல் துளசியின் தலை பின்னால் சாய்ந்தது. முதுகு எலும்பு ஒடிந்து விடுமோ என்று பயப்படும் அளவுக்கு வளைந்து முழங்காலின் பின் பக்கத்தை தொட முயன்று கொண்டு இருந்தாள். ஜெயதேவுக்கு பயம் ஏற்பட்டது. வாழ்க்கையில் முதல் தடவையாய்...

“ப்ளீஸ்” என்று கத்தினார்.

ஜெயதேவ் ஒரு முடிவுக்கு வந்தவரைப் போல் துளசிக்குப் போல்ட் ஹிப்னாடிக் சஜெஷன் கொடுத்தார்.

“நீ நிம்மதியாக உறங்குகிறாய். உறக்கத்திலிருந்து உனக்கு விழிப்பு ஏற்பட்டதும், ஐந்து நிமிடங்கள் வரை படம் வரைய வேண்டுமென்ற ஆர்வம் உனக்குத் தோன்றிக் கொண்டே இருக்கும். உன் மனதில் தோன்றும் எண்ணங்களைப் படமாக வரையப் போகிறாய்.”

சொல்லி முடித்த பிறகு அவர் அவள் பக்கத்தில் பேப்பரையும் பேனாவையும் வைத்து விட்டு தன் அறைக்கு

வந்துவிட்டார். ஜன்னல் அருகில் நின்று கடலை பார்த்துக் கொண்டிருந்தார். பலவிதமான எண்ணங்கள் அவர் மனதில் கடல் அலைகளைப் போல் கொந்தளித்து கொண்டிருந்தன.

இதற்கெல்லாம் காரணம் ஸ்ரீநிவாசப்பிள்ளை என்று வைத்துக் கொண்டாலும், துளசியை யாருக்கும் தெரியாமல் இவ்வளவு தொலைவுக்கு அழைத்து வந்த பிறகும் இப்படி நடந்து கொள்கிறாளே?

'காஷ்மோரா' உண்மையிலேயே இருக்கிறதா? இதைப் பற்றித் தெரியாமல் இருந்தாலும் நன்றாக இருந்திருக்கும். தான் நம்பாத விஷயத்தைச் சொல்லி பிள்ளை தன்னைச் சங்கடத்தில் ஆழ்த்திவிட்டான். உண்மையிலேயே துளசி மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தியால் பாதிக்கப் பட்டிருந்தால், அவளை இப்படி அழைத்து வந்தது பெரிய தவறு. ஒரு பெண்ணைப் பரிசோதனைக்குட்படுத்தும் உரிமை தனக்கு இல்லை. தன்னுடைய தோல்வி துள யைக் காப்பாற்றும் என்றால் அந்தத் தோல்வியை ஏற்றுக் கொள்ள ஜெயதேவ் தயராக இருந்தார்.

சில நாட்களுக்கு முன் இஸ்மாயில் சொன்ன அதே வார்த்தைகளை ஜெயதேவ் அந்த நிமிடம் நினைத்துக் கொண்டார்.

"ஸ்ரீதர் எங்கே இருக்கிறாய்? உடனே வந்து உன் மகளைக் காப்பாற்றிக் கொள்."

மேகங்களுக்கிடையில் ஊடுருவியவாறே பறந்து கெண்டிருந்த விமானத்தில் கடைசி சீட்டில் சாய்ந்த நிலையில் கண்களை மூடி அமர்ந்திருந்தான் ஸ்ரீதர்.

* * *

ஒரு மணி நேரம் கழித்து துளசியின் அறைக்குள் நுழைந்தார் ஜெயதேவ். துளசி படுக்கையில் உறங்கிக் கொண்டிருந்தாள். ஹிப்னாஸிஸ் மயக்கத்திலிருந்து வெளியில் வந்துவிட்டது போல் பக்கத்தில் இருந்த பொருட்கள் கலைந்திருந்தன. அவர் சட்டென்று காகிதத்தை எடுத்துப் பார்த்தார். அதன்மீது படம் வரையப்பட்டு இருந்தது.

கவனமாகப் பரிசீலித்தவரின் முகம் தோய்ந்து விட்டது. எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் காரணம் புரிந்துவிட்டது.

ஸ்கிஜோஃப்ரெனியா!

ரொம்ப நேரம் உறங்காமலேயே விழித்திருந்தார். இந்த விஷயத்தைச் சாரதாவிடம் தெரிவிக்க வேண்டியது தன் கடமை என்று நினைத்துக் கொண்டார். அந்த எண்ணம் வந்ததும் தாமதிக்காமல் உடனே ஸ்ரீதர் வீட்டுக்கு டிரங்கால் செய்தார்.

அப்பொழுது மணி பன்னிரண்டரை.

* * *

பண்டிட் வாஷ்பேசின் அருகில் தரையில் கிடந்த போது ஃபோன் ஒலித்தது.

காதைப் பிளப்பது போல் ஃபோன் மணி ஒலிப்பது அவர் காதில் விழுந்து கொண்டுதான் இருந்தது. எழுந்து கொள்வதற்குத்தான் உடல் ஒத்துழைக்கவில்லை.

தன் உயிர் போகப் போகிறதென்று அவருக்குப் புரிந்து விட்டது. தன் உயிரைப் பறிக்கும் அந்தச் சக்தி என்ன வென்றுதான் தெரியவில்லை. ஒன்று மட்டும் உண்மை. அந்தச் சக்தி துளசிக்காக உத்தேசிக்கப்பட்டது. தான்

முட்டாள்தனமாய் வந்து இந்த விஷ வளையத்தில் சிக்கிக் கொண்டு விட்டோம்.

ஃபோன் மணி ஒலிப்பது நின்றுளவிட்டது.

"நம்பர் நோ ரெஸ்பான்ஸ். யாரும் எடுக்கவில்லை"— டெலிஃபோன் ஆபரேட்டர் சொன்னாள்.

ஜெயதேவ் ஃபோனை வைத்துவிட்டார். அவர் நெற்றி சுருங்கியது.

24

தார்க்கா மயானத்தில் அன்றைய அங்கத்தை முடித்துக் கொண்டு ஊருக்குள் வரும்போது இரவு ஒரு மணி ஆகிவிட்டது. தெருமுனையில் அவன் திரும்பும் போது கார் ஒன்று பக்கத்து சந்தில் நுழைந்து மெதுவாகப் போய்க் கொண்டிருப்பதைப் பார்த்தான். டிரைவர் சீட்டில் இருந்த நபரைப் பார்த்தபோது தார்க்காவுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

ஒரு காலத்தில் இந்த ஆள் தன்னிடம் காஷ்மோராவைப் பற்றி விசாரித்திருக்கிறான். துளசியின் மரணத்தைப் பற்றி துருவித் துருவிக் கேட்டிருக்கிறான். அதே கார்தான்.

தார்க்கா காரைத் தொடர்ந்து வேகமாய் நடக்க ஆரம்பித்தான். தெருமுனைக்குப் பிறகு கார் கண் பார்வையிலிருந்து மறைந்துவிட்டது. தெருமுனையில் நின்றவன் வலது பக்கமா, இடது பக்கமா என்று யோசித்து வலது பக்கம் திரும்பினான்.

நாலு வீடு தாண்டி போர்ட்டிகோவில் தென்பட்டது அந்தக் கார். வீட்டின் உள்ளே விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.

துளசியின் மரணத்தைப்பற்றி இந்த ஆள் தன்னிடம் எதற்காகக் கேட்டான்? தார்க்கா மேலும் யோசிக்க வில்லை. உள்ளே நுழைந்தான். கதவு வெறுமே சாத்தி யிருந்தது. மங்கலான வெளிச்சத்தில் அந்த ஆள் சட்டை யைக் கழற்றுவது தெரிந்தது.

கழுத்தின் அருகில் சிகரெட் பாக்கெட் சைஸில் சின்ன பொருள். கண்ணாடியில் தென்பட்ட தெளி வில்லாத உருவம்.

பார்த்துக் கொண்டிருந்த தார்க்காவின் மனதில் ஏதோ உறுத்தல். இந்த உருவத்தை எங்கேயோ பார்த்திருக் கிறான். எங்கே? சட்டென்று நினைவுக்கு வந்துவிட்டது.

சித்தேஸ்வரி!

அவன்தான் சித்தேஸ்வரி.

தார்க்கா யோசித்துக் கொண்டிருந்தபோதே ஸ்ரீநிவாசப் பிள்ளை உடைகளை மாற்றிக் கொண்டு படுத்துக் கொண்டான். அந்த அறையில் அமைதி சூழ்ந்து கொண்டது.

தார்க்காவுக்கு வியப்பாக இருந்தது. படுக்கப் போவதற்கு முன் சித்தேஸ்வரி கதவுகளை ஏன் சாத்திக் கொள்ளவில்லை. வீட்டில் எந்தப் பொருட்களும் இல்லாதது அவனுடைய வியப்பை மேலும் அதிகரித்தது. ஒவ்வொரு அறையாய்ப் பார்த்துக் கொண்டே முன் அறைக்குள் அடியெடுத்து வைத்த தார்க்கா திடுக் கிட்டான். மேஜைமீது பெரிய ஃபோட்டோ ஒன்று இருந்தது.

அது துளசியின் ஃபோட்டோ.

அவன் சட்டென்று ஓரடி பின் வாங்கியதில் பின்னால் இருந்த நீண்ட பெட்டியின்மீது அவன் கை பட்டு விட்டது. வீணை வைக்கும் பெட்டியைப் போல் இருந்தது. மெதுவாக மூடியைத் திறந்தான். மந்திரவாதி யும், பிணங்களுக்கிடையே வளர்ந்தவனும் ஆன தார்க் காவே அந்தப் பெட்டியில் இருந்ததைக் கண்டதும் ஓரடி பின் வாங்கினான்.

கைகள் இரண்டையும் மார்பின் மீது வைத்தபடி சதானந்த சக்ரவர்த்தியின் பிணம்! பாடம் செய்யப்பட்ட நிலையில்.

தார்க்கா வியப்படைந்து சக்ரவர்த்தியின் பிணத்தை இல்லை, துளசியின் ஃபோட்டோவைப் பார்த்து, அவனு டைய ஊகம் சரியானது என்றால் சித்தேஸ்வரிக்கும் துளசிக்கும் அறிமுகம் ஆனது அந்தக் கோயில் நாசமான போதுதான். அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு துளசியிடம் பகைமை ஏற்பட்டிருக்கலாம். ஆனால் துளசியின் படத்தை ஃப்ரேம் போட்டு மேஜைமீது வைத்துக் கொள்வானேன்?

அவன் அடுத்த அறைக்குள் நுழைந்தான். அந்த அறை யில் விதவிதமான வயர்களும், ரசாயனங்களும் இருந்தன. ஜெயதேவைக் கொல்வதற்காகப் பிள்ளை அவற்றை உபயோகித்து வந்தான். தார்க்கா ஒரு பாட்டிலை அலமாரியிலிருந்து வெளியில் எடுத்துப் பார்த்துவிட்டு மறுபடியும் உள்ளே வைத்து விட்டான். அவனுக்கு விஷங் களைப் பற்றி அவ்வளவாகத் தெரியாது. அவன் எடுத்த பாட்டில் பொட்டாஷியம் சயனெட்.

அலமாரியைச் சோதனை செய்த பிறகு மேஜைமீது இருந்த புத்தகங்களைப் பரிசீலித்தான். புத்தகங்களுக்கு இடையில் காகிதம் ஒன்று தென்பட்டது. அதில் இருந்த

பெயர்களைப் பார்த்தபோது வியப்பாக இருந்தது அவனுக்கு. அதில் அவன் பெயரும், துளசியின் பெயரும், இன்னும் ஜெயதேவ் என்பவரின் பெயரும் எழுதப் பட்டிருந்தது. ஜெயதேவ் பெயரின் கீழே இருபத்து நான்கு திட்டங்களின் பெயர்கள் எழுதப்பட்டிருந்தன.

1. காரில் கார்பன் டை ஆக்ஸைட்

2. ஷேவிங் க்ரீமில் பொட்டாசியம் சயனேட்

3. டெலிஃபோனில் என்ட்ரின்

அவனுக்கு எதுவும் புரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் புரிந்தது. தான் எப்படி மூன்று பேரைக் கொல்ல வேண்டும் என்று நிகைக்கிறானோ, அதேபோல் சித்தேஸ் வரியும் மூன்று நபர்களைக் கொல்லத் திட்டம் போட்டிருக்கிறான்.

அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. இன்னும் சில நாட்களில் துளசியின் மரணமும், தான் கிளம்பிப் போவதும் உறுதி.

இந்த ஜெயதேவ் யாரோ? சித்தேஸ்வரியால் அவன் மீது மட்டும்தான் பகையைத் தீர்த்துக் கொள்ள முடியும். அவனை ஜாக்கிரதையாக இருக்கச் சொல்லி துளசியை பார்க்கும்போது சொல்லி வைக்க வேண்டும். ஆனால் துளசிக்கு ஜெயதேவ் என்பவரைத் தெரியுமோ தெரியாதோ...

அவன் யோசித்துக் கொண்டிருந்தபோது பக்கத்து அறையிலிருந்து சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான். சித்தேஸ்வரி புரண்டு கொண்டிருந்தான். அவன் கை சுவற்றில் எதற்காகவோ தடவிக் கொண்டிருந்தது. அங்கே ஒரு வயர் கனெக்ஷன் விடுபட்டிருந்தது. அவன்

அவ்வளவு அவசரமாய் வீட்டுக்கு வந்து, கதவையும் சாத்தாமல் படுக்கையில் விழுந்தது ஏன் என்று தார்க்கா வுக்குப் புரியத் தொடங்கியது. அந்த வயருக்கும், அவனுக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறது.

அவன் தன்னுடைய எதிரி என்றும், தன்னைக் கொல்வதற்காகக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறான் என்றும் தெரியும். இருந்தாலும் அவனை மரணப் பிடியில் விட்டுவிட தார்க்காவின் மனம் சம்மதிக்கவில்லை. மெதுவாக அருகில் சென்று வயரைச் சரி செய்தான். பிறகு நிசப்தமாய் வீட்டை விட்டு வெளியேறினான்.

* * *

"நோ ரெஸ்பான்ஸ்" என்று டெலிஃபோன் ஆபரேட்டர் சொன்னதும் ஜெயதேவ் திடுக்கிட்டார். அவர் மனம் தீங்கை எடை போட்டது. சாரதாவுக்கு ஏதாவது நேர்ந்து விட்டிருக்குமோ?

வித்யாபதியோ இன்னும் துக்கத்திலிருந்து மீள வில்லை. நம்பூதிரியின் மனைவிக்கு உடல்நிலை சரி யில்லை. அதனால் பார்த்தசாரதியின் வீட்டிற்குப் ஃபோன் செய்தார்.

பார்த்தசாரதியின் குரல் தூக்கக் கலக்கத்துடன் ஒலித்தது. "இரண்டு நாட்களாய்ச் சாரதாவுக்கு வாந்தியானதில் என்னைப் பார்க்க வந்தாள். நம் வீட்டி லேயே தான் படுத்திருக்கிறாள். ஆனால் பண்டிட் ஸ்ரீதர் வீட்டில் படுத்துக் கொள்வதாகச் சாவி எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்."

ஜெயதேவின் கை நடுங்கியது. "சட்டென்று பண்டிட் வீட்டுக்குப் ஃபோன் பண்ணுங்கள். அங்கே இருந்தால்

சரி. இல்லாவிட்டால் ஸ்ரீதர் வீட்டுக்குப்போய் பண்டிட் எப்படி இருக்கிறார் என்று பாருங்கள்."

"இப்பொழுதா! இரவு இரண்டு மணிக்கா?"

"ஆமாம்... க்விக்..."

"இந்த நள்ளிரவு வேளையில் எதற்கு?"

ஜெயதேவின் பொறுமை தளர்ந்தது. "சாரதா வாந்தி எடுத்ததற்குக் காரணம் உடம்பு சரியில்லாதது இல்லை டாக்டர். துளசியின் அறையில் படுத்ததுதான். அந்த அறை யில் ஏதோ மர்மம் இருக்கிறதென்று பண்டிட் ஊகித்திருக் கிறார். அதனால்தான் அந்த விஷ வளையத்திற்குள் நுழைந்திருக்கிறார். சீக்கிரமாய் போய் அவரைக் காப்பாற்றுங்கள்."

ஃபோன் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு பார்த்தசாரதியிட மிருந்து ஃபோன் வந்தது. பண்டிட்டை நினைவு தப்பிய நிலையில் அந்த அறையிலிருந்து மீட்டதாகவும் அவர் உடல் நிலை இப்போது கொஞ்சம் தேவலை என்றும் தகவல் தெரிவித்தார்.

ஜெயதேவ் அந்தத் தகவலைக் கேட்டு அவ்வளவாக மகிழ்ச்சி அடைந்துவிடவில்லை. 'அப்படியானால் வேட்டை இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறதா?' என்று நினைத்துக் கொண்டார்.

துளசி இன்னும் வீட்டிலேயே இருப்பதாக நினைத்துக் கொண்டு பிள்ளை அவளை விஞ்ஞான ரீதியாய் துன் புறுத்தி வருகிறான் என்று வைத்துக் கொண்டாலும் இத்தனை தொலைவாக அழைத்து வந்த பிறகும் துளசி ஏன் பைத்தியம்போல் நடந்து கொள்கிறாள்?

மனிதனுக்கு மேற்பட்ட சக்தி ஏதாவது இருக்கிறதா? இருக்கிறது என்று வைத்துக் கொண்டாலும் காஷ்மோரா வின் உறக்கம் கலையும் முன்பே துளசி இப்படி நடந்து கொள்வானேன்?

தொலைவில் எங்கோ மூன்று மணி அடித்தது. இன்றிரவு இனி உறக்கம் வராது. அவர் துளசியின் அறைக் குள் நுழைந்தார். துளசியின் உறக்கம் கலையாதவாறு அந்தக் காகிதத்தை எடுத்துக் கொண்டு தன் அறைக்கு வந்தார். படத்தைக் கவனமாகப் பரிசீலித்தார். எதுவும் புரியவில்லை. அதைக் கையில் எடுத்துக் கொண்டே ஜன்னல் அருகில் சென்றார்.

துளசி பாதுகாப்பின்மையாக உணருவது போல் அந்தப் படம் உணர்த்திக் கொண்டிருந்தது. இந்த உணர்வு அவள் மனதில் உருவாகக் காரணம் என்ன? காஷ் மோரா என்ற பேயைப்பற்றி அவளிடம் யாராவது சொன்னார்களா?

அவர் அந்தக் காகிதத்தை ஜன்னல் வழியாக வெளி யில் போட்டார். அது கீழே விழுந்தது. பிறகு தொடர்ந்து வீசிய காற்றினால் கடலை நோக்கிப் பறந்தது. பொங்கி வந்த அலையொன்று அந்தக் காகிதத்தைத் தனக்குள் இழுத்துக் கொண்டது.

ஜெயதேவ் சைக்ரியாடிஸ்ட் இல்லை. அவர் மட்டும் அந்தப் படத்தை இன்னும் சிறிது நேரம் சோதனை செய்திருந்தால், ஒரு அற்புதமான ரகசியம் வெளிச்சத் திற்கு வந்திருக்கும்.

ஐந்து மணியாகும்போது கதவைத் தட்டிய சத்தம் கேட்டு ஜெயதேவ் விழித்துக் கொண்டார். கதவைத் திறந்தார். எதிரே துளசி நின்றிருந்தாள்.

"குட் மார்னிங் அங்கிள்."

"வாம்மா.. அதற்குள் குளியலை முடித்து விட்டாயா?"

துளசி புன்முறுவலுடன் அவரிடம் ஒரு பேப்பரைக் கொடுத்தாள்.

"இதைப் படித்துப் பாருங்க அங்கிள்" என்றாள். அவர் அதைப் படித்துக் கொண்டிருந்தபோது, சத்தமின்றி மேஜை மீது இருந்த காரின் சாவியைக் கையில் எடுத்துக் கொண்டாள். வெளியே வந்து கதவைத் தாழிட்டாள். அதற்கு மேல் தாமதம் செய்யாமல் சட்டென்று தன் அறைக்குள் ஓடி ப்ரீஃப்கேஸை எடுத்துக் கொண்டு காரிடார் வழியாகப் படிகளை அடைந்தாள். மின்னல் வேகத்தில் படிகளில் இறங்கி ரிசெப்ஷனைத் தாண்டினாள்.

ஜெயதேவ் துளசி எழுதியிருந்ததைப் படிப்பதிலேயே மூழ்கி இருந்தார். காகிதத்தில் கீழ்க்கண்டவாறு எழுதி இருந்தது.

"எனக்குப் பைத்தியம் என்று நினைப்பவர்களுக்குத் தான் பைத்தியம். பல்லாண்டுகளாய்அழியாமல் இருந்து வரும் இந்த உலகம் இன்னும் ஆறே மாதங்களில்அழியப் போகிறது. தெய்வத்தின் அருளோ... போராட்டமோ அதைத் தடுத்து நிறுத்த முடியாது. நானும் போகிறேன். என்னைத் தடுக்க யாராலும் முடியாது. குட் பை அங்கிள்."

இறுதிவரை அவர் படிக்கவில்லை. கதவு தாளிடப் பட்ட சத்தம் கேட்டு ஓடிப் போய் அதை இழுத்துப் பார்த்தார். கதவு திறக்கவில்லை. மேஜைமீது பார்த்த போது கார் சாவியைக் காணவில்லை. ஜன்னல் வழியாகப் பார்த்த போது துளசி காரிடாரை நோக்கி ஓடுவது தெரிந்தது. அவர் சட்டென்று டெலிஃபோன் இருந்த இடத் திற்குச் சென்றார்.

துளசி அவசர அவசரமாய்ப் படி இறங்கிக் கொண்டு இருந்தபோது, அவர் ஹோட்டல் ஆபரேட்டருக்குப் ஃபோன் செய்தார். தூக்கக் கலக்கத்தில் இருந்த அந்த ஆபரேட்டருக்கு ஜெயதேவ் சொன்னது புரியவில்லை.

"கிவ் மி... ரிசெப்ஷன்!" ஜெயதேவ் கத்தினார்.

அடுத்த நிமிஷம் ரிசெப்ஷனிஸ்ட் லைனில் வந்தான்.

"அந்தப் பெண்ணைத் தடுத்து நிறுத்துங்க... அதான் துளசியை."

அவர் சொன்னதை ரிசெப்ஷனிஸ்ட் புரிந்து கொள்வதற்குள் துளசி கவுண்டரைத் தாண்டிவிட்டாள். அடுத்த நிமிஷம் கார் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்தில் இருந்து அம்பாசிடர் கார் ஒன்று வேகமாய்ப் புறப்பட்டு வெளியேறியது.

ரிசெப்ஷனிஸ்ட் சாவகாசமாய் வெளியே போய்ப் பார்த்து விட்டு கார் போய் விட்டதாய்ப் ஃபோனில் தகவல் சொன்னான். அதற்குள் அறைக் கதவை வெளியிலிருந்து யாரோ திறந்து விட்டார்கள்.

ஜெயதேவ் காவல் நிலையத்திற்குப் ஃபோன் சய்து கார் நம்பரையும், அது போன வழியையும் தெரிவித்தார்

"க்ரிமினல் கேஸா?" என்று இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"இல்லை."

"பின்னே?"

ஜெயதேவ் ஒரு நிமிடம் நிதானித்து விட்டு "அவளுக்குப் புத்தி சுவாதீனமில்லை" என்றார்.

"மைகாட்! பைத்தியமா?"

அவர் சற்றுத் தயங்கி, "ஆமாம் இன்ஸ்பெக்டர். பைத்தியம்தான்" என்றார். அப்படிச் சொல்லும்போது அவர் கண்கள் ஈரமாயின...

வாழ்க்கையில் முதல்முறையாக.

காவல் நிலையத்தில் விவகாரங்களை முடித்துக் கொண்டு திரும்பும்போது பத்து மணியாகிவிட்டது. மேற் கொண்டு வைஸாகில் இருக்க அவருக்குப் பிடிக்கவில்லை. துளசியை அழைத்துக் கொண்டு ஊருக்கு வந்து விட்டார். அவர் வருவதற்குள் பண்டிட் நன்றாகத் தேறிவிட்டார். இருவரும் சேர்ந்து துளசியின் அறையைத் துப்புறவாய்த் தேடினார்கள். எதுவும் கிடைக்கவில்லை. அன்று இரவு அவர்கள் அந்த அறையிலேயே படுத்துக் கொண்டார்கள். எதுவுமே ஆகவில்லை. மறுநாள் சாரதாவும் துளசியும்கூட படுத்துக் கொண்டார்கள். அதற்கு அடுத்த நாள் பிரச்சி னையே இல்லாமல் போய்விட்டது. ஏனெனில் அன்று தான் ஸ்ரீதர் வரும்நாள்.

சாரதா ரொம்ப நலிந்து போய்விட்டாள். கலகல வென்று வளைய வந்து கொண்டிருந்த மகள். திடீரென்று பைத்தியம் பிடித்ததுபோல் நடந்து கொண்டால் எந்தத் தாயால் தான் தாங்கிக் கொள்ள முடியும்?

சாதாரணமாக இருக்கும்போது துளசி எப்பொழுதும் போலவே நடந்து கொண்டாள். பைத்தியம் பிடிக்கும் போது மட்டும் அவளை யாராலும் கட்டுப்படுத்த முடியாது.

முன்பெல்லாம் நம்பூதிரி வீட்டிற்கு அடிக்கடி வந்து கொண்டிருந்தான். தன்னுடைய பேச்சால் எல்லோரையும் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தான். மனைவியின் உடல்

நலம் சரியில்லாமல் போனதிலிருந்து அவன் வருவது நின்றுவிட்டது. அவளுடைய மரணம் அதிகத் தொலை வில் இல்லை என்பது அவனுக்குப் புரிந்துவிட்டது. பெரிய பெரிய டாக்டர்களிடம் காட்டினான். ஹோமி யோபதி ஆங்கில மருத்துவம் என்று பலவிதமாக முயற்சி செய்தான். எதுவுமே பலன் தரவில்லை.

நாளுக்கு நாள் அவள் உடல் நலம் க்ஷீணித்துக் கொண்டு வந்தது. அவள் மரணம் உறுதி என்றும், எந்த மருந்தும் அவளைக் காப்பாற்ற முடியாது என்றும் புரிந்து கொண்ட ஒரே நபர் அவளுடைய தந்தைதான். யாரோ தன் மகளுக்கு இரக்கமின்றி சூனியம் வைத்து விட்டார் கள் என்பதையும், அதை யாராலும் குணமாக்க முடியாது என்றும் உணர்ந்து கொண்டார்.

தார்க்காவும் மகிழ்ச்சியாக இல்லை. வித்யாபதி பேத்தியின் மரணத்தினால், வித்யாபதியைக் கொல்வதை சில நாட்களுக்குத் தள்ளிப் போட்டான். கண்ணைக் குத்திக் கொண்டதால் இடது கண் பார்வை சாசுவத மாகப் போய்விட்டது.

நம்பூதிரி மனைவியின் மரணத்திற்கு இன்னும் பத்து நாட்கள் இருந்தன. அதன் பிறகு செய்ய வேண்டிய வேலை கள் சில இருந்தன. அதுவரையில் என்ன செய்வது?

தார்க்காவுக்கு ஜெயதேவின் நினைவு வந்தது. சித்தேஸ்வரி வீட்டில் அந்தப் பெயரைப் பார்த்திருக்கிறான். அவருக்குச் சித்தேஸ்வரியின் கொலை முயற்சிகளைப் பற்றி எடுத்துச் சொன்னால் அவருடைய உயிரையாவது காப்பாற்ற முடியும் இல்லையா.

ஜெயதேவின் முகவரியைத் தெரிந்து கொள்வதற்காகத் துளசியின் வீட்டுக்குக் கிளம்பினான். அவன் அந்த

வீட்டை அடையும் போது இருட்டிக் கொண்டிருந்தது. அவனைப் பார்த்ததும் சாரதா நெற்றியை சுளித்தாள்.

"என்ன வேண்டும்?"

"துளசி" என்றான்.

"அவள் இல்லை" என்று சொல்ல முற்படும்போதே உள்ளிருந்து "கமின்" என்ற குரல் கேட்டது. தார்க்கா அந்தப் பக்கமாய் நடந்தான்.

அறையில் படுக்கைமீது இருந்த துளசியைப் பார்த்து அவனையும் அறியாமல் ஓரடி பின்னால் வைத்தவன் சமாளித்துக் கொண்டான்.

முன்பு பார்த்த துளசிக்கும், இந்தத் துளசிக்கும் கொஞ்சம்கூட ஒற்றுமையே இல்லை. முகத்தில் நகத்தால் கீறிய காயங்கள் தென்பட்டன. கழுத்து மெலிந்து குச்சி யைப் போல் நீண்டிருந்தது.

அவன் அவளை இரக்கத்தோடு பார்த்தான். காஷ் மோரா தன் பிரபாவத்தை அதற்குள் காட்டத் தொடங்கி விட்டதா? அப்படியிருக்க வாய்ப்பு இல்லையே... அதற்கு இன்னும் இரண்டு மூன்று நாட்கள் கெடு இருக்கிறதே? பின்னே துளசி ஏன் இப்படி ஆகிவிட்டாள்?

"ஏன் அங்கேயேநின்று விட்டாய்? உள்ளே வா."

அந்தக் குரலில் மென்மையில்லை. கட்டைக் குரலைப் போல் ஒலித்தது. அவன் அறைக்குள் வந்தான்.

"உட்கார்ந்து கொள்" என்றாள்.

அவன் உட்காரவில்லை. "ஜெயதேவ் என்பவரை உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

"ஓ... ஜெயதேவ் அங்கிளைத் தெரியாமலா?" என்றாள்.

அவன் நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டான். இவர்கள் இப்படிப் பேசிக் கேட்டிருக்கும் நேரத்தில் சாரதா அடுத்த அறையிலிருந்து நம்பூதிரிக்குப் ஃபோன் செய்தாள்.

"ஆமாம்... அவன்தான்... இங்கே வந்திருக்கிறான்."

"நான் உடனே வருகிறேன்" –நம்பூதிரி ஃபோனை வைத்து விட்டான்.

இதற்குள் தார்க்கா ஜெயதேவின் விலாசத்தைத் தெரிந்துகொண்டு எழுந்தான்.

"அடிக்கடி வந்துகொண்டிரு" என்றாள் துளசி "எனக்கு ஒன்றும் ஆகவில்லையென்று சொன்னால் இவர்கள் நம்ப மறுக்கிறார்கள். எனக்குப் பேய் பிடித்து விட்டதாம். பேய் பிடித்தவர்கள் இப்படிச் சாதாரண மாய்ப் பேசுவார்களா?"

"உனக்குப் பேய் பிடிச்சிருக்குன்னு சொன்னவங் களுக்குத் தான் பேய் பிடித்திருக்கும்."

"அப்பாடா... இத்தனை நாட்களுக்குப் பிறகு எனக்குச் சப்போர்ட் செய்து பேசக் கூடிய ஆள் ஒருத்தன் கண்ணில் பட்டிருக்கிறான். கமான்... ஐஸ்கிரீம் சாப்பிடு" என்று கட்டில் அடியிலிருந்து மரச் சொப்பு சாமானை எடுத்தாள். அதில் கடலைப் பருப்பு இருந்தது.

"ரொம்ப சரியாகச் சொன்னாய். எனக்குப் பேய் பிடிச்சிருக்குன்னு சொன்னவர்களுக்குத்தான் பேய் பிடிச்சிருக்கு. பேயைப் பற்றிப் பேசினாலே பேய்பிடித்து விடும்" என்று சிரித்தாள். உடனே அழுதாள். "கடவுளைப் பற்றி கெடுதலாகச் சொல்லி விட்டேன் நான். அதான் என்மீது சாத்தானை ஏவி இருக்கிறார். அந்தச் சாத்தானின்

பெயர் என்ன தெரியுமா?" உரத்த குரலில் சிரித்தாள். "ஹா... ஹா... ஹா காஷ்மோரா... ஐயாம் காஷ்மோரா..."

மகளுக்கு மறுபடியும் ஸ்ட்ரோக் வந்துவிட்டதென்று எண்ணி இன்ஜெக்ஷன் கொடுப்பதற்காக அந்த அறைக்கு வந்த சாரதா அங்கே தென்பட்ட காட்சியைப் பார்த்து நின்றுவிட்டாள்.

அறையின் நடுவில் தார்க்கா அசைவற்று நின்றிருந்தான். அவன் பார்வை துளசிமீது தீட்சண்யமாய்ப் படிந்திருந்தது. துளசி படுக்கைமீது ஒரு மூலையில் ஒடுங்கிய நிலையில் உட்கார்ந்திருந்தாள். அவன் பார்வையில் ஏதோ ஒரு சக்தியிருக்க வேண்டும். அது துளசியின் வெறியைக் கட்டுப்படுத்துவது போல் இருந்தது. துளசியின் தெளிவற்ற பேச்சுகள் மெதுவாய்க் குறைந்து அடங்கி விட்டன. சாதாரண நிலைக்குத் திரும்பியவள் அப்படியே படுக்கையில் சரிந்து விட்டாள். இதையெல்லாம் பார்த்துக் கொண்டு இருந்த சாரதாவுக்குத் திகைப்பினால் வாய டைத்துப் போய்விட்டது.

அதற்குள் வெளியே கார் வந்து நின்ற ஓசை கேட்டது. நம்பூதிரி உள்ளே வந்தான். தார்க்கா துளசியின் அறையை விட்டு வெளியே வந்து கொண்டிருந்தான்.

இருவரும் ஹாலுக்கு நடுவில் சந்தித்துக் கொண்டார்கள். தார்க்கா ஒரு நிமிஷம் நின்றுவிட்டு வாசலை நோக்கி நகர்ந்த போது, "நில்" என்று அதட்டினான் நம்பூதிரி.

தார்க்கா நின்றான்.

"எதற்காக இங்கே வந்தாய்?"

"துளசியைப் பார்ப்பதற்காக."

நம்பூதிரி அவன் தோளைப் பிடித்துத் தன் பக்கம் திருப்பி, "மறுபடியும் இந்தச் சுற்று வட்டாரத்தில் எங்கே யாவது கண்ணில் பட்டாயோ... தெரியும் சேதி" என்று அப்படியே தள்ளி விட்டான்.

நிலை தடுமாறி கீழே விழப் போன தார்க்கா சமாளித்துக் கொண்டான். பிறகு நிதானமான குரலில் சொன்னான்.

"எங்கள் ஜாதியைப்பற்றி உங்களுக்குச் சரியாகத் தெரியாது. நாங்கள் எதையும் விட்டு வைக்க மாட்டோம். பழிக்குப் பழி. அன்று மயானத்தில் நான் எதுவும் செய்யாத போதே திடீரென்று என்னை அடிச்சீங்க. திடீரென்று அடிவாங்க நேர்ந்தால் அந்த வலி எப்படி இருக்கும் என்று உங்களுக்குத் தெரியுமா?"

நம்பூதிரி அந்த வார்த்தைகளின் பொருளை உணர்ந்து கொள்வதற்குள் முகவாய்க்குக் கீழே எத்தனைப் பலமாக அடி விழுந்தது என்றால், அந்த அடிக்கு நம்பூதிரி சுவற்றில் போய் மோதிக் கொண்டான். தாடை எலும்பில் பல மான அடி. சாரதா பயத்தினால் நடுங்கியவாறு பார்த்துக் கொண்டிருக்கையில் சாவகாசமாய் எதுவுமே நடக்காதது போல் மெதுவாய் அந்த இடத்தை விட்டு அகன்றான் தார்க்கா.

* * *

நாகரிக உலகிற்குள் அடியெடுத்து வைத்து எல்லா வற்றையும் கற்றுணர்ந்த தார்க்காவுக்குச் சில விஷயங்கள் மட்டும் இன்னும் புரிபடாமல் குழப்பமாய் இருந்தன. அவற்றுள் ஒன்று சாலையைக் கடப்பது. சாதாரணமாய்ப் பச்சை விளக்கு எரியும்போது எல்லோருடனும் சேர்ந்து சாலையைக் கடப்பதுதான் அவன் வழக்கம். ஆனால்

அன்று அவன் தவறு செய்துவிட்டான். வாகனங்கள் போவதற்காக எரிந்த பச்சை விளக்கைப் பார்த்துவிட்டு அது பாதசாரிக்காக என்று நினைத்து சாலையைக் கடக்கத் தொடங்கினான். வேகமாய் வந்து கொண்டிருந்த கார்களைப் பார்த்து சட்டென்று பின்னால் நகரப் போனான். ஆனால் சற்றே தாமதமாகி விட்டது.

"கிறீச்" என்ற சத்தத்துடன் கார் நின்றது. அவனுக்குப் பெரிதாக அடி ஒன்றும் படவில்லை. முழங்காலில் லேசாக சிராய்ப்பு ஏற்பட்டது. காரில் அமர்ந்திருந்த நபர் சட்டென்று இறங்கி கை கொடுத்து எழுப்பினார்.

"அடிபட்டு விட்டதா?" என்று கேட்டார்.

"இல்லை" என்று சொல்லிக் கொண்டே எழுந்தான் தார்க்கா. அதற்குள் கேஸ் புக் செய்ய ட்ராஃபிக் போலீஸ் காரர் ஓடிவந்தார்.

"அவர்மீது எந்தத் தவறும் இல்லை. தவறு முழுவதும் என்மீது தான்"– தார்க்கா சொன்னான்.

காரில் வந்தவன் தன்னிடம் பணம் எதுவும் கொடுக்க முன் வராதது கண்டு, "இருவரும் ஸ்டேஷனுக்கு வாங்க. அங்கே முடிவு செய்வோம் தவறு யாருடையது என்று" என்றார் போலீஸ்காரர்.

காரில் வந்தவன் அலுப்புடன், "விழுந்தவனுக்கு அடி எதுவும் படவில்லை. மேலும் என்மீது தவறு இல்லைன்னு சொல்கிறான். இன்னும் ஸ்டேஷனுக்கு வர வேண்டிய அவசியம் என்ன!" என்றான்.

"வாதனைகள் அநாவசியம். ஸ்டேஷனில் வந்து எஸ்.ஐ.யிடம் விவரமாய்ப் பேசிக் கொள்ளுங்கள்" என்றார் போலீஸ்காரர். "இல்லை... இங்கேயே விஷயத்தை முடித்து

விட வேண்டும் என்றால்...” தனக்கு வேண்டியதைக் குறிப்பால் உணர்த்துவது போல் பாதியில் நிறுத்தினார்.

காரில் வந்தவரின் முகம் கோபத்தால் சிவந்து விட்டது. “நயாபைசா தரமாட்டேன். ஸ்டேஷனுக்குப் போகலாம் வாங்க” என்றார்.

மூவரும் ஸ்டேஷனுக்குப் போனார்கள். அவரைப் பார்த்ததும் எஸ்.ஐ. நாற்காலியிலிருந்து எழுந்து, “வாங்க... வாங்க... ரொம்ப நாளாச்சு பார்த்து” என்று வரவேற்றார். போலீஸ்காரரின் முகம் வாடிப் போய்விட்டது.

“தவறு என் மீது தான். எனக்கு இடது கண் தெரியாது. பச்சை விளக்கு எரிந்தது பாதசாரிகளுக்கு என்றெண்ணி விட்டேன்” என்றான் தார்க்கா.

“பரவாயில்லை” என்றார் எஸ்.ஐ. “அதிலும் இவர் காரை வேகமாக ஓட்டினார் என்று சொன்னால் நான் நம்ப மாட்டேன்.”

இருவரும் சேர்ந்து சிரித்தார்கள்.

அவர்கள் முன்னிலையிலேயே அந்தப் போலீஸ் காரரைக் கடிந்து கொண்டு, இருவருக்கும் டீயை வர வழைத்துக் கொடுத்தார் எஸ்.ஐ.

இருவரும் வெளியில் வந்தார்கள். காரில் வந்தவன் தார்க்காவைப் பார்த்து புன்முறுவலுடன், “ரொம்ப தாங்க்ஸ். உங்களைப் போல் நேர்மையாக இருக்கும் மனிதர்களை இந்தக் காலத்தில் பார்க்க முடியாது. உங்கள் பெயர்?” கையை நீட்டிக் கொண்டே கேட்டான்.

“என் பெயர் தார்க்கா.”

“குட். என் பெயர் ஸ்ரீதர்.”

கைகுலுக்குவதற்காக முன்னால் நீட்டப் போன தார்க்காவின் கை நடுவிலேயே நின்று விட்டது.

சதுரங்கத்தில் காய்கள் எல்லாம் தயார் நிலையில் வைக்கப்பட்டுவிட்டன.

காஷ்மோரா துயிலெழ இரண்டு நாட்கள் இருந்தன. நம்பூதிரி மனைவியின் மரணத்திற்கு ஏழு நாட்களும், துளசியின் மரணத்திற்கு ஒன்பது நாட்களும் இருந்தன. ஜெயதேவின் மரணம் பத்து நாட்களுக்குள் நிகழலாம். வித்யாபதி, ஸ்ரீதர், நம்பூதிரி மூவரும் அதற்கு முன்பே இறந்துவிடுவார்கள்.

"க்ளாட் டு மீட் யூ" தார்க்கா ஸ்ரீதரின் கையைக் குலுக்கினான்.

25

"நீங்கள் எல்லோரும் இத்தனை நாளாய் இந்த விஷயத்தை என்னிடம் சொல்லாமல் எதற்காக மறைத்து வைத்தீர்கள் என்று எனக்குப் புரியவில்லை"— ஸ்ரீதரின் முகம் கோபத்தால் சிவந்துவிட்டது.

சாரதா, நம்பூதிரி, ஜெயதேவ்... யாருமே வாயைத் திறக்கவில்லை.

"துளசி வாயிலிருந்து காஷ்மோரா என்ற வார்த்தை வந்தபோது எனக்குப் ஃபோன் மூலமாய்த் தகவல் சொல்லி இருக்க வேண்டியதுதானே? பதினோரு ஆண்டு களுக்கு முன்னால் நிகழ்ந்ததை எல்லோரும் மறந்து விட்டீர்களா அல்லது போகட்டும் பரவாயில்லை என்று விட்டு விட்டீர்களா?"

ஸ்ரீதரின் கோபத்தைக் கண்டு நம்பூதிரியும் தலையைக் குனிந்துகொண்டான்.

சாரதா சற்றே துணிச்சல் பெற்று, "நாங்கள் இங்கே ஒரு சைக்ரியாடிஸ்டிடம்..." என்று ஏதோ சொல்லப் போனாள்.

"சைக்ரியாடிஸ்டா!" இரட்டிப்பது போல் கேட்டான் ஸ்ரீதர், "உன் மகளைச் சிறுவயதில் எந்த சைக்ரியாடிஸ்ட் காப்பாற்றினாராம்?"

சாரதா ஜெயதேவ் பக்கம் பார்த்தாள்.

எதுவும் பேச வேண்டாம் என்பது போல் சைகை காட்டினார் ஜெயதேவ். ஸ்ரீதரின் கோபம் தணியும் வரை மௌனமாக இருப்பது நல்லது.

"தவறு என்மீது தான்" என்றார் ஜெயதேவ். "நான் வேறு விதமாக நினைத்துக் கொண்டு அதிலிருந்து தப்பிக்கத் தான் துளசியை என்னோடு வைசாக் அழைத்துச் சென்றேன். அங்கேதான் இந்தக் காஷ்மோரா அவளை பிடித்திருப்பதாய் தெரியவந்தது. அதற்கு முன்பே அவள் சில சமயம் ஹிஸ்டீரியா வந்தவளைப் போல் நடந்து கொண்டது உண்மை. ஆனால் அதை நாங்கள் அவ்வளவு சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை."

ஜெயதேவ் விளக்கமாகச் சொன்னதும் ஸ்ரீதர் கொஞ்சம் சமாதானமடைந்தான்.

"இத்தனை நாட்களுக்குப் பிறகு துளசியின் வாயிலிருந்து காஷ்மோரா என்ற வார்த்தை ஏன் வெளி வந்தது?"

"சரியாய்ப் பதினோரு வருடங்கள் கழித்து" என்றான் நம்பூதிரி. அவனிடம் முன்பிருந்த உற்சாகம் இப்போது தென்படவில்லை. மனைவியின் உடல் நலக் குறைவு அவன் மனதை வருத்திக் கொண்டிருந்தது—

எல்லோரும் அவன் பக்கம் பார்த்தார்கள்.

நம்பூதிரி சொன்னான். "அதிருப்தியடைந்த காஷ்மோரா பதினோரு வருடங்கள் கழித்து எழுந்து கொள்ளுமாம். காஷ்மோராவைப்பற்றித் துளசி பேசினாள் என்று தெரிந்ததும் நூலகத்தில் தேடிப் பார்த்தேன். 'தந்த்ரா' என்ற புத்தகத்தில் படித்தேன்.

ஸ்ரீதரின் முகம் வாடிவிட்டது. கடந்த காலத்தில் காஷ்மோராவினால் ஏற்பட்ட தீய விளைவுகளை எண்ணி அவன் உடல் நடுங்கியது.

"அப்படியானால் என் மகள் இறப்பது நிச்சயம் தானா?"

"யாருமே பதில் பேசவில்லை.

ஸ்ரீதர் எழுந்தான். "குட் பை எவ்ரிபடி. யாரும் என்னைத் தேடாதீங்க."

சாரதாவின் முகத்தில் கலவரம் சூழ்ந்தது.

"எங்கே?" என்று கேட்டான் நம்பூதிரி.

"சந்தான் பக்கீரிடம்."

* * *

ஸ்ரீதர் மயானத்தைக் கடந்து நதியைத் தாண்டி கோட்டையை அடைந்தான்.

அதே சூழ்நிலை. முன்பு பக்கீர் ஸ்ரீதருக்கு ஸ்ரீசக்கரம் வழங்கியபோது இருந்த சூழ்நிலை. காவிக்கறை படிந்த சுவர்கள். குட்டையாய்த் தேங்கி இருந்த மழை நீர்.

அவன் ரொம்பநேரம் காத்திருக்க வேண்டியிருந்தது. இரவு சுமார் ஒரு மணியாகும்போது, வாய்க்கு வந்தபடி பாடிக் கொண்டே பக்கீர் கோட்டைக்குள் நுழைந்தான்.

"யாரது?"

ஸ்ரீதர் வெளிச்சத்தில் வந்து நின்றான். "நான்தான்."

"நான் என்றால்?"

"சில வருடங்களுக்கு முன் சந்தித்திருக்கிறேன்" காஷ்மோரா..."

"ஓ... ஸ்ரீதரா."

"ஆமாம். நான்தான்."

பக்கீர் பெருமூச்சு விட்டுக் கொண்டே, "அதற்குள் பதினோரு வருடங்கள் கழிந்துவிட்டது?" என்றான்.

ஸ்ரீதர் மௌனமாய் இருந்தான்.

"காத்ராவைக் கொன்று சரியாய் எத்தனை வருடங்கள் ஆகிறது?"

"நாளை மறுநாளுடன் பதினோரு வருடங்கள்."

"அதாவது நாளை மறுநாள் காஷ்மோரா பிரளய கால சண்ட மாருதமாய் எழுந்து வரப் போகிறது." பக்கீர் யோசித்து விட்டுச் சொன்னான். "ஏழு நாள்களுக்குப் பீடித்துவிட்டு கடைசி நாள் துளசியைக் கொல்லும்."

ஸ்ரீதர் நடுங்கும் குரலில், "அப்படி நடக்கக் கூடாது" என்றான்.

யோசனையில் ஆழ்ந்திருந்த பக்கீர், "யாரால் அதைத் தடுத்து நிறுத்த முடியும்?" என்றான்.

"நீதான்"

தியானம் கலைந்துவிட்டது போல் கண்களைத் திறந்தான் பக்கீர்.

"மூடனே! காஷ்மோராவை யாராலும் எதிர்த்து நிற்க முடியாது."

"பதினோரு வருடங்களுக்கு முன்பு கூட நீ இதே வார்த்தையைத்தான் சொன்னாய்."

"அப்போதைய விஷயம் வேறு. மந்திரவாதி ஒருவன் காஷ்மோராவை ஏவிக் கொண்டிருக்கும் போது அவனைத் தடுத்தீங்க. இறுதி அங்கம் முடிவு பெறாததால் காஷ்மோரா அதிருப்தி அடைய நேரிட்டது. இப்பொழுது அந்த அங்கமும் முடிவடைந்து விட்டது. முழு பலத்தையும் பெற்று இருமடங்கு உற்சாகத்துடன், இரட்டித்த பகைமையுடன் காஷ்மோரா எழுந்து வரப் போகிறது. இதற்குப் பூஜை செய்பவர்களோ... எழுப்ப வேண்டிய அவசியமோ எதுவும் கிடையாது: பஞ்ச பூதங்களின் உதவியைக் கொண்டே அது எழுந்து வரப்போகிறது. அதை யாராலும் தடுத்து விட முடியாது"

"உன்னால் கூடவா முடியாது?"

"காஷ்மோராவுக்கு முன்னால் என் சக்தி தூசி பெறாது."

"அப்படியானால் என் மகள் இறக்க வேண்டியது தானா?"

பக்கீர் மௌனமாக இருந்தான்.

* * *

நோயாளியின் பெயர் : துளசி

இன்ஃபார்மெண்ட் : ஜெயதேவ்

நோயாளியின் வயது : 21

படிப்பு	:	பட்டதாரி
I.Q.	:	சாதாரண நிலைக்குச் சற்று அதிகம்
தாய் தந்தை	:	சாரதா, ஸ்ரீதர்.
பெற்றோர்கள் படித்தவர்களா?	:	ஆமாம்
பரம்பரை லட்சணங்கள்	:	தாய் வழியிலோ, தந்தை வழியிலோ யாருக்குமே மூளை கலங்கியோ, மன நோய் ஏற்பட்டதோ இல்லை.
பொழுது போக்கு	:	கிரிக்கெட் விளையாடுவது.
நோயாளியின் பழைய லட்சணங்கள்	:	கலகலப்பாகப் பழகுவாள், புத்திசாலி, சட்டென்று உணர்ச்சி வசப்படுவாள்.
தாய் தந்தையருடன் உறவு	:	ஓவர் ப்ரொடெக்ஷன்
சைக்கோ பாதாலஜி	:	ரிக்ரெஷன், சிறு குழந்தையைப் போல் நடந்து கொள்ளுதல்
க்ளினிகல் மானிஃபெஸ்டேஷன்ஸ்	:	பற்று இல்லாமல் இருப்பது, இருமனநிலை, தெய்வம், விஞ்ஞானம் பற்றிப் பேசினால் உணர்ச்சி வசப்படுவது. அர்த்த மில்லாமல் பேசுவது.
முடிவு	:	ஹெபப்ரெனிக்ஸ்கிஜோ ஃப்ரெனியா

சிகிச்சை : பத்திலிருந்து பன்னிரண்டு கன்வல்ஷன்ஸ், நான்கிலிருந்து ஆறு வாரங்கள் வரையிலும் ஷாக் ட்ரீட்மெண்ட்.

* * *

இரவு மூன்றடித்தது. பக்கீர் உறங்கவில்லை. சரிந்த சுவரின்மீது சாய்ந்தவாறு உட்கார்ந்து கண்களை மூடியிருந்தான். எப்பொழுதும் பைத்தியம் போல் முணுமுணுக்கும் அவன் இதழ்கள் இப்பொழுது அசையவில்லை. வெறி பிடித்தது போல் நோக்கும் அந்தக் கண்கள் எதையோ யோசிப்பது போல் தென்பட்டன.

மனதில் ஏற்பட்ட வேதனையைத் தாங்க முடியாமல் எழுந்து கோட்டையை விட்டு வெளியே வந்தான். தொலைவில் நதி. தண்ணீர்மீது மங்கலாய் நிலவின் ஒளி பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

இயற்கையே உறங்குவது போல் இருந்தது.

"என் மகளைக் காப்பாற்று பக்கீர்! என் மகளைக் காப்பாற்று" என்ற ஸ்ரீதரின் வார்த்தைகளே செவிகளில் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

ஊருக்குள் போகலாமா என்று நினைத்தான். மறுபடியும் தயக்கம். போய் என்ன செய்துவிடமுடியும்? பதினோரு ஆண்டுகளுக்கு முன் அந்த மந்திரவாதியைக் கொல்லாமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அப்பொழுதே துளசி இறந்து விட்டிருப்பாள். இத்தனை பேருக்கு இத்தனை வருத்தமும், துளசிக்கு இந்தத் துன்பமும் இருந்திருக்காது.

அவன் நடந்து கொண்டே இருந்தான். கால்களுக்கு அடியில் மணல் நழுவிக் கொண்டிருந்தது. நதியில்

தண்ணீர் வற்றிவிட்டிருந்தது. ஆங்காங்கே சின்னச் சின்ன தாய் நீர்க் குட்டைகள் மட்டுமே தேங்கிக் கிடந்தன.

நடந்துகொண்டிருந்த பக்கீர் திடீரென்று நின்று விட்டான்.

பெரிய மணல் மேடு... உயரமாய்க் குவியலாய் தென் பட்டது. அவன் பார்த்தது மணல் மேட்டை அல்ல. மேட்டிற்கு வெளில் நீட்டிக் கொண்டிருந்த கையைத் தான். சதையில்லை, எலும்புகளில் சிறிது ஒட்டிக் கொண்டு இருக்கலாமோ என்னவோ, மணல் மேட்டிலிருந்து வெளியே நீட்டிக் கொண்டிருந்த கையானது எப்பேற் பட்ட தைரியசாலிக்கும் அச்சம் தருவதாக இருந்தது. நரியோ அல்லது ஓநாயோ வெளியில் இழுக்க முயற்சி செய்து, முடியாமல் அப்படியே விட்டு விட்டுப்போயிருக்க வேண்டும்.

முழங்காலில் அமர்ந்து கொண்டு கைகளால் மண லைப் பறிக்கத்தொடங்கினான். அரை மணி கழித்து வெளிப்பட்டது பிணம்—

இஸ்மாயிலுடையது.

ஊறிப் போய், சேதமடைந்து விட்டது. முகத்தில் சதை இன்னும் கொஞ்சம் ஒட்டிக்கொண்டிருந்தது. உடைகள் நைந்துவிட்டன. வயிற்றுப் பகுதியில் பெரிய ஓட்டை இருந்தது. கண்களும், கன்னங்களும் இருக்கவில்லை.

பக்கீர் அதிர்ச்சியுடன் நோக்கினான்.

"அந்தக் குழந்தையைக் காப்பாற்ற வழியே இல்லையா?" என்று கேட்பது போல் இருந்தது இஸ்மாயி லின் முகம்.

"இந்தத் துளசி தீர்த்தம் அந்தக் குழந்தையை வேதனையிலிருந்து காப்பாற்ற முடியும் என்றால், அவளு

டைய மரணத்தைச் சுலபமாக்க முடியும் என்றால் அதற்கு நான் உறுதுணையாக இருப்பேன்."

"பஞ்ச பூதங்களும் என்னை எதிர்க்கப் போகின்றன என்று தெரியும். ஆனால் ஒரு குழந்தைக்காக இந்த அளவுக்குக் கூடச் சிரமப்படாவிட்டால் எப்படி?" இஸ்மாயில் எதிரில் நின்று கேட்பது போலிருந்தது.

பக்கீர் உரத்த குரலில் அழத் தொடங்கினான்.

"ஒரு அப்பாவி பூத சக்திகளுக்குப் பலியாகி விட்டான். நிர்தாட்சண்யமாகக் கொடுமையான முறையில் இவன் உயிர் பறிக்கப் பட்டிருக்கிறது. ஒரு குழந்தைக்காக இவன் இத்தனை சிரமத்தை எதற்காக மேற் கொண்டான்? தன் உயிரையும் எதற்காகப் பணயம் வைத் தான்?"

பக்கீரின் முகத்தில் துக்கம் மறைந்து அந்த இடத்தில் ரோஷம் வந்து குடிகொண்டது. வடக்கு திசையை நோக்கியவாறு எழுந்து நின்றான். அடுத்த விநாடியே ஊரை நோக்கி அடியெடுத்து வைத்தான். அப்பொழுது மணி நாலடிக்க இருந்தது. இன்னும் விடிவெள்ளி முளைக்கவில்லை.

* * *

ஸ்ரீதர் பால்கனியில் அமர்ந்திருந்தான் இரவு முழு வதும். கண்கள் அக்னிக் கோளங்களாய் இருந்தன.

இறந்தவிடுவது வேறு. இறக்கப் போகிறாள் என்று தெரிவது வேறு. கண் முன்னாடியே வயதுக்கு வந்த தன் மகள் சாகப் போகிறாள். காஷ்மோரா எத்தனை சக்தி வாய்ந்ததென்று அவனுக்குத் தெரியும். இந்த விஷயத்தை இஸ்மாயிலோ, பக்கீரோ ஏன் சொல்லவில்லை என்று நினைத்தான்.

சொல்லி இருந்தாலும் என்ன பிரயோஜனம்? இந்த பதினோரு ஆண்டுகளும் மனவருத்தத்தில் கழிவதைத் தவிர.

இரவெல்லாம் யோசித்தான். நள்ளிரவானது விடிந்து கொண்டிருந்தது. சாரதாவுக்குக்கூட அவனை உள்ளே வரச் சொல்வதற்குப் பயமாக இருந்தது. கிட்டத்தட்ட பத்து சிகரெட் பாக்கெட்டுகள் காலியாகிவிட்டன. இருளை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான்.

கேட் திறக்கும் சத்தம் கேட்டுத் திரும்பினான். வியப்பாலும், மகிழ்ச்சியாலும் சட்டென்று நாற்காலியை விட்டு எழுந்து கொண்டான்.

சந்தான் பக்கீர் கேட்டைத் திறந்து உள்ளே வந்து கொண்டிருந்தான். அவனுடைய ஒருகையில் தோல் பையும், மற்றொரு கையில் மரத்தால் ஆன விக்கிரகமும் இருந்தது.

* * *

ஜெயதேவ் அன்று சீக்கிரமாய் எழுந்து கொண்டார். மனதில் ஆயிரம் எண்ணங்கள் அலைமோதியதால் முன் தினம். அவர் சரியாக உறங்கவில்லை.

காஷ்மோரா துயில் எழுவது எனும் கூற்றை அவரால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. சரியாய்ப் பதினோரு ஆண்டுகள் முடிந்துவிட்டதாய் காஷ்மோரவுக்கு எப்படித் தெரியும்? அமாவாசை, பௌர்ணமி சரியாய்த் தோன்று வது போல் இதுவும் விழித்துக் கொள்ளுமா? காஷ்மோரா என்பது பூத தேவதை தானா? அல்லது பல சக்திகளின் சேர்க்கையா?

தான்கூட காஷ்மோரா இருப்பது போலவே எண்ணத் தொடங்கி விட்டதை நினைத்து அவருக்குச் சிரிப்பு வந்தது. ப்ளாஸ்கில் இருந்த காபியை ஊற்றிக் குடித்தார். பிறகு ஷேவிங் செட்டை எடுத்துக்கொண்டு கண்ணாடியின் முன்னால் அமர்ந்தார்.

முதல் நாள் மாலையிலேயே அவருடைய அறை கள்ளச் சாவி போட்டுத் திறக்கப் பட்டிருந்தது. அதன் மறு சாவி பிள்ளையிடம்தான் இருந்தது. சொந்த அறைக்கு வந்து போவது போல் பிள்ளை ஜெயதேவின் அறைக்கு வந்து போய்க் கொண்டிருந்தான். இந்த விஷயம் ஜெயதே வுக்குத் தெரியாது.

ஷேவிங் கிரீமைத் தடவிக் கொண்டுஷேவ் செய்து கொண்டார். வாஷ்பேசினுக்கருகில் இருந்த கண்ணாடி யில் முகத்தைப் பார்த்துக் கொண்டே குழாயைத் திருகினார்.

முகவாயில் ஓரிரு இடங்களில் சிறாய்த்திருந்தது. ஷேவிங்செட்டிலேயே ஆஃப்டர் ஷேவ் லோஷன் இருந்தது. அதில் ஸ்பிரிட் கலந்திருப்பதால் காயத்தை ஆற்றும். ஆனால் முந்தைய மாலையிலேயே ஜெயதேவின் ஷேவ்விங் செட்டில் இருந்த லோஷனில் பொட்டாஷியம் சயனட் கலக்கப்பட்டுவிட்டது.

காயங்களின் மீதோ, நாக்கிலோ சயனட் பட்டு விட்டால் போதும். மறுவினாடியே உயிர் போய்விடும்.

* * *

"சரியாய் பதினோரு வருடங்களுக்கு முன்னால் இப்படித்தான் கிளம்பிப் போனோம். ஆனால் அப்பொழுது ரொம்ப அவசரமாகப் பதட்டத்துடன் திடீரென்று கிளம்ப நேர்ந்தது."

என்ஜின் ஆயில், ரேடியேட்டர் தண்ணீர் முதலிய வற்றை செக் செய்துவிட்டுச் சொன்னான் ஸ்ரீதர். "நாளை இரவு பன்னிரண்டு மணிக்குள் பிஸ்தாவில் இருக்க வேண்டும். அவ்வளவு தானே! தாராளமாகப் போய்ச் சேர்ந்து விடலாம்" –டயர்களில் காற்றைப் பரிசோதித்துக் கொண்டான்.

"அப்போ என்னுடன் வந்த இருவருமே இப்போ மோசமான நிலையில் இருக்கிறார்கள். வித்யாபதியின் பேத்தி இறந்துவிட்டாள். நம்பூதிரி மனைவிக்கு உடல் நலம் சரியில்லை எஞ்சிய நான் மட்டும் தனியாக அதனுடன் போராடப் போய்க் கொண்டிருக்கிறேன். என்ன நடக்குமோ தெரியாது."

அந்த வார்த்தைகளைக் கேட்டு, பக்கீரின் முகம் மேலும் களையிழந்தது. இதழ்கள் மந்திரத்தை முணு முணுத்துக் கொண்டிருந்தன. இந்தத் துளசி தீர்த்தத் தாலும், இந்த அநுமான் விக்கிரகத்தாலும், அஷ்ட பந்தங்கள் அடங்கிய ஆணிகள் அடித்த மரப் பலகை யாலும் சக்தி வாய்ந்த காஷ்மோராவைப் பூமிக்குள் புதைத்துவிட தங்களால் முடியுமா?

யோசித்துக் கொண்டே மந்திரங்களை முணு முணுத்துக் கொண்டிருந்த பக்கீர் கண்களைத் திறந்தான்.

அதற்குள் ஸ்ரீதர் உள்ளே போனான். எலும்புக் கூடாய்ப் படுத்திருந்த மகளை ஒரு நிமிடம் பார்த்தான். மெதுவாகக் குனிந்து நெற்றியில் முத்தம் பதித்துவிட்டு, "குறைந்து விடும் கண்ணம்மா... இன்னும் இரண்டே நாள் அவ்வளவுதான்" என்றான்.

காற்று அசைந்தது போல் ஓசை... யாரோ சிரித்தது போல்.

வெளியே வந்தான். சாரதா ஹாலில் நின்று கொண்டிருந்தாள். இருவர் பார்வையும் சந்தித்துக் கொண்டன. ஒருவருமே பேசவில்லை. அவர்களுடைய எண்ணங்கள் நேர்மாறானவை. பேசுவதற்கு எதுவும் இல்லை. வேதனையைத் தவிர, வாதங்களுக்கு அது நேர மில்லையென்று இருவருக்கும் தெரியும். வேண்டிய தெல்லாம் மகளின் உயிர் பிழைப்பது மட்டும்தான்.

ஸ்ரீதர் வெளியில் வந்தான். சாரதா படியில் நின்று கொண்டிருந்தாள். அவள் முகம் உணர்ச்சியற்று இருந்தது. ஸ்ரீதர் காரிலிருந்து கையை ஆட்டினான். அவள் அப்படியே சலனமில்லாமல் நின்றிருந்தாள்.

பிஸ்தாவுக்குப் போவதற்காகக் கார் அம்பு போல் கேட்டைத் தாண்டிச் சென்றது. பின்னாடியே ஆள் உயரத் திற்குத் தூசி கிளம்பியது.

புதருக்குப் பின்னாலிருந்து வெளியில் வந்த கறுப்புப் பூனை ஒன்று சாலையில் நடுவில் நின்றுகொண்டு, கார் சென்ற திசையையே பார்த்தது. ஒரு நிமிடத்திற்குப் பிறகு அதுவிகாரமாய்க் கத்தியது. தாயின் பிணத்தின் அருகில் சின்னக் குழந்தை அழுவதுபோல் அந்தக் கத்தல் எதிரொ லித்தது.

26

"உண்மையிலேயே ஆறாவது அறிவு என்று ஏதாவது இருக்கிறதா?" –ஜெயதேவ் கேட்டார்.

"இருக்கோ இல்லையோ தெரியாது. ஆனால் விஞ் ஞானம் அதை ஒப்புக் கொள்ளாது" –பண்டிட் சொன்னார்.

"உள்ளுணர்வு எச்சரிப்பதை ஆறாவது அறிவு என்று எடுத்துக் கொள்ளலாம் இல்லையா. உதாரணமாய் நேரமாகி விட்டதென்று பரபரப்புடன் ஸ்டேஷனுக்குப் புறப்படுவோம். மனதில் ஏதோ ஒரு மூலையில் தோன்றும், இன்று ரயில் தாமதமாய் வரப்போகிறது என்று. அதே போல் நாம் போய்ச் சேரும் போது ரயில் தாமதமாக வருகிறது. இப்படி நிறைய உதாரணங்களைச் சொல்ல முடியும். சில நாள் மனம் ஏதோ போல் இருக்கும். ஏதோ கெட்ட செய்தி வரப் போகிறது என்று தோன்றும். அன்றோ, மறுநாளோ நெருங்கின உறவினரின் மரணச் செய்தியோ, உடல்நலக் குறைவோ தந்தி மூலம் தெரிகிறது. அதுதான் ஆறாவது அறிவு என்பது"– ஜெயதேவ் விளக்கினார்.

பண்டிட் சிரித்தார். "அதுதான் ஆறாவது அறிவு என்று வைத்துக் கொண்டால் விஞ்ஞானம் அதற்குச் சுலபமாய்ப் பதில் சொல்லிவிடும். உதாரணமாய் ரயில் தாமதமாக வரும் விஷயத்தையே எடுத்துக் கொள்வோம். இதில் இரண்டே சான்ஸுகள் தான் இருக்கின்றன. ரயில் நேரத்திற்கு வருவது, வராமல் இருப்பது. அதாவது நாம் நினைத்தது நடப்பதற்கு ஐம்பது சதவீதம் வாய்ப்பு இருகிறதென்று அர்த்தம். நினைத்தது நடந்துவிட்டால் நமக்கு ஏதோ அபூர்வ சக்தி இருக்கிறதென்று பிரமையில் ஆழ்ந்து விடுகிறோம். நடக்காதவற்றைச் சுலபமாக மறந்து விடுவோம்."

ஜெயதேவ் சற்று நேரம் அமைதியாக இருந்துவிட்டு, பிறகு சொன்னார்.

"இருக்கலாம். ஆனால் என் ஆறாவது அறிவு இன்று என் உயிரைக் காப்பாற்றியது பண்டிட்."

"எப்படி?"

"இதோ இதைப் பார்த்ததுமே உங்களுக்குச் சந்தேகம் வரவில்லையா?" என்று டிராயரிலிருந்து பாட்டிலை எடுத்தார்.

"என்னது இது?"

"ஆஃப்டர் ஷேவ் லோஷன். இதில் பொட்டாஷியம் சயனெட் கலக்கப்பட்டிருக்கிறது."

பண்டிட் திகைப்புடன் வாயடைத்துப் போனவராய் நின்றுவிட்டார்.

"மைகாட்!" என்றார். எதிரியின் சாமர்த்தியம் புரிந்த போது அவருக்கு அதிர்ச்சியாக இருந்தது.

"உங்களுக்கு எப்படி சந்தேகம் வந்தது?"

"அதான் சொன்னேனே ஆறாவது அறிவுன்னு. நேற்றிரவு யாரோ என் அறைக்குள் நுழைந்திருக்கிறார்கள். சாமான்கள் சற்றே கலைந்திருப்பது போல் சந்தேகம் ஏற்பட்டது. அதை முதலில் பொருட்படுத்தவில்லை. இதோ... இதைப் பாருங்கள்..." என்று பாட்டிலைக் குப்புறக் கவிழ்த்தார்.

பாட்டிலின் அடிபாகத்தில் சிறிய காகிதத் துண்டு ஒட்டப்பட்டிருந்தது.

"சயனட் பிடியிலிருந்து கூட தப்பி விட்டாய் போலும். வாழ்த்துக்கள். பரமபத சோபானத்தில் இன்னும் ஒன்பது பாம்புகள் இருக்கின்றன.

—பிள்ளை

"ஒன்பது நாட்களுக்கு ஒன்பதுகண்டங்கள் இருக்கும் போலிருக்கே" என்றார் பண்டிட்.

"நாட்கள் ஒன்பது இல்லை. எட்டுதான். இன்றைய தினத்து அபாயம் இன்னும் வரவில்லை" –ஜெயதேவ் சிரித்தார்.

அதற்குள் ஃபோன் ஒலித்தது.

ஜெயதேவ் குனிந்து ஃபோனை எடுக்கப் போனார்.

"ஸ்டாப்!" என்ற வார்த்தை பண்டிட்டின் வாயில் இருந்து அவரையும் அறியாமல் வெளிப்பட்டது.

அவர் அப்படிக் கத்தியதும் திடுக்கிட்ட ஜெயதேவ் ரிசீவர் மீது வைத்திருந்த கையை எடுத்துவிட்டார்.

"டெலிஃபோன் ஒலிக்கும் ஓசையில் ஏதோ வித்தியாசம் இருப்பதுபோல் தெரியவில்லை?" –பண்டிட் கேட்டார்.

ஜெயதேவ் கவனமாய்க் கேட்டுவிட்டு, குழப்பம் அடைந்தவராய், "ஆமாம், எதனால் இப்படி?" என்றார்.

பண்டிட் பேசவில்லை.

* * *

இரண்டே நாள்களில் துளசியின் நிலைமை மேலும் மோசமாகிவிட்டது. பைத்தியம் பிடித்தவளைப் போல் நடந்து கொள்ளத் தொடங்கினாள். தலைவாரிக் கொள்வது, குளிப்பது எல்லாவற்றையும் விட்டுவிட்டாள். ஒரு காலத்தில் சுறுசுறுப்பாக இருந்த பெண் இவள்தானா என்று சந்தேகம் ஏற்படும் விதமாக இருந்தாள்.

அன்று விடியற்காலை நான்கு மணிக்கே எழுந்து தலைக்குக் குளித்துவிட்டு துளசி மாடத்தைச் சுற்றி, பிரதட்சணம் செய்யத் தொடங்கினாள். எட்டு மணியாகியும் நிறுத்திய பாடில்லை. வலுக்கட்டாயமாக உள்ளே

அழைத்துச் சென்று அறைக்குள் தள்ளி கதவைத் தாழிட வேண்டி இருந்தது. உள்ளே அவள் செய்த ரகளையினால் அறையில் இருந்த பொருட்கள் நாலாபக்கமும் சிதறின.

பிறகு கொஞ்சம் நேரத்தில் உணர்ச்சித் துடிப்பு அடங்கி அமைதி அடைந்தாள்.

சாப்பிடும் போது, "இன்னும் கொஞ்சம் போட்டுக் கொள் துளசி" என்றாள் சாரதா.

"வேண்டாம்" என்றாள் துளசி.

"இன்னும் கொஞ்சம் சாப்பிட்டால்தான் உடம்பு கொஞ்சமாவது தேறும், எப்படியிருந்தவள் எப்படியாகி விட்டாய் தெரியுமா"– சாரதா வார்த்தையை இன்னும் முடிக்கவில்லை. துளசி தன் எதிரில் இருந்த தட்டை பலம் கொண்ட மட்டும் வீசி எறிய அது முன்னறையில் தொங்கிக் கொண்டிருந்த அலங்கார சரவிளக்கைத் தாக்கி விட்டுக் கீழே விழுந்தது.

'சிலீர்' என்ற ஓசையுடன் சரவிளக்கு கீழே விழுந்து உடைந்தது. கண்ணாடித் துண்டுகள் நாற்புறமும் சிதறின.

துளசி நாற்காலியை விட்டு எழுந்தாள். தன் அறையை நோக்கி ஓட்டமெடுத்தாள். உடைந்த கண்ணாடித் துண்டு கள் மீது காலடி எடுத்து வைத்து ஓடிக் கொண்டிருந் தாள். நாலாவது அடியைத் தாண்டும் பொழுது இரத்த அடிச்சுவடுகள் சிவப்பாய் தரையில் பதிந்தன.

* * *

"என் மகள் துளசிக்குத் தரப் போகும் ஷாக் ட்ரீட் மெண்ட் விளைவுகள் எனக்குத் தெரிவிக்கப்பட்டன. நான் மனப்பூர்வமாக சிகிச்சைக்குச் சம்மதிக்கிறேன்."

. சாரதா காகிதத்தைப் படித்துவிட்டு கையெழுத் திட்டாள். துளசிக்கு எட்டு மணி நேரமாய்ச் சாப்பிட எதுவும் கொடுக்கப்படவில்லை. அதற்கு முன்பு அவளுக் குச் சில சோதனைகளை செய்து முடித்தார்கள்.

ஷாக் கொடுக்கும் சமயத்தில் நாக்கையும், உதட்டை யும் கடித்துக் கொள்ளாமல் இருக்க பற்களுக்கிடையே பாண்டேஜ் துணிவைக்கப்பட்டது.

கட்டில்மீது துளசியைப் படுக்க வைத்தார்கள். அவள் கை கால்கள் கட்டிலுடன் பொருத்தப்பட்டிருந்த பெல்டு களுடன் இணைக்கப்பட்டன.

துளசியின் கன்னங்களில் எலக்ட்ரிக் கனெக்ஷன் பொறுத்தப்பட்டது.

என்ன நடக்கிறதென்று துளசிக்குத் தெரியாது. எல்லாம் சரியாக இருக்கிறதா என்று இறுதியாக ஒரு முறை சரிபார்த்துவிட்டு வெங்கட் ஸ்விட்சைப் போட்டார்.

ஒரு விநாடியில் இருபதில் ஒரு பங்கு நேரம் ஐம்பது சைகின்ஸ் ஆல்டர்னேட்டிங் கரெண்ட் 90 லிருந்து 220 வோல்டிற்கு இடையே திடீரென்று அந்த உடம்பில் நுழைந்து உலுக்கிவிட்டது. அந்த அதிர்ச்சிக்குத் துளசியின் உடல் காற்றில் எகிறிக் குதித்தது. அந்தக் காட்சியைக் கண்ட சாரதாவால் வேதனையைத் தாங்க முடியவில்லை.

வலியால் துளசியின் முகம் கோணியது. ஆடிக் கொண்டும் துள்ளித் திரிந்து கொண்டும், தன் கண்முன் விளையாடிக் கொண்டிருந்த தன் மகள், அந்த வலியைத் தாங்க முடியாமல் தவிப்பதை, குறைந்தபட்சம் அந்த வலியை வெளிப்படுத்தவும் வழியின்றி சிறைப்படுத்தப் பட்டு, அந்தச் சிறையிலிருந்து மீளுவதற்காகத் துடிதுடித்துக் கொண்டிருப்பதை அந்தத் தாய் மனதில் கொந்தளிக்கும்

உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு மௌனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"முடிந்து விட்டது" வெங்கட் கனெக்ஷன்களை எடுத்துக் கொண்டே சொன்னார்.

அரை மணி கழித்து வழக்கமான பரிசோதனைகள் செய்த பிறகு நோயாளியை டிஸ்சார்ஜ் செய்தார்கள். நோயாளியின் மனநிலையில் எந்த மாறுதலும் இல்லை.

* * *

"அதுதான் பிஸ்தா கிராமம்" என்றான் ஸ்ரீதர்.

பக்கீர் கண்களைத் திறந்தான். அவன் கண்கள் சிவப்பாய் இருந்தன. ஒருமித்த மனதுடன் மந்திரத்தை ஜெபித்து வந்ததில் பக்கீரின் முகத்தில் ஒரு விதமான தேஜஸ் கூடியிருந்தது.

"ஊருக்குள் போவானேன்? காரை இங்கேயே நிறுத்தி விட்டு சுற்றிக்கொண்டு போகலாம், இன்னும் நாலு மணி நேரம்தான் இருக்கிறதே" –ஸ்ரீதர் சொன்னான்.

பக்கீர் மௌனமாய்க் கீழே இறங்கினான். ஆணிகள் அறைந்த பலகையும், விக்கிரகத்தையும், தோல் பையையும் பிடித்துக் கொண்ட அவன் கை லேசாக நடுங்கிக் கொண்டிருந்தது.

காரின் கதவுகளை லாக் செய்துவிட்டு பக்கீரைப் பின் தொடர்ந்தான் ஸ்ரீதர். அந்த இடம் முழுவதும் குப்பையும் கூளமுமாய் நிரம்பியிருந்தன. புதர்கள் மண்டிக் கிடந்தன. தொலைவில் பிஸ்தா கிராமத்தின் விளக்குகள் மினுக் மினுக் கென்று தென்பட்டன. ஊரைச் சுற்றிக் கொண்டு மறுபக்கமாய் மயானத்திற்குள் நுழைந்தார்கள்.

பதினோரு ஆண்டுகளுக்கு முன்னால் போன வழி. அப்பொழுது எப்படி இருந்ததோ இப்பொழுதும் அப்படியே இருந்தது. மேலும் குப்பைகள் அதிகமாய்ச் சேர்ந்ததுதான் வித்தியாசம்.

இருவரும் மயானத்திற்குள் நுழையும்போது பக்கீர் கேட்டான்:

"காத்ராவைக் கொன்ற இடம் நினைவிருக்கிறதா?" ரொம்ப நேரம் கழித்து பக்கீர் வாயைத் திறந்து பேசிய பேச்சு அது.

ஸ்ரீதர் குழப்பத்துடன் சுற்றிலும் நோக்கினான். எல்லா இடமும் ஒன்று போல் தென்பட்டன. நினைவுபடுத்திக் கொள்ளமுயற்சி செய்து தோல்வியுற்றவனாய்த் தலை யைப் பலமாக ஆட்டினான்.

"இந்த இடத்தில் தான் எங்கேயோ..." என்றான்.

"பரவாயில்லை" என்றான் பக்கீர்.

ஸ்ரீதர் வாட்சைப் பார்த்துக் கொண்டான். மணி எட்டரை ஆகப் போகிறது. இன்னும் மூன்று அல்லது நான்கு மணி நேரம்தான்.

அவனுக்குத் திடீரென்று சந்தேகம் வந்தது.

"பக்கீர்!" என்று அழைத்தான்.

மயானத்தைப் பார்வையால் துளாவிக் கொண்டிருந்த பக்கீர் ஸ்ரீதரைத் திரும்பிப் பார்த்தான்.

"காஷ்மோரா துயிலெழப்போவதை மிகப் பயங்கர மாக வர்ணித்தாயே! இங்கே இத்தனை அமைதியாக இருக்கிறதே? நம் கணக்குதான் தவறா?"

"கணக்குத் தவறாக இருக்க வழியில்லை" –பக்கீர் மறுபடியும் தன் வேலையில் மூழ்கிவிட்டான். ஸ்ரீதருக்கு மேற்கொண்டு என்ன செய்வதென்று புரியவில்லை. ஜேபியிலிருந்து சிகரெட் பாக்கெட்டை எடுத்து சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான்.

வானத்தில் வட கிழக்கு மூலையிலிருந்து யானையின் மேனியைக் காட்டிலும் கறுப்பாய் மந்த கதியில் ஊர்ந்த ஒரு சிறிய மேகமானது, படகைப் போல் வேகமாய் மிதந்து வந்து கொண்டிருப்பதை அந்த இருவருமே கவனிக்கவில்லை.

* * *

டெலிஃபோன் மணி இன்னும் ஒலித்துக் கொண்டே இருந்தது.

"நான்சென்ஸ். இப்படிப் பயந்து கொண்டே எத்தனை நேரம் இருப்பது? பார்த்து விடலாம் என்ன ஆகுமென்று?" என்றார் ஜெயதேவ்.

"தொடாதீர்கள். நான் பார்க்கிறேன்" என்று எழுந்தார் பண்டிட். குனிந்து அதன்மீது ரப்பர் விரிப்பை விரித்தார். ரிசீவரைக் கவனமாய் உயர்த்தி டெஸ்டரால் பரிசோதனை செய்தார். அதில் மின்சாரம் எதுவும் பாயவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு ரப்பர் விரிப்பை அகற்றிவிட்டு கையிலிருந்த ரிசீவரைப் பரிசீலிப்பது போல் நோக்கினார். கவனமாக மௌத் பீஸைத் திறந்தார். சிறிய ப்ளாஸ்டிக் துண்டு ஒட்டைகள் இருந்ததை வெளியில் எடுத்தார். பிறகு காதில் வைத்துக் கொள்ளும் பகுதியைப் பிரித்தார். அதில் இருக்க வேண்டிய கார்டை காணவில்லை.

இருவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள். மாக்னெடிக் காயில்களுக்கு இடையே இங்க் பில்லரைப் போன்ற பிளாஸ்டிக் பம்ப் ஒன்றிருந்தது. மௌத் பீஸை மறுபடியும் பரிசீலித்தார். கையில் பிடித்துக் கொள்ளும் குழாய் போன்ற பகுதிக்குள் சிறிய லீவர் ஒன்று பொருத்தப்பட்டிருப்பதைக் கவனித்தார்.

"இதென்னது?" என்ற வார்த்தை ஜெயதேவின் வாயிலிருந்து வெளியில் வந்ததும் அந்த அலைகள் தாக்கியது போல் பண்டிட்டின் கையிலிருந்த ரிசீவர் லேசாய் அசைந்தது.

'ஸ்ஸ்' என்ற ஓசையுடன் ரிசீவரின் மேல்புறத்திலிருந்து ஒரு திரவமானது வெளிவந்தது. பண்டிட் அதை மேல் நோக்கிப் பிடித்துக் கொண்டிருந்தால் திரவம் மேலே பீச்சியடித்து, மின் விசிறியில் தெறித்து அறை முழுவதும் சிந்தியது. எதிர்பாராத இந்த விளைவினால் திடுக்கிட்டு விட்டார்கள் இருவரும்.

சுற்றிக் கொண்டிருந்த மின்விசிறியிலிருந்து டப் டப் என்று ஒவ்வொரு சொட்டாய் கீழே சொட்டிக் கொண்டிருந்த திரவத்தைப் பார்த்து இருவரும் கற்சிலையாகி விட்டார்கள்.

முதலில் தேறிக் கொண்ட பண்டிட் குனிந்து திரவத்தை சோதித்துப் பார்த்தார்.

"என்னது?"

"எண்ட்ரின்" என்றார் பண்டிட். "ரிசீவரை எடுத்ததுமே லீவர் செயல்படுவது போல் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஹலோ என்ற ஒலி அலை வந்ததுமே லீவர் இங்க் ஃபில்லர் ஸிஸ்டத்தால் திரவத்தைக் காதில்

பீச்சியடிக்கும். அது செவிப்பறையை கிழித்துக் கொண்டு போய் மூளை நரம்பைப் பிளந்து ஆளைக் கொன்றுவிடும். "ஹலோ" என்ற வார்த்தைக்குப் பதில் "என்னது" என்ற வார்த்தை ஒலித்ததும் லீவர் செயல்பட்டுவிட்டது. இதையே காதின் அருகில் வைத்துக் கொண்டிருந்தால்..." பண்டிட் பாதியிலேயே நிறுத்திக் கொண்டார்.

என்ன நடந்திருக்கும் என்று இருவருக்கும் தெரியும்.

27 பன்னிரண்டரை மணிக்குச் சரியாக பதினைந்து நிமிடங்கள் இருந்தன. ஸ்ரீதரின் பதட்டம் அதிகரித்துக் கொண்டிருந்தது. பக்கீர் பயப்படுவது ஏன் என்று அவனுக்குப் புரியவில்லை. பக்கீர் வேக வேகமாய் மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருந்தான். விக்கிரகத்தை மேலும் அழுத்தமாக நெஞ்சோடு அணைத்துக் கொண்டிருந்தான். அடிக்கடி சுற்று முற்றிலும் பார்வையிட்டுக் கொண்டிருந்தான். ஸ்ரீதர் கேட்ட எந்த கேள்விக்கும் பதிலளிக்கவில்லை.

ஸ்ரீதர் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொள்ள தீக்குச்சியை கொளுத்தினான். குச்சி அணைந்துவிட்டது. மறுபடியும் மறுபடியும் பற்ற வைக்க முயன்ற போது நெருப்புக் குச்சி எரிந்து சட்டென்று அணைந்து கொண்டிருந்தது. அப்பொழுதுதான் அவன் கவனித்தான். காற்று வேகமாக வீசிக் கொண்டிருந்தது. யோசனையில் ஆழ்ந்திருந்தவன் அதுவரை அதைக் கவனிக்கவே இல்லை மரங்கள் வேகமாய் ஆடிக் கொண்டிருந்தன. அண்ணாந்து வானத்தைப் பார்த்தவன் திடுக்கிட்டான்.

ஒரு நட்சத்திரம்கூட இருக்கவில்லை. எப்பொழுது சூழ்ந்து கொண்டதோ தெரியவில்லை. கரிய மேகங்கள்

திரண்டு வானத்தை மூடியிருந்தன. தெற்குப் பக்கம் பார்த்த பொழுதுதான் புரிந்தது, பிஸ்தா கிராமத்து விளக்குகள் யாவும் அணைந்து விட்டிருந்தன.

அவன் உடம்பு ஏனோ சிலிர்த்தது. மறுபடியும் நேரத்தைப் பார்த்துக் கொண்டான். பன்னிரண்டடிக்க பன்னிரண்டு நிமிடங்கள் இருந்தன.

தலையில் மழைத்துளி பொட்டென்று விழுந்தது. ஒரு நிமிடம் போவதற்குள் படபடவென்று மழை பலமாகப் பெய்யத் தொடங்கியது. கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தான். பக்கீர் தென்படவில்லை.

"பக்கீர்!" என்று கத்தினான். குரலை உயர்த்தி மறு படியும் அழைத்தான். தொலைவிலிருந்து ரொம்ப பலவீன மான குரலில் பதில் வந்தது.

ஸ்ரீதர் அந்தப் பக்கமாய் ஓடினான். காதைச் செவிடாக்குமாறு இடியோசை! மின்னல் வெளிச்சத்தில் பக்கீரைக் கண்டவன் நடுங்கிவிட்டான். பக்கீர் தலையி லிருந்து மழைநீர் வழிந்து கொண்டிருந்தது. கேசங்கள் அலையலையாய் காற்றில் பறந்து கொண்டிருந்தன. குனிந்து ஆணியை அடித்துக் கொண்டிருந்தான்.

காற்றும், மழையும் பலமாய் இருந்தன. பக்கீரின் கையில் ஆறு ஆணிகள் தீர்ந்துவிட்டன. இன்னும் இரண்டு தான் பாக்கி. பன்னிரண்டடிக்க இன்னும் மூன்று நிமிடங்களே இருந்தன.

திடீரென்று காற்று நின்றுவிட்டது. காற்றுடன் மழை யும் நின்றுவிட்டது. இயற்கையே ஸ்தம்பித்து விட்டது போல் ஒடுங்கி நின்று விட்ட அந்த நிசப்தத்தைக் கண்டு பக்கீர்கூட மிரண்டிருக்க வேண்டும். வெளிறிப்போன முகத்துடன் வானத்தை நிமிர்ந்து நோக்கினான்.

தெற்கு மற்றும் தென் கிழக்குத் திசையில் அறைய வேண்டிய ஆணிகள் எஞ்சி இருந்தன. இருவரும் தெற்குத் திசையை நோக்கி நகர்ந்தார்கள். முன்னால் பக்கீர் போய்க் கொண்டிருந்தான். ஸ்ரீதர் அவனைத் தொடர்ந்தான்.

"இந்த விக்கிரகத்தைப் பிடித்துக் கொள்"— பக்கீர் சொன்னான்.

ஸ்ரீதர் புரியாதவனாய்க் குழப்பத்துடன் அதைத் தொட்டான். குருடன் கைத் தடியைப் பிடித்துக்கொண்டு நடப்பது போல் இருவரும் அதைப் பிடித்துக் கொண்டு நடந்து கொண்டிருந்தார்கள்.

"எந்தச் சூழ்நிலையிலும் விக்கிரகத்தை விட்டு விடாதே" —பக்கீர் சொன்னான். துளசி தீர்த்தம் அடங்கி இருந்த தோல் பையை வெளியில் எடுத்தான். மந்திரத்தை சொல்லிக் கொண்டே நடந்தான்.

மந்திர ஒலியை தாங்க மாட்டாதது போல் மேகம் உருமியது. பக்கீரும் குரலை உயர்த்தி மந்திரத்தை உச்சரித்துக் கொண்டிருந்தான். பன்னிரண்டடிக்க இன்னும் ஒரு நிமிடம் இருந்தது. மயானத்தின் வடக்குப் பக்கம் சிவப்பாய் ஏதோ மின்னியதை ஸ்ரீதர் கவனித்தான்.

"ஸ்ரீதர்! வேகமாய் ஓடு. நேரம் இல்லை."

பக்கீரும் வேகத்தை அதிகரித்தான். விக்கிரகத்தைப் பிடித்துக் கொண்டு ஓடுவது கஷ்டமாக இருந்தது. தென் கிழக்கு மூலையில் ஆணியைத் தரையில் வைத்து விட்டு உள்ளங் கையை கல்லாக்கிப் பூமியில் ஓங்கி அறைந்து கொண்டிருந்தான். கையிலிருந்து இரத்தம் வழிந்ததைப் பக்கீர் பொருட்படுத்தவில்லை. இரத்தத்துடன் நனைந்த ஆணி பூமியில் இறங்கியது. ஸ்ரீதர் அதைப் பார்க்கவில்லை. சிவப்பாகத் தெரிந்த ஒளியையே வியப்புடன் பார்த்துக்

கொண்டிருந்தான். அதென்னது? இத்தனை மழையில் அது எப்படி வந்தது? மின்மினிப் பூச்சிகளின் கூட்டமாக இருக்குமோ? ஒளி சிறிது சிறிதாக முழுமையடைந்து அசையத் தொடங்கியது. இல்லை... இல்லை... அசைய வில்லை... பிரமைதான்.

தென் கிழக்கு முடிந்துவிட்டது. இனி எஞ்சியது தெற்குப் பக்கம் மட்டுமே.

விக்கிரகத்தைக் கையில் பிடித்துக் கொண்டே ஆணியைப் பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீதர் அதன்மீது அறை விபம்சத்தம் கேட்காததால் பக்கீரைப் பார்த்தான்... கற்சிலையாகி விட்டான்.

ஏதோ சக்தியானது வளைப்பது போல் பக்கீர் பின்னால் சாய்ந்து கொண்டிருந்தான். அவன் வாயி லிருந்தும், மூக்கிலிருந்தும் இரத்தம் ஒழுகத் தொடங்கியது.

ஸ்ரீதர் ஒரே பாய்ச்சலில் எழுந்து கொள்ளப் போனான். காற்று திடீரென்று வலுத்து அவனைப் பின்னால் தள்ளிவிட்டது. பலத்தையெல்லாம் திரட்டிக் கொண்டு முன்னால் வரப் போனான். சாத்தியப்பட வில்லை.

அதற்குள் பக்கீரின் உடல் காற்றில் எழும்பியது. நீச்சலடிப்பவனைப் போல் காற்றில் கைகளைத் துழாவினான். ஏதோ சொல்ல முயன்று, யாரோ வாயை அழுத்திப் பிடித்துக் கொண்டது போல் வாயிலிருந்து வார்த்தைகள் வரவில்லை.

ஸ்ரீதருக்குச் சட்டென்று ஏதோ புரிவது போல் இருந்தது. கையிலிருந்த விக்கிரகத்தைப் பக்கீரிடம் கொடுப்பதற்காக முன்னால் நீட்டினான்.

டமார் என்று வானமே பிளந்துவிட்டது போல் இடி ஓசை. காற்று மிக விநோதமாய் இருவரையும் இருவேறு திசைகளுக்குத் தள்ளத் தொடங்கியது.

"போய் விடு... ஓடு..." பக்கீரின் குரல் தெளிவில்லாமல் கேட்டது.

ஸ்ரீதர் விக்கிரகத்தைப் பக்கீரின் உடலில் படுமாறு முயன்று கொண்டிருந்தான். ஏதோ சக்தி அவனைத் தள்ளிக் கொண்டிருந்தது. பக்கீரின் உடல் காற்றில் சுழன்று கொண்டிருந்தது. வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படும் மனிதனைப் போலிருந்தான். வாயிலிருந்து இரத்தத்தைக் கக்கினான்.

"விக்கிரகத்தை விட்டு விடாதே... ஓடிப் போய்விடு"— பக்கீர் சொன்னதை ஸ்ரீதர் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. தனக்காக வந்தவன் பக்கீர். அவனைக் காப்பாற்றுவது தன் கடமை என்று நினைத்தான். விக்கிரகத்தை அவன்மீது வீசி எறிவதற்கு முயன்றான்.

"முட்டாளே... இங்கிருந்து ஓடி விடு"

மேலும் இரத்தத்தைக் கக்கினான் பக்கீர். அடர்த்தி யான புழுதி திரையைப் போல் மேலே எழும்பியது. ஸ்ரீதர் கண்களை மூடிக் கொண்டான்.

அடுத்த நிமிஷம் அவன் கண்களைத் திறந்த போது எதிரே பக்கீர் இருக்கவில்லை. ஸ்ரீதரின் கால்கள் தரையில் பதியவில்லை. கையில் அழுத்தமாய்ப் பிடித்துக் கொண்ட விக்கிரகம்தான் தன்னைக் காப்பாற்றுவது போல் இருந்தது. படித்த படிப்பும், விஞ்ஞானமும் அந்த இடத்தில் வாதத்திற்கு நிற்கவில்லை.

வானமே இடிந்து தலையில் விழுந்து விட்டாற்போல் இடி இடித்தது. சிவப்பாய் ஒரு கதிர் வானத்திலிருந்து அம்பாய் ஊடுருவிப் பாய்ந்தது. ஆல மரமொன்று பெருத்த ஓசையுடன் இரண்டாய்ப் பிளந்து விழுந்தது. கிளைகள் எரிந்து கருகிவிட்டன. பக்கீரின் மரண ஓலம் காற்றில் கலந்துவிட்டது.

* * *

ஸ்ரீதருக்கு விழிப்பு வந்த போது நண்பகலாகி இருந்தது. சூரியனின் கதிர்கள் செங்குத்தாய்ப் பூமியில் விழுந்து கொண்டிருந்தன. ஊசியால் குத்துவது போல் உடல் முழு வதும் வலித்தது. புதர்களுக்கு நடுவில் தான் விழுந்து கிடப்பதை உணர்ந்தான். மார்பின்மீது விக்கிரகம் அப்படியே இருந்தது.

அவன் கஷ்டப்பட்டு உடலைச் சுவாதீனத்திற்குக் கொண்டு வந்து எழுந்தான். முதல் நாள் இரவு நிகழ்ந்த பிரளயத்தின் அடையாளங்கள் அப்படியே இருந்தன. இடி விழுந்து கருகிப்போன மரம், கால்வாயாய் ஓடிக் கொண்டிருந்த மழை நீர்... உடைந்த மரக் கிளைகள் யுத்தம் முடிந்த போர்க்களம்போல் காட்சியளித்தது.

அவன் மெதுவாய் நடந்து மயானத்தை விட்டு வெளியில் வந்தான். அவன் மனதில் வெறுமை சூழ்ந்து கொண்டது. எத்தனை உற்சாகத்துடன் வந்தானோ, அத்தனைச் சோர்வுடன் திரும்பிப் போய்க் கொண்டிருந் தான், துணையாய் வந்த பக்கீரைக் காஷ்மோராவின் கோரப்பிடிக்கு அர்ப்பணித்துவிட்டு.

காரை, மரங்களுக்கிடையில் நிறுத்தியிருந்தான். அவன் அதை நெருங்கியபோது, அதையே பார்த்துக் கொண்டிருந்த மாடு மேய்க்கும் சிறுவர்கள் இருவரும்

பயந்து தொலைவுக்கு ஓடினார்கள். அழுக்கடைந்த ஆடைகள்... தூசி படிந்த உடல்... பார்ப்பதற்கு ஸ்ரீதர் பைத்திக்காரனைப் போல் இருந்தான்.

காரில் அமர்ந்து கொண்டு மயானத்தைப் பார்த்தான். பக்கீரின் நினைவு வந்ததும் மனம் வேதனையால் நிரம்பியது. பதினோரு வருடங்களுக்குமுன் தன் மகளைக் காப்பாற்றிய பக்கீர், அவனுக்குத் தன் மரணத்தைப்பற்றி முன்பே தெரிந்திருக்கும்போலும். இருந்தும் உயிரைத் துச்சமாக மதித்து முயற்சி செய்திருக்கிறான். கண்ணீர் துளி ஒன்று ஸ்ரீதரின் கண்களிலிருந்து உருண்டு கன்னத்தில் வழிந்தது.

இன்னும் ஆறு நாட்கள்தான் தன் மகள் இறப்பதற்கு. அதை யாராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது. இருந்த ஒரு ஆதாரமும் போய்விட்டது. அவன் கைகள் ரோஷத்தாலும், ஆவேசத்தினாலும் ஸ்டியரிங்கைப் பலமாகப் பற்றின.

கடைசி நேரத்திலாவது மகளிடம் இருக்க வேண்டும். அவன்கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டான். மதியம் இரண்டு மணி. கைக் கடியாரத்தில் தேதியைப் பார்த்தவன் திடுக்கிட்டான். அவன் கண்களை அவனாலேயே நம்ப முடியவில்லை. காஷ்மோரா துயில் கலைந்த இரவுக்குப் பிறகு இரண்டு நாட்கள் முடிந்துவிட்டன.

அதாவது... கிட்டத்தட்ட அறுபத்து இரண்டு மணி நேரமாய்த் தான் நினைவின்றி இந்த மயானத்தில் கிடக்கிறேனா—பசி, தாகம் எதுவும் தெரியாமல்! இம்பாஸிபிள்.

கடியாரம் காட்டிக் கொண்டிருந்த தேதி உண்மை என்ற பட்சத்தில் துளசியின் மரணத்திற்கு இன்னும் நான்கு நாட்களே பாக்கி.

ஸ்ரீதர் இக்னீஷனைத் திருப்பினான். இரண்டு மூன்று முயற்சிகளுக்குப் பிறகு கார் கிளம்பியது. குண்டுங் குழியு மான பாதையைக் கடந்து ஊரை நோக்கிப் புறப்பட்டது.

* * *

ஜெனரல் ஆஸ்பத்திரியில் 'இன்டென்ஸிவ் கேர்' பகுதியில் நம்பூதிரியின் மனைவி உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தாள். இளைத்துத் துரும்பாகிவிட்டாள். அவளது உடலை விட்டுப் பிரிய துடித்துக் கொண்டிருந்த உயிரைத் தடுத்து நிறுத்துவதற்காகப் பாடுபட்டுக் கொண்டிருந்தார்கள், டாக்டர்கள்.

நோயாளி இறப்பது நிச்சயம் என்று டாக்டர் களுக்குத் தெரிந்துவிட்டது. நம்பூதிரியின் மாமனார் ஆஸ்பத்திரி வராண்டாவில் நடை பயின்று கொண்டிருந் தார். அவர் முகம் உறுதியுடனும், சலனமற்றும் இருந்தது. உள்ளே இருந்து வரப்போகும் செய்திக்காக நம்பூதிரி காத்திருந்தான். அவன் உடைகள் கசங்கி இருந்தன. சரியான உறக்கம் இல்லாததால் கண்கள் குழி விழுந் திருந்தன.

அவனுக்கு நூறடி தொலைவிலிருந்து புதருக்குப் பின்னால் தார்க்கா மறைவாக நின்றிருந்தான். பாதாளக் குட்டிப் பிரயோகத்தில் முதல் முயற்சிக்கு வித்திட்டாகி விட்டது என்று தெரியும். இன்னும் சற்று நேரத்தில் நோயாளி டாக்டர்களுக்குப் புரிபடாத மயக்கத்தில் ஆழ்ந்து விடுவாள் என்பது உறுதி.

இனி அங்கே இருந்து செய்ய வேண்டியது எதுவும் இல்லை என்றெண்ணி தார்க்கா கிளம்பினான். அவன் கேட்டைத் தாண்டும் பொழுது தெருவில் ஒரு கார் அவனைக் கடந்து வேகமாய்ச் சென்றது. காரைப் பார்த்துத் திடுக்கிட்டான் அவன்.

அதே கார்!

சட்டென்று அவனுக்கு நினைவுக்கு வந்தது. சித்தேஸ் வரி மூன்று நபர்களைக் கொல்ல நினைத்த விஷயம். அதைப் பற்றி ஜெயதேவிடம் எச்சரிக்க வேண்டும் என்று நினைத்தான். தனக்கெதற்கு? பேசாமல் இருந்து விடலாமே என்றுகூடத் தோன்றியது. ஆனால் அந்த சித்தேஸ்வரிக்குத் தன் மீதும், துளசியின் மீதும் உள்ள பகைமை தெரியும். ஆனால் அந்த ஜெயதேவ் மீது என்ன கோபம் என்று தெரியவில்லை. அதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

நம்பூதிரி மனைவியின் மரணத்திற்கு எப்படியும் இன்னும் பன்னிரண்டு மணி நேரமிருக்கிறது. அதற்குள் ஜெயதேவைச் சந்தித்தால் என்ன?

துளசி சொன்ன விலாசத்தை நினைவுபடுத்திக் கொண்டு அவன் அந்த வீட்டை நோக்கிச் செல்லத் தொடங்கினான்.

* * *

ஜெயதேவ் சோபாவில் பின்னால் சாய்ந்து கண் களை மூடிக்கொண்டு யோசித்துக் கொண்டிருந்தார். நேற்று வரை ஆரோக்கியமாக இருந்த துளசி திடீரென்று இப்படி ஆகக் காரணம் என்ன? துளசியின் உடல் நலக் கோளாறுக்கும், பிள்ளைக்கும் ஏதாவது தொடர்பு இருக்குமோ? எத்தனை யோசித்தாலும் புரிபடவில்லை.

யோசனையில் ஆழ்ந்திருந்தவர் 'ஏர்கண்டிஷனர்' சற்று நேரம் நின்றுவிட்டு மீண்டும் ஓடத் தொடங்கிய தைக் கவனிக்கவில்லை. உள்ளே காற்றை அனுப்ப வேண்டிய இயந்திரம் அறையிலிருந்த காற்றை வெளி

யேற்றிக் கொண்டிருந்தது. சுமார் ஐந்து நிமிடங்கள் கழித்து அறையில் தெரிந்த மாறுபாட்டை உணர்ந்தார். உடம்பு முழுவதும் வியர்த்துக் கொட்டியது. 'ஏ.சி.' அருகில் போய்ப் பார்த்தார். நின்றுவிட்டாற்போலிருந்தது. மின் விசிறியைப் போட்டார். வேலை செய்யவில்லை. மின் சாரம் போயிருக்க வேண்டும்.

பின்னே 'ஏர்கண்டிஷனர்' ஏன் சத்தம் போடுகிறது? அவருக்குப் புரியவில்லை. மறுபடியும் அதனருகில் சென்று பார்த்தார். ரொம்ப அருகில் போனபோதுதான் அந்த விஷயத்தைக் கவனித்தார். அவருடைய சட்டையின் நுனியானது ஏர்கண்டிஷனரை நோக்கி இழுக்கப் படுவதை!

அதற்குள் அவருடைய உடல் வியர்வையால் தொப்ப லாக நனைந்துவிட்டது. மூச்சு விடவும் சிரமமாக இருந்தது. ஏதோ புரியத் தொடங்கியதும் உடல் நடுங்க சட்டென்று வாசலை நோக்கி ஓடினார். கதவை இழுத்துப் பார்த்த போது திறக்க வரவில்லை. பலமாக இரண்டு கை களாலும் பிடித்துத் தள்ளினார்.

மூச்சு விடமுடியாமல் செத்துப்போகப் போகிறோம் என்று அவருக்குத் தெரிந்துவிட்டது. அறையில் சூனியம் உண்டாவதால் உடலுக்குள், நுரையீரல்களுக்குள் இருக்கும் காற்று சருமத்தைக் கிழித்துக் கொண்டு வெளி யேறத் துடிக்கும். கண் முழிகள் வெளியில் தள்ளப்படும். அத்தனைப் பயங்கரமான சாவுயாருக்கும் வரக்கூடாது.

அவர் பலத்தையெல்லாம் திரட்டிக் கொண்டு தோளால் கதவை மோதினார். பலமான கதவுகள். அதற் குள் அவர் உடல் மாற்றங்களுக்கு உட்படத் தொடங்கி விட்டது. கால்கள் துவள தரையில் சரியப்போனபோது

வெளியே சந்தடி கேட்டது. வெளியிலிருந்து யாரோ கதவைத் தட்டினார்கள். அவருக்கு மீண்டும் உயிர் வந்தது போல் இருந்தது. 'ஸேவ் மீ' என்று கத்த முயற்சி செய்யும் போதே நினைவு தப்பிவிட்டது.

ஜெயதேவ்க்கு விழிப்பு வந்தபோது, அவர் சோபாவில் படுத்த நிலையில் இருந்தார். தலையைத் திருப்பிப் பார்த்த போது வாசற் கதவு உடைக்கப்பட்டிருப்பதைக் கண்டார். அவர் எழுந்து உட்காரப் போனபோது, எதிரே மேஜை மீது உட்கார்ந்திருந்த இளைஞனைக் கவனித்து, தன் உயிரைக் காப்பாற்றியது அவன்தான் என்று புரிந்து கொண்டார்.

"தாங்க்ஸ்" என்றார்.

"என்ன நடந்தது?" –அவன் கேட்டான்.

"என் உயிரை எடுப்பதற்காகச் செய்யும் இருபத்து நான்கு முயற்சிகளில் இதுவும் ஒன்று"– சிரித்துக் கொண்டே சொன்னார்.

"இப்படிச் செய்தது யார்? சித்தேஸ்வரியா?"

ஜெயதேவ் அதிர்ச்சியடைந்தவர்போல் சட்டென்று முன்வந்து, "சித்தேஸ்வரியை உனக்குத் தெரியுமா? நீ யார்?" என்று கேட்டார்.

"என் பெயர் தார்க்கா."

ஜெயதேவ் சிலையாகிவிட்டார். தார்க்கா... தார்க்கா. ஸ்ரீநிவாசப்பிள்ளை எச்சரித்தது இவனைப் பற்றித்தானா! "பகையைத் தீர்த்துக் கொள்வதற்காகப் பிஸ்தா கிராமத்தி லிருந்து வந்திருக்கும் தலைசிறந்த மந்திரவாதி தார்க்கா... அவன்தான் துளசியைக் கொல்லப் போகிறான்."

பிள்ளை சொன்னது நினைவுக்கு வந்ததும் ஜெயதேவின் கைப்பிடிகள் இறுகிக் கொண்டன. எப்படி இவனைச் சிறைப்படுத்துவது என்று யோசித்துக் கொண்டிருந்தார்.

ஜெயதேவின் முகத்தில் தென்பட்ட மாறுபாட்டைத் தார்க்கா கவனித்துக் கொண்டுதான் இருந்தான். இருந்தாலும் அவன் அந்த இடத்தை விட்டு நகரவில்லை.

"சித்தேஸ்வரி உங்களைக் கொல்லவேண்டும் என்று திட்டம் போட்டிருக்கிறான். என்னையும், துளசியையும் கூட" என்றான்.

அதைக்கேட்டதும் ஜெயதேவ் திடுக்கிட்டார். தார்க்கா மறுபடியும் சொன்னான்.

"சித்தேஸ்வரி ஒரு ஆண்."

"ஆமாம். அவனுடைய உண்மையான பெயர் ஸ்ரீநிவாசப் பிள்ளை. உண்மையைச் சொல்லு. அவன் துளசியைக் கொல்ல நினைத்திருக்கிறானா?"

"ஆமாம். நம் மூவரையும்தான். அதான் உங்களை எச்சரித்து விட்டுப் போகலாமென்று வந்தேன்."

"என் வீட்டு முகவரி உனக்கு எப்படித் தெரியும்?" ஜெயதேவின் சந்தேகம் இன்னும் தீரவில்லை.

"துளசி கொடுத்தாள்."

அவர் மேலும் வியப்படைந்தார். "துளசியா! அவளை உனக்கு நன்றாகத் தெரியுமா? அவள் உனக்குச் சிநேகிதியா?" என்று கேட்டார்.

'இந்த உலகில் எனக்குச் சிநேகிதி என்று யாராவது இருந்தால் அது துளசி ஒருத்திதான்' என்றெண்ணிக் கொண்டான். தார்க்காவின் உள்ளம் வேதனையால் நிரம்பி

விட்டது. அந்த உணர்ச்சிக்கு அர்த்தமில்லை. வேதனை மட்டுமே இருந்தது.

ஜெயதேவின் எண்ணங்கள் மின்னல் வேகத்தில் பயணித்தன. பிள்ளை தன்னைக் கொல்ல நினைப்பது அவருக்குத் தெரியும். இப்போது தார்க்கா சொல்வதைப் பார்த்தால் துளசியின்மீது கூட பிள்ளைக்குப் பகைமை இருப்பதாகத் தெரிகிறது. ஆமாம். சித்தேஸ்வரியாக இருந்த பிள்ளையின் ரகசியத்தை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தது துளசிதானே! தான் ஒரு முட்டாள். இத்தனை சிறிய விஷயத்தை யோசித்துப் பார்க்கவே இல்லை. பனி மூட்டம் விலகியதுபோல் ரகசியம் விடுபட்டுவிட்டது. பிள்ளை காஷ்மோரா பற்றிச் சொன்னது அதைப் பற்றியே நினைத்து வந்ததோடு துளசியின் மனநிலை பாதிக்கப் பட்டதற்குக் காரணம் காஷ்மோரா தானோ என்று நினைக்கும் நிலைக்கு வந்துவிட்டார். இப்போது தார்க்கா வின் உதவியால் இதற்குப் பின்னால் இருப்பவன் பிள்ளை தான் என்பது உறுதியாகிவிட்டது.

"கடைசியாக ஒரு கேள்வி. பிள்ளையைப் பற்றி உனக் கெப்படித் தெரியும்?"

"அவன் ஒருமுறை காஷ்மோராவைப் பற்றி என்னிடம் கேட்டான். அப்போது பார்த்திருக்கிறேன்."

"என்ன கேட்டான்?"

"துளசியை காஷ்மோரா எத்தனை நாளில் கொல்லும் என்று கேட்டான்."

"என்ன சொன்னாய்?"

"அப்போது இருபத்து நான்கோ, இருபத்தைந்து நாள் களோ என்று சொன்னதாக நினைவு. இப்பொழுதோ

சரியாய் நான்கு நாள்கள் தான் இருக்கு. சரியாய் நான் காவது நாள் இரவு பன்னிரண்டு மணிக்கு...”

ஜெயதேவின் முகத்தில் ரத்தம் வேகமாகப் பாய்ந்தது. அதுதானா விஷயம்! பூத சக்திதான் துளசியைக் கொன்று விட்டது என்று எல்லோரும் நம்பும் விதமாய்த் துளசி இறக்கப் போகிறாளா!

“பிள்ளை என்னைக் கொல்ல நினைத்திருப்பது உனக்கு எப்படித் தெரியும்?”

“அவன் வீட்டில் பார்த்தேன், இருபத்து நான்கு விதங்களில் உங்களைக் கொல்லப் போவதாய்த் திட்டம் போட்டு எழுதி இருந்த காகிதத்தை. அதனால்தான் உங்களை எச்சரிக்க வந்தேன். அதில் சில வார்த்தைகள் எனக்குப் புரியா விட்டாலும் நினைவு வைத்துக் கொண்டேன். காரில் கார்பன் டை ஆக்ஸைட்; ஃபோனில் எண்ட்ரின்...”

ஜெயதேவின் தாடை எலும்புகள் முறுக்கேறிக் கொண்டன. “என்னைப் பற்றி இல்லை. துளசி... துளசியைப் பற்றிச் சொல்லு. அவள்தான் ஆபத்தில் இருக்கிறாள். நீ, பிள்ளையின் வீட்டைப் பார்த்து இருக்கிறாயா? அவன் அடையாளங்களைச் சொல்லு.”

“அவன் பெயர் பிள்ளையா, இல்லையா என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவனுக்கு யாருக்கும் இல்லாத அடையாளம் ஒன்று இருக்கிறது.”

“என்ன அது?”

“தலையிலிருந்து வயர்கள் வெளியில் நீட்டிக் கொண்டு இருக்கும்.”

ஜெயதேவ் ஒரே பாய்ச்சலில் துள்ளிக் குதித்து "கமான்... க்விக்" என்று கத்தினார்.

"எங்கே, எதற்கு என்று கேட்காமல் தார்க்கா அவரைப் பின் தொடர்ந்தான். அடுத்த நிமிடம் இருவரும் காரில் இருந்தார்கள். தார்க்கா வழி சொல்லச் சொல்ல கார் பிள்ளையின் வீட்டை நோக்கி காற்றாய்ப் பறந்தது.

சிறிய போர்ட்டிகோவைச் சுற்றி செடி கொடிகள் படர்ந்திருந்தன. ஆளரவமில்லாத பங்களா. காம்பவுண்ட் சுவர் உயரமாய் இருந்தது.

தொலைவிலேயே காரை நிறுத்தி விட்டார் ஜெயதேவ். இருவரும் அந்த வீட்டையே ஒரு விநாடி நேரம் பார்த்த படி உட்கார்ந்திருந்தார்கள், எதிரியின் கோட்டையை முற்றுகையிடுவதற்குத் திட்டம் தீட்டும் சிப்பாய்களைப் போல். பிறகு இருவரும் மௌனமாய்க் காரை விட்டு இறங்கினார்கள். யாருக்கும் தெரியாமல் வீட்டிற்குள் நுழைவது தார்க்காவுக்குப் பழக்கப்பட்ட விஷயம். ஆனால் ஜெயதேவுக்கு முற்றிலும் புதுசு. அதைப் புரிந்து கொண்டாற்போல் தார்க்கா வீட்டின் பின்பக்கத்துக் காம்பவுண்டு சுவர் ஏறி உள்ளே குதித்தான். வயதாகி விட்டதால் சிரமமாக இருந்தாலும் தார்க்காவின் உதவி யுடன் ஜெயதேவும் சுவர் ஏறிக் குதித்தார்.

செடி கொடிகள் கன்னா பின்னாவென்று வளர்ந்து இருந்தன. யாரும் அதைப்பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. சத்தப்படுத்தாமல் இருவரும் பின் பக்கத் துக் கதவை அடைந்தார்கள். பல நாட்களாகத் திறக்கவே இல்லை போலும். எத்தனை முயன்றாலும் கதவைத் திறக்க முடியவில்லை.

தார்க்கா சற்று நகர்ந்து ஜன்னல் வழியாக உள்ளே பார்த்தான். உள்ளே மங்கலானவெளிச்சம். யாரும்

இருப்பது போல் தெரியவில்லை. சத்தம் போடாமல் இருவரும் முன் பக்கம் வந்தார்கள். வாசற் கதவு தாழிடப் பட்டு இருந்தது.

தார்க்கா சிறிய இரும்புக் கம்பியைப் பூட்டில் நுழைத்து லேசாக நெம்பினான்.

ஏன் எதற்கு என்று எதுவும் கேட்காமல் தார்க்கா தன்னைப் பின்பற்றியதும், தன் மனதிலிருப்பதைத் தான் சொல்லாமலே புரிந்து கொண்டு செயல்படுவதைப் பார்த்த ஜெயதேவுக்கு அவனை மிகவும் பிடித்து விட்டது.

தார்க்காவுக்கு இடது கண் பார்வையில்லை என்பதை ஜெயதேவ் கவனித்தாலும் அதைப்பற்றி விசாரிக்க இது தருணமில்லையென்று பேசாமல் இருந்தார்.

சிறிய ஓசையுடன் பூட்டு திறந்து கொண்டது.

"யாராவது வருதற்குள் நாம் வேலையை முடித்துக் கொள்ள வேண்டும்" – ரகசியமாகச் சொன்னார் ஜெய தேவ். தார்க்கா தலை அசைத்தான்.

கதவைத் திறந்து கொண்டு மெதுவாய் உள்ளே நுழைந்தார்கள். உள்ளே இருட்டாக இருந்தது. ஜெயதேவ் விளக்கைப் போட்டார். அந்த வெளிச்சத்தில் அறையைப் பார்த்ததும் திகைத்துப் போய் விட்டார்கள்.

அறையில் எந்தச் சாமானும் இருக்கவில்லை. வீட்டையே காலி செய்துவிட்டது போல் வெறுமையாய் இருந்தது.

முதலில் தார்க்காதான் கேட்டான். "என்ன செய்யலாம்?"

ஜெயதேவ் சற்று நேரம் மௌனமாய் இருந்துவிட்டு "தேடுவோம். ஏதாவது ஆதாரம் கிடைக்காமல் போகாது" என்றார்.

இருவரும் தேடத் தொடங்கினார்கள்.

"இதோ... இந்த இடத்தில்தான் துளசியின் படத்தைப் பார்த்தேன்"— ஹாலில் ஒரு மூலையைக் காண்பித்தான் தார்க்கா.

முன்காலத்தில் மந்திரவாதிகள் படங்களை வைத்துக் பூஜைகளைச் செய்வார்களாம். இதுவும் அப்படித்தான் இருக்குமோ... ஜெயதேவ் யோசிக்கலானார்.

"இந்த இடத்தில்தான் சதானந்த சக்ரவர்த்தியின் பிணத்தைப் பார்த்தேன்."

"சதானந்த சக்ரவர்த்தி யாரு?"

"சித்தேஸ்வரியின் சீடன். இறந்துவிட்டான்."

படுக்கை அறையில் தேடிய போது ப்ளக்கிற்குப் பக்கத்தில் பென்சிலால் எழுதப்பட்ட எண் ஒன்று தார்க்காவின் கண்ணில் பட்டது.

'11130'

அவன் ஜெயதேவிடம் அதைச் சொன்னதும் மேற் கொண்டு தாமதம் செய்யாமல் இருவரும் வெளியில் வந்து விட்டார்கள். ஐந்தே நிமிடங்களில் பப்ளிக் ஃபோன் பூத்தை அடைந்தார்கள்.

அந்த ஃபோன் நம்பர் ஏதோ பெரிய ரகசியத்தைச் சொல்லப் போகிறதென்று ஜெயதேவின் உள்ளுணர்வு உணர்த்தியது. நடுங்கும்விரல்களால் டயல் செய்தார்.

மறுமுனையில் ஃபோன் மணிஅடித்த சத்தம். அரை நிமிடம் கழித்து யாரோ ரிசீவரை எடுத்த ஓசை. பிறகு ரொம்ப நிதானமாய், மெதுவாய் ஒலித்தது அந்தக் குரல்.

"ஹலோ வெங்கட் ஹியர்."

ஜெயதேவின் கையிலிருந்த ரிசீவர் அவரையும் அறியாமல் நழுவி கீழே விழுந்தது.

* * *

"இதுவரையில் மூன்று தடவை ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுத்து விட்டோம். பலன் எதுவும் தெரியவில்லை. நாளுக்கு நாள் நிலைமை மோசமாகிக் கொண்டு வருகிறது. டாக்டர்! இந்த மருத்துவம்... விஞ்ஞானம் எல்லாமே எல்லாமே பொய். பூத சக்திகள் இருப்பது ஒன்றுதான் உண்மை என்று ஒரு வார்த்தை சொல்லுங்கள் போதும் என் மகளைக் காஷ்மோராவின் கரங்களுக்கு அர்ப் பணித்து விட்டு கைகழுவி விடுகிறோம்" ஹோ வென்று கதறினாள் சாரதா.

வெங்கட் எதுவும் சொல்லவில்லை. கலங்கிய கண் களுடன் துளசியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

துளசி ஸ்கிப்பிங் ஆடிக் கொண்டிருந்தாள் ஹாலுக்கு நடுவில்.

இரண்டு நாட்களாய் அவள் நடவடிக்கைகள் ரொம்ப விநோதமாய் இருந்தன. ரிக்ரெஷன் அதிகரித்து விட்டது. படித்த படிப்பு, அறிவு எல்லாமே மறந்துவிட்டாள். சொப்பு சாமான்களை வைத்துக் கொண்டு சமையல் செய்து விளையாட ஆரம்பித்தாள். காகிதத்தில் பென்சி லால் ஏ, பி, சி, டி எழுதினாள். வாய்ப்பாடு, கூட்டல், கழித்தல், கணக்குகளைப் போட்டாள்.

மகளின் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது சாரதாவுக்குப் பைத்தியம் பிடித்துவிடும்போல் இருந்தது. ஸ்ரீதர் இன்னும் திரும்பி வராதது அவள் கலக்கத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது. பேச்சுத் துணைக்கு நம்பூதிரியும் இல்லை. தனிமை அவளைப் பயமுறுத்தியது. கொஞ்சமாவது தைரியம் சொல்லக் கூடியவர் வெங்கட் ஒருவர் தான். அவரும் தன்னால் முடிந்த அளவுக்குச் சிகிச்சை செய்து கொண்டுதான் இருக்கிறார்.

"காஷ்மோரா" என்ற சொல் சாரதாவின் மனத் துணிச்சல் மீது பாதிப்பை ஏற்படுத்தியது. இப்பொழுதும் அவள் பூத சக்திகளை நம்புவதாக இல்லை. ஆனால் மகளின் உயிருக்குச் சம்பந்தப்பட்ட பிரச்சினை இது. மகள் நிஜமாகவே பூத சக்திகளால் இறக்க நேர்ந்தால் அந்த வேதனை அவளை வாழ்நாள் முழுவதும் துரத்திக் கொண்டே இருக்கும். மகளுக்காக இந்த விஷயத்தில் அவள் மௌனத்தைக் கடைப்பிடித்தாள்.

மந்திரவாதி ஒருவன் வந்து வீட்டைச் சுற்றி எலுமிச்சம் பழங்களை அறுத்தெறிந்து விட்டுப் போனான். இன்னொரு மந்திரவாதி காலையிலேயே துளசியை மஞ்சள் தண்ணீரால் குளிக்கச் செய்து, கோழியை அறுத்து, துளசியின் தலை முடியில் மூன்று முடிச்சுகளைப் போட்டான். மாலைவரை அதை அவிழ்க்க வேண்டாம் என்று சொல்லி விட்டுப் போனான்.

வருவோர், போவோருக்கு இடையில் துளசியின் பைத்தியம் இன்னும் அதிகமாகிவிட்டது. யாரும் இல்லாத நேரமாகப் பார்த்து பூஜை அறையில் மண்ணெண்ணையை ஊற்றி கொளுத்தினாள். எல்லோரும் வருவதற்குள் படங்கள் எரிந்து சாம்பலாகிவிட்டன.

முதல் நாள் தலைக்குக் குளித்துவிட்டு கடவுளைச் சிரத்தையோடு வணங்கிய மகள், மறுநாள் இப்படி நடந்து கொள்வது சாரதாவைத் திடுக்கிட வைத்தது.

அநுபவசாலியும், மனோதத்துவ சாஸ்திரத்தைக் கரைத்துக் குடித்தவருமான வெங்கட்டிற்கே துளசியின் ஸ்திரமில்லாத மனநிலையைப் புரிந்துகெள்ள முடிய வில்லை. துளசி ஸ்கிஜோஃப்ரெனியாவால் பாதிக்கப் பட்டிருக்கிறாள் என்றாலும் அதன் விளைவுகள் இவ்வளவு தீவிரமாய் இருப்பானேன் என்று அவருக்குப் புரிய வில்லை. துளசிக்கு அளிக்கும் சிகிச்சையில் தான் தோற்றுக் கொண்டிருக்கிறோம் என்று அவருக்குப் புரிந்தது.

அதனால்தான் சாரதா அவர் முன்னிலையில் கண் கலங்கியபோது அவர் மனமும் இளகிவிட்டது.

"என்னால் முடிந்தவரை முயற்சி செய்கிறேன். இன்னும் இரண்டு நாட்கள் பார்த்துவிட்டு மெண்டல் ஆஸ்பத்திரியில் சேர்த்துவிடலாம்" என்றார். தோல்வி தந்த வேதனையால் அவர் முகம்வாடியிருந்தது. தலையைக் குனிந்துகொண்டு வெளியில் வந்தார்.

அவரைத் தொடர்ந்து வந்த சாரதா திண்ணையில் நின்றாள்.

"டாக்டர்!"

அவர் படிகளில் நின்றார். மங்கலான வெளிச்சத் தில் அவர் முகத்தில் வேதனை படிந்திருப்பது நன்றாகத் தெரிந்தது.

"துளசிக்குக் குணமாகிவிடுமா டாக்டர். உண்மை யைச் சொல்லுங்கள். நான் எதுவும் நினைத்துக் கொள்ள மாட்டேன்."

அவர் ஒரு விநாடி மௌனமாய் இருந்துவிட்டுப் பிறகு சொன்னார்.

"துளசி என் உயிருக்குச் சமம். என் உயிரே போனாலும் சரி. துளசியைக் காப்பாற்றுவேன். உலகமே எதிர்த்து நின்றாலும் சரி"— அவர் விடுவிடு என்று தன் வீட்டை நோக்கி நடந்து போனார். அவர் முகத்தில் உறுதி பிரதிபலித்தது.

* * *

மாலை ஆறு மணி. மேகங்கள் சூழ்திருப்பதால் அதற்குள் இருட்டி விட்டது. குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது.

தன் வீட்டுக் கதவு திறந்து கிடப்பதை வெங்கட் கவனிக்கவில்லை. துளசியைப் பற்றி யோசித்துக் கொண்டே அவர் உள்ளே நுழைந்தார். ஹாலுக்குள் அடி எடுத்து வைத்த பிறகுதான் அவருக்குக் கேட்டது ஜெய தேவின் கம்பீரமான குரல்.

"குட் ஈவினிங் பிள்ளை. ரொம்ப நாட்களுக்குப் பிறகு சந்தித்துக் கொள்கிறோம்."

வெங்கட்டுக்குத் தூக்கி வாரிப் போட்டது. சட்டென்று பின்னால் நகர்ந்து கொண்டார். வாசலில் நிழல் படிந்ததைக் கவனித்து, பின்னால் திரும்பினார்.

கதவைச் சாத்திவிட்டு குறுக்கே நின்று கொண்டிருந்தான் தார்க்கா!

வெங்கட் இருவரையும் பார்த்துவிட்டு ஜெயதேவிடம் கேட்டார். "என்ன இது புரொபசர்?"

"நடிக்கத் தேவையில்லை மிஸ்டர் பிள்ளை."

"பிள்ளையா! யாரது?" வெங்கட் வியப்புடன் கேட்டார்.

அவர் குரலில் தென்பட்ட நேர்மை ஜெயதேவைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. அதற்குள் தார்க்கா வெங்கட்டை நெருங்கி அவருடைய கழுத்துப் பகுதியைச் சோதித்து விட்டு, "இவர் சித்தேஸ்வரி இல்லை" என்றான்.

வெங்கட்டுக்கு இதெல்லாம் வியப்பாக இருந்தது; கூடவே கோபமும் வந்தது.

"இதென்ன அநியாயம்? என் வீட்டில் நுழைந்து என் மீதே..." என்று ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார்.

ஜெயதேவ் அதைக் காதில் வாங்கிக் கொள்ள வில்லை. வெங்கட், பிள்ளை இருவரும் வேறு நபர்கள் என்று புரிந்துவிட்டது. பிள்ளையின் வீட்டில் வெங்கட்டின் ஃபோன் நம்பர் எழுதி இருந்த காரணம் என்ன?

ஜெயதேவ் தன் எண்ணங்களை ஒதுக்கிவிட்டு, "வெங்கட்! இனிமேலும் உண்மையை மறைப்பதால் பிரயோஜனம் எதுவும் இல்லை. எங்களுக்கு எல்லாம் தெரிந்துவிட்டது. உங்களுக்கும் பிள்ளைக்கும் என்ன சம்பந்தம்? சொல்லுங்கள்" என்றார்.

"நான் ஃபோன் செய்யலாமா?" வெங்கட் கேட்டார்.

"எங்கே?"

அதற்குள் வெங்கட் டயல் செய்துவிட்டு "ஹலோ... போலீஸ் ஸ்டேஷன்" என்றார்.

ஜெயதேவ் விரலால் ஃபோன் தொடர்பைத் துண்டித்து விட்டு, "கோபம் வேண்டாம் டாக்டர்" என்றார்.

"பின்னே இதெல்லாம் என்ன?"

போலீசை அழைப்பவராக இருந்தால் வெங்கட் நிச்சயமாகப் பிள்ளை சம்பந்தப்பட்ட ஆள் இல்லை. ஆனால் இந்த விஷயம் மேலும் உறுதியாக வேண்டும். ஜெயதேவ் ஃபோனை எடுத்து அவசரமாய் டயல் செய்தார் வைசாக் டாக்டருக்கு. அடுத்த நிமிடமே அவர் லைனில் வந்தார்.

"ஹலோ டாக்டர். நான் ஜெயதேவ் பேசுகிறேன். ஒரு விஷயம் சொல்லுங்கள். டாக்டர் வெங்கட் என்பவர் உங்கள் ஆஸ்பத்திரியில் வேலை பார்த்து விட்டு சமீபத்தில் ஓய்வு பெற்றவரா?"

ஒரு விநாடி நிசப்தம்.

பிறகு வைசாக் டாக்டரின் குரல் கேட்டது.

"ஆமாம்."

ஜெயதேவின் சப்தநாடிகளும் தளர்ந்துவிட்டன. வெங்கட் உண்மையிலேயே சைக்ரியாடிஸ்ட் தான். அவருக்கும் பிள்ளைக்கும் தொடர்பு இருக்காது என்று தான் தோன்றுகிறது. பின்னே பிள்ளையிடம் இவருடைய ஃபோன் நம்பர் இருப்பானேன்?

தார்க்கா கிளம்ப முற்பட்டதைக் கவனித்துவிட்டு ஜெயதேவ் நிமிர்ந்தார். 'வெளியே போகலாம்' என்பது போல் ஜாடை காட்டினான் தார்க்கா. இருவரும் வராண்டாவுக்கு வந்தார்கள். தார்க்கா சற்றுத் தயங்கி, "ஒரு சின்ன யோசனை, உங்களுக்கும் பிடித்திருந்தால்..." என்றான்.

"என்ன?"

"இந்த வெங்கட் என்பவர் என்ன செய்தார் என்று துளசியிடமே கேட்டால்?"

ஜெயதேவ்க்கு முதலில் புரியவில்லை. புரிந்ததும் சந்தோஷத்தால் விசிலடிக்கப் போனார். அந்த யோசனை சொன்னதற்குத் தார்க்காவைப் பாராட்டுவதுபோல் பார்த்தார்.

வெங்கட் எந்த மாதிரி சிகிச்சை தந்தார் என்று துளசியோ, சாரதாவோ சொல்லி விடுவார்கள். அதை வைத்துக்கொண்டு வெங்கட், பிள்ளை சம்பந்தப்பட்ட ஆளா இல்லையா என்று தீர்மானிக்க முடியும்.

தார்க்காவிடம் "வா... எதிர் வீட்டுக்குப் போவோம்" என்றவர் உள்ளே எட்டிப் பார்த்து விட்டு, "சாரி டாக்டர். நாங்க திரும்பி வரும் வரையிலும் நீங்க சிறையில் இருக்க வேண்டியதுதான்" என்று வெளியே கதவைத் தாழிட்டார்.

"வெளியே தாழ்ப்பாள் போடுவானேன்?" தார்க்கா கேட்டான்.

"நாம் போனதுமே வெங்கட் ஓடிப் போய் பிள்ளை யிடம் விஷயத்தைச் சொல்லிவிட்டால்?"

தார்க்கா சிரித்தான். "அதை வீட்டிலிருந்தே ஃபோன் செய்துகூடச் சொல்லலாமே" என்றான்.

நாக்கைக் கடித்துக் கொண்ட ஜெயதேவ் உள்ளே போய் ஃபோன் கனெக்ஷனை எடுத்து விட்டு,திரும்பி வந்தார். இருவருமே எதிர்வீட்டை நோக்கிச் செல்லும் போது ஜெயதேவ் கேட்டார்.

"உனக்கு இத்தனை விஷயங்கள் எப்படித் தெரியும்? உண்மையிலேயே நீ யார்? என்ன படித்திருக்கிறாய்?"

தார்க்கா பதிலளிக்கவில்லை. அவனுக்கு இராம சாஸ்திரியின் நினைவு வந்தது. அவன் மௌனமாய் இருந்ததைக் கண்டு ஜெயதேவும் மேற்கொண்டு எதுவும் கேட்கவில்லை.

இருவரும் எதிர் வீட்டுக்கு போன போது அங்கு நிலைமை மிக மோசமாய் இருந்தது. துளசி சிறு குழந்தை யைப் போல் பெரிதாக அழுது கொண்டிருந்தாள். சாரதா கண்களில் நீர் வழிய அவளைச் சமாதானப்படுத்த முயன்று கொண்டிருந்தாள். வீட்டில் இருந்த பொருட்கள் எல்லாம் சிதறிக் கிடந்தன.

"என்ன வேண்டுமாம்?" ஜெயதேவ் கேட்டார்.

அதுவரை தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்ட சாரதாவுக்கு ஜெயதேவைப் பார்த்ததும் துக்கம் பீறிட்டுக் கொண்டு வெளியில் வந்தது.

"அவளுக்குக் கவுன் வேண்டுமாம்"– விம்மும் குரலில் சாரதா சொன்னாள்.

"நோயாளியை இரிடேட் செய்யக்கூடாது சாரதா" அவள் கேட்டதைக் கொடுத்து விடுங்கள்."

"சின்னச் குழந்தைகள் போட்டுக் கொள்ளும்கவுன் தான் வேண்டுமாம். அவள் பதினாரு வயது குழந்தையாம். கவுன் அணிந்துகொண்டு ஸ்கூலுக்குப் போகணுமாம்"– துக்கத்தால் சாரதாவின் குரல் கம்மியது.

அந்த அறையில் ஊசி விழுந்தாலும் கேட்கும் அளவுக்கு நிசப்தம் நிலவியது. சாரதா தார்க்காவைப் பார்த்தாள். அவன் ஜெயதேவுடன் சேர்ந்து வந்ததைக் கண்டு அவளுக்கு வியப்பு ஏற்பட்டது. ஆனால் மகளைப் பற்றிய கவலை அதை விழுங்கிவிட்டது.

ஜெயதேவைப் பார்த்துவிட்டு துளசி என்ன நினைத்துக் கொண்டாளோ தெரியாது. தன் அறைக்குள் போய்விட்டாள்.

ஜெயதேவ் சாரதாவிடம் சொன்னார். "துளசி இப்படி நடந்து கொள்வதற்குக் காரணம் பேய் பிசாசு எதுவும் இல்லையென்றும், வேறு ஏதோ பலமான காரணம் இருக்கும் என்றும் நான் நம்புகிறேன். என் ஊகம் சரி யென்றால் இதற்குப் பின்னால் இருப்பவர் வெங்கட் என்று நினைக்கிறேன்."

"இல்லை" சட்டென்று சொன்னாள் சாரதா.

"அத்தனை கச்சிதமாய் எப்படிச் சொல்கிறீர்கள்?"

அந்தக் கேள்விக்கு அவளால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. என்னவென்று பதிலளிப்பாள்? அவள் மனம் உறுதியாகச் சொல்லிக் கொண்டிருந்தது, 'டாக்டர் வெங்கட் அப்படிப்பட்டவர் இல்லையென்று'– ஒரு முடி வுக்கு வந்தவள் போல் சொன்னாள்.

"டாக்டர் வெங்கட் அப்படிப்பட்டவர் இல்லை. அவர் தரும் சிகிச்சையில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அது ஏன் என்று கேட்டால் என்னால் பதிலளிக்க முடியாது. புரொபசர்."

அவள் குரலில் இருந்த உறுதியைக் கண்டு ஜெயதே வால் மேற்கொண்டு எதுவும் பேசமுடியவில்லை.

தார்க்காவின் யோசனைகள் வேறு விதமாக இருந்தன. அவன்துளசியைப் பார்த்து துடித்துப்போய் விட்டான். மிகக் குறுகிய காலத்தில்தான் எத்தனை மாறுபாடு! இரண்டு நாட்கள் முன்புதான் எழுந்திருந்த காஷ்மோரா இந்தப் பெண்ணின் உடல்மீது எத்தனை ஆதிக்கத்தைச்

செலுத்துகிறது? மந்திரவாதியான தார்க்காவின் கண்களுக்கு அந்தப் பாதிப்பு தெளிவாகத் தெரிந்தது. எப்படி இருந்த பெண் எப்படி ஆகிவிட்டாள்! சித்தேஸ்வரி கோவிலில் மான் போல் துள்ளிக் குதித்து கையைப்பற்றிக் கொண்டு ஓடியவள் இப்பொழுது முகத்தில் நகக் கீறல்களுடன்... எண்ணெய்ப் பசை காணாத தலை... வெறித்த பார்வையுடன் எலும்புக் கூடாய் காட்சி அளித்தாள்.

"சரி, நீங்கள் சொன்னது போல் வெங்கட் நேர்மையானவர் என்று நம்புகிறேன். ஆனால் நான் கேட்கும் சில கேள்விகளுக்குப் பதிலளியுங்கள்"— ஜெயதேவ் சாரதாவிடம் கூறியதைக் கேட்டு இவ்வுலகிற்கு மீண்டான் தார்க்கா.

சாரதா தலை அசைத்தாள்.

"வெங்கட் சம்பந்தப்பட்ட பொருட்கள் இந்த வீட்டில் என்னென்ன இருக்கின்றன? எதையும் விடாமல் சொல்லுங்கள்."

"இன்ஜெக்ஷன் பாட்டில்கள்... டானிக் பாட்டில்கள்."

ஜெயதேவ் ஒவ்வொன்றாக சோதிக்கத் தொடங்கினார். சாரதா மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். அதற்குள் தார்க்கா துளசியின் அறைக்குள் நுழைந்தான். கட்டில்மீது படுத்திருந்த துளசி சந்தடி கேட்டு வாசல் பக்கம் பார்த்தாள்.

இருவரின் பார்வையும் சந்தித்துக்கொண்டன. வெகு நாட்களுக்குப் பிறகு இரு சிநேகிதர்கள் சந்தித்துக்கொண்டால், அதில் ஒருவர் மற்றொருவரை அடையாளம் புரிந்து கொள்ள முடியாத நிலையிலிருந்தால் ஏற்படும் வேதனை தார்க்காவைச் சூழ்ந்து கொண்டது. அவன் துளசியை அணுகினான்.

யாராவது அருகில் வந்தாலே ரகளை செய்யும் துளசி தார்க்கா நெருங்கி வரும் போது அமைதியுடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் அவள் கண்களுக்குள் ஆழமாய்ப் பார்த்தான். அவனுக்கு அந்தக் கண்களில் தெளிவாய்த் தெரிந்தது காஷ்மோரா!

பாம்பு சீறுவது போல் துளசி 'புஸ் புஸ்' என்று மூச்சு விட்டுக் கொண்டிருந்தாள். அவன் மேலும் அருகில் வந்ததும் அவள் கட்டிலை விட்டு ஒரே பாய்ச்சலில் கீழே குதிக்கப் போனாள். அதை முன்பே ஊகித்தது போல் அவன் கைகள் காற்றில் உயர்ந்தன. அவள் அப்படியே இருந்துவிட்டாள்.

அவன் இதழ்கள் மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு இருந்தன.

"ஓ காஷ்மோரா! உன்னை எதிர்க்கும் சக்தி எனக்குக் கிடையாது. உன்னை வேண்டிக் கொள்கிறேன். அந்த வேண்டுதலில் கட்டளையும்அடங்கி இருக்கிறது. இந்தப் பெண்ணை உன்னோடு கூட்டிச் செல்வதற்கு முன்னால் துன்புறுத்தாதே. ஜுரத்தின் மூலமோ, திருஷ்டியின் மூலமோ, காற்றின் மூலமோ தொல்லையைத் தராதே. உயிரோடு இருக்கப் போகும் கொஞ்ச நாட்களை நிம்மதி யாக இருக்க விடு. இது வேண்டுகோள். மந்திரக் கட்டளை."

துளசி மெதுவாய் உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டாள். அதுவரை ஏதோ வலியிருந்தது நீங்கிவிட்டது போல் அவள் முகம் தெளிவாக விளங்கியது.

வெளியில் ஜெயதேவ் மருந்து பாட்டில்களை எல்லாம் சோதித்து முடித்தார். எதுவும் கிடைக்கவில்லை.

சாரதா ஏதோ நினைவுக்கு வந்தவள் போல் "மஸ்கிட்டோ ரீபெல்லர் என்றாள். "துளசியின் பிறந்த

நாளன்று டாக்டர் வெங்கட் பரிசளித்தார். சுவரில் மாட்டி இருக்கிறோம்" என்று சுவர் பக்கம் பார்த்தாள் "அட... இங்கேதான் இருந்தது. இப்போ காணுமே?"

சுவரில் ரீபெல்லர் இருக்கவில்லை. துளசி அதை வேறு இடத்தில் வைத்து விட்டாளோ என்னவோ... ஆனால் துளசியோ அதைப் பற்றிச் சொல்லும் நிலையில் இருக்கவில்லை.

ஜெயதேவ் ஒரு முடிவுக்கு வந்தவர் போல் மறுபடியும் வெங்கட் வீட்டிற்குப் போனார். மூடிய அறைக்குள் வெங்கட் நடை பயின்று கொண்டிருந்தார்.

"எனக்குத் தெரிந்துவிட்டது. துளசிக்குப் பைத்தியம் பிடித்ததற்கான காரணம்" கதவைத் திறந்து கொண்டே சொன்னார் ஜெயதேவ்.

வெங்கட் பரபரப்புடன், "என்ன?" என்றார்.

"நீங்கள் கொடுத்த மஸ்கிட்டோ ரீபெல்லர்."

வெங்கட்டின் முகத்தில் ஏமாற்றம் சூழ்ந்து கொண்டது. 'இம்பாசிபிள்!' என்றார். "மஸ்கிட்டோ ரீபெல்லர்கள் மனிதனுக்குப் பைத்தியம் பிடிக்க வைக்கத் தொடங்கிவிட்டால் அதைத் தயாரிக்கும் கம்பெனிகளின் நிலைமை என்ன ஆகும்? மனிதனின் மூளை ஒன்றும் அவ்வளவு மென்மையானது இல்லை."

வெங்கட்டின் குரலில் இருந்த நாணயம் ஜெயதேவிற்குத் தெளிவாகப் புரிந்தது. தன் சந்தேகம் தவறாக இருக்கலாமோ என்ற எண்ணம் வந்தது அவருக்கு.

* * *

துளசி ஆழ்ந்த ஹிப்னாஸிஸில் இருந்தாள். அவளை மயக்கத்தில் ஆழ்த்துவதற்கு அரை மணி நேரமாய் ஜெய தேவ் முயற்சி செய்து கடைசியில் வெற்றி பெற்றார். மன நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எளிதில் ஹிப்னடைஸ் ஆக மாட்டார்கள்.

தார்க்காவும், வெங்கட்டும் பக்கத்தில் நின்று, ஜெயதேவ் துளசியைக் கேட்கப் போகும் கேள்விகளுக் காகக் காத்திருந்தார்கள். துளசி செய்யும் ரகளையினால் அமர்க்களப்படும் அந்த வீடு அந்தச் சமயத்தில் துரும்பு விழுந்தாலும் கேட்கும் அளவுக்கு நிசப்தமாயிருந்தது.

"உன் பெயர்?" ஜெயதேவ் துளசியிடம் கேட்டார்.

"காஷ்மோரா!" பாதி மூடியிருந்த துளசி கண்ணிமை களுக்குப் பின்னால் தெரிந்த வெள்ளை விழி பயங்கரமாக இருந்தது.

"வயது?"

"பதினோரு வயது."

"நீ எப்போ காஷ்மோராவானாய்?" தார்க்கா கேட்டான்.

வெங்கட் அவனை வியப்புடன் பார்த்தார். அந்தக் கேள்வி அர்த்தமற்றதாக அவருக்குத் தோன்றியது.

ஆனால் ஜெயதேவுக்குத் தார்க்காவின் கேள்வி புரிந்தது. "உன் குரலுக்கு அவள் பதிலளிக்க மாட்டாள்" புன்முறுவலுடன் தார்க்காவிடம் சொன்னவர் அதே கேள்வியைத் துளசியிடம் கேட்டார்.

வியப்பு தரும் விதமாய்த் துளசியிடமிருந்து "பத்து நாட்கள்" என்று பதில் வந்தது.

எல்லோரும் ஒருவர் முகத்தை ஒருவர் பாத்துக் கொண்டார்கள்.

ரிக்ரெஷன் மூலம் துளசியைப் ளபத்து நாட்களுக்கு பின்னோக்கி அழைத்துச் சென்றார் ஜெயதேவ்.

"உன் பெயர்?"

இந்த முறை "துளசி" என்றாள்.

சாரதாவின் முகம் மலர்ந்தது.

"அவள் இப்படி நடந்து கொள்வதற்குப் பின்னால் இருக்கும் காரணத்தைத் தெரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள்" வெங்கட் ஆலோசனை வழங்கினார்.

ஜெயதேவ் தலையசைத்து விட்டு, "கடவுள் இருக் கிறாரா?" என்று கேட்டார்.

"இல்லை" என்றாள் துளசி. "மதமும், கடவுளும் மனிதனை மயக்கத்தில் ஆழ்த்துபவை."

அவள் குரலில் முன்பிருந்த அதிகாரம் வெளிப் பட்டதை அங்கிருந்த எல்லோரும் கவனித்தார்கள்.

அவளை மேலும் கடந்த காலத்திற்கு அழைத்துச் சென்றார் ஜெயதேவ்.

"கடவுள் பெயரில் சித்தேஸ்வரி செய்த மோசடி களைப் பார்த்துவிட்டுத்தான் நீ இந்த முடிவுக்கு வந்தாயா?"

"சாமர்த்தியம் இருப்பவர் எல்லோரும் சித்தேஸ்வரி கள் தான்."

"எப்படிக் கண்டு பிடித்தாய்?"

"சித்தேஸ்வரியைப் பார்த்தேன். அவள் செய்த மோசடிகளைக் கண்டேன்."

அங்கே போன போது என்ன நடந்தது?" ஜெயதேவ் கேட்டார்.

"என் மோதிரத்தை உண்டியலில் போட்டு விட்டு, கேள்வியைக் கேட்டேன்."

"அப்போது என்ன நடந்தது?"

"மண்டையோடு பேசியது... மண்டை... ஓடு" துளசி ஹிப்னாடிக் ட்ரான்ஸில் இருந்த போதும் அந்த நிகழ்ச்சியை நினைத்து நடுங்கினாள்.

"பிறகு என்ன நடந்தது?"

"எனக்கு... நினைவு தப்பியது... அதன் பிறகு..."

"அப்போது என்ன நடந்தது?"

அந்தக் கேள்வியைக் கேட்டதும் துளசியின் உடல் நடுங்கத் தொடங்கியது. ஹிஸ்டீரியா வந்தவள் போல் கைப்பிடிகளை இறுக்கினாள். அவளை மறுபடியும் ஆழந்த உறக்க நிலைக்கு அழைத்துச் சென்றார் ஜெயதேவ். எல்லோரும் பார்வையாளர்களாய்ப் பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

வெங்கட், ஜெயதேவிடம் அப்போது ஏதோ நடந்திருக்க வேண்டும். அது தெரிந்தால் அவளுடைய மன நோய்க்கான காரணம் புரிந்துவிடும" என்றார்.

ஜெயதேவ் முகவாயைத் தடவிக் கொண்டார், மிக நுட்பமான விஷயம் இது. ஹிப்னாஸிஸில் நோயாளியின் மூளை ஓரளவுக்குத்தான் வசப்படும். விருப்பம் இல்லாத விஷயத்தைக் கேட்டால் அந்த மயக்கம் கலைந்துவிடும் ஆபத்தும் இருக்கிறது.

அவர் தயங்குவதைப் பார்த்து தார்க்கா" என்ன விஷயம்?"என்று கேட்டான்.

ஜெயதேவ் பிரச்சனையைச் சொன்னார்.

"நான் முயற்சி செய்து பார்க்கட்டுமா?" தார்க்கா கேட்டான்.

ஹிப்னாடிஸ்டும், சைக்ரியாடிஸ்டும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"உன்னால் முடியுமா?" ஜெயதேவ் கேட்டார்.

தார்க்காவுக்கு அது மிகச் சிறிய வித்தை. ஹிப்னாடிஸம் என்ற வார்த்தை மந்திரவாதிகளுக்குத் தெரியாவிட்டாலும், அவர்கள் கற்றுக் கொள்ளும் முதல் பாடமே எதிராளியின் மனதை வசப்படுத்திக் கொள்வது எப்படி என்றுதான். பேச்சால் எதிராளியை மயக்கத்தில் ஆழ்த்துவது, நாடிகளின்மீது பிரயோகம் செய்து மனிதனை உறக்கத்தில் ஆழ்த்துவது... இவையெல்லாம் அவர்களுக்குக் கை வந்த கலைகள்.

தார்க்கா துளசியின் கழுத்திற்கருகில் விரலால் லேசாக நரம்பை அழுத்திக் கொண்டே அவள் காதில் ஏதோ சொன்னான்.

அவனையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்த ஜெயதேவ், அவன் வேலை முடிந்ததும் மறுபடியும் கேள்வி கணையைத் தொடர்ந்தார்.

"சித்தேஸ்வரியின் கோவில் இடிந்து போவதற்கு முன் நீ இரண்டு முறை அங்கே போயிருக்கிறாய் இல்லையா?"

"ஆமாம்."

"முதல் முறை போன போது கேள்வியைக் கேட்டாய். சரிதானா?"

"ஆமாம்."

"பிறகு மண்டை ஓட்டுடன் பேசினாய்."

"மண்டையோடு என்னுடன் பேசியது" என்றாள் துளசி. இந்த முறை அவள் மயக்க நிலையில் மாறுபாடு தெரியவில்லை. ஜெயதேவ் தார்க்காவைப் பாராட்டுவது போல் பாாத்தார்.

"அப்புறம் என்ன செய்தாய்?"

"வீட்டிற்கு வந்த பண்டிட், ஜெயதேவ் அங்கிளிடம் சொன்னேன்."

"அவர்கள் என்ன சொன்னார்கள்?"

"எல்லாம் பிரமை என்றார்கள்."

"பிரமை இல்லையா?"

"இல்லை."

"உனக்கு எப்படித் தெரியும்?"

"நோட்டுப் புத்தகத்தில் பக்கங்களை எண்ணினேன். குறைவாக இருந்தது."

"அப்படி என்றால் எல்லாமே உண்மைதானா?"

"ஆமாம்."

"அப்புறம் என்ன நடந்தது?"

"எனக்கு மயக்கம் வந்துவிட்டது" என்றாள் துளசி. அவளிடம் மறுபடியும் அசைவு தெரிந்தது. ஆனால் ஏதோ சக்தி தடுத்து நிறுத்தினாற்போல உறக்கத்திலேயே ஆழ்ந் திருந்தாள்.

"நினைவு திரும்பியதும் நீ வராண்டாவில் எல்லோருடனும் சேர்ந்துதான் அமர்ந்திருந்தாயா?"

"இல்லை. இடையிலேயே விழிப்பு வந்து விட்டது... அதே அறையில்"

ஜெயதேவுக்கு இது புதிய சமாசாரம். அதற்கு முன்பு துளசி சொன்னது வேறு. அதனால்தான் எல்லாமே பிரமை என்று அடித்துச் சொல்லிவிட்டார்.

"அந்த அறையிலேயே இருந்தாயா?"

"மண்டை ஓடும் அருகில் இருந்தது."

"வேறு என்ன இருந்தது?"

"அறை முழுவதும் இருட்டு."

"அப்புறம்?"

"சக்ரவர்த்தி அருகில் வந்தான்."

பார்வையாளராய் இருந்த நான்கு பேரும் தங்களையும் அறியாமல் மூச்சை இறுக்கிப் பிடித்துக் கொண்டார்கள்.

"பிறகு?"

மௌனம்.

"பிறகு என்ன நடந்தது?" இரட்டிப்பதுபோல் கேட்டார் ஜெயதேவ்.

துளசியின் உடல் காற்றில் பறக்கும் சருகாய் நடுங்கியது. வியர்த்துக் கொட்டியது.

ஜெயதேவ் மீண்டும அதே கேள்வியைக் கேட்டார். "அறை முழுவதும் இருட்டாய் இருந்தது. உனக்கு விழிப்பு வந்தது; சக்ரவர்த்தி அருகில் வந்தான். பிறகுஎன்ன நடந்தது?"

"நான்... நான் கற்பழிக்கப்பட்டேன்."

துளசி வாயிலிருந்து அந்த வார்த்தை வெளிவந்ததும் எல்லோரும் சிலையாகி விட்டார்கள். அவள் தெளிவின்றி பேசத் தொடங்கினாள்.

"நான் கற்பிழந்து விட்டேன். நான்... நான் தாயாகப் போகிறேன். எனக்கு இது நாலாவது மாதம்."

அப்பொழுது யாரோ உரத்தக் குரலில் சிரித்த சத்தம் கேட்டது. எல்லோரும் குழப்பத்திலிருந்து விடுபடாத நிலையிலேயே தங்களையும் அறியாமல் திரும்பிப் பார்த் தார்கள். கசங்கிய உடைகளுடன், சேறு அப்பிய உடலுடன், பைத்தியக்காரனைப் போல் அங்கே நின்று இருந்தான் ஸ்ரீதர்.

அவனுடைய வெறி பிடித்த சிரிப்பும், வேதனை கலந்த அழுகையும் எல்லோருடைய உள்ளத்தையும் கசக்கிப் பிழிந்தது.

சாரதா நினைவு தப்பிய நிலையில் கீழே சரிந்தாள்.

28

வெங்கட் வீட்டில் மூவரும் அமர்ந்திருந்தார்கள்.

ஸ்ரீதருக்கு இன்ஜெக்ஷனைத் தந்து உறங்க வைத்தார்கள். ஸ்ரீதர் மிகவும் தளர்ந்து விட்டிருந்தான். இரண்டு நாட்களுக்கு முன்னால் பக்கீரின் மரணமும், வீட்டுக்குத் திரும்பியதும் துளசியைப் பற்றிய மோசமான செய்தியும் அவனை நிலைகுலையச் செய்துவிட்டன.

ஜெயதேவ் துளசியைப் பற்றி யோசித்துக் கொண்டு இருந்தார். அவருக்கு இரண்டு விஷயங்கள் வியப்பைத் தந்தன. ஒன்று தன்னை காஷ்மோரா என்று கூறிக்

கொண்டது, இரண்டாவது துளசியின் கற்பழிப்புக்கு காரணம் சதானந்த சக்ரவர்த்தி என்றால் இந்த விஷயம் பிள்ளைக்குத் தெரியாமல் இருப்பது.

ஒருகால் தெரிந்திருக்கலாமோ...

துளசி தன் வயிற்றில் வளரும் கருவைப் பற்றி யோசித்து யோசித்து அந்த வேதனையில், மன அழுத்தத்தில் ஸ்கிஜோஃப்ரெனிக் ஆகிவிட்டாள். தன் பெயர் காஷ் மோரா என்று சொல்வானேன்? அதன் காரணம் என்ன வாக இருக்கும்?

அதே அறையில் ஜன்னலுக்கருகில் நின்றிருந்த தார்க்காவின் யோசனைகள் வேறு விதமாக இருந்தன. அவனுக்குத் தெரியும் இன்னும் மூன்று நாள்களில் துளசி யைக் கொல்லப் போகும் காஷ்மோராவுக்கும், இப்போது அவளைப் பிடித்திருக்கும் பேய்க்கும் எந்தச் சம்பந்தமும் இல்லையென்று.

காஷ்மோரா போன்ற சக்தி வாய்ந்த பூத தேவதை கவுன், சொப்பு சாமான் போன்ற அற்ப பொருட்களைக் கேட்காது. சரியாக ஏழாவது நாளன்று சூறாவளிக் காற்றாய் வந்து விழுங்கிவிடும். அதை யாராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது.

துளசி சாகப் போவது உறுதியென்று தெரிந்தாலும் ஜெயதேவ் செய்யும் பிரயோகங்களைத் தார்க்கா ஆர்வத் துடன் கவனித்து வந்தான். மனிதர்களுக்கிடையில் இருக்கும் பந்தங்களை, பகையை அவன் உன்னிப்பாகப் பரிசீலித்துக் கொண்டிருந்தான்.

அப்பொழுது ஃபோன் ஒலித்தது.

ஜெயதேவ் எடுத்து "ஹலோ" என்றார்.

"டாக்டர் வெங்கட்!"

ஜெயதேவ் ஃபோனை வெங்கட்டிடம் கொடுக்க நினைத்து, சட்டென்று மனதை மாற்றிக் கொண்டு "ஸ்பீக்கிங்" என்றார்.

வெங்கட் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

மறுமுனையில் ஒரு விநாடி நிசப்தம். பிறகு ஸ்ரீநிவாசப் பிள்ளையின் குரல் கேட்டது.

"1966ல் போராட்டம்... ஆபரேஷன் சிக்ஸ்... ஆபரேஷன் சிக்ஸ்... பகவத் கீதை... பக்கம் அறுபது... ஓவர்."

டெலிஃபோனை வைத்து விட்ட ஓசை கேட்டது. ஜெயதேவ் ஒரு நிமிடம் செயலிழந்து விட்டதுபோல் ஆகி விட்டார். மற்ற இருவரும் அவரையே கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

தெளிவற்ற யோசனைகளுக்கு ஒரு உருவம் கொடுக்க ஜெயதேவ் முயன்று கொண்டிருந்தார். போஸ்ட் ஹிப்னாடிக் சஜெஷன்ஸில் மனிதனின் மூளையை எந்த அளவுக்குக் கண்ட்ரோல் செய்ய முடியும் என்பதைப் பற்றி அவர் யோசித்தார்.

"ஒரு முறை பகவத்கீதை புத்தகத்தை தர முடியுமா?" வெங்கட்டிடம் கேட்டார் ஜெயதேவ்.

"பகவத் கீதையா! எங்கள் வீட்டில் இல்லையே?"

வெங்கட் அப்படித்தான் சொல்வார் என்று ஜெயதேவுக்குத் தெரியும். "1996ல் போராட்டம். ஆபரேஷன் சிக்ஸ்..." என்று ஃபோனில் தான் கேட்ட வார்த்தைகளை அப்படியே சொன்னார் ஜெயதேவ்.

அதைக் கேட்டுவிட்டு வெங்கட் பேசாமல் இருந்தார். அவரிடம் எந்த மாறுதலும் ஏற்படவில்லை.

தன் குரல், பேச்சு வெங்கட்டைச் சற்றும் பாதிக்காது என்று ஜெயதேவுக்குத் தெரியும். வெங்கட்டின் மூளை குறிப்பிட்ட ஃப்ரீக்வென்ஸியில் வந்து கொண்டிருந்த ஒலி அலைகளுக்கு ஏற்றவாறு கண்ட்ரோல் செய்யப்பட்டு இருக்கிறது என்றும், வெளியில் சாதாரணமாகத் தென் படும் வெங்கட், அந்த ஆணைகளை அநுசரித்துச் செயல் படுகிறார் என்றும் ஜெயதேவுக்குப் புரிந்தது. அவருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. ஆபரேஷன் சிக்ஸ் என்றால் என்ன? பிள்ளை துளசியை இன்னும் எந்த விதத்தில் துன்புறுத்தப் போகிறான்?

எழுந்து ஜன்னலருகில் சென்றார். மனம் முழுவதும் சூனியமாகி விட்டிருந்தது. தன் கண்முன் ஆடிப்பாடித் திரிந்த துளசி தாயாகப் போகிறாளா? வெளி உலகிற்கு இது தெரிந்துவிட்டால்? வாழ்நாள் முழுவதும் அவள் துக்கத்தை அநுபவிக்க வேண்டியது தானா? அந்தக் குழந்தையை அவள் சுமப்பாளா இல்லை களங்கத்தைத் துடைத்தெறியும் முயற்சியில் மற்ற தாய் தந்தையர் மேற் கொள்ளும் வழியைப் பின்பற்ற கடந்த காலத்தை மறந்து போக முற்படுவாளா? கண்ணாடியால் செய்யப் பட்ட அழகான தாஜ்மகால் பொம்மை மீது கல்லை விட்டெறிய அந்தக் கயவனுக்கு எப்படித்தான் மனம் வந்ததோ? களங்கத்தை சுமந்து கொண்டு இந்தப் பெண் எஞ்சிய வாழ்க்கையை எப்படிக் கழிக்கப் போகிறாள்?

சராசரிப் பெண்ணைப் போல் கடந்தகால நிகழ்ச்சியை ஒரு கெட்ட கனவாக மறந்துவிட்டு வாழ்க்கையைத் தொடர துளசியால் முடியாது. வாழ்க்கையிடம் ஒரு ஸ்திரமான அபிப்பிராயம் அவளுக்கு இருந்தது. அதனால்

தான் மனதிலேயே குமுறிக் கொண்டிருக்கிறாள். இதை நினைத்து எத்தனை இரவுகள் உறக்கமின்றி வருந்தி இருப்பாளோ?"

வருத்தமும், குமுறலும் தாங்க மாட்டாமல் துளசி மன நோயாளியாகிவிட்டாள். இந்த மனநிலையில் தாயிடம் கடவுள் இல்லையென்று வாதாடி இருக்கிறாள். அவள்மனம் இரண்டாகப் பிரிந்தவிட்டது. சித்தேஸ்வரி மீது சாதித்த வெற்றிஅவளை நாஸ்திக வாதத்திற்கு அழைத்துச் சென்றதால், தான் இந்த நிலைக்குத் தள்ளப் பட்டதற்குக் காரணம் அந்தக் கடவுள்தான் என்று அவள் மனம் கர்ம சித்தாந்தத்தைப் பலமாக நம்பத் தொடங் கியது. இந்த மனப் போராட்டத்திற்குத் துணை புரிவது போல் கருவில் வளர்ந்து கொண்டிருக்கும் உயிர் அவளை மேலும் நிலைகுலைய வைத்து விட்டது. அதனால்தான் கடவுள் உண்டு என்றும் இல்லை என்றும் தனித் தனியாய் வாதம் புரியலானாள்.

திடீரென்று அவருக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வந்து உடல் நடுங்கியது.

"ஆபரேஷன் சிக்ஸ்."

துளசியின் வாழ்க்கையைத் தன் சீடனைக் கொண்டு நாசமாகக்கச் செய்து அவளை பைத்தியமாக்கியும் பிள்ளை யின் பழி உணர்வு இன்னும் அடங்கவில்லை போலும். அவளைக் கொல்வதே அவனுடைய எண்ணமாக இருக்க வேண்டும்.

எப்படியாவது அவனைத் தடுக்க வேண்டும். ஆபரேஷன் சிக்ஸ் என்றால் என்னவென்று கண்டு பிடிக்க வேண்டும்.

தார்க்கா அவருக்கு அருகில் வந்தான்.

"ஃபோனில் வந்த செய்தி என்ன?"

ஜெயதேவ், வெங்கட்டுக்குக் கேட்காதவாறு தான் கண்டு பிடித்த விஷயத்தைச் சொன்னார். ஃபோனில் ஒலித்த குரலுக்கு ஏற்றவாறு வெங்கட்டின் மூளை கண்ட்ரோல் செய்யப்பட்டிருப்பதையும் சொன்னார்.

எல்லாவற்றையும் கேட்ட பிறகு தார்க்கா ஒரு நிமிடம் யோசித்துவிட்டுச் சொன்னான். "அந்தக் குரலை என்னாலேயும் வெளிப்படுத்த முடியும்."

தார்க்காவின் அறியாமையைக் கண்டு ஜெயதேவ் சிரித்து விட்டார். "குரலைப் பின்பற்றிப் பேசுவது எளிது தான். ஆனால் அதே அலைவரிசையில் குரல் ஒலிக்க வேண்டும். வெங்கட்டின் மூளை, பிள்ளையின் குரலை மட்டுமே ஏற்றுக் கொள்ளும்."

தார்க்கா வெங்கட்டைப் பார்த்து, "எனக்கு ஒரு கண்ணாடி டம்ளரில் தண்ணீரும், சிறிது பஞ்சும் வேண்டும்" என்றான்.

வெங்கட் முதலில் ஆச்சரியப்பட்டாலும், மறுபேச்சு பேசாமல் அவற்றைக் கொண்டு வந்து தந்தார்.

தார்க்கா இருவரையும் காதுகளில் பஞ்சை அடைத்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, மேஜைமீது டம்ளரை வைத்து விட்டு அதையே பார்த்தவாறு மந்திரங்களை உச்சரிக்கத் தொடங்கினான்.

நிமிடங்கள் ஓடின. அவன் உதடுகள் அசைந்து கொண்டிருந்தன. ஏதோ நிகழ்வது போன்ற உணர்வு, மேலும் இரண்டு நிமிடங்கள் ஆனதும் 'டப்' என்ற ஓசையுடன் கண்ணாடி டம்ளர் உடைந்து போயிற்று.

பார்வையாளர்கள் இருவரும் அதிர்ச்சியடைந் தார்கள். வாயடைத்து விட்டதுபோல் நின்று விட்டார்கள்.

இன்ஃப்ராசானிக் சவுண்ட்ஸ்!

"ஸ்ரீநிவாசப் பிள்ளையின் குரலை என்னால் வெளிப் படுத்த முடியும்னு நினைக்கிறேன்"— தார்க்கா ஜெய தேவைப் பார்த்துச் சொன்னான்.

* * *

வெங்கட்டை அடுத்த அறையில் உட்கார வைத்து விட்டு ஜெயதேவ், தார்க்கா ஃபோன் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டார்கள்.

எந்த விநாடியும் ஃபோன் ஒலிக்கலாம். பிள்ளை நிச்சயமாகப் ஃபோன் செய்வான். அவன் சொல்லி முடிப்பதற்குள் அந்தக் குரலை மனதில் நன்றாகப் பதிய வைத்தக் கொள்ளவேண்டும். தார்க்கா டெலிஃபோனையே பார்த்துக் கொண்டிருந்தான். ஃபோன் வந்த பிறகு என்ன செய்ய வேண்டும் என்று ஜெயதேவ் தார்க்காவிடம் சொல்லி இருந்தார்.

ஸ்ரீநிவாசப்பிள்ளையிடம் தம் மூவரின் பெயர்களில் துளசியின் பெயரும் இருந்ததைக் கண்டு தார்க்கா முதலில் பொருட்படுத்தவில்லை. எப்படியும் இறக்கப் போகிறவள் தானே என்று நினைத்திருந்தான். ஆனால் சக்ரவர்த்தி அவள் வாழ்க்கையை நாசமாக்கியது, பிள்ளை மேலும் மேலும் அவளுக்குத் துன்பங்களை விளைவிப்பது கண்டு அவன் மனம் ஆவேசத்தால் கொந்தளித்தது.

அவனுடைய எண்ணங்களைச் சிதறடிப்பது போல், "ஃபோன் வரவில்லை என்றால் நாம் போட்ட திட்டம் எல்லாம் வீண்" என்றார் ஜெயதேவ்.

தார்க்கா கலக்கமடைந்து அவரை நிமிர்ந்து பாாத் தான். ஆமாம், விஷயம் எதுவும் சொல்லாமல் வெங் கட்டை அடுத்த அறையில் உட்காரச் சொல்வது உசித மல்லை. தார்க்கா ஏதோ சொல்ல முற்படும்போது ஃபோன் ஒலித்தது. இருவரும் தங்களை அறியாமலேயே திடுக்கிட்டார்கள்.

தார்க்கா ஃபோனை எடுத்தான்.

"டாக்டர் வெங்கட்!" மறுமுனையிலிருந்து கேட்டது.

"ஊம்."

"டிட்யூ கம்ப்ளீடெட் ஆபரேஷன் சிக்ஸ்?"

"கோன் ஹை ஆப்? யே தோ சேட் பட்வர்லால் கா கர் ஹை." (யார் நீங்கள்? இந்த வீடு சேட் பட்வர்லாலு டையது) தார்க்கா சொன்னான்.

ஃபோன் துண்டிக்கப்பட்டது. மறுபடியும் ஃபோன் வராமல் தார்க்கா ரிசீவரை எடுத்துக் கீழே வைத்து விட்டான். கண்களை மூடிக் கொண்டான். அறை முழு வதும் நிசப்தம் பரவியிருந்தது.

மனதை ஒருமுகப்படுத்தினான்.

மயானங்களில் கற்றுக் கொண்டது, குரு கற்றுக் கொடுத்தது. எத்தனையோ அமாவாசை இரவுகளில் நிர்மானுஷ்யமான மைதானங்களில் ஒளி அலைகளைப் பலவிதமாக மாற்றிக்கொண்டு, கொஞ்சம் தவறு நேர்ந்தாலும் எரியும் கொள்ளிக் கட்டையால் சூடு போடும் குரு... குளிரிலும், காற்றிலும் நடுங்கிக் கொண்டே செய்த சாதனைகள்...

தார்க்கா கண்களைத் திறந்தான். தன்னையே பார்த்துக் கொண்டிருந்த ஜெயதேவைப் பார்த்து சரி என்பது போல் புன்னகை செய்தான். ஜெயதேவ் நிம்மதியாக மூச்சைவிட்டுக் கொண்டார். தார்க்கா ரிசீவரைச் சரியாக வைத்துவிட்டு வேகமாய் வீட்டை விட்டுவெளியேறினான். ஜெயதேவ் வெங்கட் அருகில் சென்று 'நானும் கிளம்புகிறேன்" என்றார்.

"என்னதான் நடந்தது? ஏதாவது தெரிந்ததா?" என்று வெங்கட் கேட்டார்.

"எதுவும் தெரியவில்லை" எனக் கூறிவிட்டு வெளியேறிவிட்டார் ஜெயதேவ். ஆனால் அவர் போகவில்லை. வாசல் வழியாய் வெளியேறியவர் ஜன்னல் பக்கத்தில் நின்று கொண்டு மணியைப் பார்த்துக்கொண்டார்.

அதற்குள் தார்க்கா பப்ளிக் பூத்தை அடைந்து நம்பரை டயல் செய்தான்.

வெங்கட் வீட்டில் ஃபோன் ஒலித்தபோது ஜெயதேவின் இதயம் வேகமாகத் துடிக்கத் தொடங்கியது. தார்க்காவால் இதைச்சாதிக்க முடியுமா? முடியவில்லை என்றால் திட்டம் முழுவதும் வியர்த்தமாகி விடும்.

அதற்குள் வெங்கட் ஃபோனை எடுத்து "ஹலோ" என்றார்.

"டாக்டர் வெங்கட்?"

"ஸ்பீக்கிங்."

தார்க்காவின் குரல் மந்திர ஸ்தாபியில் ஒலிக்கத் தொடங்கியது. ஸ்ரீநிவாசப் பிள்ளையின் குரலில் ஒலித்த அதே லயம். "1966ல் போராட்டம். ஆபரேஷன் சிக்ஸ்.

பகவத்கீதை அறுபதாம் பக்கம்" என்று கூறிவிட்டு தார்க்கா ஃபோனை வைத்து விட்டான்.

வெங்கட் திரும்பினார். ஏதோ மயக்கத்தில் ஆழ்ந்திருப்பது போல் தென்பட்டார். தூக்கத்தில் நடப்பது போல் சமையலறையை நோக்கிச் சென்றார்.

மகிழ்ச்சியால் ஜெயதேவின் மனம் துள்ளியது. தார்க்கா சாதித்து விட்டான். தன் குரலால் வெங்கட்டின் மூளையைக் கட்டுப்படுத்தி விட்டான். வெங்கட் அறியாமல் ஜெயதேவ் அவரைப் பின் தொடர்ந்தார். சமையல் அறையில் பரண்மீது கிடந்த பகவத் கீதையை வெங்கட் கையில் எடுத்த போது மறுபடியும் ஃபோன் ஒலித்தது.

ஜெயதேவ் அதிர்ச்சி அடைந்தார்.

அவருக்குத் தான் செய்த தவறு புரிந்து விட்டது. ரிசீவரை எடுத்து கீழே வைக்காமல் வந்து விட்டார். அந்தப் ஃபோனின் மணி ஓசையால் வெங்கட்டை ட்ரான்ஸ் நிலை கலைந்து விடலாம். மறுமுனையில் இருப்பது ஸ்ரீநிவாசப்பிள்ளையாக இருந்தால் அவனுக்கு நிச்சயமாகச் சந்தேகம் ஏற்படும்.

ஒரே பாய்ச்சலில் முன் அறைக்கு வந்து ஃபோனை எடுத்து "ஹலோ" என்றார். அவர் நினைத்ததுபோல் அந்தப் ஃபோன் பிள்ளையிடமிருந்து வரவில்லை. சாரதாவிட மிருந்து வந்தது. அவர் நிம்மதியாக மூச்சை விட்டுக் கொண்டு "ஹலோ... நான் தான் ஜெயதேவ்" என்றார்.

மறுமுனையில் சாரதாவின் குரல் பதட்டமாய் ஒலித்தது.

"உங்களுக்குத்தான் ஃபோன் பண்ணினேன். சீக்கிர மாய் வாருங்கள். ஆஸ்பத்திரிக்குப்போகணும்."

அவர் கலவரம் நிறைந்த குரலில் "எதற்கு?" என்றார்.

"இப்பொழுதுதான் செய்தி வந்தது. நம்பூதிரியின் மனைவி இறந்து போய்விட்டாளாம்.

29 பிணத்திற்கு முன்னால் தன் தோல்வியை ஒப்புக் கொண்டு ஒரு விநாடி நின்றார் பார்த்தசாரதி.

வாழ்வுக்கும், சாவுக்கும் வித்தியாசம் எவ்வளவு சின்னது? மரணம் என்றால் என்ன?

மூளை செயலிழந்து போவதுதான் மரணமா? வருடக் கணக்காய் மூளை செயல்படாமல் கோமாவில் இருப்பவர்கள் இருக்கிறார்களே!

லப்டப் என்று துடிக்கும் இதயம் நின்று போவது தான் மரணம் என்றால் யோக சாதனையால் இதயத் துடிப்பை நிறுத்திக் காட்டியவர்கள் இருக்கிறார்களே!

செத்துப் போவது என்பதற்கு உண்மையான அர்த்தம் என்ன?

கலகலவென்று சிரித்துக் கொண்டு நாலு பேருக்கு நடுவில் வளைய வந்தவன் திடீரென்று பேச்சு மூச்சு நின்று மறுநாள் மயானத்தில் எரிக்கப்பட்டு ஒரு பிடி சாம்பலாக மாறுவதுதான் மரணமா?

"சர்டிஃபிகேட் சார்"

அவர் யோசனைகள் கலைந்தன. டெத் சர்ட்டி ஃபிகேட்! நோயாளியின் மரணத்தை உறுதிப்படுத்தும்

பத்திரம். அவர் அதைப் படித்து விட்டு, கொடுத்து விடலாம் என்பது போல் தலை அசைத்தார். பிறகு வெளியில் வந்தார்.

நம்பூதிரி வாயைப் பொத்திக் கொண்டு அழுதபடி இருந்தான். அருகில் சென்று "ஐ யாம் சாரி" என்றார்.

பிணத்தை டாக்ஸியில் ஏற்றினார்கள்.

* * *

முன் அறையில் பிணத்தைக் கிடத்தியிருந்தார்கள். நெற்றியில் ரூபாய் அகலத்திற்கு குங்குமம்... சுற்றிலும் பூக்கள்.

வெளியில் பாடை கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

அதுவரையில் அடக்கிக் கொண்டிருந்த துக்கம் வீட்டிற்கு வந்ததும் கட்டுக்கு மீறி பொங்கி எழும்பியது. அவள்தாய்க்கு ஆறுதல் சொல்ல யாராலும் முடிய வில்லை. மகளின் பிணத்தை விட்டு நகரவே இல்லை. அவளுடைய தந்தைதான் எல்லாக் காரியங்களையும் கவனித்துக் கொண்டிருந்தார்.

"எழுந்திருப்பா... இப்படி உட்கார்ந்து கொண்டால் மற்ற காரியங்கள் ஆக வேண்டாமா?" என்றார் அவர்.

நம்பூதிரி தலையை உயர்த்தினான். எதிரே மாமனார் நின்றிருந்தார்.

அற்பாயுளில் மகள் தங்களை விட்டுப் பிரிந்ததற்கு ஏற்பட்ட வருத்தத்தை பற்களுக்கிடையில் அழுத்திக் கொண்டு அவர் சொன்னார்: "பிணத்தைப் புதைக்கணும். ஆட்கள் போயிருக்கிறார்கள்."

"பிணத்தைப் புதைப்பது நம் வீட்டு வழக்கமில்லையே? இதென்ன ஆசாரம்?" என்று கேட்கப் போன உறவுக்கார கிழவியொருத்தி, அவர் முறைத்துப் பார்த்ததும் சத்தம் போடாமல் உள்ளே நழுவிவிட்டாள்.

"பிணத்தை எரிப்பதை நான் ஆட்சேபிக்கிறேன். உங்களில் யாருக்காவது ஆட்சேபணை இருக்கிறதா?" என்று அவர் கேட்டார்.

அந்தக் கேள்வியிலிருந்த கம்பீரத்தைக் கண்ட எல்லோரும் ஏதோ வேலையிருப்பதுபோல் அங்கிருந்து நழுவினார்கள். நம்பூதிரி ஒரு முறை நிமிர்ந்து பார்த்து விட்டு மறுபடியும் முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

உடலை விட்டு உயிர் பிரிந்த பிறகு மண்ணில் புதைத்தால் தான் என்ன? சாம்பலானால்தான் என்ன?

இருபது நாளாய் அநுபவித்து வந்த வேதனையிலிருந்து சாசுவதமாக விடுதலை பெற்ற மகளை, அமைதியாகத் தென்பட்ட அந்த முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். குனிந்து அவள் நெற்றியின்மீது கையை வைத்தார்.

பிறகு வெளியில் வந்துநின்று கொண்டார். உறுதியாய் சலனமின்றி, எந்த உணர்ச்சியும் இன்றி அப்படியேநின்று கொண்டிருந்தார் இராமசாஸ்திரிகள்.

* * *

ஃபோனில் சாரதா நம்பூதிரியின் மனைவி இறந்து போன செய்தியைச் சொன்னதும் ஜெயதேவ் கொஞ்ச நேரம் அப்படியே நின்று விட்டார். நம்பூதிரியின் மனைவியை அவர் ஒரிரு முறை பார்த்திருக்கிறார்.

அவளுடைய அமைதியான தோற்றமும், அந்த வீட்டில் பிரதிபலித்த ஆசாரம் நிறைந்த சூழலும் அவருக்கு நன்றாக நினைவிருந்தன.

அவர் அந்த அதிர்ச்சியிலிருந்து மீண்டு, மறுபடியும் சமையல் அறையை நோக்கிச் செல்வதற்குள் தாமதமாகி விட்டது. வெங்கட் பரண் மேலிருந்து பகவத்கீதையை எடுத்துப் படித்ததும், அந்தக் காகிதத்தை ஸ்டவ் தீயில் பொசுக்கியதும் நடந்து முடிந்து விட்டன.

"என்ன அது?" ஜெயதேவ் பதட்டத்துடன் கேட்டார்.

"என்ன? எதைப் பற்றி கேட்டீங்க?" வெங்கட் குரல் சாதாரணமாக இருந்தது.

"அந்தக் காகிதத்தில் இருந்தது..." உணர்ச்சி மிகுதியில் ஜெயதேவ் கத்திவிட்டார்.

"எந்தக் காகிதம்?" நிதானமாகக் கேட்டார் வெங்கட்.

"பகவத்கீதையில் இருந்த காகிதம்."

"பகவத்கீதையா?" புரியாதவர்போல் கேட்டார் வெங்கட்.

ஜெயதேவை ஏமாற்றம் வந்து சூழ்ந்து கொண்டது. இத்தனை பாடுபட்டுப் போட்ட திட்டம் வியர்த்தமாகி விட்டது. ஆபரேஷன் சிக்ஸ்க்கு சம்பந்தப்பட்ட ஆணை வெங்கட்டின் மூளையில் பதிவாகி விட்டது. அதன்படி அவர் நடந்து கொள்வார். அவ்வளவுதான். பார்ப்பதற்குச் சாதாரணமாகத்தான் இருப்பார்.

ஜெயதேவ் மேஜைமீது ஏறி பரணில் இருந்த பகவத் கீதையை எடுத்தார்.

"அட... அந்தப் புத்தகம் அங்கே எப்படி வந்தது?" வெங்கட் கேட்டதைப் பொருட்படுத்தாமல் அவசர அவசரமாய்ப் பக்கங்களைப் புரட்டினார். முதல் ஒன்பது பக்கங்கள் இருந்தன. பத்தாவது பக்கத்தை காணும்.

முப்பது, நாற்பது, ஐம்பது, அறுபது பக்கங்களைக் காணவில்லை. எழுபதாவது பக்கத்தில் ஆபரேஷன் செவன் பற்றிய செய்தி இருக்க வேண்டும். வேகமாய்ப் புரட்டினார். எழுபதாவது பக்கத்தில் எந்தச் செய்தியும் இருக்கவில்லை. அதாவது அன்று தான் இறுதி ஆபரேஷன் போலும். இதனுடன் துளசியின் வாழ்க்கை சமாதி ஆகப் போகிறதா? ஆபரேஷன் சிக்ஸ் பற்றி இருவருக்குத்தான் தெரியும். ஸ்ரீநிவாசப் பிள்ளை மற்றும் வெங்கட். முதலாம வன் சொல்ல மாட்டான். இன்னொருவனோ சொல்லத் தெரியாதவன். என்ன செய்வது?

தன் தவறை நொந்து கொண்டே ஜெயதேவ் பகவத் கீதை புத்தகத்தைச் செய்வதறியாது பார்த்துக் கொண்டிருந்தார்.

* * *

"என்ன ஆச்சு?" பப்ளிக் பூத்திலிருந்து திரும்பி வந்த தார்க்கா கேட்டான்.

திட்டம் தோல்வி அடைந்து விட்டதை விளக்கினார் ஜெயதேவ். தார்க்காவும் ஏமாற்றமடைந்தான்.

"அவர் படிப்பதற்கு முன்பே அந்தப் புத்தகத்தை எடுத்திருக்கக் கூடாதா?"

"எடுக்கப் போனபோதுதான் ஃபோன் வந்தது சாரதாவிடமிருந்து."

"என்னவாம்?"

"நம்பூதியின் மனைவி இறந்து போய் விட்டாளாம். சாரதா சொன்னாள்."

திரும்பப் போன தார்க்கா நின்று விட்டான். யோசனையில் ஆழ்ந்தான்.

நேரம் வந்து விட்டது. குருவுக்கு கொடுத்த வாக்கை நிறைவேற்றியாக வேண்டிய நேரம் நெருங்கிவிட்டது. எஞ்சிய வேலைகளைச் சீக்கிரமாய் முடிக்க வேண்டும்.

"போய் வருகிறேன்" –தார்க்கா சொன்னான்.

அவன் அப்படிச் சொன்னதும் ஜெயதேவுக்குப் புரிய வில்லை. திடீரென்று தார்க்கா கிளம்புவதை ஜெயதேவ் வேறு விதமாகப் புரிந்து கொண்டார். ஆமாம்... தார்க்கா இருந்துதான் என்ன செய்யப் போகிறான்?

வெங்கட்டை வெகு ஜாக்கிரதையாகக் கவனித்து வந்தால் தவிர அந்த ஆபரேஷன் சிக்ஸ் என்னவென்று தெரியப் போவதில்லை. வெங்கட்டை சிறைப்படுத்தினால் பிள்ளை வேறு யுக்தியைப் பின்பற்றுவான்.

அதையெல்லாம் யோசித்துத்தான் தார்க்கா போகிறேன் என்று கிளம்பி விட்டான் போலும். அவரும் வாசல் வரை வந்தார். அவன் போகத் தொடங்கியதும், "தார்க்கா" என்று அழைத்தார்.

தார்க்கா நின்றான். ஜெயதேவ் தாழ்ந்த குரலில் சொன்னார்:

"உன்னைப்பற்றி நான் வேறுவிதமாகக் கேள்விப் பட்டேன். தார்க்கா! நான் எதையும் நம்பவில்லை. ஆனால் இந்த நிமிஷம் உன் வாயிலிருந்து வெளிப்பட்ட

மந்திரங்களைக் கேட்டதும் நீ சாதாரண மனிதன் இல்லை என்று தோன்றுகிறது. உண்மையிலேயே நீ யாரு?"

"அந்தக் கேள்விக்கு இப்போது எந்த விதமான முக்கியத்துவமும் இல்லை புரொபசர். ஆனால் ஒன்று மட்டும் உண்மை. துளசியின் நிலைமைக்கும், எனக்கும் காஷ்மோராவுக்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை. இதை மட்டும் நம்புங்கள்."

"நம்புகிறேன்"– மனப்பூர்வமாய்ச் சொன்னார் ஜெயதேவ்.

தார்க்கா படி இறங்கினான். இரண்டு நிமிடங் களுக்குப் பிறகு தெரு முனையில் திரும்பினான்.

30

இரவு பதினோரு மணி ஆகும்போது தார்க்கா மயானத்தை அடைந்தான். மயானத்தில் இருள் பரவி இருந்தது.

சில மணி நேரங்களுக்குமுன் புதைக்கப்பட்ட இடத்தில் மண்ணைத் தோண்டி பிணத்தை வெளியில் எடுத்தான். பிணத்தைச் சுற்றி துணியை சுற்றியிருந்தார்கள். அப்படியே எடுத்து வந்து மரத்தின் அடியில் படுக்க வைத் தான். தண்ணீரால் முகத்தைக் கழுவினான். பிறகு அதற்கு முன்னால் அமர்ந்து கொண்டு மந்திரங்களை உச்சரிக்கத் தொடங்கினான். ஆந்தை ஒன்று விகாரமாய் அலறிக் கொண்டே வடக்கு திசையில் பறந்து போனது. அவன் மட்டும் நிச்சலனமாய் மற்திரங்களை ஜெபித்துக் கொண்டிருந்தான்.

பத்து நிமிடங்களுக்குப் பிறகு பிணம் அசைந்தது. முதலில் நாக்கில் சலனம் தென்பட்டது. தொண்டையில்

கரகரவென்று தெளிவில்லாமல் சத்தம் கேட்டது. பிறகு கூந்தலில் அசைவு தெரிந்தது. இடது கண் மட்டும் திறந்து கொண்டது. சிவப்பாய்த் தென்பட்டது.

இவைதான் பாதாளக் குட்டியின் லட்சணங்கள். சாஸ்திரத்தில் சொல்லியிருந்தபடியே நிகழ்ந்ததைக் கண்டு திருப்தி அடைந்த தார்க்கா வாதனையில் இறங்கினான். பேச்சால் பிணத்தை மயக்கி அதன் காலைப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

அவன் வாதனையில் இறங்கப் போனபோது ஒரு விநோதம் நடந்தது. பிணம் யாரோ தள்ளி விட்டது போல் பின்னால் சாய்ந்து விட்டது.

அவன் அதிர்ச்சியடைந்தான். அவன் ஊகித்திராத விஷயம் இது. மறுபடியும் மந்திரத்தை உச்சரிக்கத் தொடங்கினான். பிணம் லேசாக அசைந்து மறுபடியும் கட்டையாய்க் கிடந்தது.

மற்றொரு முறை மந்திரத்தை ஜபித்தான். பிணம் அசையவில்லை. அவன் சுற்றிலும் பார்த்தான். மரங்கள். செடிகள், சமாதிகள் எல்லாம் அப்படியே இருந்தன.

இந்த முறை மனதை ஒருமுகப்படுத்தி மந்திரத்தை ஜெபித்தான்.

ஆனாலும் பிணம் அசையவில்லை.

தார்க்காவின் முகம் ரோஷத்தால் சிவந்தது. எந்த சக்தி பிணத்தை அசைய விடாமல் தடுக்கிறது? அவனுடைய உடல் ஆவேசத்தால் நடுங்கியது. உலகிலேயே தலைசிறந்த மந்திரவாதியான விஷாச்சியின் சீடன் பாதாளக் குட்டியைப் போன்ற சிறு பிரயோகத்தைச் செய்யும் பொழுது அதை ஒருவர் தடுத்து நிறுத்துவதா?

இந்த முறை அவன் மயனை உறுதுணையாக்கி, சூரனின் உதவியுடன் மூன்று ஸ்வரங்களில் மந்திரத்தைச் சொல்லத் தொடங்கினான். முதுகில் அடி விழுந்தாற் போல் இருந்தது. தடுமாறி விழப் போனவன் சமாளித்துக் கொண்டான். தலையில் அடி விழுந்ததுபோல் தோன்றியது. தலை பிளந்து விடாமல் இருக்க சிவனை ஜெபித்தான். சம்மட்டியால் அடிப்பது போலிருந்த உபாதை நீங்கியது. மறுபடியும் முதுகில் அடி. பலத்தைத் திரட்டிக்கொண்டு நின்றான்.

அவனுக்குப் புரிந்து விட்டது. யாரோ சூனியத்தைத் திருப்பி அடிக்கிறார்கள்.

அவன் உதடுகளில் குறுநகை படர்ந்தது. விஷயம் புரிந்ததும் அவன் தாமதிக்கவில்லை. தடைக்கு மந்திரத் தால் கட்டுப் போட்டான். கட்டுப் போட்டால் காற்றுகூட ஸ்தம்பித்துவிட வேண்டியதுதான். அதுபோலவே நிகழ்ந்தது.

"எழுந்திரு" பிணத்திடம் சொன்னான்.

பிணம் அசையவில்லை.

அவனுக்கு வியப்பு ஏற்பட்டது. முதல் தடவையாய்ச் சந்தேகம் ஏற்பட்டது. எதிராளியின் பலத்தைப் பற்றி. நேரமும் அதிகமாய் இல்லை. நள்ளிரவு தாண்டப் போகிறது. இரவு கடந்து விட்டால் மந்திரம் பலன் தராது.

கூர்த்தை அழைத்தான். ஒரு நிமிடம் கழித்து காற்று அசைந்தது. குரலை உயர்த்தி மந்திரத்தை உச்சரித்தான். காற்றில் அலை அலையாய்ப் பரவிய மந்திரமானது, நிலநடுக்கம் வந்ததுபோல் அந்த எல்லையை நடுநடுங்க வைத்தது. அந்த அலைகள் இன்னும் ஓயக்கூட இல்லை.

தொலைவில் தடாலென்று ஏதோ விழுந்த சத்தம் கேட்டது.

தார்க்காவின் முகத்தில் கொடூரமான புன்முறுவல் தோன்றியது. தான் தொடுத்த அம்பின் இலக்கிற்குப் பலியான பிராணியைப் பார்க்க ஓடும் வேட்டைக் காரனைப் போல் இருந்தான்.

சிறிய புதருக்குப் பக்கத்தில் எதிராளி குப்புற விழுந்து கிடந்தான். வாயிலிருந்து வழிந்த இரத்தமே தரையில் குளமாய்ப் பரவி இருந்தது. தார்க்கா இடது காலால் அந்த உடலைப் புரட்டுவதுபோல் தள்ளினான். மல்லாந்து விழுந்த உடம்புடன் மெதுவாகத் திரும்பிய முகத்தை மங்கலான வெளிச்சத்தில் பார்த்தவன், பிரளயமே வந்து விட்டதுபோல் நடுநடுங்கி விட்டான்.

"நீங்களா சுவாமீ!"

குற்றுயிருடன் இருந்தார் இராமசாஸ்திரி.

முழங்காலிட்டு அமர்ந்து கொண்ட தார்க்கா துக்கத்தால் தொண்டை அடைக்க "சுவாமீ!" என்றான்.

மூடிய கண் இமைகளை வலுக் கட்டாயமாய் உயர்த்தி பலவீனமாய்ப் புன்னகைத்தார். "தோற்று விட்டேன் தார்க்கா" என்றார்.

வயாடைத்துப் போன தார்க்காவுக்கு குரல் எழும்பவில்லை. தன் சக்தியெல்லாம் திரட்டிக் கொண்டு நடுங்கும் குரலில், "சுவாமீ! தாங்கள் தோற்பதா! உங்கள் வாயில் இருந்து வெளிப்படும் 'ஓம்' என்ற சொல் ஒன்று போதுமே. பிரம்மாஸ்திரமாய் மாறி எங்களைப் போன்ற மந்திரவாதிகளை எரித்து விடாதா?"

"உன்னை எரிப்பதா! எந்தக் குருவுக்குமே சீடன் மகனைப் போன்றவன் தார்க்கா. என் நோக்கமெல்லாம் அப்பாவியான என் மகளை இந்தக் களத்திலிருந்து தப்பிக்க வைப்பது தான்."

காலுக்கடியில் நிலம் நழுவியது போல் இருந்தது. தார்க்காவுக்கு. "இவள்... இவள் உங்கள் மகளா?"

"என் மகளைக் காப்பாற்றிக் கொள்ள என்னிடம் இருந்த சிலசக்திகளைப் பயன்படுத்தினேன். உனக்குத் தீங்கு நேராமல் அதை எப்படிச் செய்வது என்று எனக்குத் தெரியவில்லை. போகட்டும் உன்னையே வேண்டிக் கொண்டோமா என்றால் உன் லட்சியத்தில் குறுக்கிட மாட்டேன் என்று ஏற்கெனவே உனக்கு வாக்கு கொடுத்து விட்டேன்"– அவர் வாயிலிருந்து மேலும் இரத்தம் வழிந்தது.

தார்க்காவுக்கு அவர் சொன்னது புரிந்ததும் துக்கம் மேலும் அதிகரித்தது. அவர் மட்டும் தன்னை தியானத் தில் எதிர்த்திருந்தால், தான் செய்த சூனியம் தன்னையே தாக்கி இருக்கும். இரத்தம் கக்கிய நிலையில் இந் நேரம் இறந்து போயிருப்பான்.

எங்கே பிறந்தானோ... யாருக்குப் பிறந்தானோ தெரியாது, ஏனோ அவனுக்குஅந்த நேரத்தில் தாயின் நினைவு வந்தது. "அம்மா... அம்மா..." என்று மனதிற்குள் அழுதான்.

"நீ எனக்குக் கொடுத்த வாக்கை ஏன் மீறி விட்டாய் தார்க்கா?"

"நானா! மீறி விட்டேனா?"

"அந்த மூவரையும் தவிர நான்காவது ஆளைத் துன்புறுத்த மாட்டேன் என்றாயே"

அந்தக் குற்றச்சாட்டுக்குத் திகைத்துப் போன தார்க்கா விளக்கம் தருபவன் போல் "அவனை மன ரீதியாக ஹிம்சிக்க வேண்டுமென்று..." அத்துடன் நிறுத்திக் கொண்டான். ஆவேசத்தில் எடுத்துக் கொண்ட சபதம் அது. வேதனை நிரம்பிய இந்தச் சூழ்நிலையில் வாதனை புரிவது அவசியமில்லை.

"என் மகளின் உடல்நிலை எனக்குச் சந்தேகத்தை தர வில்லை. ஆனால் பேச்சுவாக்கில் என் மருமகன் பிஸ்தா வுக்குப் போன மூவரில் ஒருவன் என்று தெரிந்தது. அவன் மரணம் உன் கையில் நிச்சயம் என்று புரிந்து கொண்டேன். ஆனால் நான் உனக்கு முன்பே வாக்கு அளித்து விட்டேன். அதனால் துக்கத்தை விழுங்கிக் கொண்டு என் மகள் விதவையாகப் போகும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ரொம்பக் கொடுமையான நிலைமை அது தார்க்கா..." –அவர் வாயிலிருந்து மேலும் இரத்தம் வழிந்தது. "என் மகளின் உடல்நிலை மோசமானதற்குக் காரணம் நீதான் என்று தெரிந்தபோது அதிர்ச்சி அடைந் தேன். எப்படி நம்புவது?ஆனால் நம்பாமல் இருக்க முடிய வில்லை. இப்படிச் செய்தது தார்க்காதானா என்று நினைத் தேன். உன்னைக் காப்பாற்றிக் கொள்வதா? என் மகளைக் காப்பாற்றிக் கொள்வதா? நீ என் கைக்கு எங்கே அகப்படு வாய்? எனக்குத் தந்த வாக்கை மீறியவன், என் வார்த்தை யைக் கேட்பாய் என்று என்ன நிச்சயம்?"

"அவ்வளவு பெரிய வார்த்தையைச் சொல்லாதீங்க சுவாமி" குரல் நடுங்க தார்க்கா சொன்னான்.

அவருடைய கை நீண்டு தார்க்காவின் கையைத் தொட்டது.

"மனிதனின் நல்ல குணம்தான் தெய்வம், கெட்ட குணம்தான் சாத்தான் என்றால், நல்ல குணங்களைக் கடைப்பிடித்த மனித வாழ்க்கைக்கு ரொம்ப மதிப்பு இருக்கிறது தார்க்கா. தியானத்திற்கு ஆதாரம் ஞானம். தியானத்தினால் தன்னலமில்லாத தியாகம் உருவாகிறது. கோரிக்கைள் என்ற தீய சக்திகளை மனோபலம் என்ற மந்திரத்தால் அடக்கும் யோகியும் ஒரு மந்திரவாதிதான்."

அவருக்கு மூச்சுத் தடுமாறியது. கண்கள் மூடிக் கொண்டன. ஒரு ஜோதியானது அவர் முகத்தில்சுடர் விட்டது. இறுதியாய் தெய்வ ஸ்தோத்திரத்தை முணு முணுத்துக் கொண்டிருந்த அவரது இதழ்கள் நின்று விட்டன.

முழங்காலிட்டு அமர்ந்திருந்த தார்க்கா சட்டென்று அவரை நோக்கிச் குனிந்தான். அவர் தலையை மடியில் ஏந்திக் கொண்டான். துக்கத்தில் குரல் அடைக்க, "சுவாமி... நான் என்ன செய்யட்டும்?" என்று புலம்பினான்.

மூடியிருந்த அவர் கண்ணிமைகளுக்குப் பின்னால் தென்பட்ட புன்முறுவல் 'என் மரணம் உனக்குக் கடமையை உணர்த்த வில்லையா?' என்பதுபோல் நிழலாடியது.

பலியாகிக் கொண்டிருந்தது தன் மகள்தான் என்று இராம சாஸ்திரிகள் முன்பே சொல்லியிருந்தால் என்னவாகி இருக்கும்? நம்பூதிரி பிழைத்துக் கொள்வான். அவன் மனைவியும் உயிரோடு இருந்திருப்பாள். இராமசாஸ்திரி இறந்திருக்க மாட்டார். அவன் மட்டும் தற்கொலை புரிந்து கொண்டிருப்பான், சபதம் நிறைவேறாததால்.

ஆனால் இப்பொழுது...

இப்பொழுது மட்டும் என்ன?

நம்பூதிரி உயிருடன்தான் இருக்கிறான். அவன் மனை விக்குக் கொஞ்ச நேரத்தில் விழிப்பு வந்துவிடும். இராம சாஸ்திரிகள் இறந்துவிட்டார். ஆனால் கடைசியாய் அவர் தனக்குஅளித்த அந்த ஞானம்!

சட்டென்று ஏதோ புரிந்தது அவனுக்கு. புரிந்ததும் அத்தனை வேதனையிலும் மகிழ்ச்சி ஏற்பட்டது. திடீ ரென்று திரை விலகினாற்போல் இருந்தது. கடமை நினை வுக்கு வந்ததுபோல் முகம் பிரகாசமாயிற்று.

அவன் எண்ணத்தை இயற்கையும் உணர்ந்து விட்டது போலும். ஒரு தென்றல் காற்று அன்புடன் அவனை வருடிக் கொடுத்தது. மரத்திலிருந்து பூக்கள் பொல பொல வென்று சொரிந்து விழுந்தன. பறவையொன்று நல்ல சகுனத்தை எடுத்துக் காட்டுவதுபோல் உரக்கக் கத்தியது. மயானமே கோயிலாகி விட்டது.

அவன் எழுந்து நின்றான். கிழக்கிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த ஒளிக் கீற்றானது அவன்மீது பிரதிபலித்தது. அவன் இப்பொழுது மந்திரவாதியாக இல்லை. கீதோப தேசம் பெற்ற அர்ஜுனனாய் இருந்தான்.

இராமசாஸ்திரிகளின் பாதங்களை வணங்கிவிட்டு எழுந்தான்.

31

துளசி தாயாகப் போகிறாள் என்ற செய்தி தெரிந்து இரண்டு நாட்களாகி விட்டன. பிஸ்தாவிலிருந்து திரும்பியிருந்த ஸ்ரீதர் மேலும் தளர்ந்து விட்டான். இந்த மூன்று நாட்களில் கொஞ்சம் தேறிக் கொண்டான்.

சாரதா ரொம்ப நேரம் தயங்கவிட்டு அன்று இரவு ஸ்ரீதரிடம், "துளசியை நாம் டாக்டரிடம் அழைத்துக் கொண்டு போகணும்" என்றாள்.

ஜன்னல் வழியே சூனியத்தைப் பார்த்துக் கொண்டு இருந்த ஸ்ரீதர் திரும்பிப் பார்க்காமலேயே, "நானும் அதைத் தான் யோசித்து வருகிறேன்" என்றான்.

கணவன் சொன்னதைக் கேட்ட பிறகு சாரதாவுக்குக் கொஞ்சம் தைரியம் ஏற்பட்டது. அருகில் சென்று கணவனின் கைமேல் கரத்தைப் பதித்தாள். "எல்லாம் சரியாகி விடும் இல்லையா?" என்றாள்.

"எல்லாம் சரியாகிவிடுமா? நாளை வரை தாண்டுமா?" முணுமுணுப்பது போல் சொன்னான் ஸ்ரீதர்.

"இதில் துளசியின் தவறு எதுவும் இல்லை. மனத்திற்குள் எத்தனைக் குமுறிக் கொண்டிருந்தால் இது போல் பைத்தியமாக மாறி இருப்பாள்?" சாரதா சொன்னாள்.

ஸ்ரீதர் மௌனமாக இருந்தான்.

தொலைவில் பத்து மணி அடித்தது. இருள் திரை அடர்த்தியாகக் கவிழ்ந்து விட்டிருந்தது.

அதே நேரத்தில் ஜெயதேவ் மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்திகளைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தார்.

சாமி வந்துவிட்டதாகச் சொல்லிக் கொண்டு சில பெண்கள் பேயாட்டம் ஆடுவார்கள். இது ஒரு மனநோய். இப்பொழுது துளசி இருக்கிற நிலையும் அதுதான் என்று வைத்துக் கொண்டாலும், சின்னக் குழந்தையைப்போல் நடந்து கொள்வதும், ஸ்கிப்பிங் ஆடுவது, சொப்பு சாமான்களை வைத்துக் கொண்டு விளையாடுவது ஏன்? துளசி இப்படி நடந்து கொள்வதற்கு வேறு ஏதோ காரணம் இருக்க வேண்டும். அதைக் கண்டுபிடிக்க வேண்டும்.

அவர் உடனே ஃபோன் செய்தார். ஸ்ரீதர் எடுத்தான்.

"நான் உங்க வீட்டிற்கு இப்பொழுது வரலாம்னு இருக்கிறேன்" என்றார்.

"கண்டிப்பாய் வாருங்கள்."

"இந்த இரவு வேளையில்..." என்று கூறப் போன ஜெயதேவைப் பாதியிலேயே இடைமறித்து விட்டு ஸ்ரீதர் சொன்னான்:

"ரொம்ப தனிமையில் அவதிப்படுகிறோம் புரொபசர். உங்கள் வரவு நிச்சயமாய்ச் சந்தோஷமாக இருக்கும்."

"தாங்க்ஸ், வருகிறேன்" என்று ஃபோனை வைத்து விட்டார் ஜெயதேவ்.

சிறிய பெட்டியைப் போன்ற ஒரு கருவியைக் கையில் எடுத்துக் கொண்டார். அந்தக் கருவியின் பெயர் 'மெட்ரோ நோம்.' நமக்கு வேண்டிய நேரத்தில் இடை வெளி விட்டு அதில் இருக்கும் பல்ப் எரியும். அதாவது நாலு அல்லது ஐந்து செகண்டுகளுக்கு ஒருமுறை அந்த பல்ப் அணைந்து அணைந்து எரியும். அதையே பார்த்துக் கொண்டிருக்கும் நோயாளி மெதுவாக மயக்கத்தில் ஆழ்ந்து விடுவான். துளசியின் மனநிலை சரியில்லாததால் வெறும் பேச்சால் அவளை ஹிப்னாஸிஸில் ஆழ்த்துவது கடினம். அதனால் ஜெயதேவ் மெட்ரோ நோமை பயன் படுத்த நினைத்தார்.

அவர் ஸ்ரீதரின் வீட்டை அடையும் போது மணி பதினொன்று. ஊர் முழுவதும் உறக்கத்தில் ஆழ்ந்து விட்டது. ஸ்ரீதரும், சாரதாவும் வராண்டாவிலேயே அவருக் காகக் காத்திருந்தார்கள்.

"என்ன விஷயம்?" ஸ்ரீதர் அவரை உள்ளே அழைத்துச் சென்று கொண்டே பதட்டத்துடன் கேட்டான்.

"துளசியுடன் கொஞ்சம் பேச வேண்டும்."

"காபி தயாரிக்கட்டுமா?" சாரதா கேட்டாள்.

"இந்த நேரத்திலா... வேண்டாம்"– சொன்னார் ஜெய தேவ். மெட்ரோ நோம் கருவியின் பிளக்கை மின்சாரத் துடன் இணைத்து, மூன்று செகண்டுகளுக்கு ஒரு முறை பல்ப் எரியுமாறு அமைத்தார்.

"எப்படி இருக்கிறாய் துளசி?"

துளசி பதிலளிக்கவில்லை. கூண்டில் அடைக்கப் பட்ட புலியைப்போல் கோபமாகப் பார்த்தாள். அறை யின் விளக்கை அணைத்து விட்டு மெட்ரோ நோமை பொருத்தினார். மூன்று செகண்டுகளுக்கொரு முறை எரிந்து அணையும் அந்தச் சிவப்பு விளக்கு, அந்த அறை யில் இருப்பவர்களை ஒருவிதமான ட்ரான்ஸ் நிலைக்கு அழைத்துச் செல்லும். துளசி தன்னையும் அறியாமல் அந்த விளக்கைப் பார்த்து ஈர்க்கப்பட்டாள்.

அதைக் கவனித்ததும் ஜெயதேவ் மெதுவாய்ப் பேச்சில் ஆழ்த்தி அவளை மயக்க நிலைக்குக் கொண்டு போக முயன்றார். அத்தனை எளிதில் அவள் அவருக்குக் கட்டுப்படவில்லை. தீவிரமான முயற்சிக்குப் பிறகு துளசி யின் மூளை அவருடைய கண்ட்ரோலுக்கு வந்தது.

ஜெயதேவ் கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தார். முதல் கேள்வி வழக்கமானதுதான்.

"உன் பெயர்?"

"காஷ்மோரா."

“நீ பிசாசா இல்லை பூதமா?”

“பிசாசு.”

“பிசாசுக்கும் பூதத்திற்கும் வேறுபாடு என்ன?”

பதில் இல்லை.

“உன் வயது என்ன?”

“பதினொன்று.”

“உனக்கு என்ன பிடிக்கும்?”

“விளையாடுவது”

“படிக்கப் பிடிக்காதா?”

சாரதாவுக்கு இந்தக் கேள்வி வியப்பை அளித்தது. மகளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

“பிடிக்கும்.”

துளசியிடமிருந்து வந்த பதில் அவர்களை வியப்பில் ஆழ்த்தியது.

ஜெயதேவ் ஒரு காகிதத்தையும், பேனாவையும் கொடுத்தார்.

“உன் பெயரை இதில் எழுது.”

துளசியின் கைகள் முதலில் நகரவில்லை. ஜெயதேவ் மறுபடியும் அவளைப் பேச்சால் ஆழமான மயக்க நிலைக்கு அழைத்துச் சென்றார். துளசியின் விரல்கள் பேனாவை எடுத்து எழுதத் தொடங்கின. ஜெயதேவ் அவளுடைய மயக்க நிலைக்கு இடையூறு ஏற்படாதவாறு குனிந்து பார்த்தார். ஏனோ அவர் புருவம் முடிச்சேறியது. சற்று நேரம் மௌனமாய் இருந்து விட்டுக் கேட்டார்:

"பிஸ்தா கிராமம் உனக்குத் தெரியுமா?"

பதில் இல்லை.

"தார்க்காவைத் தெரியுமா?"

அதற்கும் பதில் இல்லை.

"உன் தந்தையின் பெயர் என்ன?"

எழுதினாள். அறையில் ஊசி விழுந்தாலும் கேட்கும் அளவுக்கு நிசப்தம் நிலவியது.

"எந்தப் பள்ளியில் படித்தாய்?"

பதிலளித்தாள்.

அவர் ஒரு முடிவுக்கு வந்தவர் போல் கடைசிக் கேள்வி கேட்டார்.

"உன் தாத்தாவின் பெயர் என்ன?"

துளசியின் கைவிரல்கள் நடுக்கத்துடன் நகருவதை ஆர்வத்துடன், மூச்சை இறுக்கிக் கொண்டு மூன்று பேரும் கவனித்துக் கொண்டிருந்தார்கள். எழுதி முடித்து விட்டு துளசி பின்னால் சாய்ந்து கொண்டாள்.

ஜெயதேவ் காகிதத்தை எடுத்துப் பார்த்து விட்டு தன்னையும் அறியாமல் "மை காட்!" என்றார்.

கோணல் மாணலாய் அந்தக் காகிதத்தில் "வித்யா பதி" என்று எழுதியிருந்தது.

அது காஷ்மோராவின் தாத்தாவின் பெயர்.

* * *

அன்றிரவு ஜெயதேவ் வீடு திரும்பிய போது மணி பன்னிரண்டை தாண்டிவிட்டது. துளசியின் நடவடிக் கையை பற்றிய மர்மம் அவருக்கு விளங்கத் தொடங் கியது.

திருமணமாகாமலேயே தாயாகப் போகிறோம் என்ற விஷயம் தெரிந்து மனப்போராட்டத்தில் அவள் நலிந்து போய்க் கொண்டிருந்தபோது, அவள் கண்ணெதிரிலேயே காஷ்மீரா இறந்து விட்டாள். தானும் காஷ்மீராவைப் போன்று சிறு பெண்ணாக இருந்திருந்தால் இது போன்ற நிலைமை ஏற்பட்டிருக்காது என்ற உணர்ச்சி அவள் அடி மனதில் ஆழமாய்ப் பதிந்து விட்டது. ஆகவே தன்னையே காஷ்மீராவாக நினைத்து விட்டாள்.

வேறு விதமாகச் சொல்லவேண்டுமென்றால் காஷ்மீரா பேயாக மாறி துளசியைப் பிடித்திருக்கிறாள். பேய் பிடிப்பதற்கான விஞ்ஞான பூர்வமான காரணத்தை ஆராய ஜெயதேவ் முற்படவில்லை. மனதளவில் பலவீனமாய் இருப்பவர்கள் மன அழுத்தத்தைத் தாங்க முடியாமல் இறந்து போனவர்களின் ஆவி தங்களுடைய உடம்பிற்குள் புகுந்து விட்டதாக பலமாக நம்புவதோடு, பேய் பிடித்தவர்களைப் போல் நடந்து கொள்ள முற்படுவார்கள். ஆனால் துளசி பலவீனமான மனம் படைத்தவள் இல்லையே? இடையில் ஸ்ரீநிவாசப் பிள்ளை ஏதோ செய்திருக்க வேண்டும். ஆபரேஷன் ஒன்றிலிருந்து... ஐந்து வரை.

அது என்னவாக இருக்கும்? யோசித்துக் கொண்டு இருக்கும் போது மணி இரண்டடித்தது.

* * *

மூன்றரை மணி அளவில் சாரதாவுக்கு விழிப்பு வந்தது. எங்கேயோ ஏதோ ஓசை கேட்டது. பக்கத்தில் பார்த்தபோது ஸ்ரீதர் உறங்கிக் கொண்டிருந்தான். அவனுக்கு விழிப்பு ஏற்படாதவாறு எழுந்து முன் அறைக்கு வந்தாள். அங்கே ஒருவருமில்லை. காற்றில் ஜன்னல் கதவுகள் படபடவென்று அடித்துக் கொண்டன. அவள் ஜன்னல் கதவுகளை இழுத்துச் சாத்தும் போது, மறுபடியும் துளசியின் அறையிலிருந்து ஓசை கேட்டது.

அவள் ஓசைபடுத்தாமல் அந்தப் பக்கமாய்ப் போனாள். கதவு உட்புறமாகச் சாத்தப்பட்டிருந்ததைக் கண்டு அவள் வியப்படைநதாள். என்ன செய்வதென்று புரியவில்லை. கணவனை எழுப்பலாமா என்று நினைத்தாள். ஆனால் ஜன்னல் இருப்பது நினைவுக்கு வந்தது. ஒரே ஒரு ஜன்னல் கதவு மட்டும லேசாகத் திறந்திருந்தது. வெளியில் இருட்டாக இருந்தால் அவள் அங்கே நிற்பது உள்ளே இருப்பவர்களுக்குத் தெரியாது.

ஜன்னல் கதவின் வழியே உள்ளே பார்த்தவள் திகைத்துப் போய் அப்படியே நின்று விட்டாள்.

* * *

நள்ளிரவு தாண்டும் வரையிலும் தார்க்கா மயானத்திலேயே இருந்தான். தனக்கு வேண்டிய பொருட்களைச் சேகரித்துக் கொண்டான்.

நள்ளிரவு தாண்டி சுமார் இரண்டு மணி நேரம் கழித்து மயானத்தில் அவன் செய்யவேண்டிய வேலைகள் முடிந்தன. விடிவதற்குள் அவன் செய்து முடிக்க வேண்டிய காரியங்கள் இன்னும் பாக்கி இருந்தன.

அன்றுதான் துளசியின் கடைசி இரவு. மந்திரங் களுக்குச் சம்பந்தப்பட்ட வேலைகள் எல்லாமே இரவில்

தான் செய்து முடிக்க வேண்டும். எனவே அவன் பரபரப் புடன் துளசியின் வீட்டை நோக்கிச் சென்றான். ஆனால் வீட்டிற்குள் நுழைவது அத்தனைச் சுலபமாக இருக்க வில்லை. அரை மணிக்கு மேல் சிரமப்பட வேண்டி இருந்தது.

துளசி படுக்கையில் படுத்திருந்தாள். அவள் முகம் அமைதியாக இருந்தது. அறைக்குள் நுழைந்ததுமே தார்க்கா தன் வேலையில் ஈடுபட்டான். தூக்கத்தில் ஆழ்ந்திருந்த துளசி திடீரென்று விழித்துக் கொண்டு தன்னைப் பார்த்து பயந்து விடாமல் இருக்க, அவள் கழுத்தின் பின் புறத்தில் இருந்த நரம்பை லேசாக அழுத்தினான். தூபத்தைப் போட்டான்.

பிறகு தேடிப் பார்த்தான் சரியான கருவி எதுவும் கிடைக்கவில்லை. நேரத்தை வீணாக்க விரும்பாமல் அவள் கையை எடுத்துப் பற்களாலேயே நகங்களைக் கடித்து எடுத் தான். கால் நகங்களையும் அவ்வாறே எடுத்தான்.

பிறகு அவள் தலைமுடியைத் தன் கையில் எடுத்துக் கொண்டான். அவளுடைய நீண்ட கூந்தல் அவன் மடியி லிருந்து கீழே நழுவி நதியைப்போல் வளைந்து நழுவியது. விரல்களால் தலை முடியைக் கோதி விட்டான். நாலைந்து முடிகள் உதிர்ந்தன. மறுபடியும் கோதிவிட்டு மேலும் முடிகள் உதிரவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு கேசங்களை முடிச்சுப் போட்டான். ஒரு டாக்டர் ஆபரேஷனை எவ்வளவு சிரத்தையுடன் செய் வாரோ அதே போல் அவனும் தன் வேலையைச் செய்து கொண்டிருந்தான். இத்தனை நாட்களாய் பூத தேவதை களை வழிபட்டுத்தான் இருக்கிறான். இன்று முதல் முறை யாய் எதிர்க்கப் போகிறான். அதிலும் மிக சக்தி வாய்ந்த காஷ்மோராவை.

துளசியின் தலையைத் தலையணையின்மீது மெது வாகப்படுக்க வைத்துவிட்டு அவன் எழுந்து நின்றான். கையோடு கொண்டு வந்த மந்திர தீர்த்தத்தை அவள் படுக்கையைச் சுற்றிலும், அறை முழுவதும் தெளித்தான். அவள் கால்களின் அருகில் ஸ்ரீசக்கரத்தை வரைந்தான். ஜன்னலுக்கு அருகில் கற்பூரத்தை வைத்தான். அறையின் நான்கு மூலைகளிலும் எலுமிச்சம்பழத்தை அறுத்து மந்திரித்துப் போட்டான். இதையெல்லாம் செய்து கொண்டிருக்கும் போது அவன் இதழ்கள் மந்திரத்தை முணு முணுத்துக் கொண்டிருந்தன.

அவன் வேலைகள் முடிவடைய சுமார் ஒரு மணி நேரமாயிற்று. அந்த அறை முழுவதும் சக்கிரபந்தத்தால் சிறைப்படுத்தப்பட்டிருந்தது. ருரன், பைரவன், காபாலன், குண்டலன் முதலியவர்கள் அவன் கட்டளைக்குக் கீழ்ப் படிந்து திசைகளைக் காவல் புரிந்து கொண்டிருந்தார்கள். மந்திர ஒலி அலைகள் அந்த அறையிலிருந்த காற்றைக் கூட கட்டுப்படுத்தி இருந்தன.

தன் வேலையில் திருப்தியடைந்தான்அவன். விடி வதற்கு அதிக நேரமில்லை. போய்விட வேண்டும். செய்ய வேண்டிய வேலைகள் இன்னும் நிறைய இருக்கின்றன. வெளியில் போவதற்காக அடியெடுத்து வைக்கப் போன வன் திரும்பி இறுதியாய் மற்றொரு முறை துளசியைப் பார்த்தான்.

காஷ்மோராவை தான் எதிர்த்து விட்டால் அவள் பிழைத்துக் கொள்வாள். இல்லாவிட்டால் இறந்து விடுவாள். எது நிகழ்ந்தாலும், தான் அவளைப் பார்ப்பது அதுதான் கடைசி என்று அவனுக்குத் தெரியும். இன்ன தென்று தெரியாத உணர்வு அவன் மனம் முழுவதும் பரவியது. அதில் துக்கமோ, வேதனையோ, பிரிவாற்றா

மையோ எதுவும் இல்லை. பற்றற்ற அவன் வாழ்க்கையில் காதல் என்ற வார்த்தைக்குப் பொருள் கூடத் தெரியாது அவனுக்கு. ஒரு பெண்... அகலமான கண்களுடையவள், நீர்வீழ்ச்சியைப்போல் சுறுசுறுப்பானவள், தன் கையைப் பற்றிக்கொண்டு "ஓடுவோம் வா... க்விக்" என்று வேகமாய் ஓடத் தொடங்கியது மட்டும் நினைவில் இருந்தது.

காதல் அரும்புவதற்குப் பல நாள் பழக்கம் இருந்தாக வேண்டும் என்ற அவசியம் இல்லை. மனம் என்ற கட்டாந் தரையில் மழைத் துளியைப்போன்ற சிறு புன்னகை... ஒரு பார்வை போதுமானது. அது வெள்ளமாய்ப் பொங்கி, தடைகளையும் மீறி வெளியில் பாய்ந்துவிடும். வெளிப் படுவதற்கு மட்டும் ஏதாவது நிகழவேண்டும். அவ்வளவு தான். அவனுக்கு மொழி தெரியாது. எடுத்துச் சொல்லும் வாக்சாதுரியமும் இல்லை. அன்பை வெளிப்படுத்த மொழிதான் தேவையென்றால் புல்லாங்குழலை இசைத் துக் கொண்டே மாடுகளை மேய்க்கும் சிறுவனுக்கு எந்த மொழிதான் தெரியும்?

அவன் இமைக் கோடியில் ஒரு துளி கண்ணீர் திரண்டது. ஆனால் அது ஆனந்தக் கண்ணீர். தான் இந்த முடிவுக்கு வருவதற்கு இராமசாஸ்திரிகள் மட்டும் தான் காரணமா? இல்லை இல்லை... தன் மனதின் ஏதோ ஒரு மூலையில் இவள் பிழைத்தால் நன்றாக இருக்குமே என்ற எண்ணம்... அவளைப் பார்த்த முதல் விநாடியில் இருந்தே தோன்றவில்லையா?

சபதத்தில் ஜெயிப்பதைவிட தோற்பதில் தான் மகிழ்ச்சி அதிகம் என்ற எண்ணம் தனக்கு வந்ததே இல்லையா... இல்லையென்று சொன்னால் அது ஆத்ம வஞ்சனை. அதுதான் காதல் என்றால்...

அவன் இதழ்களில் தன்னையறியாமலேயே ஒரு புன்னகை மலர்ந்தது. இமயமலையின் குகைகளில், குளிரி லும், பனியிலும் நடுங்கிக் கொண்டு, கடினமான நியமங் களைப் பின்பற்றி மேனியை வருத்திக் கொண்டு, மனித வாழ்க்கைக்கு அர்த்தம் தேடி இரவு பகல் பாராமல் ஒருமித்த நிலையில் தவம் புரியும் முனிவருக்கு, திடீரென்று வாழ்க்கையின் ரகசியம் புரிபட்டபோது உண்டாகும் திருப்தியைப் போன்ற புன்முறுவல் அது.

அவன் தன்னையறியாமல் இரண்டடிகளை முன்னோக்கி வைத்தான்.

படுக்கையில் துளசி சலனமின்றி படுத்திருந்தாள். ஜன்னல் வழியாக வீசிய காற்றில் அவள் நெற்றி மீது கூந்தல் கற்றை ஒன்று படிந்தது. வெண்மை நிறத்தில் இருந்த அவள் மேனி தங்கம்போல் ஜொலித்தது. சிறிய மோவாய்... கூர்மையான மூக்கு.கடைந்தெடுத்த தங்கச் சிலைபோல் இருந்தாள்.

கையை நீட்டி அவளைத் தொடப் போனவன் நின்று விட்டான். அவளைத் தொடுவதற்கு அவனுக்கென்ன உரிமை இருக்கிறது? எங்கோ பிறந்து, மயானத்தில் மண்டையோடுகளுக்கிடையே வளர்ந்து, பகைமை உணர்வுடன் வளர்ந்து ஆளானவனுக்கு இந்தப் புனிதமான பெண்ணைத் தொடும் தகுதி இருக்கிறதா? தொடுவதாலே புனிதத்தன்மை போய்விடுமா என்ன? வேண்டாம்... வாத விவாதங்களுக்கு இது நேரமில்லை. தன் உணர்வுகள் தன்னுடனேயே சமாதியாகி விட வேண்டும்.

காதலுடன், தவிப்புடன் அவளை இறுதியாய் ஒரு முறை தொட வேண்டுமென்ற விருப்பத்தை மனதிலேயே அடக்கிக் கொண்டு அவன் திரும்பினான். கதவைத் திறந்து

கொண்டு வெளியே இரண்டடிகள் எடுத்து வைத்தவன் அருகில் ஏதோ சத்தம் கேட்டுத் திரும்பினான்.

ஜன்னல் கதவில் சாய்ந்து கொண்டு நின்றிருந்த சாரதா கண்ணில் தென்பட்டாள். ரொம்ப நேரமாய் அவள் அங்கே நின்று கொண்டிருக்க வேண்டும் என்பதை அவள் நின்றிருந்த தோற்றத்திலிருந்தே புரிந்து கொள்ள முடிந்தது.

முதலில் தேறிக் கொண்ட தார்க்கா, "நான்... நான்..." தடுமாறிக் கொண்டே சொன்னான். "நான் துளசிக்கு எந்தத் தீங்கும் செய்ய வரவில்லை."

"எனக்குத் தெரியும்" என்றாள் சாரதா. "எல்லா வற்றையும் பார்த்தேன்" என்று சற்று நிறுத்தி, "மற்ற விஷயங்களை ஜெயதேவ் ஏற்கெனவே சொல்லியிருக் கிறார்" என்றாள்.

"ஒரு சின்ன வேண்டுகோள்" என்றான் தார்க்கா. என்னவென்பதுபோல் பார்த்தாள்.

"நாளை இரவு நள்ளிரவு தாண்டும் வரையிலும் துளசியை இந்த அறையை விட்டு வெளியே வர விடா தீர்கள், தண்ணீரையும், இரத்தத்தையும் அவள் பார்க்கக் கூடாது." சற்று நிறுத்தி மேலும் சொன்னான், "நாளை இரவு பயங்கரமான இரவாக இருக்கப் போகிறது. காஷ்மோரா ரொம்ப சக்தி வாய்ந்த பூத தேவதை. அதை மயானத்தில் புதைக்க வேண்டும். துளசி மட்டும் அறையை விட்டுவெளியே வராமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

சாரதா தன்னையும் அறியாமல் தலையை அசைத் தாள். அவன் இருளில் கலந்துவிட்டான். அவன் மனம் முழுவதும் திருப்தி நிரம்பி இருந்தது. இந்த உலகில்

குறைந்தபட்சம் இரண்டு பேராவது தன்னைப் புரிந்து கொண்டார்கள் என்ற திருப்தி அது.

32

ஜெயதேவ் சோம்பலுடன் கண்களைத் திறந்தார். இரவு முழுவதும் சரியாகத் தூங்காததால் கண்களில் எரிச்சல் ஏற்பட்டது. கீழே ஏதோ சந்தடி கேட்டது. ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். வீட்டுக்கார அம்மாளின் பேத்திகள் ஊரிலிருந்து வந்திருக் கிறார்கள் போலும். உரத்தக் குரலில் பேசிக் கொண்டிருந் தார்கள்.

மறுபடியும் தூங்க முயன்றார். உறக்கம் வரவில்லை. எழுந்து தினசரி வேலைகளில் மூழ்கினார்.

எட்டரை மணி ஆகும் போது அந்தப் பெண்கள் உள்ளே வந்தார்கள். ப்ளஸ்டூவிலிருந்து டிகிரி படிப்பு வரை நான்கு பெண்கள்.

"அங்கிள்! நீங்க ஹிப்னடைஸ் செய்வீர்களாமே. பாட்டி சொன்னாள்" என்றாள் சின்னவள்.

"எங்களுக்கும் கற்றுக் கொடுங்கள் அங்கிள். இங்கே பதினைந்து நாட்கள் இருப்போம்"– இரண்டாவது பெண் வேண்டுகோள் விடுத்தாள்.

"லீவுக்கு வந்திருக்கிறீர்களா?"

"இல்லை. டோர்னமென்ட்ஸ்" – பெரிய பெண் சொன்னாள்.

"எங்க ஜூனியர் காலேஜில் ரன்னிங் சாம்பியன் நான்தான். பெரியக்கா பாட்மிண்டன் ப்ளேயர்"– கடைக் குட்டி மளமளவென்று ஒப்பித்தாள்.

"அங்கிளைத் தொந்தரவு செய்யாதீங்க. கீழே வாங்க" –வீட்டக்கார அம்மாளின் குரல் மாடிவரையிலும் கேட்டது.

நான்கு பேரும் கீழேபோய் விட்டார்கள்.

பத்து மணியளவில் பெரிய பெண் ரஜியா மட்டும் தனியாக வந்தாள்.

"நீங்க இன்ஜெக்ஷன் போடுவீர்களா அங்கிள்?"

"யாருக்கு?"

"எனக்குத்தான்."

"கொண்டு வா, போடுகிறேன்."

அவள் கீழே போய்க் கொண்டு வந்தாள். மருந்தை ஸிரிஞ்சியில் ஏற்றிக் கொண்டே, "ஹெல்த் நார்மலாகத் தானே இருக்கிறது. எதுக்கு இன்ஜெக்ஷன்?" –ஜெயதேவ் கேட்டார்.

அவள் கொஞ்சம் தயங்கி விட்டு, "டோர்னமெண்ட் இருக்கும் பத்து நாட்களும் இடைஞ்சல் வராமல்..."– பாதியிலேயே நிறுத்தினாள்.

புரிந்து கொண்டவர் போல் தலையை அசைத்து விட்டு, இன்ஜெக்ஷன் செய்தார்.

"இந்த மருந்தின் பெயர் என்ன?"

"ப்ரொகைனான்."

பழக்கப்பட்ட ரீதியில் கைகள் இன்ஜெக்ஷன் செய்து கொண்டிருந்தாலும் ஜெயதேவின் நினைவு வேறு எங்கேயோ இருந்தது.

ப்ரொகைனான்!

எங்கேயோ கேட்டிருக்கிறோம் இந்த வார்த்தையை, வெங்கட் துளசிக்கு இன்ஜெக்ஷன் செய்து கொண்டிருந்த போது நடந்த உரையாடல் நினைவுக்கு வந்தது.

"டாக்டர்! நீங்க ஸிரிஞ்சியில் எடுத்துக் கொண்ட மருந்து என்னவென்று பார்த்தீர்களா?"

"ப்ரொகைனான் பற்றி உனக்கு எப்படித் தெரியும்?" வெங்கட் கேட்டார்.

"கிரிக்கெட் மேட்சுக்காக வெளி ஊர்களுக்குப் போகும் போது இடைஞ்சல் வராமல் இருக்க எங்கள் டீமில் சில பெண்கள் போட்டுக் கொள்வார்கள்."

வெங்கட் வேறு இன்ஜெக்ஷனைக் கொடுத்து விட்டு "சாரி... இரண்டுமே ஒரே எழுத்தில் தொடங்கியதில் இந்தத் தவறு நடந்து விட்டது" என்றார்.

ஜெயதேவ் ரஜியாவைக் கேட்டார். "இது போல் பிரியட்ஸை தாமதிக்கச் செய்யும் இன்ஜெக்ஷன்ஸ் வேறு ஏதாவது இருக்கிறதா?"

"இருக்கு. ப்ரொல்யூடன் என்று..." –அவள் சொல்லி முடிக்கவில்லை, ஜெயதேவின் கையிலிருந்து ஸிரிஞ்ச் நழுவிவிட்டது.

அதாவது இரண்டு மருந்துகளும் ஒரே விதமாக செயல்படுபவை. அப்படியென்றால் வெங்கட் கவனக் குறைவாக அந்த இன்ஜெக்ஷனைத் தரவில்லை. ப்ரொகை னான் பற்றி துளசிக்குத் தெரியும் என்றதுமே அதற்குப் பதிலாகப் ப்ரொல்யூடனைத் தந்திருக்கிறார்.

எதற்காக?

அவர் நேரத்தை வீணாக்கவில்லை. திடீரென்று அறையை விட்டு வெளியேறிய ஜெயதேவை ரஜியா வியப்

புடன் பார்த்துக் கொண்டிருந்தாள். ஒரு நிமிடம் கழித்துக் கார் புறப்படும் சத்தம் கேட்டது.

* * *

ஜெயதேவ் போனபோது வெங்கட் வீட்டில் பண்டிட்டும் இருந்தார். ஒருவர் மாற்றி ஒருவர் வெங்கட்டைக் கண்காணிக்க ஜெயதேவும் பண்டிட்டும் ஏற்கெனவே நிச்சயித்து இருந்தார்கள். ஆபரேஷன் சிக்ஸ் என்றால் என்னவென்று தெரியும் வரை இதைத் தொடர வேண்டியது தான். பண்டிட்டிற்குத் துளசி கருவுற்ற விஷயம் தெரியாது.

ஜெயதேவ் வெங்கட்டிடம் கேட்டார். "டாக்டர்! நீங்க எப்பவாவது ப்ரொல்யூடன் என்ற மருந்தைப் பயன் படுத்தியிருக்கிறீர்களா?"

"ப்ரொல்யூடனா? இல்லையே."

"சரி, போகட்டும் விடுங்கள் ப்ரொகைனானை?"

"ஊஹூம்."

ஜெயதேவ் நாற்காலியை விட்டெழுந்து கொண்டே "நீங்கள் உபயோகித்த காலி மருந்து பாட்டில்களை எங்கே போடுவீங்க?" என்று கேட்டார்.

"இந்தக் காம்பவுண்டிலேயே... கொல்லையில்... அந்த மூலையில்..." –சுட்டிக் காட்டினார்.

முன்தினம் பெய்த மழையில் அந்த இடம் ஈரமாய் இருந்தது. குனிந்து குப்பையில் தேடத் தொடங்கினார்.

வெங்கட்டும் துணை புரிந்தார். சுமார் அரை மணி நேரம் கழிந்தது.

"இதோ... இதென்னது?" சோப்புப் பெட்டியைப் போலிருந்த பெட்டியொன்றை வெங்கட் சுட்டிக் காட்டினார். பார்த்ததுமே அதை அடையாளம் புரிந்து கொண்டார் ஜெயதேவ்.

மஸ்கிடோ ரிபெல்லர்!

வெங்கட்டிற்குத் தெரியாமல் அது இங்கே வந்திருக் கிறது என்றால் அதில் ஸ்ரீநிவாசப் பிள்ளையின் தலையீடு நிச்சயம் இருந்திருக்க வேண்டும்.

சற்று நேரம் கழித்து ப்ரொல்யூடன் பாட்டிலும் அகப் பட்டது. ஜெயதேவ் அதற்குள் ஒரு முடிவுக்கு வர விரும்ப வில்லை.

இருவரும் உள்ளே வந்தார்கள். ரிபெல்லரைப் ப்ளக்கில் சொருகிவிட்டு சுவிச்சைப் போட்டார் ஜெய தேவ். அது சம்பந்தப்பட்ட விளைவுகள் ஏதேனும் இருந் தால் வெளியில் தெரிவதற்கு ஒரு மணி நேரம் ஆகலாம்.

அப்பொழுது வாசலில் சத்தம் கேட்டது. ஜெயதேவ் திரும்பிப் பார்த்தார்.

தார்க்கா உள்ளே வந்து கொண்டிருந்தான்.

* * *

இன்னும் எட்டு மணி நேரம் தான். ஸ்ரீதர் நினைத்துக் கொண்டான். இன்னும் எட்டு மணி நேரத்தில் காஷ் மோரா தன் மகளை எடுத்துச் சென்று விடப் போகிறது. தன்னால் எதுவும் செய்ய முடியாது. நண்பர்களிடம் சொன்னால் ஏளனம் செய்வார்கள். போலீஸாருக்குத் தெரிவித்தால் பைத்தியக்காரன் என்று முடிவு கட்டி விடுவார்கள். மகள் இறந்து போவதைப் பார்வையாள

னாகப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதானா? ஒன்றுமே செய்ய முடியாதா?

அவன் ஒரு முடிவுக்கு வந்தான். துளசியின் அறைக்குள் நுழைந்து ஜன்னல் கதவுகள் எல்லாம் சரியாய்ச் சாத்தி இருக்கிறதா என்று சோதனை செய்தான். பக்கீர் கொடுத்த விக்கிரகத்தைத் துளசியின் தலையணைக்கு அடியில் வைத்து விட்டு தன் அறைக்குத் திரும்பினான்.

ஜே அண்ட் ஜே கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனியில் காடுகளில் வேலை செய்தபொழுது தற்காப்புக்காகத் தந்த ரிவால்வரைப் பெட்டியிலிருந்து வெளியில் எடுத்தான். துடைத்துச் சுத்தம் செய்ய ஆரம்பித்தான்.

* * *

தார்க்கா பரபரப்புடன் இருக்கிறான் என்று அவன் முகத்திலேயே தெரிந்தது. தேவையான மர ஆணிகள் கிடைக்கவில்லை. அவைகிடைத்தாலும் சுத்தம்செய்து பூஜிக்க வேண்டும். நள்ளிரவு ஆவதற்குள் வேலைகள் முடிய வேண்டுமே என்ற கவலையில் இருந்தான். கடிதம் ஒன்றை எழுதி சுவரில் வைத்து ஜெயதேவிடம் கொடுத்தான்.

"இதென்ன?" ஜெயதேவ் கேட்டார்.

"இந்தச் சின்ன உதவியை மட்டும் செய்து விடுங்கள். இதைத் துளசியிடம் சேர்ப்பித்து விடுங்கள்."

கொடுத்து விட்டு உடனே கிளம்பப் போனான். ஜெயதேவுக்கு மின்னலைப் போன்று ஒரு யோசனை வந்தது. தார்க்காவை அழைத்தார்.

"உன்னோடு பத்து நிமிஷம் வேலை இருக்கிறது. மறுக்காதே ப்ளீஸ்."

தார்க்காவால் ஜெயதேவின் வேண்டுகோளைத் தட்ட முடியவில்லை. ஜெயதேவ் டேப் ரிக்கார்டரைக் கொண்டு வந்து, தார்க்காவின் பேச்சைப் பதிவு செய்து கொண்டார். பிறகு தார்க்கா கிளம்பிப் போனான்.

* * *

இரவு ஒன்பது மணி. காற்று வேகமாய் வீசிக் கொண்டிருந்தது, வானத்தில் மேகங்கள் சூழ்ந்திருந்தன.

துளசி தன் அறையில் ஆழ்ந்த மயக்கத்தில் இருந்தாள். டாக்டரை அழைப்பதற்கோ, துளசியை அந்த அறையை விட்டு அசைப்பதற்கோ சாரதா சம்மதிக்கவில்லை. ஸ்ரீதரும் அவளுடைய எண்ணத்தை ஏற்றுக் கொண்டான். ஆனால் முதல் நாள் தார்க்கா வீட்டுக்கு வந்ததையோ, துளசியின் அறையில் மந்திர தீர்த்தத்தைத் தெளித்ததையோ சாரதா கணவனிடம் சொல்லவில்லை.

ஒன்பதரை மணி அளவில் நம்பூதிரி வீட்டுக்கு வந்தான். இருவரும் அதிகமாகப் பேசிக் கொள்ளவில்லை. ஆளுக்கொரு நாற்காலியில் அமர்ந்து கொண்டு யோசித்து கொண்டிருந்தார்கள். ஸ்ரீதர் பக்கத்திலிருந்த ஆஷ்ட்ரேயில் சிகரெட் சாம்பல் நிரம்பி வழிந்தது. பக்கத்திலேயே ரிவால்வர் பளபளத்தது.

* * *

தார்க்கா கிளம்பிப்போன பிறகுஜெயதேவ் வெங் கட்டை நாற்காலியில் உட்கார வைத்தார். டேப்ரிக் கார்டரை இயக்கினார். தார்க்காவின் குரல் ஸ்ரீநிவாசப் பிள்ளையின் குரலைப் போல் ஒலித்தது.

"ஆபரேஷன் ஓன்."

ஜெயதேவ் ஆர்வத்துடன் நோக்கினார். வெங்கட் கண்களை மூடியிருந்தார். அவரிடம் சலனம் எதுவும் இல்லை.

சற்று நேரம் கழித்து டேப்ரிகார்டரிலிருந்து குரல் ஒலித்தது.

"ஆபரேஷன் டூ"

சற்று இடைவெளி...

"ஆபரேஷன் த்ரீ..."

"ஆபரேஷன் ஃபோர்."

வெங்கட் தன் இதழ்களைத் தன்னையறியாமல் அசைத்ததைக் கவனித்து சட்டென்று ரீப்ளே போட்டார் ஜெயதேவ்.

"ஆபரேஷன் ஃபோர்"

ஜெயதேவ் குனிந்து வெங்கட் முணுமுணுப்பதை உன்னிப்பாகக் கேட்டார்.

"பெண்டதால் கொடுத்த போது துளசி என்ன சொன்னாள்?" ஜெயதேவ் கேட்டார்.

"பிரியட்ஸ் தாமதமாச்சு என்றாள்."

புறப்பட்ட இடத்திற்கே வந்தது போல் இருந்தது ஜெயதேவின் நிலைமை. சக்ரவர்த்தியின் கிராதகச் செயலின் விளைவாகத் துளசி கருவுற்றதால் பிரியட்ஸ் தாமதமானதில் வியப்பு எதுவும் இல்லை.

"ஆபரேஷன் ஃபைவ்!

வெங்கட் ட்ரான்ஸில் இருந்தபடியே "மெஸ்கலின்" என்றார்.

ஜெயதேவ் திடுக்கிட்டார்.

மெஸ்கலின் ரொம்ப சக்தி வாய்ந்த மருந்து. அதன் பிரஸ்தாவனை இப்போ ஏன் வருகிறது?

"துளசிக்கு மெஸ்கலைன் கொடுத்தீர்களா?"

"ஆமாம்" வெங்கட் மயக்க நிலையிலேயே சொன்னார்.

"கொடுத்து?"

"அம்புலிமாமாவைக் காட்டினேன்."

"பகல் வேளையில் அம்புலிமாமா எங்கே தென்படும்?" –ஜெயதேவ் எரிச்சலுடன் சொன்னார்.

"அம்புலிமாமா புத்தகம்."

"எங்கே இருக்கு?"

"மேஜை டிராயரில்."

மேஜை டிராயரைத் திறந்து பழைய அம்புலிமாமா புத்தகத்தை வெளியில் எடுத்தார் ஜெயதேவ். வாசலில் கார் நின்ற சத்தத்தை அவர் கவனிக்கவில்லை. அதில் இருந்து ஒரு ஆள் நிசப்தமாய் இறங்கினான்.

உள்ளே ஜெயதேவ் புத்தகத்தைப் புரட்டினார். ஒரு குதிரையின் படம் பயங்கரமாக இருந்தது. அடுத்தப் பக்கத்தில் இளவரசியின் படம் இருந்தது. பக்கத்தைத் திருப்பினார்.

குதிரையில் முகம் மனிதனின் முகமாக மாறியது. முன்னங்காலை உயர்த்தி காற்றில் எழும்புகிறது...

ஜெயதேவுக்கு ஏதோ புரிவதுபோல் இருந்தது. பிள்ளை வீட்டில் துளசியின் படத்தை, சதானந்த சக்ரவர்த்

நியின் பிணத்தைப் பார்த்ததாகத் தார்க்கா சொன்னது நினைவுக்கு வந்தது. ஜெயதேவுக்கு வயிற்றில் ஏதோ சங்கடமான உணர்வு தோன்றியது. அவர் பார்வை மஸ்கிட்டோ ரீபெல்லர் மீது படிந்தது.

மஸ்கிட்டோ ரீபெல்லர் வெளிப்படுத்திக் கொண்டிருந்த அல்ட்ராசானிக் அலைகள்! அலைகளின் ஃப்ரீக்வென்ஸீயை மாற்றினால் மனித உடலில் அவை ஏற்படுத்தும் விளைவுகள்!

வாஷ் பேசினுக்கருகில் வெங்கட் வாந்தி எடுத்துக் கொண்டிருந்தார்.

ஜெயதேவின் மூளையில் ஏதோ பளிச்சிட்டது. ஒவ்வொரு நிகழ்ச்சியாக கோர்த்துப் பார்க்கும்போது புதிர் விடுபடுவது போல் இருந்தது.

சித்தேஸ்வரியின் கோவிலில் மயக்கமடைந்த நிலையில் இருக்கும்போது, சக்ரவர்த்தியால் தான் கற்பழிக்கப் பட்டு விட்டதாகத் துளசியின் மனதில் வெங்கட் எண்ணத்தை விதைத்திருக்க வேண்டும். பிறந்த நாளன்று புனிதத்தைப் பற்றி பேச்சு வந்தபோது துளசி ஹிஸ்டீரிக் ஆக நடந்து கொண்டாள். வெங்கட்டிடம் சிகிச்சைபெற வந்தபோது, வெங்கட் அவளுக்கு ப்ரொல்யூடன் இன்ஜெக்ஷன் கொடுத்ததில் பிரியட்ஸ் வராமல் அவளைப் பிரமையில் ஆழ்த்தியது. போதாக் குறைக்கு வாந்தி வேறு சேர்ந்து கொண்டதில், தான் கருவுற்றிக்கிறோம் என்று அந்தப் பெண் நடுங்கிவிட்டாள். அவள் மனநோய்க்கு காரணம் அதுதான்.

துளசிக்கு எந்தத் தீங்கும் நேரவில்லை. அவள் கற்பழிக்கப் படவும் இல்லை.

ஜெயதேவ் நாற்காலியைவிட்டு துள்ளலுடன் எழுந்து கொண்டே, "யுரேகா!" என்று கத்திவிட்டார்.

அந்த மகிழ்ச்சியை முதலில் சாரதாவுடன் பகிர்ந்து கொள்ள நினைத்தார். ஸ்ரீதர் வீட்டுக்குப் போகும் நேரத்தைக்கூட வீணாக்க விரும்பாமல், ஃபோனை எடுத்து ஸ்ரீதர் வீட்டுக்கு டயல் செய்தார்.

"சாரதா! உங்களுக்கு லைஃப் டைம் குட் ந்யூஸ் ஒன்று சொல்லப் போகிறேன். என்ன தர்றீங்க?"– அளவு கடந்த உற்சாகத்தில் உரத்தக் குரலில் கத்தி விட்டார்.

"என்ன வேண்டும்?" –ஆண் குரல் ஒன்று வாசலுக்கு அருகில் ஒலித்ததைக் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினார். வாசற்கதவை அடைத்துக் கொண்டு நின்றிருந்தான் ஸ்ரீநிவாசப் பிள்ளை.

* * *

"என்ன ஆச்சு?" ஸ்ரீதர் சாரதாவைக் கேட்டான்.

சாரதா ஃபோனை வைத்துக் கொண்டே, "ஜெயதேவ் தான் செய்தார். ஏதோ நல்ல செய்தியாம். சொல்லப் போனார். நடுவில் கட் ஆகிவிட்டது" என்றாள்.

ஸ்ரீதர் இந்தச் செய்திக்கு அவ்வளவாக முக்கியத்துவம் தரவில்லை. பன்னிரண்டாவதற்கு இன்னும் இரண்டு மணி நேரம்தான் இருந்தது. மறுபடியும் ஃபோன் செய்வார் என்று நினைத்து சும்மா இருந்து விட்டான். சாரதாவும் அப்படியே நினைத்துக் கொண்டாள்.

எதிர்வீட்டிலிருந்துதான் ஜெயதேவ் ஃபோன் செய்தார் என்றும், தற்போது அவர் ஆபத்தான நிலையில் இருக்கிறார் என்றும் அவளுக்குக் கொஞ்சம்கூட சந்தேகம் வரவில்லை.

"கங்கிராஜுலேஷன்ஸ் ஜெயதேவ். ரொம்ப கெட்டிக்காரத்தனமாய் என் திட்டங்களைக் கண்டுபிடித்து விட்டாய்."

"வரலாற்றிலேயே யாரும் ஊகிக்க முடியாத அளவுக்குத் திட்டங்களைப் போட்ட உனக்கு என் வாழ்த்துக்கள்"– ஜெயதேவ் சொன்னார்.

"வெரி குட். சாகப் போகும் முன் அந்த அளாவது சிநேக மனப்பான்மையுடன் பழகுவது நல்லது" என்று பிள்ளை சிரித்தான். "இன்னும் இரண்டு மணி நேரத்தில் நீ, தார்க்கா, துளசி மூவரும் சாகப் போகிறீர்கள்."

"துளசி சாக மாட்டாள்" – கோபமாய்ச் சொன்னார் ஜெயதேவ்.

பிள்ளை மறுபடியும் சிரித்தான். "ஆபரேஷன் ஸிக்ஸ் பற்றி மறந்துவிட்டாய் ஜெயதேவ். அது இன்னும் முடிய வில்லை."

"என் வீட்டில் இந்த ரகளையெல்லாம் என்ன? போலீசைக் கூப்பிடுகிறேன்" –வெங்கட், பிள்ளையைப் பார்த்துச் சொன்னார்.

பிள்ளை புன்முறுவல் மாறாமலேயே வெங்கட் பக்கம் திரும்பி அவர் மூளையைக் கட்டுப்படுத்தும் வார்த்தை யைச் சொன்னான். வெங்கட் ட்ரான்ஸ் நிலையை அடைந்தார்.

"அவனைக் கட்டிப் போடு"– ஜெயதேவைக் காண்பித்து சொன்னான் பிள்ளை.

வெங்கட் ஜெயதேவின் கைகளைப் பின்னால் மடக்கிக் கட்டிப்போட்டார். ட்ரான்ஸில் இருப்பவர்

களுக்குப் பலம் அதிகம் என்றும், எதிர்க்க நினைப்பது முட்டாள் தனம் என்றும் ஜெயதேவுக்குத் தெரியும்.

பிள்ளை வெங்கட்டைப் பார்த்து, "நீ உறக்கத்தி லிருந்து விழித்துக்கொண்டதும் சாதாரண நிலைக்கு வந்து விடுவாய். பிறகு கடியாரத்தில் பதினொரு மணி அடித்த தும் ஆபரேஷன் சிக்ஸை கடைப்பிடிப்பாய். இப்பொழுது துளசியிடம் போகப் போகிறாய். உன் தூக்கம் மெதுவாகக் கலைகிறது. கலைந்துகொண்டிருக்கிறது."

வெங்கட் கண்களைத் திறந்ததையும், சாதாரண நிலைக்கு மாறி எதிர்த்த வீட்டை நோக்கி நடந்து போன தையும் செய்வதறியாமல் பார்த்துக் கொண்டு இருந்தார் ஜெயதேவ். வெங்கட்பற்றி ஸ்ரீதரிடமோ, சாரதாவிடமோ முன்னாடியே சொல்லியிருந்தால் நன்றாக இருந் திருக்கும்.

கடிகாரத்தில் பத்தரை மணி அடித்தது. வெங்கட்டைத் தடுத்து நிறுத்த இன்னும் அரை மணிதான் இருந்தது.

பிள்ளை ஜெயதேவைப் பார்த்து நகைத்துவிட்டு, வெளியில் போய், பானையுடன் திரும்பி வந்தான். பானை முழுவதும் தண்ணீர் இருந்தது.

"இருபத்து நான்கு வழிகளில் உன்னைக் கொலை செய்யப் போவதாய்ச் சொன்னேனே? இதுதான் கடைசி வழி. பதினோரு ஆண்டுகளுக்கு முன்னால் என் தலை யில் நீர்த் துளிகள் விழுமாறு செய்து என்னைப் பைத்திய மாக்கினாய். இப்பொழுது அதைவிடக் கொடூரமாக உன்னைக் கொல்லப் போகிறேன். பார்த்துக் கொண்டே இரு."

மின் விசிறியுடன் பானையைக் கட்டித் தொங்க விட்டான்.

பிள்ளை என்ன செய்யப் போகிறான் என்று ஜெயதே வுக்குப் புரியவில்லை. அதற்குள் பிள்ளை காரிலிருந்து அகலமான கல் ஒன்றைத் தூக்கிக் கொண்டு உள்ளே வந்தான். தண்ணீர்ப் பானைக்கும் ஜெயதேவின் தலைக் கும் இடையில் குடையைப்போல் கல்லைக் கயிற்றால் கட்டினான்.

சாவகாசமாய் எதிரில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான்.

மேலிருந்து தண்ணீர்த் துளி ஒன்று கல் மீது விழுந் திருக்க வேண்டும். டப் என்ற சத்தம் கூட வரவில்லை. அறை முழுவதும் நிசப்தமாய் இருந்தது. என்ன நிகழப் போகிறதென்று ஜெயதேவுக்குப் புரியவில்லை. மற்றொரு துளி கல்லின்மீது விழுந்தது.

தன் தலைக்கு மேல் என்ன நிகழ்ந்து கொண்டிருக் கிறது?

* * *

"குட் ஈவினிங்க்... வாங்க..." —ஸ்ரீதர் வெங்கட்டை வரவேற்றான். அந்தச் சமயத்தில் சைக்ரியாடிஸ்ட் அருகில் இருந்தால் நல்லதென்று தோன்றியது. வெங்கட்டும் பதிலுக்கு விஷ் செய்து விட்டு, "என்ன எல்லோரும் இந்த நேரத்தில் விழித்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

சாரதா பேச்சை மாற்றுவதுபோல், "கொஞ்சம் டீ தரட்டுமா?" என்று கேட்டாள்.

"கட்டாயம்."

சாரதா உள்ளே போனாள்.

துளசியைக் கொத்தப்போகும் நச்சுப் பாம்பு தங்கள் பக்கத்திலேயே வந்து விட்டதென்று ஸ்ரீதருக்கும், நம் பூதிரிக்கும் தெரியவில்லை.

பதினோரு மணியடிக்க சரியாக ஒரு நிமிஷம் பாக்கி இருந்தது.

"என்ன இது? ரிவால்வரைபக்கத்தில் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?" —வெங்கட் அதை கையில் எடுத்துக்கொண்டார்.

"ஒன்றுமில்லை... சும்மாதான்" —புன்முறுவலுடன் சொன்னான் ஸ்ரீதர்.

* * *

அந்த இரவுதான் உலகத்தில் கடைசி இரவு என்பது போல் மயானம் பயங்கரமாகக் காட்சியளித்தது. காற்றில் மரங்கள் வேகமாய் அசைந்து கொண்டிருந்தன. வானத்தில் மேகங்கள் அடர்த்தியாகப் பரவியிருந்தன. மழை இன்னும் தொடங்கவில்லை.

மயானத்திற்குள் நுழையப்போன தார்க்கா ஒரு நிமிஷம் நின்றான்.

முதலில் தன் குருவான விஷாச்சியைப் பிரார்த்தித்துக் கொண்டான். தான் இத்தனை நாள் வழிபட்டு வந்த பூத தேவதைகளை எதிர்க்கப் போவதற்குத் தன்னிடம் விரோதம் பாராட்ட வேண்டாம் என்ற பிரார்த்தனை அது. சபதத்தை நிறைவேற்றாததால் தன்னை மன்னிக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தான்.

அடுத்ததாக அவன் தன்னை மனிதனாக மாற்றிய இராமசாஸ்திரியை நினைவுகூர்ந்தான். "ஓ குருவே... உங்கள் கட்டளையை அநுசரித்து நான் இந்தச் சக்தியை

எதிர்க்கிறேன். மனித நேயமும், நற்குணமும் நீங்கள் தந்த ஆயுதங்கள். உலகிலேயே சக்தி வாய்ந்த காஷ் மோராவை எதிர்க்கும் சக்தியை எனக்கு அளனியுங்கள். இத்தனை நாட்களாய் இந்த சக்திகள் எனக்கு உறுதுணையாய் இருந்தன. இன்று ஒரு நல்ல காரியத்தை முன்னிட்டு அவற்றுடன் போராடப் போகிறேன். உங்கள் ஆசீர் வாதம் எனக்கு மனத் துணிச்சலை வழங்கட்டும்."

அவனை ஆசீர்வதிப்பது போல் வானத்தில் மின்னல் மின்னியது. அந்த மகத்தான காரியத்திற்குத் தாமும் உறு துணையாய் இருப்பதுபோல் மரங்கள் அசைந்தன. அவன் மயானத்திற்குள் காலடி எடுத்து வைத்தான். எங்கிருந்தோ ஆந்தையின் அலறல் விகாரமாய் ஒலித்தது.

* * *

"இப்படி இன்னும் எத்தனை நேரம் உட்கார்ந்திருக்க வேண்டும்?" – ஜெயதேவ் பொறுமையின்றிக் கேட்டார். பின்னால் மடக்கிக் கட்டி இருப்பதால் கைகள் மரத்துப் போய்விட்டன.

"பன்னிரண்டு மணி வரையிலும்"– சிரித்தான் பிள்ளை. "இன்னொரு விதமாகச் சொல்ல வேண்டு மென்றால் நீ சாகும் வரை."

ஜெயதேவுக்குப் புரியவில்லை. இன்னும் அரை மணி யில் இந்தத் தண்ணீரின் துளிகளால் தான் எப்படிச் சாக முடியும்? மேலே அது விழுந்துகொண்டிருக்கிறதா இல்லையா என்று கூடத் தெரியவில்லை.

அவர் தலையை உயர்த்திப் பார்க்கவில்லை. பார்த் திருந்தால் தெரிந்திருக்கும். கல்லின்மீது தெறித்த தண்ணீர் கீழே விழவில்லையென்றும், அந்தக் கல்லின் மீதே மாய

மாகி விடுகிறதென்றும் தெரிந்திருக்கும். அது மட்டு மில்லை. அந்தக் கல் மெதுவாக வளைந்து கொண்டிருக்கிற தென்றும் கவனித்திருப்பார்.

பிள்ளை அணைத்து விட்ட சிகரெட்டை மீண்டும் பற்ற வைக்க முயன்ற போது வெளியே யாரோ கேட்டைத் திறக்கும் சத்தம்கேட்டது. திடுக்கிட்ட பிள்ளை ஜன்னல் வழியாகப் பார்த்தான். பண்டிட் உள்ளே வந்து கொண்டிருந்தார். ஜெயதேவிடமிருந்து எந்தச் செய்தியும் வரவில்லையே என்றெண்ணி தானே புறப்பட்டு வந்திருக் கிறார்.

பிள்ளை சட்டென்று எழுந்து வாசல் கதவுக்குப் பின்னால் மறைவாக நின்று கொண்டான்.

ஜெயதேவ் மனதிலேயே நினைத்துக் கொண்டார். 'வேண்டாம் பண்டிட்... உள்ளே வராதீங்க... அப்படியே திரும்பிப் போய்விடுங்கள்."

சத்தம் போட்டு சொல்லலாமென்றால் பிள்ளையின் கையில்ஆயுதம் இருந்தது. பண்டிட் ஏதோ யோசித்துக் கொண்டே உள்ளே வந்து கொண்டிருந்தார்.

* * *

"மணி என்ன?" –வெங்கட் கேட்டார்.

"பதினொன்று ஐந்து"– கைக் கடியாரத்தைப் பார்த்து விட்டுச் சொன்னான் ஸ்ரீதர். சுவர் கடியாரம் மட்டும் பதினொன்றடிக்க ஒரு நிமிடம் இருப்பதைக் காட்டியது.

எங்கும் அமைதி. வெளியே மின்னிய பொழு தெல்லாம் வராண்டா முழுவதும் வெளிச்சம் பரவிக் கொண்டிருந்தது. தொலைவில் எங்கோ இடி விழுந்த

சத்தம். அன்றிரவு பலத்த மழை பெய்யப் போவதற்கான அறிகுறிகள் தென்பட்டன.

"உன் மாமனார் விஷயம் ஏதாவது தெரிந்ததா?"— ஸ்ரீதர் நம்பூதிரியிடம் கேட்டான்.

"இல்லை" என்றான் நம்பூதிரி. "வருத்தப்படுவதா இல்லை சந்தோஷப்படுவதா என்று புரியாத குழப்பத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கிறேன்."

மறுபடியும் அறையில் நிசப்தம் சூழ்ந்தது. மூவரும் மௌனமாய் அறைக்கு வெளியே பரவி இருந்த இருளை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

ஒவ்வொரு நிமிடமும் செல்லச் செல்ல காலன் நெருங்கி வருவதுபோன்ற உணர்வு. ஸ்ரீதர் பொறுமையின்றி அசைந்தான். இந்த நிசப்தத்தை அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஏன் ஒன்றுமே நடக்கவில்லை.

சாரதா துளசியின் அருகிலேயே அமர்ந்திருந்தாள். துளசி ஆழ்ந்த மயக்கத்தில் இருப்பது போல் உறங்கிக் கொண்டிருந்தாள்.

ஸ்ரீதருக்கு இருப்புக் கொள்ளவில்லை. எழுந்து புத்தக அறைக்குள் நுழைந்தான். ரேக்கில் இருந்த புத்தகங்களைப் பரிசீலித்து விட்டு அதில் ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு முன் அறைக்கு வந்தான். நம்பூதிரிக்குப் பக்கத்து நாற்காலியில் அமர்ந்து கொண்டு அதை மேலாகப் புரட்டினான். புத்தகத்தை மூடி வைக்கும்போது அதிலிருந்து ஒரு கடிதம் நழுவிக் கீழே விழுந்தது.

சுவர் மீது 'ஸ்ரீதர்' என்று எழுதி இருந்தது. ஆர்வத்துடன் அதைத் திறந்து படித்தவனுக்கு ஆவேசத்தால் முகம் சிவந்துவிட்டது.

டியர் ஸ்ரீதர்.

உங்கள் நலம் விரும்புபவர்களுக்குள் நானும் ஒருவன். பிஸ்தா கிராமத்திலிருந்து தார்க்கா என்ற மந்திரவாதி துளசியின்மீது காஷ்மோராவை ஏவ வந்திருக்கிறான். மயானத்திற்குப் போய்ப் பார்த்தால் உங்களுக்கே உண்மை புரியும்.

உண்மை விளம்பி

ஆவேசத்தில் தாடை எலும்பு இறுக, ஸ்ரீதர் "சாரதா!" என்று கத்தினான். அந்தக் கத்தலுக்குக் கட்டடமே அதிர்ந்தது. திடுக்கிட்ட சாரதா அறையை விட்டு வெளியில் வந்தாள்.

"இந்தக் கடிதம் எப்போது வந்தது?"

அவள் சற்றுத் தயங்கிவிட்டு, "நீங்கள் வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, எப்படியும் வந்துவிடப் போகிறீர்களே என்று உங்களுக்கு அனுப்பவில்லை. பிறகு அதைப் பற்றியே மறந்து விட்டேன்" என்றாள்.

வலுக்கட்டாயமாய்த் தன் ஆவேசத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டான் ஸ்ரீதர். அந்தப் பார்வைக்குச் சாரதா நடுநடுங்கி விட்டாள். அவன் மேற்கொண்டு தாமதம் செய்யவில்லை. நம்பூதிரி பக்கம் திரும்பி "கிளம்பு" என்றான்.

"எங்கே?"

அவனிடம் கடிதத்தைக் கொடுத்துவிட்டு "மயானத்திற்கு" என்றான்.

சாரதா பதட்டம் நிறைந்த குரலில், "இதெல்லாம் என்ன?" என்றாள். ஸ்ரீதர் அவளைப் பொருட்படுத்தவில்லை.

அதற்குள் நம்பூதிரி கடிதத்தைப் படித்து முடித்தான். பதினோரு வருடங்களுக்கு முன் பிஸ்தாவுக்குப் போனது.. தார்க்கா தன்னை அடித்தது நினைவுக்கு வந்தது.

ஸ்ரீதர் ஸ்டோர் ரூமுக்குள் போனான். அங்கே இருட்டாக இருந்தது. உடைந்த சாமான்கள், நாற்காலிகள் எல்லாவற்றையும் நகர்த்திவிட்டு அவசரமாய்த் தேடத் தொடங்கினான். பெருத்த ஓசையுடன் பீரோ ஒன்று கீழே விழுந்தது. அவன் அதை லட்சியம் செய்யவில்லை.

அவன் பழைய பெட்டி ஒன்றைத்தேடிக் கொண்டிருந் தான். பக்கீர் மந்திரித்துக் கொடுத்த மரப் பலகை அதில் இருந்தது. பதினோரு வருடங்கள் அதைப் பத்திரமாக வைக்கச் சொல்லி பக்கீர் சொன்னதன் காரணம் ஸ்ரீதருக்கு இன்று விளங்கியது.

அறையில் ஒரு மூலையில் சாமான்களுக்கிடையில் கிடந்தது அது. அவனுக்கு வியர்த்துக் கொட்டியது. கைகள் நடுங்க மூடியைத் திறந்தான். பெட்டிக்கு நடுவில் குறுக் காக படுக்க வைக்கப்பட்டிருந்தது. பீஜாக்ஷரங்கள் செதுக் கிய மரப் பலகை. பதினோரு வருடங்களுக்கு முன் காத்ரா வைத் தாக்கப் பயன்பட்ட பலகையைப் போன்றது. அவன் அதைக் கையில் எடுத்துக் கொண்டான்.

நம்பூதிரி கடிதத்தை மடித்து மேஜைமீது வைத்த போது அருகிலேயே இருந்த லென்ஸர் பொருத்தப்பட்ட ரிவால்வர் கண்ணில் பட்டது. யாரும் அறியாமல் அதை எடுத்து உள்ளே வைத்துக் கொண்டான். தான்தான் தார்க்காவைக் கொல்ல வேண்டும் வேறு யாருக்கும் அந்த வாய்ப்பைத் தரக் கூடாது. அவன் மெதுவாய் வெளியில் வந்தான்.

ஸ்ரீதர் காரில் ஏறப் போன போது நம்பூதிரியும் பக்கத்து கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்து அமர்ந்து கொண்டான். இருவருக்கும் நடுவில் மரப் பலகை இருந்தது.

கார் புறப்படும் போது சாரதா ஓடிவந்தாள். "என்னங்க, இந்த நள்ளிரவு வேளையில் துளசியை விட்டு விட்டு எங்கே கிளம்பி விட்டீங்க?"

சாரதாவின் வார்த்தைகள் காரின் ஓசையில் தேய்ந்து மறைந்துவிட்டன. அவள் சிலையாய் அப்படியே நின்று விட்டாள்.

இத்தனை அமர்க்களத்தையும் வெங்கட் மௌன மாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

நேரம் பதினொன்றடித்து பத்து நிமிடங்கள் ஆகி விட்டன. சுவற்று கடியாரத்தில் இன்னும் பதினோரு மணி ஆகவில்லை.முன் போலவே பதினோரு மணி அடிக்க ஒரு நிமிடம் இருப்பது போல் காட்டிக் கொண்டிருந்தது... பாட்டரி தீர்ந்து போனதால்.

* * *

"கடியாரத்தில் பதினோரு தடவை மணி அடித்த துமே வெங்கட்டின் மூளை என் ஆணைகளின்படி செயல் படத் தொடங்கும். அதுதான் ஆபரேஷன் சிக்ஸ்" –உரத்தக் குரலில் சிரித்தான் பிள்ளை.

பண்டிட்டும், ஜெயதேவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். இருவரையும் தனித் தனியாக நாற்காலி களில் கட்டிப் போட்டிருந்தான் பிள்ளை.

"ஆபரேஷன் சிக்ஸ் என்றால் என்ன?" என்று ஜெய தேவ் கேட்டார்.

"அதைத் தெரிந்து கொள்வதுதான் உன் வாழ்க்கை யின் இறுதி விருப்பமா? அப்படியானால் கேட்டுக்கொள். இன்றிரவு சரியாய்ப் பன்னிரண்டு... உங்களுக்குப் புரியும் விதமாகச் சொல்ல வேண்டும் என்றால் காஷ்மோரா துயிலெழும் நேரத்தில் துளசி மயானத்திற்குக் கிளம்பி விடுவாள். மயானத்தில் இருக்கும் பாழடைந்த கிணற்றுக் குள் குதிப்பாள். அவ்வாறு குதிப்பதால் தனக்கு அபார் ஷன் ஆகி விடுமென்றும், தான் பழைய துளசியாக மாறி விடுவோம் என்றும் அவள் மனதில் திடமான நம்பிக் கையை விதைப்பார் வெங்கட். கடியாரத்தில் பதினோரு மணி ஆனதும் வெங்கட் செயல்படத் தொடங்குவார். ஆனால் துரதிருஷ்டவசமாய் அந்தக் கிணறு ரொம்ப ஆழ மானது. குதித்த உடனேயே துளசியின் உயிர் போய்விடும். உலகத்தாரின் பார்வையில் மட்டும் துளசியின் சாவுக்குக் காரணம் காஷ்மோரா என்று கருதப்படும்"— நிதான மாகச் சொல்லி முடித்தான் பிள்ளை.

கேட்டுக் கொண்டிருந்த இருவருக்கும் தூக்கிவாரிப் போட்டது. 'ஸ்ரீநிவாசப் பிள்ளையின் க்ரிமினல் மூளை, காஷ்மோராவுக்குச் சற்றும் குறைந்தது இல்லை'— ஜெய தேவ் மனதில் எண்ணிக் கொண்டார்.

ஆபரேஷன் சிக்ஸ் பற்றி நினைக்கும்போது பயத்தால் அவர் உடல் நடுங்கியது. எப்படி அதைத் தடுத்து நிறுத்து வது?

அதற்குள் "மைகாட்!" என்ற பண்டிட்டின் குரலைக் கேட்டு சட்டென்று திரும்பிப் பார்த்தார். பண்டிட்டின் முகம் வெளிறிப் போயிருந்ததைக் கவனித்து, தானும் அண்ணாந்து நோக்கினார். அவர் முதுகுத் தண்டு சில்லிட்டது.

தலைமீது கட்டப்பட்டிருந்த கல் முன்பு இருந்ததை விட இரண்டு மடங்காகி விட்டது. அது மட்டுமில்லை. தண்ணீர் பட்டுப்பட்டு அது வளைந்து கீழே நோக்கி இறங்கிக் கொண்டிருந்தது. ஜெயதேவின் தலைக்கு ஒரு அங்குல உயரத்திற்கு வந்துவிட்டது.

ஜெயதேவின் உடல் பயத்தால் வெட வெடத்ததைக் கண்டு பிள்ளை சிரித்தான்.

"இருபத்து நான்காவது வழி இது ஜெயதேவ். இதிலிருந்து தப்பித்து விட முடியாது" என்று சொல்லி விட்டு எழுந்தான். ஃபோன் அருகில் சென்று டயல் செய்யத் தொடங்கினான்.

* * *

நள்ளிரவில் ஃபோன் ஒலித்ததைக் கேட்டு வித்யாபதி அலுத்துக் கொண்டே ரிசீவரை எடுத்தான். ஆனால் மறு முனையிலிருந்து தெரிவிக்கப்பட்ட செய்தியைக் கேட்டதும் அவர் முகம் வெலவெலத்துப் போய்விட்டது.

"நிஜம்தானா?" என்று கேட்டான் நடுங்கும் குரலில்.

"ஆமாம் லாயர். எல்லா விஷயங்களையும் யோசித்துப் பாருங்கள். விமானம் எரிந்து போனதற்குக் காரணம் அவன் கண் பார்வைதான். உங்கள் பேத்தியைக் கொன்றதும் அவனுடைய கண்பார்வைதான். அவன் மட்டும் இன்னும் கொஞ்ச நேரம் பார்த்திருந்தால் உங்கள் பேத்தி எரிந்து சாம்பலாகியிருப்பாள். அப்படிச் செய்தால் எல்லோருக்கும் சந்தேகம் வரும் என்று அவன் ஒரு விநாடிக்கு மேல் பார்க்கவில்லை" –பிள்ளை சொன்னான்.

"அவன் இப்போ எங்கே இருக்கிறான்?"

"கோட்டைக்குப் பக்கத்தில் இருக்கும் மயானத்தில். தன் சக மந்திரவாதியான காத்ராவைக் கொன்ற உங்கள் மூவரையும் பழி வாங்க உத்தேசித்து பூததேவதைகளை வழி பட்டுக் கொண்டிருக்கிறான்."

வித்யாபதி ஃபோனை வைத்துவிட்டான். ஒரு விநாடி நிசப்தமாய் நின்றான். வீட்டில் எல்லோரும் உறங்கிக் கொண்டிருந்தார்கள். இரும்புப் பெட்டியைத் திறந்து சிறிய பெட்டியொன்றை வெளியில் எடுத்தான். வெளி நாட்டிலிருந்து வந்த நண்பர் வழங்கிய பரிசுப் பொருள் அது. பார்ப்பதற்குச் சாதாரணமாகத்தான் தென்படும். ஆனால் மிகப் பெரிய பணக்காரர்களும், பிரபலமாக இருப்ப வர்களும் எதிரிகளிடமிருந்து தப்பித்துக் கொள்ள பயன் படுத்தும் ஆயுதம் அது. ஐநூறு வோட்ஸ் மின் சாரத்தை வெளிப்படுத்தக் கூடிய சாதனம். ரிவால்வரை விட சுலப மாகப் பயன்படுத்தலாம்.

* * *

"எனக்குப் பயமாக இருக்கிறது. இவரும் நம்பூதிரி யும் எங்கே போயிருப்பார்கள்?" – குரல் நடுங்க சாரதா சொன்னாள். வெளியில் காற்றும் மழையும் தொடங்கி விட்டன.

"பயப்படாதீங்க. துணைக்கு நான்தான் இருக்கி றேனே"– வெங்கட் சொன்னார்.

எதிர் வீட்டிலிருந்து இந்தப் பக்கமே கவனித்துக் கொண்டிருந்த பிள்ளை குழப்பத்தில் ஆழ்ந்தான். இத்தனை நேரமாகியும் துளசி வீட்டிலிருந்து வெளியே வரவில்லை, வெங்கட் என்ன செய்து கொண்டிருக்கிறார்?

ஜெயதேவுக்கும், பண்டிட்டிற்கும் கூட அங்கே ஸ்ரீதர் வீட்டில் என்ன நடக்கிறதென்று புரியவில்லை. ஸ்ரீதரின்

கார் காம்பவுண்டை விட்டு வெளியேறியதைப் பார்த் தார்கள். மகளை இப்படி ஆபத்தான நிலையில் விட்டு விட்டு ஸ்ரீதர் எங்கேயோ புறப்பட்டுப் போனதில் ஜெய தேவுக்குக் கோபம் கூட வந்தது.

பதினொன்றரை ஆனதற்கு அடையாளமாய் ஒரு தடவை மணி அடித்தது.

அப்பொழுது சந்தேகம் வந்தது பிள்ளைக்கு. இன்னும் துளசி வெளியே வராததைக் கண்டு அவன் முகத்தில் பதட்டம் தெளிவாகத் தெரிந்தது. அதை அவ்விருவரும் கவனிக்கத் தவறவில்லை.

ஜெயதேவ் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள நினைத்தார்.

"உன் திட்டம் எல்லாம் பாழாகி விட்டது பிள்ளை" என்றார்.

பிள்ளை ஆத்திரத்துடன் அவரை உற்றுப் பார்த்தான்.

ஜெயதேவ் சிரித்து விட்டு, "நானும் தார்க்காவும் சேர்ந்து வெங்கட்டின் மூளையைச் சரி செய்து விட்டோம்" என்று இருட்டில் அம்பை எய்திப் பார்த்தார்.

பிள்ளை எழுந்து நின்று, "அசாத்தியம்!" என்றான்.

ஜெயதேவ் முறுவலித்து விட்டு மௌனமாக இருந் தார். ஒரு நிமிடம் கழித்து, பிள்ளையின் சந்தேகம் வலுத்தது. ஒரு முடிவுக்கு வந்தவன்போல் எழுந்து நின்று "குட்பை" என்றான். "இங்கே இருந்து நான் செய்யப்போவது எதுவும் இல்லை. போய் துளசியின் மரணத்தைப் பார்த்து விட்டு வருகிறேன்" என்று போகப் போனவன் நின்றான்.

"வீணாகக் கத்தி, ரகளை செய்ய முயற்சிக்க வேண்டாம். இந்த நள்ளிரவு வேளையில் உங்களுக்கு உதவ யாரும் முன் வர மாட்டார்கள். உங்கள் கத்தல்கள் வெளியே கேட்கவும் கேட்காது" என்று முன் அறைக்கு வந்து மெயின் சுவிட்சை அணைத்து விட்டான்.

ஒருகால் பண்டிட் தவழ்ந்து கொண்டே போய் மின் விசிறியின் சுவிட்சைப் போட்டால் அதனுடன் கட்டப் பட்டிருக்கும் தண்ணீர்ப் பானை கீழே விழுந்துவிடக் கூடும் என்பதால் மிக சாமர்த்தியமாய் முன்னெச்சரிக்கை யுடன் செய்த காரியம் அது. அவன் வாழ்க்கையில் செய்த கடைசித் தவறும் அதுதான்.

பிள்ளை கிளம்பிப் போனதும் அந்த அறையில் நிசப்தம் சூழ்ந்து கொண்டது. ஜெயதேவின் தலையை நோக்கி வந்து கொண்டிருந்த கல் முன் நெற்றியைத் தாண்டிக் கீழே இறங்கிக் கொண்டிருந்தது. அவரால் அதனுடைய கனத்தை உணர முடிந்தது. இன்னும் ஐந்து நிமிடங்களில் மூக்கைத் தாண்டி கீழே இறங்கிவிடும். நீர்த் துளிகள் விழுவது முடிந்ததும் அதுவரையில் விரிவடைந்து கொண்டே வந்த கல் இறுகி விடும். கல்லுக்கிடையே அவர் உடல் நசுங்கிப் போய்விடும். ரொம்ப கொடிய மரணம் அது.

"இதென்ன கல்?" ஜெயதேவ் கேட்டார்.

"மௌண்ட் மோரி லைட் என்ற தாதுப்பொருள். தண்ணீர் பட்டதும் விரிவடையும் தன்மை கொண்டது. தண்ணீர் பட்டுப் பட்டு இந்த அறையில் பாதி அளவுக்கு விரிவடைந்தாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை"— பண்டிட் சொன்னார்.

ஜெயதேவ் பேசவில்லை. கண்களை மூடிக் கொண்டு மரணத்திற்கு ஆயத்தமானார்.

தொலைவில் மணியடித்த ஓசையைக் கேட்டு பண்டிட் ஜன்னல் வழியாக எதிர் வீட்டைத் திரும்பிப் பார்த்தார். பிள்ளை சுவரோரமாய் நின்றிருந்தான். அவன் கையில் பெரிய தாம்பாலம் இருந்தது. குச்சியால் அதன்மீது அடித்து மணி ஓசையை எழுப்பிக் கொண்டிருந்தான். பார்ப்பதற்கு வேடிக்கையாய் இருந்த அந்தக் காட்சி பண்டிட்டிற்குச் சிரிப்பை உண்டாக்கவில்லை. 'தான் வாழ்க்கையில் செய்த மிகப் பெரிய தவறு பிள்ளையின் மூளையைக் கம்ப்யூட்டரைஸ் செய்ததுதான்' என்றெண்ணிக் கொண்டார்.

தாம்பாளத்தில் பதினோரு தடவை மணியோசை கேட்டதும் வெங்கட் தன்னையறியாமல் கண்களை மூடிக் கொண்டார். அவர் மூளையில் ஏதோ சலனம். அவரை நிமிடத்திற்குப் பிறகு கண்களைத் திறந்து சாரதாவிடம் "கொஞ்சம் தண்ணீர் கொடுக்கிறீர்களா?" என்று கேட்டார்.

சாரதா அப்பாவியாக டைனிங் ரூமுக்குள் சென்றாள். அவள் உள்ளே போனதும் வெங்கட் சட்டென்று வெளியே கதவை இழுத்து தாளிட்டு விட்டார். அந்த ஓசையைக் கேட்டுத் திரும்பிய சாரதா அதிர்ச்சியுடன் நின்று விட்டாள். தான் அதுவரையிலும் நம்பி வந்த வெங்கட் இப்படிச் செய்வார் என்று அவள் கனவிலும் ஊகிக்கவில்லை.

"ஏதாவது ரகளை செய்தால் துளசி உயிரோடு இருக்க மாட்டாள்" என்றார் வெங்கட்.

ஜன்னல் வழியாய் அவரைப் பார்த்த சாரதா திடுக்கிட்டு விட்டாள். அவர் முகம் வெளிறிப் போயிருந்தது. கண்கள் சொருக, தூக்கத்தில் நடப்பவர் போல் தள்ளாடி நடந்து கொண்டு அறைக்குள் நுழைந்தார்.

துளசியின் அருகில் உட்கார்ந்து கொண்டு அவளுக்கு ஆணைகளைப் பிறப்பிக்கத் தொடங்கினார்.

ஆபரேஷன் ஸிக்ஸ்!

ஐந்து நிமிடங்களில் வெங்கட்டின் வேலை முடிந்தது. பன்னிரெண்டடிக்க பத்து நிமிடங்கள் இருந்தன. துளசி உறக்கத்திலேயே யாரோ அழைத்தாற்போல் எழுந்து கொண்டாள். வெங்கட்டுடன் சேர்ந்து வெளியே வந்தாள். உள்ளே டைனிங் அறையில் சாரதா செய்வதறியாமல் தலையை வேகமாய்க் கதவில் மோதிக் கொண்டிருந்தாள்.

* * *

"குட் பை பண்டிட்" என்றார் ஜெயதேவ். அவரால் சரியாய்மூச்சு விட முடியவில்லை. கல் இன்னும் கீழே இறங்கியது. பண்டிட் அவரைப் பார்த்தார். அவர் மனதில் துக்கம் பொங்கி வந்தது. எப்படியாவது ஜெயதேவைக் காப்பாற்ற வேண்டும். எப்படி?

சட்டென்று அவர் மூளையில் ஏதோ பளிச்சிட்டது. ஹிப்னாடைஸ்!

"ஜெயதேவ்!" என்று அழைத்தார்.

ஜெயதேவ் கண்களைத் திறந்தார். ஆனால் அதற்குள் கல் கண்களுக்கு முன்னால் இறங்கிவிட்டது.

"என்ன?" என்றார் ஜெயதேவ்.

"நீங்க என்னை ஹிப்னாஸிஸில் ஆழ்த்துங்கள்" – ஏறக் குறைய கத்துவது போல் சொன்னார்.

"எதற்கு?"

"இந்தக் கட்டுகளை அவிழ்த்துக் கொண்டு வெளியேற தேவையான பலம் பெறுவதற்கு."

"நேரம் அதிகம் இல்லை" –பலவீனமான குரலில் சொன்னார் ஜெயதேவ். கல் அவர் வாய்க்கருகில் வந்தது.

"பரவாயில்லை புரொபசர். என் மூளை உங்கள் குரலுக்கு அடிபணியும். ரொம்ப நாட்களுக்கு முன்னால் விளையாட்டாய் நான் உங்களிடம் ஹிப்னாஸிஸ் சிகிச்சை பெற்றுக் கொண்டது இன்று பயன்படுகிறது" என்றார் பண்டிட்.

ஜெயதேவ் தலையைப் பின்னுக்குச் சாய்ந்தார். கல்லுக்கும் வாய்க்கும் இடையே கொஞ்சம் இடைவெளி ஏற்பட்டது. ஆனால் அது அதிக நேரம் நீடிக்காது என்று தெரியும். உடனே ஆணைகளை தரத் தொடங்கினார்.

"நீ மெதுவாக உறக்கத்தில் ஆழ்கிறாய். உன் கைகள் வலுவாய் இரும்பைப் போல் மாறுகின்றன. உன் கைகளைக் கட்டியிருக்கும் கயிறுகளை அறுத்துக் கொண்டு வெளியேறுகிறாய்."

கல் வாயை நெருங்கி விட்டது. இறுதி ஆணையைத் தராவிட்டால் பண்டிட் ஹிப்னாஸிஸ் மயக்கத்திலேயே இருந்து விடுவார். ஜெயதேவ் முயற்சி செய்து குரலை உயர்த்தி கத்தலானார்.

"கை விலங்குகள் இற்று விழுந்ததும் நீ உறக்கத்திலிருந்து விழித்துக் கொள்வாய். ஸ்லீப்... ஸ்லீப்..." சொல்லிக் கொண்டிருந்த போதே கல் அவரை முழுவதுமாக மூடி விட்டது.

பண்டிட்டின் தலை பின்னால் சாய்ந்தது. கைகள் இயந்திரமாய் இயங்கின. கொஞ்ச நேரத்தில் அவற்றின் வேகம் மேலும் அதிகரித்தது. தோல் வழன்று இரத்தம் கசியத் தொடங்கியது.

ஆனாலும் அவருக்கு வலி எதுவும் தெரியவில்லை. மயக்கத்திலேயே கைகளை விடுவித்துக் கொள்ள பலங் கொண்ட மட்டிலும் போராடிக் கொண்டிருந்தார்.

ஜெயதேவுக்கு எதுவுமே தென்படவில்லை. சத்தமும் கேட்கவில்லை. கல் அவரை முழுவதுமாக ஆக்ரமித்துக் கொண்டு கீழே இறங்கிக் கொண்டிருந்தது.

பண்டிட் கைகளிலிருந்து இரத்தம் வழியத் தொடங் கியது. இருந்தாலும் கைகளைப் பலமாக அசைத்து, தன்னை விடுவித்துக் கொள்ளத் தீவிரமாக முயன்று கொண்டிருந்தார். சிறிது சிறிதாகக் கயிறு நைந்து அறுந்து கொண்டிருந்தது. டப் என்ற ஓசையுடன் கயிறு அறு பட்டது. அந்தச் சத்தம் கேட்டதுமே மயக்திலிருந்து விடு பட்டார் பண்டிட்.

அரை நிமிடத்தில் மீதி கட்டுகளையும் விடுவித்துக் கொண்டு ஜெயதேவிடம் ஓடினார்.

ஜெயதேவ் அதற்குள் மூர்ச்சையடைந்து விட்டார். பண்டிட் அந்தக் கல்லை கையால் உடைத்து எறிந்தார். அப்பொழுதுதான் அது இறுகத் தொடங்கி இருந்தது. ஜெய தேவின் தலையை அப்படியும் இப்படியுமாய் வேகமாய் ஆட்டினார். பலவீனமாய்க் கண்களைத் திறந்தார் ஜெய தேவ்.

"க்விக்... நேரமில்லை"— சொல்லிக் கொண்டே பண்டிட் வெளியில் ஓடினார். ஜெயதேவ் அவரைப் பின்பற்றினார்.

தெருவைக் கிராஸ் செய்து எதிர் வீட்டுக்குள் நுழைந் தார்கள். வீடு முழுவதும் நிசப்தமாய் இருந்தது. டைனிங் ரூமில் சாரதா சிறைப்பட்டிருப்பதைப் புரிந்து கொண்டு கதவைத் திறந்தார்கள். சாரதா நடந்ததை யெல்லாம்

சொன்னாள். மேஜைமீது இருந்த கடிதம் ஜெயதேவின் கண்ணில் பட்டது. கடிதத்தைப் படித்த பிறகு அவருக்கு நெற்றி முழுவதும் வியர்த்துக் கொட்டியது. வாட்சைப் பார்த்துக் கொண்டார். காற்றைவிட வேகமாய்க் காரை அடைந்தார்.

ஆபரேஷன் சிக்ஸ் முடிவடையக் கூடாது. அதுதான் அவருடைய லட்சியமாய் இருந்தது. கார் புறப்படத் தொடங்கிய போது பண்டிட் ஓடி வந்து தானும் ஏறிக் கொண்டார். கார் காற்றாய்ப் பறந்தது.

33

ஸ்ரீதர் ஓட்டிக் கொண்டிருந்த கார் நின்றது. ஸ்ரீதரும், நம்பூதிரியும் ஆளுக்கொரு பக்கமாய் நகர்ந்தார்கள்.

அதற்குள் மயானத்தின் மறுபக்கத்தில் மற்றொரு கார் வந்து நின்றது. அதிலிருந்து வித்யாபதி கீழே இறங்கினான்.

மூன்று பேரும் மூன்று திசைகளில் மயானத்தின் உள்ளே நுழைந்தார்கள். அவர்கள் கைகளில் இருந்த ஆயுதங்கள் எதிரியின் உயிரைப் பறிக்கத் துடித்துக் கொண்டிருந்தன.

ஆனால் எதிரி என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருந்த தார்க்கா மிகப் பெரிய காரியத்தை முடிக்கும் நோக்கத்துடன் மயானத்தின் நடுவில் நின்றிருந்தான். அவன் கண்கள் நிர்மலமாய் இருந்தன. இதழ்கள் மந்திரத்தை உச்சரித்துக் கொண்டிருந்தன. அவன் இப்பொழுது மந்திரவாதியாக இல்லை. மனித நேயத்திற்காகப் போராடும் மகாத்மாவைப் போலிருந்தான். அவன் உள்ளங்கை நிறைய தீர்த்தம் இருந்தது. மந்திர தீர்த்தம். அதை அப்படியே தரையில் தாரை வார்த்தான்.

சரியாய் அதே நேரத்திற்கு ஒரு கார் வந்து நின்றது. காரை விட்டு இறங்கிய வெங்கட் பின் பக்கத்துக் கதவைத் திறந்து விட்டார். அதிலிருந்து துளசி இறங்கினாள். ட்ரான்ஸில் இருப்பதுபோல் தென்பட்டாள்.

"நேராக உள்ளே போய் இடது பக்கம் திரும்பு. பெரிய கிணறு தென்படும். மேலிருந்து உள்ளே குதித்து விடு" வெங்கட் சொன்னதைத் துளசி கேட்டுக் கொண்டாள். ஆனால் அவள் முகத்தில் எந்த உணர்ச்சியும் இருக்க வில்லை. அவர் சொல்லி முடித்ததும் துளசி மெதுவாய் அடியெடுத்து வைத்தவளாய் மயானத்தை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

தார்க்கா பூஜை செய்து கொண்டிருந்த இடத்திற்கு இரு நூறு அடி தொலைவில் இறக்கத்தில் அந்தக் கிணறு இருந்தது. அதன் படிகள் சிதிலமாகி இருந்தன. அந்த இடத் தில் எவ்வளவு இருட்டாக இருந்தது என்றால் பத்தடி தொலைவில் இருப்பவைகூட கண்களுக்குத் தெரிய வில்லை. தார்க்கா கண்களை மூடிக் கொண்டு தியானத் தில் ஆழ்ந்து விட்டான்.

அப்பொழுது பெய்தது மழை. முதலில் மெலிதான தூறலுடன் தொடங்கிய மழை நிமிடத்திற்கு நிமிடம் தீவிர மடைந்தது. மழையில் நனைந்து கொண்டே அந்த மூவரும் தம் எதிரியைக் கண்டுபிடிக்க முயன்று கொண்டு இருந் தார்கள். பத்தடி தூரத்தில் தன் மகள் பாழுங் கிணற்றை நோக்கி நடந்து போய்க் கொண்டிருப்பதை ஸ்ரீதர் கவனிக்க வில்லை.

காரில் உட்கார்ந்த வண்ணம் இருட்டில் பார்த்துக் கொண்டிருந்த வெங்கட் பின்னால் இன்னொரு கார் வந்து நின்றதைக் கவனித்து, திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார். அந்தக் காரிலிருந்து ஜெயதேவும், பண்டிட்டும்

இறங்கியதைப் பார்த்து விட்டு சட்டென்று காரை விட்டு வெளியே வரப்போனார். ஆனால் அதற்குள் ஜெயதேவ் அவரை நெருங்கிவிட்டார்.

சாதாரணமாய் எந்தச் சூழ்நிலையிலும் ஜெயதேவ் நிலை தடுமாற மாட்டார். அப்படிப்பட்டவர் இன்று இந்த இடத்தில் வெங்கட்டைப் பார்த்ததும், அவரால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. துளசியின் வாழ்க்கை பாதிக்கப்பட்டதற்குக் காரணம் இவன்தான். இவனேதான். காரிலிருந்து இறங்கப்போன வெங்கட்டின் முகத்தின் மீது ஓங்கி ஒரு குத்து விட்டார் ஜெயதேவ்.

மயங்கி சரிந்த வெங்கட்டின் தலை காரின் கியர் ராடில் பட்டதும் கார் நியூட்ரலுக்கு வந்து குலுங்கியது. இஞ்சினில் இருந்து விடுபட்ட ரயில்பெட்டியைப் போல் பள்ளமாய் இருந்த சாலையில் கார் போய்க் கொண்டி ருந்தது. சாலை திரும்பும் இடத்தில் ஏரி ஒன்று இருந்தது. கார் நேராகப் போய் ஏரியில் விழுந்து மூழ்கியது.

தார்க்கா அதுவரையிலும் ஆறு திசைகளில் மர ஆணி களை அடித்துவிட்டு, திசைகளை கட்டுப்படுத்தி விட்டான். எஞ்சிய இரு திசைகளுக்குத் தன்னுடைய விரல்களையே ஆணிகளாகப் பயன்படுத்த நினைத்தான். கால் நரம்பான 'பசனிக' நரம்பை வெட்டுவதற்குப் பயன்படுத்தும் அரத்தை கையோடு கொண்டு வந்து இருந்தான்.

காஷ்மோரா இருக்கலாம், இல்லாமல் போகலாம். காற்று வீசுவது யதேச்சையாக இருக்கலாம். ஆனால் அவனிடம் உறுதி இருந்தது. ஒரு மகத்தான காரியத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற தவிப்பு இருந்தது. ஈசான்ய திசையைச் சிரமப்பட்டு அடைந்தான். வலது கை ஆள் காட்டி விரல் துண்டிக்கப்பட்டது. மழைநீர் சிவப்பாய் மாறியது.

இனி கடைசி திசை எஞ்சி இருந்தது. வடக்குத் திசை... அவன் அந்தத் திசையில் போய்க்கொண்டிருக்கும்போது ஸ்ரீதர் அவன் பக்கத்திலிருந்தே நடந்து போனான். இருட்டில் ஒருவரை ஒருவர் கவனிக்கவில்லை. தார்க்கா வடக்கு திசையைஅடைந்தான்.

அரத்தை கையில் எடுத்துக்கொண்டு குனிந்தான். காரிருளில் ஒரு மின்னல். நடு விரலானது மின்னலாய்ப் பூமியில் இறங்கியது. அவன் மேனியில் விழுந்த மழை நீர் செந்நிறமாய் மாறி தரையில் விழுந்து கொண்டிருந்தது.

அவன் மயானத்தின் நடுவில் போய் நின்றான். அங்கு தான் புதைக்க வேண்டும். அதுதான் எல்லாவற்றையும் விட கடினமான வித்தை. மண்டியிட்டு அமர்ந்து கொண் டான். குருவை தியானித்தான். ஊனமான விரல்களி னால் மண்ணைத் தோண்டும் போது காயத்தின் மீது மண் பட்டு உயிர்போகும்அளவுக்கு வலி ஏற்பட்டது. பல்லைக் கடித்து வலியைப் பொறுத்துக் கொண்டு பிரார்த்தனை செய்து கொண்டே தன் வேலையில் ஈடுபட்டிருந்தான்.

குழியைத் தோண்டிவிட்டு இடுப்பிலிருந்து பொம் மையை எடுத்தான். அதில் வந்து சேரவேண்டும் என்று காஷ்மோராவை அழைத்தவாறு மந்திரத்தை உச்சரித் தான். இராமசாஸ்திரிகள் கடைசியாய்ச் சொல்லித் தந்த காயத்ரி மந்திரத்தைச் சொல்லி முடித்து வானத்தில் அண்ணாந்து நோக்கினான்.

மழை திடீரென்று நின்றுவிட்டது.

என்னவாயிற்று?

அவனுக்கு ஒரு நிமிஷம் ஒன்றும் புரியவில்லை. அதற்குள் வானத்தில் மின்னியது. அந்த மின்னல் வெளிச்சத்தில் அவன் துளசியைப் பார்த்தான்.

துளசி பிழைத்துவிட்டாள்!

அவன் காஷ்மோராவை ஜெயித்துவிட்டான். இதயம் முழுவதும் மகிழ்ச்சி பரவியது. இரு கரங்களையும் நீட்டி "துளசி!" என்றான். துளசி முன்னோக்கி வந்து கொண்டிருந் தாள்.

அவளையே பார்த்துக் கொண்டிருந்த தார்க்கா மற்றொருமுறை மின்னிய வெளிச்சத்தில் தன்னைச் சுற்றி மூவரும் சூழ்ந்து கொண்டிருந்ததைக் கவனிக்கவில்லை. அந்த மூவரும்கூட ஒருவரை ஒருவர் கவனிக்கவில்லை.

அவர்களின் பார்வை தார்க்கா மீதே நிலைத்தது. அம் மூவரும் அவனைச் சூழ்ந்து கொண்டிருந்ததை முதலில் கவனித்து விட்ட ஜெயதேவ் "நில்லுங்கள். அவனைக் கொல்லாதீர்கள்" என்று கத்தினார். இடியோசை ஒன்று அவர் குரலை விழுங்கிவிட்டது.

முதலில் காற்றில் எழும்பிய "சர்" என்ற ஓசையைக் கேட்ட தார்க்காவுக்கு ஒன்றும் புரியவில்லை. பிறகு திடீரென்று வலி அவன் உடலைத் தாக்கியது. அப்படியே முழங்காலில் சரிந்தான்.

ஜெயதேவ் அவனை நோக்கி ஓடிவரப் போனார். அதற்குள் துளசி கிணறு இருக்கும் திசையில் போய்க் கொண்டிருப்பது கண்ணில் பட்டது. அந்தப் பக்கமாய் ஓடினார். குதிக்கத் தயாராகிவிட்ட அவளைப் பிடித்துக் கொண்டார். நினைவு தப்பிவிட்டிருந்த துளசியைப் பண்டிட்டிடம் ஒப்படைத்துவிட்டு அவர் தார்க்காவின் அருகில் ஓடிவந்தார்.

ஈரமாய் இருந்த தரையில் தார்க்கா மல்லாந்து விழுந்து கிடந்தான். அவன் கண்கள் ஆகாயத்தை, சூனியத்தை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தன. தலையை யாரோ

தொடுவது போன்ற உணர்வு. அவன் கண்களைத் திறந்து பார்த்தான். அவன் தலையை மடியில் ஏந்திக் கொண்டிருந்த ஜெயதேவைக் கண்டான்.

ஜெயதேவின் கண்களில் கண்ணீர் நிரம்பி வழிந்தது. யாருக்குத் தெரியும் தார்க்கா செய்த தியாகத்தைப் பற்றி?

"தார்க்கா... தார்க்கா..." முணுமுணுப்பது போல் சென்னார். துக்கத்தில் குரல் எழும்ப மறுத்தது. ஒரு நிமிடம் முன்னாடி வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்ற எண்ணம் அவர் மனத்தைப் பலமாகத் தாக்கியது.

எங்கும் அமைதி. ஜெயதேவின் கை தார்க்காவின் தலையைப் பரிவுடன் கோதிவிட்டது. மூடிய இமைகளை வலுக் கட்டாயமாய்த் திறந்த தார்க்கா ஜெயதேவைப் பார்த்தான். அவன் இதழ்கள் புன்னகையால் விரிந்தன. சுற்றிலும் பார்த்தான். தன்னையே நோக்கிக் கொண்டிருந்த மூவரையும் கண்டான்.

அவன் கண்களை மூடிக் கொண்டான். எங்கோ பிறந்து... வளர்ந்து... அவனுக்கு தன் பால்யம் நினைவுக்கு வந்தது. குருவான விஷாச்சி நினைவுக்கு வந்தான். கடின மான நியமங்கள்... நிஷ்டைகள்... மயானம்... நள்ளிரவு.

இராம சாஸ்திரிகள் நினைவுக்கு வந்தார். பிரார்த் தனை... மனித நேயம்...

கடைசியாய், துளசி நினைவுக்கு வந்தாள். அவன் முகத்தில் புன்முறுவல் அப்படியே இருந்தது. இறுதியாய் இரத்தத்துளி ஒன்று அவன் வாயிலிருந்து வழிந்து விழுந்தது. அத்துடன் அவன் உயிரும் பிரிந்து விட்டது.

34 துளசி.

இந்தக் கடிதம் உனக்குச் சேரும்போது நான் உயிருடன் இருக்கமாட்டேன். காஷ்மோராவுக்குப் பலி ஆவதோ, இல்லை அதை ஜெயித்து குருவான விஷாச் சிக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற முடியாமல் போன தற்குத் தற்கொலை செய்து கொள்வதோ நடந்து முடிந் திருக்கும்.

துளசி... முடியப்போகும் என் வாழ்க்கையைப் பரிசீலித்துப் பார்க்கும்போது எனக்குச் சிரிப்பும், வேதனை யும் இரண்டும் ஏற்படுகின்றன. எங்கோ குக்கிராமத்தில் அநாதையாய் நான் விஷாச்சியின் பார்வையில் விழுந் தேன். அது முதல் என் வாழ்க்கையின் போக்கே மாறி விட்டது. அன்றிலிருந்து பகை தீர்த்துக் கொள்ளும் ஒரே நோக்கத்துடன் இரவு பகல் பாராமல் கஷ்டப்பட்டேன். இறுதியில் அந்தப் பகையைத் தீர்த்துக் கொள்ளாமலே இறந்து போவதும் வேடிக்கைதான்.

இந்த நாகரிக உலகில் அடியெடுத்து வைத்ததுமே ரயி லில் டிக்கெட் பரிசோதகர் எனக்கு எதிரியாகி விட்டார். பதவி தந்த மமதையில், அகம்பாவத்தில் தன்னை விட தாழ்ந்த நிலையில் இருப்பவனை அவமானப் படுத்தி, துன்புறுத்தும் அந்த ஆள் எந்த துஷ்ட சக்திகளைவிடத் தாழ்ந்தவன்? துளசி! உன்னைத் தேடிக் கண்டு பிடிக்க கல்லூரிகளில் பணம் கொடுக்க வேண்டி இருந்தது. தர்ம சத்திரத்தில் தங்குவதற்கும் பணம் கொடுக்க வேண்டிய நிலைமை. இதை லஞ்சம் என்று சொல்வார்களாம். பூததேவதைகளுக்கு நாங்கள் கொடுக்கும் பலிகளைவிட இது எந்த விதத்தில் குறைந்தது?

என்ன உலகம் இது? என்ன மனிதர்கள் இவர்கள்? எதிராளியை ஏமாற்றுவதுதான் இவர்களுடைய முக்கிய

நோக்கம் எதிராளியின் பலவீனத்தைத் தங்களுக்குச் சாதகமாய்ப் பயன்படுத்துவதுதான் இவர்களுடைய லட்சியம். எனக்கு ஏமாற்றுபவர்களைப் பார்த்தால் கோபம் வரவில்லை. ஏமாற்றப்படுபவர்களைப் பார்த்தால் தான் வேதனை ஏற்படுகிறது. துளசி! நான் கடவுளை நம்ப வில்லை. விதியையும் நம்புகிறவன் இல்லை. ஆனால் இராம சாஸ்திரிகளுடன் எனக்கு ஏற்பட்ட அறிமுகம் விதியை அநுசரித்துதான் நிகழ்ந்திருக்க வேண்டுமென்று நினைக்கத் தோன்றுகிறது. மனித நேயத்தை எனக்கு எடுத்துச் சொன்னது அவர்தான். அவர் சன்னிதியில்தான் பகவத் கீதையைப் படித்தேன்.

இந்த உலகத்திலிருந்து விடைபெற்றுக் கொள்ளும் முன் ஒரு வேலையை உன்னிடம் ஒப்படைத்து விட்டுப் போகிறேன். இந்த உலகில் எனக்கு இருக்கும் ஒரே ஒரு சிநேகிதி நீ ஒருத்திதான். அந்த வேலையை உன்னால் மட்டும்தான் செய்ய முடியும். அப்பாவி மக்களைத் தங்களுடைய சுயநலத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ளும் மோசடிக்காரர்களிடமிருந்து காப்பாற்று. நீ அன்று சித்தேஸ்வரியின் கோவிலில் தைரியமாய் நின்று மோசடியை எதிர்கொண்ட காட்சி இன்னும் என் முன்னால் நிற்கிறது.

என் விருப்பம் ஒன்றுதான். இந்த மக்களை முட்டாள் தனத்திலிருந்து காப்பாற்று. பூத தேவதைகளின் பெயரைச் சொல்லி ஏமாற்றிப் பிழைக்கும் மோசடிக் காரர்களிடமிருந்து மக்களைக் காப்பாற்று. இதுதான் என் கடைசி விருப்பம்.

துளசி! ஒரு விஷயம் மட்டும் என்னால் பெருமையுடன் சொல்ல முடியும். விஷாச்சியின் சீடனான என்னை விட பெரிய மந்திரவாதி இந்த உலகில் யாருமே

இருக்க மாட்டார்கள். விஷாச்சி எனக்குக் கற்றுத்தந்த வித்தைகளை யாருக்கும் கற்பித்துத் தராமலேயே போகிறேன். பாணாமதி, சில்லங்கி, பாதாளக்குட்டி, குட்டிச் சாத்தான்... இந்த வித்தைகள் எல்லாம் என்னுடனேயே புதைக்கப்பட்டு விடும்.

இவையெல்லாம் இருக்கா இல்லையா என்று நான் வாதம் புரியப் போவதில்லை. இவற்றைப் பிரயோகிக்கத் தெரிந்தவர்கள் யாருமே இருக்க மாட்டார்கள் என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்.

தனக்குத் தெரியாதது ஏதோ இருக்கிறதென்று பயப்படுபவன் எவ்வளவு முட்டாளோ—

தனக்குத் தெரியாதது எதுவும் இல்லையென்று அகம்பாவத்துடன் இருப்பவனும் முட்டாள்தான்.

துளசி! சிறுவயது முதல் அன்பு, பாசம் என்றால் என்னவென்றே தெரியாமல் வளர்ந்து விட்டேன். நியம நிஷ்டைகள், பகையைத் தவிர வேறு எதுவும் தெரியாமல் வளர்ந்தேன். பல நாள் பழக்கம் இருந்தால் தான் காதல் தோன்றும் என்று நான் நினைக்கவில்லை.

நேரம் அதிகமில்லை. புரட்சி நடக்கும் இடத்தில் மென்மையான உணர்வுகளுக்கு இடமிருக்காது. புறப்படு துளசி! உன் உத்தேசங்களை மக்கள் ஏற்றுக் கொள்ளா விட்டாலும் உன் முயற்சியை விட்டு விடாதே. எந்த உலகில் இருந்தாலும் உனக்கு என் ஆதரவு இருக்கும்.

போய் வருகிறேன் துளசி, மறுபடியும் சந்திப்போம், எந்த ஜன்மத்திலேயாவது...

தார்க்கா

படித்து முடித்து விட்டு பெருமூச்சு விட்டார் ஜெயதேவ். இந்தக் கடிதத்தைத் துளசியிடம் கொடுப்பதா வேண்டாமா என்று அவர் மனதில் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. இப்பொழுதுதான் அதிர்ச்சியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாய் மீண்டு வருகிறாள். இந்த நேரத்தில் இந்தக் கடிதம் அவள் மனநிலையைப் பாதித்து விடுமோ.

இந்தக் கடிதத்தை மக்கள் எப்படி எடுத்துக் கொள்வார்கள்? இது நிஜமாகவே தார்க்கா எழுதிய கடிதம் தானா இல்லை பாபுலாரிட்டிக்காக உருவாக்கப்பட்ட கடிதமா என்று ஆராய்ச்சிகள் நடக்கும். தார்க்காவின் பெயருடன் துளசியின் பெயரை இணைத்துக் களங்கப் படுத்துவார்கள். இந்த எண்ணம் வந்ததும் ஜெயதேவ் நடுங்கி விட்டார்.

ஊஹூம். அப்படி நடக்கக் கூடாது. துளசி திருமணம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கையில் எப்போதும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும்.

ஜெயதேவ் கையிலிருந்த கடிதத்தை ஆழமாய் ஒரு நிமிடம் பார்த்துவிட்டு இரண்டாக, நான்காக மடித்துக் கிழித்தார். சின்னச் சின்னத் துண்டுகளாக்கப்பட்ட கடிதம் நாலா பக்கமும் பறந்து சிதறியது.

தான் செய்தது மிகப் பெரிய தவறு என்றும், கடவுள் கூட அதை மன்னிக்க மாட்டார் என்றும் அவருக்குத் தெரியும். ஆனால் இதைத் தவிர்க்க முடியாது. துளசி வாழ்க்கையில தார்க்காவின் பிரஸ்தாவனை இனி ஒரு நாளும் வரக்கூடாது. அதை ஒரு கனவாக அவள் மறந்து போக வேண்டியதுதான். தார்க்கா இறந்து போன விஷயம் கூட துளசிக்குத் தெரியக் கூடாது.

தார்க்கா எங்கிருந்து வந்தானோ தெரியாது. எங்கு போனானோ அதுவும் தெரியாது. துளசியைப் பொறுத்த வரை இது தான் நடந்தது.

தார்க்காவின் சமாதி இருக்கும் இடம் அவருக்கும், சாரதாவுக்கும் மட்டும் தான் தெரியும். வேறு யாருக்கும் தெரிய வேண்டிய அவசியமும் இல்லை. தன்னுடைய உயிரைத் தார்க்காதான் காப்பாற்றினான் என்ற விஷயமும் துளசிக்குத் தெரிய வேண்டியதில்லை.

ஏனோ தெரியவில்லை, ஜெயதேவ் மனதில் தேவனை சூழ்ந்து கொண்டது. அவர் கண்களுக்கு முன் தார்க்கா வின் உருவம் நிழலாடியது.

ஃபோன் மணி ஒலித்தது கேட்டு அவர் இந்த உலகிற்கு மீண்டார். ரிசீவரைக் கையில் எடுத்தார். மறுமுனையி லிருந்து பண்டிட்டின் குரல் பதட்டமாய் ஒலித்தது.

"ஜெயதேவ்! ஒருமுறை வெங்கட் வீட்டிற்கு வாங்க மிக அவசரம்"

அந்தக் குரலில் இருந்த பதட்டத்தை உணர்ந்த ஜெயதேவ் வேறு எதுவும் கேட்காமல் ஃபோனை வைத்து விட்டுக் கிளம்பினார். காரை டிரைவ் செய்து கொண்டு போகும் போது அவர் மனதில் ஆயிரம் எண்ணங்கள் அலை மோதின. வெங்கட் இறந்து விட்டிருப்பாரோ? இத்தனை நாளாய் அவர் கண்ணில் படாமல் இருந்த தற்குக் காரணம் அதுவாகத்தான் இருக்குமோ...

வெங்கட் வீட்டு காம்பவுண்டிற்குள் அவருடைய கார் நுழையும் போதே நாற்றம் மூக்கைத் துளைத்தது. பண்டிட்டின் குரல் கேட்டது.

"இந்தப் பக்கமாய் வாங்க" என்று.

உள்ளே அடியெடுத்து வைத்த ஜெயதேவ் தூக்கி வாரிப் போட நின்றுவிட்டார். கட்டில் மீது பிணம் கோர மாகத் தென்பட்டது. ஆனால் அது வெங்கட்டின் பிணம் இல்லை.

ஸ்ரீநிவாசப் பிள்ளையின் பிணம். கழுத்திலிருந்து ஒரு வயர் பிளக்குடன் இணைக்கப்பட்டிருந்தது. ஒரு கை கட்டிலுக்கு வெளியே தொங்கிக் கொண்டிருந்தது. ஜெய தேவ் குனிந்து பிள்ளையின் கைக் கடிகாரத்தைப் பார்த் தார். கண்ணாடி உடைந்து கடிகாரம் நின்று விட்டிருந்தது. பன்னிரண்டரை மணியைக் காட்டியது. தேதியைப் பார்த்ததும் ஜெயதேவ் திடுக்கிட்டார். அந்த இரவு...

* * *

துளசி மயானத்தை அடைந்த இரவு.

தார்க்கா இறந்து போன இரவு...

தான் விளை"ாடிய சதுரங்க ஆட்டத்தில் காய்களை எல்லாம் ஒரே இடத்தில் நகர்த்தி விட்டு காரில் உட் கார்ந்துகொண்டே நிகழப் போகும் மரண ஹோமத்திற் காக ஆர்வத்துடன் காத்திருந்தான் பிள்ளை.

துளசி வந்து விட்டாள். ஸ்ரீதர் தார்க்காவைக் கொல்லப் போகிறான். எல்லாம் திட்டம் போட்டபடியே நடந்து வருகின்றன. அவன் பெருமையுடன் தோளை குலுக்கிக் கொண்டு சிகரெட்டைப் பற்ற வைக்கும்போது நிகழ்ந்தது அது.

மூளை நரம்பில் ஏதோ அசைவு. ஊமை வலி. அவன் மேற்கொண்டு தாமதிக்கவில்லை. காரை ரிவர்ஸில் திருப்பி சட்டென்று வெங்கட்டின் வீட்டிற்குப்போய்க் கொண்டிருந் தான். தன் வீட்டிற்குப் போகும் அளவுக்கு நேரமில்லை. அவசரமாய் மின்சார இணைப்புத் தேவை.

அவன் வெங்கட்டின் வீட்டை அடைவதற்குள் மிகவும் சோர்ந்து விட்டான். மூளை கொஞ்சம் கொஞ்சமாய்ச் செயல்பாட்டை இழந்து கொண்டிருந்தது. தள்ளாடிக் கொணடே கட்டிலில் சரிந்தான். நடுங்கும் கரங்களால் பிளக்கில் வயரை இணைத்து ஸ்விச்சைப்போட்டு கண் களை மூடிக்கொண்டான்.

ஒன்று... இரண்டு... மூன்று நிமிடங்கள் கழிந்தன.

எதுவும் நிகழவில்லை. மூளை குழம்புவது போன்று வலி, பற்களுக்கு இடையில் நாக்கு கடிபட்டது. கட்டிலை அழுத்தமாய்ப் பிடித்துக் கொண்டு உடம்பு அசையாம லிருக்க முயற்சி செய்தான். பலன் இல்லை.

இயலாமை ஆட்கொள்ள கண்களைத் திறந்தான். மேற் கூரையில் மின் விசிறி தென்பட்டது.

அப்பொழுதுதான் அவனுக்கு நினைவுக்கு வந்தது. போகும் போது மெயின் சுவிச்சைத் தான் அணைத்து விட்டுப் போனது. பயத்தால் நடுங்கி விட்டான். எழுந்து கொள்ள முயன்றான். முடியவில்லை. அதற்குள் உடல் தளர்ந்து விட்டது. கண்கள் சொருகிக் கொண்டன. கழுத்து முறுக்கேறிக் கொண்டது. அந்த இரண்டு நிமிடங்கள் அவன் அநுபவித்த வேதனை பகையாளிக்குக்கூட வரக் கூடாது.

இறக்குமுன் அவன் அநுபவித்த வேதனை அத்தனை நாட்களுக்குப் பிறகும் பிணத்தின் முகத்தில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

பண்டிட் லேசாகக் குனிந்து பிணத்தின் தோளுக் கருகில் பொருத்தப்பட்டிருந்த சிகரெட் பாக்கெட் சைஸில் இருந்த பெட்டியை எடுத்து ஜேபியில் வைத்துக் கொண் டார். டாக்டர் சன்யால் பொருத்திய பாக்கெட் அது. இன்னும் அரைமணி நேரத்தில் வரப்போகும் போலீசார்

விஷயம் தெரியாமல் அதைப் பிரிக்க நேர்ந்தால், அதன் ரேடியோ ஆக்டிவ் கதிர்கள் தாக்கி பல உயிர்கள் போய் விடக் கூடும்.

"போவோமா..." ஜெயதேவ் கேட்டார். பண்டிட் தலை அசைத்தார். இருவரும் நிசப்தமாய் அந்த வீட்டை விட்டு வெளியேறினார்கள்.

35

மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்திகள் என்றால் என்ன?" –ஸ்ரீதர் கேட்டான்.

சூரியன் மேற்கே மறைந்து கொண்டிருந்தான்.

"மனிதனை மீறிய சக்திகள்"– என்றார் ஜெயதேவ்.

"நிஜமாகவே அப்படி ஏதாவதுசக்தி இருகிறதா?"– ஸ்ரீதர் கேட்டான்.

பண்டிட் இடைமறித்து, "மனிதனுக்கு மீறிய சக்திகள் என்றால் விஞ்ஞானத்திற்கு எட்டாத சக்திகள் என்று அர்த்தம்" என்றார்.

"உதாரணமாய், சர்க்கஸில் மரணக் கிணற்றில் மோட்டார் சைக்கிளில் சுற்றுபவன் சாதாரண மனிதனாக இருக்க முடியாது. அவனிடம் ஏதோ அபூர்வ சக்தி இருந்திருக்க வேண்டும் இல்லையா!" –அப்பாவியாய் முகத்தை வைத்துக் கொண்டு ஜெயதேவ் சொன்னார்.

எல்லோரும் சிரித்தார்கள்.

"புவிஈர்ப்பு சக்தியைவிட வேகமாக ஒரு மையத்தை நோக்கி மோட்டார் சைக்கிளைச் செலுத்துவதால் அவன் கீழே விழமாட்டான்" –எல்லோருக்கும் விளங்கும் வித மாகப் பண்டிட் சொன்னார்.

இந்த முறை ஜெயதேவ் சிரித்து விட்டார். "1902ல் இந்த விஷயத்தை ஜான்சன் என்பவர் கண்டுபிடித்தார். அதற்கு முன்னால் வரை அதை அபூர்வ சக்தியாகத்தானே நினைத்திருப்பார்கள். நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் ஒவ்வொரு செயலுக்கும் ஏதாவது காரண காரியம் நிச்சயமாக இருக்கும். அவற்றுக்கான விஞ்ஞான பூர்வமான ஆதாரம் இன்று தெரியாமல் போகலாம். எதிர் காலத்தில் கண்டுபிடிக்கப்படும் போது அதீத சக்தியாக அதுவரை அழைக்கப்பட்டவை, மனிதனுக்கு உட்பட்ட சக்தியாக மாறிவிடும்."

"அப்படியென்றால் சூனியத்திற்குக்கூட விஞ்ஞானத் தில் ஆதாரம் இருக்கிறதா?"

"பொம்மைக்குத் தலை முடியை, நகங்களைக் கட்டி மயானத்தில் புதைத்து விட்டால் அது சூனியமாகி விடாது. அதற்கு விஞ்ஞான பூர்வமான ஆதாரமும் இல்லை. அதை விட மந்திரவாதிகள் வேறு ஏதோ செய்வார்கள் ஸ்லோ பாயிஸனைப் போல்" –பண்டிட் சொன்னார்.

"அப்போ சூனியத்திற்கு முறிவு செய்வதும் ஏமாற்று வேலைதானா?"

"சூனியம் என்பதே மனத்துக்குச் சம்பந்தப்பட்டது. தனக்கு யாரோ சூனியம் வைத்து விட்டதாய் எண்ணிய தும், மனிதனின் உடல் நலம் பாதிக்கப்படும். அதே போல் சூனியத்திற்கு முறிவு செய்தாகி விட்டது என்றதும், மனதளவில் தெம்பு ஏற்பட்டு உடல் நலம் தேறிவிடும். அவ்வளவு தான்" –பண்டிட் விளக்கினார்.

"காஷ்மோரா நிஜமாகவே இருக்கிறதா?"– ஜெய தேவ் கேட்டார்.

"காஷ்மோரா என்றால்?" –பண்டிட் கேட்டார்.

"கண்ணுக்குத் தெரியாத ஒரு சக்தி. மின்னலைவிட வேகமானது!"

"மனிதனின் உடலைப் ப்ளீச் செய்து மிதைல் சாலி சிலேட்டில் நனைத்து அவனை உயிர்ப்பிக்க முடிந்தால் அவன் கண்ணுக்குத் தெரியாத உருவமாக மாறிவிடுவான் என்று 1911ஆம் வருடத்தில் விஞ்ஞானிகள் கண்டுபிடித்து இருக்கிறார்கள். இனி மின்னல் விஷயத்திற்கு வந்தால் அது வெளிப்படுத்தும் சக்தியின் அளவு ஐநூறு கோடி வோல்ட்ஸ். தற்சமயம் விஞ்ஞானிகள் ஐம்பது லட்சம் வோல்ட்ஸ் சக்தி வரை செயற்கை முறையில் தயாரிக்கும் முறையைக் கண்டு பிடித்துவிட்டார்கள். இதே ரீதியில் போனால் இன்னும் பத்து வருடங்களில் "காஷ்மோரா" உருவாகி விடும்.

அங்கிருந்த அனைவரும் இந்த உண்மையை நம்ப மாட்டாதவர்களாய் மௌனமாய் இருந்தார்கள்.

"எனக்கு இன்னும் ஒரு விஷயம் மட்டும் புரிய வில்லை. செத்து போய்விட்டதாக நினைத்து நம்பூதிரியின் மனைவி மயானத்திலிருந்து எப்படித் திரும்பிவந்தாள்?"— ஜெயதேவ் கேட்டார்.

"ஒரு மனிதன் இறந்துவிட்டான் என்று டாக்டர்கள் எப்படி முடிவு செய்வார்கள்? இதயத் துடிப்பு நின்று விடுவது, கண்கள் சலனமற்று இருப்பது... இவற்றை வைத்துக் கொண்டுதானே. டாக்டர் வெங்கட் ஒருமுறை சொல்லி இருக்கிறார். தர்ட் டைமன்ஷனில் இன்னொரு சக்தி உடலில் ஓடிக் கொண்டிருக்குமாம். அதை "கீ" என்று அழைப்பார்களாம். அக்குபஞ்சர் கூட இந்த வழி யைப் பின்பற்றிதான் செய்யப்படுகிறதாம். அந்தக் "கீ" எனப்படும் சக்தி உடலிலிருந்து எப்பொழுது போகிறதோ

அப்பொழுதுதான் உண்மையான மரணம் நிகழ்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம்" சாரதா சொல்லி முடித்தாள்.

ஸ்ரீதர் வியப்படைந்தான். சாரதா இப்படிப் பேசுவது இதுதான் முதல் தடவை. அவன் கேட்டான். "இதென்ன சாரதா? நீ கூட மூடநம்பிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் பேசுகிறாயே?"

"மனிதர்களின் நம்பிக்கைக்குக் காரணம் சொன்னேன். அவ்வளவுதான்" –என்று சிரித்தாள் சாரதா.

"மக்களுக்கு இடையில் இருக்கும் மூட நம்பிக்கைகள் ஒரே நாளில் மறைந்து விடாது. மெதுவாகத்தான் அவற்றை மாற்ற வேண்டும். ஒரு சக்தியை இல்லையென்று மறுக்க முடியாது. ஆனால் அந்தச் சக்தியை விஞ்ஞான ரீதியில் பெறுவதற்கு மனிதன் எத்தனை கஷ்டப்பட வேண்டும் என்பதைச் சொல்ல முடியும். குரல் வழியாய் இன்ஃபிராஸானிக் அலைகளை, கண் பார்வை மூலமாய் லேசர் கதிர்களை உருவாக்குவது சாத்தியமில்லை. அதனால் அந்த மாதிரி மந்திரவாதிகள் கிடையாது என்று மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் விதமாகச் சொல்ல வேண்டும்."

"இப்படிச் சுற்றி வளைத்துச் சொல்வதைவிட நேராக இல்லையென்று எழுதிவிடலாமே" –பண்டிட் சொன்னார்.

"எப்படி? கொட்டை எழுத்துகளில் 'துளசி' என்று தலைப்பு கொடுத்துவிட்டு கீழே ஒரே ஒரு வாக்கியம் "பூத தேவதைகள் கிடையாது என்றா?" –கிண்டல் செய்வது போல் சொன்னார் ஜெயதேவ்.

எல்லோரும் சிரித்தார்கள்.

"அப்படி இல்லை. இருக்கிறதோ என்னவோ என்று பிரமையை இறுதிவரை ஏற்படத்திவிட்டு, கடைசியில் இல்லையென்று சொல்வதைவிட, தொடக்கத்திலிருந்தே அவற்றை மறுப்பது போல் எழுத வேண்டும் என்பதுதான் என் எண்ணம்" –பண்டிட் சொன்னார்.

"பேய் பிசாசு சக்திகள் இருக்கின்றன. ஆனால் அவற்றை நிரூபித்துக் காட்டக் கூடிய மந்திரவாதிகள் தான் இல்லையென்பது என் அபிப்பிராயம்" என்றார் ஜெயதேவ்.

பண்டிட் சற்று நேரம் யோசித்துவிட்டு பிறகு சொன்னார். "இதையெல்லாம் எழுதினால் இன்னொரு பிரச்னையும் வந்து சேரும். மறந்து விட்டிருக்கும் மக்களை மறுபடியும் பேய் பிசாசுகளைப் பற்றி நினைக்க வைத்து, அவர்களின் கவனத்தைத் திருப்பிவிட்டார் என்று ஆசிரியர் நிச்சயமாக விமரிசிக்கப்படுவார்."

"நன்றாகப் படித்தவர்களும், மற்றவர்களும் மறந் தாலும் மறந்திருக்கலாமோ என்னவோ, கிராமத்து மக்கள், மனவுறுதி இல்லாதவர்கள். இன்னும் இவற்றை நம்பிக் கொண்டுதான் இருக்கிறார்கள். முதலில் அவர்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவர வேண்டும்."

மனிதர்களில் இந்த மூடநம்பிக்கை எவ்வளவு தூரம் வேரூன்றி விட்டிருக்கிறது என்றால், ஏதேனும் சிறிய ஆதாரம் கிடைத்தால் அதைப்பற்றிக் கொள்ளவேண்டும் என்று துடிப்பது சகஜம். அந்த அவகாசத்தைப் போலி மந்திரவாதிகள் பயன்படுத்திக் கொள்கிறார்கள்"– ஜெய தேவ் சொன்னார். "எல்லா சக்திகளிலும் மிக உயர்ந்த சக்தி எது?"

"காஷ்மோரா!" –பண்டிட் சிரித்துக்கொண்டே சொன்னார்.

"காஷ்மோராவைவிட துளசிச் செடி உயர்ந்தது என்ற அபிப்பிராயத்தை மக்களுக்கிடையில் ஏற்படுத்தணும். துளசிச் செடி இருந்தால் போதும் எந்தத் தீய சக்தியும் உள்ளே வராது என்ற திருப்தியுடன் அவர்கள் நிம்மதியாக இருப்பார்கள். போகப் போக மனவலிமை தானாகவே ஏற்பட்டுவிடும். அதுவரையில் போலி சாமியார்களை நம்புவதைவிட துளசிச் செடியை நம்புவது மேல். ஏன் என்றால் துளசிச் செடி காணிக்கைகள் எதுவும் கேட்காது" –புன்முறுவலுடன் சொல்லி முடித்தார் ஜெயதேவ்.

"போவோமா?" –பண்டிட் எழுந்து கொண்டே ஜெய தேவை பார்த்தார். ஜெயதேவும் எழுந்து கொண்டார். அவர்களை வழிஅனுப்ப ஸ்ரீதர் வாசல் வரையில் வந்தான்.

"இறுதியாய் ஒரு கேள்வி" –ஜெயதேவ் சொன்னார்.

"என்ன?" –ஸ்ரீதர் கேட்டான்.

"தார்க்காவைக் கொன்றது யார்?"

தெளிந்த நீரில் கல் எறியப்பட்டது போல் ஸ்ரீதர் முகத்தில் சிரிப்பு மறைந்தது. "கொல்ல வேண்டும் என்ற உணர்வு மூவருக்குமே ஏற்பட்டது. கொன்றது யாராக இருந்தால் என்ன? செயலைவிட எண்ணமே போது மானது இல்லையா?"

"இருந்தாலும் கொன்றது யாரென்று..."

"இந்த ஒரே ஒரு கேள்வியை மட்டும் உங்களால் மறந்துவிட முடியாதா ஜெயதேவ்?"

ஆழமான அமைதி. வெறுமையிலிருந்து தோன்றிய பதில். இருவேறு மனப் போராட்டங்கள். இருட்டில்

தோன்றிய மங்கலான நிழல்கள். இருளோடு இருளாக அவர் கலந்து விட்டார்.

அதுவரையிலும் ஜன்னலுக்கருகில் நின்று கொண்டு இந்த உரையாடல்களையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஒரு பெண், வேதனை நிரம்பிய புன்னகையுடன் அங்கிருந்து நகர்ந்தாள்.

* * *

சரியாய் ஆறு மணியாகும்போது அலாரம் ஒலித்தது. ஜெயதேவ் சட்டென்று எழுந்து கொண்டார். முதல் நாளிரவு பார்ட்டியில் தாமதமாகி விட்டதால் கண்களில் எரிச்சல் இருந்தது. ஆனாலும் அன்றைய காரியம் மிக முக்கியமானது.

அரை மணியில் தயாராகி வெளியில் வந்தார். அவருடைய கார் மயானத்தை நோக்கிச் சென்றது. முன் சீட்டில் அவருக்குப் பக்கத்தில் மலர்கள் இருந்தன. தார்க்கா இறந்து அன்றைக்குச் சரியாக ஒரு வருடம் ஆகி விட்டிருந்தது. அன்றைய தினம் அவன் சமாதியைப் பார்த்து விட்டு வருவது தன்னுடைய கடமையென்று அவர் எண்ணி இருந்தார்.

'காஷ்மோரா இருக்கலாம்... இல்லாமல் போகலாம். ஆனால் துளசியைக் காப்பாற்றும் முயற்சியில் தார்க்கா இறந்து விட்டான் என்பதில் வேறு கருத்து இருக்க முடியாது. அவனை உலகம் மறந்துவிட்டது. எல்லோரும் மறந்து விட்டார்கள். தான் ஒருவனாவது அவன் நினைவாக இன்று சமாதியைத் தரிசித்துவிட்டு வர வேண்டும். அது தன்னுடைய கடமை'– அவர் மனம் திரும்பத் திரும்ப தார்க்காவையே நினைத்தது.

கிழக்கிலிருந்து வெளிவந்த இளஞ் சிவப்புக் கதிர்கள் ஏரித் தண்ணீரில் பிரதிபலித்துக் கொண்டிருந்தன. முந்தைய தினத்துப் பாபங்களைத் தன்னுள் கரைத்துக் கொண்டிருந்த மயானம் அன்றைய காரியங்களுக்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. மயானத்தின் நடுவில் சிறிய சமாதி முன்வந்து நின்றார் ஜெயதேவ். கண்களை மூடிக்கொண்டு மனதிலேயே நினைத்துக் கொண்டார். 'தார்க்கா! உன் மனிதர்கள் யாரேனும் இருக்கிறார்களா இல்லையா என்று தெரியாது. என்னால் செய்ய முடிந்தது எதுவும் இல்லை. உன் ஆன்மாவுக்கு அமைதி கிடைக் கட்டும் என்று பிரார்த்தனை செய்வதை விட.'

எங்கோ தொலைவிலிருந்து கார் வரும் ஓசையைக் கேட்டு அவர் திரும்பினார். கறுப்பு நிறக் கார் ஒன்று தூசியை எழுப்பிக் கொண்டு மயானத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது. அவர், அவசரமாய் மரத்தின் பின்னால் ஒளிந்து கொண்டார்.

காரைவிட்டு துளசி இறங்கினாள். அவர் அதிர்ச்சி அடைந்தார். அந்த நேரத்தில் அவளை அங்கே எதிர் பார்க்க வில்லை. பல்வேறு உணர்ச்சிகள் அவரை அலைக் கழித்தன.

அவருடைய காரை துளசி கவனிக்கவில்லை. மெதுவாய் இறங்கி தார்க்காவின் சமாதி அருகில் வந்தாள். குனிந்து கையிலிருந்த மலர்களைச் சமாதியின் மீது வைத்தாள். மௌனமாய்க் கண்களை மூடிக் கொண்டு கைகளைக் கூப்பி நின்றாள். அவள் உள்ளத்தின் உணர்வு களைப் புரிந்து கொள்ள முயல்வது போல் இயற்கையும் ஸ்தம்பித்து நின்றது.

தார்க்காவின் மரணத்தைப் பற்றி துளசியிடம் யார் சொல்லி இருப்பார்கள்? இன்று இங்கே வந்தாள் என்றால் காஷ்மோராவைப் பற்றியும், தார்க்காவின் உயிர்த் தியாகத்தைப் பற்றியும் அவளுக்கு விவரமாகத் தெரிந்திருக்க வேண்டும். யார் சொல்லி இருப்பார்கள்? இந்த விஷயம் முழுவதும் தெரிந்தவர்கள்,தானும்...

அவருக்குப் புரிந்து விட்டது, சாரதா!

அவருடைய உடல் சிலிர்த்தது. கடந்த காலத்தைப் பற்றி துளசி அறிவது நல்லது இல்லையென்று அவர் நினைத்திருந்தார். அது அவளுடைய உள்ளத்தில் எந்த விளைவுகளை ஏற்படுத்துமோ என்று பயந்தார். அதான் அதை ரகசியமாக வைக்க முடிவு செய்தார். ஆனால் சாரதா துளசியிடம் விஷயத்தை முழுவதுமாகச் சொல்லி இருக்கிறாள் என்றால்...

தன் மகளின் உடல் நலத்தைக் காட்டிலும் தார்க்கா செய்த தியாகத்தை துளசி புரிந்து கொள்ளவேண்டும் என்ற எண்ணம் சாரதாவின் மனதில் வேரூன்றி இருக்க வேண்டும். அவர் கண்கள் பனித்தன. பெண்களின் உள்ளத் தில் இருக்கும் கருணையை அளவிட எந்தச் சாதனமும் இல்லை.

துளசி நகர்ந்த ஓசையைக் கேட்டு மேலும் மறைவாக நின்று கொண்டார். துளசி காரை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள். அவள் கண்ணில் தான் படுவதை அவர் விரும்பவில்லை.

சில அழகான உணர்வுகளை அவரவர்கள் மனத்திற் குள்ளே வைத்துக் கொண்டால்தான் அழகு.

—நிறைந்தது—